# மெஹர் பிரபு

## (MEHER PRABHU – LORD MEHER)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA'S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு பத்தொன்பது

## (VOLUME NINETEEN)

**1964 - 1967**

# <u>இறைவனின் அன்பளிப்பு</u>

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**


கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யா நிர்மல்
பூனா, மே **2024**

🖂 vela.radhakrishnan@gmail.com

✆ +919225631113


REV:01/11.11.2025

# நிகழ்வுகளின் காலவரிசை

**1964**
- ஜூலை 1, மெஹராஸாத்தில் ஏகாந்தவாசம் தொடர்ந்தது
- ஜூலை 10, மௌனத்தின் 39ஆவது ஆண்டு நிறைவு - சிறப்புச் செய்தி வெளியீடு

**1964**
- சார்லஸ் பர்டம் எழுதிய 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' புத்தகத் தொகுப்பு விரிவாக்கத்துடன், 'தி காட்-மேன்' என்ற தலைப்பில் லண்டனில் வெளியீடு

**1964**
- ஆகஸ்ட் - ஹார்வர்ட் பல்கலைக்கழக பேராசிரியர்கள், போதை மருந்துப் பொருட்களை' மில்ப்ரூக் கல்வி நிறுவனத்தில் பரிசோதனை செய்தனர்

,

**1964**
- அக்டோபர் 10, போதை மருந்துப் பொருட்கள் குறித்த மெஹர் பாபாவின் விளக்கம்

**1964**
- நவம்பர் 15 -19, ஹமிர்பூர் 'மெஹர்புரி' குடியிருப்பு - அதன் மையப் பகுதியில், பாபாவின் பளிங்கு சிலை எழுப்புவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது

**1965**
- ஜனவரி இறுதி - 71ஆவது பிறந்தநாள் செய்தி உலகெங்கும் அனுப்பப்பட்டது
- மார்ச் 7, கிழக்கத்திய அன்பர்களுக்கு சுற்றறிக்கை வெளியீடு

**1965**
- மார்ச் 30, மெஹராஸாத்திலிருந்து பூனா குருபிரசாத் வருகை
- ஏப்ரல் 20, நியூயார்க் உலக கண்காட்சிக்கான செய்தி வெளியீடு

**1965**
- மே 1, பூனா மையம் திறப்பு விழா - மெஹர் பாபா வருகை
- மே 2 - 6, குருபிரசாத்தில் 5 நாள் பொது தரிசன நிகழ்ச்சி

**1965**
- ஜூலை 1, பூனா குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை - ஒரு மாதத் தனிமை - 'ஏகாந்தவாசத்தில் மேற்கொள்ளும் ஏகாந்தவாசம்.'

**1965**
- ஜூலை 10, 40ஆவது ஆண்டு மௌன தினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது
- அக்டோபர், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம்.

**1965**
- நவம்பர் 29, அடுத்த நான்கு மாதங்கள் பாபா, பூனா செல்லும் வரை, இடையூறு எதுவுமின்றி ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாக அறிவிப்பு

**1965**
- டிசம்பர் 23 மெஹராஸாத்தில் மெஹராவின் பிறந்தநாள் நிகழ்ச்சி
- டிசம்பர் மாதம் திட்டமிடப்பட்ட சகவாசம் ரத்து செய்யப்பட்டது

**1966**
- ஜனவரி 10, தாஷ்கண்டில் லால் பஹதூர் சாஸ்திரி திடீரென காலமானார்; இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பேற்பு

| | |
|---|---|
| **1966** | • ஜனவரி **16,** சாது வாஸ்வானி பூனாவில் காலமானார்; மெஹர் பாபாவின் சிறப்புச் செய்தி |
| **1966** | • பிப்ரவரி **25,** மெஹர் பாபாவின் **72**ஆவது பிறந்தநாள், உலகம் முழுவதும் வெவ்வேறு மையங்களில் கொண்டாடப்பட்டது |
| **1966** | • ஏப்ரல் **1,** பூனா குருபிரசாத்தில் தனது வழக்கமான கோடைகாலத்தைக் கழிப்பதற்காக மெஹராஸாத்திலிருந்து பாபா வருகை |
| **1966** | • ஜூலை **1,** பூனாவிலிருந்து பாபா ஆண், பெண் மண்டலியுடன் மெஹராஸாத் வருகை - ஆழ்ந்த ஏகாந்தவாசம் தொடர்ந்தது |
| **1966** | • ஏப்ரல் - ஜூலை, அமெரிக்காவில் போதைப்பொருள் பற்றிய பாபாவின் செய்தி, கட்டுரைகள், உரைகள், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் வெளியீடு |
| **1966** | • **1967 -** நவம்பர் வரை, 'நான் முற்றிலும் இடையூறு எதுவுமின்றி இருக்க விரும்புகிறேன்' என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது |
| **1966** | • **1966** நவம்பர் **21** முதல் **1967** நவம்பர் **21** வரை 'நான்கு அதிசயங்கள் நிகழும்' மெஹர் பாபாவின் அறிவிப்பு |
| **1966** | • டிசம்பர் **22,** மெஹராவின் பிறந்தநாள் மெஹராஸாத்தில் தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட்டது |
| **1967** | • ஜனவரி **11,** மெஹர் பாபாவின் நீண்டகால, நெருங்கிய சீடரான ராம்ஜூ அப்துல்லா இதய செயலிழப்பால் காலமானார் |
| **1967** | • பிப்ரவரி **5,** வாழ்நாள் சுற்றறிக்கை **64** மூலமாக பாபாவின் பிறந்தநாள் செய்தி<br>• பிப்ரவரி **25,** மெஹர் பாபாவின் **73**ஆவது பிறந்தநாள் விழா |
| **1967** | • ஏப்ரல் **2,** பாபா ஆண், பெண் மண்டலியுடன் குருபிரசாத் வருகை<br>• ஜூன் **17,** பாபா கடைசி உயில் மற்றும் ஏற்பாட்டை நிறைவேற்றுதல் |
| **1967** | • ஜூலை **2,** மெஹர் பாபா ஆண், பெண் மண்டலியுடன் பூனாவிலிருந்து புறப்பட்டு மெஹராஸாத் வருகை. |
| **1967** | • தொடரும்... |

# பொருளடக்கம்


**மெஹராஸாத் - ஏகாந்தவாச பணி ........................................ 3**

**பூனா - தரிசனம் ........................................................................ 67**

**மெஹராஸாத் ஏகாந்தவாசம்................................................123**

**மெஹராஸாத் - உலகளாவிய பணி ..................................180**

**குருபிரசாத் ஏகாந்தவாசம் ......................................................208**

**மெஹராஸாத் ஏகாந்தவாசம்................................................231**

**மெஹராஸாத் - உலகளாவிய பணி ..................................259**

**குருபிரசாத் ஏகாந்தவாசம் ......................................................275**



மெஹர் பாபா (MEHER BABA), பூனா (POONA), **1964**

# மெஹராஸாத் - ஏகாந்தவாச பணி

**(Seclusion Work in Meherazad)**

பூனாவிலிருந்து திரும்பிச் சென்ற பின்னரும், பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்தது; அவர் மெஹராஸாத்தை விட்டு வெளியே செல்லவில்லை. முன்னதாக, பாபா அவ்வப்போது மெஹராபாத்திற்கு விஜயம் செய்துவந்தார்; ஆனால் 1962 ஆகஸ்ட் மாதத்தில் குல்மாயின் மறைவிற்குப் பின்னர், அவர் அங்குச் செல்வதை நிறுத்திவிட்டார். தேவைப்படும் தருணங்களில், அவர் மெஹராபாத்திலிருந்து பாதிரி அல்லது டாக்டர் டானை அழைப்பது வழக்கம். அதேபோல், அவர் எப்போதேனும் மன்ஸாரி அல்லது கைக்கோபாத் மற்றும் பாவ் கல்சூரியின் குடும்பங்களை மெஹராஸாத்திற்கு அழைத்தார்.

பாபா ஒரு நாளைக்கு இரண்டு முறை மண்டலி மண்டபத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டார் - காலை 8:30 முதல் 11:00 மணி வரை, மதியம் 1:00 அல்லது 1:30 முதல் 3:00 வரை. இந்தக் கால அட்டவணை இறுதிவரை நடைமுறையில் இருந்தது. மண்டபத்தில் பாபா முன்னிலையில் கடிதங்களும் தொலைத்தந்திகளும் உரக்க வாசிக்கப்பட்டன; மேலும் அவர் ஆண் மண்டலியுடன் சீட்டாடுவதில் சிறிது நேரம் செலவிட்டார். ஃபிரான்சிஸ் இந்த விளையாட்டுகளில் மிகவும் வேடிக்கையாகவும் ஆர்வமாகவும் இருந்தார்; அவருக்கு இந்த விளையாட்டில் கைராசி இல்லாததால், அவர் "வேறு எதுவும் செய்ய முடியாது!" என உணர்ச்சி பொங்க கூறினார்.

பாபா, அவரது மௌனத்தின் 39ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்தச் செய்தியை (1964 ஜூன் 27) வெளியிட்டார்:

**இறையன்பு மற்றும் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளைக் குறித்த எந்த செய்தியும், இறை நாட்டம் மிக்க ஒருவரை அவற்றின் உண்மையான அனுபவத்திற்கு நெருக்கமாக எடுத்துச் செல்ல முடியாது; ஆனால் எனது மௌனத்தைக் கலைப்பது என்பது, இறை நாட்டம் மிக்க ஒருவரின் அறியாமையின் கடினமான மேல் ஓட்டை உடைத்து, அதன் உண்மையான அர்த்தத்தை அவருக்கு வெளிப்படுத்தும்.**

பாபா, அவரது மௌனத்தைப் பற்றி தொடர்ந்து கூறினார்: "**நான் மௌனம் கடைப்பிடிக்கும் போது, நான் கூறுவதைக் கேளுங்கள்; ஏனெனில், நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, நீங்கள் கேட்பதற்கு ஒன்றும் இராது!**"

பாபாவுடன் தொடர்பில் இருக்கும் அனைவரும் 1964 ஜூலை 9 நள்ளிரவு முதல் ஜூலை 10 நள்ளிரவு வரை மௌனம் கடைப்பிடிக்க வேண்டும். ஏதோ காரணங்களுக்காக மௌனம் அனுஷ்டிக்க முடியாதவர்கள், 10ஆம் தேதி காலை 8:00 முதல் இரவு 8:00 மணி வரை, பன்னிரண்டு மணி நேரம், நீர் கூட அருந்தாமல் உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும்.

கொல்கத்தாவில் ஏ.சி.எஸ். சாரிக்கு (A.C.S CHARI), அந்த மௌன நாள் மிகவும் கடினமான நாளாக இருந்தது. அன்றைய மௌனத்தில், அவரது கடந்த கால தவறுகளையும், தவறான செயல்களையும் மறு ஆய்வு செய்ததால், 'வருத்தம் நிறைந்த' நாளாக இருந்தது. அவர் தன்னைத்தானே கட்டுப்படுத்த முடியாமல் ஆழ்ந்த சங்கடத்திற்குள்ளாகி, அன்று மாலையில், அவர் கீழ்வரும் தொலைதந்தியை பாபாவிற்கு அனுப்பினார்:

எனது வாழ்வின் கடந்தகால நிகழ்வுகளை மறு ஆய்வு செய்யும் வேளையில், மனதில் மிகவும் வருத்தம் தோய்ந்த கசப்பான உணர்வு தோன்றுகிறது. மேலும், நான் உங்களின் அன்பனாகவும், சீடனாகவும், சேவகனாகவும் இருக்கத் தகுதியற்றவன் என உணர்கிறேன். என்னை முழுமையாக மன்னிக்கவும், உமது அளப்பரிய அன்பிற்கும், வற்றாத அருளுக்கும், என்னை எல்லா வழிகளிலும் தகுதியுடையவனாக மாற்றவும் உம்மை வேண்டிக் கொள்கிறேன்.

சாரி, இந்த பதிலை அடையப் பெற்றார்:

**'பாபா உங்களை மன்னித்துவிட்டார் என்றும், உங்கள் குறைபாடுகள் மற்றும் பலவீனங்களைப் பற்றி நீங்கள் கவலைப்படாமல், அவை மறுபடியும் தலை தூக்காமல் கட்டுப்படுத்தவும், அவர் மீதான சிந்தனை மற்றும் அவரது நாமத்தின் பக்கபலத்துடன் அவற்றிலிருந்து மேலெழுந்து நிற்கும் வகையில், முழு கவனத்தையும் செலுத்த வேண்டும்' என்று நான் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பாபாவின் நோக்கத்தில், நீங்களும், அவருடைய ஆபரணங்களில் ஒன்று என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன், மேலும் அதன் பொலிவு, வெளித்தோற்றத்தில் தூசி அல்லது மாசு போன்றவற்றால் மங்கிப் போனாலும், அது ஒருபோதும் களங்கமடையாது! அதை மெருகேற்றிய அடுத்த கணமே அது பிரகாசித்து, ஒளிர்ந்து கொண்டிருக்கும்.**

ஜூலை 12 ஞாயிற்றுக்கிழமை காலை, வாமன், ஆதியின் காரில் கைக்கோபாத்தை மெஹராஸாத்திற்குத் திரும்ப அழைத்துச் சென்றார். நோஷிர் 'ஸாம்' ஈரானியும் (NOSHIR 'SAM' IRANI) திரும்பி வந்து, மெஹராஸாத்தில் தங்கியிருந்தார். ரமா, ஷீலா, மெஹர்நாத் மூவரும் 14ஆம் தேதி பிற்பகல் 2:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு பிரோஜாவிற்கும், 19ஆம் தேதி கில்னானி தம்பதியருக்கும் தரிசனம் வழங்கப்பட்டது. ரமாவின் தந்தை, பிரதாப் ஸிங் பர்மார் (PRATAP SINGH PARMAR), அஹமதுநகருக்கு வந்து, ரமா மற்றும் குழந்தைகளுடன் 23ஆம் தேதி மதியம் 1:00 மணிக்கு மெஹராஸாத் சென்றார்.

டாக்டர் டானின் சகோதரர் லண்டனில் புற்றுநோயால் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தது தெரிய வந்ததும், 1964 ஜூலை 24 அன்று, அவர் பாபாவிடம் இதைத் தெரிவித்தார்; தேவைப்பட்டால் இங்கிலாந்துக்குச் செல்ல பாபா அவருக்கு அனுமதி வழங்கினார்.

இதற்கிடையில், ஜான் ஹெய்ன்ஸ் (JOHN HAYNES) தனது கோடை விடுமுறையின் போது வாஷிங்டன் டி.சி.யில் ஒரு காங்கிரஸ் நபருக்கு பணிபுரிந்து கொண்டிருந்த வேளையில், அவர் ஜனாதிபதி லிண்டன் ஜான்ஸனின் மகள் லூசியுடன் (PRESIDENT LYNDON JOHNSON'S DAUGHTER, LUCY) நட்பு கொண்டார்; அவர் பாபாவைப் பற்றி லூசியிடம் கூறினார். ஜான் சில பணிகளின் நிமித்தம் மதிய வேளைகளில் வெள்ளை மாளிகைக்குச் (WHITEHOUSE) செல்வதை வழக்கமாகக் கொண்டார். பாபா அவருக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: "**வெள்ளை மாளிகையில் ஜான் மூலமாக பாபா செய்யவேண்டிய பணியைப் பற்றியும், உயர் அதிகாரிகளுக்கு பாபாவின் இலக்கியங்களை விநியோகிக்க ஜானுக்கு கிடைத்த வாய்ப்பைக் குறித்தும் பாபா மிக்க மகிழ்ச்சியடைகிறார்.**"

இந்தக் காலகட்டத்தில், டான் ஸ்டீவன்ஸ் (DON STEVENS) கலிஃபோர்னியாவிற்குக் குடிபெயர்ந்தார். அவர் இந்தியாவிற்குப் பயணம் செய்து, மெஹர்ஜியுடன் 1964 ஜூலை 31 மதியம் 2:00 மணிக்கு பாபாவை சந்தித்து, தரிசனத்திற்கு பின்னர் அதே மதியம் மெஹராஸாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். டான், பாபாவை சந்திக்கச் செல்லும் போதெல்லாம், அவர், ஐவி டியூஸ், அவரது மகள் சார்மியன், ஸூஃபிகள் மற்றும் உளவியல் பயின்று வந்த பல்கலைக்கழக மாணவர் அலென் ஏல் (ALAIN YOUELL) ஆகியோருக்கு அன்பின் செய்திகளை அனுப்பிவைத்தார்.

டான் ஸ்டீவன்ஸ் 'ஸ்டாண்டர்ட் எண்ணெய்' நிறுவனத்தில் (STANDARD OIL COMPANY) நல்ல ஊதியம் பெறும் நிர்வாகி. ஒருமுறை, அவர் ஒரு மருத்துவர், ஆசிரியர் அல்லது ஆலோசகர் போன்ற மனிதநேய பணியைத் தொடர வேண்டும் என்ற ஆர்வத்தில், இந்தப் பதவியைக் கைவிட நினைத்தார். அடுத்த முறை இந்தியா வரும் வேளையில், பாபாவிடம் தனது முடிவைச் சொல்ல வேண்டும் என முடிவு செய்தார். அவர் வந்ததும், வாழ்த்துகளைத் தெரிவித்த அடுத்த கணமே, டான், "பாபா, எனது கோரிக்கைகளால் உங்களை இப்படித் தொந்தரவு செய்வதற்காக என்னை மன்னியுங்கள், ஆனால் எனது சொந்த வாழ்க்கையில் முக்கியமான ஒன்றை நான் உங்களுடன் விவாதிக்க விரும்புகிறேன்" என்றார். பாபா மிகுந்த ஆர்வத்துடன் அவரைப் பார்த்து, தொடரும்படி சைகையால் தெரிவித்தார். பாபா, அதற்கிடையே எரச்சுடன் வேறொரு விஷயத்தைப் பற்றிக் கேட்கத் தொடங்கியபோது, டான் சில வார்த்தைகளை மட்டுமே கூற முடிந்தது.

மீண்டும் டான் தொடங்கினார். சில வாக்கியங்களுக்குப் பிறகு, பாபா மறுபடியும் எரச்சுடன் உரையாடலில் ஈடுபட்டார். அப்போது பாபா, டானிடம் வேறு எதையோ கேட்க, டான் அதற்கு பதிலளிப்பதில் கவனமாக இருந்ததால், அவர் தனது சொந்த வாழ்க்கையைப் பற்றிய கேள்வியை முற்றிலும் மறந்துவிட்டார். டான், இந்தியாவை விட்டு விமானத்தில் பயணத்தைத் தொடங்கிய அந்த நேரத்தில், அவர் அதை நினைவு கூர்ந்து, பாபாவிடம் கூற இயலாததை எண்ணி வருந்தினார்.

சில மாதங்களுக்குப் பின்னர், அடுத்த முறை பாபாவைப் பார்க்கும் போது அவரிடம் இந்த விஷயத்தை எடுத்துரைக்க டான் தீர்மானித்தார். வந்ததும், அவர் அதைத் தொடங்கினாலும், முன்பு நடந்த அதேதான் இப்போதும் நடந்தது. பாபா கவனமாகக் கேட்கத் தொடங்கினார், பின்பு உரையாடலின் தலைப்பை மாற்றியதால், ஸ்டீவன்ஸ் மீண்டும் அதை மறந்துவிட்டார். விமானத்தில் பயணம் செய்யும் வேளையில் அவர் அதை நினைவுகூர்ந்து, மறுபடியும் திகைப்பில் ஆழ்ந்தார்.

அடுத்த முறை பாபாவிடம் இந்த விஷயத்தை, தவறாமல், முழுமையாக விவாதிக்கும் நோக்கத்தில் டான் உறுதியாக இருந்தார். அவர் இந்தியா வந்தபோது, "பாபா, எனது மனதில் ஏதோ ஒன்று என்னைத் தொந்தரவு செய்கிறது; அது என்னை ஆட்டிப் படைக்கிறது. நான் அதைப் பற்றி இரண்டு முறை விவாதிக்கத் தொடங்கினேன், ஆனால் ஏதோ ஒரு விதத்தில் அல்லது வேறு வழியின்றி அது எப்போதும் திசைதிருப்பப்பட்டது" என்றதும், இம்முறை பாபா அவரை நேராக உற்றுப் பார்த்து, தடங்கலின்றி அவரைத் தொடர அனுமதித்தார்.

'பாபா, இப்போதைய பணியை விட்டுவிட்டு, வேறு ஏதாவது செய்ய வேண்டிய நேரம் இது' என்று அவர் உணர்ந்ததாக டான் சொல்லவிருந்த அந்த கணத்தில்' பாபா, அதைத் தடுத்து, **"உங்களை எண்ணெய் வியாபாரத்தில் ஈடுபடுத்தியது யார் என்று நினைக்கிறீர்கள்?"** என்று கேட்டார். டான் அதிர்ச்சியடைந்தார். பாபாவின் பதில் அவரது கேள்வியிலேயே வெளிப்பட்டது. பாபா தொடர்ந்தார், **"நான் உங்களை இந்த எண்ணெய் வியாபாரத்தில் பணியமர்த்தினேன், ஏனெனில் இந்தக் குறிப்பிட்ட வாழ்க்கையில் நீங்கள் செலவழிக்க வேண்டிய மனப்படிவங்களை மிகவும் திருப்திகரமான முறையில் கொண்டு வரும் சூழல் இது. நான் உங்களை அந்தப் பணியில் அமரச் செய்தேன்; இப்போது அங்கேயே இருங்கள்."**

பாபாவின் வார்த்தைகள் டான் மீது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமின்றி, அவரது பணியின் மீதான அணுகுமுறையை அது முற்றிலும் மாற்றியது. "இப்போது எனது பணியை, சுவையற்ற, சலிப்பு தரும் ஒன்றாக அணுகுவதற்கு பதிலாக - பணம் சம்பாதிப்பதற்கான ஒரு வழி, அதனால் நான் பிற அனைத்து விஷயங்களையும் செய்ய முடியும் என்ற வகையில், இது ஓர் ஆர்வத்தைத் தூண்டும் சாகச பணியாக அமைந்தது. பாபா எனது பணியை மேலும் சிறப்பாகச் செய்யும் விதத்தில், வேறு என்ன செய்யக் கூடும் என்பதைக் கண்டறியும் ஆர்வத்தில் காத்திருந்தேன்."

மெஹராஸாத் திரும்பி வந்ததிலிருந்து, பாவ் கல்சூரியின் இரவுக் கண்காணிப்புப் பணி ஒவ்வொரு நாளும் மதியம் 2:30 அல்லது 3:00 மணி முதல் தொடங்க இருந்தது. ஆனால் பெண் மண்டலி அவருடன் இருந்த அவ்வேளையில், பாபா அவரை அழைக்காதலால், பாவ் கல்சூரி சிறிது தூரத்தில் அமைந்த ரானோவின் வராண்டாவில் அமர்ந்திருப்பது வழக்கம் (ஏனெனில் பாபா அவரை எந்த நேரத்திலும் அழைக்கக் கூடும்). பெண் மண்டலி புறப்பட்டுச்

சென்றதும், பாபா அவரை பொதுவாக மாலை 5:00 மணிக்கு அழைப்பது வழக்கமாகிவிட்டது. பிற்பகல் 3:00 மணியிலிருந்து அங்குக் காத்திருப்பதில் எந்த நியாயத்தையும் அவரால் காண முடியவில்லை. ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய இரண்டு மணி நேரம் வராண்டாவில் வெறுமனே காத்திருக்கச் செய்தார். பாவ் கல்சூரியைப் பொறுத்தவரை, அவருக்கு இந்தி கடிதங்களுக்கு பதில் எழுத வேறு நேரமும் கிடைக்கவில்லை.

சில நாட்களில் பாபா காலை 7:00 மணிக்கு மண்டலி மண்டபத்திற்கு வந்து, 11:00 மணிக்கு மதிய உணவிற்குச் செல்லும் வரை, பாவ் கல்சூரி உடனிருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து பாபா திரும்பிச் சென்றதும், பாவ் கல்சூரி பிற மண்டலியுடன் மண்டபத்தில் அமர வேண்டிய கட்டாயம். பிற்பகல் 3:00 மணிக்கு பாபா தனது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றபோது, பாவ் கல்சூரி அவருடன் நள்ளிரவு வரை கண்காணிப்புப் பணியில் அமர வேண்டியிருந்தது. எனவே, அவர் வசம், மிஞ்சிப் போனால், இரண்டு மணிநேரம் மட்டுமே இருந்தது - காலை 11:00 மணி முதல், மதியம் 1:00 மணி வரை - அந்த நேரத்தில் அவர் நீராடவும், மதிய உணவு உண்ணவும், இந்தி கடிதப் பரிமாற்றங்களில் கலந்து கொள்ளவும், இப்படிப் பல பணிகளைச் செய்யவேண்டிய கட்டாயம். சில நேரங்களில், கடிதங்கள் அனைத்திற்கும் பதிலளிக்கப் போதிய அவகாசம் இல்லாத அளவுக்கு கடிதப் பரிமாற்றம் இருந்தது; அதன் விளைவாக தினமும் இரண்டு மணிநேரம் வெறுமனே அமர்ந்திருப்பதில் பாவ் கல்சூரி எரிச்சலடைந்தார். இப்படிப் பல நாட்கள் கழிந்தன, பாவ் கல்சூரி இரண்டு மணி நேரம் வீண் என்று நினைத்ததைக் கடத்த வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்.

ஒரு நாள் காலையில் மண்டபத்தில், பாவ் கல்சூரியிடம் பாபா, "**இன்று வந்த அனைத்து கடிதங்களுக்கும் பதில் அனுப்பவும்**" என்று கூறி, குறிப்பாக **ஒரு கடிதம் மிகவும் அவசரம்** என்பதையும் சுட்டிக்காட்டினார். ஆனால், எவ்வளவோ முயன்றும், ரானோவின் வராண்டாவில் காத்திருக்கச் செல்லும் முன்பு, பாவ் கல்சூரியால் அந்தப் பணியை முடிக்க முடியவில்லை. மாலை 5:00 மணியளவில், பாபா அவரை அறைக்குள் அழைத்து, "**அந்தக் கடிதத்தை முடித்துவிட்டீர்களா?**" என்று கேட்டார்.

விரக்தியில் பாவ் கல்சூரி இவ்வாறு உளறிக் கொட்டினார். "எனக்கு எங்கே நேரம் பாபா? கடிதங்களுக்கு பதில் எழுத நேரமில்லை. மூன்று மணியிலிருந்து வெறுமனே வராண்டாவில் அமர்ந்திருக்கிறேன்! நீங்கள் எப்போது அழைப்பீர்கள் என்று நினைத்துக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஐந்து மணிக்கு முன்னால் நீங்கள் என்னை அழைப்பதில்லை. ஒவ்வொரு நாளும் இரண்டு மணிநேரம் இப்படியே வீணடிக்க வேண்டியதாகிறது; கடிதங்களுக்கு பதில் எழுத நேரமில்லை."

அதற்கு பாபா உடனடியாக பதிலளித்தார்: "**நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் ஒரு மூடன்! தேவையில்லாமல் அமர்ந்திருப்பதாக நினைக்கிறீர்களா? நீங்கள் வேலை இல்லாமல் வீணாக இருப்பதாக நினைக்கிறீர்களா? என் அழைப்பிற்காகக் காத்திருப்பது, உங்களால் செய்ய**

**முடிகிற மிகப்பெரிய பணி என்பது உங்களுக்குத் தெரியாது! உங்களை வராண்டாவில் அமர வைத்து, உங்கள் மூலமாக நான் செய்து முடிக்கும் பணியை, கடிதங்களுக்கு பதிலளிக்கும் பணியுடன் ஒப்பிட முடியாது.**

**“இமயமலையில் வாழும் ரிஷிகளும், முனிகளும், மௌன யோகிகளும், கண்ணிமைக்காமல் விழித்திருந்து, என்னை நினைவில் கொள்வதற்காக, கடுமையான பனியிலும், ஆணிகளால் நிரம்பிய படுக்கைகளில் அமர்ந்தும் இருக்கின்றனர். அவர்கள் பல ஆண்டுகளாக என் அழைப்பிற்காக காத்திருக்கின்றனர். இருந்தும் நான் அவர்களை சந்திக்கவில்லை. ஆணிகள் சதையைத் துளைப்பதால் அவர்களுக்குத் தூக்கம் இல்லை, அவர்கள் சொல்லொணா துன்பத்திற்கு ஆளாகிறார்கள், தங்கள் இறுதி மூச்சு வரை எனக்காகக் காத்திருக்கிறார்கள், இருந்தும் நான் அவர்களை அழைக்கவில்லை.**

**“இங்கே நீங்கள் ஒரு நாற்காலியில் சௌகரியமாக அமர்ந்து, எனக்காகக் காத்திருக்கிறீர்கள். ஐந்து மணிக்கு நான் உங்களை அழைப்பேன் என்பது உறுதி. இரண்டே மணி நேரத்திற்குள் நான் உங்களை அழைப்பதில் நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். நீங்கள் வருடக்கணக்கில் என் அழைப்பிற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. உங்களைத் தேவையில்லாமல் அமர வைக்கவுமில்லை. என் அழைப்பிற்காகக் காத்திருப்பது உங்கள் நேரத்தை ‘வீணடிப்பதாக’ இருக்க முடியுமா? நீங்கள் வேலையின்றி அமர்ந்திருப்பதாக நினைக்கிறீர்கள். இப்போது சொல்லுங்கள், எனக்காகக் காத்திருப்பது பணியாகாதா? நீங்கள் எவ்வளவு முக்கியமான பணிபுரிகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது.”**

பாபாவின் கூற்றில் அடங்கிய உண்மையை பாவ் கல்சூரி உணர்ந்தார்.

இதற்கிடையில், அமெரிக்காவில், ஃபில் காவன்ஸ் (PHIL COWANS) எனும் பாபா-அன்பரைப் பொறுத்தவரை, அவருடைய தொடர்பில் வந்த ஓர் இளம் பெண்ணுடன் பிரச்சினை இருந்தது. அவர் ஃபில் மீது அன்பையும் பாசத்தையும் உணர்ந்தாலும், அவர் மெஹர் பாபாவை ஏற்றுக்கொள்ளவில்லை. ஃபில் இதைக் குறித்து பாபாவிற்கு எழுதியபோது, 1964 ஜூன் 15 அன்று, எரச் மூலமாக, பாபா இந்த பதிலை அனுப்பினார்: **“நீங்கள், சம்பந்தப்பட்ட பெண்ணுடனான உங்கள் உறவைக் குறைத்துக் கொள்வது மட்டுமின்றி, அதை முற்றிலுமாகக் கைவிட வேண்டும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்குமாறு பாபா விரும்புகிறார். மேலும் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளான உங்கள் பாபா மீதான அன்பினால் நீங்கள் அவரைக் கவர்ந்திழுக்கும் நேரம் நெருங்கிவிட்டது - இது ஒரு நம்பிக்கைக்குரிய ஆர்வலருக்கான உண்மையான தேடலாகும்.”**

பெண்களுடனான ஃபில் காவனின் பிரச்சினைகள் தொடர்ந்தன, மேலும் அவர் திருமணம் செய்து கொள்ளலாமா வேண்டாமா என்று குழப்பமடைந்தார். ஃபில் இதைப் பற்றி மீண்டும் பாபாவிற்கு எழுதியபோது, 1964 ஜூலையில், ஆதி

மூலமாக பாபா பதிலளித்தார்: "**மனிதன் கடவுளை நேசிப்பதில் திருமணம் ஒரு தலையீடாக இருக்காது. நீங்கள் திருமணம் செய்துகொள்கிறீர்களா அல்லது தனியாக இருக்கிறீர்களா என்பது முக்கியமல்ல, நீங்கள் என்னை நேசித்து கீழ்ப்படிவதே முக்கியம் - உங்களுக்கு என் அன்பின் ஆசீர்வாதம். பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்கிறது**."

ஆதி மூலமாக மற்றுமொரு கடிதத்தில், பாபா இவ்வாறு அறிவுறுத்தினார்: "**நீங்கள் விரும்பும் பெண் குறைந்தபட்சம் பாபாவை ஏற்றுக்கொள்ள வேண்டும்; இல்லையெனில், நீங்கள் வாழ்க்கையின் இலக்கிலிருந்து திசைதிருப்பப்படுவீர்கள்!**"

ஆகஸ்ட் 1964இல், ஆதி மூலமாக பாபா ஃபில்லுக்கு கீழ்வரும் செய்தியை அனுப்பினார்: "**ஒருவர் பாபாவை நேசித்து, கீழ்ப்படிந்தாலும் இல்லாவிட்டாலும், அவரைப் பொறுத்தவரை அதில் எந்த வேறுபாடும் இல்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார்; ஒன்றே ஒன்று என்னவெனில், பாபா, மனித குலத்தையும், படைப்பையும் நேசிப்பவர், அந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும்**."

எம்.என். மிர்ஸா (M.N. MIRZA), அவரது மனைவி, மகன் மூவரும் 1964 ஆகஸ்ட் 1 அன்று சுமார் பதினைந்து நிமிடங்கள் பாபாவை சந்தித்தனர். அடுத்த நாள் காலை அண்ணா ஸாஹேப் குணே (ANNA SAHEB GUNE) அவரது மனைவியுடன் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டார். குணே ஒரு பிரபல ஆயுர்வேத மருத்துவரான ஜி.எஸ். குணே (G.S. GUNE) என்பவரின் புதல்வன். குணே நடத்திவந்த தந்தையின் ஆயுர்வேத மருத்துவமனையை, 1938ஆம் ஆண்டு திறந்து வைத்ததாக பாபா நினைவுபடுத்தினார், அதில் அண்ணா ஸாஹேபும் கலந்து கொண்டார். ஸரோஷ், விலூ இருவரும் அன்று மதியம் 2:00 மணிக்கு பாபாவை சந்தித்தனர். 11ஆம் தேதி, பாதிரி அவரது வழக்கமான பணிக்காக மெஹராஸாத்திற்கு வந்தார்.

1964 ஆகஸ்ட் 13 அன்று பூனாவிலிருந்து ஆனந்த் பி. ஷிண்டே (ANAND.B. SHINDE) என்பவரை ஆதி அழைத்து வந்தார். ஷிண்டே எலும்பியல் உபகரணங்களின் உற்பத்தியாளரான 'பிரதீப் அறுவை சிகிச்சை' நிறுவனத்தின் (PRADEEP SURGICAL CO.) உரிமையாளர்; மேலும் அவர் புதிய கழுத்துப்பட்டையை உருவாக்க பாபாவின் அளவீடுகளை எடுத்தார். அவர் 16ஆம் தேதி கொண்டுவந்த ஒரு முன்மாதிரி வடிவத்தை, பாபா முயற்சி செய்து திருப்தி அடைந்ததால், இறுதி வடிவத்தை முடிவு செய்து, அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஷிண்டே அதைக் கொண்டு வந்தார்.

டாக்டர் டான் ஆகஸ்ட் 14 அன்று பாபாவை சந்தித்த வேளையில், புற்றுநோயால் இறுதி நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கும் தனது சகோதரரைப் பார்க்க டானின் இங்கிலாந்து பயணம் குறித்து அவர்கள் விவாதித்தனர். கிஷோர்

மிஸ்திரி (KISHOR MISTRY) 15ஆம் தேதி மதியம் 2:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு வந்தவர், பாபா மற்றும் மண்டலிக்கு பஜ்ஜியும், ஜிலேபியும் கொண்டு வந்தார்.

ஆகஸ்ட் 5 அன்று, ஐவி டியூஸ், மணிக்கு எழுதிய கடிதத்தில், ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) இரண்டாவது பதிப்பில், ஸூஃபி மற்றும் வேதாந்த மெய்ஞான சொற்களின் பட்டியலை சேர்க்க விரும்புவதாகக் கூறியிருந்தார். மணி, ஆகஸ்ட் 20 அன்று, இது ஒரு நல்ல யோசனை என்றும் பாபா அதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் பதில் எழுதியதைத் தொடர்ந்து, லட் டிம்ஃபில் (LUD DIMPFL) சொற்களஞ்சியத்தை உருவாக்கும் பணியைத் தொடங்கினார்.

ஆதி, ஸரோஷ், விலூ மூவரும் 20ஆம் தேதி மதியம் 2:00 மணிக்கு பாபாவை சந்தித்த போது, ஸரோஷின் தொழில் சிக்கல்கள் மற்றும் அவற்றின் தீர்வு குறித்து விவாதிக்கப்பட்டது.

மும்பை வாழ் புகழ்பெற்ற ஆரம்ப கல்விக்கான ‘ஹில் கிரேஞ்ச் உயர்நிலைப் பள்ளி’யின் (HILL GRANGE HIGH SCHOOL) முதல்வர் ஸோஃபி கெல்லி (SOPHIE KELLY), ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தைப் படித்த பின்பு, மெஹர் பாபாவை சந்திக்கும் ஆர்வத்தில் இருந்தார். அவர் குடும்பத்துடன் முதலில் குருபிரசாத்திற்குச் சென்றபோது, பாபாவின் தற்போதைய முகவரி பற்றி தெரிவிக்கப்பட்டது. பாபா விதிவிலக்கு அளித்து, அவரையும், குடும்பத்தாரையும் மெஹராஸாத்தில் சந்திக்கும் ஓர் அரிய வாய்ப்பை வழங்கினார். முதல்வர் கெல்லியுடன் அவரது மகள், சகோதரர் மற்றும் மருமகன் இருந்தனர். மிகவும் அழகான தோற்றத்துடன் இருந்த கெல்லியின் மகள், தனக்கு லட் டிம்ஃபிலின் மகள் ‘த்ரீ-பி’யை (THREE-B) நினைவுபடுத்தியதாக பாபா குறிப்பிட்டார்.

பாபாவை சந்தித்த பின்பு, கெல்லி இரண்டு மணி நேரம் மெஹராஸாத்தில் தங்கி, எரச் மற்றும் ஃபிரான்சிஸுடன் கலந்துரையாடினார். யூதர் இனத்தைச் சார்ந்த ஸோஃபி கெல்லி, எரச்சிடம் விவரித்தார், “நான் பல ஆன்மீகப் புத்தகங்களைப் படித்திருக்கிறேன், ஆனால் ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகம் அனைத்தையும் மிதமிஞ்சி ஒளிர்கிறது. படைப்பின் முழுக் கட்டளைத் தொகுப்புகளையும், அதன் நோக்கத்தையும் படிப்படியாக வெளிப்படுத்தும் அதிகாரம் கொண்ட ஒரே புத்தகம் இது. இது அனைத்திலும் முழுநிறைவானது.”

சார்லஸ் பர்டம் (CHARLES PURDOM), மெஹர் பாபாவின் வாழ்க்கை, ‘தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்’ (THE PERFECT MASTER) புத்தகத் தொகுப்பு விரிவாக்கம் செய்யப்பட்டு, ‘தி காட்-மேன்’ (THE GOD-MAN) என்ற தலைப்பில் ‘ஜார்ஜ் ஆலன் & அன்வின் லிமிடெட்’ (GEORGE ALLEN & UNWIN LTD) என்ற வெளியீட்டு நிறுவனத்தால் லண்டனில் 1964இல் வெளியிடப்பட்டது. அவர் ஆகஸ்ட் 13 அன்று பாபாவிற்கு அந்தப் புத்தகத்தின் நகல் ஒன்றை அனுப்பி, இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

நான் இதை உங்களுக்கு அனுப்பும்போது, அதன் குறைபாடுகளை நன்கு உணர்ந்துள்ளேன். இதை எழுதுவது எனக்கு ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது, அந்தப் புத்தகத்தில் எனது அனுபவத்தை நான் தெரிவிப்பதாக நம்புகிறேன். இதர புத்தகங்களிலிருந்து நான் கற்றுக்கொண்டவற்றில் இன்னும் சிலவற்றை வெளிப்படுத்த விரும்புகிறேன், இப்போதுதான் நான் என்ன எழுதியிருக்க வேண்டும் என்று எனக்குப் புலப்படுகிறது!

புத்தகம் வந்து சேர்ந்ததும், பாபா, பர்டமிற்கு தொலைத்தந்தி மூலம் ஆகஸ்ட் 22 அன்று இந்த பதிலை அனுப்பினார்: "'**தி காட்-மேன்**' (THE GOD-MAN) **புத்தகம் எழுதியதில் வேரூன்றப்பட்ட உங்கள் அன்பு, நீங்கள் அனுப்பிய முதல் பிரதி மூலமாக என்னை வந்தடைந்து, மிகவும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது**."

ஆகஸ்ட் 24 அன்று, அஹமதுநகரைச் சேர்ந்த ஒரு மார்வாடி, முந்தைய ஆண்டு இதே தேதியில் பாபாவை சந்தித்தார்; நாசிக் நகரின் செங்கட் மஹாராஜ் (CHENGAT MAHARAJ) என்று அழைக்கப்படும் ஒருவர் உட்பட, ஐந்து அல்லது ஆறு நபர்களை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். இந்த 'ஆசிரியர்' என்று அழைக்கப்படுபவர் மிகவும் திமிர்பிடித்தவர், பாபாவின் முன்னிலையில் கேலியாக சிரித்தார்; ஆனால் பாபா அதைப் பொருட்படுத்தவில்லை, மாறாக, அவருடனும், அவரைப் பின்பற்றுபவர்களுடனும் அன்பாக நடந்துகொண்டார். புறப்படுவதற்கு முன்னர், அந்த நபரின் செயலால் வெட்கமடைந்த மார்வாடி மற்றும் குருவின் உள்ளூர் விருந்தோம்புநர் டாக்டர் பண்டிட் (DR. PANDIT), எரச்சிடம் மன்னிப்புக் கோரினர். பாபா நூற்றுக்கணக்கான சாதுக்களைத் தொடர்பு கொண்டதால் வருந்த எதுவும் இல்லை என்று கூறி, எரச் 'தி வேஃபேரர்ஸ்' (THE WAYFARERS) புத்தகத்தின் நகலைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

1964 ஆகஸ்ட் 30 அன்று, வெங்கோபா ராவ், அவரது மனைவி, மகள் மூவரும் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர். வெங்கோபா ராவ் தென்னிந்தியாவைச் சேர்ந்த முன்னாள் இரவுக் கண்காணிப்பாளர். 1949இல் அவர் கையகப்படுத்திய பைரமங்களா சொத்தின் ஒரு சிறிய பகுதியை விற்பது குறித்து ஆலோசனை செய்ய, ஜனவரி மாதம் அவர் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். பாபா அவருக்கு அனுமதி வழங்கியதும் சொத்து விற்கப்பட்டது. அதன் மூலமாக வந்த தொகையை, வெங்கோபா ராவ் (ரூ. 2,500) பாபாவின் காலடியில் வைத்தார்; பாபா தமது பணிக்காக ரூ.1,000 வைத்துவிட்டு, மீதியை வெங்கோபா ராவிடம் பிரசாதமாகத் திருப்பிக் கொடுத்தார்.

மறுநாள் மதியம் 2:00 மணிக்கு மெஹராஸாத்தில் டாக்டர் டான் மீண்டும் பாபாவை சந்தித்தபோது, செப்டம்பர் 3ஆம் தேதி மெஹராபாத்திலிருந்து இங்கிலாந்துக்குச் செல்ல அவரை அனுமதித்தார், அடுத்த வாரத்தில் டான் மும்பையிலிருந்து லண்டன் சென்றார்.

இந்த நேரத்தில் ஒருவரை நிலைகுலையச் செய்யும் விதத்தில் மெஹராஸாத்தில் ஒரு பார்வையாளர் தோன்றினார். ரதி பாலிவாலா (RATI BALIWALA) மும்பையைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட இளம் பெண், ஆகஸ்ட் மாத இறுதியில் சுமார் அரை மணி நேரம் பாபாவை சந்தித்த வேளையில், பாபா அவரை உடனடியாக மும்பைக்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தியும், அவர் செவிசாய்க்கவில்லை; செப்டம்பர் 1 அன்று இரவு, ஆங்காங்கே அலைந்து திரிந்து, சுமார் 8:30 மணியளவில் மெஹராஸாத்திற்குத் திரும்பி வந்து, பாபாவை தொந்தரவு செய்தார். அந்தப் பெண்ணை காரில் அலோபா மூலமாக அஹமதுநகருக்கு அனுப்பி வைத்து, அடுத்த ரயிலில் மும்பைக்கு அழைத்துச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

ஸொராஸ்டரின் பிறந்தநாளைக் (கோர்தாத் ஸால் - KHORDAD SAL) கொண்டாட கைக்கோபாத் குடும்பத்தினர், ஸரோஷ், விலூ மற்றும் ஆதி (அவரது பிறந்தநாளும் கூட) மெஹர்ஜி ஆகியோர் 4ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வந்தனர். சிறுநீரகத்தில் கல் இருக்கும் சாத்தியக்கூறுகளுடன் பாவ் கல்சூரி அன்று பூத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்; செப்டம்பர் 9ஆம் நாள் மெஹராஸாத் திரும்பி வந்தார்.

1964 செப்டம்பர் 6 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, பாபா அவரது சிறுநீரகத்தின் எக்ஸ்ரே எடுப்பதற்காக டாக்டர் ரானடேயின் (DR. RANADE) மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எரச், கோஹெர் இருவரும் உடன் சென்றனர். அனைத்தும் தயார் நிலையில் இருப்பதை ஊர்ஜிதம் செய்ய, ஆதி முன்கூட்டியே சென்றிருந்தார்.

அந்த ஆண்டு போதிய மழை பொழியாததால், அஹமதுநகர் மாவட்டத்தில் விவசாயிகளின் பயிர்கள் சேதமாயின. கிணறுகள் வறண்டு போனதால், குடிநீருக்கும் பிரச்சினை ஏற்பட்டது. செப்டம்பர் 6ஆம் தேதி நண்பகலில், பாபா அஹமதுநகரிலிருந்து திரும்பிய பிறகு, 30 அரன்காவ்ம் கிராமவாசிகள், மாட்டுவண்டிகளில் பதினைந்து மைல் தூரம் முழுவதும் பாடிக்கொண்டே மெஹராஸாத்திற்கு வந்தனர். பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக அவர்கள் வளாகத்திற்குள் நுழையத் தயங்கினர், ஆனால் அவர்களின் வருகையின் ஓசையைக் கேட்ட பெண்டு அவர்களை சந்தித்து, திரும்பி வந்து, பாபாவிற்குத் தகவல் வழங்கினார்; அவர் மாலை 3:00 மணிக்கு அனைவரையும் மண்டபத்திற்கு அழைத்து, **“உண்மையாகச் சொல்லுங்கள், ஏன் இங்கு வந்தீர்கள்?”** என்று பாபா கேட்டார்.

அவர்கள் தண்ணீர் நெருக்கடி மற்றும் எதிர்நோக்கிய பஞ்சம் குறித்து அவரிடம் எடுத்துக் கூறி, மழை வேண்டி வரம் கேட்டனர். பாபா, **“கவலைப்படாதீர்கள், நான் பார்த்துக் கொள்கிறேன்”** என்று பதிலளித்து, பிரசாதத்தை விநியோகித்த அடுத்த பத்து நிமிடங்களுக்குப் பிறகு, கிராம மக்கள் திரும்பிச் சென்றனர். செல்லும் வழியில் மழை பொழியத் தொடங்கியதும்,

அனைவரும் பாபாவை வாழ்த்தி அரன்காவ்ம் கிராமத்தைச் சென்றடைந்தனர். செப்டம்பர் 9ஆம் தேதி முதல், மூன்று நாட்கள் தொடர்ந்து பெய்த கனமழையால் வறட்சி தவிர்க்கப்பட்டது.

பாபாவின் சுற்றறிக்கையில், ஏகாந்தவாசம் மேற்கொள்ள விரும்புவதாக அவர் குறிப்பிட்டிருந்தாலும், ஜபல்பூரைச் சேர்ந்த அமியா குமார் ஹஸ்ரா (AMIYA KUMAR HAZRA), பாபாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில், செப்டம்பர் 5 அன்று, தனது தாயுடன் அஹமதுநகருக்கு வந்தார். அனுமதியின்றி வந்ததற்காக ஆதி அவரைக் கடிந்து கொண்டார். ஹஸ்ரா மன எழுச்சியைத் தூண்டும் உணர்வுபூர்வமான ஒரு குடும்ப நெருக்கடியை சந்தித்தார் (அவரது மனைவி மற்றும் தாயாருக்கு இடையேயான பதற்ற நிலை), எனவே அவர் பாபாவை சந்திக்கும் ஒரு வாய்ப்பை கேட்டு, எழுத்து மூலம் எரச்சிடம் முறையிட்டார். பாபா இணக்கம் தெரிவித்து, அவரது இடர்பாடுகளைத் தீர்த்து வைத்தார். ஹஸ்ராவிற்கு நிகழ்ந்த அனுகூலமான செய்தியைக் கேள்விப்பட்ட ராம் லக்கன் ஷர்மா (RAM LAKHAN SHARMA), அவரும் ஒரு நண்பருடன் மெஹராஸாத் வந்து, 14ஆம் தேதி பாபாவை சந்தித்தார், அவர்கள் பாபாவின் அறிவுறுத்தல்களை புறக்கணித்தது, ஆதியை வருத்தத்தில் ஆழ்த்தியது.

1964 செப்டம்பர் 10 அன்று, நாகு (NAGGU), அவரது கணவர் ரவி இருவரும், சுனில் (SUNIL) என்றழைக்கப்பட்ட கைக்குழந்தையுடன் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். ஐந்து நாட்களுக்குப் பின்னர், 15ஆம் தேதி, 60க்கும் மேற்பட்ட அரன்காவ்ம் கிராமவாசிகள், பாபா, மழையை வரவழைத்ததற்காக நன்றி தெரிவிக்க மெஹராஸாத்திற்கு வந்தனர். பாபா அவர்களை அன்புடன் சந்தித்தார்; அவர்கள் மாலை அணிவிக்க, ஒவ்வொருவருக்கும் பிரசாதமாக இனிப்புகளை வழங்கினார். பாபா, சிலரிடம் பாடுமாறும், அரன்காவ்ம் மையத்தின் செயல்பாடுகள் குறித்து சிலரிடம் பேசுமாறும் கேட்டுக் கொண்டார். இதனால் மையத்திற்காகப் பணிபுரிவதில் அவர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் மற்றும் கருத்து வேறுபாடு வெளிக்கொணரப்பட்டது.

பாபா, பல்வேறு சேவகர்களை, அவர் முன்னால் தங்கள் குறைகளைத் தெரிவித்து, அவர்களுக்கிடையேயான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் அனைவரையும் ஊக்குவித்தார். ஒருவரையொருவர் நேசிக்குமாறு அவர்களுக்கு பாபா அறிவுரை கூறியபோது, ஒரு மனிதர் முறையிட்டார்: “பாபா, உங்களை நேசிப்பது மிகவும் எளிதானது, ஆனால் ஒருவரையொருவர் நேசிப்பது கடினம்!”

பாபா பதிலளித்தார், “**எனக்குத் தெரியும், ஆனால் நீங்கள் அதைச் செய்தால், இன்று உங்களை இங்கு கொண்டு வந்த மழையின் ஆசீர்வாதத்தை விட, இது ஒரு பெரிய அதிசயமாக இருக்கும். உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள், நான் உங்களுக்கு உதவுவேன்.**”

1964 செப்டம்பர் 20 அன்று, பாபா தனது மார்பில், இதயத்திற்கு அருகில் வலி இருப்பதாக புகார் கூறத் தொடங்கினார். பூனா இருதயநோய் நிபுணரான டாக்டர் கிரான்ட் (DR. GRANT), பூத் மருத்துவமனையில் ஆலோசனைக்காக அஹமதுநகருக்கு ஒவ்வொரு மாதமும் வருகை தருவது வழக்கம், எனவே அவர் 24ஆம் தேதி காலை 8:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். இதயத் துடிப்பு (CARDIOGRAM) பதிவு செய்யப்பட்டது. ஆனால் அவர் வருவதற்குள் வலி குறைந்துவிட்டது. டாக்டர் கிரான்ட், இதயப் பிரச்சினை எதுவும் இல்லை என்று ஊர்ஜிதம் செய்தார், ஆனால் அவர் 'ஏழு முதல் பத்து நாட்கள் ஓய்வெடுக்குமாறு' அறிவுறுத்தினார். பாபாவிற்கு மற்றுமொரு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது, அது யூரியாவின் (UREA) அளவு அதிகமாக இருப்பதைக் காட்டியது. இதன் விளைவாக, பாபா புரதச் சத்து குறைந்த உணவை உட்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டார். பின்னர், அவரது உயர் இரத்த சர்க்கரை காரணமாக, மாச்சத்து உட்கொள்வதைக் கட்டுப்படுத்த வேண்டும்; மற்றும் அதிகமான கொழுப்புச் சத்து காரணமாக, அவருக்கு கொழுப்புகள் அனுமதிக்கப்படவில்லை. இறுதியில், பாபாவிற்கு என்னதான் உண்ணக் கொடுப்பது என்று கோஹெர் குழப்பமடைந்தார்!

கேட்டி ஈரானி தனது விடுமுறை நாட்களைக் கழிக்க அஹமதுநகருக்கு வந்த வேளையில், பாபா அவரை 22ஆம் தேதி மெஹராஸாத் வர அனுமதித்தார். மெஹராஸாத்தில் இரவைக் கழித்த அவர் அஹமதுநகருக்குச் சென்று ஒரு வாரம் தங்கினார். 1964 செப்டம்பர் 30 புதன்கிழமை அன்று, அர்னவாஸ், நரிமன், ஜிம் மிஸ்திரி ஆகியோர் நான்கு நாட்களுக்காக மெஹராஸாத்திற்கு வந்தனர். அதே நாள் கஜ்வானி, ஸிகன்போரியா இருவரும் மும்பையிலிருந்து வந்தனர். கஜ்வானி, அமெரிக்கா மற்றும் ஜப்பான் விஜயம் மேற்கொண்டதைப் பற்றியும், பல்வேறு இடங்களில் சந்தித்த பாபா-அன்பர்களைக் குறித்தும் பாபாவிடம் கூறினார்.

பிரேம் கில்னானி செப்டம்பர் 24 அன்று மதியம் 2:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். அவரது மகன் வினோதின் பிறந்த நாளான அக்டோபர் 1 அன்று, பாபா அவரைப் பார்க்க குடும்பத்தினரை அனுமதித்தார். ரமா, மெஹர்நாத், ஷீலா ஆகியோர் 5ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர்; அவர்களுடன் வந்த ஃபெராம் மெஹராஸாத்தில் ஒரு வாரம் தங்கினார்.

ரீட்டா கால்ஸ்டைன் (RITA GALSTAIN) என்ற பெண் சிட்டகாங் (CHITTAGONG) நகரில் பெரிய அளவில் பாபா பணிகளைச் செய்துள்ளார். அவர் இங்கிலாந்திற்குக் குடிபெயர்ந்து, அங்கு செல்வதற்கு முன்பு, பாபாவின் தரிசனத்தைக் கோரியபோது, பாபா அவரை வர அனுமதித்தார்; அவர் கணவருடன் 1964 அக்டோபர் 6ஆம் நாள் மதியம் 2:00 மணிக்கு பாபாவை தரிசனம் செய்தார்; ஜால்பாய் அவர்களுடன் வந்தார்.

கோதாவரி மாய்க்கான செய்திகளுடன் ஆதி அவ்வப்போது ஸாக்கோரிக்கு அனுப்பப்படுவதும், அவர் அஹமதுநகரில் தனது பக்தர்களை சந்திக்க வரும் போதெல்லாம் ஆதி அவரை சந்திப்பதும் வழக்கமாக நடந்து வந்தது. ஸாக்கோரியை உறைவிடமாகக் கொண்டு வாழும் எஸ்.என். டிப்னிஸ் (S.N. TIPNIS), கோதாவரி மாயைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியிருந்தார்; அவர், பாபாவிடம் கோதாவரி மாயை மேற்கோள் காட்டி ஒரு செய்திக் குறிப்பை வழங்குமாறு கேட்டுக் கொண்டார். 6ஆம் தேதி, பாபா இந்த பதிலை அனுப்பி வைத்தார்: "**கிருஷ்ணருக்கு யஷோதா என்னவாக இருந்தாரோ, அதுவே எனக்கு கோதாவரி**."

இதற்கிடையில் வட இந்தியாவில், மூன்று வருட வறட்சிக்குப் பிறகு, கோதுமை மற்றும் அரிசிக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது; ஆயிரக்கணக்கான மக்கள் பஞ்சத்தை எதிர்கொண்டனர். நாளிதழ்கள் முழுவதிலும் அவர்களின் அவல நிலை குறித்த விளக்கங்கள் நிறைந்திருந்தன. தினமும் காலையில் மண்டலி மண்டபத்தில், கடிதப் பரிமாற்றம் மற்றும் முடிவெடுக்க காத்திருக்கும் விஷயங்களை கவனித்து, நேரம் இருந்தால், பாபா, "**இப்போது சில 'பொய்யும் போலியுமான' செய்திகளைப் பார்ப்போம்**" என்று கூறும் வேளையில், எரச், செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகளையோ அல்லது சுவாரஸ்யமான கட்டுரையையோ வாசிப்பதை வழக்கமாகக் கொண்டார்.

பாவ் கல்சூரி வறட்சியைப் பற்றி கேள்விப்பட்டபோது, பட்டினியால் வாடுபவர்களைப் பற்றி நினைத்தார்; பயங்கரமான துன்பத்திலிருந்து விடுபட எதையும் செய்ய முடியாத உதவியற்ற நிலையை எண்ணிப் பார்த்தார். ஒரு நாள், பிரபல தொழிலதிபர் ஒருவர், இலவச சமையல் அறைகளைத் திறந்து, ஏழைகள் பலருக்கு உணவு வழங்குவதைப் பற்றி படித்து மிக்க மகிழ்ச்சியடைந்தார், மேலும் அந்தக் கட்டுரை பாபா முன்னிலையிலும் வாசிக்கப்பட்டது. 'உண்மையான தன்னலமற்ற சேவைக்கு இதோ ஓர் உதாரணம். பிறர் நலனுக்காகப் பயன்படுத்த கடவுள் இந்த மனிதனுக்கு செல்வத்தைக் கொடுத்தது நல்லது' என்ற எண்ணம் பாவ் கல்சூரியின் மனதில் அலைபாய்ந்தது.

அதே இரவில், அவர் பாபாவுடன் கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, அவரது கால்களை அழுத்திக் கொண்டிருந்தார், திடீரென அந்தத் தொழிலதிபரைப் பற்றிய எண்ணம் அவரது மனதில் தோன்றியது. அவர் என்ன அற்புதமான மனிதராக இருக்க வேண்டும், எவ்வளவு தயாள பிரபுவாக இருக்க வேண்டும் என்று மீண்டும் சிந்திக்கத் தொடங்கினார். பாபா உடனே வினவினார், "**என்ன யோசிக்கிறீர்கள்?**"

வழக்கம் போல பாவ் கல்சூரி, "ஒன்றுமில்லை" என்றார்.

பாபா மீண்டும் கேட்டார், "**உண்மையைச் சொல்லுங்கள்**"

எனவே பாவ் கல்சூரி தனது எண்ணங்களை வெளிப்படுத்தினார் - வட இந்தியாவில் ஏழைகளின் நிலை, இலவச சமையலறைகளைத் திறந்த பணக்கார

வணிகரின் தன்னலமற்ற சேவை - இப்படிப் பல. அதற்கு பதிலளித்த பாபா, **"அவர் தன்னலமற்ற சேவை செய்யவில்லை; அவர் மிகவும் சுயநல சேவை செய்கிறார்! எதுவாயினும் அவர் செய்வது நல்லதுதான்"** என்று கருத்துத் தெரிவித்தார்.

பாவ் கல்சூரி அதிர்ச்சியை வெளிப்படுத்திய போது, பாபா விளக்கினார், **"அவரது சேவையின் பின்னணியில் ஒரு சுயநல நோக்கம் உள்ளது - அவர் பெயர் மற்றும் புகழுக்காகவும், செய்தித்தாள்களில் தனது புகைப்படம் மற்றும் பெயர் வெளிவருவதற்காகவும் இதைச் செய்கிறார். அவர் பிரபலமடைய விரும்புகிறார்; அவர் கருணை மற்றும் தாராள மனப்பான்மை கொண்டவர் என்று மக்கள் நினைக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர் அரசாங்கம் இவ்வளவு பணத்தைத் தொண்டு செய்வதைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இதைச் செய்கிறார், அதற்காக அவர் வரி விலக்கும் கோர முடியும்.**

**"ஆனால் இங்கே நீங்கள் என்னுடன் இருக்கிறீர்கள். எந்த உள்நோக்கமும் இல்லாமல், அனைத்து அன்புடனும் எனக்கு சேவை செய்கிறீர்கள். முழுப் பிரபஞ்சமும் என்னுள் உள்ளது. அந்த முதலாளி, உண்மையிலேயே தன்னலமற்றவராக மாறினாலும், முழுப் பிரபஞ்சத்திற்கும் சேவை செய்யவே முடியாது. ஆதலால், அவருடைய மற்றும் உங்களுடைய சேவையில் உலகளவு வேறுபாடு உள்ளது. என் மூலமாக நீங்கள் முழுப் பிரபஞ்சத்திற்கும் சேவை செய்கிறீர்கள்!"**

மருத்துவ உளவியலாளர்கள், டாக்டர் டிமோதி லியரி (DR.TIMOTHY LEARY) மற்றும் டாக்டர் ரிச்சர்ட் ஆல்பர்ட் (DR. RICHARD ALPERT), பின்பு 'பாபா ராம் தாஸ்' என்ற பெயரில் அழைக்கப்பட்டார்), இருவரும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் (PROFESSORS OF HARDVARD UNIVERSITY), பல புதிய சக்திவாய்ந்த 'போதை மருந்துப் பொருட்களை' (பின்பு 'மனமருட்சி மருந்து' - HALLUCINOGENS என்று அழைக்கப்பட்டன) நியூயார்க் நகரின் மில்ப்ரூக், மெல்லன் எஸ்டேட்டில் அமைந்த லியரியின் கல்வி நிறுவனத்தில் (LEARY'S INSTITUTE ON THE MELLON ESTATE) பரிசோதனை செய்தனர். 1964 ஆகஸ்ட் மாதத்தில், டாக்டர் லியரி, டாக்டர் ஆல்பர்ட் இருவரும், ஹார்வர்டில் பயின்று வந்த தங்கள் மாணவர்களின் குழுவுடன், மெஹர் பாபாவைப் பற்றி டார்வின் ஷா நிகழ்த்திய உரையைக் கேட்பதற்காக, அருகாமையில் அமைந்த உட்ஸ்டாக் (WOODSTOCK) குறுநகரத்திற்குச் சென்றனர். மெஹர் பாபா 'உணர்வு நிலையில் முன்னணி ஆன்மீக இறைஞானி' (LEADING 'SPIRITUAL AUTHORITY' ONCONSCIOUSNESS) என்று லியரி மற்றும் ஆல்பர்ட் கேள்விப்பட்டிருந்தாலும், உண்மையில் பாபாவை சந்தித்து, அறிந்த ஒருவரைக் குறித்த முதல் அறிமுகம் இதுவாகும்.

டார்வின் ஷாவின் உரையில் கலந்து கொண்ட குழுவில் ஒருவர் அலன் ஒய். கோஹன், (ALLAN Y COHEN, 24) என்ற பட்டதாரி மாணவர் சமூக உறவுகள் (SOCIAL RELATIONS) பிரிவில் பயின்று வந்தார். டார்வின் ஷாவை சந்தித்த பிறகு,

மெஹர் பாபா மீது ஏற்பட்ட ஆர்வத்தால், அவரைப் பற்றிய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார். 1964 செப்டம்பர் 29 அன்று, மர்டில் பீச் மெஹர் மையத்தில் வாழும் கிட்டி டேவிக்கு, எல்.எஸ்.டி (L.S.D. லைஸர்ஜிக் அமிலம் டைதிலாமைடு - LYSERGIC ACID DIETHYLAMIDE) உடனான தனது அனுபவங்களை விவரித்தார். ஓர் இனிய, மனதைக் கவரும் நாளில், அலன் கோஹன், மெஹர் பாபாவின் சொற்பொழிவுகளுடன் (DISCOURSES) காட்டின் திறந்தவெளிக்கு சென்று, போதைப்பொருள் உட்கொண்ட அனுபவத்தை இவ்வாறு விவரித்தார்:

அது மகிழ்ச்சி நிறைந்ததாகவும், பரவசமிக்கதாகவும், இறை-உணர்வுக்கு நெருக்கமாகவும் இருந்தது, என் உணர்வு நிலை (அது இப்போது நிச்சயமாக 'நான்' எனும் தனிமனித உணர்வு அல்ல), அதாவது, எனது தனிமனித அகந்தையின் (EGO) உணர்வுடன் நினைவில் கொள்ள முடிந்தது. இப்போது, அந்த அனுபவம் எந்த நிலையில் இருந்தது என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது - ஆனால் அதன் பின்னர், அது 'ஆன்மா' எல்லையற்றதை எதிர்கொள்வதைப் போலவே தோற்றுவித்தது (ஆனால், இன்னும் தன்னை வரையறுக்கப்பட்டதாகவே கருதுகிறது).

இப்போது எல்.எஸ்.டி. (L.S.D.) போதை மருந்து, மெஸ்கலைன் மற்றும் ஸைலோஸைபின் (MESCALINE AND PSILOCYBIN) போன்ற மனதை மாற்றும் (ஸைகடெலிக் - PSYCHEDELIC) போதை மருந்துகள், அவற்றின் விளைவுகள் அல்லது அவற்றைச் சுற்றியுள்ள சர்ச்சைகள் பற்றி உங்களுக்குக் தெரியுமா என்று எனக்குத் தெரியாது. 'இந்த மருந்துகளுடன் நான் பணிபுரியாமல் இருந்திருந்தால், மெஹர் பாபாவை நான் பார்த்திருக்க மாட்டேன்' என்று எனக்குத் தெரியும். அவை காலவரையறையற்ற காலத்திற்கும் அதீத உணர்வுநிலை (SUPER CONSCIOUSNESS), உணர்வுநிலையின் விரிவாக்கம், 'நான்' எனும் அகந்தையின் அழிவு போன்றவற்றை (தானாக அல்ல, நிச்சயமாக ஒரு சீரான சூழ்நிலையின் பின்னணியில்) அனுமதிக்கின்றன.

இந்த போதை மருந்துகள், உளவியல், கல்வி மற்றும் முற்றிலும் மோசமான சூழ்நிலைகளில் பயன்படுத்தப்பட்டாலும், அவற்றின் மிகவும் பொருத்தமான பயன்பாடு ஆன்மீக சுதந்திரத்தை அடைவதில் (அல்லது குறைந்தபட்சம் ஆன்மீகப் பாதையைப் பார்க்க) உதவுவதாக எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. இந்த போதை மருந்துகளின் வெளிப்பாடு (உண்மையில் பொதுவான தாவரங்களில் காணப்படும் இயற்கை இரசாயனங்கள்) ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல, மேலும் அவற்றின் அளப்பரிய தாக்கம் நமது சிதைந்துபோன (மோசமான நிலையில் இருக்கும்) சமூக கலாச்சாரத்தை தளர்த்துவதில் குறிப்பிடத்தக்க, நல்வழி காட்டும் படிக்கற்களாக இருக்கலாம் என்றும் நான் உணர்கிறேன்; அதாவது (மிகையாகச் சொல்லப்போனால்) ஆன்மீக சுதந்திரத்தை நோக்கிய உந்துதல்.

நியாயமான முறையில் எனது தாழ்மையான கருத்துப்படி, இதுபோன்ற அனுபவத்தின் சாத்தியக்கூறு, தனிநபரையும், பொதுவாக மனிதனையும் சுதந்திரமாக விடுவிப்பதற்கான மிகுந்த ஆர்வத்தைத் தூண்டும் வாய்ப்புகளில்

ஒன்றாகும் (நிச்சயமாக அன்பு மற்றும் சேவையின் பாதையில் அனுகூலமான பலனாக விளைவதை ஒத்தது என்று கூறலாம்). ஒருவர் அதை தியானம் போன்ற ஒரு நுட்பமான யுக்தியுடன் ஒப்பிடலாம்... இது நமது 'நான்' எனும் அகங்காரத்தின் கையாடல்களையும், நாம் சிக்கிக்கொண்ட பொறிகளையும் மிகத் திறமையாக உடைத்தெறியும்.

அலன் கோஹனின் கடிதத்தை பாபாவிற்கு அனுப்புவதில் கிட்டி டேவி மிகுந்த பதற்றமடைந்த போதிலும், பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்ட காலகட்டத்தில், அது அவர் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. 1964 அக்டோபர் 10 அன்று பாபா, ஆதி சீனியர் மூலம் அலன் கோஹனுக்கு இவ்வாறு பதிலளித்தார்:

**...அவதார் மெஹர் பாபாவின் ஏகாந்தவாசம் தற்போது தொடர்ந்த நிலையிலும், உங்கள் கடிதத்தின் சாராம்சத்தை அவருக்குத் தெரிவிக்க முடிந்தது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

**மெஹர் பாபா, அவருடைய ஆசீர்வாதத்தையும் அன்பையும் உங்களுக்கு அனுப்புமாறும், நீங்கள் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கும் வேளையிலும் அவரை நினைவுகூர்வதில் மகிழ்ச்சியடைவதாகவும் உங்களுக்குத் தெரிவிக்குமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தை நீங்கள் படிக்க வேண்டும் என்று மெஹர் பாபா விரும்புகிறார், ஏனெனில் அது நிலையற்ற வாழ்வில் மறைந்திருக்கும் மர்மத்தையும், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளையும் புரிந்துகொள்ள உதவும்.**

**'கடவுள் பேசுகிறார்' புத்தகம் வாழ்க்கை மற்றும் பிரபஞ்சத்தின் அடிப்படை நோக்கத்தையும், இயக்கவியலையும் புரிந்துகொள்ள ஆர்வம் காட்டும் அனைத்து மாணவர்களுக்கும் மிக முக்கியமான பாடநூலாகத் திகழும். இறை-உணர்வை நோக்கி பயணிக்கும் ஆன்மீக ஆர்வலர்களின்** (உணர்வு நிலையின் இயற்கையான போக்கில் அடையப்பெற்ற) **அனைத்து அனுபவங்களும் மாய உலகைச் சார்ந்தவை, அவை தற்காலிகமானவை, முற்றிலும் முக்கியமற்றவை என்பது 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது. அப்படியெனும்போது, ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் ஆர்வலர்களின் அனுபவத்தை ஒத்ததாகத் தூண்டச் செய்யும் போதை மருந்துகளை பரிசோதிக்கும் ஒரு சாதாரண மனிதனின் அனுபவம் எவ்வளவு போலித்தன்மை நிறைந்ததாகவும், கவனத்தை திசைதிருப்புவதாகவும் இருக்கும் என்பதை நன்கு புரிந்துகொள்ளலாம்.**

**'ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் ஒரே உண்மையான அனுபவத்தை ஒரு முறை அடையப்பெற்றால், அது தொடர்ச்சியான, என்றென்றும் அளவிறுதியற்ற அனுபவமாக இருக்கும்' என்று மெஹர் பாபா கூறினார்.**

**அனைத்து பொய்யும் போலியுமான மாயையின் சோதனைகளைக் கடந்து, தன்னை கண்ணியமாக வைத்துக் கொண்டு, தாழ்மையுடன்**

கடவுளின் அன்பில் தஞ்சம் புகும் ஆர்வலர் ஒருவரால் மட்டுமே, எங்கும் நிறை இறை ஒளியை அனுபவிக்க முடியும்.

கடவுளை ஒருவரின் சுய விருப்பத்துடன், உளமார நேசிப்பதன் மூலம் மட்டுமே அவரை உணர முடியும் - தூய்மையான, எளிமையான, களங்கமற்ற அன்பு. ஏக இறைவனான ஒரே உண்மைப்பொருளின் மீதான அன்பு, அதன் உச்சத்தை எட்டும்போது, இறைவனுடன் ஐக்கியமாவதற்கான ஏக்கம் மிகப்பெரியதாகவும், ஆர்வலரின் 'நான்' எனும் அகந்தை அதன் அடிமட்டத்திலும் இருக்கும்.

இந்தக் கட்டத்தில் ஆர்வலர் உணர்வு நிலையின் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கிறார்; கடவுளின் அனைத்து மகிமையிலும் அவரை நேருக்கு நேர் 'பார்க்கிறார்'. இந்த ஆர்வலர் இறை ஒளியை முழு உணர்வுடன் இடைவிடாமல் தொடர்ந்து அனுபவிக்கிறார். கடவுளின் மகிமையைப் 'பார்க்கும்' அவரது தொடர்ச்சியான, முடிவற்ற அனுபவத்தில் எந்த ஏற்ற தாழ்வும் இல்லாமல் அவர் இதை அனுபவிக்கிறார். கடவுளை நேருக்கு நேர் 'பார்க்கும்' இந்த மிக உன்னதமான அனுபவமும் கூட, உண்மையில் கடவுளுடன் ஐக்கியமாகும் அனுபவத்தை விட மிகக் குறைவாகவே இருக்கும்.

உண்மைப்பொருளான கடவுளுடன் ஐக்கியமாக வேண்டும் என ஏங்கும் ஆன்மீக ஆர்வலர் ஒருவர், யோக நிலைகள் மற்றும் பயிற்சிகள், அன்பான கடவுளைத் தவிர வேறு எதையேனும் இலக்காகக் கொண்டு தியானம் செய்தல், சில போதை மருந்துகளை முயற்சித்தல் மற்றும் சில உணவு வகைகளுக்கான மோகத்தைக் கொண்டிருத்தல் போன்றவற்றின் விளைவுகளைத் தவிர்ப்பது முற்றிலும் அவசியம். இதுபோன்ற விஷயங்கள் ஆர்வலரை மேல்நிலைக்குக் கொண்டு செல்லாது அல்லது மாயையின் பாதையிலிருந்து அவரை வெளியே கொண்டுவராது. இந்த நடைமுறை பழக்கவழக்கங்களிலிருந்து பிறந்த அனுபவங்கள், 'ஆர்வலர்' இதுபோன்ற செயல்களிலிருந்து பின்வாங்கும் வேளையில் அல்லது இந்தச் செயல்முறையால் உருவாக்கப்பட்ட விளைவின் சுற்றுப்பாதையிலிருந்து வெளியே வரும் தருணத்தில் அவற்றின் தாக்கம் விரைவில் மறைந்துவிடும்.

'மனதின் உணர்வுநிலையை மாற்றும்' போதை மருந்துகளை உட்கொள்வதன் மூலம் உருவாகும் ஆன்மீக அனுபவங்கள் என்று அழைக்கப்படுபவை அனைத்தும் மேலோட்டமானவை மற்றும் உண்மைப்பொருளின் நிழலான மாய உலகின் ஏமாற்றங்களுக்கு, ஒருவரின் அடிமைத்தனத்தை மேலதிக அளவில் வேரூன்றச் செய்கின்றன.

இந்த போதை மருந்துகள் தற்காலிகமாக ஒருவருக்குத் தரக்கூடிய 'சுதந்திரம்' எனும் சாயலின் அனுபவம், பிறப்பு-இறப்பு சுழற்சிகளிலிருந்து விடுதலை அடையப்பெறும் முயற்சியில், ஆர்வலரின் கழுத்தில் ஓர் அரவைக்கல்லாகச் சுழன்றுகொண்டிருக்கிறது.

**மனிதனின் துன்பத்தைப் போக்க போதை மருந்துகள்** (DRUGS) **உதவும் என்பதை அறிந்து கொள்வது நல்லது; ஒரு குறிப்பிட்ட நோய்க்கு ஒரு குறிப்பிட்ட மருந்தைப் பற்றிய ஞானம் தேவையானது; மேலும் மனித உடலின் நன்மைக்காக அந்தக் குறிப்பிட்ட மருந்தைப் பயன்படுத்துவது சிறந்தது.**

**ஆனால் ஆன்மீகப் பாதையில் ஆர்வலரின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் அல்லது அவரது அன்பான கடவுளிடமிருந்து பிரிந்திருப்பதால் விளையும் துன்பங்களைத் தணிக்கும் போதை மருந்து எதுவும் இல்லை. அன்பு ஒன்றுதான் அதன் உந்துசக்தியும், ஒரே தீர்வும் ஆகும். ஆர்வலர் ஒருவர் தன்னை மறந்து, தன்னிலும் பிறரிலும் தன் அன்பான கடவுளை அங்கீகரிக்கும் வரை, கடவுளை முழு மனதுடன் நேசிக்க வேண்டும்.**

**'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தை நீங்கள் படிக்கும் போது, பரிபூரண குருநாதரின் அருளின்றி, இறை உணர்வை எய்துவது எவ்வளவு சாத்தியமற்றது என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்; எனவே, இறை உணர்வை எய்திய ஒரு பரிபூரண குருநாதரிடம் சரணடைவது ஒன்றுதான் முதன்மையானது, அனைத்திலும் முக்கியமானது.**

ஆதியின் இந்த மற்றும் பல கடிதங்களின் விளைவாக, அலன் கோஹன் போதைப்பொருள் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, அவரது 'டாக்டர்' பட்டத்தை நோக்கி தொடர்ந்து பணியாற்றினார்.

நாசிக்கிலிருந்து அழைக்கப்பட்ட மினூ பரூச்சாவும் அவரது மனைவியும் 1964 அக்டோபர் 15 மதியம் 2:00 மணிக்கு பாபாவை தரிசனம் செய்தனர்.

1964 அக்டோபர் 10ஆம் நாள் பெங்களூரில் நடந்த 'எஸ்ஸோ கெமிக்கல் ஈஸ்டர்ன்' (ESSO CHEMICAL EASTERN) விற்பனையாளர் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மார்வின் கேம்பன் (MARVIN CAMPEN) இந்தியா வந்திருந்தார். 18ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, பாபாவை சந்திக்க மும்பையிலிருந்து கஜ்வானியுடன் பயணம் செய்தார். மார்வின், கஜ்வானி இருவரும் அன்று இரவை பூனாவில் கழித்து, மெஹர்ஜியும் அவர்களுடன் இணையவே, பிற்பகல் 2:00 மணிக்கு மெஹராஸாத்தை வந்தடைந்தனர். அவர்கள் சில மணி நேரம் தங்க அனுமதிக்கப்பட்டனர். பாபா, கேம்பனுடன் சுமார் அரை மணி நேரம் அன்பு, கீழ்ப்படிதல் மற்றும் அவரது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கினார். கேம்பன் தன்னுடன் கொண்டுவந்த 35 மிமீ கேமராவின் மூலம் அவருடைய பல வண்ணப் படங்களை எடுக்க பாபா அனுமதித்தார், கஜ்வானியுடனும் சில புகைப்படங்களை எடுத்தார். பாங்காக் (BANGKOK) நகரில், கேம்பன் மண்டலிக்காக தாய்லாந்து பட்டுச் சட்டைகளை வாங்கியிருந்தார். (அவரால் பாபாவிற்காக ஓர் அடர் இளஞ்சிவப்பு நிற பட்டுச் சட்டையைக் கண்டுகொள்ள முடியவில்லை.) பாபா அவற்றைக் கொண்டு வந்ததற்காக கேம்பனை லேசாகக் கண்டித்தார், அவர் வரும்

வேளையில் பரிசு பொருட்களைக் கொண்டு வர வேண்டாம் என்று அவர் முன்னர் அறிவுறுத்தியதை நினைவுபடுத்தினார்.

நாகு, அவரது சிறிய மகள் அல்கா (ALKA) இருவரும் கஜ்வானியுடன் பயணம் செய்து, நாசிக் செல்லும் வழியில் மெஹராஸாத்தில் இரண்டு இரவுகளைக் கழித்தனர்.

பாபா மீண்டும் தனது மார்பில் வலி இருப்பதாகப் புகார் கூறினார், எனவே கோஹெர், டாக்டர் கிரான்டைத் தொடர்பு கொண்டு, அடுத்த அஹமதுநகர் விஜயத்தின்போது பாபாவை பரிசோதனை செய்ய வருமாறு அழைத்தார். 1964 அக்டோபர் 22 வியாழன் அன்று, டாக்டர் கிரான்ட் காலை சுமார் 6:45 மணிக்கு மெஹராஸாத் வந்தார். இதயத் துடிப்பைப் (CARDIOGRAM) பதிவு செய்ய, மின் இயக்கி செயலிழந்ததால் முடியாமலாயிற்று; ருஸ்தம் காக்காவால் தேவையான உதிரிப்பாகத்தைக் கொண்டுவர காலதாமதமாகவே, பாபா, கோஹெர், எரச் மூவரும் டாக்டர் கிரான்டுடன் அஹமதுநகர் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு வந்து, ஆதியின் அறையில் செய்யப்பட்ட பரிசோதனையில் பாபாவின் இதயம் சீராக இருப்பதாகக் கண்டறியப்பட்டது.


அந்த நாள், அக்டோபர் 22, மெஹர்நாத் கல்சூரியின் பிறந்தநாள். வழக்கத்திற்கு மாறாக, இம்முறை பாபா அவரை மெஹராஸாத்திற்கு அழைக்காமல், பாவ் கல்சூரி மூலமாக, குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்தார்; மேலும் ரமா, மெஹராஸாத்தில் அனைவருக்கும் பஜ்ஜிகளைத் தயார் செய்து அனுப்பியிருந்தார். இதயத் துடிப்பை பதிவு செய்த பிறகு, பாபா, பாவ் கல்சூரி குடும்பத்தை சந்தித்து, கில்னானி குடும்பத்தையும் வரவழைத்தார். அவர் மெஹர்நாத்தைத் தழுவி, "**இந்த வருடம் நான் உங்களை சந்திக்க வருவதால், உங்களை மெஹராஸாத்திற்கு அழைக்கவில்லை. மின் இயக்கி செயலிழந்தது உங்களைப் பார்க்க நான் இங்கு வருவதற்கான ஒரு சாக்குப்போக்குதான்**!" என்றார்.

பாபா, அவ்வேளையில் அங்கிருந்த டாலி, ஸரோஷ், விலூ, பாஸ்கர், உஷா, ருஸ்தம் காக்கா, ஸில்லா காக்கு ஆகியோரைத் தழுவி, ஆதியுடன் மெஹராஸாத்திற்குத் திரும்பிச் சென்றார்.

24ஆம் தேதி மும்பையிலிருந்து வந்த கோர்ஷெத், பெண்மணிகளுடன் மூன்று நாட்கள் தங்கியிருந்து, அன்றைய தினம் மெஹராஸாத்திற்கு வந்திருந்த ஜால்பாயுடன் 27ஆம் தேதி புறப்பட்டுச் சென்றார்.

1964 அக்டோபர் பிற்பகுதியில், பாபா, உடல் ஆரோக்கியம் அனுமதித்தால், அவரது கிழக்கத்திய அன்பர்களுக்கு (1965) மே மாதம் பூனாவிலும், மேற்கத்திய அன்பர்களுக்கு (1965) டிசம்பர் மாதம் மும்பையிலும் தரிசனம் வழங்கப்போவதாக அறிவித்தார். இது குறித்து அவரது மேற்கத்திய அன்பர்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது, சில வாரங்களுக்குப் பின்பு கிழக்கத்திய அன்பர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

1964 நவம்பர் 1 ஞாயிற்றுக்கிழமை, தரிசன நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் குறித்து விவாதிக்க, பாபா, பூனா மையத்தின் பன்னிரண்டு சேவகர்களை அழைத்தார். அவர்கள், அனைத்தையும் ஏற்பாடு செய்ய இணக்கம் தெரிவித்தனர். குருபிரசாத்தின் பின்னால் கிழக்கு-மேற்கு சகவாச நிகழ்ச்சிக்காக எழுப்பப்பட்ட அதே வகையான பந்தலை அமைக்குமாறு பாபா அவர்களிடம் கேட்டுக்கொண்டார். மே மாதத்தின் முதல் பதினைந்து நாட்களுக்கு தரிசனம் வழங்குதாக முதலில் பாபா தெரிவித்தாலும், பின்னர் அதை மே 1 முதல் ஐந்து நாட்களாகக் குறைத்தார். கூட்டம் நிறைவடைந்ததும், மாலை 4:00 மணிக்கு பூனா அன்பர்கள் புறப்பட்டுச் சென்றனர்.



மெஹராஸாத் (MEHERAZAD), நவம்பர் (NOVEMBER) **1, 1964**
நிற்பவர்கள் - STANDING (இ-வ, L-R): ஜால்பாய் (JALBHAI), மதுசூதன் (MADHUSUDAN), ராமகிருஷ்ணன் (RAMAKRISHNAN), காம்ப்ளே (KAMBLE), சுப்ரமணியன் (SUBRAMANIAN), ஷிண்டே (SHINDE), சதாஷிவ் பாட்டீல் (SADASHIV PATIL), பவ்ஸார் (BHAVSAR)
அமர்ந்திருப்பவர்கள் - SITTING (இ-வ, L-R): மெஹர்ஜி (MEHERJEE), பிரதாப் அஹிர் (PRATAP AHIR), பாபா (BABA), ஸோமன் (SOMAN)



மார்வின் கேம்பன் (MARVIN CAMPEN),
மெஹராஸாத் (MEHERAZAD), அக்டோபர் (OCTOBER) **18, 1964**



மெஹராஸாத் (MEHERAZAD), நவம்பர் (NOVEMBER) **5, 1964**

மறுநாள், காக்கிநாடாவிலிருந்து 45 பக்தர்கள், இந்தியா முழுவதிலுமான புனித ஸ்தலங்களுக்கு விஜயம் செய்து, பாபாவின் தரிசனத்தை விரும்பி, அஹமதுநகர் வந்தடைந்தனர். பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டதால், அவர் முதலில் குழுவை ஐந்து நிமிடங்களுக்கு மட்டுமே சந்திப்பதற்கு இணக்கம் தெரிவித்தார்; தலைவணங்கவோ அல்லது தழுவவோ கூடாது; ஆனால் அவரது இரக்கத்தன்மையால், பாபா 3ஆம் தேதி குழுவை சந்தித்தபோது, ஒவ்வொரு நபரும் அவரை தலைவணங்க அனுமதித்தார்.

1964 நவம்பர் 5 வியாழன் பிற்பகல் 2:00 மணிக்கு கஜ்வானி, ஸிகன்போரியா இருவரும் கலிஃபோர்னியாவில் வாழும் ஒரு குடும்பத்துடன் - கென்னத் டபிள்யூ. ரேனி (KENNETH W. RANNEY), அவரது மனைவி மார்ஜொரி (MARJORIE) மற்றும் அவர்களது 20 வயது மகன் டேவிட் (DAVID) ஆகியோருடன் மெஹராஸாத் வந்தடைந்தனர். இந்தத் தம்பதியர் இந்திய மருந்து நிறுவனமான ரான்பாக்ஸி பரிசோதனைக்கூடத்தின் (RANBAXY LABORATORIES) உரிமையாளரான 'பாய் மோஹன் ஸிங்' (BHAI MOHAN SINGH) என்பவரின் நண்பர்கள். யோகானந்தாவின் 'மதர் ஹாமில்டன்' (YOGANANDA'S WOMAN DISCIPLE, MOTHER HAMILTON) என்று அழைக்கப்படும் ஸியாட்டில் (SEATTLE) நகரில் வாழும் பெண் சீடர், அவரைப் பின்பற்றி வந்த மார்ஜொரியிடம், மெஹர் பாபாவை சந்திக்குமாறு அறிவுறுத்தினார். மார்ஜொரி, பாபாவின் பல புத்தகங்களைப் படித்திருந்தார், மேலும் உலக கண்காட்சியில் 'மெஹர் பாபா காட்சி அரங்கத்திற்கும்' விஜயம் செய்திருந்தார்.

பல வருடங்களுக்குப் பிறகு, மார்ஜொரி இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நாங்கள் இந்தியாவிற்குச் செல்வதற்கு முன்னர், இந்தியாவில் மெஹர் பாபாவை சந்திக்குமாறு 'மதர்' ஹாமில்டன் எனக்கு அறிவுறுத்தினார். மெஹர் பாபாவை சந்திப்பதில் எனக்கு ஆர்வம் இல்லாதபோதும், நான் அவர் சொன்னதைச் செய்தேன்; நாங்கள் மும்பைக்கு வந்ததும் மெஹர் பாபாவைப் பற்றிக் கேட்டேன். நாங்கள் அவருடைய சீடர்கள் சிலரை சந்தித்தோம்; பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்வதாகவும், பார்வையாளர்களை சந்திக்கவில்லை என்றும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த கணத்தில், இத்தனை பெரிய மனிதரை சந்திப்பதற்கு நான் யார் என்று நினைத்து நிம்மதியாக உணர்ந்தது எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, எங்களை சந்திப்பார் என்ற செய்தி எங்களுக்கு வழங்கப்பட்டது

அவர் குடியிருந்த சிறிய வீட்டிற்கு காரில் பயணம் செய்தது எனக்கு நினைவிருக்கிறது. நாங்கள் அந்த இடத்தை நெருங்கியதும், எங்குச் சென்று கொண்டிருந்தோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை, ஏனெனில் நான் ஒரு வலுவான காந்தத்தின் ஈர்ப்பை உணர்ந்தேன். நான் உள்ளே நுழைந்ததும் அவர் என்னை ஆரத் தழுவிக்கொண்டார். அவரே எங்களை சந்திக்க முடிவு செய்ததாகக் கூறினார். அங்கு பாபாவுடன் ஒருவர் இருந்தார், அவர் மட்டுமே அனைத்து உரையாடல்களையும் நிகழ்த்தினார். இந்த நபருக்கு பாபாவிடமிருந்து எந்தத்

தகவல் தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை; அது தொலை நுண்ணுணர்வாகத்தான் இருக்கவேண்டும் எனத் தோன்றியது.

பாபாவை சந்தித்த பிறகு, ரேனி குடும்பம் அடுத்த சில மாதங்களில் இந்தியாவைச் சுற்றித் தங்கள் சொந்த காரில் பயணித்து, பல்வேறு ஆன்மீக ஸ்தலங்களுக்கு விஜயம் செய்து, பல ஆன்மீகப் பிரமுகர்களை சந்தித்தனர்.

1964 நவம்பர் 7ஆம் தேதி சனிக்கிழமை மதியம் 1:00 முதல் 4:00 மணி வரை, ஹபீப் கவாலி பாடகரின் இசைநிகழ்ச்சியைக் கேட்க, கிட்டத்தட்ட 125 அன்பர்கள் (ஷாந்தாதேவி உட்பட) மெஹராஸாத்தில் ஒன்றுகூடினர். லதா இரண்டு பாடல்களையும், அஃப்ஸர் ஸீமானி (AFSAR SEEMANI) எழுதிய பாபாவைப் பற்றிய கஸலை கோகிலாவும் பாடினர்.

மெஹராஸாத்தில் தங்கியிருந்த நோஷிர் ஈரானி நவம்பர் 9 அன்று தனது இல்லம் சென்றார். அடுத்த நாள் ஆதி, பாபாவை சந்தித்தபோது, அவர் உடல்நலக் குறைவால் சற்று வித்தியாசமான தோற்றத்தில் காணப்பட்டார். டாக்டர். கிரான்டின் கடைசி வருகையிலிருந்து, பாபாவிற்கு இதய வலி அல்லது மார்பில் தசைப்பிடிப்பு ஒன்று அல்லது இரண்டு முறை இருந்தது, ஆனால் அவை குறுகிய காலத்திற்காக மட்டுமே இருந்தன. பெரும்பாலும், பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளின் காரணமாக மார்பில் வலி லேசாக, தாங்கக்கூடியதாக இருந்தது. ஆனாலும் பாபா மிகவும் பலவீனமாக உணர்ந்தார். மார்பில் ஏற்பட்ட வலியுடன் சற்று கனமான உணர்வும் அழுத்தமும் இருந்தது. இது தவிர, பாபாவிற்கு இரண்டு தொடைகள் மற்றும் கால்களில் எரிச்சலூட்டும் அரிப்பு ஏற்பட்டது, ஆனால் சில நாட்களுக்குப் பின்னர் அது தானாகவே மறைந்துவிட்டது.

குருபிரசாத்தில் இருந்தபோது, ஹமிர்பூரில் ஒரு பெரிய நிலத்தை வாங்குவது தொடர்பான யோசனையை புக்கார், பாபா முன் வைத்தார். பக்தர்களின் குழு ஒன்று அங்கே குடியிருப்பு ஒன்றை உருவாக்கலாம் என்று புக்கார் கற்பனை செய்திருந்தார். பாபா இந்த யோசனைக்கு ஒப்புதல் அளித்து, நவம்பர் 15-19 தேதிகளில் நடைபெறவிருந்த வருடாந்திர மெஹர் மேளாவில், ஹமிர்பூரில் இந்தத் திட்டத்தைத் துவக்கி வைக்க பெரிய அளவில் திட்டமிடப்பட்டது. பாபா நவ்ஸாரியின் ஹோஷங் பரூச்சாவையும், அஹமதுநகரின் சஞ்சீவனி டாக்கேஃபால்கரையும் தனது பிரதிநிதிகளாக அனுப்பிவைத்தார், மேலும் 1964 நவம்பர் 6ஆம் நாள் மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்து, அவர்கள் ஹமிர்பூருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

பாபா அவர்களைத் தழுவி, **“ஹமிர்பூரில் ஒன்றுகூடும் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு எனது அரவணைப்பை எடுத்துச் செல்லுங்கள்”** என்று குறிப்பிட்டார்.

பூனா, மும்பை, டெல்லி, டெஹ்ரா டூன், ஜபல்பூர், நாக்பூர், அஹமதுநகர் ஆகிய இடங்களிலிருந்து ஸூத்தானந்த் பாரதி, டாக்டர் மூர்த்தி, பேகம் அக்தர்,

மோஹன்-ஸைகல் போன்ற பலர் உட்பட, நாடு முழுவதிலுமிருந்தும் பல அன்பர்கள் மேளாவில் பங்கேற்றனர்.

புதிய குடியிருப்புக்கு ‘மெஹர்புரி’ (MEHERPURI) என்று பெயரிடப்பட்டது. (‘புரி’ என்பது ஒரு சமூகத்திற்கான புனிதமான குடியேற்றம் என்று பொருள்.) குடியிருப்பின் மையப் பகுதியில், பாபாவின் ஆளுயர பளிங்கு சிலை ஒன்றை எழுப்புவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. சிலையை நிலைநிறுத்தும் அளவில் ஒரு பளிங்கு கல் பலகை மெஹர்ஜியால் கொண்டு வரப்பட்டது. (இந்தப் பளிங்கு கல் மீது பாபா, குறிப்பாக கூப்பிய கைகளுடன் நின்று ஆண் மண்டலிக்கு வணக்கம் செலுத்தினார்.) மேலும் பாபாவால் ஆசிர்வதிக்கப்பட்ட இரண்டு பெரிய பாறை கற்கள் ஏகாந்தவாச மலையிலிருந்து (SECLUSION HILL) எடுத்துச் செல்லப்பட்டு, நவம்பர் 18 அன்று, ஹோஷங் பரூச்சாவால் ‘மெஹர்புரி’ நிலத்தில் நிலைநிறுத்தி, கற்பாறைகள், சிமெண்ட் மற்றும் செங்கற்களால் மூடப்பட்டன. பாபா அனுப்பிவைத்த அவரது சிறப்பு புகைப்படத்தை கஜ்வானி திறந்து வைத்தார்.

புக்கார், கேஷவ், ஸ்ரீபத் ஸஹாய் மூவருக்கும் பாபா ஒரு தொலைத்தந்தி அனுப்பினார், ‘மெஹர்புரி மற்றும் மேளா மீதான அவர்களின் அன்பும், பணியும் அவரை எவ்வளவு மகிழ்ச்சியடையச் செய்தது’ என்று அதில் குறிப்பிட்டிருந்தார். 1952 நவம்பர் மாதத்தில், பாபாவின் முதல் ஹமிர்பூர் வருகையின் போது, மெஹர்புரியில் பயணம் மேற்கொண்ட அவ்வேளையில், பாபா அந்த நிலத்தை புக்காருக்குச் சுட்டிக்காட்டினார். புக்காரால் பாபாவின் சைகையின் அர்த்தத்தை அப்போது புரிந்துகொள்ள முடியவில்லை; பாபா அந்த வயலில் விளைந்த பயிரை பற்றிக் கேட்பதாக நினைத்து, ‘அது தினை’ என்று அப்பாவித்தனமாக பதிலளித்தார். பாபா புன்னகைத்தார்; பாபாவின் சைகையில், அவர் யூகித்ததை விட வேறு ஏதோ இருப்பதாக நினைத்து, பாபா எதைக் குறிப்பிட விரும்பினார் என்பது புரியாமல் திகைப்பில் ஆழ்ந்தார். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், இதே நிலத்தை ‘மெஹர்புரி’ குடியிருப்புக்காகத் தேர்ந்தெடுத்து வாங்கியபோதுதான், பாபாவின் சைகையின் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்தார்.

சமீபத்தில் பூனா சேவகர்களுடனான சந்திப்பில், பாபா அவர்களிடம் கூறியிருந்தார்: “**நீங்கள் என்னைப் பார்க்கவும், என் அன்பைக் காணவும் விரும்பினால், ஹமிர்பூருக்குச் செல்லுங்கள். நான் அங்கே இருப்பேன்.**” அங்குச் சென்றவர்கள் ஹமிர்பூரில் அவரது பிரசன்னத்தைக் கண்டு தெய்வீக மதுபானத்தில் நனைந்தபடி திரும்பினர்!

மும்பை குழுவைப் பற்றி ஜிம் மிஸ்திரி எழுதினார்: “அவர்கள் இன்னமும் ‘மெஹர்புரி மேளா’ மயக்கத்தில் இருக்கின்றனர்; பாபா மீதான ஹமிர்பூர் மக்களின் அளப்பரிய அன்பை நேரடியாகக் கண்டு, உணர்வுப்பூர்வமாக அனுபவித்த அவர்களின் வியப்பிற்கு எல்லையே இல்லை!”

இது மெஹர் பாபாவின் லீலை. அவர் ஏகாந்தவாசம் கடைப்பிடிக்கும் போது, அவர் தனது அன்பர்களைத் தொலைவில் வைத்திருந்தாலும், அவர்கள்

பாபாவின் தரிசனத்தை இழக்கவில்லை! அவரது ஏகாந்தவாசம் எந்த அளவுக்குக் கடுமையாக இருந்ததோ, அந்த அளவுக்கு நௌரங்காவில் அமைந்த 'மெஹர் தாம்', ஹமிர்பூரின் 'மெஹர்புரி', மஹேவாவில் உள்ள 'மெஹர்ஸ்தானா', கொவ்வூரின் 'மெஹர்ஸ்தான்', டெஹ்ரா டூன் நகரில் அமைந்த 'மெஹர் தாம்' மற்றும் 'மெஹர் மாஃபி' போன்ற பல்வேறு இடங்களில் அவருடைய பிரசன்னம் அதிகமாக உணரப்பட்டது.

1964 நவம்பர் 25 புதன்கிழமை மதியம் 2:00 மணிக்கு, பதினொன்று ஆண்டுகளாக இந்தியாவில் வாழ்ந்து வந்த ஆங்கிலேயர் ஒருவரை, தலேகாவ்ம் கிராமத்தின் ஆர். சக்ரபாணி (R. CHAKRAPANI OF TALEGAON) என்பவர் மெஹராஸாத்திற்கு அனுப்பிவைத்தார். ஆங்கிலேயர், மகேந்திர நாத் (MAHENDRA NATH) என்ற பெயரில் ஒரு சன்யாசியாக வாழ்ந்து வந்தார். மற்றுமொரு துறவியும் அவருடன் சென்றார்.

சந்திப்பின் போது, பாபா அவரிடம் வினவினார், "**இங்கிருந்து எங்குச் செல்வீர்கள்?**"

"ஹரித்வார்" என்று அவர் பதிலளித்தார்.

"**ஹரித்வாரிலிருந்து?**"

"பெனாரஸ்."

"**எவ்வளவு காலம் இப்படியே அலைந்து கொண்டிருப்பீர்கள்?**"

"நான் அலைந்து திரியவில்லை, புனித யாத்திரை ஸ்தலங்களுக்குச் செல்கிறேன்."

பாபா அவரிடம் கூறினார், "**கடவுள் உள்ளே இருக்கிறார், அங்கு மட்டுமே அவரைக் காண முடியும். அவரை அகத்தில் தேட வேண்டும், புறத்தில் அல்ல! அவரை வெளியளவில் பயணித்து தேடுவதில் எந்த பயனுமில்லை**" என்று கூறினார்.

அதற்கு அந்த நபர், "காட்கோப்பரில் (GHATKOPAR) ஒரு கோவிலில் எனக்காகக் கட்டப்பட்டு வரும் ஒரு சிறிய அறையில் நான் குடியேறத் தயாராகி வருகிறேன். அது முடிந்ததும் எனது அலைச்சல் நின்றுவிடும்" என்று பதிலளித்தார்.

பாபா இவ்வாறு அவதானித்தார், "**அலைந்து திரிவதை நிறுத்துவது மிகவும் கடினம், கடவுள் மீது அன்பு பிறந்தால் மட்டுமே அலைவது படிப்படியாக நிறுத்தப்படும். அந்த அன்பின் நெருப்பில் மனம் கருகி சாம்பலாகும்போது, உங்கள் அலைச்சல்கள் அனைத்தும் முடிவுக்கு வரும்.**"

ஜால்பாய் 23ஆம் தேதி சில மணி நேரத்திற்காக மெஹராஸாத்திற்கு வந்து, 27 அன்று பெஹராம் மற்றும் ஜெஹாங்குவுடன் திரும்பிச் சென்றார்.

1964 நவம்பர் 28ஆம் நாள், டான் ஸ்டீவன்ஸ், பாபாவுடன் ஒரு குறுகிய சந்திப்பிற்காக வந்தவர், பூனாவிலிருந்து, மெஹர்ஜியுடன் மெஹராஸாத்திற்குக் காரில் அழைத்துச் செல்லப்பட்டார். மதியம் 2:00 மணிக்கு மண்டலி மண்டபத்தில்

நுழைந்த அந்த வேளையில் பாபா, டானிடம், "**மஹாபிரளயம், அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?**" என்று கேட்டார்.

பாபா பதிலுக்காகக் காத்திராமல் சைகையால் தொடர்ந்தார். "**இது முழுப் படைப்பையும், கடவுள் சுவாசத்தில் உள்வாங்கி வெளிவிடுவது.**"

டான் எப்பொழுதும் பாபா முன்னிலையில் சிரித்து, மகிழ்ந்து, வேடிக்கையாக இருக்க முயற்சி செய்தார், எனவே இந்த சந்தர்ப்பத்திலும் அவர் ஒரு முயற்சியை மேற்கொண்டார்: "ஆம், பாபா, நான் அதில் சிக்கிக்கொண்டால் எனக்கு என்ன நடக்கும் என்று நினைக்கும் போது, வருத்தப்படும் அளவுக்கு அது இருக்கும் என்று எனக்குத் தெரியும். இந்த வாழ்க்கை முழுவதும் எனக்கு அவ்வளவு எளிதானது அல்ல, மேலும் அந்த முயற்சிகள் அனைத்தும் வீணாகப் போவதில் நான் வருத்தப்படுவேன்."

பாபா சிரிக்கவில்லை; உண்மையில் அவர் புன்முறுவல் கூட செய்யவில்லை. "**ஒருபோதும் இல்லை, டான். கடவுளால் சுவாசம் உள்வாங்கப்பட்டு, படைப்பை மீண்டும் சுவாசமாக வெளிவிடும் வரை, நீங்கள் தற்போதைய அதே சூழ்நிலையில் பாதுகாக்கப்படுவீர்கள்.**

"**அதன் பின்பு, சில கிரக அமைப்புகள் வளர்ச்சியின் சரியான கட்டத்தை எட்டியதும், நீங்கள் மறுபிறவி எடுத்து, (மஹாபிரளயத்திற்கு முன்னால்) விட்டுச்சென்ற இடத்திலிருந்து உங்கள் ஆன்மீக உட்சுழற்சி** (INVOLUTION) **பாதையில் பயணத்தைத் தொடர்வீர்கள்.**"

"ஆச்சரியமாக உள்ளது," டான் நினைத்தார், "கடவுளின் படைப்பில் சிறிதளவும் இழப்பு அல்லது வீண் என்பது இல்லை."

1954-55இல் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) மற்றும் 1955-56இல் 'லிஸன், ஹியூமானிட்டி' (LISTEN HUMANITY) புத்தகங்களின் திருத்தம் முடிவடைந்த பிறகு, பாபாவின் வார்த்தைகள் குறித்த எந்தவோர் ஆக்கப்பூர்வமான பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வவதற்கு முன்பு, டான் நீண்ட நேரம் ஓய்வெடுத்தார். அவருடைய முந்தைய வருகையின் போது, பாபா அவரைத் தழுவி பின்னர் அவரிடம் வினவிய முதல் விஷயங்களில் ஒன்று: "**டான், இந்த நாட்களில் நீங்கள் பாபாவின் 'வார்த்தைகள்' குறித்து என்ன செய்கிறீர்கள்?**"

பாபா எதைக் குறிப்பிடுகிறார் என்பதை டான் நன்கு அறிந்திருந்தார், உண்மையில் வாழ்க்கையை எளிதாக எடுத்துக்கொள்வதில் மிகுந்த குற்ற உணர்வுடன் காணப்பட்டார். ஆயினும்கூட, டான் இவ்வாறு பதிலளித்தார், "பாபா, நான் உண்மையில் உங்கள் 'வார்த்தைகள்' என்ற கருத்தைப் பொறுத்தவரை எதையும் செய்யவில்லை; நான் உங்கள் அன்பில் திளைத்துக் கொண்டிருக்கிறேன்!"

பாபா மகிழ்ச்சியடைந்து, புன்னகைத்து, பேச்சின் தலைப்பை மாற்றினார். ஆனால் அரை மணி நேரம் கழித்து, திடீரென அவர் டானை நேரடியாகப் பார்த்து தீவிரமான தொனியில் வினவினார், "**ஆனால் டான், நீங்கள் பாபாவின் 'வார்த்தைகள்' குறித்து என்ன செய்கிறீர்கள்?**"

அந்த நேரத்தில், டான் அதைத் தவிர்க்க முயற்சிக்காமல் உண்மையை ஒப்புக்கொண்டார்: “பாபா, உண்மையில் நான் எதுவும் செய்யவில்லை. இதைக் குறித்து நான் வெட்கப்படுகிறேன். இதர திருத்தங்கள் தொடர்பான பணி அனைத்தும் முடிந்துவிட்டதால், நான் உங்கள் ‘வார்த்தைகளை’ மீண்டும் படிக்கத் தொடங்க வேண்டும் என்ற உணர்வு என்னுள் உருவானது.”

பாபா உடனே, “**அப்படிச் செய்யுங்கள்**” என்று சொல்லிவிட்டு, மீண்டும் பேச்சின் தலைப்பை மாற்றினார்.

டான் ஸ்டீவன்ஸின் அடுத்த வருகையின் போது, மீண்டும் பாபா அவரிடம் கேட்ட முதல் விஷயங்களில் ஒன்று, “**சரி இப்போது சொல்லுங்கள் டான், பாபாவின் ‘வார்த்தைகள்’ குறித்து நீங்கள் என்ன செய்தீர்கள்?**”

டான் இது விஷயத்தில், இதற்கு முந்தைய விஜயத்தின் போது நடந்ததை முற்றிலும் மறந்துவிட்டார், மேலும் தனது அலட்சியத்தால் தனக்குள்ளேயே தர்மசங்கடமாக உணர்ந்தார். அவர் நேர்மையாக பதிலளித்தார், “பாபா, நான் வெட்கப்படுகிறேன். வாழ்க்கை மிகவும் மும்முரமாக இருந்ததால், அனைத்தும் எனது மனதை விட்டு விலகிவிட்டது. ஆனால் நான் எனது பணியை (HOMEWORK) சரிவர செய்யாமல் திரும்பி வரமாட்டேன் என உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.” பாபா சிரித்துக்கொண்டே, அவர் கூறியதற்கு சரி என்று தலையசைத்து, உடனடியாகப் பேச்சை மாற்றினார். விரைவில் சந்திப்பு நிறைவுக்கு வந்தது.

டான் அமெரிக்கா திரும்பிச் சென்றதும், டாக்டர் தேஷ்முக்கின் ஐந்து தொகுப்புகள் கொண்ட மெஹர் பாபாவின் சொற்பொழிவுகளின் திருத்தம் செய்யப்பட்ட பதிப்பைத் தேடிக் கண்டுபிடித்தார். ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், அவற்றை முதன்முதலாகப் படித்தபோது, அவர் அதை அந்த அளவுக்கு அற்புதமானதாக உணரவில்லை, மேலும் அவர் அவற்றை மீண்டும் படிக்க வேண்டும் என்று அடிக்கடி நினைத்தார். டான் ஸ்டீவன்ஸ் அதை இப்போது செய்தபோது, அவர் கிட்டத்தட்ட ஒவ்வொரு வாக்கியத்தின் மகத்தான அர்த்தம் மற்றும் தீவிரத்தன்மையால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். முன்னதாக அவர் அற்புதமான விஷயங்களைப் படித்து, உற்சாகமாக உணரத் தவறியதை எண்ணி ஆச்சரியப்பட்டார்.

இப்போது, மீண்டும் இந்தியாவிற்குத் திரும்பி வந்து, ‘சொற்பொழிவுகளை டான் மீண்டும் படித்தபோது, அவற்றால் வெகுவாக ஈர்க்கப்பட்டதாக’, பாபாவிடம் விஷயத்தைக் கூறி, “பாபா, நான் எனது வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன். நான் திரும்பிச் சென்று சொற்பொழிவுகளை மீண்டும் படித்தேன். அவை முற்றிலும் பிரமாதமாக இருப்பதாக நினைக்கிறேன்.

“உண்மையில், (ஸான் ஃபிரான்சிஸ்கோவில் அமைந்த) ஸூஃபி மையத்தின் கதவுகளைத் தட்டும் இளைஞர்களுக்கு ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS), மற்றும் இந்த சொற்பொழிவுகள் (DISCOURSES) அனைத்தும் அடிப்படை புத்தகங்களாக - கிட்டத்தட்ட ஒரு ‘பைபிளாக’ இருக்கலாம் என்று நான்

உணர்கிறேன். மேலும் உலகெங்கிலும் உள்ள பல்வேறு பாபா குழுக்களிலும் இவற்றை அவ்வாறு பயன்படுத்த முடியும் என்றும் நினைக்கிறேன்."

பாபா கூறினார், "**ஆமாம், எனது வார்த்தைகளில் ஒரு சக்தி, ஓர் ஆன்மீக சக்தி நிரம்பியுள்ளது, அது நேர்மையான ஆர்வலர்களுக்கு மிகவும் உதவுகிறது. எனவே நீங்கள் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதோடு, பிறர் பாபாவின் வார்த்தைகளைப் படிக்கும் விதத்தில் அவர்களை ஊக்குவிக்கவும் வேண்டும்.**"

டான் ஸ்டீவன்ஸ் தொடர்ந்து கூறினார், "ஆனால் சொற்பொழிவுகளில் அமெரிக்க-ஆங்கிலத்தை விட இந்திய-ஆங்கில பாணி அதிகமாக இருப்பதை நான் கவனித்தேன். சில சமயங்களில், இது சமாளிக்க சற்று கடினமாகவும், மேலும் என்னை அறியாமலேயே வாக்கியங்களை நான் புரிந்து கொள்ளும் விதத்தில் மீண்டும் தலைகீழாக நேரத்தை செலவிட வேண்டியிருந்தது. அதாவது, என்னைப் பொறுத்தவரை, ஏற்புடைய மேற்கத்திய பாணியில் அவற்றை மீண்டும் திருத்தும் பணியை எவருக்கேனும் நீங்கள் வழங்கவேண்டும் என்று நினைக்கிறேன்... பாபா, அந்தப் பணியை என்னிடம் ஒப்படைப்பீர்களா?"

பாபா ஒப்புதல் அளித்து, ஆதியிடம் இதைக் குறித்து பேசுமாறு கூறினார். அந்த நேரத்தில் பாபாவின் பல புத்தகங்களின் பதிப்புரிமை ஆதியின் பெயரில் இருந்தது, மேலும் அவர் ஒரு புதிய பதிப்பிற்கு இணக்கம் தெரிவித்தார். இந்த வழியில், மெஹர் பாபாவின் சொற்பொழிவுகளை மூன்று-தொகுப்புகளில் காகித அட்டையுடன் மறுதிருத்தம் செய்யும் திட்டம் தொடங்கியது, இறுதியில் ஜப்பான் நாட்டில் அச்சிடப்பட்டு அமெரிக்காவில் 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' (SUFISM REORIENTED, INC) மூலம் ஆங்கிலம் பேசும் உலகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், பாபாவின் 'வார்த்தைகளை'த் திருத்துவது மற்றும் மறுமொழிபெயர்ப்பது குறித்த கருத்துக்களுக்கு முடிவே இல்லை. டான் சொற்பொழிவுகளில் பல மாதங்கள் பணியாற்றிய பின்னர், ஒருமுறை மெஹராஸாத் சென்றபோது, பாபா அவரிடம் பணி எப்படித் தொடர்கிறது என்று கேட்டார். சில நேரங்களில், எந்த ஒரு திட்டத்திலும் நடப்பது போல, டான் தனது உள்சக்தியில் பலவீனமாக, மனச்சோர்வடைந்த நிலையில் இருந்ததால், எதையும் யோசிக்காமல், "இப்போது கிட்டத்தட்ட நிறைவடையும் நிலைக்கு வந்துவிட்டது, பாபா, ஆனால் இந்தப் பணி அனைத்தும் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை" என்று உளறினார்.

பாபா அவருடைய கருத்தைக் கேட்டு வியப்படைந்தது போலத் தோன்றினாலும், டான் அவரது சிந்தனை ஓட்டத்தைத் தொடருமாறு தனது வழக்கமான சைகையால் தெரிவித்தார். டான் தொடர்ந்து கூறினார்: "அது சரி, பாபா, பலர் சொல்வதை நான் கேட்கிறேன்; ஏதேனும் வார்த்தைகள் தெளிவற்றதாக இருந்து உண்மைப்பொருளை (இறைவனை) மறைப்பதானால், மனதாலும் அதைப் புரிந்து கொள்ள முடியாது; உங்களை மிகவும்

நேசிப்பவர்களில் சிலர் கூட, இறை-உணர்வின் நாட்டத்தில் பாபாவின் வார்த்தைகளை ஒதுக்கி வைக்கலாம் என்று கூறுகிறார்கள்."

"**பாபாவின் சொந்த வார்த்தைகளைப் பற்றி மக்கள் அப்படியா கூறுகிறார்கள்?**" அவர் கிட்டத்தட்ட உரத்த குரலில் சீற்றத்தை வெளிப்படுத்துவது போலத் தென்பட்டார்.

டான், "ஆம்" என்று மௌனமாகத் தலையசைத்தார்.

மிகவும் வருத்தமடைந்த பாபா, வேகமாகத் தனது விரல்களை நகர்த்தி சைகையால் தெரிவித்ததை எரச் எடுத்துரைத்தார்: "**பாபா அவரது அன்பர்கள் படித்து பயன்படுத்தும் விதத்தில் வார்த்தைகளை வழங்கும் போதெல்லாம், ஆன்மீக அணுகுண்டை ஒத்த ஓர் இறை-ஆற்றலை அவற்றுடன் இணைக்கிறார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்! பின்னர் ஒருவர் வாசிக்கும் வேளையில், அந்த வார்த்தைகள் புரியவில்லை என்றாலும், ஆன்மீக ஆற்றலின் ஒரு பகுதி அந்த நபரால் உள்வாங்கப்படும். மேலும் இந்த ஆற்றல் அந்த நபரின் ஆன்மீக முன்னேற்றத்தில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கும்.**"

பாபா இவ்வாறு கூறி முடித்தார், "**டான், பாபா கூறியதை மக்களுக்குச் சொல்வதும், பாபாவின் வார்த்தைகளைப் படிக்கத் தூண்டுவதும் உங்கள் கடமையாகும், ஏனெனில் இது அவர்களின் ஆன்மீகப் பாதையில் தொடர்ந்து பயணம் செய்ய பெரும் உதவியாக இருக்கும்.**"

டான் ஸ்டீவன்ஸின் மற்றுமொரு வருகையின் போது, பாபா அவரை மூன்றாவது முறையாக எல்லோரா குகைகளுக்கு, இந்த முறை, எரச்சுடன் அனுப்பி வைத்தார். டான் நினைவு கூர்ந்ததற்கு இணங்க:

ஹைதராபாத் நிஜாமின் விருந்தினர் மாளிகையில் அன்று இரவு தங்கினோம். மாலைப் பொழுது சாய்ந்ததும், இரவு நேரமாகிவிட்டதால், 'கைலாஷ்' கோவிலுக்குள் நுழைய பொதுமக்களுக்கு அனுமதி இல்லாதபோதும், என்னை அழைத்துச் செல்லுமாறு எரச்சிற்கு அறிவுறுத்தப்பட்டது. கோவில் அறைக்குள் தனியாகச் சென்று தரையில் சம்மணமிட்டு அமரும்படி பாபா எனக்குக் கட்டளையிட்டிருந்தார்; நான் மீண்டும் மெஹராஸாத்திற்கு வந்ததும், அங்கு அனுபவித்ததை பாபாவிடம் சொல்ல வேண்டும். கோவில் அறையில் தனியாக அமர்ந்திருந்த எனக்கு சிறிது நேரம் ஒன்றுமே புரியவில்லை. பின்பு திடீரென ஏதோ ஒன்று அங்கு இருப்பதை உணர்ந்தேன், அது என்னை முழுவதுமாக அச்சுறுத்தியது; நான் அறையை விட்டு வெளியேறி, எனக்காக எரச் வெளியே காத்திருந்த இடத்தை நோக்கி ஓடினேன். நான் மெஹராஸாத் திரும்பி வந்ததும், நான் என்ன உணர்ந்தேன் என்று பாபா கேட்க, என்னுடைய அச்சத்தைப் பற்றி அவரிடம் சொன்னபோது, அவர் என்னை ஆச்சரியமாகப் பார்த்தார், எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. எரச் என்னிடம், பாபா அடிக்கடி பிரதான கோவில் அறையில் அமர்ந்திருந்ததாகவும், எரச் நுழைவாயிலில் காவல் புரிந்ததாகவும் கூறினார்.

1964 நவம்பர் மாத இறுதியில் 'ரோமன் கத்தோலிக்கர்களின் 38ஆவது சர்வதேச நற்கருணை மாநாடு' (INTERNATIONAL EUCHARISTIC CONGRESS OF ROMAN CATHOLICS) மும்பையில் நடந்தது; அங்கு மெஹர் பாபாவின் அன்பர்கள் 17,100 'உலகளாவிய செய்தி'களின் (UNIVERSAL MESSAGE) பிரசுரங்களை பிரதிநிதிகளுக்கு விநியோகித்தனர். "மக்கள் ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருக்கும் 'இறைவனின் இரண்டாவது வருகையின் காலகட்டம்' (SECOND ADVENT) வந்துவிட்டது என்றும், கிறிஸ்து நேரில் நம் மத்தியில் இருக்கிறார் என்பதையும் சொல்லாததற்காக, பிற்கால சந்ததியினர் நம் மீது குற்றம் சுமத்துவதை நாங்கள் விரும்பவில்லை" என்று மும்பையைச் சேர்ந்த ஒருவர் எழுதியிருந்தார். 1964 டிசம்பர் 2 அன்று, போப் ஆறாம் பால் (POPE PAUL VI), ரோம் நகரிலிருந்து மாநாட்டிற்காக மும்பைக்கு வருகை தந்தார்; கத்தோலிக்க போப்பின் முதல் இந்தியா வருகை இதுவாகும்.

அதே நேரத்தில், திபெத்திய தலாய் லாமா (TIBETAN DALAI LAMA) தலைமையில் பௌத்தர்களின் ஒரு பெரிய மாநாடு ஸாரநாத்தில் (SARNATH, பனாரஸுக்கு அருகில் அமைந்த ஒரு கிராமம், புத்தர் முதன்முதலில் 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் அவரது போதனைகளை வழங்கினார்) நடந்து கொண்டிருந்தது. பாபா இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்: "**போப் தலைமையில் உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான கத்தோலிக்கர்கள் ஒன்றிணைவதும், தலாய் லாமா தலைமையில் உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான பௌத்தர்கள் ஒரே நேரத்தில் இந்தியாவில் இரண்டு வெவ்வேறு இடங்களில் ஒன்று கூடுவதும், எனது தற்போதைய அவதார காலகட்டத்தில், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.**"

நோஷிர் ஈரானி 1964 டிசம்பர் 1 அன்று ஹமிர்பூருக்கு மேற்கொண்ட பயணத்திலிருந்து திரும்பி வந்து மெஹராஸாத்தில் தங்கினார். சஞ்ஜீவனி டாக்கே ஃபால்கரும் பாபாவின் பிரதிநிதியாக ஹமிர்பூருக்குச் சென்றிருந்தவர், தங்கள் பயணத்தைப் பற்றி விவரிப்பதற்காக 6ஆம் தேதி, கணவர் டாக்கேயுடன் மெஹராஸாத் வந்தார். அவர்களுடன் ரமா, ஷீலா, மெஹர்நாத் ஆகியோரும் வந்தனர். டிசம்பர் 7ஆம் தேதி இங்கிலாந்திலிருந்து மெஹராபாத் திரும்பிய டாக்டர் டான்கின் 11ஆம் தேதி மதியம் 2:00 மணிக்கு பாபாவை சந்தித்தார். .

டெல்லியைச் சேர்ந்த ஹர்ஜீவன் லால், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த தனது மகன் இந்தரை (INDER) அழைத்து வருவதற்காக சமீபத்தில் இங்கிலாந்து சென்றிருந்தார். அவர்கள் 1964 டிசம்பர் காலை 10:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டனர். பாபா, இந்தரிடம் எதற்கும் கவலைப்படாமல், இந்தியாவில் தங்கி உடல்நிலையை மீட்டெடுக்குமாறு அறிவுறுத்தினார். மாதம் ஒருமுறை பாபாவிற்குக் கடிதம் எழுதவும், மே மாதத்தில் நடக்கும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் பாபா அறிவுறுத்தினார்.

1964 டிசம்பர் 16 புதன்கிழமை பிற்பகலிலிருந்து, பாபா தனது இடுப்புப் பாகத்தில், எடையின் அழுத்தத்தால் மிகுந்த வலியை உணரத் தொடங்கினார்; வலி அடுத்த நாளும் தொடர்ந்தது; மேலும், முன்னர் ஒருமுறை கண்டுகொண்டது போலவே, ஒரு சிறிய எலும்புத் துண்டு இடுப்புப் பாகத்தில் சிக்கிக்கொண்டிருக்கலாம் என்று கோஹெர் யூகித்தார். 17ஆம் தேதி மதியம் 1:30 மணிக்கு பாபாவை பரிசோதனை செய்ய டாக்டர் டான் அழைக்கப்பட்ட போது, பாதிரியும் உடன் வந்தார்.

டிசம்பர் 15 அன்று, பாபாவின் சகோதரர் ஆதி ஜூனியர், அவரது மனைவி ஃபிரீனி, அவர்களின் குழந்தைகளான தாரா, ஷிரீன் இருவருடன் இங்கிலாந்திலிருந்து வந்து, 17ஆம் தேதி காலை பாபாவை சந்தித்தனர். ஆதி ஜூனியர் மெஹராஸாத்திற்கு அடிக்கடி வர அனுமதிக்கப்பட்டார், மேலும் பல சந்தர்ப்பங்களில் (பாபாவின் அனுமதியுடன்) அவர் முழுக் குடும்பத்தையும் அழைத்து வந்தார்.

1964 டிசம்பர் நடுப்பகுதியில், எதிர்பாராத விதமாக, ஒரு சில மேற்கத்தியப் பெண்களும் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டனர்; அவர்களில் ஒருவர் கிளாரிஸ் ஆடம்ஸின் மகள் ஸிந்தியா (CLARICE ADAMS' DAUGHTER CYNTHIA, 21). மெல்போர்ன் (MELBOURNE) நகரில் தனது கல்லூரிப் படிப்பை முடித்த பின்பு, ஸிந்தியா, ஜானிஸ் கேம் (JANICE CAMM) என்ற தோழியுடன் (பாபாவைப் பற்றி அறியாதவர்) இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டார். ஸிந்தியா, பாபாவைப் பார்ப்பதற்கு ஏதேனும் வாய்ப்பு உள்ளதா என்று கேட்டு ஃபிரான்சிஸுக்கு கடிதம் எழுதினார். பாபா, கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்வதாகவும், அதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்றும் ஃபிரான்சிஸ் பதிலளித்தார். ஸிந்தியா இதை எதிர்பார்த்தார், இருப்பினும், வேறு சில ஆஸ்திரேலிய பல்கலைக்கழக மாணவர்களுடன் கப்பலில் புறப்பட்டார்.

இரண்டு ஆஸ்திரேலிய இளம் பெண்களும் டிசம்பர் 19 அன்று மும்பைக்கு வந்தனர்; அன்று மாலை மெஹராவின் பிறந்தநாளுக்காக மெஹராஸாத்திற்குப் புறப்படத் தயாராக இருந்த அர்னவாஸுடன் ஸிந்தியா தொலைபேசியில் தொடர்புகொண்டார். (மெஹராவின் பிறந்தநாளுக்காக அர்னவாஸ், கேட்டி இருவரும் ஒரு வாரம் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டனர், மும்பையிலிருந்து கோர்ஷெத் மற்றும் பூனாவிலிருந்து மனூ ஜெஸவாலா ஆகியோரும் வந்து தங்கினர்.) ஆஸ்திரேலிய பெண்கள் பாபாவை சந்திப்பதில் அர்னவாஸுக்கும் நம்பிக்கை இல்லாத பட்சத்தில், அவர் ஸிந்தியாவுக்காக முயற்சிப்பதாகக் கூறினார். ஸிந்தியா, பாபா மற்றும் பெண் மண்டலிக்காகக் கொண்டுவந்த சில அன்பளிப்புகளை அர்னவாஸ் தன்னுடன் எடுத்துச் சென்றார்.

அடுத்த நாள் காலை, இளம் பெண்கள் எலிஃபென்டா குகைகளுக்குச் (ELEPHANTA CAVES) செல்ல ஒரு பயணத்தைத் திட்டமிட்டனர், ஆனால் 'ஏதோ சில காரணங்களுக்காக' ஸிந்தியா தனது மனதை மாற்றிக்கொண்டு, அன்று மதியம்

செல்ல முடிவு செய்தார். அது ஒரு வகையில் நல்ல முடிவாகவே இருந்தது. சிறிது நேரத்தில் அவர்களின் ஹோட்டல் தொலைபேசி மணி ஒலித்தது, பாபா அவர்கள் இருவரையும் மெஹராஸாத்திற்கு அழைத்ததாக நரிமன் அவர்களுக்குத் தெரிவித்தார். அன்று பிற்பகலில் அவர்கள், நரிமன், கேட்டி, ஹோமா தாதாசாஞ்சி ஆகியோரை சந்தித்து, அனைவரும் ஒன்றிணைந்து அஹமதுநகருக்குச் சென்றனர். பூனாவில் அன்று இரவைக் கழித்து, அடுத்த நாள், டிசம்பர் 21 அன்று காலை 9:00 மணிக்கு அஹமதுநகர் வந்து சேர்ந்தனர். ஸிந்தியா, ஜானிஸ் இருவரும் காலை 10:00 மணிக்கு அவரை சந்திக்க வருமாறு பாபா அறிவுறுத்தியதாக ஆதி அவர்களுக்குத் தெரிவித்தார். எனவே, இளம் பெண்கள் ஸரோஷ்-விலூ இல்லத்தில் சிறிது நேரம் தங்கி, நரிமன், கேட்டி, ஹோமா ஆகியோருடன் மெஹராஸாத்திற்குச் சென்றனர்.

விலூ வில்லாவில், ஸிந்தியா ஆடம்ஸ், ஜானிஸ் கேம் இருவரும் முந்தைய இரவு அங்கு வந்த வேறொரு மேற்கத்திய பெண்மணியை சந்தித்தனர். அவர் பெயர் ஃபிலிஸ் ஆட்ட் (PHILIS OTT). உண்மையில், ஃபிலிஸ் அங்கு இருந்ததன் காரணமாக, ஜானிஸ் வருவதில் ஒரு குழப்பம் நிலவியது. 'ஸிந்தியா, ஃபிலிஸ் இருவர் மட்டுமே வர வேண்டும், ஜானிஸ் மும்பையில் இருக்க வேண்டும்' என்று பாபா அர்னவாஸிடம் தெரிவித்திருந்தார். ஆனால் ஃபிலிஸ், ஸிந்தியா ஆடம்ஸுக்கு அறிமுகமானவர் என்று நினைத்து, 'ஸிந்தியாவும், அவர் தோழியும்' வருவதாக ஆதி கேட்டியிடம் தெரிவித்தார். ஃபிலிஸ் ஏற்கனவே மும்பையிலிருந்து புறப்பட்டுச் சென்றதால், ஆதி, ஜானிஸைக் குறிப்பிடுவதாக கேட்டி கருதினார். இதை பாபாவிடம் கூறியதும், "**ஜானிஸ் கூட அவர்களுடன் வரட்டும்**" என்ற முடிவை பாபா தெரிவித்தார். எனவே, ஜானிஸ் அவரைப் பார்க்க வேண்டும் என்று பாபா நினைத்ததாகத் தோன்றியது.

சற்று ஓய்வுக்குப் பிறகு, மூன்று பெண்மணிகளையும் ஸரோஷ், விலூ இருவரும் மெஹராஸாத்திற்குக் காரில் அழைத்துச் சென்றனர். அவர்களைப் பின்தொடர்ந்து வேறொரு காரில் ஆதி சீனியர், ஆதி ஜூனியர் மற்றும் அவரது குடும்பத்தினர் வந்தனர். மெஹராஸாத் வந்தடைந்ததும், ஃபிரான்சிஸ் முதலில் வெளியே வந்து, அவர்களை அன்புடன் வரவேற்று, நேராக மண்டலி மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்; அன்று பாபா ஏற்கனவே இளஞ்சிவப்பு நிற கோட் அணிந்து அமர்ந்திருந்தார். அவர் ஒவ்வொருவரையும் அன்புடன் தழுவி, சுவரருகில் இருந்த பாய்களில் அமருமாறு கேட்டுக்கொண்டார்.

ஜானிஸ் கேமைப் பற்றி பாபா விசாரித்தபோது, அவர் ஸிந்தியாவின் பழைய தோழி என்று பதிலளித்தார். ஸிந்தியாவின் பக்கம் திரும்பி பாபா, "**உங்கள் தாயார் எப்படி இருக்கிறார்?**" என்று கேட்க, ஸிந்தியா, "அவர் நலமாக இருக்கிறார் பாபா, அவருடைய அன்பை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறார்" என்றார்.

ஆதி, ஃபிரீனி, தாரா, ஷிரீன் ஆகியோர் மண்டபத்தில் ஆண் மண்டலியுடன் அமர்ந்திருந்தனர். ஷிரீன் பாபாவின் பாதங்களுக்கு அருகில்

தரையில் அமர்ந்து சித்திரம் வரைந்து கொண்டிருந்தாள், பாபா கைகளை நீட்டி அந்த சிறுமியை அவ்வப்போது வருடினார்.

பாபா பின்பு ஃபிலிஸுடன் சிறிது நேரம் உரையாடினார். ஃபிலிஸ் ஒரு திறமையான ஓவியர், அவர் உட்ஸ்டாக் (WOODSTOCK) நகரில் ஒரு சமூகக் கல்லூரியில் கலை கற்பித்துக் கொண்டிருந்தார். கடந்த மே மாதம், ஃபிலிஸ் அவரது கணவர் லின் ஆட்டுடன் (LYN OTT), இந்தியாவிற்கு வரும் விருப்பத்தைத் தெரிவித்து, பாபாவிற்குக் கடிதம் எழுதியிருந்தார்; ஆனால் அடுத்த ஆண்டு வரை வர வேண்டாம் என்று அவர் தொலைத்தந்தி அனுப்பினார். இருப்பினும், ஃபிலிஸ், 'உள்ளிருந்து அழைக்கப்பட்டதாக' உணர்ந்தார், மேலும் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளும் முன்பு, கிறிஸ்துமஸ் பள்ளி விடுமுறையின் போது வருவதாகக் கூறி தொலைத்தந்தி அனுப்பினார். ஸிந்தியா ஆடம்ஸைப் போலவே, அவர் உண்மையில் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்படுவார் என்று அவருக்குத் தெரியாது; அவர் இயன்றவரை அவருடன் நெருக்கமாக இருக்க விரும்பினார், ஒருவேளை அவரை அறிந்த சிலரை சந்திக்க விரும்பினார்.

ஃபிலிஸ் ஆட்ட் அவருடைய இதயத்திற்கு நெருக்கமான இறைவனை சந்தித்த முதல் அனுபவம் பின்வருமாறு:

மண்டலி மண்டபத்தின் திறந்த கதவு வழியாக, நிழல் போல் எனக்குப் புலப்பட்ட பாபாவின் இடது காதின் வடிவத்தைப் பார்த்த கணத்திலிருந்து, நான் குருநாதரை அடையாளம் கண்டுகொண்டேன். சற்றும் தயங்காமல் எனது பாத அணியை விட்டுவிட்டு, பாபாவின் அருகே சென்று, அவருடைய கைகளிலும் முகத்திலும் பலமுறை முத்தமிட்டேன். அவர் அமைதியாக அமர்ந்திருந்தார். எனது முத்தங்களில் எதையும் அவர் திருப்பித் தந்ததாக நான் உணரவில்லை, ஆனால் அவர் என்னை நிராகரிக்கவில்லை. நான் அவர் அருகே சென்று கதவருகில் அமர்ந்தேன். எனது மனதில் அலைபாய்ந்த எண்ணம் என்னவெனில்: "மெஹர் பாபா வாய்திறந்து பேசுவதானால், அது ஒரு சக்திவாய்ந்த கடவுளின் இடி முழக்கத்தை ஒத்திருக்கும்."

எரச் அப்போது வினவினார்: "ஃபிலிஸ், பாபா 1965 டிசம்பரில் தரிசனம் வழங்குகிறார் என்று உங்களுக்குத் தெரியுமா, இது டிசம்பர் 1964 என்று கூறுகிறார்? இருப்பினும், அவர் உங்களைப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைகிறார். இப்போது நீங்கள் இந்தியாவில் இருப்பதால், உங்கள் திட்டங்கள் என்ன என்பதை பாபா அறிய விரும்புகிறார்?"

அதற்கு ஃபிலிஸ், "இரண்டு நாட்கள் இங்குத் தங்கி, புதன் கிழமை மும்பைக்குத் திரும்பிச் சென்று, வியாழன் அன்று நியூயார்க்கிற்குப் புறப்படத் திட்டமிட்டிருந்தேன்" என்று பதிலளித்தார்.

பாபா கூறினார், **"இப்போது இங்கு வேறு எவரும் தங்க அனுமதிக்கப்படவில்லை, ஆனால் நீங்கள் ஸரோஷின் விலூ இல்லத்தில் தங்கலாம். நான் கடுமையான ஏகாந்தவாசத்தில் இருப்பதால், நீங்கள் அனைவரும் இப்போது என்னை சந்தித்ததில் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்."**

விலூவைப் பார்த்து, பாபா தொடர்ந்து கூறினார், "**விலூ என்னை மிகவும் நேசிக்கிறார். சென்ற ஆண்டு ஹமிர்பூர் கண்காட்சியில் எனது பிரதிநிதியாக நான் அவரை அங்கே அனுப்பினேன், இந்த ஆண்டு, ஆந்திராவில் எனது மையங்களில் ஒன்றைத் திறப்பதற்காக அவரை தெற்கு நோக்கி அனுப்புகிறேன்.**"

'**தனிப்பட்ட நேர்காணல்களை விரும்புகிறீர்களா?**' என்று பாபா அவர்களிடம் கேட்டதற்கு, மூவரும் தாங்கள் அதை விரும்புவதாகக் கூறினார்கள்.

பாபா, ஜானிஸ் கேமிடம் கேட்டார், "**அடுத்த டிசம்பரில் சகவாச நிகழ்ச்சிக்கு நீங்கள் வருவீர்களா?**" ஜானிஸ் அதில் உறுதியற்றவராக இருந்தார்.

அவர் ஸிந்தியா ஆடம்ஸிடமும் அதையே கேட்டார். "நீங்கள் பந்தயம் வைக்கிறீர்களா!" என்று அவர் பதிலாகக் கேட்டது, ஃபிரான்சிஸை மகிழ்வித்தது போலத் தோன்றியது.

ஃபிலிஸின் பக்கம் திரும்பி பாபா, "**லின் எப்படி இருக்கிறார்?**" என்று கேட்டார். லின் சில வாரங்களுக்கு முன்னர், இரத்தக்கசிவு நிறைந்த புண் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார், மேலும் ஃபிலிஸ் இந்தியாவிற்குப் புறப்படும் வேளையில் அவர் குணமடைந்து கொண்டிருந்தாலும், "அவர் எப்படி இருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நன்றாக இருக்கிறார் என்று நம்புகிறேன்" என்று பதிலளித்தார்.

"**நீங்கள் ஏன் லினை உங்களுடன் அழைத்து வரவில்லை?**"

"என்னால் அவரை அழைத்து வர முடியாது பாபா. அவர், தானாக விரும்பி வர வேண்டும்."

"**அவர் ஏன் என்னைப் பார்க்க வரவில்லை?**"

ஃபிலிஸ், "நான் அவருடைய நன்மைக்குப் பொறுப்பாக இருக்கமுடியுமா?" என்று பதில் சொல்ல வந்தவரின் சிந்தனை அவரை இடைமறித்ததால், இவ்வாறு பதிலளித்தார், "பாபா, லின் கீழ்ப்படிகிறார்."

சிறிது நேரம், பாபா பிற இருவருடன் உரையாடி மீண்டும் கேட்டார், "**ஆமாம், ஃபிலிஸ், நீங்கள் கீழ்ப்படிவதில்லையா?**"

ஃபிலிஸ் உடனே, "நான் கீழ்ப்படிகிறேன், ஆனால், பாபா கீழ்ப்படிவதில்லை" என்றார்.

பாபா இதை மிகவும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார், தனது கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் ஒரு வட்டமாக இணைத்து, "**சிறப்பு**" என்று சைகையால் தெரிவித்தார். பின்னர், ஃபிலிஸ் உணர்ந்துகொண்டது என்னவெனில், 'நாம் பாபாவிற்கு மட்டுமே சொந்தமானவர்கள் என்றால், நாம் செய்யும் அனைத்தும் அவரால் செய்யப்படுகின்றன என்பதே.'

லின் ஆட்ட் கண் விழித்திரையின் சிதைவால் பாதிக்கப்பட்டிருந்தார், இது அவருக்குத் தொலைநோக்கு நேர் பார்வையை மட்டுமே வழங்கியது. பாபா கேட்டார், "**லினின் கண்கள் எப்படி உள்ளன? அவரால் பார்க்க முடிகிறதா?**"

ஃபிலிஸ் கூறினார், “லின் நிறையப் பார்க்கிறார், ஆனால் அவர் தானாகப் பணிபுரிந்து, தனியாக நடந்து செல்லும் அளவுக்குப் போதுமானதாக இல்லை.”

“**அவர் எனது முகத்தைப் பார்க்க முடியுமா?**” என்று பாபா கேட்டார்.

“லின் உங்கள் முகத்தை எப்படிப் பார்ப்பார் என்று சொல்வது கடினம்.”

“**லினை என்னிடம் வரச் சொல்லுங்கள். எனது முகத்தை நான் அவருக்கு உண்மையாகவே காட்டுவேன். இதை நான் ஒரு சிலருக்கே வெளிப்படுத்துகிறேன்.**”

ஃபிலிஸ் கூறினார், “அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு லின் தனியாக பயணம் செய்வது கடினம். வழியில் பேருந்து, விமானம், ரயில் போன்றவற்றில் பயணம் செய்து இங்கு வர வேண்டும்.”

“**நீங்கள் அவருடன் வர முடியாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா?**” என்று பாபா வினவினார்.

ஃபிலிஸ் பணப் பற்றாக்குறையின் சிக்கலைப் பற்றி யோசனை செய்தார், ஆனால் பின்னர் அதை நிராகரித்து, “இல்லை” என்று பதிலளித்தார்.

பாபா அப்போது, “**நீங்கள் அவருடன் பயணம் செய்ய வேண்டும்**” என்று கூறினார்.

பிற இருவரும் வெளியே சென்ற பின்னர், ஃபிலிஸ் முதலில் ஒரு தனிப்பட்ட உரையாடலில் ஈடுபட்டார். பாபாவின் வலதுபுறத்தில் எரச்சும் இடதுபுறத்தில் ஃபிரான்சிஸும் உடன் இருந்தனர். ஃபிலிஸ் வந்து பாபாவின் வலது புறம் தரையில் அமர்ந்ததும் நேர்காணல் தொடங்கியது:

பாபா கேட்டார், “**நீங்கள் ஏன் இந்தியா வந்தீர்கள்?**”

ஃபிலிஸ் பதிலளித்தார், “பாபா, நீங்கள் என் அறைக்கு வர வேண்டும் என்று நான் ஒரு குழந்தையைப் போல் அழுதேன்; நீங்கள் வராதபோது, ஒரு குழந்தையைப் போல, நான் படுக்கையிலிருந்து எழுந்து, உங்கள் அறைக்குள் நுழையும் எண்ணத்துடன் தாழ்வாரத்தில் இறங்கினேன்.”

பாபா அவரது கேள்வியை மீண்டும் கேட்டார், “**நீங்கள் ஏன் இந்தியா வந்தீர்கள்?**”

நிமிர்ந்து பாராமல், ஃபிலிஸ் பதிலளித்தார், “பாபா, நான் என்னையே கைவிட விரும்புகிறேன். ஒருவரை இன்னொருவருக்குக் கொடுப்பது தவறு என்று எனக்குத் தெரியும். அந்த நபரை நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்கள் என்பதை நிரூபிப்பது, அவருக்கு ஒரு பயங்கரமான பாரமாக இருக்கும். ஆனாலும், பாபா, என்னால் என்னை உங்களுக்குச் கொடுக்க முடியும். என்னை ஏற்றுக்கொள்வது உங்களுக்கு வேதனையாகவோ, பாரமாகவோ இருக்காது.”

அவர் சொன்னதையே மறுபடியும் சொல்லுமாறு பாபா கேட்டுக்கொண்டார். ஃபிலிஸ் கூறினார், “நான் என்னை விட்டுவிட விரும்புகிறேன். நான் சேவை செய்ய விரும்புகிறேன். நான் சேவை செய்கிறேன், என்னால் நன்றாக சேவை செய்ய முடியும், ஆனால் எனது சொந்த தேவைகள் அதனிடையே தடையாக இருக்கின்றன. எனது தேவைகள் நிறைவேறவில்லை, இது எனது சேவையில் ஒரு வரம்பைக் கொண்டுவருகிறது. எனது தேவைகளை

என்னால் பூர்த்தி செய்ய முடியாது என்பதால், அவை என்னை சித்திரவதை செய்கின்றன. அதனால், நான் என்னையே கைவிட விரும்புகிறேன்."

பாபா அப்போது, "**உங்களுக்குள் பாபா நிலைகொண்டிருக்கும் போது, இந்தியாவிற்கு வர வேண்டிய தேவை இராது**" என்று சைகையால் தெரிவித்தார்.

ஃபிலிஸ் அவரது மனதில் இருந்த ஒன்றைக் குறிப்பிட்டார். அவர் பாபாவை சந்திக்க வந்ததன் காரணம், அவர் தனிப்பட்ட முறையில் பாபாவை நேசித்தார்; ஆனால் யூத இனத்தில் பிறந்ததால், கடவுளை மனிதனாக அல்ல, உருவமற்றவராக வணங்கும் ஒரு நம்பிக்கையில், அவரால் பாபாவைத் தனது குருநாதராக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் கூறினார், "பாபா, நான் உங்களைப் பின்பற்ற முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை, நான் ஒரு யூதர், யூதர்கள் பல பொய்யும் போலியுமான மெஸையாக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்."

பாபாவின் பதிலை எரச் எடுத்துரைத்தார், "**ஃபிலிஸ், பாபா கடவுள் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார்**."

ஃபிலிஸ் பதிலளித்தார், "கடவுள் அமைதியாக இருக்கிறார் என்பதை நான் எப்போதும் அறிந்திருந்தேன்."

பாபா கேட்டார், "**நீங்கள் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தீர்களா?**"

"நான் முயற்சித்தேன், ஆனால் நான் அந்த நேரத்தில் கர்ப்பமாக இருந்ததால், அதைப் படிப்பதில் கவனம் செலுத்த முடியவில்லை. நான் மற்றுமொரு குழந்தையைப் பராமரிக்க இயலாது என்று உணர்ந்தேன் (அவருக்கு ஏற்கனவே நான்கு குழந்தைகள் இருந்தன). லின் கண் பிரச்சினையால் அவதிப்படுவதால் அவருக்கு அதிக அளவில் உதவ வேண்டியிருந்தது."

ஃபிலிஸ், பாபாவிடம் கேட்டார், "பாபா, நான் ஏன் இந்த அளவுக்கு உழைக்க வேண்டியதாக உள்ளது?"

பாபா பதிலளிக்கவில்லை, ஃபிலிஸ் தொடர்ந்து கூறினார், "அனைத்தும் எனது சக்திக்கு அப்பால் இருப்பதாக நான் உணர்ந்தேன்; அதனால் இங்கு வருவதற்கு முன்பு, நான் சட்டப்பூர்வமாக, கருக்கலைப்பும், கருத்தடையும் செய்துகொண்டேன். பாபா, என்னால் விளக்க முடியவில்லை, ஆனால் நான் மிகவும் துக்கமாக உணர்கிறேன்."

ஃபிலிஸ் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் இதை எடுத்துரைத்த போது, என்னை ஒரு தலைசிறந்த தாயாக, பைபிளில் விவரிக்கப்படும் ரேச்சலாக (RACHEL OF THE BIBLE) என்னைக் கேட்டேன், உணர்ந்தேன், பார்த்தேன்; அவர் மலை உச்சியில் ஏறி, தனது கடவுளை சந்தித்தார், கொலை செய்யப்பட்ட தனது குழந்தைகளுக்காக ஒரு பயங்கரமான குரலில் அழுதார்.

"நான் அங்கே பாபாவிடம் முறையிட்டு, கடவுளிடம் வருந்தி அழுதேன். எனது குழந்தைகளுக்கான பலவித பணிகளில் மூழ்கி, ஊனமுற்ற கணவருக்காகவும், சில காலம் எனது சொந்த தேவைகளுக்காகவும் நான் ஒரு

தாயாக முற்றுகையிடப்பட்டேன். மேலும் நான் ஒரு தாயாக இருந்து, மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்குள், மனிதர்கள் செய்யக்கூடிய தனிமனித செயலால், எனக்குள் கருவாக இருந்த குழந்தையை அழிக்கும் செயலில் ஈடுபட்டேன்."

அவர் வெளிப்படையாக வழங்கிய வாக்குமூலத்தைப் பற்றி பாபா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. அவர் மிகவும் கடுமையான தொனியில் வினவினார், "**நீங்கள் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தை எவ்வளவு நன்றாகப் புரிந்துகொள்கிறீர்கள்?**"

ஃபிலிஸ் இவ்வாறு பதிலளித்தார், "எனக்குத் தெரியாது பாபா; நீங்கள் எழுதியது எனக்குப் புரிகிறதா என்று உங்களுக்கு மட்டுமே தெரியும்."

பாபா மீண்டும் அவரது விரல்களை வட்ட வடிவத்தில் வைத்து, சைகையால் தெரிவித்த போது, அதன் அர்த்தம் என்ன என ஃபிலிஸ் கேட்டார். "மிகவும் சிறப்பாக உள்ளது," எரச் கூறினார்.

பாபா தொடர்ந்தார், "**நீங்கள் 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தை மூன்று அல்லது நான்கு முறை படியுங்கள். உங்கள் கண்கள் கலங்கி, கண்ணீர் சிந்தி அழும். உங்கள் இதயம் கொழுந்துவிட்டு எரிந்து உள்வாங்கப்பட்டு, நீங்கள் ஏக இறைவனின் உண்மைத்தன்மையை அனுபவிப்பீர்கள்.**"

ஃபிலிஸ் பின்பு விவரித்தார்: "இந்த வார்த்தைகளின் தாக்கம் ஒரு வெடிகுண்டு போல் என் உணர்வை ஆக்கிரமித்தது. எனது வாழ்க்கையின் அனைத்து சிறிய பிரச்சினைகளும், நெரிசலான சேரி போல் இடிந்து, சின்னாபின்னமாகி தூசியாக சரிந்தன."

ஃபிலிஸ் இந்த நேர்காணலை நீண்ட நேரம் தொடரவும், அரை மணி நேரத்திற்கு முன்னர் இருந்த சுவாரஸ்யமான சூழ்நிலைக்குத் திரும்பவும் முயன்றார். பாபாவின் உதவியை நாடி, தனது மூலமாக ஒரு செய்தியை அனுப்பிய ஒரு நபரைப் பற்றி அவர் குறிப்பிட்டார். பாபாவின் முகம் உடனடியாக ஒரு மேகத் திரையால் மூடி மறைக்கப்பட்டதாகத் தோன்றியது; ஃபிலிஸை நிராகரிப்பதுபோல் அங்கிருந்து வெளியே செல்லுமாறு சைகையால் தெரிவித்து, "**உங்களுக்குப் போதுமான நேரம் வழங்கப்பட்டது. இப்போது எத்தனை லட்சக்கணக்கான மக்களுக்கு நான் தேவை என்று உங்களுக்குத் தெரியுமா?**" என்று கூறி, ஃபிலிஸ் வெளியே அனுப்பப்பட்டார்.

அடுத்து உள்ளே அழைக்கப்பட்டவர் ஸிந்தியா ஆடம்ஸ். அவர் மண்டபத்திற்குள் நுழைந்து பாபாவின் காலடியில் அமர்ந்ததும், ஃபிரான்சிஸ், ஸிந்தியாவின் வலதுபுறம் அமர்ந்தார். எரச் மூலம் பாபா கூறினார், "**என்னைப் பார்க்க நான் உங்களை அனுமதித்ததால் நீங்கள் பாக்கியவான்கள். 1956இல் நான் உங்கள் இல்லத்திற்கு வந்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா?**"

"எனக்கு நன்றாக நினைவிருக்கிறது," என்று அவர் பதிலளித்தார்.

பாபா உடனே, "**இன்று நான் உங்களுக்காக, திறந்த மனநிலையில் இருக்கிறேன், நீங்கள் விரும்பியதை என்னிடம் சொல்லலாம்**" என்று கூறினார்.

ஸிந்தியா தனது தந்தையின் மது அருந்தும் பழக்கத்தைப் பற்றி மிகவும் கவலைப்பட்டார். அவர், “பாபா, நான் எனது தந்தையைப் பற்றி கவலைப்படுகிறேன், அவர் அதிகமாக மது அருந்துகிறார்” என்றார்.

இந்தத் தகவலைக் கேட்டு பாபா மிகுந்த மகிழ்ச்சியடைந்து, ஆர்வத்துடன் வினவினார் “**இன்றும் உடல் நலமின்றி இருக்கிறாரா?**”

ஸிந்தியா அதிர்ச்சி அல்லது அச்சத்தை வெளிப்படுத்தியது போலத் திடுக்கிட்டு, பாபா, அவர் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்ததால் அமைதியாக இருந்ததார். அந்த நேரத்தில், அவரது தந்தைக்கு நோயைக் குறித்த எந்த அறிகுறியும் இல்லை, ஆனால் பல வருடங்களுக்குப் பிறகு, கடுமையான சுவாசப் பிரச்சினையால் அவர் இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டார். அவர் அடிக்கடி விஜயம் செய்யும் உள்ளூர் மதுபான சத்திரத்தில் தனது தந்தை உண்மையில் பாபாவின் பெயரைப் பரப்பிவந்தார் என்பதையும் அவர் பின்னர் உணர்ந்தார். ஸ்டான் ஆடம்ஸ் அளவுக்கு அதிகமாக மது அருந்தியதில் பாபா வெளிப்படுத்திய மகிழ்ச்சியைக் கண்டு, ஸிந்தியா, இது பாபாவின் விருப்பத்தால் நிகழ்வது என்றும், அதில் உண்மையில் அவர் செய்யவேண்டியது எதுவும் இல்லை என்பதையும் உணர்த்தியது. அது பாபாவிற்கும் அவர் தந்தைக்கும் இடையே உள்ள சமாச்சாரம்.

ஸிந்தியாவிடம் பாபா, “**உங்கள் தந்தையும் டிசம்பர் சகவாசத்தில் கலந்து கொள்ள வேண்டும்**” என்று கூறி, பின்னர், “**ஆனால் நீங்கள்? உங்களைப் பொறுத்தவரை?**” என வினவி, ‘**அவரும் வரவேண்டும்**’ என்று பாபா திரும்பத் திரும்பக் கூறினார்.

1956இல் பாபாவின் ஆஸ்திரேலியா விஜயத்தின் போது, அவர் ஸிந்தியாவிடம், “**நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?**” என்று கேட்ட அதே கேள்வியை இப்போது மீண்டும் கேட்டார்,

“ஆமாம் பாபா, நான் அப்படித்தான் நினைக்கிறேன். கடந்த முறை எனக்கு உறுதியாகத் தெரியவில்லை, ஆனால் இப்போது உங்களை நேசிக்கிறேன் என்று நினைக்கிறேன்” என்றார் ஸிந்தியா.

“**நீங்கள் என்னை மேலும் அதிகமாக நேசிக்க வேண்டும்**” என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

பின்னர் அவர் கூறினார், “**நீங்கள் ‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **புத்தகத்தை, பல முறை ஆரம்பம் முதல் இறுதி வரை படிக்க வேண்டும். அது உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும்.**”

(அப்போது ஸிந்தியா நினைத்தார்: “என்ன கேள்விகள்? என்னிடம் எதுவும் இல்லையே!”)

“**என்னை என்னவாக எடுத்துக்கொள்கிறீர்கள்?**” என்று பாபா கேட்டார்.

“கடவுள்.”

அந்த பதிலில் பாபா மகிழ்ச்சி அடைந்தார். “**ஆம்**,” என அவர் சைகையால் தெரிவித்து, “**நான் கடவுள்**” என்று கூறி, பாபா இந்தக் கருப்பொருளை மேலும் விளக்கினார்.

அதைத் தொடர்ந்து அவர்கள் ஃபிரான்சிஸ் பிராபஸோனின் 'ஸ்டே வித் காட்' (STAY WITH GOD) மற்றும் 'லெட் அஸ், தி பீப்பிள், ஸிங்' (LET US, THE PEOPLE, SING) ஆகிய இரண்டு புத்தகங்களைப் பற்றி விவாதித்தனர். ஃபிரான்சிஸ், "ஸிந்தியாவிற்கு மிகவும் நல்ல குரல் வளம் உள்ளது" என்று பாபாவிடம் கூறவே, அவர், இசைக் கல்வியை விட்டுவிட்டதாக பதிலளித்தார்; பாபா அவரைப் பாடச் சொல்லவில்லை. பாபா இந்த நேரத்தில் உள்வாங்கிய நிலையில் அமர்ந்திருந்ததாகத் தோன்றியது.

அடுத்ததாக, பாபா, ஜானிஸ் கேமை அழைத்து, '**டிசம்பர் மாதத்தில் அவர் இந்தியா வருவாரா?**' என்று மீண்டும் கேட்டு, "**தரிசன நேரங்களில் நான் அன்பின் கதவுகளைத் திறக்கிறேன், அது என் அன்பர்களின் இதயங்களை நிரப்பட்டும்**" என்று அவர் விளக்கினார்.

பாபா, தலையசைத்து, "**இப்போது உங்கள் திட்டம் என்ன?**" என்று ஸிந்தியாவிடம் வினவினார்.

அவர் இவ்வாறு பதிலளித்தார், "நாங்கள் பூனாவிற்குத் திரும்பப் போகிறோம், பின்பு டெல்லிக்குச் செல்லலாம், ஒருவேளை மதராஸ் மற்றும் பெங்களூருக்குச் செல்லலாம்."

பாபா ஏதோ சிந்தனை ஓட்டத்தில் இருந்தது போலத் தோன்றியது, நீண்ட இடைவெளிக்குப் பின்னர், அவரது விரல்கள் வேகமாக நகர்ந்தன, அவர், அவர்களை அங்குச் செல்ல அனுமதித்தார், மேலும் செல்லும் வழியில் அவரது அன்பர்களிடம் அவர்களை கவனித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். (தனது பயணத் திட்டங்களைப் பற்றி முதலில் பாபாவிடம் அனுமதி கேட்டிருக்க வேண்டும் என்பதை ஸிந்தியா பின்னர் உணர்ந்தார்.)

பாபா அவர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தினார், "**உங்கள் ஆரோக்கியத்தில் மிகவும் கவனமாக இருங்கள். வீதிகளில் குறு வியாபாரிகளிடமிருந்து நீர் அருந்தவோ, சாதாரண இந்திய உணவுகளை உண்ணவோ வேண்டாம். நல்ல உணவகங்களில் மட்டுமே உண்ணுங்கள்.**"

மேலும், "**எந்தத் துறவிகளையும், சாதுக்களையும் தரிசனம் செய்ய வேண்டாம். நீங்கள் என்னை சந்தித்தது போல் இதர துறவிகளை சந்திப்பது நல்லதல்ல. உண்மையில் அது உங்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடும்**" என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆதி ஜூனியர், தாரா, ஃபிரீனி, ஷிரீன் ஆகியோர் மீண்டும் மண்டபத்திற்குள் அழைக்கப்பட்டனர். ஷிரீன், பாபாவிடம் விதவிதமான கேள்விகளைக் கேட்கத் தொடங்கினாள். எரச் சிரித்துக்கொண்டே, "ஷிரீன் எப்பொழுதும் பாபாவிடம் கேள்விகள் கேட்பது வழக்கம்" என்றார்.

பாபா, குழந்தையிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: "**என்னை மனதால் புரிந்து கொள்ள முடியாது, இதயத்தின் மூலம் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.**" அவர் விளக்கினார், "**நான் 'உலகளாவியவன்', அனைவரிலும், அனைத்திலும் நிலைகொண்டிருக்கிறேன்.**"

பிறகு ஷிரீனிடம் கேட்டார், "**நான் உன்னை நேசிப்பது போல நீயும் என்னை நேசிக்கிறாயா?**"

ஷிரீன் பாபாவைக் கூர்ந்து நோக்கி, "அதைவிட அதிகமாக!" என்றதும், அனைவரும் சிரித்தனர். பாபாவும் மகிழ்ச்சி பொங்க, ஷிரீனைக் கட்டியணைத்தார்.

பின்னர் அவர் ஃபிலிஸ், ஸிந்தியா, ஜானிஸ் மூவரையும் மெஹரா மற்றும் இதர பெண் மண்டலியையும் சந்திக்க அனுப்பி வைத்தார். மணி, ஸிந்தியாவிடம் பாபாவுக்காக அவர் அனுப்பிவைத்த பரிசு - மரத்தாலான வளரி ஆயுதம் (A BOOMERANG) மிகப் பெரிய வெற்றியை சந்தித்ததாகவும், பாபா அதை வேடிக்கையாக வீசி எறிந்ததாகவும் கூறினார்.

சிறிது நேரத்தில் மூவரும் மண்டபத்திற்குத் திரும்பி வந்தனர். '**ஸரோஷின் இல்லத்தில் மதிய உணவு உண்டு, அன்று மதியம் பூனாவிற்குச் செல்லுமாறும்**' பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார்; அங்கு அவரது சகோதரர் ஜால்பாய் அவர்களை சந்தித்து, பூனா நகரைச் சுற்றிக் காண்பிப்பதாக இருந்தது. அவர் ஒவ்வொருவரையும் மீண்டும் தழுவிய பின்னர், அவர்கள் காலை 11:00 மணியளவில் புறப்பட்டுச் சென்றனர். ஃபிலிஸ் அமெரிக்காவிற்குத் திரும்பினார்; ஸிந்தியா, ஜானிஸ் இருவரும் ஒரு மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, ஜனவரி கடைசி வாரத்தில் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிச் சென்றனர்.

1964 டிசம்பர் 22 அன்று மெஹராவின் பிறந்தநாள் ஆடம்பரமின்றி அடக்கமாகக் கொண்டாடப்பட்டது, சில நெருங்கிய அன்பர்கள் மட்டுமே அழைக்கப்பட்டனர், மேலும் விலூ எடுத்து வந்த சிறப்பு மதிய உணவில் அனைவரும் பங்கெடுத்தனர். கோஹெரின் தந்தை ரூசி பாப், அவரது சகோதரர் ஜால், அவரது மனைவி டோலி ஆகியோர் பல வருடங்களுக்குப் பின்னர் அடுத்த நாள் பாபாவை சந்தித்தனர்.

ஒவ்வொரு நாளும் வெயிலில் சிறிது நேரம் அமருமாறு பாபாவிற்கு அறிவுறுத்தப்பட்டதால், டிசம்பர் 25 அன்று, ஆதி சீனியர் தனது சுழலும் அலுவலக நாற்காலியை பாபாவின் உபயோகத்திற்காக பகீரத்தின் சரக்கு வாகனத்தில் மெஹராஸாத்திற்கு அனுப்பி வைத்தார். டெஹ்ரா டூனைச் சேர்ந்த ஃபிரீனி நலவாலா மற்றும் ஸிம்லாவிலிருந்து எல்சா மிஸ்திரி ஆகியோர் மறுநாள் மதியம் 1:00 மணிக்கு, அரை மணி நேரம் பாபாவை சந்தித்தனர். மெஹராவை சந்திக்க ஃபிரீனி உள்ளே அழைக்கப்பட்டார், அதே சமயம் எல்சா (பிச்சைக்காரப் பையன் - 'BEGGAR BOY' என்று அவர் அன்புடன் அழைக்கப்பட்டார்) பாபாவையும் மண்டலியையும் நகைச்சுவைகள் மற்றும் நீண்ட கட்டுக் கதைகளால் மகிழ்வித்தார்.

கில்னானி மற்றும் கல்சூரி குடும்பத்தினர் 27ஆம் தேதி அழைக்கப்பட்டனர்; கஜ்வானி, ஸிகன்போரியா இருவரும் 28ஆம் தேதி தரிசனத்திற்காக வந்தனர். அழைக்கப்படாத ஒரு நபர், மும்பையைச் சேர்ந்த

மனநலம் குன்றிய பெண்மணி ரதி பாலிவாலா, 29ஆம் தேதி மெஹராஸாத்தில் தோன்றவே, மீண்டும் மும்பைக்கு அனுப்பப்பட வேண்டியிருந்தது.

அமியா குமார் ஹஸ்ராவும் டிசம்பர் 28 அன்று வந்து, பாபாவுடன் இரண்டு மணி நேரம் செலவிட்டு, மறுநாளும் மெஹராஸாத் திரும்பி வந்தார். ஜபல்பூரைச் சேர்ந்த ஹஸ்ரா, அவரது குடும்பத்தினருடன் பாபாவின் தரிசனத்திற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டார்.

ஜனவரி 30ஆம் தேதி, ஏற்கனவே பாபாவைப் பற்றி கேள்விப்பட்ட ஜபல்பூர் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல இந்தி எழுத்தாளருமான ஸேட் கோவிந்தாஸ் (SETH GOVINDAS) என்பவரை ஹஸ்ரா அழைத்து வர நேர்ந்தது.

கோவிந்தாஸின் மகன் மத்தியப் பிரதேச அமைச்சரவையில் அரசாங்க அமைச்சராகப் பணிபுரிந்தவர், சமீபத்தில் காலமானார். கோவிந்தாஸ் தனது மகனின் மரணத்தில் இயல்பாகவே ஆழ்ந்த வருத்தத்தில் காணப்பட்டார்.

கோவிந்தாஸ், பாபாவிடம், "நான் இந்த துக்கத்திலிருந்து விடுபட வேண்டும். எனக்கு அமைதி வேண்டும்" என்று மன்றாடினார்.

அதற்கு பாபா, "**நிச்சயமாக நான் உங்களுக்கு அமைதியைத் தருகிறேன்; ஆனால் மே மாதம் பூனாவிற்கு வாருங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

"அது வரையிலும் எனக்கு நிம்மதி கிடைக்காதா?"

"**அது படிப்படியாக வரும்; ஆனால் பூனாவில், நீங்கள் முற்றிலும் நிம்மதியாக இருப்பீர்கள்.**"

"எனது மகன் எங்கே பாபா?"

"**அவர் என்னுடன் இருக்கிறார்!**"

"எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை!"

"**யாருக்குதான் கடவுள் மீது நம்பிக்கை உள்ளது? கடவுள் நம்பிக்கை இருந்தால், எதைப் பற்றி கவலைப்பட வேண்டும்? அனைத்தும் அவருடைய விருப்பப்படியே நடக்கும் என்ற நம்பிக்கை பிறந்த அடுத்த கணத்திலிருந்து, நாம் வாழ்வதும், மறைவதும் குறித்த கேள்வியே இராது.**"

பாபா அவரை, நேரடியாக தன் இல்லத்திற்குத் திரும்பிச் சென்று, பாபாவின் அன்பை பிற குடும்ப உறுப்பினர்களுக்கும் தெரிவிக்குமாறு அறிவுறுத்தினார். பாபாவுடனான இந்த சந்திப்பில் கோவிந்தாஸ் வெகுவாக ஈர்க்கப்பட்டார், ஆனால் மும்பையில் நடைபெற்ற இந்தி இலக்கிய மாநாட்டில் கலந்துகொள்வதற்கான முன் ஏற்பாட்டின் காரணமாக அவர் பாபாவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவில்லை. உடல் நலக்குறைவால், 1965இல் பூனாவில் பாபாவின் தரிசன நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும் இயலவில்லை. குணமடைந்த பின்னர் அவர் தரிசனத்திற்காக வேண்டிய வேளையில், ஏகாந்தவாசம் மேற்கொண்டதால் பாபா அதை வழங்கவில்லை.

டிசம்பர் 31 அன்று, ‘தினசரி-குறிப்பு’ (DAILY-DIARY) திட்டத்திற்காக பாபாவின் அறிக்கைகளை தொகுத்துக்கொண்டிருந்த ஆதி அர்ஜனிக்கு - ADI ARJANI (பாகிஸ்தானில்) அனுப்ப, பாபா இந்த சிறப்பு செய்தியை எடுத்துரைத்தார்:

**“உங்களால் வெறுக்க முடியாதவர்களை நேசிப்பது இயற்கையானது, ஆனால் உங்களால் நேசிக்க முடியாதவர்களை நேசிப்பது, நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் என்னை நேசிப்பது போலாகும்.”**

இவ்வாறு 1964 முடிவுக்கு வந்தது. பாபா கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொண்ட போதிலும், சில அதிர்ஷ்டசாலிகளுக்கு அவரைப் பார்க்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. பாபாவின் உலகளாவிய பணி ஏகாந்தவாசத்தில் தொடர்ந்தது, உண்மையாகச் சொன்னால் அது அதிகரித்து வந்தது; அதே வேளையில் அவருடைய துன்பமும் அதிகரித்தது.

1965 ஜனவரி 1 வெள்ளிக்கிழமை அன்று, டாக்டர் தேஷ்முக் மெஹராஸாத்திற்கு வந்தார். ஆந்திராவைச் சேர்ந்த சிந்தா சர்வராவ், மாணிக்யால ராவ், மெஜட்டி ராமமோகன ராவ் ஆகியோரும் அன்று மதியம் 1:30 மணிக்கு ஒரு மணி நேரம் பாபாவை சந்தித்தனர். 2ஆம் தேதி, ராம்ஜூ அப்துல்லா, சத்தாராவைச் சேர்ந்த ஹோமியோபதி மருத்துவரும் நண்பருமான எஸ்.ஜி. ஜோக் (S.G. JOG) என்பவருடன் சில மணி நேரத்திற்காக வந்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, பல சந்தர்ப்பங்களில், ஆதி ஜூனியர், அவரது குடும்பத்துடன் பாபாவின் தரிசனத்திற்காக அழைக்கப்பட்டார். ஷிரீனுக்கு அப்போது ஏழு வயதுதான், ஆனால் படு சுட்டியாகவும், தீட்சண்ய புத்தி திறனுடனும் இருந்தாள். அவளது ஒவ்வொரு வருகையும் மெஹராஸாத்தின் சூழ்நிலையை உயிர்ப்பித்தது; பாபாவும் மண்டலியும் அவளது சகவாசத்தையும், துருவித்துருவி அறிந்துகொள்ளும் ஆர்வத்தையும் ரசித்தனர். ஒருமுறை லண்டனில் அவர்களது இல்லத்திற்கு வந்தவர், அறையின் சுவரை அலங்கரித்த பாபாவின் சித்திரத்தைப் பார்த்து, அது யார் என்று கேட்கவே, ஆதி, ஃபிரீனி இருவரும் பதிலளிக்கும் முன், ஷிரீன், “அதுதான் கடவுள்!” என்றாள்.

சில சமயங்களில் ஷிரீன் தனது தந்தையிடம் பதிலளிக்க முடியாத கேள்விகளைக் கேட்டதுண்டு. உதாரணமாக, ஒருமுறை அவள் “விண்வெளிக்கு அப்பால் என்ன உள்ளது?” என்று கேட்க, திருப்திகரமான பதில் கிடைக்காததால், “நீங்கள் கடவுளின் சகோதரர், இருந்தும் உங்களுக்கு பதில் தெரியவில்லை!” என்றாள்.

ஆதி ஜூனியர், ஷிரீனிடம் கூறினார், “நீங்கள் சற்று காத்திருந்து, உங்கள் பெரிய தந்தையை சந்திக்கும் போது, இந்தக் கேள்வியை அவர் முன் வைப்பது நல்லது.”

அதற்கு ஷிரீன், “ஆமாம், கடவுளால் மட்டுமே எனக்கு இந்த விஷயங்களை விளக்க முடியும்” என்றாள்.

ஒரு நாள் பாபாவைத் தழுவிய பிறகு, ஷிரீன் அவரது பாதங்களுக்கு அருகில் அமர்ந்து, முதல் வாய்ப்பில் அவரிடம் வினவினார், "பாபா, விண்வெளிக்கு அப்பால் என்ன இருக்கிறது?"

ஏழு வயது சிறுமியிடமிருந்து இப்படியொரு கேள்வியைக் கேட்டு மண்டலி திகைத்துப் போயினர். பாபா அவளை அன்புடன் பார்த்து, "**கடவுள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

ஷிரீன் இதைப் புரிந்து கொண்டதாகத் தோன்றியது, "அப்படியானால் சொர்க்கம் எங்கே உள்ளது?"

அதற்கு பாபா, "**இது விண்வெளிக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ளது**" என்று சைகையால் பதிலளிக்க, ஷிரீன் திருப்தியடைந்தது போலத் தெரிந்தது.

ஷிரீன் பள்ளிக்கூடத்தில் ஒரு தோழியிடம் கடவுளை சந்திப்பதற்காக, இந்தியா செல்வதாகச் சொன்னபோது, தோழிகள் அனைவரும் ஒன்றிணைந்து, கடவுளிடம் கேட்க உகந்த ஒரு கேள்வியை யோசித்தனர்: "எது உயர்ந்தது: நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் அல்லது மேகங்கள்?"

ஷிரீன் இப்போது அந்தக் கேள்வியை முன் வைத்த போது, பாபா புன்னகைத்து, "**நானே தான். நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன்**" என்று பதிலளித்தார்.

ஒரு நாள் ஆதி ஜூனியர், ஷிரீனிடம் மெஹராஸாத் மண்டலி மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன்னர், அவளது காலணிகளைக் கழற்றுமாறு கூறினார். ஷிரீன் ஏன் என்று கேட்க, ஆதி விளக்கினார், "நாம் கடவுளை சந்திக்க உள்ளே செல்கிறோம் என்று உனக்குத் தெரியுமல்லவா?"

"ஆனால் கடவுள் எல்லா இடங்களிலும் இல்லையா? அவர் காலணியில் இல்லையா?" என்று கேள்வி எழுப்பினாள்.

ஆதி கூறினார், "பாபா மனித வடிவில் கடவுள், ஆதலால் நமது பயபக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் நமது காலணிகளை அகற்றுகிறோம், காலணிகள் அழுக்கு மற்றும் அசுத்தத்தை சேகரிக்கின்றன, கடவுள் முன்னிலையில் நாம் சுத்தமாக இருக்க வேண்டும்."

ஷிரீன் அதன்படி நடந்து, தனது காலணிகளை கழற்றினாள், ஆனால் அவள் வந்தபோது "பாபா, நீங்கள் கடவுள்" என்று கூறி மறைமுகமாக அந்தத் தலைப்பைக் கொண்டு வந்தாள்.

பாபா சிரித்துக்கொண்டே, "**ஆம், நான் கடவுள், கடவுள் எங்கும் எல்லோரிலும் இருக்கிறார்**" என்று சைகையால் தெரிவித்து, அவர் தமது முன்னால் அமர்ந்திருந்த ஒவ்வொரு மண்டலியையும் சுட்டிக்காட்டினார்.

ஷிரீன் தன் அருகில் அமர்ந்திருந்த ஒருவரிடம் ஏதோ கிசுகிசுக்கத் திரும்பினாள், ஆனால் பாபா அவளிடம் எந்தத் தடையுமின்றி சுதந்திரமாக பேசுமாறு சைகையால் தெரிவித்தார். ஷிரீன் உடனே, "எனக்கு இப்போதுதான் ஓர் எண்ணம் வந்தது, பாபா. கடவுள் எங்கும் எல்லோரிலும் இருக்கிறார்

என்றால், (பாபாவைச் சுட்டிக்காட்டி) நாற்காலியில் அமர்ந்திருப்பவர் யார்?" என வினவினார்.

பாபா பதிலளித்தார், "**மனித உருவில் இருக்கும் கடவுள். கடவுள் எங்கும், எல்லாவற்றிலும் இருக்கிறார், ஆனால் உங்களால் எங்கும், எல்லாவற்றிலும் அவரைக் காண முடியுமா? நீங்கள் சந்திக்கும் அனைவரிடமும் அவரை உணர முடியுமா? நிச்சயமாக உணரமுடியாது. 'எனவே நான் கடவுள்' என உங்களுக்குச் சொல்லவே இந்த மனித உருவத்தை எடுத்துள்ளேன். கடவுள் எங்கும் எல்லோரிலும் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்ற உண்மையை உங்கள் அனைவரிலும் விழிப்படையச் செய்ய நான் வந்துள்ளேன். நான் இறை-மனிதன்.**"

ஷிரீனின் நவ்ஜோத் விழா 1965 ஜனவரி 7ஆம் தேதி வியாழன் மாலை அஹமதுநகர் பார்சி நெருப்புக் கோவிலில் நடத்தப்பட இருந்தது, இது ஃபிரீனியின் பெற்றோரின் (ஸரோஷின் சகோதரர் தீன்ஷா மற்றும் அவரது மனைவி ஸூனாமாய்) விருப்பத்திற்கிணங்க செய்யப்பட வேண்டும் என்று பாபா சுட்டிக்காட்டினார். அன்று காலை, ஆதி ஜூனியர், ஃபிரீனி, தாரா, ஷிரீன், ஸூனாமாய், ஸரோஷ் ஆகியோர் முதலில் பாபாவைப் பார்க்க மெஹராஸாத்திற்குச் சென்றனர். பாபா, சத்ரா, கஸ்தி (புனித நூல்) இரண்டையும் ஆசீர்வதித்து, அவரது கைகளால் ஷிரீன் மீது வைத்தபோது, கைக்கோபாத் ஒரு சிறிய பிரார்த்தனையை மொழிந்தார்.

நவ்ஜோத் விழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு (அதற்காக ஷிரீன் பல ஸொராஸ்ட்ரியன் பிரார்த்தனைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது), பாபா அவளிடம் குருநாதரின் 'பர்வர்திகார்' பிரார்த்தனையைக் கற்றுக் கொண்டு அதை அவருக்கு முன்னால் மொழியுமாறு கூறினார். அவளும் அறிவுறுத்தியபடியே செய்து, அவளுடைய நவ்ஜோத் விழா நடந்த அன்று காலையில் பாபாவின் முன்னால் பிரார்த்தனையை மொழிந்தாள். ஷிரீன் எந்தத் தவறும் இழைக்காமல் மொழிந்த அதுவே தனது உண்மையான நவ்ஜோத் என்று கருதினாள். மாறாக, அன்றைய தினம் கோவிலில் ஸொராஸ்ட்ரியன் பிரார்த்தனைகளை மொழியும்போது அவள் பல தவறுகளை இழைக்க நேர்ந்தது.

பிரார்த்தனையை மொழிந்த பிறகு, ஷிரீன், பாபாவை தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டாள். அதைத் தொடர்ந்து, அவளுக்கும் பாபாவிற்கும் இடையே இந்த உரையாடல் நடந்தது: "பாபா, நாங்கள் மீண்டும் மீண்டும் பிறக்கிறோம் என்பதை நான் அறிவேன், ஆனால் நீங்கள் கடவுள்; எனவே நீங்கள் எப்படி பிறவி எடுக்கிறீர்கள்?" ஷிரீன் வினவினாள்.

பாபா பதிலளித்தார், "**கடவுள் தமது படைப்பின் மீது கொண்ட அன்பினால் சில சமயங்களில் பிறவி எடுக்கிறார்; நான் மனித உருவில் பிறந்ததால், நீங்கள் உங்களைப் போலவே என்னையும் பார்க்கலாம்; மேலும் நீங்கள் என்னை அறிந்து, என்னை நேசிக்கும் அதிர்ஷ்டம் இருந்தால், ஒரு நாள் உங்களில் சிலர், நான் எனது உண்மை ரூபத்தில் இருப்பது போல காண்பீர்கள்.**"

“எங்கள் அனைவரிலும் நீங்கள் இருக்கிறீர்கள், அது போல, நாங்கள் அனைவரும் உங்களில் இருக்கிறோமா?”

**“ஆம், அப்படித்தான்”** என்று தலையசைத்தார் பாபா.

“நாங்கள் உங்கள் குழந்தைகள் எனும்போது, ஏன் உங்களோடு இருக்க முடியாது?”

**“நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்றால், நீங்கள் எங்கிருந்தாலும் நான் உங்களுடன் இருக்கிறேன்.”**

“நான் உங்களை நேசிக்கவில்லை என்றால், பாபா - ஓ, நான் இல்லை என்று சொல்லவில்லை, ஏனெனில் நான் உங்களை நேசிக்கிறேன்! ஆனால், நான் உங்களை நேசிக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம், அப்போது அது, எனது தவறாக இருக்க முடியாது அல்லவா? ஏனெனில், நான் உங்களை நேசிப்பதை நீங்கள் விரும்பவில்லை என்றுதானே அர்த்தம்!

**“ஆமாம், இது அனைத்தும் எனது விருப்பம். எனது விருப்பம் முழுப் படைப்பையும் நிர்வகிக்கிறது. நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள், ஏனெனில், நீங்கள் என்னை நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.”**

அடுத்த நாளும் ஆதி குடும்பத்தினர் பாபாவின் சகவாசத்தில் இருக்க மெஹராஸாத்திற்கு வந்தனர். வேறொரு தருணத்தில், மண்டபத்தில் பாபா மண்டலியுடன் அமர்ந்திருந்த வேளையில், சுவரை அலங்கரித்த பாபாவின் சித்திரங்களில் ஒன்றை உற்று நோக்கி, ஷிரீன் அதிலேயே மனம் ஒன்றி இருந்தாள். அந்த ஓவியத்தில், பாபாவின் தலையைச் சுற்றி ஒளி ஒன்று இருப்பதை அவள் கவனித்தாள். “பாபாவின் தலையைச் சுற்றி என்ன இருக்கிறது?” என்று அவள் கேட்டாள்.

மண்டலியில் ஒருவர், “பாபாவைச் சுற்றியுள்ள ஒளி, இது முழு ஒளிவட்டத்தைக் (HALO) குறிக்கிறது” என்று பதிலளித்தார்.

பாபா அவளுக்கு மிகவும் எளிமையாக விளக்கினார், **“இது எனது ‘தெய்வீக ஒளி’, ஷிரீன்”** என்று சைகையால் தெரிவித்தார்.

“ஆனால் பாபா, நான் இதை உங்களைச் சுற்றி பார்க்கவில்லையே!” அவள் எதிர்ப்புத் தெரிவித்தாள்.

பாபா அவளிடம் மீண்டும் சித்திரத்தைப் பார்க்கச் சொல்லி, கண்களை மூடுமாறு சைகையால் தெரிவித்தார்; அவள் அவ்வாறு செய்தபோது, **”இப்போது, சித்திரத்தில் முகத்தைச் சுற்றி ஒளிரும் வெளிச்சத்தைப் பார்க்கிறீர்களா?”** என்று கேட்டபோது, கண்களை மூடிக்கொண்டே, ‘இல்லை’ என்று பதிலளித்தாள்.

**“கண்களைத் திறந்து பாருங்கள். இப்போது சித்திரத்தில் ஒளி வட்டத்தைப் பார்க்க முடிகிறதா?”**

“ஆமாம் பாபா” என்றாள் ஷிரீன்.

**“நான் தெய்வீக ஒளியின் மஹா சமுத்திரம். நீங்கள் இதை சாதாரண கண்களால் பார்க்க முடியாது. இந்த ஒளியைக் காணும் கண் வேறு. அந்தக் கண்ணைத் திறக்கும் போது, சித்திரத்தில் வரையப்பட்டிருக்கும் ஒளியை, இப்போது பார்ப்பதை விட நீங்கள் தெளிவாக என்னில் காண்பீர்கள்.”**

“ஏன் பாபா அந்தக் கண்ணை உங்களால் திறக்க முடியவில்லை?”

**“என்னால் முடியும். ஆனால் அதற்கு என் அருளை வழங்க வேண்டும், என்னை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிக்கும் வேளையில் நான் அந்த அருளை உங்களுக்கு வழங்குவேன்!”**

“அந்த தெய்வீக ஒளியைப் பார்த்தால் அது என்னை எரித்து விடுமா?”

**“இல்லை, அது உங்களை எரிக்க முடியாது, அது உங்களை ஆனந்தமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கச் செய்யும்.”**

“அந்த தெய்வீக ஒளியை நான் எப்போது பார்ப்பேன்?”

**“நீங்கள் உண்மையிலேயே அதைப் பார்க்க விரும்பும்போது பார்ப்பீர்கள். ஒரு குழந்தை உண்மையில் பசியுடன் உணவுக்காக அழும்போது, தாய் அதற்கு உணவளிப்பது போல, நீங்கள் உண்மையில் அதற்கான பசியுடன் இருக்கும்போது, எனது தெய்வீக ஒளியைக் காணும் பார்வை உங்களுக்குக் கிடைக்கும்.”**

“அதற்கு நான், எப்போது உண்மையில் பசியுடன் இருப்பேன்?”

**“நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் நீங்கள் என்னை நேசிக்கும்போது.”**

“நான் எப்படி உங்களை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிக்க முடியும்?”

**“உங்கள் முழு மனதுடன் என்னை எப்பொழுதும் நினைவில் கொள்வதன் மூலம்.”**

“உங்களை நான் எந்தப் பெயரில் நினைவுகூர வேண்டும்?”

“‘**பாபா, பாபா, பாபா**...’ என்று சொல்லுங்கள்.”

பாபா வெளிப்படுத்திய அனைத்தையும் ஷிரீன் உள்வாங்கிக்கொண்டாள். அவருடனான உரையாடலின் போது, அறையில் அமர்ந்திருந்த அனைவரையும் முற்றிலும் மறந்தவளாகத் தென்பட்டாள். சிறிது நேரம் கழித்து, பாபா அவளிடம் ‘**நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்**?’ என்று கேட்டபோது, அவள் பாபாவை இனிமையாகப் பார்த்துவிட்டு, தன் உதடுகளைத் திறந்து மூடி, “பா... பா” என்று மெல்லிய குரலில் உச்சரித்தாள்.

பாபா மற்றும் பெண் மண்டலியுடனான மதிய உணவு வேளையில், ஷிரீன் இடையே குறுக்கிட்டு, “என்னிடம் ஒரு மந்திரக்கோல் இருந்திருக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு!” என்றதும், பெண் மண்டலியில் ஒருவர் அவளிடம் மந்திரக்கோலை வைத்து நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு, அவள் பதிலளித்தாள், “நான் விரும்பியதை அடையப் பெறுவேன்.”

“நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள்?” இன்னொருவர் கேட்டார்.

“பாபாவைச் சுற்றியுள்ள அந்த தெய்வீக ஒளியைப் பார்க்க!”

இங்கிலாந்தில் ஷிரீன், பாம்புகள் மற்றும் தேள்களைப் பற்றிக் கேள்விப்படும் வாய்ப்பு மிக அரிது. ஆனால் இந்தியாவில் அவற்றைப் பார்ப்பது குறித்து எச்சரிக்கப்பட்டபோது, அவள் அச்ச உணர்வையும், வெறுப்பையும் வெளிப்படுத்தினாள். மெஹராஸாத் விஜயத்தின் போது, ஷிரீன், பாபாவிடம்

அவற்றைப் பற்றிக் கேட்டாள்: "கடவுள் ஏன் பாம்புகள், தேள்கள் போன்ற ஊர்ந்து, தவழும் உயிரினங்களைப் படைத்தார்?"

பாபா சிரித்துக்கொண்டே எரச்சிடம் பதிலளிக்குமாறு கூறியதும் அவர், "கடவுள் இதுபோன்ற உயிரினங்களைப் படைத்ததால், நாம் அதைக் கண்டு அஞ்சும் வேளையில் அவரைக் குரல் கொடுத்து அழைத்து நினைவுகூரலாம்."

ஷிரீன் அந்த பதிலைக் கேட்டு திருப்தியடையாமல் மறுமொழி கூறினார், "ஆனால் கடவுள் எல்லாம் வல்லவர், எனவே பாம்புகள், தேள்கள் போன்ற விரும்பத்தகாத, பயங்கரமான உயிரினங்கள் மூலமாக அல்லாமல், அவரை நேரடியாக நினைவுகூரச் செய்ய முடியும். அவற்றைப் படைத்ததில் கடவுள் ஏதேனும் தவறு செய்தாரா?"

இதுபோன்ற அப்பாவித்தனமான, ஆனால் ஆழமான கேள்விகள் அங்கிருந்தவர்களை திடுக்கிட வைத்தன. பாபா மகிழ்ச்சியுடனும், முகமலர்ச்சியுடனும் தோன்றி அவளுக்கு விளக்கினார், "**நல்லது**, **தீயது**, **அழகானது**, **அருவருப்பானது அனைத்தும் என்னுடையது**. **அவை அனைத்தும் நான்தான். கடவுள் பாம்புகளையும் தேள்களையும் படைத்ததில் அவர் எந்தத் தவறும் இழைக்கவில்லை. அது எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே இருக்கிறது**."

"ஆனால் கடவுள் இத்தகைய உயிரினங்களைப் படைத்ததன் கட்டாயம் என்ன?" அவள் வலியுறுத்தி வினவினாள்.

பாபா விளக்கினார், "**ஷிரீன், நீங்கள் மிகவும் அழகாகவும் இனிமையாகவும் இருக்கிறீர்கள், ஆனால் ஒவ்வொரு நாளும் நீங்கள் கழிவுக்கலத்தின் மீது அமர்ந்து அசுத்தம் மற்றும் துர்நாற்றம் மிக்க மலக்கழிவை வெளியே கொண்டு வருகிறீர்கள். நீங்கள் ஏன் அதைச் செய்கிறீர்கள்? அது இன்றியமையா தேவை, மேலும் அது உங்களை அழகாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது. அதுபோல, கடவுளின் படைப்பில் உள்ள அனைத்தும் அவசியமானவை. நல்லது, தீயது, அழகானது, அருவருப்பானது அனைத்தும் என்னுடையது**."

இந்த பதில் சிறுமியால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது, அவள் திருப்தியில் நீண்ட பெருமூச்சை விட்டபோது, அவளது முகம் மகிழ்ச்சியில் ஒளிர்ந்தது.

ஒருமுறை பாபா அவளிடம், "**நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்**" என்று சொன்னபோது, ஷிரீன், அருகில் சென்று பாபாவின் காதில், "நான் உங்களை அதைவிட அதிகமாக நேசிக்கிறேன்" என்று கிசுகிசுத்தாள். மெஹரா அல்லது வேறு எவரேனும் அவளுக்குப் பரிசு, இனிப்பு அல்லது பொம்மைகளை அன்புடன் வழங்கினால், அதை முதலில் பாபாவிடம் கொண்டுவரும் வேளையில், பாபா அவளை மகிழ்விக்க இனிப்புகளில் பங்கெடுத்துக் கொள்வதுண்டு; இல்லையேல் (சர்க்கரை நோய் காரணமாக, பாபா இனிப்பு உண்பதில்லை), பொம்மைகளுடன் சிறிது நேரம் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டார்.

சில சமயங்களில் பாபா, ஷிரீனைப் பாட வைத்து, நகைச்சுவை துணுக்குகளைச் சொல்லச் செய்தார். பாபா மதிய வேளைகளில் சூப் அருந்தும்போது, கடைசியாக சிறிதளவு அவளுக்கும் கொடுத்தார்.

ஷிரீன், 'அவள் மிகவும் விரும்பிய பெரிய தந்தை'யுடன் கழித்த நேரத்தைக் குறித்து இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

பாபா என்னை மிகவும் நேசிப்பதை உணரச் செய்தார். அவர் என் மீது அதிக கவனம் செலுத்தினார், அது நிச்சயமாக என்னை மகிழ்வித்தது. அவர் மிகவும் அற்புதமானவர் என்று நான் நினைத்தேன் - எனது பிரியமான பெரிய தந்தை, மந்திர சக்தி படைத்தவர் மற்றும் அனைத்தையும் அறிந்த கடவுள். நான் அவரிடம் எதையும் கேட்க முடியும் என்று உணர்ந்தேன்; மேலும் அவர் எப்பொழுதும் எனது கேள்விகளுக்கு ஒரு குழந்தையின் நிலைக்கு இறங்கி வந்து பதிலளித்தார், ஆனால் அதே நேரத்தில் அவர் ஒவ்வொரு கேள்வியையும் முக்கியமானதாகக் கருதினார். நான் அவரை மிகவும் தொந்தரவு செய்தேன்.

நாங்கள் இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில், நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று பாபா எனக்கு உணர்த்தினார். அவர் எனக்கு செல்லம் கொடுத்து என்னைக் கெடுத்துவிட்டார், நான் கெட்டுப்போகிறேன் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் அதை மிகவும் விரும்பினேன். நான் அவருடன் இருக்கவே விரும்பினேன். நான் எப்பொழுதும் பாபாவுடன் இருக்க விரும்பினேன்.

கைக்கோபாத் மண்டபத்தின் உள்ளே பாபாவின் வலதுபுறத்தில் அமர்ந்திருப்பது வழக்கம், மேலும் பாபா, தாராவிடம், "**அவர் என்னை எனது உண்மை ரூபத்தில் பார்க்கிறார்**" என்று குறிப்பிட்டார்.

பாபா, தாராவிடம் அவரது பணியைப் பற்றிக் கேட்டு, "**இங்கிலாந்தில் இப்போது குளிர்ச்சியாக இருக்க வேண்டும், அப்படித்தானே**" என வினவினார்.

தாரா உடனே, "நீங்களும் பழகிக் கொள்ளுங்கள் பாபா" என்றார்.

பாபா குளிரில் நடுங்குவது போல நடித்து, "**நீங்கள் ஒரு துணிச்சலான இளைஞன். என்னால் அதைச் செய்ய முடியவில்லை!**" என்று சைகையால் தெரிவித்தார்.

லின் ஆட்டைப் பாதித்த அதே நோயால் தாரா படிப்படியாகப் பார்வையை இழந்ததைப் பற்றி பாபா கேட்டார். தாரா உடனே அது, அவருக்கு பரவாயில்லை, அந்திப் பொழுதில் இருளாக மாறும்போது பார்வையில் சிரமம் இருப்பதாகத் தெரிவித்தார். ஆனால் அதிர்ஷ்டவசமாக, வீட்டருகில் வாழ்ந்த சிலர், அவர் செல்லும் அதே வழியில் சென்று, வீட்டிற்குச் செல்ல உதவினர்."

பாபா தனது சகோதரரின் மகனுக்கு ஆறுதல் கூறினார், "**கவலைப்படாதீர்கள், தாரா. என் அருட்பார்வை உங்கள் மீது இருக்கும், உங்களுக்குப் பொருத்தமான மனைவியை நான் கண்டுகொள்வேன்**" என்று கூறினார்.

ஆதி ஜூனியர் 1965 ஜனவரி 15 அன்று லண்டனுக்குத் திரும்ப இருந்தார்; ஆனால் ஃப்ரீனி, தாரா, ஷிரீன் ஆகியோர் மார்ச் முதல் தேதி வரை இந்தியாவில்

தங்கியிருந்த வேளையில், அவர்கள் மெஹராஸாத்திற்கு மேலும் சில முறை வர அனுமதிக்கப்பட்டனர்.

1964 முதல் அமர்ஸிங் ஸைகல் அவர் எங்கிருக்க நேர்ந்தாலும் அகில இந்திய வானொலியில் இந்தி மொழியில் உரைகளை வழங்கினார். டெல்லி, போபால், ஹைதராபாத், பாட்னா போன்ற நிலையங்களிலிருந்து அவரது உரைகள் ஒலிபரப்பப்பட்டன. பாவ் கல்சூரி இந்த உரைகளை எழுதி, பின்னர் அவற்றை மெஹராஸாத்திலிருந்து ஸைகலுக்கு அனுப்பி வந்தார். சில கருத்து வேறுபாடுகள் காரணமாக, வாழும் துறவிகள் அல்லது குருநாதர்கள் தொடர்பான எந்த விஷயங்களையும் ஒலிபரப்ப இந்திய அரசாங்கம் தடை விதித்தது, எனவே பாவ் கல்சூரி, நேர்மை, ஒருமைப்பாடு, சகோதரத்துவம், அன்பு போன்ற பொதுவான தலைப்புகளில் உரைகளை வடிவமைத்து, மெஹர் பாபாவின் சொற்களை இணைத்தார். பாபாவும் மெஹராஸாத்தில் அனைவரும் வானொலியில் பேசுவதைக் கேட்பது வழக்கமாக நடந்தது; ஒவ்வொரு முறையும் ஸைகல், 'அவதார் மெஹர் பாபா கூறுகிறார்' என மொழிந்தது அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

1965 ஜனவரி 8 அன்று மதியம் 1:30 மணிக்கு பாபாவைப் பார்க்க மெஹராஸாத்திற்கு வந்த ஸைகல், அன்று மாலை அஹமதுநகர் மையத்திலும் தொடர்ந்து இரவு 9:00 மணியளவில், நகரின் காந்தி மைதானத்தில் (சதுரத்தில்) நடந்த மக்கள் கூட்டத்திலும் உரை நிகழ்த்தினார்.

குண்டூரைச் சேர்ந்த என்.வி. ரமணய்யா (N.V. RAMANAIAH) மற்றும் பூனாவிலிருந்து ராமகிருஷ்ணன், பவ்ஸார் ஆகியோருடன் ஆதி சீனியர், அமர்ஸிங் ஸைகலை தனது காரில் மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். ரமணய்யா முதன்முதலில் 1959 ஜனவரி மாதத்தில் குருபிரசாத்தில் பாபாவை தரிசனம் செய்தார், அன்றிலிருந்து வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பாபாவை சந்திக்க வழக்கமாக வந்தார். ஒரு வருடத்திற்கு முன்பு நிறுவப்பட்ட குண்டூர் மையத்தின் பணியை விரிவுபடுத்த, அவர் ஆர்வமாக இருந்தார், மேலும் பூனா மையத்தின் பணி தொடர்பாக ராமகிருஷ்ணனிடம் ஆலோசனை பெறவும், சில புத்தகங்களை சேகரிக்கும் நோக்கத்தில் ரமணய்யா டிசம்பரில் பூனாவிற்கு வந்திருந்தார். அப்போது, மீலன் ஸ்டுடியோவால் எடுக்கப்பட்ட புகைப்படத்தை பாபா ஆசிர்வதித்து, குண்டூரில் தங்களுடைய மையத்திற்கு அனுப்பி வைக்குமாறு ராமகிருஷ்ணனிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

மாறாக, பாபா அவரை தனிப்பட்ட முறையில் மெஹராஸாத்திற்கு அழைப்பதாக ரமணய்யாவிற்குத் தொலைத்தந்தி வந்தது. புகைப்படத்தைத் தொட்டு பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**எனது சித்திரத்தை நானே ஆசீர்வதிப்பது ஒரு தனித்துவமான நிகழ்வு; நீங்கள் குண்டூருக்குத் திரும்பிச் செல்லும் வேளையில் நானும் உங்களுடன் வருவேன்; எனது சுயத் திட்டத்தின்படி எனது பணியை நானே செய்வேன்.**" இந்தப் புகைப்படம், அந்த ஆண்டு பாபாவின் பிறந்தநாளில் குண்டூர் மையத்தில் நிறுவப்பட்டது.

நவ்ஸாரியைச் சேர்ந்த பத்து பேர் அடங்கிய பாபா அன்பர்களின் குழு ஒன்று, 1965 ஜனவரி 10 ஞாயிறு அன்று ஹோஷங் பரூச்சா தலைமையில், காலை 11:00 மணிக்கு மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தனர். ருஸ்தம், ஸொராப், ஷெரூ ஆகியோரும் அன்று வந்திருந்தனர். பால் நாத்துவும் மெஹராஸாத்தில் பத்து நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார்.

ஜனவரி 13 அன்று, பஞ்ஜாபை சேர்ந்த ஜஸ்வந்த் ராய் (JASWANT RAI) என்ற வாலிபர், எதிர்பாராதவிதமாக குஷ்ரு குவாட்டர்ஸுக்கு வந்து ஆதியை சந்தித்தார். ஜஸ்வந்த் தனது உடைமைகள் அனைத்தையும் விற்றுவிட்டு, பாபாவின் நோக்கத்திற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கும் எண்ணத்தில் வந்தார். பாபாவைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் தத்தமது உலகப் பொறுப்புகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை ஆதி விளக்கினார். அந்த இளைஞர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி, தற்கொலை செய்து கொள்ளப் போவதாகச் சுட்டிக்காட்டியதும், ஆதி அவர் மீது இரக்கம் கொண்டு, அவரை மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்ற போது, பாபா அவருக்கு தரிசனம் வழங்கி, அன்புடன் அவரை தனது இல்லம் திரும்புமாறும், முழு மனதுடன் பாபாவை நினைவுகூருமாறும் அறிவுறுத்தினார். “**நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்**” என்று உறுதியளித்தார்.

இருப்பினும், அன்று பிற்பகலுக்குப் பின்பு, பாபாவின் குறிப்பு ஒன்று ஆதியை வந்தடைந்தது: “**எந்த சூழ்நிலையிலும் பாபாவின் தரிசனத்திற்காக மெஹராஸாத்திற்கு எந்தப் பார்வையாளரையும் அனுப்பக் கூடாது**.”

இதற்கிடையில் அமெரிக்காவில், மியாமியைச் சேர்ந்த இர்வின் - எட்வர்ட் லக் (IRWIN & EDWARD LUCK) சகோதரர்கள், பாபாவிற்குத் தொடர்ந்து கடிதம் எழுதி, தங்கள் செயல்பாடுகளைப் பற்றி அவருக்குத் தெரியப்படுத்தினர். 1965 ஜனவரி 6 அன்று, அவர்களின் கேள்வி ஒன்றிற்கு பாபா வழங்கிய பதிலை எரச் அனுப்பிவைத்தார்: “**பாபா, அவர் ஒருவரே அன்பிற்குரியவர் என்று கூறுகிறார், மேலும் உண்மையான அன்பிற்குரியவர், அவருடைய அன்பர்களான உங்களுடன் ஏற்கனவே இருக்கிறார். நீங்கள் உண்மையான அன்பர்களாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அன்பிற்குரியவரின் பிரசன்னத்தை உங்கள் அருகில் உணர, உண்மையான அன்பர்களாக இருக்கும் நீங்கள், எந்த சூழ்நிலையிலும் - சோதனைக்குரிய அல்லது மாறான சூழ்நிலையிலும் - அன்பிற்குரியவரை மகிழ்விக்கும் ஒரே ஆர்வத்தில் இருக்க வேண்டும்...**”

ஜனவரி 30 அன்று அவர்களின் ஒரு கேள்விக்கு, பாபா, எரச் மூலமாக இவ்வாறு எழுதினார்: “**அன்பர் ஒருவர், பாபாவை நேசிக்கிறாரா இல்லையா என்பது முற்றிலும் ஒரு பொருட்டல்ல; ஆனால் உண்மையில் பாபா அந்த அன்பரை நேசிக்கிறாரா என்பதே முக்கியம்...**”

லக் சகோதரர்களுக்கு எழுதிய அதே கடிதத்தில், எரச் மேலும் குறிப்பிட்டிருந்தார்: “**நீங்கள் மகிழ்ச்சியாகவும், அவருடைய அன்பில்**

**ஒன்றிணைந்தும் இருக்க வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார்; இது உங்களுக்கு மிகவும் உதவும்...**"

புக்கார் நான்கு நாட்களுக்காக ஜனவரி 11 அன்று மெஹராஸாத்திற்கு வந்தார். ஜனவரி 13ஆம் தேதி, ஹமிர்பூரில் அவரது 'மௌனி-வாணி' (SILENT SPEECH) அச்சகத்தின் திறப்புவிழாவை ஒட்டி, மெஹர் பாபா அவருக்குக் கீழ்வரும் செய்தியை வழங்கினார்:

**எல்லா வார்த்தைகளும் மௌனமாகிய இறை வார்த்தையிலிருந்து எழுந்தன - மேலும் உண்மையாக மொழியப்படும் போது, அது இறை அன்பு மற்றும் உண்மைப்பொருளைப் பற்றிய எனது செய்தியை உலகெங்கும் பரவச் செய்யும். 'மௌனி-வாணி' பத்திரிகையின் நோக்கம் நிறைவேற எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

ஜனவரி 14 அன்று, ஆந்திரப் பிரதேச விளையாட்டுக் குழுமத்தின் மூன்றாம் வருடாந்திர 'தடம்-களம்' போட்டிக்காக (TRACK AND FIELD COMPETITION) பாபா இந்த செய்தியை அனுப்பி வைத்தார்:

**ஓர் அணியைச் சார்ந்தவர்கள், எதிரணியினரின் சிறப்பான ஆட்டத்தைக் கண்டு, தமது அணியின் வெற்றியைப் பாராட்டுவது போல், எதிரணியினரையும் சமமாகப் பாராட்டினால், விளையாடும் விளையாட்டுகள் அனைத்தும் உடல் ஆரோக்கியம், மன விழிப்புணர்வு இவற்றுடன், ஆன்மீகத்தையும், விளையாட்டுகளின் தரத்தையும் செழுமைப்படுத்தும் அனுபவமாக மாறும். இந்த உடல் ஆரோக்கியம், விழிப்புணர்வு, ஆன்மீகம், விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்தும் அனைத்தும் ஒருவரின் அன்றாட பணிகள் மற்றும் சங்கங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டால், வாழ்க்கை எனும் விளையாட்டை ஓர் உண்மையான விளையாட்டு வீரரின் பாணியில் விளையாட முடியும்.**

கடந்த சில மாதங்களாக, பாபாவின் கழுத்து மற்றும் முதுகின் இடது தோள்பட்டை பகுதியில் அவ்வப்போது கடுமையான வலி இருந்து வந்தது. இதன் விளைவாக, 1965 ஜனவரி 16 சனிக்கிழமை அன்று, பாபா, கோஹெர் மற்றும் எரச்சுடன் பூத் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவரது கழுத்து மற்றும் முதுகுத்தண்டின் புதிய எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. ஆதி வழக்கம் போல முன்கூட்டியே சென்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்; டாக்டர் ஸவுத்வெல் (DR. SOUTHWELL) உடனிருந்து, டாக்டர் கோஹெர் மருத்துவ நிபுணருடன் எக்ஸ்-ரேக்களை ஆய்வு செய்தார்.

வலியைக் குறித்து பாபா மண்டலியிடம் குறிப்பிடுகையில், "**இது எனது கழுத்தைச் சுற்றியுள்ள உலகளாவிய துன்பத்தின் முச்சந்தி**" என்று கூறினார்.

ஜனவரி 18ஆம் தேதி, மெஹர்வான் ஜெஸவாலா, வருடம் ஒருமுறை மெஹராஸாத்தில் தங்கும் அவரது வாய்ப்பைப் பயன்படுத்தி அங்கு வந்தார்.

டாக்டர் டான் அன்று டாக்டர் ஸவுத்வெல்லை சந்தித்து, பாபாவின் உடல்நிலை குறித்து விவாதித்து, மெஹராஸாத்தில் கோஹெருடன் கலந்து ஆலோசனை செய்தார். டாக்டர் ஸவுத்வெல் கண்டறிந்ததை டாக்டர் ராம் கிண்டேக்கு தெரிவிக்கும் விதத்தில், நரிமனுடன் தொலைபேசியில் நீண்ட நேரம் தொடர்பு கொள்ளப்பட்டது. அதே தகவல் மெஹர்ஜிக்கும் தொலைபேசி மூலம் வழங்கப்பட்டது. பாபாவின் வலி அதிகரித்து வந்த அவ்வேளையில், சமீபத்தில் எடுக்கப்பட்ட எக்ஸ்ரேக்கள், முன்னதாக எடுக்கப்பட்டதைப் போலவே இருந்ததால், காரணத்தைக் கண்டறிவது கடினமாக இருந்தது. ஒருவேளை பாபா தெரிவித்தது போல, கழுத்துப்பட்டை சரியாகப் பொருந்தாமல் இருந்திருக்கலாம். இழுவைக் கருவிகளைப் பயன்படுத்துவதானால், பாபா 24 மணிநேரமும் படுக்கையில் இருக்க மாட்டார் என்று டாக்டர் கிண்டேக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே, இடைப்பட்ட காலம் மட்டும் இழுவைக் கருவியை ஒரு மாற்றாகப் பயன்படுத்தலாம்.

ஜனவரி 20 புதன்கிழமை அதிகாலையில், கழுத்துப்பட்டை தயாரிப்பாளரான ஆனந்த் ஷிண்டேயை பாதிரி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தபோது, டாக்டர் டானும் உடனிருந்தார். ஷிண்டே, கழுத்துப்பட்டையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்ததால், ஞாயிற்றுக்கிழமை திரும்பி வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

1965 ஜனவரி 24 ஞாயிற்றுக்கிழமை அன்று, டாக்டர் ராம் கிண்டே, நரிமன், ஹோமா இருவருடன் பாபாவை பரிசோதனை செய்ய மும்பையிலிருந்து வந்தார். ஆனந்த் ஷிண்டேயும் அஹமதுநகரில் அவர்களுடன் இணைந்து, அன்று மதியம் 12:30 மணிக்கு மெஹராஸாத் வந்தடைந்தனர். ஆதி, டாக்டர் டான், பாதிரி ஆகியோரும் உடன் இருந்தனர். ஒவ்வொரு காலையிலும் இரண்டு முதல் மூன்று மணி நேரம், மென்மையான ரப்பர் கழுத்துப்பட்டையை பாபா பயன்படுத்த வேண்டும் என்று கிண்டே பரிந்துரைத்தார். பாபா தனது கழுத்தின் அனைத்து தேவையற்ற அசைவுகளையும் தவிர்க்கவும், படுக்கையில் ஓய்வெடுக்கும் போது, பாபா அவரது பக்கவாட்டில் சாய்ந்து படுத்துக் கொள்ளவும், மருந்து களிம்பினால் லேசாக மஸாஜ் செய்யுமாறும் கூறி, சில குறிப்பிட்ட ஊட்டச்சத்து மற்றும் பிற மாத்திரைகளையும் பரிந்துரைத்தார். டாக்டர் கிண்டே உடன் வந்தவர்களுடன் மதியம் 2:00 மணிக்கு மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். பாதிரி, டாக்டர் டான் இருவரும் மாலை 4:00 மணிக்கு மெஹராபாத் திரும்பிச் சென்றனர்.

பாதிரி, டாக்டர் டான் இருவருக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடு காரணமாக, நான்கு நாட்களுக்குப் பிறகு, ஜனவரி 28 வியாழன் அன்று, பாபா அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்தார். அவர் இருவரையும் தனித்தனியாகவும் பின்னர் ஒன்றாகவும் சந்தித்த போது, அவர்களிடையே சமரசம் ஏற்பட்டு, மகிழ்ச்சியுடன் இருவரும், மெஹராபாத்திற்குத் திரும்பினர்.

ஜனவரி 30 அன்று, மெஹர்ஜி, ஆனந்த் ஷிண்டே மற்றும் உடலியக்க மருத்துவர் (PHYSIOTHERAPIST) கோபால் எஸ். ஜோஷி (GOPAL S. JOSHI) என்ற நண்பருடன் டாக்டர் கிண்டே திரும்பி வந்தார்; கோபால் ஜோஷி அஹமதுநகரில் ஒரு வாரம் தங்க இருந்தார். ஜோஷி பாபாவின் கழுத்து, தோள்பட்டை மற்றும் மேல் முதுகில் ஒரு நாளைக்கு இரண்டு முறை, காலை 9:00 முதல் 11:00 மணி வரை மற்றும் மாலை 3:00 முதல் 5:00 மணி வரை மஸாஜ் செய்து வந்தார். ஷிண்டே, பாபாவுக்காகக் கொண்டு வந்த துளையிடப்பட்ட பிளாஸ்டிக் கழுத்துப்பட்டை, குளிர்ச்சியாகவும் வசதியாகவும் இருக்கும் என்று அவர் நம்பினார். பாபாவிற்கு மஸாஜ் செய்யப்படாத போது, ஒரு நாளைக்கு மூன்று முறை, காலை 9:30 மணி முதல் மதியம் 12:30 மணி வரை, 1:30 முதல் 3:00 மணி வரை, மற்றும் மாலை 4:00 அல்லது 4:30 முதல் 7:00 மணி வரை, கழுத்துப்பட்டையை அணியுமாறு டாக்டர் கிண்டே பரிந்துரைத்தார். கழுத்துப்பட்டையை அணிந்த வண்ணம், பாபா மண்டபத்தில் அமர்ந்திருக்க வேண்டிய கட்டாயம். டாக்டர் கிண்டே மறுநாள் மும்பைக்குத் திரும்பிச் சென்றார். ராம் கிண்டேயைப் போலவே, ஜோஷி, ஷிண்டே இருவரும் பாபாவுடன் நெருக்கமான தொடர்பில் வந்து, உண்மையான பக்திமிக்க தொண்டர்களாக மாறினர்.

1965 பிப்ரவரி 1 திங்கட்கிழமை அதிகாலை 7:30 மணிக்கு, ஜோஷி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்ட போது, ஆதி அவரை அழைத்து வந்தார்; சிகிச்சை பாபாவின் படுக்கையறையில் வழங்கப்பட்டது. அஹமதுநகரிலிருந்து வந்து செல்வதற்கு பதிலாக, ஜோஷி 5ஆம் தேதி வரை மெஹராஸாத்தில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டார். காலை 11:00 மணிக்கு, பாபா சுமார் 45 நிமிடங்களுக்கு இரு கைகளிலும் ஊசிகள் துளைப்பது போன்ற உணர்வை அனுபவித்தார். இது மிகவும் தீவிரமாக இருந்ததோடு, இடது கரத்தில் நெடு நேரம் நீடித்தது. டாக்டர் கிண்டே பிப்ரவரி 2ஆம் தேதி, பாபா இரவு நேரத்தில் அணிவதற்காக மற்றுமொரு பிளாஸ்டிக் கழுத்துப்பட்டையை அனுப்பி வைத்தார்.

இரண்டு நாட்கள் பாபா அதைக் குறித்து புகார் கூறவில்லை, ஆனால் 4ஆம் தேதி, பாபா தனது தினசரி மஸாஜைத் தொடர்ந்து, அரை மணி நேரம் கழுத்துப்பட்டையை அணிந்த பிறகு, காலை 11:00 மணியளவில் வலியின் உணர்வு திரும்பியது. கோஹெர் இது இதயப் பிரச்சினையாக இருக்குமோ என்று கவலைப்பட்டார், ஆனால் பாபாவின் தோளில் உருவான வலி, கழுத்துப்பட்டையின் அழுத்தத்தால் ஏற்பட்டதாக இப்போது கருதினார். ஜோஷியின் மஸாஜ் மூலமாக பாபாவின் கழுத்தில் வலிகள் ஓரளவு குறைந்தன, ஆனால் அதற்குப் பிறகு வலி அவரது கழுத்து அல்லது தோள்பட்டையின் முனையில் பல்வேறு இடைவெளிகளை நோக்கித் திரும்புவது போலத் தோன்றியது. பிளாஸ்டிக் கழுத்துப்பட்டை அவரது கைகளில் கூர்மையான ஊசிகள் நுழைவது போன்ற உணர்வை ஏற்படுத்தியதாகத் தீர்மானிக்கப்பட்டதால், பாபா இரவில் அதை அணிவதை நிறுத்தினார்.

மேலும் பிப்ரவரி 4ஆம் நாள் பாபாவின் கால்களின் நீளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வித்தியாசத்தை ஈடு செய்யும் வகையில், அவரது வலது குதிகால், முக்கால் அங்குல அளவிற்கு உயர்த்தி பாபாவிற்கு புதிதாக ஒரு ஜோடி பாத அணிகள் செய்யப்பட்டது. பாபா இவை மிகவும் சௌகரியமாக இருப்பதைக் கண்டார்.

1965 பிப்ரவரி 7 அன்று பாபா விதிவிலக்கு அளித்து, டாக்டர் கிண்டேயின் மைத்துனரான வி.ஜி. ஹெரேக்கர் (V.G. HEREKAR) என்ற பூனாவைச் சேர்ந்த வக்கீல், அவரது குடும்பத்துடன் மெஹராஸாத்திற்கு காலை 11:00 மணிக்கு வர அனுமதித்தார். இந்த நேரத்தில் வியட்நாம் போர் (VIETNAM WAR) வலுவாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது, அன்று அமெரிக்கர்கள் வட வியட்நாம் மீது முதல் பதிலடி குண்டுத் தாக்குதல்களைத் தொடங்கினர்.

ஷிண்டே பிப்ரவரி 8ஆம் தேதி மெஹராஸாத் திரும்பி வந்து, மேம்படுத்தப்பட்ட இழுவைத் திறன் படைத்த கழுத்துப்பட்டையை பாபாவின் வசதிக்கேற்ப சரிசெய்தார். பாபா இரண்டு மணி நேரம் அதை அணிந்த போது, அவரது கழுத்து வலியின் தீவிரம் குறைவாக இருப்பதைக் கண்டார். மும்பையிலிருந்து வந்த கோர்ஷெத் மதியம் 1:15 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். அன்று மதியம் ஸரோஷ், விலூ இருவரும் ஃபிரீனி மற்றும் அவர்களது மருமகள் அனிதா, அவரது குழந்தையுடன் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நேரத்தில் பைதூல் மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பார்சி பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர் ஐந்து மாதங்கள் மும்பையிலிருந்த வேளையில் அங்கு அவரது மகள் ஸர்வார் அவரை கவனித்துக் கொண்டார்.

டாக்டர் கிண்டே, ஹோமாவுடன் நரிமனின் காரில், பிப்ரவரி 13 சனிக்கிழமையன்று பாபாவை மறுபரிசோதனை செய்ய மறுபடியும் மெஹராஸாத் வந்து, அன்று இரவு அங்குத் தங்கினார். இந்த வருகையின் போது, மண்டலி மண்டபத்தில் பாபா, பாவ் கல்சூரியிடம் 'மெஹர் கீத் ஸுதா' (MEHER GEET SUDA) என்ற தலைப்பில் எழுதிய ஈரடிக் கவிதைகளை டாக்டர் கிண்டே முன்னிலையில் வாசிக்குமாறு கூறினார். இந்தி மொழியில் எழுதப்பட்ட இந்த ஈரடிப் பாடல்களைக் கேட்ட பாபா, பாவ் கல்சூரியிடம் கூறினார்: **"உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்பது குறித்து உங்களுக்குத் தெரியுமா? கபீரின் கவிதைகளை விட இது சிறந்தது!"**

பாபா அப்போது டாக்டர் கிண்டே மற்றும் பிற மண்டலியிடம், **"இவர் தனக்குக் கவிதைகள் எழுதத் தெரியாது என்று கூறுகிறார்; ஆனால் அவர் என்ன எழுதியிருக்கிறார் என்ற சிறிதளவு கருத்தேனும் அவருக்கு உள்ளதா? கபீர் நிச்சயமாக மேன்மையான விஷயங்களை எழுதினார், ஆனால் மொழி**

**எளிமையானது. இங்கே பாவ், மொழி, உள்ளடக்கம் இரண்டையும் கவனத்தில் கொள்ளும் விதத்தில் இந்தி மொழியில் எழுதியுள்ளார். இருந்தாலும் அவருக்கு எழுதத் தெரியாது என்று எப்போதும் குறை கூறி முறையிடுகிறார்!"**

டாக்டர் கிண்டே பிப்ரவரி 14 அன்று புறப்பட்டு, வழியில் காரின் சக்கரம் பழுதானதால், பூனாவில் ஹெரேக்கரின் இல்லத்தில் மதிய உணவுக்காக நின்றார். இதற்கிடையில், மெஹர்வான், ஹெரேக்கரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, டாக்டர் கிண்டே மெஹராஸாத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற நேரத்திலிருந்து பாபாவின் கழுத்து வலி மிகவும் மோசமான திருப்பத்தை எட்டியதாக அவர் கிண்டேக்குத் தெரிவித்தார். கோஹெர், டான் இருவரும் பூத் மருத்துவமனையில் புதிய எக்ஸ்-ரேக்களை எடுக்க முடிவு செய்து, பிப்ரவரி 15 அல்லது 16ஆம் தேதி அது எடுக்கப்பட்டது. டான் எக்ஸ்-ரேக்களை மும்பைக்கு எடுத்துச் சென்று, அங்கு டாக்டர் கிண்டே அவற்றைப் பரிசோதனை செய்து, பாபா அனுமதித்தால் அந்த வார இறுதியில் மெஹராஸாத்திற்கு மறுபடியும் செல்ல முடிவு செய்தார். மீண்டும், சிகிச்சை, மற்றும் ஏற்பாடுகள் குறித்த தொலைபேசி உரையாடல்கள் தொடர்ந்தன.

1965 பிப்ரவரி 20 சனிக்கிழமை காலை 7:45 மணிக்கு டாக்டர் கிண்டே, ஹோமியுடன் நரிமனின் காரில் வந்தார். அன்றிரவை அவர்கள் மெஹராஸாத்தில் கழித்தனர். ஏற்கனவே குறிப்பிட்டபடி, டாக்டர் கிண்டே, பாபாவிடம் அளப்பரிய பக்தி கொண்டிருந்தார். அவர் மண்டலி உண்ணும் உணவையே உண்டார்; மேலும் அவருக்காக சமைக்கப்பட்ட எதையும் விரும்ப மாட்டார். டாக்டர் கிண்டே மெஹராஸாத்திற்கு வரும்போதெல்லாம், தவறாமல், அவர் வந்த மறுநாள், பாபா அவருடைய வலி குறைந்துவிட்டதாகக் கூறி டாக்டரை மகிழ்விப்பதும், அவர் மும்பைக்குத் திரும்பிச் செல்வதும் வழக்கமாக நடந்து வந்தது. அவர் செல்லும் வழியில், கிண்டே பூனாவில் ஹெரேக்கரின் இல்லத்தில் மதிய உணவுக்காக நிறுத்துவதும், டாக்டர் கிண்டே மும்பைக்குச் சென்றடையும் முன்பே, பாபாவின் வலி கடுமையாக இருப்பதாக ஆதி அவரது அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் அவருக்குத் தெரிவிக்க அறிவுறுத்தப்படுவதும் தவறாமல் நடந்தது; இருப்பினும், டாக்டர் கிண்டே நேரடியாக மும்பைக்குச் செல்ல வேண்டும், செய்தியைக் கேட்டு உடனடியாக மீண்டும் மெஹராஸாத்திற்கு திரும்பி வரக்கூடாது என்றும் பாபா சுட்டிக்காட்டினார். இது டாக்டரைக் குழப்பத்தில் ஆழ்த்தினாலும், அவர் அறிவுறுத்தியபடி மும்பைக்குச் சென்று அடுத்த வாரம் மெஹராஸாத் திரும்பி வந்தார்.

இவ்வாறு பாபா, டாக்டர் கிண்டேயுடன் விளையாடிக் கொண்டிருந்தார், அவரை பாபாவுடன் மேலும் மேலும் நெருங்கச் செய்தார். கிண்டே மெஹராஸாத்தில் இருந்தபோது, பாபா அவரை இரவில் கூட தனது படுக்கையறைக்கு அழைப்பதுண்டு. உண்மையில், கிண்டே, மண்டலியில் ஒருவராக மாறியது போலவே தோன்றியது, அவர் அந்த அளவுக்கு பாபாவுடன்

நெருக்கமாக இருந்தார். ஒருமுறை பாபா, கிண்டேயிடம் '**பாபாவிடமிருந்து அவருக்கு என்ன வேண்டும்**' என்று கேட்டார். கிண்டே பதிலளித்தார், "உங்களை முழு மனதுடன் நினைவுகூருவதற்கும், நான் வாழும் வரை உங்களுக்காக சேவை செய்வதற்கும் வேண்டிய வலிமையையும், ஆற்றலையும், தைரியத்தையும் எனக்குத் தர வேண்டும் என்பதே எனது ஒரே ஆசை." பாபா அவரது பதிலைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்து, '**நற்குணங்களால் செதுக்கப்பட்ட பழங்கால சிற்பம்**' **அவருக்காக நீண்ட காலம் காத்திருப்பதாகக் குறிப்பிட்டு**, "**நான் ராமை பல்வேறு பிறவிகளில் அறிந்திருக்கிறேன்**" என்று பாபா, மண்டலியிடம் கூறினார்.

கிண்டே, பாபாவின் அன்பால் வெகுவாகத் தாக்கப்பட்டார்; தனது நரம்பியல் மருத்துவ மனையையும், மும்பையின் வசதியான வாழ்க்கையையும் விட்டுவிட்டு நிரந்தரமாக மெஹராஸாத்திற்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கூட இருந்தது. ஆனால் பாபா அவருக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்: "**நோயுற்றவர்களுக்கும் துன்பப்படுபவர்களுக்கும் தொடர்ந்து சேவை செய்யுங்கள், இது எனது சேவை, அதைத் தொடர்ந்து செய்யுங்கள்.**"

ஒருமுறை பாபாவின் தீராத வலியைக் கண்டு, கிண்டே தனது துயரத்தையும் ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தியபோது, பாபா அவரது கரத்தில் அன்பாகத் தட்டி, "**கவலைப்படாதீர்கள். எல்லாமே எனது விருப்பம். எனது வலிக்கான காரணம் எனக்குத் தெரியும், அது ஜூலை மாதத்திற்குப் பிறகு மறைந்துவிடும். அதே வேளையில், நீங்கள் அந்த வலியைக் குறைக்க உங்களால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்**," ஒரு கணம் அமைதியாக இருந்து பின்னர், "**அதை அதிகரிக்க என்னால் இயன்ற அனைத்தையும் நான் செய்வேன்!**" என்றார்.

மண்டலியின் உதவியற்ற நிலையை உணர்ந்து அவர்கள் கிண்டேயிடம், "நீங்கள் வெற்றிபெறுவீர்கள் என்று நம்புகிறோம், டாக்டர்!" என்று கூறினர்.

1965 பிப்ரவரி இறுதியில், ராம் கிண்டே ஹூஸ்டன் (HOUSTON) நகரில் ஒரு நரம்பியல் மாநாட்டில் கலந்துகொள்வதற்கும், சிகிச்சைக்காக இரண்டு நோயாளிகளை அங்கு அழைத்துச் செல்வதற்கும், இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்றார். புறப்படும் முன்னர், இரவு 10:45 மணிக்கு ஆதியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, பிப்ரவரி 24ஆம் தேதி, இந்தச் செய்தியை பாபாவிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்:

அவதார் மெஹர் பாபா! ஆதி கால, நித்திய, அளவிறுதியற்ற கருணை மிகுந்த, அனைத்திலும் வியாபித்திருக்கும் இறைத்தந்தையே! எல்லா மகிமையும் உமக்கே உரித்தாகட்டும். உமது சேவையில் என்றென்றும் என்னை அற்பணிப்பதன் மூலம், காலந்தாழ்த்தாமல், உங்களின் ஓர் அங்கமாக என்னை வைத்துக்கொள்ள பிரார்த்தனை செய்கிறேன்.

பிப்ரவரி 25ஆம் தேதி தொலைத்தந்தி மூலம் அனுப்பப்பட்ட பாபாவின் அன்பான பதில்: "**நான் ராம், நீங்களும் ராம். அதாவது நீங்கள் பண்டைய**

**சிற்பத்தின் ஒரு துண்டு. உங்களுக்கும் உங்கள் மனைவி மற்றும் குடும்பத்தினருக்கும் எனது அன்பும் ஆசிகளும்.**"

ஃபிரீனி, தாரா, ஷிரீன் ஆகியோர் 1965 பிப்ரவரி 21 அன்று மெஹராஸாத்திற்கு வந்தனர். 23ஆம் நாள், புர்ஜர் மேத்தா, அஹமதுநகர் அக்பர் பிரஸ்ஸில் பாபாவிற்கு, அன்பான அனைவரிடமிருந்தும் பிறந்தநாள் வாழ்த்துகளை வழங்கினார்.

ஜனவரி மாத இறுதியில், பாபாவிடமிருந்து கீழ்வரும் இந்தச் செய்தி (1964 டிசம்பர் 18 அன்று அவரால் எடுத்துரைக்கப்பட்டது), அவரது 71ஆவது பிறந்தநாளுக்காக அனைத்து அன்பர்களுக்கும் அனுப்பப்பட்டது:

**நான் உங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருங்கள் மற்றும் என்னை முழு மனதுடன் நினைவில் கொள்ளுங்கள். உங்களுக்கு என் அன்பும் ஆசிகளும்.**

பிப்ரவரி 22ஆம் தேதி, அவர் தனது நியூஸிலாந்து (NEW ZEALAND) அன்பர்களுக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**எனது பிறந்தநாளுக்காக என் அன்பில் ஒன்றுகூடி இருக்கும் உங்கள் அனைவருடனும் நான் இருக்கிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பை வழங்குகிறேன்.**

அவரது பிறந்த நாளான 1965 பிப்ரவரி 25 வியாழன் அன்று, கிழக்கத்திய நாடுகளில் அமைந்த அனைத்து மையங்களுக்கும் தொலைத்தந்தி மூலம் மற்றுமொரு செய்தி அனுப்பப்பட்டது:

**ஆன்மீகப் பாதை மற்றும் இறுதி இலக்கு குறித்த அனைத்து வாய்மொழிகளும், கண்பார்வையற்ற மனிதன் கையில் ஏந்திச் செல்லும் விளக்கு போன்றது. கண்பார்வையற்றவனுக்கு கையில் ஊன்றுகோல் தேவைப்படுவது போல், இறைவனைத் தேடும் ஒருவருக்கு இறை-மனிதனின் கரங்கள் தேவை.**

ஜபல்பூர் நகரில் 'காட்-மேன்' (GOD-MAN) எனும் இதழ் - மாதம் இருமுறை வெளியீட்டிற்காக, பாபா இந்தச் செய்தியை தொலைத்தந்தி மூலம் அனுப்பிவைத்தார்:

**உங்களால் நேசிக்க முடியாதவர்களை நீங்கள் நேசிக்கத் தொடங்கினால், நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் நீங்கள் என்னை நேசிக்கத் தொடங்குகிறீர்கள்.**

பிப்ரவரி தொடக்கத்தில், ஸரோஷ், விலூ இருவரையும் பாபா மெஹராஸாத்திற்கு அழைத்து, கொவ்வூரில் அமைந்த மெஹர்ஸ்தானுக்கு தனது பிரதிநிதிகளாக அவர்களை அனுப்புவதாகவும், அங்கு எதிர்வரும் 25ஆம் தேதி காலை விருந்தினர் மாளிகை ஒன்று திறக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

பிப்ரவரி 25ஆம் தேதி மெஹராஸாத்திற்கு, பேகம் அக்தர் காலை 11:30 மணிக்கு மெஹர்ஜியுடன் வந்தார். மெஹர் பாபாவின் பிறந்தநாளை முன்னிட்டு, அஹமதுநகர் மையம் ஏற்பாடு செய்திருந்த பொது இசைநிகழ்ச்சியை வழங்குவதற்காக, அஹமதுநகருக்கு வருகை தந்த அவர், பாபாவுக்காக சில கஸல்களைப் பாட விரும்பினார். நெடுந்தூரப் பயணம், பரபரப்பான நிச்சயதார்த்த விழாவில் இசைநிகழ்ச்சி அனைத்தையும் நிறைவு செய்து, களைப்பாக இருந்தாலும், அவர் அருமையாகப் பாடினார். அஹமதுநகரைச் சேர்ந்த கவிஞர் அஃப்ஸர் ஸீமானி (AFSAR SEEMANI), பாபாவின் மகிமையைப் புகழ்ந்து ஒரு கஸலை இயற்றினார், அதை பேகம் அக்தர் வாசித்து, தன்னிச்சையாகப் பாடத் தொடங்கினார்.

பின்பு பாபா அவரிடம், “**உங்கள் பாடல்கள் எனக்கு மிகச் சிறந்த பிறந்தநாள் பரிசு. உங்கள் குரல் ஈடு இணையற்றது**” என்று கூறினார்.

அதற்கு பேகம் அக்தர், “அனைத்தும் உமது அருளே அன்றி, வேறு ஒன்றுமில்லை பாபா” என்று பதிலளித்தார்.

பேகம் அக்தர் எவ்வளவு சோர்வாக இருக்கிறார் என்ற கவலையை வெளிப்படுத்தி பாபா, “**இன்று மதியம் ஓய்வெடுங்கள்**” என்று கூறினார்.

கண்ணீர் நிரம்பிய கண்களுடன், “உங்கள் காலடியில்தான் எனது ஓய்வு” என்றார்.

அன்று இரவு, அஹமதுநகர் காந்தி மைதானத்தில் 7,000 பேர் ஒன்றுதிரண்ட கூட்டத்திற்கு முன்னால் பேகம் அக்தர் அவரது இசைநிகழ்ச்சியை நடத்தினார், மேலும் பாபாவின் வாழ்க்கை மற்றும் செய்தியை புக்கார் விவரித்தார்.

அன்றைய தினம் மெஹராஸாத்திற்கு வந்த பிற பாபா-அன்பர்களில் கோர்ஷெத், அர்னவாஸ், நரிமன், ஆதி ஜூனியரின் குடும்பத்தினர் அடங்குவர். குலாப்தாஸ், ராட்டிலால் பாஞ்சால் ஆகியோர் 26ஆம் தேதி மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தனர். யஷ்வந்த் ராவையும் ஆதி அழைத்து வந்தார்.

மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழா, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வேறுவேறு மையங்களில் பல்வேறு வழிகளில் நடத்தப்பட்டன. ஏழைகளுக்கு உணவு வழங்குதல், பஜனை-கீர்த்தனை நிகழ்ச்சிகள், மாபெரும் ஊர்வலங்கள், கண்காட்சிகள், நாடகங்கள், சொற்பொழிவுகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் இந்த விழாவைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டன. மஸூலிப்பட்டினத்தில் பாபா-அன்பர்கள், பாபாவின் பெயரில் இலவச மருத்துவ மருந்தகத்தைத் திறந்து வைத்தனர். பாபா தொலைத்தந்தி மூலம் கீழ்வரும் செய்தியை வழங்கினார்: “**எனக்கு உணவளித்து, எனக்கு உடை உடுத்தி, ஏழைகளில் என்னை மனம்விரும்பி பராமரிக்கவும்.**”

ஹைதராபாத்தில், இறை-மனிதனின் 71ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 71 நாட்கள் தொடர் நிகழ்ச்சிகள், 1964 டிசம்பர் 17

அன்று தொடங்கி, 1965 பிப்ரவரி 25ஆம் தேதி வரை நடந்தது. பாபா அவர்களுக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**உங்களுக்கும் ஹைதராபாத் மற்றும் ஸெக்கந்திராபாத்தில் வாழும் என் அன்பர்கள் அனைவருக்கும் என் அன்பையும் ஆசீர்வாதத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன், உங்களின் ஒவ்வோர் 71 நாட்களின் நிகழ்ச்சிகளும் என் அன்பெனும் மரத்தின் மலர்களாக இருக்கட்டும்.**

காக்கிநாடாவில் ஒன்றுகூடிய அன்பர்களுக்கு, பாபா கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**உங்களுக்கும் காக்கிநாடா மற்றும் பிற இடங்களில் வாழும் அனைத்து அன்பர்களுக்கும் எனது 71வது பிறந்தநாளை முன்னிட்டு, உங்கள் நிகழ்ச்சியின் 71 நாட்களும் 'என் அன்பெனும் பூங்கா பூத்துக்குலுங்கட்டும்' எனும் அன்பு ஆசிர்வாதத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

அன்று பாபா, தெய்வீக மதுபான சத்திரத்தின் கதவைத் திறந்து, தன் அன்பர்களுக்காக மதுவை ஏராளமாக ஊற்றிக் கொண்டிருந்தார் என்று காலம் அவதானித்தது போலத் தோன்றியது. ஆயினும்கூட, அன்பிற்குரியவர் கதவுகளை அகலமாகத் திறந்து, அவரது துன்பத்திலும், தமது அன்பர்களை இறை அன்பின் மதுபானத்தை அருந்தி, இறை போதையில் இருக்கவும் அனுமதித்தார். அவருடைய இந்தக் கருணையை எப்பொழுதேனும் ஆழங்காண முடியுமா? மனிதகுலத்தை மீட்பதற்காக அவரது கழுத்தைச் சுற்றியுள்ள உலகளாவிய துன்பத்தின் முச்சந்தி இது. அவருடைய கருணையை எவராலும் புரிந்து கொள்ள முடியாது. அவர் இரக்கத்தின் மொத்த உருவாகவும், அன்பின் முழு ரூபமாகவும் இருந்தார்; மேலும் அவரது உலகளாவிய துன்பம், அவரது கருணை, அன்பு எனும் நீரோடை வழியாகப் பாய்ந்தோடியது.

1965 பிப்ரவரி 28 அன்று மே மாத தரிசன நிகழ்ச்சி குறித்த திட்டத்தை பாபாவுடன் விவாதிக்க பூனா சேவகர்கள் அழைக்கப்பட்டனர். மெஹர்வான் ஜெஸவாலா அன்று பூனா திரும்பினார். விலூ, ஸரோஷ் இருவரும் ஆந்திராவின் மெஹர்ஸ்தானிலிருந்து அஹமதுநகர் திரும்பிய பிறகு, பாபா அவர்களையும் உஷா குல்கர்னியையும் மார்ச் 3 அன்று மெஹராஸாத்திற்கு அழைத்தார். அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளைப் பற்றிய விபரங்களைக் கேட்டு பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவர்கள் வழங்கிய விபரங்களின் இறுதியில், ஸரோஷ் சிரித்துக்கொண்டே கூறினார்: "காலப்போக்கில் ஆந்திரப் பிரதேசம், மெஹர் பிரதேசம் என்று அழைக்கப்பட்டால் நான் ஆச்சரியப்பட மாட்டேன்!"

கணக்கியல் தேர்வில் வெற்றியடைந்த உஷாவிடம், பாபா இவ்வாறு கூறினார்: "**உங்கள் பாடல்களைக் கேட்டு நான் மகிழ்ந்தேன்; இனிமையான குரல் வளம், எனவே உங்கள் இசைப் பயிற்சியைத் தொடருங்கள். எனது அருட்பார்வை உங்கள் மீது இருக்கும்.**"

ஃபிரீனி, தாரா, ஷிரீன் ஆகியோர் மறுநாள் காலை பாபாவை சந்தித்து, 5ஆம் தேதி இங்கிலாந்து திரும்பிச் செல்ல மும்பைக்குச் சென்றனர்.

1965 மார்ச் 7 ஞாயிறு அன்று, ஹோஷங் பரூச்சா, டாக்கே அவரது மனைவி மூவரும் பாபாவிடம் தங்கள் சமீபத்திய விரிவுரை சுற்றுப்பயணம் குறித்த அறிக்கைகளை வழங்கினர்.

அன்று, பாபா அவரது கிழக்கத்திய அன்பர்களுக்கு ஆதி மூலமாக, பின்வரும் சுற்றறிக்கையை வெளியிட்டார்:

**அவதார் மெஹர் பாபா, அவரது உடல்நிலை மிகவும் பலவீனமாக இருந்தாலும், 1965 மே 1 முதல் 6 வரை, ஆறு நாட்கள் மட்டுமே பூனாவில் தரிசனம் வழங்கப்போவதை அவரது கிழக்கத்திய அன்பர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துமாறு எனக்கு அறிவுறுத்துகிறார்.**

**மெஹர் பாபா கூறுகையில், அவரது உலகளாவிய பணி பல மடங்கு அதிகரித்துள்ளது, அதே வேளையில் அவரது உலகளாவிய துன்பமும் அதற்கேற்ப அதிகமாகி உள்ளது; இது இப்போது அவரது உடல் ஆரோக்கியத்தில் அதன் முழுமையான தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. ஆனால், பாபா மேலும் கூறுகிறார்: "நான் எனது மௌனத்தைக் கலைத்த அடுத்த ஒரு வருடம் வரை, நான் இந்த உடலைத் துறக்க மாட்டேன். மனிதகுலத்திற்கு எனது துன்பத்தை விட மகிமையானது வேறு என்ன இருக்க முடியும்!"**

**இடுப்புப் பாகத்தில் தொடர்ச்சியான வலி மற்றும் சுதந்திரமாக நடக்க இயலாத சூழ்நிலையைத் தவிர, பாபாவிற்கு கடந்த பல மாதங்களாக, தோள்பட்டை மற்றும் முதுகுத்தண்டில் வலி இருந்து வந்தது; அண்மைக்காலமாக அந்த வலி தீவிரமானது.**

**மே மாதத்தில் பாபா தரிசனம் வழங்கவே கூடாது என்பது, சமீபகாலமாக பாபாவை சந்தித்து வரும் மருத்துவர்களின் கருத்து. அவ்வாறு இருந்தபோதிலும், பாபா தன் அன்பர்களுக்கு தரிசனம் வழங்க விரும்புகிறார். எனவே, பாபாவின் கழுத்தில் தற்செயலாக ஏற்படும் அசைவுகளைத் தவிர்ப்பதற்காக, தரிசனத்தின் நாட்களையும் நேரத்தையும் கட்டுப்படுத்துமாறும், அவரது அன்பர்கள் அவரை மிக நெருக்கமாக அணுக அனுமதிக்கக்கூடாது என்றும் மருத்துவர்கள் பாபாவிடம் வலியுறுத்திக் கூறினர்.**

சுற்றறிக்கையில் தரிசன நிகழ்ச்சிகளுக்கான அட்டவணை கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. பாபாவுடன், தனிப்பட்ட முறையில் நேர்காணல் நிகழ்த்தவோ, கேள்வி கேட்பதற்கோ, அவரை அரவணைப்பதற்கோ வழக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குருபிரசாத்தில் தரிசன நிகழ்ச்சி காலை 9:00 முதல் 11:00 மணி வரை, இரண்டு மணி நேரம் மட்டுமே நிகழ்த்த முடிவு செய்ததால், பாபாவும் எந்த விசேஷமான இசை நிகழ்ச்சிகளையோ அல்லது பிற பொழுதுபோக்குகளையோ ஏற்பாடு செய்வதை விரும்பவில்லை.

**1965** மார்ச் **16** அன்று காலை டான் ஸ்டீவன்ஸ், மெஹர்ஜி இருவரும் ஜோஸஃப் ஹார்பின் காரில், சில மணிநேரம் மெஹர் பாபாவை சந்திக்க மெஹராஸாத்திற்கு வந்தனர். பாபா அந்த நேரம் வரை மண்டபத்திற்கு வராததால், டான் முதலில் எரச்சை அவரது அறையில் சந்தித்தார். இந்த நேரத்தில் வியட்நாம் போர் தீவிரமடைந்து வந்தது; செய்தித்தாள்களிலிருந்து சில நேரங்களில் பாபாவிற்கு அது குறித்த தலைப்புச் செய்திகள் வாசிக்கப்பட்டன. முதன்மையான வடக்கு ஹைஃபாங் (HAIPHONG) துறைமுகத்தில் அமெரிக்கா குண்டு வீச வேண்டுமா என்ற கேள்வி எழுந்தபோது, பாபா வியட்நாம் மக்களின் துணிச்சலைப் பாராட்டி, ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார், "**அமெரிக்கா ஏன் குண்டுகளை வீசக்கூடாது?... அவர்கள் சீனா மீது ஏன் குண்டு வீசவில்லை?... ஏன் அணுகுண்டுகள் கூட போடக்கூடாது?**"

டான் ஸ்டீவன்ஸ் பதிலளித்தார், "ரஷ்ய மற்றும் சீன கம்யூனிஸ்டுகளின் படைகள் ஒன்றிணைவதைத் தடுப்பதே அமெரிக்க வெளியுறவுத்துறையின் சிந்தனை என்று நான் நம்புகிறேன்."

பாபா அவரது கைகளை ஒன்றாக இணைத்து, பின்னர் அவற்றைப் பிரித்து, "**அவை ஒன்றாக இணையாது**" என்று பதிலளித்தார்.

மேலும் அவர் குறிப்பிட்டார், "**சீனக் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தில் நல்லவர்கள் அல்லாத பலர் இருந்தாலும், மாவ் ஸே-துங்** (MAO TSE-TUNG), **மிகவும் நல்ல இதயம் படைத்தவர், உண்மையிலேயே ஓர் இலட்சியவாதி. இருப்பினும், அவரை சூழ்ந்துள்ளவர்களில் பலர் வெவ்வேறு திறன் படைத்தவர்கள்.**"

பாபா, நயம்பட சொற்களை உச்சரிப்பது போல் எடுத்துரைத்தார்: "**மாவ்-சௌ... சௌ-மாவ்!**" 'மாவ் ஸே-துங் இடங்களை (அல்லது ஒருவேளை மக்களையும்) விழுங்குவார் என்றும், அதற்கு மாறாக, அவரே விழுங்கப்படுவார்' என்றும் பாபா குறிப்பிடுகிறார் என்று எரச் விளக்கினார்.

"**இது ஒரு நல்ல திட்டம்**" என்று பாபா கருத்துரைத்தார்.

மேலும், "**மாவ் ஸே-துங் நல்ல மனிதர் என்றாலும், ஸ்டாலினின் இதயம் மிகவும் தீயது, உலகிற்கு பெரும் தீங்கு விளைவித்தது**" **மேலும்** "**ரஷ்யா உலகில் தீமைக்கும், தவறுக்கும் மிகப்பெரிய தூண்டுதலின் சக்தியாக உள்ளது**" என்றும் பாபா கூறினார்.

டான் ஸ்டீவன்ஸ், ஸுஃபிக்கள் மற்றும் பிறர் கேட்டுக்கொண்டிருந்த 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தில், பல்வேறு விஷயங்களைப் பற்றிய சில கேள்விகளைக் குறித்து விவாதித்த வேளையில், பாபா இரண்டாம் பதிப்பிற்காக அவற்றைத் தெளிவுபடுத்துவதாக உறுதியளித்தார். பாபா மேலும் கூறினார், "'**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **புத்தகத்தின் புதிய பதிப்பு வெளியிடப்படும் வரை, நான் எனது மௌனத்தைக் கலைக்க மாட்டேன்.**"

டான் ஸ்டீவன்ஸ், எரச்சின் அறையில் அமர்ந்திருந்தபோது, மணி அங்கே வந்து, "டான், நீங்கள் இங்கு வந்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன், பாபா

உங்களுக்காக ஓர் அன்பளிப்பை வழங்கியுள்ளார்," என்று கூறி, திரும்பிச் சென்று சில நிமிடங்களுக்குப் பின்னர், ஒரு மணிலா உறையை கையில் ஏந்தி வந்து, "திறந்து பாருங்கள்" என்றார். உள்ளே பாபா நீண்ட காலமாகப் பயன்படுத்திய, கைத்தையல்களால் ஒட்டு போடப்பட்ட சத்ரா ஒன்று இருந்தது.

மணி, டானிடம், "ஜனவரி 14 (1965) அன்று மாலை, பாபா படுக்கை அறைக்குச் சென்ற போது, அவர் இந்த சத்ராவை அகற்றி, மெஹராவிடம் கொடுத்து, '**டானுக்காக இதை சேமித்து, அடுத்த முறை வரும்போது அவருக்குக் கொடுங்கள்**'" என்று சுட்டிக்காட்டினார்.

மண்டலி மண்டபத்தில், பாபாவை வணங்கி, டான், "பாபா, நான் உங்கள் சத்ராவைப் பெற்றுக்கொண்டேன், அது என் இதயத்தை எவ்வளவு ஆழமாகத் தொட்டது என்பதை என்னால் சொல்ல முடியாது. அதற்கு நான் உங்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன்" என்றார்.

டான் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் பேசத் தொடங்கியபோது, பாபா மிகவும் மகிழ்ச்சியாகத் தோன்றினார், ஆனால் நான் எனது பேச்சை நிறைவுசெய்த வேளையில், அவர் அந்த அளவுக்கு மகிழ்ச்சியாகத் தென்படவில்லை."

அவர் அங்கிருந்த கடைசி நேரத்தில், டான் ஸ்டீவன்ஸ் மீண்டும் பாபாவின் வழக்கமான அன்பு மற்றும் கருணை மழையில் நனைந்து கொண்டிருந்தார்; பாபா வழங்கிய அன்பளிப்பான சத்ராவை நினைவுகூர்ந்து, இரண்டாவது முறையாக அவருக்கு நன்றி தெரிவித்தார்: "பாபா, உங்கள் அழகான சத்ராவிற்கும், அதனுடன் நீங்கள் அனுப்பிய அற்புதமான அன்பிற்கும் மீண்டும் நன்றி கூற விரும்புகிறேன்" என்றார்.

பாபா சற்று சீற்றத்துடன் காணப்பட்டதாகத் தோன்றியது, ஆனால் எதுவும் கூறவில்லை. அவர் டான் ஸ்டீவன்ஸிடம் விடைபெற்று மண்டபத்தை விட்டு வெளியேறிய பின்பு, டான், எரச்சிடம் வினவினார், "இது எனது கற்பனையா அல்லது நான் சத்ராவிற்காக நன்றி கூறியபோது பாபா என் மீது கோபமுற்றாரா?"

எரச் உடனே, "உங்களுக்குப் புரியவில்லையா, டான்?" என வினவ,

"இல்லை, பாபாவின் அன்பளிப்பு என்னை மிகவும் ஆழமாகத் தொட்டது, அதற்காக அவருக்கு நன்றி சொல்ல விரும்பினேன்" டான் கூறினார்.

எரச் விளக்கினார், "நீங்களே உங்களுக்கு எப்படி நன்றி கூற முடியும், டான்?"

அவதார புருஷர் தன்னுடனே இருக்கும் அடையாளக் குறிப்பின் ஆழம் குறித்து, டான் ஸ்டீவன்ஸுக்கு இது மிகப் பெரிய, உள்ளார்ந்த பாடமாக இருந்தது. டான், பாபாவிடமோ அல்லது எந்த ஒரு மண்டலியிடமோ சொல்லாதது என்னவெனில், ஜனவரி 14 உண்மையில் அவருடைய பிறந்த நாள்.

1965 மார்ச் 17 அன்று நரிமன் மெஹராஸாத்திற்கு வந்தார்; பாதிரியும் தனது வழக்கமான வருகையை மேற்கொண்டார். இரண்டு நாட்களுக்குப் பின்னர்

19ஆம் தேதி, ஸர் அந்தோனி புரூக் (ANTHONY BROOKE, 53) என்ற எதிர்பாராத பார்வையாளர் ஒருவர் வந்தார். ப்ரூக் ஒரு முக்கிய பிரிட்டிஷ் பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்தவர், மேலும் 'ஸராவக்' (SARAWAK, மலேஷிய பகுதியின் ஒரு மாகாணம்) பிராந்தியத்தின் மன்னராக ஓராண்டுக்கு நியமிக்கப்பட்டார். ப்ரூக் ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்டிருந்தார் மற்றும் இங்கிலாந்தில் வாழும் பாபா-அன்பர் மாட் கென்னடி (MAUD KENNEDY) மூலமாக பாபாவைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டார்.

அரபிந்தோ மற்றும் ரமண மஹரிஷி போன்ற பல்வேறு துறவிகளின் ஆசிரமங்களுக்குச் சென்று இந்தியாவில் பயணம் செய்யும் எண்ணத்தில் இருந்தார்.

ப்ரூக் ஒரு குதிரை வண்டியில் குஷ்ரு குவார்ட்டர்ஸ் வந்தடைந்தார். முக்கியமான ஆங்கிலேய அதிகாரியின் தோற்றத்தில் ஒருவர் வருவதைக் கண்டு ஆதி ஆச்சரியமடைந்தார். பணிவுடன் அந்த மனிதர் பாபாவைப் பற்றிக் கேட்டு, பின்னர் அவர், "எனது கடிதம் வந்ததா?" என்று விசாரித்தார். கடிதம் எதுவும் வரவில்லை. ஆனால், அன்று காலை பிம்பல்காவ்ம் முகவரிக்கு வந்த கடிதம் அவர் எழுதியது என்பது தெரியவந்தது.

பாபா ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதை விளக்கிய ஆதி, வந்தவரிடம் அவர் யார் என்று விசாரித்தார். "நான் ஸராவக் பிராந்தியத்தை சேர்ந்தவன்" என்று ப்ரூக் பதிலளித்தார். "நான் ஸராவக் மாகாணத்தின் மன்னன். மெஹர் பாபாவைப் பார்க்கவே வந்திருக்கிறேன்."

இதற்கிடையில், ப்ரூக்கின் கடிதம் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்ட போது, ப்ரூக்கை அழைத்து வர அனுமதியளித்து, ஆதிக்கு ஒரு குறிப்பு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, அவர் காலை 11:00 மணிக்கு மெஹராஸாத் அழைத்துவரப்பட்டார். ப்ரூக் மண்டலி மண்டபத்தில் நுழைந்ததும், பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார்; பாபா அவரைத் தழுவி சிறிது நேரம் அவருடன் உரையாடினார்.

ப்ரூக் தனது சந்திப்பைப் பற்றி இவ்வாறு நினைவுகூர்ந்தார்: "அந்த நேரத்தில் அன்பின் சக்தியால் நான் வெகுவாக ஈர்க்கப்பட்டேன், உள்ளே வந்ததும், நான் பாபாவின் கைகளை நோக்கி நேராகப் பாய்ந்தேன். சில வார்த்தைகள் பரிமாறப்பட்டன; இதுவரை மட்டுமே என்னால் நினைவுகூர முடிகிறது. பாபா மிகவும் பலவீனமாக இருந்தார்; அவர் முன்னால் சில நிமிடங்கள் அமர்ந்து, நான் திரும்பிச் சென்றேன்."

அன்றிரவே ப்ரூக் மும்பைக்கு ரயிலில் புறப்பட்டார். பின்னர் அவர் மாட் கென்னடிக்கு இவ்வாறு எழுதினார்: "அன்பான பாபாவுடனான சந்திப்பு வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. இது மிகவும் குறுகிய நேரத்திற்காக இருந்தாலும், அனைத்தும் அதில் இருந்தது. அவர் தூய தெய்வீக அன்பின் மொத்த ரூபம்."

ரமா, மெஹர்நாத், ஷீலா ஆகியோர் 1965 மார்ச் 21 ஞாயிறு அன்று மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டபோது, வாமன் அவர்களுடன் வந்தார். அதே நாள் காலை, பூனாவிலிருந்து ஜெஹாங்கு, ஷெரூ இருவரும் வந்தனர். மெஹராஸாத்தில் தங்கியிருந்த நரிமன் அன்று மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். 25ஆம் தேதி பாபாவை சந்திக்க மன்ஸாரிக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

டாக்டர் கிண்டே 1965 பிப்ரவரி மாத இறுதியில் அமெரிக்காவிற்கு நரம்பியல் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார்; ஆனால் வெகு தொலைவில் இருந்தாலும், பாபாவின் தொடர் வலியைக் குறித்து அறிவுரை கூறி, கடிதங்கள் மற்றும் தொலைத்தந்திகளை அனுப்பினார். மார்ச் 26 அன்று இந்தியாவிற்குத் திரும்பி வந்த அடுத்த நாள் மெஹராஸாத்திற்கு வந்து பாபாவைப் பரிசோதனை செய்து, டாக்டர் கோஹெர் மற்றும் டாக்டர் டானுடன் அவரது சிகிச்சையைக் குறித்து விவாதித்தார். வழக்கம் போல் இரவு அங்குத் தங்கினார்.

# பூனா - தரிசனம்

**(Darshan in Poona)**

1965 மார்ச் 30 செவ்வாய்க்கிழமை அதிகாலையில் மெஹராஸாத்திலிருந்து குருபிரசாத்தை நோக்கி பாபா, ஆண், பெண் மண்டலியுடன் புறப்பட்டார். இரண்டு நாட்களுக்கு முன்பு, விளையாட்டுப் பயிற்சியின் போது ஆதியின் கணுக்கால் சுளுக்கிக்கொண்டதால், இம்முறை பாபா மற்றும் மண்டலியை ஸரோஷ் காரில் அழைத்துச் சென்றார். வாமன் ஆதியின் காரையும், ஓட்டுநர் ஷேக் ஸ்டேஷன் வேகனையும் ஓட்டிச் சென்றனர். அஹமதுநகர் அன்பர்கள் எவரும் இம்முறை பாபாவின் கார் கடந்து செல்லும் வேளையில் அவரை வரவேற்க சாலையில் காத்திருக்க அனுமதிக்கப்படவில்லை. காக்கா பாரியா உடல்நலம் சீரின்றி, இதயம் மற்றும் இதர பிரச்சினைகளால் அவதியுற்றார்; எனவே, பாபா கோடையில் இல்லாத காலகட்டத்தில் பாதிரி அவருடன் மெஹராஸாத்தில் தங்கவேண்டிய சூழ்நிலை; இந்த ஏற்பாடு இறுதி வரை நீடித்தது.

குருபிரசாத்தில் பயன்படுத்தும் விதத்தில் மெஹர்வான் ஜெஸவாலா, டாக்டர் கோஹெரின் அறிவுறுத்தலின்படி, பாபாவின் வசதிக்காக வடிவமைத்து, உருவாக்கிய பிரத்யேக மடிப்புக் கழிவறை இருக்கையை அவருக்கு வழங்கினார். பாபா இந்த இருக்கையைப் பயன்படுத்துவதில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

பாபா பூனாவிற்கு வந்த பிறகு, பணியாட்கள் குருபிரசாத்தின் பின்னால் ஒரு பெரிய பந்தலை எழுப்பி மேடையை கட்டத் தொடங்கினர். பெண்டுவின் உதவியுடன் அனைத்து பணிகளையும் ஷிண்டே கண்காணித்து வந்தார். ராமகிருஷ்ணன், பவ்ஸார், துரேக்கர் ஆகியோர் இந்தியா, பாகிஸ்தான், ஈரான், ஏதன் போன்ற நாடுகளின் பல்வேறு பகுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஆயிரக்கணக்கான அன்பர்கள், பல கல்வி நிறுவனங்கள், விடுதிகள், தர்மசாலைகள், ஹோட்டல்கள், மற்றும் திருமண மண்டபங்களில் தங்குவதற்குத் தேவையான அனைத்தையும் செய்தனர். அனைத்து ஏற்பாடுகளைக் பற்றிய கடிதப் பரிமாற்றம் வெகுவாக அதிகரித்தது, பாபா மிகுந்த வேதனையில் இருந்தபோதிலும், அவர் கடிதங்களுக்கு செவிமடுத்து, பதில்களுக்கான வழிமுறைகளை வழங்கத் தவறவில்லை. நீண்ட நேர ஓய்வு மற்றும் கழுத்தின் அசைவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம், முதுகுத்தண்டின் அழுத்தத்திலிருந்து விடுபடுவது ஒன்றுதான் பாபாவின் கழுத்து வலியைத் தணிப்பதற்கான இன்றியமையா தேவை; ஆனால் இதுவே பாபா ‘கடைசியாக’ச் செய்யும் ஒன்றாக இருக்கும்! அவர் தன்னைச் சுற்றியிருக்கும் அன்பர்களின் வேண்டுகோள்களுக்கும் அறிவுரைகளுக்கும் செவிசாய்ப்பதே இல்லை.

இஸ்ரேல் (ISRAEL) தேசத்தில், கேரி பென் ஷம்மாயின் (CARRIE BEN SHAMMAI) கணவர் (மொழியியல் அறிஞர்) பாபாவின் சில சொற்பொழிவுகளை ‘மெஹர் பாபா கூறுகிறார்’ (MEHER BABA SAYS) என்ற தலைப்பில் ஹீப்ரு (HEBREW) மொழியில்

புத்தகமாக மொழிபெயர்த்தது, ஜெருஸலேம் (JERUSALEM) நகரில் வெளியிடப்பட்டது; பாபா கேரிக்கு, கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார் (பின்னர் அந்த புத்தகத்தின் நகல் ஒன்றும் கையொப்பமிட்டு அனுப்பப்பட்டது): **"'மெஹர் பாபா கூறுகிறார்'** (MEHER BABA SAYS) **புத்தகம் என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. உங்களுக்கும் உங்கள் கணவருக்கும், இஸ்ரேல்வாழ் என் அன்பர்கள் அனைவருக்கும் என் அன்பையும் ஆசிகளையும் வழங்குகிறேன்."**

1965 ஏப்ரல் 3 அன்று பாபாவின் இரத்த அணுக்கள் எண்ணிக்கையை டாக்டர் கிரான்ட் சோதனை செய்த மூன்று நாட்களுக்கு பின்னர், இரத்த சர்க்கரை பரிசோதனையும் செய்யப்பட்டது. கழுத்து வலியுடன், பாபாவிற்கு தலைவலியும் ஏற்பட்டது. அந்த நேரத்தில், ஒரு புதிய சிகிச்சை முறை கையாளப்பட்டது; 'டி.எம்.எஸ்.ஓ' (D.M.S.O. - DI-METHYL SULPOXIDE, டை மீதைல் ஸல்ஃபாக்ஸைடு) என்று அழைக்கப்படும் (சர்ச்சைக்குரிய அழற்சி எதிர்ப்பு மருந்து) ஒருவித திரவம், இது பயன்படுத்தப்படும்போது, நரம்பு முனைகளைச் செயலிழக்கச் செய்து, வலியை நீக்குகிறது. டாக்டர் கிண்டே பல நோயாளிகளுக்கு அதை முயற்சி செய்து மிகவும் பயனுள்ளதாக இருப்பதைக் கண்டார்.

1965 ஏப்ரல் 9 வெள்ளிக்கிழமை அன்று, டாக்டர் கிண்டே குருபிரசாத்திற்கு வந்து, டி.எம்.எஸ்.ஓ (DMSO) குறித்து பாபாவிடம் தெரிவித்தார். முதல் முறையாக, பாபா ஒரு புதிய வகை சிகிச்சையை முயற்சிக்க மனமுவந்து ஒப்புக்கொண்டார். டாக்டர் கிண்டே இரண்டு முறை பாபாவின் கழுத்தின் பின்புறம் மற்றும் தோள்பட்டையின் ஒரு சிறிய பகுதியில் சிறிது டி.எம்.எஸ்.ஓ (DMSO) திரவத்தைத் தடவினார். அன்று மாலை, கிண்டே திரவம் தடவிய பாபாவின் முதுகு மற்றும் கழுத்துப் பாகம் சிவந்து வீக்கமடைந்தது. பாபா மிகையாக எரிச்சலெடுப்பதை உணர்ந்தார், மேலும் அந்தப் பகுதி முழுவதும் எரிந்தது போல, பெரிய கொப்புளங்கள் உருவாகின. அது பயங்கரமாகத் தோன்றியது. டாக்டர் கோஹெர் மிகுந்த அச்சத்தை வெளிப்படுத்தி, என்ன செய்வது என்று புரியாமல் திண்டாடினார்; டாக்டர் கிண்டேயும் ஏற்கனவே மும்பைக்குப் புறப்பட்டுவிட்டார். கோஹெர் ஓர் இதமான களிம்பு மற்றும் சில வாழை இலைகளைப் பயன்படுத்தினார், அவை பெரும்பாலும் தோல் அழற்சியை குளிர்விக்கப் பயன்படுத்தப்படுகின்றன. பாபா படுக்கையில் சாய்ந்து கொண்டார் ஆனால் தூங்க முடியவில்லை. முதுகு முழுவதும் எரிச்சலெடுத்ததால் இரவெல்லாம் அவர் ஒரு புறமாகவே சாய்ந்து படுத்திருந்தார். அவரால் ஒரு நாற்காலியில் வசதியாக அமர முடியவில்லை, ஏனெனில் அவர் பின்னால் சாய்ந்த போது, பாதிக்கப்பட்ட பகுதி நாற்காலியின் பின்புறத்தைத் தொட்டு அவரை எரிச்சலடையச் செய்தது.

நான்கு நாட்களுக்குப் பிறகு, நிலைமை மேலும் மோசமடைந்தது. கோஹெர், தொலைபேசியில் தொடர்பு கொண்டதும், இந்த அறிக்கையால் பதற்றமடைந்த டாக்டர் கிண்டே 14ஆம் தேதி குருபிரசாத்திற்கு வந்தார். அவர் சில இதமான களிம்புகளைப் பூசி, பாபாவிடம் மன்னிப்புக் கோரினார்; அதை

பாபாவிற்குக் கொடுப்பதற்கு முன்பு பல நோயாளிகளுக்கு அதை முயற்சித்ததாகவும், இதுபோன்ற பாதகமான எதிர்வினையை சந்திக்கவில்லை என்றும் கூறினார். பாபா அவரிடம், **“இது உங்கள் தவறு அல்ல, நான் இந்தத் துன்பத்தை அனுபவிக்க வேண்டிய கட்டாயம்”** என்று தெரிவித்தார். அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை அறிந்த பாபா, சிகிச்சைக்கு மனமுவந்து ஒப்புக்கொண்டார். பாபா, எப்படித் தெரிந்தே உடல் துன்பங்களைத் தம் மீது எடுத்துக் கொண்டார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. கொப்புளங்கள் முழுமையாக குணமடைய இரண்டு முதல் மூன்று வாரங்கள் ஆனது.

டி.எம்.எஸ்.ஓ (DMSO) திரவம் கழுத்து வலியை 25 சதவிகிதம் குறைக்க உதவியது, ஆனால் அந்த மாத இறுதியில், வலி மறுபடியும் அதன் முழுத் தீவிரத்தை எட்டியது.

டாக்டர் கிண்டே, ஒவ்வொரு வார இறுதியிலும் குருபிரசாத்திற்கு பாபாவைப் பார்க்க வந்தார். ஒரு வருகையின் போது, அவர் உயிர் துறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட ஒரு குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்து, மீண்டும் உயிர்ப்பித்த சம்பவத்தை பாபாவிடம் விவரித்தார் - மேலும் பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரித்ததன் மூலம் இதைச் செய்ததாக அவர் நம்பினார்! ரஷேஷ் வைத்யா (RASHESH VAIDYA) என்ற சிறுவன் மும்பையில் உயரமான கட்டிடத்திலிருந்து விழுந்து, மண்டை உடைந்து, உயிருக்குப் போராடிய நிலையில் இருந்தான். ஆனால் அந்த சம்பவத்தால் உள்ளளவில் வெகுவாக ஈர்க்கப்பட்டு, டாக்டர் கிண்டே, சிறுவனின் உயிரைக் காப்பாற்ற தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார்; மேலும் அவனுக்கு மூளை அறுவை சிகிச்சை செய்வதில் எட்டு மணி நேரம் செலவிட்டார் - ஒவ்வொரு நொடியும் பாபாவை நினைத்து அவருடைய பெயரை உச்சரித்தார். சிறுவனுக்கு சுயநினைவு திரும்பியதும் அவரது உழைப்புக்கு வெகுமதி கிடைத்ததாக கிண்டே நம்பினார்; இதனால் மெஹர் பாபாவின் பெயரில் பொதிந்திருக்கும் சக்தியும் மகிமையும் ஓர் உண்மையான பக்தருக்கு மீண்டும் நிரூபணமானது.

வேறொரு முறை, ஐந்து வயது குழந்தை ஒன்றை டாக்டர் கிண்டேயால் காப்பாற்ற முடியாத சம்பவத்தைக் குறித்தும் பாபாவிற்கு எழுதினார்; அதில், அத்தகைய அப்பாவி குழந்தை ஒன்றின் மரணம் குறித்து மிகவும் வருந்தியதாகக் குறிப்பிட்டிருந்தார். பாபா பதிலளித்தார், **“இதுபோன்ற விஷயங்களால் பாதிக்கப்படவோ அல்லது வருத்தப்படவோ வேண்டாம். நீங்கள், உங்கள் கைகளால் செயல்படும் அறுவை சிகிச்சை கருவிகளைப் போல் இருங்கள். அதற்குப் பிறகு நோயாளிக்கு என்ன நடக்கும் என்பதைக் குறித்து அந்தக் கருவிகள் கவலைப்படுவதில்லை.” வேறு வார்த்தைகளில் கூறுவதானால்: கடவுளின் கருவியாக இருங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு சேவை செய்யுங்கள். விளைவுகளால் பாதிக்கப்படாமல் உங்கள் கடமையைச் செய்யுங்கள், எந்த முடிவையும் அவருடைய விருப்பம் என ஏற்றுக்கொள்ளுங்கள்.**

இந்த நேரத்தில் நியூயார்க் உலக கண்காட்சி (NEW YORKS WORLD'S FAIR) மீண்டும் திறக்கப்பட்டது; 1965 ஏப்ரல் 20 அன்று, பாபா தமது அமெரிக்க அன்பர்களுக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"என்னுடைய 'உலகளாவிய செய்தி'யை** (UNIVERSAL MESSAGE) **வழங்குவதில் புத்துயிர்பெற்ற நம்பிக்கையுடனும், ஆற்றலுடனும் பணியாற்ற ஆசீர்வதிக்கப்பட்ட உங்கள் அனைவருக்கும் என் அன்பு உரித்தாகட்டும்."**

1965 மே மாத தரிசனம் கிழக்கத்திய அன்பர்களுக்கு மட்டுமே என்றாலும், அமெரிக்காவிலிருந்து மூன்று மேற்கத்திய அன்பர்கள் அழைக்கப்பட்டனர்: ஹாரி கென்மோர், பென் ஹேமன் மற்றும் ஜோஸஃப் ஹார்ப். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இளம் தம்பதிகளான பீட்டர் & ஹெலன் ரோவன் (PETER AND HELEN ROVAN) ஆகியோரும் இந்திய தேசத்தை நோக்கி பயணம் செய்தனர். மேலும் பல மேற்கத்திய அன்பர்கள் வர விரும்பினாலும், பாபா அவர்களை டிசம்பர் வரை காத்திருக்குமாறு கூறினார்.

1965 ஏப்ரல் 25 அன்று மும்பை வந்து சேர்ந்த மூன்று மேற்கத்திய அன்பர்களை, டாக்டர் கிண்டே மற்றும் கஜ்வானி சந்தித்தனர். 27ஆம் தேதி மாலை, தாமதமாக ரயிலில் பூனா வந்தடைந்த அவர்களை, மெஹர்ஜி சந்தித்து, அடுத்த நாள் காலை 9:45 மணிக்கு ஒரு மணி நேரத்திற்காக, குருபிரசாத்திற்கு அழைத்து வந்தார். பென் ஹேமன் ஓர் எலும்பு நோயியல் மருத்துவர் (AN OSTEOPATH). பாபா அவரது கழுத்திலிருந்த கடுமையான வலி குறித்து, ஜூலை இறுதி வரை தொடரும் என்று சுட்டிக்காட்டினார். **"மருத்துவர்கள் தங்கள் அன்பின் காரணமாக அதை குணப்படுத்த முயற்சி செய்வதை நான் அனுமதிப்பேன்; ஆனால் அவர்களால் வழங்கப்படும் சிகிச்சை, ஒரு நாளில் மிக மிகக் குறுகிய அளவிலான நிவாரணமாகவே இருக்கும். ஜூலை மாதத்திற்குப் பிறகு, வலி மறைந்துவிடும்."**

மூன்று அமெரிக்க அன்பர்களும் பிற்பகல் 4:00 முதல் 5:00 மணி வரை திரும்பி வர அனுமதிக்கப்பட்டனர்.

ஏப்ரல் மாத இறுதிக்குள் பொது தரிசனத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துவிட்டன, மேலும் பூனா மையத்தில் மிகப் பெரிய ஷாமியானா (அலங்கார விதானம்) அமைக்கப்பட்டது, அங்கு பாபா ஆறு நாள் சகவாச நிகழ்ச்சியைத் தொடங்க இருந்தார். ஆனால் 1965 ஏப்ரல் 30 வெள்ளிக்கிழமை இரவு, பயங்கரமான மின்னல் இடியுடன் பலத்த மழை பொழியத் தொடங்கியது.

புயலின் சீற்றம் சிறப்பாகத் தீட்டப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் சிதறடித்தது. கூடாரம் முழுவதுமாக நனைந்தது. ஆனால் ஒரு மகிழ்ச்சியான விளைவு என்னவெனில், வெப்பமான கோடையில் மழை பொழிந்தது இதமான குளிர்ச்சியைக் கொண்டு வந்தது. உண்மையில், பாபா அவரது அன்பர்கள் கடுமையான வெப்பத்தின் தீய விளைவுகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்

என்பதற்காகவும், அவர் மீது முழுமையாக கவனம் செலுத்துவதற்காகவும் இதைக் கொண்டு வந்ததாகத் தோன்றியது.

ஹமிர்பூரிலிருந்து 1,000 பக்தர்களும், ஆந்திராவிலிருந்து 2,000 பேரும், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஈரானின் பிற பகுதிகளிலிருந்து 3,000 பக்தர்களும் பூனாவை நோக்கி வந்தனர். இதனால், அன்பிற்குரியவர் தங்களுக்கு வழங்கும் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள 6,000 அன்பர்கள் பூனாவில் ஒன்றுதிரண்டனர்.

1965 மே 1 சனிக்கிழமை பொழுது விடியும் முன்னரே அன்பர்கள் பூனா மையத்தில் ஒன்றுதிரளத் தொடங்கினர்; தேனீக்கள் கூட்டை நோக்கிச் செல்வது போல, மையத்திற்குச் செல்லும் பாதையின் இருபுறமும் வரிசையாக நின்று, பாபாவின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தனர். மையத்தின் மண்டபத்தில் 700 பேர் மட்டுமே அமர முடியும் என்பதால் ஒரு பந்தலும் எழுப்பப்பட்டது; அது விரைவில் நிரம்பி வழிந்தது. இதன் விளைவாக, மக்கள் கூட்டம் அருகாமையில் இருந்த சந்துகளையும் கடந்து, சில நூறு அடி தூரத்தில் பிரதான சாலையை நோக்கியும் சென்றது. வழக்கம் போல, பல்வேறு மதங்கள், ஜாதிகள், மொழிகள் மற்றும் அனைத்து தரப்புகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் அங்கே ஒன்றுகூடினர். காலை 7:55 மணிக்கு பாபாவின் கார் வந்தபோது, ஆழ் இதயத்தின் ஒருமித்த குரலுடன் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' கோஷங்கள் விண்ணைப் பிளந்தன.

ஷேக் ஓட்டி வந்த பாபாவின் டிஸோட்டோ (DeSOTO) பூனா மையத்தின் நுழைவாயிலில் நின்றது, பாபா வெளியே வந்து, தூக்கு நாற்காலியில் அமர்ந்தார். குருபிரசாத்திலிருந்து, ஷாந்தாதேவி, ஆதி இருவரும் பாபாவுடன் பின் இருக்கையிலும், எரச்சும் ஃபிரான்சிஸும் முன் இருக்கையில் அமர்ந்திருந்தனர். மெஹர்ஜி, ஆதி இருவரும் தூக்கு நாற்காலியின் முன் கைப்பிடிகளையும், எரச் தனியாக பின்பக்கத்திலிருந்தும் தாங்கிக்கொண்டனர். பாபா மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, அவர் மேடையில் நின்று கைகளை உயர்த்தி, கூட்டத்தினரை வாழ்த்தியபோது, மக்களின் ஒருமித்த குரல் எங்கும் ஒலித்தது. ஆரவாரம் அடங்கியதும், பாபா தனது இருக்கையில் அமர்ந்தார். மண்டபத்தின் ஒவ்வோர் அங்குல இடத்திலும் அன்பர்கள் அமர்ந்திருந்தனர், எஞ்சியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் அன்பிற்குரிய பாபாவைக் காண கதவுகள் மற்றும் ஜன்னல்கள் அருகே குவிந்தனர்.

பூனா மெஹர் பாபா மையத்தின் சார்பில் சதாஷிவ் பாட்டீல், பாபாவிற்கு சந்தன மாலையை அணிவித்து, வருகை தந்ததற்காக நன்றி தெரிவித்தார். பிரசாதம் அடங்கிய பெட்டிகளை ஷிண்டே மற்றும் காம்ப்ளே மேடையில் கொண்டு வரவே, பாபா அவற்றைத் தொட்டு ஆசீர்வதித்தார். தரிசனம் செய்து வெளியேறும் வாயிலில் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது. மேடையில், எரச் பாபாவின் வலதுபுறம் நின்றார், மஹாராணி ஷாந்தாதேவி அவரது இடதுபுறத்தில் அமர்ந்திருந்தார். மெஹர்ஜி, ஹோஷங் பரூச்சா, ஆதி ஆகியோர் பாபாவின் பின்னால் நின்று கொண்டிருந்தனர்.



பூனா மையம் (POONA CENTER),1 மே (MAY) **1965**



பூனா மையம் (POONA CENTER),1 மே (MAY) **1965**

அமர் ஸிங் ஸைகல், இந்தி மொழியில் ஒலிபெருக்கி மூலம், மனதைத் தொடும் விதத்தில் குருநாதரின் பர்வர்திகார் பிரார்த்தனையை (MASTER'S PRAYER) மொழிந்தார். பலர் பாபாவை சூழ்ந்த வண்ணம் புகைப்படங்களை எடுத்துக்கொண்டிருந்தனர். பாபா மேடையில் அமர்ந்து சிரித்துக்கொண்டே, ஒருவரைச் சுட்டிக்காட்டி, மற்றொருவரின் பார்வையைக் கவர்ந்து, வேறொருவரைப் பார்த்து அல்லது அவரை அடையாளம் காட்டும் விதத்தில், பெஹராம், பிக்குபாய் போன்ற பலர் புகைப்படங்களை எடுத்தனர்.

மதுசூதனன், சுபத்ரா இருவரும் பூனா பஜனைக் குழுவினருடன் வரவேற்புப் பாடலைப் பாடினர். பாபா, "**இது புதிய பாடலா?**" என்று கேட்டார்.

டாக்டர் பரூச்சாவை திரும்பிப் பார்த்து பாபா, "**எனது கழுத்தில் வலி கடுமையாக உள்ளது**" என்று சைகையால் தெரிவித்தார்.

அவதார் மெஹர் பாபா பூனா மையத்தின் செயலாளர் கே.கே. ராமகிருஷ்ணன் கீழ்வரும் வரவேற்பு உரையை வாசித்தார்:

அனைத்து இதயங்களுக்கும் பிரியமான, அவதார் மெஹர் பாபா!

இன்று காலை உங்களைக் குறித்த முதல் எண்ணம் இதுவாக இருந்தது: 'எங்கும் நிறை இறைவனாக உளதாயிருக்கும் உம்மை வரவேற்பதற்கு, குறிப்பாக எந்த ஓர் இடம்தான் உள்ளது; அனைத்தையும் தமக்குள்ளே உள்ளடக்கியவரான உமக்கு, எதுதான் இருக்கையாக அமைய முடியும்?'

இருப்பினும், உங்கள் மௌன வெளிப்பாட்டின் வெளிச்சத்தில், மனித குலத்தின் மீதான அளவிலா இரக்கத்தின் மூலம், மனித இதயங்களின் அழைப்புக்கு செவிமடுத்து, நீங்கள் எங்கள் அன்பான பாபாவாக, மனித ரூபத்தை அணிந்துள்ளீர்கள் என்பதை நாங்கள் புரிந்துகொண்டு, எங்கள் மத்தியில் கடவுளாகிய உமக்கு இருக்கை ஒன்றை வழங்குகிறோம். உங்கள் இறை-மனித வடிவத்தின் அழகை எங்கள் கண்களுக்கு விருந்தாக வழங்குவதில் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். எங்கள் இதயங்கள், உங்கள் புனித பாதங்களில் அன்பையும், பக்தியையும், மரியாதையையும் சமர்ப்பிக்கின்றன.

ஒரு வருடத்திற்கு முன்பு, நாங்கள் கட்டி எழுப்பிய இந்த மண்டபத்தை, உங்கள் அன்பு மற்றும் சத்திய செய்திக்கான மையமாகத் திறந்து வைத்தீர்கள். இனி வரும் அனைத்து ஆண்டு விழாக்களும் உங்களால் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதன் அடையாளமாக இன்று எங்கள் பிரார்த்தனையை முன்வைக்கிறோம்.

அன்பான பாபா, இந்த இடத்தில் மட்டுமல்ல, எங்கள் இதயங்களிலும், எங்கள் தெய்வீக அன்பானவராக நித்தியமாக அங்கு வீற்றிருக்க உங்களை வரவேற்கிறோம்.

அதற்கு பதிலளிக்கும் விதத்தில் எரச் மூலமாக, பாபா பின்வரும் செய்தியை வழங்கினார்:

**உங்கள் அன்பில் எனது பணிக்காக நீங்கள் கட்டி எழுப்பிய இந்த மண்டபத்திற்கு என்னை அழைப்பதில், உங்கள் அனைவரின் வாழ்வில் ஓர் இடத்திற்கும், உங்கள் ஒவ்வோர் இதயத்திலும் ஓர் இருக்கைக்கும் என்னை**

**வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில், உங்கள் இதயங்களில் வாழ்வதற்காகவும், உங்கள் அனைவரின் வாழ்வில் பங்கெடுப்பதற்காகவும் நான் உங்களிடையே வந்துள்ளேன்.**

கேஷவ் நிகம், கே.என். ஸோமன் ஆகியோர் பாபாவின் செய்தியின் இந்தி மற்றும் மராட்டி மொழிபெயர்ப்புகளை வாசித்தனர். இவை ஒலிபெருக்கியில் வாசிக்கப்பட்டபோது, பாபா, "**யார் ஒருவரும் இதைக் கேட்கவில்லை!**" என்று சைகையால் தெரிவித்தார்.

மண்டபத்திற்கு வெளியே இருந்தவர்கள், பாபாவின் தரிசனம் தாமதமானதைக் கண்டு கொந்தளித்தனர். அவர்கள் 'ஜெய் மெஹர் பாபா! ஜெய், ஜெய், மெஹர் பாபா!' என்று தொடர்ந்து கோஷமிட்டு, பேச்சாளர்களை கவனத்தில் கொள்ளவில்லை. வெளியிலிருந்த அனைவரும் பாபாவைப் பார்ப்பதற்காக, தோரணங்களால் நிரம்பிய ஜன்னலை நோக்கி நகர்வதற்குத் தங்களால் இயன்றவரை முயன்றனர். ஜன்னல் கம்பிகளைப் பற்றிக்கொண்டு இருந்தவர்கள் தங்களுக்குப் பின்னால் இருந்த மக்கள் கூட்டம், நெரிசலில் காயமடையாமல் இருக்கும் விதத்தில் கவனத்துடன் இருந்தனர்.

குறுகிய உரைகளுக்குப் பின்னர், எரச் பின்வரும் அறிக்கைகளை வாசித்தார்:

1. **அவதார் மெஹர் பாபாவின் அன்பர்கள், குறிப்பாக ஆந்திரா மற்றும் மும்பைவாழ் மக்கள், இந்த மண்டபத்தின் கட்டுமானப் பணியை நிறைவு செய்ய உதவிய அனைவரும், 1963ஆம் ஆண்டில் ஜால்பாய் மேற்கொண்ட பயணத்தில், தங்கள் முழு மனதுடன் பங்களித்ததன் பலனை இன்று சுவைக்கிறார்கள். நாளை முதல் குருபிரசாத்தில் நடைபெறும் தரிசன நிகழ்ச்சியில், ஆந்திரா மற்றும் மும்பையைச் சேர்ந்த சில அன்பர்களின் அற்புதமான அன்பளிப்பால், இந்த மண்டபத்தை நிறைவு செய்ய உதவியாக இருந்த சிலரை, ஜால்பாய், பாபாவிற்கு அறிமுகப்படுத்துகிறார்.**
2. **பாபாவின் புதிய அன்பர்களாகத் தங்களை முன்னிறுத்திக் கொண்டு, முதன்முறையாக அவரை தரிசனம் செய்பவர்கள், அவர்களின் குழுத் தலைவர்கள் மூலம் நாளை முதல் குருபிரசாதத்தில் பாபாவிற்கு அறிமுகப்படுத்தப்படுவார்கள்.**
3. **யார் ஒருவரும் பாபாவிடம் தனிப்பட்ட நேர்காணலைக் கோரக்கூடாது, இங்கே அல்லது குருபிரசாத்தில் மேடைக்கு வர முயற்சிக்கக்கூடாது என்பதை நினைவில் கொள்ளவும்.**
4. **பாபா தமது அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் (பழையவர்கள் மற்றும் புதியவர்கள்) அடுத்த ஐந்து நாட்களில் மீண்டும் குருபிரசாத்தில் தரிசனம் வழங்க உள்ளார். 1962 கிழக்கு-மேற்கு சகவாசத்தின் போது, குருபிரசாத்தில் அவரது அன்பர்களுக்கு, பிரத்யேக இருக்கை வசதிகள் வழங்கப்பட்டது போல், இப்போதும் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொறுமையாக இருக்குமாறும், அந்தந்த குழுக்கள்**

ஒன்றன்பின் ஒன்றாக, குருபிரசாத்தில் அடுத்த ஐந்து நாட்கள் அழைக்கப்படும் போது, அவர்களுடன் வரிசையில் காத்திருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. பூனா மையம் இயன்றவரை பாபாவின் அன்பர்களை மண்டபத்திற்குள் அனுமதிக்க முயன்றாலும், பாபாவின் தரிசனத்திற்காக வந்த அனைவரையும் இந்த மண்டபத்தில் அனுமதிக்க முடியவில்லை என்பதில் அதன் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. போதுமான இடவசதி இல்லாததன் காரணமாக, பூனா பொது மக்கள் இன்று அல்லது அடுத்த ஐந்து நாட்களில் குருபிரசாத் மண்டபத்திற்கு அழைக்கப்படவில்லை.
6. இடவசதி காரணமாக மண்டபத்திற்குள் அனுமதிக்கப் படாதவர்களுக்கு மட்டுமே இன்று பாபாவின் தரிசனத்திற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனவே, மண்டபத்திற்கு வெளியே இருப்பவர்கள் அனைவரும் இப்போது உள்ளே வந்து பாபாவை தரிசனம் செய்ய வழக்கமான வரிசையில் நிற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் மண்டபத்தின் உள்ளே அமர்ந்திருப்பவர்கள் தயவு செய்து அங்கேயே அமர்ந்திருக்க வேண்டும்.
7. தவிர்க்க முடியாத காரணங்களுக்காக நாளை பூனாவை விட்டு வெளியேற இருப்பவர்களும் பாபாவின் தரிசனத்திற்காக இப்போது வரிசையில் இணைய வேண்டும்.
8. தயவுசெய்து கவனமாக கேளுங்கள். பின்வரும் செய்தி அவதார் மெஹர் பாபாவிடமிருந்து உங்கள் அனைவருக்கும் நேரடியாக வழங்கப்படுகிறது: “இத்தனை வருடங்கள் நான் உங்களைத் தழுவி, என் அன்பர்களே, என் மீதான உங்கள் அன்பிற்குத் தலைவணங்கினேன். இப்போது என்னால் உங்களைத் தழுவ முடியாது, எனவே உங்கள் மீதான என் அன்பிற்கு நீங்கள் தலைவணங்க அனுமதிக்கிறேன்.”

காலை 8:30 மணிக்கு தரிசனம் தொடங்கியது. ஒரே நேரத்தில் 100 ஆண்களும் பெண்களும் அடங்கிய குழுக்கள் மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட்டன. வாசலில் கூட்ட நெரிசல் சில நேரங்களில் தன்னார்வலர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகமாக இருந்தது. மண்டபத்திற்குள் நுழையும் அதிர்ஷ்டத்துடன் ஒரு குழு வரிசையில் நின்றது. அவர்கள் பாபாவைக் கடந்து சென்று, அவருடைய பாதங்களில் தலை வணங்கிச் சென்றனர். அன்பின் வெளிப்பாடாக, சிலர் மலர் மாலைகளை வழங்கினர்; சிலர் பட்டு, காகிதம், கற்பூரம், அரிசி போன்றவற்றால் உருவாக்கப்பட்ட மாலைகளை வழங்கினர். பிறர் பழங்கள், சாக்லேட்டுகள் மற்றும் மிட்டாய்களைப் பிரசாதமாகக் கொண்டு வந்தனர். பாபா இந்த அன்புப்

பிரசாதங்களைத் தொட்டு அவரது பிரசாதமாகத் திருப்பிக் கொடுத்தார். அரசாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ தளபதிகள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், தபால்காரர்கள், செருப்புத் தொழிலாளிகள் மற்றும் சாதுக்கள் - மெஹர் பிரபுவின் முன்னால் விரைவாகக் கடந்து சென்றது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. பாபாவின் தரிசனத்திற்குப் பிறகு, பெரும்பாலானவர்கள் வெளியேறும் தயக்கத்தில் நின்றனர், ஆனால் தொண்டர்கள் விரைந்து சென்று, அவர்கள் வெளியேறும் வரை கண்காணித்த வேளையில், வாசலில் ஒரு பிரசாதப் பொட்டலம் அவர்கள் கைகளில் திணிக்கப்பட்டது. மண்டபத்தின் வெளி வாசலில் மக்கள் வெள்ளம் அலைமோதியது.

ஈரான் நாட்டிலிருந்து சில ஆண்களும் பெண்களும் வருகை தந்தனர். ஒரு பருமனான பாரசீகப் பெண்மணி, பாபாவின் முன்னால் தேம்பித் தேம்பி விடாப்பிடியாக அழுதுகொண்டே இருந்ததால், பாபாவின் பாதத்திலிருந்து அவரைத் தூக்கிச் செல்ல வேண்டியதாயிற்று. தரிசனத்திற்கு வரும் ஒவ்வொரு தாயும், தனது குழந்தையை பாபா தொட்டு ஆசீர்வதிக்கும் உயரத்தில் தாங்கிக்கொண்டனர். ஹமிர்பூரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பிறந்து பதினைந்து நாட்களே ஆன தனது மகளை உடன் கொண்டு வந்தார்.

ஒரு குழந்தையை அவரிடம் தூக்கிச் செல்லும் வேளையில், அதைத் தொடுவதற்கு பாபா ஒவ்வொரு முறையும் முன்னோக்கி குனிய வேண்டி இருந்ததால், அவரது கழுத்தில் உருவான அபரிமிதமான வலிகள் அவரது மகிழ்ச்சியும், பிரகாசமும் நிறைந்த முகத்தில் முற்றிலும் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டிருந்தது. ஒரு கட்டத்தில், பாபா டாக்டர் பரூச்சாவின் பக்கம் திரும்பி, “**கழுத்தில் வலி மிகவும் கடுமையாக உள்ளது, ஆனால் நான் எவ்வளவு மகிழ்ச்சியாகத் தோற்றமளிக்கிறேன்**” என்று சைகையால் தெரிவித்தார். தரிசனத்திற்கு வந்தவர்களில் எவருக்கும் பாபா உண்மையில் உடல் வலியால் அவதிப்படுவது தெரியாது, ஏனெனில் அவர்களுக்கு அவர் நன்றாகவே தோற்றமளித்தார். பாபா எத்தகைய வேதனையைத் தாங்கிக்கொள்கிறார் என்பது நெருங்கிய மண்டலிக்கு மட்டுமே தெரியும்.

ஜோஸஃப் ஹார்ப் முதல் வரிசையில் அமர்ந்து இடையிடையே நிகழ்ச்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தார். அவருக்கும் உடல்நிலை சரியில்லாதது போலத் தோன்றியதால், பாபா அவரிடம், “உங்களுக்கு நெஞ்சு வலிக்கிறதா?” என்று கேட்டதற்கு ஜோஸஃப் ‘ஆமாம்’ என பதிலளிக்கவே, ‘அவரை வெளியே பாபாவின் தூக்கு நாற்காலியில் தூக்கிச் சென்று, உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் செல்லுமாறு’ பாபா அறிவுறுத்தினார். பாபா கூறியதற்கு இணங்க ஜோஸஃப் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாலும், அவர் விரைவில் குணமடைந்து, மறுநாள் எஞ்சிய தரிசன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடிந்தது.

பாபா காலை 11:00 மணிக்குப் புறப்பட இருந்ததால், அனைத்து மக்களும் பாபாவைத் தலைவணங்க இயலாது. அவர் ராமகிருஷ்ணனை அழைத்து, தனது அன்பர்களின் பெரிய குழுக்களை ஒன்றன் பின் ஒன்றாக மண்டபத்தின் வராண்டாவில் அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார்; இதனால் அவர்கள் பாபாவின் நேரடிப் பார்வையின் எல்லைக்குள் வர முடியும். வராண்டாவில் வந்த ஒவ்வொரு குழுவும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர், பாபா அவர்களை நோக்கி கைகளை அசைத்து, அனைவரும் அடுத்த நாள் குருபிரசாத்திற்கு வருமாறு சைகையால் தெரிவித்தார்.

காலை 10:30 மணிக்கு கிட்டத்தட்ட 4,000 அன்பர்கள் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினர். பின்னர், அனைவரும் இக்காலகட்டத்தின் அவதார புருஷரை போற்றிப் பாராட்டினர். பாபா குருபிரசாத் திரும்புவதற்காக மேடையிலிருந்து தூக்கு நாற்காலியில் அழைத்துச் செல்லப்பட்டார். பாபா காரில் அமர்ந்து தனது அன்பர்களை, கைகளைக் கூப்பி வணங்கவே, கார் மக்கள் கூட்டம் நிறைந்த பாதையில் மெதுவாக நகர்ந்து சென்றது.

பின்பு குருபிரசாத்தில், மாலை 4:00 மணியளவில், ஹமிர்பூரிலிருந்து வருகை தந்த பல அன்பர்களுக்கு பாபா தரிசனம் வழங்கினார்; அவர்களின் ரயில் தாமதமாக வந்ததால், அன்று காலை பூனா மையத்தின் தரிசன நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இயலாமலாயிற்று. கான்பூர் நகரிலிருந்து சீதாராம் அழைத்து வந்த குழுவும் பாபாவை சந்தித்தது. ஹாரி கென்மோர், பென் ஹேமன் ஆகியோர் வந்தனர்; டாக்டர் கிண்டே, அவரது மனைவி, சில உறவினர்கள் மற்றும் நோயாளிகள், மூளை அறுவை சிகிச்சையில் இருந்து அதிசயமாக குணமடைந்த சிறுவன் உட்பட பலர் வருகை தந்தனர்; பாபா அந்த சிறுவனை முத்தமிட்டு அன்புடன் அனைவரையும் சந்தித்தார்.

1965 மே 2 ஞாயிற்றுக்கிழமை காலை 6:30 மணியளவில், குருபிரசாத் வாயில் அருகே ஒரு பெரிய கூட்டம் ஒன்றுதிரண்டது. ஹமிர்பூர் அன்பர்கள் ‘ஹரி பாபா, ஹரி பாபா! மெஹர் பாபா, ஹரி, ஹரி!’ மற்றும் ‘சச்சிதானந்த், பரமானந்த், மெஹர் பாபா வித்னியானந்த்’ என்ற பாடல்களை அமைதியாகவும் ஆர்வத்துடனும் பாடிக்கொண்டிருந்தனர். ஹமிர்பூரிலிருந்து சுமார் 1,000 பக்தர்கள் - எட்டு பேருந்துகளிலும், எஞ்சியவர்கள் ரயிலிலும் வந்திருந்தனர். சில அன்பர்களின் ஏழ்மை காரணமாக, அவர்கள் சில பொருட்களை விற்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர்; ஏழ்மையானவர்களாக இருந்தாலும், அவர்கள் பாபாவின் அன்பில் செல்வந்தர்கள்.

மெஹர் பாபா, அன்று அதிகாலை நேரத்திலிருந்தே குருபிரசாத் மண்டபத்தில் அமர்ந்து, மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்தார். ஜிம் மிஸ்திரியிடம் நகைச்சுவையாகக் கேட்டார், **“என் மீதான அன்பில் உங்கள் இருவரில், யாருடைய அன்பு அதிகம்? உங்களுடையதா அல்லது ரோடாவின் அன்பா?”**

அதற்கு ஜிம் பதிலளித்தார், "உங்கள் மீதான ரோடாவின் அன்பு மிகவும் அதிகம், பாபா. அவர் ஒரு மஸ்தானி போன்றவர், அத்தகைய மனைவியை அடையப் பெற்றதில் நான் பெருமைப்படுகிறேன்!"

காலை 7:15 மணிக்கு ஹோஷங் பரூச்சா உள்ளே அழைக்கப்பட்டார். நேற்று முன் தினம் தரிசனம் செய்ய முடியாத மக்களிடமிருந்து சில புகார்கள் வந்தன. அதற்கு பதிலளித்த பாபா, "**நான் எனது மௌனத்தைக் கலைத்த பின்னர், என் அருள் உங்கள் மீது இருந்தால், என்ன நடக்கும் என்பதை ஒப்பிடுகையில், இந்த தரிசன நிகழ்ச்சிகள் அனைத்தும் முக்கியமற்றவை. இதெல்லாம் ஒரு தமாஷா (கேலிக்கூத்து)!**"

மேலும், "**எனது கழுத்தில் வலி கடுமையாக உள்ளது. வலியைப் போக்க, அவர்களால் செய்ய முடியும் அனைத்தையும் செய்து விட்டதாக கோஹெர் கூறுகிறார். நாட்கள் செல்லச் செல்ல அது குறையும். நான் எவ்வளவு துன்பப்படுகிறேன் என்பது எவருக்கும் தெரியாது!**" என்று கூறினார்.

காலை 7:30 மணிக்கு வெளி வாசல்கள் அருகில் பொறுமையிழந்த கூட்டம், உள்ளே வந்து பெரிய பந்தலில் தங்கள் இருக்கைகளை ஆக்கிரமிக்க அனுமதிக்கப்பட்டது. கதவுகள் திறக்கப்பட்டதும் குருபிரசாத் பந்தலை நோக்கி அன்பர்களின் கூட்டம் மடை திறந்த வெள்ளம் போல் அலை அலையாகப் பாய்ந்தது, மறக்க முடியாத காட்சியாக இருந்தது. அவசரத்தில், முன்னால் நின்றுகொண்டிருந்த பல பெண்கள் கீழே விழுந்ததைக் கேள்விப்பட்ட பாபா, '**தரிசனத்திற்கு வருபவர்கள், வந்ததும் உள்ளே நுழையும் வகையில், அடுத்த நாள் காலையில் கதவுகளைத் திறந்து வைக்குமாறு**' கட்டளையிட்டார்.

பந்தல் கிழக்கு-மேற்கு சகவாசத்திற்காக அமைக்கப்பட்டதைப் போன்று, 300 அடிக்கு 75 அடி அளவில், 3,000 நாற்காலிகளை உள்ளடக்கியது. காலை 8:45 மணிக்கு, பாபா, எரச்சுடன் பச்சைத் திரைக்குப் பின்னாலிருந்து அற்புதமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் நடந்து சென்றார். தனது நாற்காலியின் முன்னால் நின்று, தன்னைத் திரும்பத் திரும்பப் போற்றி புகழ்ந்து கொண்டிருந்த மக்களை அவர் பார்த்தார். அவர் அமர்ந்ததும், பாப்புஸாஹேப் ஷிண்டே அவருக்கு மாலை அணிவித்தார். திடீரென உணர்ச்சிவசப்பட்ட ஒருவர் சத்தமாக அழுதுகொண்டே பாபாவின் முன் விரைந்த வேளையில், தொண்டர்கள் அவரைத் தடுத்து அவருடைய இருக்கைக்கு அழைத்துச் சென்றனர்.

பாபா கேட்டார், "**மக்கள் ஏன் நின்றுகொண்டிருக்கிறார்கள்?**"

அதற்கு எரச், "போதிய நாற்காலிகள் இல்லை" என்று பதிலளித்தார்.

'**அமர்ந்திருந்த அன்பர்கள், வரிசையில் சென்று தரிசனம் செய்யும்போது, நிற்பவர்கள் அந்த இருக்கைகளில் அமர வேண்டும்**' என்பதை ஒலிபெருக்கியில் அறிவிக்குமாறு பாபா, எரச்சிடம் அறிவுறுத்தியதை அவர் அறிவித்தார்:



குருபிரசாத் (GURUPRASAD), மே (MAY) **1965**



ஒலிபெருக்கியில்
ஹாரி கென்மோர்,
குருபிரசாத்,
**மே 1965**
(HARRY KENMORE AT
THE MICROPHONE,
GURUPRASAD,
MAY 1965)



எரச், ஹோஷங்
பரூச்சா,
குருபிரசாத்,
**மே 1965**
(ERUCH, HOSHANG
BAROOCHA,
GURUPRASAD
MAY 1965)

'**தரிசனம் மேலும் ஐந்து நாட்கள் நடைபெற உள்ளன, எனவே பொறுமையிழந்து விடாதீர்கள்**' என்று பாபா கூறுகிறார். **அனைவருக்கும் பாபாவை சந்திக்கும் வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும். உங்கள் முறைக்காக, தயவு செய்து காத்திருங்கள். நேற்று தரிசனம் பெற்றுக் கொண்டவர்கள் மீண்டும் குருபிரசாத்தில் தரிசனம் செய்யலாம். குருபிரசாத்தில் ஒரு முறை தரிசனம் செய்தவர்கள் மீண்டும் தரிசனத்திற்கு வரக்கூடாது.**

அடுத்த சில நாட்களில், இரண்டு அல்லது மூன்று முறை தரிசனத்திற்காக வந்த பலரைக் கண்டுபிடித்து, பாபா அவர்களைக் கண்டித்தார். ஒரே ஒரு விதிவிலக்கு - ஐந்து நாட்களும் தரிசனத்திற்காக ஒரு முதியவர் வருகை தந்தார்.

எரச் ஆங்கில மொழியில் அறிவிப்புகளை வழங்கியதும், கேஷவ் நிகம், டாக்கே, குடும்ப சாஸ்திரி, புர்ஜர் மேத்தா ஆகியோர் அவற்றை முறையே, இந்தி, மராட்டி, தெலுங்கு, குஜராத்தி மொழிகளில் எடுத்துரைத்தனர். எரச் மீண்டும் பாபாவின் அறிவுரைகளை வாசித்தார்:

**இன்று புறப்பட இருப்பவர்கள், எந்தக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இன்றே தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு** பாபா கூறுகிறார். அவர்களுக்குப் பின்னர், எஞ்சியுள்ளவர்கள் அந்தந்த குழுக்களுடன் வரும் வேளையில், குழுத் தலைவர் ஒவ்வொருவரையும் பாபா முன்னிலையில் அறிமுகப்படுத்துவார். அவதார் மெஹர் பாபா பூனா மையத்தைக் கட்டி எழுப்புவதற்கு நிதி உதவி செய்த ஆந்திராவைச் சேர்ந்த சில அன்பர்களை ஜால் அறிமுகப்படுத்துவார்.

ஹாரி கென்மோர் குருநாதரின் பர்வர்திகார் பிரார்த்தனையை மொழிய, ஒலிபெருக்கிக்கு முன்னால் அழைக்கப்பட்டார். அவர் அதை நிறைவு செய்ததும் பாபாவின் ஜெய் முழக்கங்கள் எங்கும் ஒலித்தன.

எரச் முந்தைய நாள் வழங்கிய பாபாவின் செய்தியை மீண்டும் எடுத்துரைத்தார்:

**"இத்தனை வருடங்கள் நான் உங்களைத் தழுவி, என் அன்பர்களே, என் மீதான உங்கள் அன்பிற்கு தலைவணங்கினேன். இப்போது என்னால் உங்களைத் தழுவ முடியாது, எனவே உங்கள் மீதான என் அன்பிற்கு, நீங்கள் தலைவணங்க அனுமதிக்கிறேன்."**

இது நான்கு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர், எரச், பாபாவிடமிருந்து ஒரு புதிய செய்தியை வாசித்தார்:

**உங்களைப் பார்ப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், உங்களில் பலர் தொலைதூரப் பகுதிகளிலிருந்து, சில மணிநேரங்கள் என் முன்னிலையில் இருக்கும் நோக்கத்தில் வருகை தந்தது, எந்த வகையிலும் சிறிய தியாகம் அல்ல; இது என் இதயத்தை ஆழமாகத் தொட்டது. பக்தர்கள் தங்கள் வாழ்நாள் மற்றும் சேமிப்பை செலவு செய்து, பாரம்பரியத்தால் புனிதப்படுத்தப்பட்ட வடிவங்களில் கடவுளை தலைவணங்குவதற்காக, புனித யாத்திரைகளில் தங்கள் உயிரைப் பணயம் வைக்கிறார்கள். மேலும்,**

**அவர்களின் வெகுமதிகளும் பாரம்பரிய முறைப்படியே இருக்கும். ஆனால் உங்கள் மீதான அன்பின் காரணமாக, மனித உருவில் வந்த கடவுளின் முன்னால் தலைவணங்க, நீங்கள் இந்த நீண்ட, நெடிய பயணத்தை மேற்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கான வெகுமதியும் உங்கள் அன்பிற்கு நிகராக இருக்கும்.**

காலை 9.20 மணிக்கு தரிசனம் தொடங்கியது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் நீண்ட வரிசையில் சுட்டெரிக்கும் வெயிலில் நின்று, ஒவ்வொருவரும் அடுத்தடுத்து முன்னோக்கிச் சென்றனர். பாபாவின் நட்சத்திரம் போன்ற முகம் பிரகாசமாக ஒளிர்ந்தது, மேலும் அவர் அருகில் இருந்தவர்களைப் போலவே தூரத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கும் அதே பொலிவுடன் தென்பட்டார். மேடையின் ஓரத்தில் பாபாவின் நாற்காலி போடப்பட்டிருந்தது. தரிசனத்திற்காக வந்த ஒவ்வோர் ஆணும், பெண்ணும் கீழே தரையில் நின்று, அவரைக் கடந்து சென்று, அவரது பாதங்களைத் தொட்டு, தலைவணங்கினர். சிலர் நெற்றியால் அவருடைய பாதங்களைத் தொட்டனர், சிலர் மலர்களையும் மாலைகளையும் விட்டுச் சென்றனர். சிலர் கண்ணீரால் அவருடைய பாதங்களை நனைத்தனர், பிறர் உதவிக்காக அவரிடம் பிரார்த்தனை செய்தனர்.

ஒவ்வொரு நபரும் அவரவர் உள்ளளவிலான தயார்நிலைக்கு ஏற்ப, அவரது அமைதியான அன்பின் பரிசை அடையப் பெற்றனர். பாபா சிலரைப் பார்த்து தலையசைத்து, புன்னகைத்து அல்லது கேள்விகள் கேட்டபடி கைகளை இணைத்து அமர்ந்திருந்தார். ஒவ்வொரு நபரும் தனது தலையை பாபாவின் பாதங்களில் வைத்து வணங்கும்போதும், பாபா ஒவ்வொருவரின் அன்பையும், அவரது மார்பில் அல்லது நெற்றியில் கைகளை வைத்து அதை மனதார ஏற்றுக்கொண்டார். இதில் எந்த விதமான ஜாதி, மத பேதமின்றி அன்பர்கள், பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

எதிரே மக்கள் நின்று கொண்டிருந்ததால், பின்னால் அமர்ந்திருந்தவர்களால் பாபாவைப் பார்க்க முடியவில்லை. தரிசனத்தின் நடுவே பாபா, “**கடைசி வரிசையில் அமர்ந்திருக்கும் என் அன்பர்களால் என்னைத் தெளிவாகப் பார்க்க முடியாது**” என்று சைகையால் தெரிவித்தார். எனவே எரச், பரூச்சா இருவரின் உதவியோடு பாபா எழுந்து நின்று, பின் வரிசையில் அமர்ந்திருந்த அன்பர்களை நோக்கி கைகளை அசைத்தார். பாபா இந்த அன்பின் சைகையை தினமும் மூன்று முறை தரிசனத்தின் போது திரும்பத் திரும்ப செய்துவந்தார்.

அதற்குள் வரிசை குருபிரசாத்தின் வாயிலை வந்தடைந்தது. பாபா கேட்டார், “**இந்த வேகத்தில் அனைவருக்கும் ஐந்து நாட்களில் தரிசனம் வழங்க முடியுமா?**”

எரச், “பாபாவைத் தலைவணங்கிய ஒவ்வொருவர் நெற்றியிலும் ஒரு ரப்பர் முத்திரை பதிக்கப்படலாம், அதனால் எவரும் இரண்டாவது முறையாக வரக்கூடாது!” என்று பரிந்துரைத்தார்.



மணி, மேடைக்குப் பின்னால் வருமாறு எரச்சை சைகையால் அழைத்து, வியர்வையில் நனைந்த பாபாவின் முதுகுக்குப் பின்னால் இருந்த தலையணைக்கு பதிலாக ஒரு புதிய தலையணையை அவரிடம் கொடுத்தார். மேடைக்குப் பின்னால் பார்வைக்குத் தெரியாமல் அமர்ந்திருந்த பெண் மண்டலி அதை கவனித்தனர்.

காலை 10:50 மணிக்கு, பாபா கூறினார், "**அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் சகவாசத்தின் எஞ்சிய நான்கு நாட்களில் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியும், எனவே பொறுமையிழக்க வேண்டாம்.**" பதினைந்து நிமிடங்களுக்குப் பின்னர் உருவான நீண்ட வரிசையைப் பார்த்து, "**பதினைந்து நிமிடங்களில் இது நிறைவுறாது**" என்று பாபா கூறினார். பாபாவிற்கு பல மணி நேரம் தொடர்ச்சியாக அமர்ந்திருப்பது பெரும் சிரமமாக இருந்ததால், தரிசனத்திற்கு வரும் ஒவ்வோர் அன்பரும் விரைந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர். காலை 11:10 மணியளவில், பாபா, பரூச்சாவிடம், "**எனது இடுப்பு, முதுகு மற்றும் கழுத்து வலி உச்சத்தை எட்டியுள்ளது. எனது துன்பத்தின் தீவிரத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியாது**" என்று கூறினார்.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு, வரிசை முடிந்தது, பாபா ஆரத்தி நிகழ்த்துமாறு கேட்டுக்கொண்டார். மதுசூதனன் மற்றும் பூனா பஜனை குழுவினர் பஜனைப் பாடல்களைத் தொடர்ந்தனர், அனைவரும் அதில் கலந்து கொண்டனர். டெஹ்ரா டூனைச் சேர்ந்த மோகினி ராணி, அவரது மகள் குஸூம் மற்றும் மோகினியின் சகோதரி முக்கிம்பூரைச் (MUKIMPUR) சேர்ந்த ரமாதேவி ஆகியோர் வெள்ளித் தட்டில் எரியும் ஆரத்தி சுடருடன் பாபாவின் முன்னால் வந்து, சடங்கு முறையில் அதை நிகழ்த்தினர். தொடர்ந்து பாபாவின் ஜெய் முழக்கங்கள் எதிரொலித்தன; அவர் எரச், பரூச்சா ஆகியோரின் உதவியுடன் நின்று, கூட்டத்தை நோக்கி கைகளை அசைத்து, குருபிரசாத் மண்டபத்திற்குள் பாபா நுழைந்தார்; அன்பர்கள் அனைவரும், மீண்டும் மீண்டும் ஜெய் கோஷமிட்டு, வளாகத்தை விட்டு வெளியேறினர். ஒரு சிலர் மேடைக்கு விரைந்து வந்து குவியலாக கிடந்த சில மலர் மாலைகளை பிரசாதமாக எடுத்துச் சென்றனர்.

பாபா மேடையின் பின்புறம் இருந்த சக்கர நாற்காலியை நோக்கி திரைக்குப் பின்னால் அழைத்துச் செல்லப்பட்டார். எரச், பரூச்சா இருவரும் பாபாவை உணவு அறைக்கு அழைத்துச் சென்றனர். பாபா மீண்டும் தனது இடுப்பு மற்றும் கழுத்துப் பாகத்தில் கடுமையான வலி இருப்பதாகப் புகார் கூறினார். அவரது பலவீனமான உடலுக்கு, தரிசனத்தின் தாக்கம் மிகையாக இருந்தது. இருவரும் அவரது கால்களை மஸாஜ் செய்வதன் மூலம், வலியைக் குறைக்க முயன்றனர், ஆனால் பாபாவின் முகம், அவர் வேதனையில் இருப்பதை வெளிப்படையாக உணர்த்தியது. அவரது துன்பம் கிட்டத்தட்ட ஹோஷங்கின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. சுமார் மூன்று நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அவர்களிடம் வெளியே செல்லுமாறு சைகையால் தெரிவித்தார், அதற்குப் பிறகு பெண் மண்டலி உள்ளே வந்து பாபாவின் தேவைகளை கவனித்துக் கொண்டனர்.

அன்று மதியம் குருபிரசாத்திற்கு வருமாறு பல அன்பர்கள் அழைக்கப்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பிற்பகல் 3:45 மணிக்கு, சுமார் 100 பேர் பக்கத்து அறையில் அமர்ந்திருந்தனர். பாபா, தனது குறுகிய பட்டு காலுறையை அணிந்து மின்விசிறியின் அருகில் நாற்காலியில் அமர்ந்தார். ஆந்திராவின் சிந்தா சர்வராவ், மஜேட்டி ராமமோகன ராவ், மாணிக்யாலா ராவ் ஆகியோர் சமீபத்தில் பிறந்தநாள் கண்காட்சியின் சித்திரங்கள் அடங்கிய தொகுப்பை அவருக்கு வழங்கியபோது, பாபா கூறினார், "**கண்காட்சியைப் பற்றி நான் கேள்விப்பட்டேன், மேலும் விஜயவாடா அன்பர்களின் உழைப்பில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**"

பாபாவின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பதியில் ஒரு பொது நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்த என்.எஸ். மூர்த்தியைப் பற்றி சிந்தா சர்வராவ் குறிப்பிட்டார். திருப்பதி, வெங்கடேஸ்வராவின் பக்தர்களுக்கு ஒரு பாரம்பரிய இந்து புனித யாத்திரை ஸ்தலமாகும், மேலும் அந்த பிராமண சமூக சூழ்நிலையில் மெஹர் பாபாவிற்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததை, மூர்த்தியின் துணிச்சலான சாதனையாக மக்கள் கருதினர்.

திருப்பதியில் நடந்த நிகழ்ச்சியில் சிறப்புரையாற்ற டாக்டர் பரூச்சா அழைக்கப்பட்டிருந்தார், மேலும் பாபா அவரிடம், "**பாபா மனித உருவில் பூமியில் வருகை தந்த கடவுள் என்று சொன்னீர்களா?**" என்று கேட்டார். அவர் 'ஆமாம்' என உறுதியுடன் பதிலளித்தார்.

ஆந்திராவில் கலால், மதுவிலக்கு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் எம்.ஆர். அப்பா ராவ் (M.R. APPA RAO) மேற்கொண்ட பணி, பாபாவை மகிழ்ச்சியடையச் செய்தது. பாபா அவரிடம் கூறினார், "**நீங்கள் செய்வதெல்லாம் எனக்குத் தெரியும், உங்கள் பணியில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.**"

அன்பர் ஒருவரை நோக்கி பாபா, "**உண்மையில் நான் கடவுள் என்பது உங்களுக்குத் தெரியுமா?**" என்று கேட்டார்.

அவர் நேர்மையாக பதிலளித்தார், "தெரியாது, உண்மையில் தெரியாது."

அதைத் தொடர்ந்து பாபா கூறினார், "**நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, எனது துன்பம் முடிவுக்கு வரும்; நான் கடவுள் என்பதை உலகம் அறியும், உணரும். எனது துன்பம் உடல், மனம் மற்றும் ஆன்மீகம் சார்ந்தது. எனது மௌனத்தைக் கலைப்பது, எனது மகிமையின் தொடக்கத்தைக் குறிக்கும், எனது பணி அப்போதுதான் நிறைவுக்கு வரும். எனது மௌனத்தைக் கலைத்த பின்னர் ஒரு வருடம் உயிர் வாழ்வேன், பின்னர் இந்த உடலைக் கைவிடுவேன்.**"

லக்னோவைச் சேர்ந்த ஸரோஜ் ஸஹாய் (SAROJ SAHAI) தனது கணவர், பணி நிமித்தம் வரமுடியாததால், மகன்களான ஷசீந்திரா (SHACHINDRA), மெஹர்நாத் (MEHERNATH) இருவருடன் வந்தார். பாபா, "**நான் ஷிவேந்திராவை அழைக்கிறேன்; கவலைப்படாதீர்கள்**" என்று உறுதியளித்தார்.

ஷிவேந்திரா பொழுதுபோக்குச் செயலாக சிற்பம் செதுக்குவதை பழக்கமாகக் கொண்டிருந்தார், அவர் வடித்த பாபாவின் வண்ண, மார்பளவு சிலை ஒன்றை ஸரோஜ் கொண்டு வந்திருந்தார், அது பாபாவை மகிழச் செய்தது.

பாபா, 'பூப்பு' (POOPU), 'டூட்டு' (TOOTU) என்று செல்லமாகப் பெயர் சூட்டிய ஸரோஜின் இரண்டு மகன்கள் அவரிடம், "பாபா, நாங்கள் உங்களுடன் பட்டம் பறக்கவிடவும், பளிங்கு கோலிகள் விளையாடவும் வந்துள்ளோம்" என்றனர்.

பாபா பதிலளித்தார், "**நான் உங்களுடன் விளையாட விரும்புகிறேன், ஆனால் இப்போது எனது மார்பில் பல சுமைகள் உள்ளன!**"

சிறுவர்கள், "அவற்றை விரட்டி விடுங்கள்!" என்றனர்.

"**உங்களால் அது முடியும்**" என்று பாபா சைகையால் தெரிவித்து, "**ஆனால் இப்போது விளையாட நேரம் இல்லை**" என்றார்.

ராம்ஜான்கி (RAMJANKI) என்ற இளம் பெண்ணும் லக்னோவிலிருந்து அவரது குடும்பத்தினரின் விருப்பத்திற்கு மாறாக வந்திருந்தார். அவர் ஒரு துணிச்சல் மிக்க பெண், இதயத்தின் கட்டளைகளைப் பின்பற்றுவதில் உறுதியாக இருந்தார். பல வருடங்களாக பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்தார். அவருடைய பெற்றோர் அலஹாபாத்தில் வாழ்ந்து வந்தனர், ஆனால் அவர்களுக்கு பாபாவின் மீது இறை நம்பிக்கை இல்லை. 1958ஆம் ஆண்டு மெஹராபாத்தில் நடந்த சகவாசத்தில் கலந்து கொள்ள ராம்ஜான்கி தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து, ஸரோஜ் ஸஹாயின் தந்தை ஜி.எஸ். ஸ்ரீவஸ்தவாவுடன் பயணத்தை மேற்கொள்ள அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்த போதிலும், அந்தப் பெண்ணின் பெற்றோர் அதற்குத் தடையாக இருந்தனர். அதைத் தொடர்ந்து, லக்னோவில் நடந்த அவரது திருமணத்திற்குப் பின்னர், அவருடைய குடும்பத்தினருக்குத் தெரியாமல், அவர் 1963இல் பூனாவில் பாபாவைப் பார்க்க உறவினர் ஒருவருடன் வந்தார்.

இந்த முறை, லக்னோவில் தனது கணவரின் இல்லத்திலிருந்து நழுவி, அலஹாபாத்தில் அவரது பெற்றோர் இல்லத்திற்குச் செல்ல நேர்ந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு, லக்னோவிற்குத் திரும்புமாறு கூறி கணவனிடமிருந்து தொலைத்தந்தி வந்தது. தாயார் காலரா நோயால் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் தன்னால் வரமுடியவில்லை என்று பதில் தொலைத்தந்தி அனுப்பவே, மனைவியின் செய்தியை அடையப் பெற்ற கணவர் அலஹாபாத்திற்கு விரைந்த அவ்வேளையில், ராம்ஜான்கியின் தாயார் உடல்நலம் இல்லாதவர் போல நடிக்க வேண்டியதாயிற்று. மனைவியை இன்னும் சில நாட்கள் அலஹாபாத்தில் தாயாருக்கு உதவியாக இருக்குமாறு கூறி, கணவர் லக்னோ திரும்பிச் சென்றார். ராம்ஜான்கியை பாபாவிடம் செல்ல அனுமதிக்குமாறு பெற்றோரை வற்புறுத்துவது சாத்தியமில்லை, ஆதலால், அவர் உறவினர் ஒருவர் இல்லத்திற்குச் செல்வதாகச் சொல்லி, அதற்கு பதிலாக பூனாவிற்கு வந்தார்.

ராம்ஜான்கி பொய் கூறியதை விரும்பாத பாபா, "**ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன். வருவதற்குத் தடை இருந்தால் வராதீர்கள்!**" பாபா மறுபடியும் கூறினார், "**நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்!**"

போபால் நகரின் நஃப்டே (NAFDE) என்பவரை பாபா பெரிதும் பாராட்டினார், "**உங்களுடனும் உங்கள் குடும்பத்துடனும் நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீங்கள் அனைவரும் எனது பக்திமிக்க அன்பர்கள்.**"

நாக்பூரைச் சேர்ந்த பால் ஸுபேதாரின் (BAL SUBEDAR) மனைவி ஷீலா (SHEELA), தொடர் கருச்சிதைவுகளால் பாதிக்கப்பட்டார். பால் ஸுபேதாரிடம் பாபா, "**நீங்கள் கவலைப்படுகிறீர்களா?**" என வினவினார்.

"இல்லை" என்று பதிலளித்து அவர், "அனைத்தும் உங்கள் விருப்பப்படியே நடக்கும்" என்றார்.

அவரது மனைவியிடம் பாபா, "**இதைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா?**" என்று கேட்டதற்கு, அவரும், "இல்லை, பாபா" என்று பதிலளித்தார்.

"**கவலைப்படாதீர்கள், எனது பார்வை உங்கள் இருவர் மீதும் உள்ளது**" என்று பாபா அவர்களுக்கு உறுதியளித்தார்,

ஸாவ்னேர் (SAONER) குறுநகரின் ஒரு வழக்கறிஞர், போஃபலி பிளீடர் (POPHALI PLEADER) சில ஆசிரியர்கள், விவசாயிகள் மற்றும் வழக்கறிஞர்களை அவருடன் அழைத்து வந்து, பாபா முன்னிலையில் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தினார். அவர்கள் பழைய அன்பர்கள் என்றதும் பாபா கேலி செய்தார், "**ஏன் பாட்டீல்களை** (கிராமத் தலைவர்கள் மற்றும் விவசாயிகள்) **என்னிடம் அழைத்து வருகிறீர்கள்?**"

போஃபலி பதிலளித்தார், "நூற்றைம்பது பேர் ஸாவ்னேரிலிருந்து வந்துள்ளனர் பாபா, ஆனால் இவர்கள் உங்கள் சேவகர்கள்."

பாவ் கல்சூரியின் சகோதரி நீராதேவி (NIRADEVI), உரையாடலின் இடையே பாபாவிடம் கூறினார், "ஸாவ்னேரில் சிறந்த சேவகர் ஒருவர் இருக்கிறார், அவர் பெயர் குதே (KUTHE), அவர் எங்களுடன் வரவில்லை, அவர் பல மாதங்களாக ஊருக்கு வெளியே இருக்கிறார், எங்களுக்கு எப்படித் தொடர்பு கொள்வது என்று தெரியவில்லை. அவருக்கு தரிசனம் குறித்த செய்தி தெரியாதது துரதிர்ஷ்டவசமானது."

"**எனது பார்வை அவர் மீது உள்ளது, நான் அவருடன் இருக்கிறேன்**" என்று பாபா குறிப்பிட்டார்.

அப்போது அவர் நீராதேவியிடம், "**நீங்கள் பாவை சந்தித்தீர்களா?**" என்று கேட்டதற்கு, அவர் "ஆமாம்" என்று பதிலளித்தார். ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகளில் (1952க்குக் பிறகு) பாவ் கல்சூரி தனது சகோதரியைப் பார்க்கும் முதல் வாய்ப்பு இதுவாகும்.

முந்தைய நாள் இரவு, பாவ் கல்சூரியிடம் ஸ்ரீராம் போபஃலியை நினைவுபடுத்தும்படி பாபா கேட்டுக் கொண்டார். பாபா இப்போது போபஃலியிடம், **"உங்கள் உடல்நிலை எப்படி உள்ளது?"** என வினவினார்.

பாபாவின் கேள்வியில் ஆச்சரியமடைந்த போபஃலி, "இப்போது எல்லாம் சரியாகிவிட்டது" என்றார். அவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டதை பாபாவிடம் தெரிவிக்கவில்லை. பாபாவின் அருட்பார்வையால் தன் உடல்நிலை மேம்பட்டு வருவதாக அவர் நம்பினார்.

அப்போது பூனாவிற்கு வருகை தந்த சில அன்பர்கள் தரிசனத்திற்காக உள்ளே வந்தனர். அவர்களுடன் நாக்பூர் நகரின் லோக்கண்டே (LOKHANDE) குடும்பமும், வினூ கேரும் (VINOO KHER) இருந்தனர். பாபா அவர்களுக்கும் தரிசனம் வழங்கினார்.

ஒரு கட்டத்தில், ஹாரி கென்மோரிடம் பாபா, **"நீங்கள் மே 8 அன்று இந்தியாவிலிருந்து திரும்பிச் சென்று, டிசம்பரில் மீண்டும் வாருங்கள்"** என்று கூறினார்.

பாபாவிற்காக ஏதேனும் குறிப்பிட்ட கடமையைச் செய்ய வேண்டும் என்று விரும்பிய அன்பர் ஒருவரிடம், பாபா கூறினார், **"போய், நான் மனித உருவில் வருகை தந்த கடவுள் என்று உலகுக்குச் சொல்லுங்கள்! நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, நான் கடவுள் என்பதை அனைவரும் அறிவார்கள்!"**

அந்த மனிதர் முதல் முறையாக பாபாவிடம் வந்திருந்தார். நீங்கள் எங்களை அன்பால் நிரப்பாதவரை நாங்கள் உங்களை நேசிக்க இயலாது" என்று கெஞ்சினார்.

பாபா பதிலளித்தார், **"இதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன், நான் உங்களுக்கு வழங்கிய கடமையை நினைவில் கொள்ளுங்கள், நான் உங்களை அன்பால் நிரப்பினால், நீங்களும் நானும் பிரிந்து இருக்க மாட்டோம், பின்பு நான் வழங்கிய கடமையைச் செய்வது என்ற கேள்விக்கு இடமிராது. நீங்கள் இப்போது இருப்பது போல் இருந்தால் ('மெஹர் பாபா கடவுள்' என்று உலகுக்கு எடுத்துரைக்கும்) எனது கட்டளையை நிறைவேற்ற முடியும்."**

மற்றுமோர் அன்பரிடம், பாபா கேட்டார், **"உங்கள் மனைவி அல்லது உங்கள் சுயத்தை விட நீங்கள் என்னை அதிகமாக நேசிக்கிறீர்களா?"**

அவர் பதிலளித்தார், "நான் எவரையேனும் நேசிப்பதானால், அது உங்களைத்தான் பாபா."

அப்போது பாபா நகைச்சுவை துணுக்கு ஒன்றைக் கேட்க விரும்புவதாகக் கூறினார். ஒரு நபர் இதை எடுத்துரைத்தார்:

ஒருமுறை ஒரு மனிதர் சிறுவர்கள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று, அவர்களிடம் நகைச்சுவை புதிர் ஒன்றை முன்வைத்தார்: 300 கெஜம் நீளமுள்ள ரயில், மூன்று நிமிடங்களில் ரயில் நடைமேடையைக் கடந்து சென்றால், எனது வயது என்ன? சிறுவர்கள் அனைவரும் குழப்பத்தில் வாயடைத்துப் போயினர்.

ஒரு சிறுவன் திடீரெனக் கையை உயர்த்தியதும், கேள்விக்கான பதிலைக் கேட்டபோது, "நாற்பத்தாறு ஆண்டுகள், ஸார்" என்று பதிலளித்தான். அந்த நபர் அவரது சரியான வயதை சிறுவன் குறிப்பிட்டதைக் கேட்டு மிகவும் குழம்பிப்போனார். சிறுவனிடம், அவரது வயதை எப்படி இவ்வளவு துல்லியமாகக் கணக்கிட்டாய் என்று கேட்டதற்கு சிறுவன், "23 வயதான எனது மாமா அரை பைத்தியம்தான் ஸார்!" என்றான்.

அங்கிருந்த அனைவரும் நகைச்சுவையை ரசித்தனர், பாபா இப்போது ஒரு நகைச்சுவையை சொல்லப்போவதாகக் கூறி இவ்வாறு தொடங்கினார்: "**1962 கிழக்கு-மேற்கு சகவாசத்தின் போது, இந்தியாவிற்கு எதிராக சீனாவின் ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. இந்த சகவாச காலகட்டத்தில் பாகிஸ்தானில் உள்நாட்டுக் குழப்பம் நிலவியது. சீனர்கள், பாகிஸ்தானியர்கள் எவராக இருந்தாலும் சரி, எனக்கு அனைவரும் ஒன்றுதான்; ஆனால் உண்மை என்னவெனில் நான் இந்தியாவில் பிறவி எடுத்ததால் இந்தியர்கள் பதற்றமடைய வேண்டாம். இந்த நகைச்சுவையை நான் ரசிக்கிறேன். எனது நகைச்சுவை என்பது அறியாமையால் நீங்கள் அனுபவிக்கும் துன்பத்தை குறிக்கிறது. உங்களின் இந்த துன்பத்தை நானே என் மீது தாங்கிக்கொள்கிறேன்.**"

பாபா ஒருவரிடம் கேட்டார், "**நீங்கள் பூனா வருவதற்கு, உங்கள் பணியிலிருந்து எப்படி விடுப்பு கிடைத்தது?**"

அதற்கு அந்த நபர், "எனது விடுப்பு என்பது பெரிய பிரச்சினையாக இல்லை பாபா" என்று பதிலளித்தார்.

பாபா கேலி செய்தார், "**உலகில் பிரச்சினை என எதுவும் இல்லை. என்னை எனது சுய ரூபத்தில் பார்க்க முடியாத ஒன்றுதான் தீவிரமான பிரச்சினை!**"

பாபா ஒவ்வொரு நாளும் தரிசன நிகழ்ச்சியில், தம்மைத் தளராமல் தாராளமாக ஈடுபடுத்திக் கொண்டாலும், அவரது உடல்நிலை வலுவற்றதாகவே இருந்தது. தினமும் காலையிலும், மதியமும் அவரது அறையை விட்டு வெளியே வருவதற்கு முன்னர், அவர் பலவீனமாக உணர்ந்ததால், அவருக்கு மஸாஜ் செய்வதற்காக பாவ் கல்சூரி அழைக்கப்படுவது அனுதினமும் நடந்தது.

ஒரு நாள் காலையில் பாபா மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் பலவீனமாக உணர்ந்த போது, அவர் பாவ் கல்சூரியிடம் கேட்டார், "**என்னால் இன்று காலை அங்குச்** (மேடைக்கு) **செல்ல முடியுமா?**" இடையிடையே பாபா நேரத்தைக் கேட்டு, நிற்க முயற்சித்தார், ஆனால் அவரது கால்கள் நடுங்கின; பாவ் கல்சூரி அவரை மீண்டும் படுக்கையில் ஓய்வெடுக்குமாறு கூறினார்.

**"நான் அங்கு எப்படிச் செல்வேன்?"** என்று பாபா கேட்டார். **"ஆனால் நான் அங்குச் செல்லாவிட்டால் என் அன்பர்கள் என்ன நினைப்பார்கள்?"** பாவ் கல்சூரி சிறிது நேரம் கால்களை மஸாஜ் செய்தார்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா, **"மீண்டும் முயற்சிக்கிறேன்"** என்று சைகையால் தெரிவித்து எழுந்து நின்றார்; அதேதான் நடந்தது; பாபாவின் கால்கள் கட்டுக்கடங்காமல் நடுங்க, மீண்டும் படுக்கையில் ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று.

மூன்று அல்லது நான்கு முறை பாபா நிற்க முயன்றார், ஆனால் அவரால் உடல் ரீதியாக முடியவில்லை. இறுதியாக, அவர் பாவ் கல்சூரியிடம் அவரது கைகளைப் பற்றிக் கொள்ளுமாறு சைகையால் தெரிவித்து, பாவ் கல்சூரியின் ஆதரவுடன் அவர் மெதுவாக எழுந்து நின்று, சில அடிகளை எடுத்துவைக்க முயன்றபோது, அவரால் முடிந்தது. **"என்னுடைய நிலைமையைப் பாருங்கள்!"** பாபா பெருமூச்சு விட்டார். **"என் அன்பர்கள் வந்துவிட்டனர், என்னால் சரியாக நடக்கக்கூட முடியவில்லை, அவர்கள் என்ன நினைப்பார்கள்? நான் எவ்வளவு உதவியற்றவனாகிவிட்டேன்!"**

ஆனால் பாபா தமது அறையின் வாசலைக் கடந்து வெளியே சென்ற அடுத்த கணமே, ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுவதும் - அவர் தனக்கு எதுவும் நடக்காதது போல சாதாரணமாக நடந்து செல்வதும், சோர்வு, இடர்பாடுகள் போன்றவற்றின் வெளிப்பாடு முற்றிலும் மறைந்துவிட்டது போலத் தோற்றமளிப்பதும் அன்றாட நிகழ்வு. பாபாவின் முகம் புதிய ரோஜாவைப் போல ஒளிர்ந்தது! மூன்று நிமிடங்களுக்கு முன்பு, நிற்கக் கூட முடியாத அளவுக்கு பாபா பயங்கரமான வலியால் துடித்தார் என்பதையும் அறியாமல், 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று அவரது அன்பர்கள் மீண்டும் மீண்டும் எழுப்பிய கோஷத்திற்கு மத்தியில், வேகமாக முன்னேறி பாபா மேடையைச் சென்றடைந்தார்.

1965 மே 3 திங்கட்கிழமை காலை 7:30 மணியளவில் பாபா, குருபிரசாத்தின் பக்க அறைக்குச் சென்ற வேளையில், அங்கு ஏற்கனவே பல அன்பர்கள் கூடியிருந்தனர். கிஷன் ஸிங், டெஹ்ரா டூன் மையத்தைச் சார்ந்த மகளிருக்கு சில நிமிடங்கள் தனிப்பட்ட நேர்காணலை வழங்குமாறு பாபாவிடம் கெஞ்சினார். பாபா அதற்கு மறுப்புத் தெரிவித்து, கிஷனிடம், **"நீங்கள் மீண்டும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தால், உங்களை இங்கிருந்து தூக்கி எறிந்துவிடுவேன்!"** என்று நகைச்சுவையாகக் கூறி, தொடர்ந்தார், **"தனிப்பட்ட நேர்காணல்களை வழங்குவதில் எனது துன்பம் மற்றும் எனக்கு ஏற்படும் சிரமம் குறித்து நீங்கள் கவலைப்படவில்லையா?"**

மண்டபத்திலிருந்து வெளியே வந்த பாபா, காலை 8:25 மணிக்கு மேடையில் தோன்றினார். கூட்டம் அவரை உற்சாகப்படுத்தியது. ஷிண்டே அவருக்கு மாலை அணிவித்தார், மதுசூதன் ஒரு பாடலைப் பாடினார்; அதைத் தொடர்ந்து மல்லிகார்ஜுன ராவ் குருநாதருக்கான பர்வர்திகார் பிரார்த்தனையை

மொழிந்தார். அதே பிரார்த்தனையை தெலுங்கில் சிந்தா சர்வராவும் மொழிந்தார். எரச் பாபாவின் கீழ்வரும் செய்தியை வாசித்தார்:

**நீங்கள் என்னுடன் இருக்கும் இந்த நேரத்தில், உங்கள் மனதின் பயிற்சிக்காக பல நூறு வார்த்தைகளை வழங்க விரும்பவில்லை. என் அன்பில் உங்கள் இதயங்கள் விழித்திருக்க, உங்கள் மனம் தூங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**உங்களிடமும், என்னிடமும் போதுமான வார்த்தைகள் உள்ளன; நான் கொடுக்க வேண்டியதை வார்த்தைகள் மூலமாகக் கொடுப்பதில்லை. உங்களுடைய பரிபூரண சரணாகதியின் நிசப்தத்தில், எப்பொழுதும் மௌனமாக இருக்கும் என் அன்பு உங்களை வந்தடைய முடியும் - அது என்றென்றும் உங்களுடையதாக இருப்பதை, என்னைத் தேடும் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளலாம்.**

**என் அன்பின் வார்த்தை, அதன் மௌனத்தைக் கலைத்து, உங்கள் இதயங்களில் பேசி, நான் உண்மையில் யார் என உங்களுக்குச் சொல்லும் போது, நீங்கள் எப்பொழுதும் கேட்க விரும்பிய உண்மையான வார்த்தை அது என்பதை நீங்கள் அறிவீர்கள்.**

பாபா பின்னர் எரச் மற்றும் டாக்டர் பரூச்சாவின் உதவியோடு எழுந்து நின்று, அவர் கூட்டத்தை நோக்கி கைகளை அசைத்தார். அவர் நிற்கும்போது, அனைவரும் எழுந்து நின்றனர். பாபா அவர்களை எழுந்து நிற்கவேண்டாம் என்று கட்டளையிட்டார், ஏனெனில், அவர் நின்றுகொண்டிருப்பதன் நோக்கமே தொலைவில் அமர்ந்திருந்த அன்பர்களுக்குத் தமது தரிசனத்தை வழங்குவதாகும். மேலும் முன் வரிசைகளை ஆக்கிரமித்த அனைவரும் எழுந்து நின்றால், பின்பக்கத்தில் இருப்பவர்களால் பாபாவைப் பார்க்க முடியாது.

எரச் இவ்வாறு அறிவித்தார்: “தரிசனத்தை அடையப் பெற்றவர்கள் மீண்டும் வரக்கூடாது. பூனா மையத்தில் இன்று இரவு 7:00 மணிக்கு ‘புர்ரா கதா’ (BURRA KATHA, தெலுங்கு நடன நாடகம்) நடைபெற உள்ளது; (ஒவ்வொரு திங்கட்கிழமை மாலையிலும் பூனா மையம் இரவு-கூட்டங்களை நடத்துவது வழக்கம்). இன்று ஆந்திரா அன்பர்களுக்கான பாபாவின் தரிசன நாள், ஆனால் இன்று புறப்பட இருப்பவர்களும் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.”

காலை 9:00 மணிக்கு தரிசனம் தொடங்கியது. பல புதிய அன்பர்களும் வந்திருந்தனர். காக்கிநாடாவைச் சேர்ந்த பி.வி.எல். நரசிம்மன் (P.V.L. NARASIMHAN) என்பவரின் அனுபவம், பாபாவை முதல்முறையாக சந்திக்கும் பலருக்குப் பொதுவானதாக இருக்கலாம். அன்று காலை பாபா மேடையில் வந்தபோது அவர் எவ்வாறு தோற்றமளித்தார் என்பதை நரசிம்மன் விவரித்தார்:

...ஒளி ஊடுருவும் அவரது உடலின் தங்க நிற மேனியின் கீழிருந்து, சில ஒளிரும் பொருட்கள் மின்னுவதைப் போல், அவரது உடல் புலன்களால் உணரக்கூடிய பிரகாசத்தை வெளிப்படுத்தியது. இருளில் புயலில் சிக்கிய கப்பல்கள், அருகிலமைந்த கலங்கரை விளக்கத்தின் ஒளியைக் கண்டு,

தைரியமும் நம்பிக்கையும் அடைவது போல், அறியாமை எனும் இருளிலிருந்து விடுபடப் போராடும் பல ஆன்மாக்கள், பாபாவைக் கண்டதும் அவரிடமிருந்து வெளிப்படும் ஆன்மீக ஒளி மற்றும் அன்பின் கதிர்களின் தோற்றத்தில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைந்தன.

அவரது இயற்கையான மனநிலை மற்றும் உணர்ச்சி வசப்படும் சுபாவத்தை நன்கு அறிந்திருந்த நரசிம்மன், மெஹர் பாபா, அவர் பறைசாற்றும் தெய்வீகத் தன்மையை உண்மையிலேயே அடையப் பெற்றவராக இருந்தால், 'நான் தரிசனம் செய்யும்போது அவர் என்னை நேருக்கு நேர் பார்க்க வேண்டும்' என்று நினைத்தார். அவர் அதைக் குறித்துக் கூறியதாவது:

"பாபா தலையை உயர்த்தி ஒரு கணம் என்னை நேராக உற்று நோக்கியபோது, அவர் அப்படிப் பார்ப்பார் என்று நான் சற்றும் நினைக்கவில்லை. அவர் எனது எண்ணங்களை அறிவார் என்று நான் சற்று பதற்றமடைந்தேன், மேலும் என் மனதில் தீய அல்லது சந்தேகத்திற்குரிய எண்ணங்கள் எதுவும் வரக்கூடாது என உள்ளூர பிரார்த்தனை செய்தேன்.

"நான் பாபாவின் பாதங்களை தலை தாழ்த்தி தொட்ட போது, அவை பட்டு போலவும், மலர் இதழ்களின் மென்மையுடனும், கோடை பனி போன்ற குளிர்ச்சியாகவும் இருந்ததை உணர்ந்தேன். மின்சார டைனமோ ஒன்றின் கைப்பிடியைத் தொட்டது போல் உடலில் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தியது! மணல் அல்லது பருத்தியின் மென்மையான மேற்பரப்பில் விழும் பந்து அங்கேயே அசைவின்றி இருப்பது போல, பாபாவின் மென்மையான பாதங்களை நாம் தொடும் போது, அவை நமது மனப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நினைத்தேன்."

தரிசனத்திற்காக வந்த பலர், பாபா அவற்றை தொட்டு ஆசீர்வதிக்கும் விதத்தில், இனிப்புப் பொட்டலம் அல்லது நினைவுச் சின்னங்களைக் கொண்டுவந்து, அவற்றை அவருடைய பிரசாதமாகத் திரும்ப எடுத்துச் சென்றனர். நினைவுச் சின்னங்களில் திருமண மோதிரங்கள், கைக்குட்டைகள், போர்வைகள், தலையணைகள், மரச் செருப்புகள், ஷர்பத் பாட்டில்கள் போன்ற பல பொருட்கள் இருந்தன. ஒவ்வொன்றையும் தொட்டு ஆசீர்வதிப்பதில் பாபா எந்த விதமான சலிப்புணர்வையும் வெளிப்படுத்தாத போதும், இந்தச் செயல் அவர் உடலில் அதீத அழுத்தத்தை ஏற்படுத்தியதை ஒருவர் கற்பனை செய்யலாம். அவர் ஒவ்வொருவருக்கும் வழங்கிய அன்பு நிறைந்த புன்னகையையும், ஆசீர்வாதத்தின் ஸ்பரிசத்தையும், அனைவரும் மகிழ்ச்சி பொங்கும் கண்ணீருடனும், மனநிறைவுடனும் பருகினர். இந்த தரிசன வேளையில், பாபா மேடையில் அமர்ந்திருந்த போதும் ஒருவரைக் கூட முத்தமிடவோ, தழுவவோ இல்லை. டாக்டர் கிண்டே, பாபாவிடம் தலையை அசைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார், ஆனால் பாபா அவரது கழுத்தை, தொடர்ந்து அசைத்து, தனது அன்பர்களை அனைத்து திசைகளிலும் பார்த்துக்கொண்டிருந்தார்.



குருபிரசாத் (GURUPRASAD), மே (MAY) **1965**



பெஹராம் காணொளி
புகைப்படம் எடுக்கும் காட்சி
(BEHRAM FILMIMG THE DARSHAN)



பூனா (POONA), மே (MAY) **1965**

கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும், தரிசனத்தின் அவசரத்தில் தாய்மார்கள், குழந்தைகளை மறந்துவிடுவதும், தொலைந்துபோய் அழுது ஆரவாரம் செய்யும் குழந்தைகளை மேடைக்குக் கொண்டுவந்து ஒலிபெருக்கியில் தெரியப்படுத்துவதும் தொடர்ந்து நடந்துவந்த வேளையில், தாய், மெய்மறந்த நிலையில் தனது குழந்தை என்பதை உணர சிறிது நேரம் பிடித்தது.

பாபா தனது பார்வையை வலது புறம் சுழற்றிய போது, அங்கு மூன்று வரிசைகளைக் காண முடிந்தது; பொதுவாக இரண்டு வரிசைகள் - ஒன்று ஆண்களுக்கும் மற்றொன்று பெண்களுக்கும் மட்டுமே இருந்தன. பாபா அதைக் குறித்து கேட்ட போது, இரண்டு பெரிய வரிசைகள் ஆந்திரா அன்பர்களாலும், மூன்றாவது வரிசை, அன்று புறப்படவிருந்த அன்பர்களால் அமைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆந்திரா அன்பர்களின் வரிசைகள் மிகவும் நீளமாக இருந்தன; அன்று திரும்பிச் செல்ல இருந்தவர்கள் அவர்களுடன் இணைந்திருந்தால், அவர்கள் நிச்சயமாக தரிசனத்தை இழந்திருப்பார்கள். பாபா அப்போது, "**சுட்டெரிக்கும் வெயிலில் நீண்ட வரிசை நிற்கிறது**; **தரிசனத்தைத் துரிதப்படுத்துங்கள்**!" என்றார்.

காலை 11:05 மணிக்கு, பாபாவின் ஆரத்தி நிகழ்த்தப்பட்டது, அவர் எழுந்து நின்று கூட்டத்தினருக்கு அன்பையும், ஆசிகளையும் வழங்கிய பின்னர், எரச், ஹோஷங் இருவரும் பாபாவிற்கு உதவியாக இருந்து, அவரை சக்கர நாற்காலியில் அமர வைத்தனர்.

அன்று பிற்பகல் 3:40 மணிக்கு பாபா பக்கத்து அறைக்குத் திரும்பிச் சென்றார். ஹமிர்பூர் குழு தரிசனத்திற்காக மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாக கூட்டத்தில் ஒருவர் தெரிவித்தார்; இப்போது மூன்று நாட்கள் மட்டுமே எஞ்சியுள்ளன, ஆயிரக்கணக்கான அன்பர்கள் இன்னும் தரிசனத்திற்காகக் காத்திருந்தனர்.

ஆந்திர மாநில நிதி அமைச்சர் சன்னா ரெட்டி (THE FINANCE MINISTER OF ANDHRA PRADESH) மற்றும் அவரது குடும்பத்தினர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். பாபா அவரிடம், "**இப்போது பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே முறுகல் நிலை உருவாகியுள்ளது. நான் இங்கு பிறவி எடுத்ததால் இந்தியா ஆசீர்வதிக்கப்பட்டது. கவலைப்பட வேண்டிய தேவை இல்லை**" என்று கூறினார்.

"சீனாவின் நிலை கூட மோசமாக உள்ளது" என்றார் அமைச்சர்.

அதற்கு பாபா கூறினார், "**அனைத்தும் நான் அறிவேன். இந்தியா கவலைப்படத் தேவையில்லை. நான் எனது மௌனத்தைக் கலைக்கும் போது, நான் யார் என்பதை உலகம் அறிந்து கொள்ளும். மக்கள் என்னை நேசிக்கத் தொடங்கும் போது அனைத்து துன்பங்களும் மறைந்துவிடும். கடவுள் ஒருவருக்காக மட்டுமே கவலைப்பட வேண்டியது முக்கியம் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.**"

ஆந்திர முதல்வர் கே. பிரம்மானந்த ரெட்டியும் (THE CHIEF MINISTER OF ANDHRA PRADESH, K. BRAHMANANDA REDDY) பாபாவைப் பற்றி அறிந்து, அவரது பிறந்தநாளில் ஆசிர்வதிக்குமாறு பாபாவிற்கு கோரிக்கை அனுப்பியிருந்தார். "**வாழ்க்கையை தைரியமாகவும் நேர்மையாகவும் எதிர்கொள்ளுங்கள். நான் உங்களுடன் இருக்கிறேன்**" என்று பாபா அவரது ஆசிகளை வழங்கினார்.

அலிகார் நகரின் தோடி ஸிங் வர்மா (TODI SINGH VERMA OF ALIGARH) அப்போது அறைக்குள் நுழைந்தார். 1950ஆம் ஆண்டு 'புது வாழ்வு' பயணத்தின் போது, பாபா மற்றும் மண்டலிக்கு பத்து நாட்கள் உணவளித்த அவர், பாபாவின் நீண்டகால அன்பராக இருந்தார். இந்த நேரத்தில், அவர் ஒரு செழிப்பான தொழிலதிபரின் தோற்றத்தில் இல்லாமல், ஒரு மஸ்த் போலத் தோற்றமளித்தார்!

ஈரான் தேசத்தைச் சேர்ந்த ஜஹாங்கீர் மெஹ்ரபன்பூர் (JEHANGIR MEHRABANPUR), அவரது மனைவி மற்றும் ஆறு நபர்களை, அலோபா அங்கிருந்து வழிநடத்தி, பெரும் சிரமங்களைத் தாண்டி, பூனாவிற்கு அழைத்து வந்தார். அந்தக் குழுவில் இருந்த மூத்த பெண்மணி வரும் வழியில் மும்பையில் கீழே விழுந்து, விலா எலும்பு பாதிக்கப்பட்ட நிலையிலும், வலியையும் பொருட்படுத்தாமல், காயத்தின் தீவிரத்தையும் எவரிடமும் சொல்லாமல், தினமும் குருபிரசாத்திற்கு வந்தார். ஈரானியர்கள் பல பொட்டலங்கள் நிரம்ப உலர் பழங்களை எடுத்து வந்து பாபாவின் பாதங்களில் அன்புடன் வைத்தனர். ஈரானில் வாழும் வேறொரு பெண்மணி, இந்தக் குழுவில் வரும் பெண்மணியிடம் சிறிது பணத்தைக் கொடுத்து, மெஹர் பாபாவின் பாதங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டதை அவர் இப்போது விவரித்தார்: "நாங்கள் புறப்படுவதற்கு சற்று முன்னர், இந்தப் பெண்மணி மிகவும் சிக்கலான மற்றும் கடினமான குழந்தைப்பேறு வலியில் இருந்தார், மேலும் அவரைக் காப்பாற்ற மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்யத் தயாராகி வந்த நிலையில், அவர் தொடர்ந்து 'பாபா, பாபா!' என உச்சரித்துக்கொண்டே இருந்த சில நிமிடங்களில், மருத்துவர்களை வியப்பில் ஆழ்த்தும் வகையில், அறுவை சிகிச்சையின்றி இரட்டைக் குழந்தைகளை பாதுகாப்பாக ஈன்றெடுத்தார். இந்த அன்பான காணிக்கையை உங்கள் காலடியில் வைக்கச் சொன்னார்."

அந்தப் பணத்தை அனுப்பிய பெண்ணிடம், அவரது அன்பையும் சேர்த்துத் திருப்பித் தருமாறும், அந்தப் பணத்தில் ஈரானில் உள்ள ஏழைகளுக்கு உணவளிக்குமாறும் பாபா அறிவுறுத்தினார்.

ஒரு பாரசீகப் பெண்மணி, தரிசன வேளையில் கதறி அழுது, பாபாவிடம், "உங்கள் பிரிவை என்னால் தாங்க முடியவில்லை" என்று கூறினார்.

பாபா உடனே, "**என்னாலும் இந்தப் பிரிவைத் தாங்க முடியவில்லை!**" என்று பதிலளித்தார்.

ஈரானைச் சேர்ந்த வேறொருவரிடம், "100 **சதவிகிதம் நேர்மை ஒன்றுதான் ஒருவரை பாபாவிடம் அழைத்துச் செல்லும். ஒருபோதும் பாசாங்குத்தனத்தில் ஈடுபடாதீர்கள். நீங்கள் உள்ளே என்னவாக உள்ளீர்களோ அதைப் போலவே வெளியளவிலும் இருங்கள்**" என்று கூறினார்.

அப்போது பிற அனைவரும் பாபாவை அணுகினர். பாபாவிடம் பங்க்ராஜ் வினவினார், "உங்கள் கழுத்து வலி எப்படி உள்ளது?"

பாபா பதிலளித்தார், "**அதற்கு எல்லையில்லை; அது உடலளவிலும், உலகளவிலும் ஆனது. நான் எனது மௌனத்தைக் கைவிடும் போது, அது மறைந்துவிடும்.**"

ஜபல்பூரைச் சேர்ந்த முனிராஜ் (MUNIRAJ OF JABALPUR) 'எப்போது மௌனத்தைக் கலைப்பீர்கள்' என்று பாபாவிடம் கேட்டதற்கு இவ்வாறு பதிலளித்தார், "**நானும் எனது மௌனத்தைக் கலைக்க ஆவலாக உள்ளேன், பின்பு நான் சுதந்திரமாகிவிடுவேன், உலகமும் அடக்குமுறையிலிருந்து விடுபடும். பல ஆண்டுகளாக நான் கடைப்பிடித்த மௌனத்திற்கு உரிய காரணம் இல்லாமலில்லை. நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது அதன் தாக்கம் உலகளாவியதாக இருக்கும்.**

"**நான் எவ்வளவு துன்பப்படுகிறேன் என எவருக்கும் தெரியாது. எனது துன்பம் உடலளவில் மட்டுமின்றி, மனம் மற்றும் ஆன்மீக அளவிலும் இருப்பவை. உங்கள் மன மற்றும் ஆன்மீக துன்பத்திற்கும், நான் அனுபவிப்பதற்கும் மிகையான வேறுபாடு உள்ளது. எனது மனதளவிலான துன்பம் மிகவும் தீவிரமானது; அதற்கு, பொய்யும் போலியுமான துறவிகளே காரணம்; அவர்கள் இன்று உலகில் ஏராளமாக உள்ளனர்; நான் அனுபவிக்கும் ஆன்மீக துன்பம் என்னவெனில், நான் என்னுள் சுதந்திரமாக இருக்கும் அதே வேளையில் உங்களில் கட்டுண்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன்.**"

அறையில் நிரம்பியிருந்த அனைவரையும் பார்த்த பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**இன்று மதியம் 20 பேரைத்தான் அழைத்திருந்தேன், ஆனால் இங்கு சுமார் 150 பேர் உள்ளனர்!**"

தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்ற பலர் அங்கு இருப்பதாக பாபா குறிப்பிட்டு, அவர்களில் ஒருவரான டாக்டர் மூர்த்தியிடம், "**நீங்கள் தத்துவத்தில் என்ன கற்றுக்கொண்டீர்கள்?**" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த மூர்த்தி கூறினார், "நான் கற்றதைக் களைய கற்றுக்கொண்டேன்!"

உரையாடல் அப்போது எதிர்வரும் மேற்கத்திய அன்பர்களுக்கான சகவாசத்தை நோக்கி நகர்ந்த போது, '**டிசம்பரில் சகவாசம் மும்பைக்கு பதிலாக அஹமதுநகரில் நடைபெறவிருப்பதாகவும், மேற்கத்திய நாடுகளிலிருந்து ஏறக்குறைய 250 அன்பர்கள் பங்கேற்பார்கள்**' என்று எதிர்பார்க்கப்படுவதாகவும்

பாபா கூறினார். "**என் அன்பர்கள் என்னை சகவாசத்திற்காக அமெரிக்காவிற்கு அழைக்கிறார்கள், ஆனால் நான் இப்போது இந்தியாவை விட்டு வெளியேறப் போவதில்லை**" என்று அவர் குறிப்பிட்டார்.

பிற்பகல் 4:50 மணிக்கு பாபா பக்கத்து அறையை விட்டு வெளியேறியதும் , கூட்டம் கலைந்து சென்றது.

அடுத்த நாள் 1965 மே 4 செவ்வாய் காலை 7:20 மணிக்கு, பாபா பக்கத்து அறைக்குள் நுழைந்து, ஹாரி கென்மோரிடம், "**நான் எவ்வளவு துன்பப்படுகிறேன், இருந்தும் நான் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தோன்றுவது குறித்து உங்களுக்கு ஏதேனும் கருத்து உள்ளதா?**" என வினவினார்.

கென்மோர் பதிலளித்தார், "நீங்கள் ஏன் அனைத்தையும் 'பூ' என ஊதித் தள்ளக்கூடாது?"

எரச் இடையே குறுக்கிட்டு, "அது முழு ஆட்டத்தையும் முடிவுக்குக் கொண்டுவருவதைக் குறிக்கும்!" என்றார்.

பாபா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

தரிசனத்திற்காக அழைக்கப்பட்டிருந்த நபர்களில், சிலர் ஹைதராபாத்திலிருந்து வந்தவர்கள். பாபா அவர்களிடம் கூறினார்:

**நான் அடிக்கடி ஹைதராபாத்திற்கு விஜயம் செய்தேன், ஆனால் எனது மஸ்த் பணிக்காக என் உருவை மறைத்துச் சென்றேன். நான் கார், டோங்கா, மாட்டு வண்டிகளில் பயணம் செய்தேன். சில நேரங்களில் ஒட்டகத்திலும் பயணம் செய்ய வேண்டியிருந்தது. நான் அவ்வப்போது ரயில் நடைமேடைகளிலும் தூங்குவதை வழக்கமாகக் கொண்டேன். ஒருமுறை நாங்கள் அஹமதாபாத்தில் பொதுப்பணி துறை களஞ்சியம் (P.W.D) அருகே நிழலான இடத்தில் ஓய்வெடுத்தோம். நிர்வாகப் பொறியாளர் அன்று ரோந்து வர நேர்ந்தது; அங்கே நாங்கள் முகாமிடுவதை எதிர்த்து, அந்த நிலத்தில் எங்களை அனுமதித்ததற்காக காவலாளியை பணி நீக்கம் செய்தார். நான் எரச்சிடம் அங்குச் சென்று நாங்கள் யார் என்பதை அவரிடம் விளக்குமாறு கூறினேன், அதற்குப் பிறகுதான் காவலாளி மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார்.**

**நான் மனித உருவில் வருகை தந்த கடவுள். நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது உலகம் இதை அறியும்.**

எரச்சின் உதவியோடு, பாபா வழக்கத்தை விட முன்னதாக சுமார் 8:00 மணியளவில் மேடைக்கு நடந்து சென்றார். கூட்டத்தின் ஆரவாரம் தணிந்த அந்த நேரத்தில், ஹமிர்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த அன்பர்களுக்கு அவர் ஒரு செய்தியை வழங்கினார்: "**ஹமிர்பூர் அன்பர்கள் ஏழைகள் ஆதலால் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று ஹமிர்பூர் அன்பர்களின் அன்பு உணர்கிறது. ஆனால் ஏழை, பணக்கார அன்பர்கள் அனைவருக்கும் நான் அடிமை. ஹமிர்பூர் அன்பர்கள் அனைவரும் பொறுமையாக இருக்க**

**வேண்டும், நாளை காலை எட்டு மணி முதல் பதினொரு மணி வரை நான் அவர்களுக்கு தரிசனம் வழங்குவேன்.**

**"இப்போது தரிசன நிகழ்ச்சியை ஆரம்பிக்கலாம். யார் ஒருவரையும் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை, அனைவரையும் நான் அறிவேன்."**

இனிமேல் செய்திகள் அல்லது அறிவிப்புகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என்றும், குருநாதருக்கான பர்வர்திகார் பிரார்த்தனையும் (MASTER'S PRAYER) மொழிவது நிறுத்தப்படும் என்றும் எரச் மூலமாக இந்த அறிவிப்பை வழங்கினார். (பொதுவாக இந்தப் பிரார்த்தனைதான் ஒவ்வொரு காலையிலும் முதல் அம்சமாக இருந்தது). தரிசனத்திற்காக இன்னும் ஏராளமான பேர் காத்திருக்கும் நிலையில் பிரார்த்தனைக்கு நேரம் இராது. காலை 8.05 மணிக்கு தரிசனம் தொடங்கிய ஐந்து நிமிடங்களில் மஹாராணி ஷாந்தாதேவி மேடைக்கு வந்து, அழகான வெள்ளை ரோஜா மாலையை பாபாவிற்கு அணிவித்தார். இந்த மாலை ஒரு பார்சி அன்பரின் கைகளால் செய்யப்பட்டது.

காலை 8:40 மணிக்கு, வெகு தொலைவில் அமர்ந்திருந்த அன்பர்களுக்காக, பாபா எழுந்து நின்று, கைகளை அசைத்து, **"உங்கள் எல்லோராலும் என்னைப் பார்க்க முடிகிறதா?"** என்று கேட்டபோது, பின்னால் அமர்ந்திருந்தவர்களில் பலர் பார்க்கமுடிகிறது என்று சைகையால் தெரிவிக்க, சிலர் முடியவில்லை என்றும் கைகளை அசைத்தனர்.

பலர் மலர் மாலைகளை கொண்டு வந்தனர். அவற்றிலிருந்து தனிச் சிறப்புமிக்க இளஞ்சிவப்பு ரோஜாக்களால் செய்யப்பட்ட ஒன்றை எரச், பாபாவின் கழுத்தில் அணிவித்தார். பெண்கள் குழு ஒன்று பாபாவின் காலடியில் பணத்தை வைக்க முயன்றபோது, அதற்கு மறுப்புத் தெரிவித்து, அவருடைய தரிசனத்திற்காக வரும் எவரும் பணத்தை வழங்க வேண்டாம் என்று தெரிவிக்குமாறு சேவகர்களிடம் கேட்டுக் கொண்டார்.

அன்று, முந்தைய நாள் பாபாவின் தரிசனத்தை அடையப் பெறாத ஆந்திரா அன்பர்கள் பலர், வரிசையில் முதலாவதாகவும், அதைத் தொடர்ந்து சிற்றூர்களிலிருந்து வருகைதந்த அன்பர்கள் பலரும் நின்றுகொண்டிருந்தனர். விஜயவாடாவைச் சேர்ந்த ஏ.எஸ். ஜெகந்நாத் (A.S. JAGANNATH), பாபாவை தரிசனம் செய்த பின்பு, கயிற்றின் மேல் தடுக்கி விழுந்து, வலது தொடை எலும்பில் காயமடைந்த ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடந்தது. அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதீத தைரியத்தை வெளிப்படுத்திய அவர் எஞ்சிய இரண்டு நாட்களில் தரிசனம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் இருந்தார். அவர் மீண்டும் பாபாவிடம் அழைத்துச் செல்லப்படுவார் என்று உறுதியளித்தபோது, அவர் மகிழ்ச்சியடைந்தார்.

காலை 10:55 மணிக்கு நடந்த ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவுக்கு வந்தது. கூட்டத்தில் அனைவரையும் ஆசிர்வதித்து, பின்பு பாபா திரைக்குப் பின்னால் அழைத்துச் செல்லப்பட்டார்.



குருபிரசாத் (GURUPRASAD)



ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஆஸ்திரேலிய தம்பதிகளான பீட்டர் ரோவன் (PETER ROWAN), அவரது மனைவி ஹெலன் (HELEN) இருவரும் தரிசன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள பாபாவால் அனுமதிக்கப்பட்டனர். 22 வயதான பீட்டர், 1963 இறுதியில் மெல்போர்ன் நகரில் வாழும் ஓஸ்வால்ட் ஹால் (OSWALD HALL) மூலமாக பாபாவைப் பற்றி கேள்விப்பட நேர்ந்தது. 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' (THE PERFECT MASTER) புத்தகத்தின் முதல் ஒரு டஜன் பக்கங்களைப் படித்த பின்பு, பீட்டர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "பாபா எனக்கு எப்பொழுதும் குருநாதர், என்றென்றும் அவ்வாறே இருந்தார் என்று எனக்குத் தெரியும். அவரை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது என்ற கேள்விக்கே இடமில்லை; அது ஓர் உண்மை. நான் அவருடையவன்." தம்பதியர் பிற ஆஸ்திரேலிய அன்பர்களுடன் இந்தியாவிற்கு வர திட்டமிட்டிருந்த அவ்வேளையில், பாபா அவர்களின் தரிசனத்தை டிசம்பர் வரை ஒத்திவைத்தார். பீட்டர், ஹெலன் இருவரும் ஏமாற்றம் அடைந்தாலும், எப்படியும் இந்தியா செல்ல வேண்டும் என்று முடிவு செய்தனர். அவர்கள் பாபாவை சந்திக்கும் எந்தவிதமான எண்ணமும், எதிர்பார்ப்பும் இல்லாதபோதும், அவர்கள் ஐந்து சத்குருக்களின் சமாதி-கோயில்களுக்கான பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டு, உண்மையில் பாபாவை சந்திக்க பிற அன்பர்களுடன் டிசம்பர் மாதத்தில் இந்தியா திரும்பி வரவும் முடிவு செய்தனர்.

ரோவன் தம்பதியர் ஆஸ்திரேலியாவிலிருந்து கப்பல் மூலம் புறப்பட்டு 1965 பிப்ரவரி 26 அன்று மும்பையை வந்தடைந்த போது, ஃபிரான்சிஸிடமிருந்து அவர்களுக்கு ஒரு கடிதம் காத்திருந்தது. ஓஸ்வால்ட் அவர்களின் வருகையைப் குறித்து ஃபிரான்சிஸிடம் தெரிவித்திருந்தார். மே மாதம் நிகழவிருக்கும் கிழக்கத்தியர்களுக்கான தரிசன நிகழ்ச்சியில் கலந்துகொள்ள பாபா அவர்களுக்கு அனுமதி அளித்ததாக ஃபிரான்சிஸ் எழுதியிருந்தார்; ஆனால் அவர்கள் விரும்பினால் ஷிர்டியில் அமைந்த சாய்பாபா மற்றும் பூனாவில் ஹஸ்ரத் பாபாஜான் ஆகியோரின் சமாதிகளைத் தவிர வேறு எங்கும் செல்ல வேண்டாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். வேறு எந்தத் துறவிகள், யோகிகள் அல்லது ஆசிரமங்களுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தியிருந்தார். எனவே இரண்டு மாதங்கள், பீட்டர், ஹெலன் இருவரும் இந்தியாவைச் சுற்றி வந்தனர். பயணத்திற்குப் பின்னர் அவர்கள் மும்பைக்குத் திரும்பி வந்து அர்னவாஸ் மற்றும் நரிமனை சந்தித்து அவர்களுடன் பூனாவிற்கு வந்தனர்.

1965 மே 1 அன்று, ரோவன் தம்பதியர் பூனா மையத்தில் அமர்ந்திருந்த வேளையில் அவர்கள் பாபாவை முதன் முதலாகப் பார்க்க நேர்ந்தது. பீட்டர் ரோவன் இவ்வாறு அவதானித்தார்:

"அன்பான பாபாவை பற்றிய எனது முதல் பார்வை உடனடியாக ஒரு முழுமையான நிறைவைக் கொண்டு வந்தது; இது சாத்தியம் என்று நான் கருதவில்லை. அந்தத் தருணம் காலத்துடன் எந்த சம்பந்தமும் இல்லாமல், நித்தியத்திற்கும் உளதாயிருந்து உயிர் வாழ்ந்தது. பாபாவுடன், நானும் அந்தத் தருணமும் என்றென்றும் உளதாயிருந்தோம். இயற்கையாகவே, பின்னோக்கிப்

பார்க்கும்போதுதான் என்னால் இதைப் பாராட்ட முடிந்தது, ஏனெனில் இந்தத் தருணத்தின் உள்ளார்ந்த உணர்வு மிகவும் முழுமையானது."

அன்று காலை, சுமார் அரை மணி நேர தரிசன நிகழ்ச்சிக்குப் பிறகு, ரோவன் தம்பதியரை அழைக்க மண்டலியில் ஒருவரை அனுப்பி, "பாபா இப்போது உங்களைப் பார்க்க விரும்புகிறார்" என்று அவர்களிடம் கூறினார்.

பீட்டர் அந்த சம்பவத்தை இவ்வாறு விவரித்தார்:

நாங்கள் பாபாவின் பாதங்களை நோக்கி வரிசையில் இணைந்தோம்; இறுதியில் நான் பாபா முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டேன், பின்னர் எனது தலை அவரது காலடியில் இருந்தது. தலைவணங்கும் இந்தத் தருணம், என்னில், முழுமையான மறதியை ஏற்படுத்தியது. இவ்வாறு எனது மனம் செயல்படாமல் போனதால், அன்பிற்குரியவரில் நான் முழுமையாக மூழ்கியது போல் இருந்தேன். பாபாவின் பாதம் பணிந்த அனுபவம் என்னவென்று இன்றுவரை என்னால் சொல்ல முடியவில்லை, நான் அவரில் முற்றிலும் தொலைந்து போனேன் எனவும், அது விவரிக்க முடியாத ஆனந்தம் என்றும் கூறுகிறேன்.

ரோவன் தம்பதியர் பாபாவை ஒவ்வொரு நாளும் தரிசன நிகழ்ச்சியில், சில சமயங்களில் ஒரு நாளைக்கு இரண்டு முறை பார்த்தனர். மே 4 அன்று மதிய உணவுக்குப் பிறகு, '**பீட்டர், பாபாவையும், ஹெலன் குருபிரசாத்தில் மெஹராவையும் பார்க்க வர வேண்டும்**' என்ற செய்தியுடன் ஸரோஷ் அவர்களது ஹோட்டலுக்கு வந்து, இருவரையும் அழைத்து வந்தார். பீட்டர் மண்டலி மற்றும் சில குழு தலைவர்களுடன் பாபா அமர்ந்திருந்த சிறிய பக்க அறைக்குள் சென்றார். பாபா அவரை முன்னால் அருகில் அமருமாறு கூறினார்.

சிறிது நேரம் கழித்து, பாபா அவரிடம் வினவினார், "**நீங்கள் எப்போது இல்லம் திரும்புகிறீர்கள்?**"

அதற்கு பீட்டர், "உடனடியாக தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும்" என்றதும், பாபா அதை உறுதிப்படுத்தும் விதத்தில் தலையசைத்தார்.

பாபாவின் முன்னிலையில் பீட்டர் மிகக் குறைவாகவே பேசினார், வேறு எவரும் எதுவும் கூறாதபோது, பாபாவின் கேள்விக்கு மட்டுமே பதிலளித்தார். அவர் மகிழ்ச்சியாக பிரியமானவரின் சூரிய ஒளியில் மூழ்கினார். பாபா அரிதாகவே சுற்று முற்றும் பார்வையை சுழற்றி, நாற்காலியின் கைப்பிடிகளில் தம் விரல்களை வைத்து மெதுவாக உயர்த்தினார். பீட்டர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "எங்கள் அனைவரின் கண்களும் அவருடைய அழகைப் பருகிக் கொண்டிருந்தன, எங்கள் இதயம் அவரது அன்பால் நிரம்பி வழிந்தது."

சுமார் ஒரு மணி நேரம் கடந்தது; பாபா இது செல்ல வேண்டிய நேரம் என்று சைகையால் தெரிவித்தார்; வெளியே செல்லும் வழியில் அவரது கால்களில் தலை வணங்கி தரிசனம் செய்யலாம் என ஆண் அன்பர்கள் கூறப்பட்டனர். இப்போது பீட்டர் அறையின் பின்புறம் இருந்ததால், கடைசியாக வெளியேறியவர்களில் அவரும் ஒருவர். பீட்டர் தங்கியிருந்த நாட்களில், பாபாவுடன் தனிப்பட்ட நேர்காணல் எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும்,

அவர் தெய்வீகப் பொக்கிஷத்தை அடையப்பெறும் அவரது பங்கில் ‘ஏமாற்றமடைந்ததாக’ உணரவில்லை என்பதை அவருடைய கீழ்வரும் வார்த்தைகளில் காணலாம்:

நான் பாபாவின் பாதங்களில் தலைவணங்கினேன், என் ஆன்மாவின் வாயில்கள் திறந்தன. எனக்குத் தெரியாமலே கதகதப்பாக உணர வைக்கும் கண்ணீர் அன்பானவரின் பாதங்களில் ஒரு நதி போலப் பெருக்கெடுத்தது. லட்சக்கணக்கான வாழ்நாட்களில் நான் அனுபவித்த அறியாமை அனைத்தும், அந்த நேரத்தில் என்னிடமிருந்து வெளிவந்தது போல் இருந்தது. மாயையில் வாழ்ந்த இந்த வாழ்க்கை எதிர்கொண்ட அசுத்தம், அழுக்கு அனைத்தும் இப்போது அன்பானவரின் பாதங்களில் பாய்ந்தது போல் உணர்ந்தேன்.

என் உடல் மாபெரும் சக்தியுடன் அதிர்கிறது. அவரது காலடியிலிருந்து தலையை என்னால் உயர்த்த முடியவில்லை. “பாபா, பாபா, பாபா!” என்று கூப்பிய கரங்களுடன் நான் அவர் முன்னால் மண்டியிடும் வரை, அவரது பெயர் என் உதடுகளில் ஒரு நிலையான, இடைவிடாத ஒலியாக மாறியது.

பாபாவின் கண்கள் வெகு தொலைவிலிருந்து பார்வையைப் பதித்தது போலத் தோன்றியது. எனது வாழ்நாள் முழுவதும் அவர் என்னைப் பார்ப்பது போல் இருந்தது. அவருடைய கண்கள் எனது கண்களை சந்தித்தன, அத்தகைய அன்பான, விவரிக்க முடியாத கருணை மற்றும் இரக்கத்தை நான் இதுகாறும் பார்த்ததில்லை, மீண்டும் பார்ப்பேன் என எதிர்பார்க்கவுமில்லை. அவரது கண்கள் உண்மையில் இனிமையான, இரக்கத்தின் கடல்களாக இருந்தன. இது எனது வாழ்வின் மிக முக்கியமான மற்றும் உன்னதமான தருணம்.

பாபாவின் கண்கள் எனது கண்களை சந்தித்த அந்தத் தருணத்தில், பாபா அவரது கரத்தை மெதுவாக, மென்மையாக வளைத்து நீட்டி, எனது முகத்தை வருடினார்; ஒரு கன்னத்திலிருந்து மறு கன்னம் வரை விரல்களை நகர்த்திய போது, அவரது கட்டைவிரலும் ஆள்காட்டி விரலும் எனது கன்னத்திலிருந்து ஓர் அங்குல தூரத்தில் தொடர்ந்து நகர்ந்து சென்றன. இந்த ஓர் அசைவு, இந்தப் ஸ்பரிசம், எனது பிரியமானவருடன் என்னை எல்லா நேரத்திலும் அழைத்துச் செல்ல போதுமானதாக இருந்தது.

இதை நான் தீவிரமற்ற தொனியில் சொல்லவில்லை, ஆனால், முழுமையான நம்பிக்கையுடன் கூறுகிறேன். அந்த அசைவு, ஸ்பரிசம் இன்னும் என்னில் நகர்கிறது; நான் எங்குச் சென்றாலும், எத்தனை முறை நான் அவரை மறந்தாலும், அந்த ஒரே அசைவும், ஸ்பரிசமும் என்னை மீண்டும் அவரை நோக்கி ஈர்க்கப் போதுமானதாக இருக்கிறது; அது எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும்.

மே 4ஆம் தேதி, பல்வேறு ஊர்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் வந்த அன்பர்கள் தரிசனம் செய்யாததால், மாலை 3:40 மணிக்கு பாபா மீண்டும் மேடைக்கு வந்தார். அப்போது, டெல்லி (DELHI), ஜபல்பூர் (JABALPUR), பிலாஸ்பூர் (BILASPUR), ராய்பூர் (RAIPUR), ஷோலாப்பூர் (SHOLAPUR), கோட்டேகாவ்ம் (GOTEGAON)

மற்றும் பிற தொலைதூரப் பகுதிகளிலிருந்து வந்த பக்தர்கள், தரிசனத்திற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர்.

ஆறு வயது குழந்தை ஒன்று தனது தாயுடன் தரிசனத்திற்காக பாபா முன்னால் சென்ற போது, மனதைத் தொடும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. தாயார் பாபாவின் பாதங்களில் தலைவணங்கிய அந்த கணத்தில், பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சிறுவன், "அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என உரத்த குரலில் முழங்கினான்.

ஒரு மணி நேரம் தரிசனம் வழங்கி, ஜெய் முழக்கங்களுக்கு மத்தியில் பாபா மேடையிலிருந்து திரும்பிச் சென்றார்.

1965 மே 5 புதன்கிழமை காலை 7:10 மணிக்கு குருபிரசாத்தின் பக்கத்து அறைக்குள் பாபா நுழைந்தார். ஆந்திரா பாபா-அன்பரான ஜெகந்நாத், அவரது தொடை எலும்பு முறிவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர், தூக்குப்படுக்கையில் நேராகக் கொண்டு வரப்பட்டார்; அது பாபாவின் காலடியில் வைக்கப்பட்ட போது, பாபா அவரிடம், "**கவலைப்படாதீர்கள், அனைத்தும் சரியாகிவிடும்**" என்று சைகையால் தெரிவித்தார். கண்ணீருடன், ஜெகந்நாத், பாபாவை தரிசனம் செய்ய அனுமதி கோரினார்; ஆனால் அவரது காலில் வலி காரணமாக நகர முடியவில்லை. பாபா அவரது வலது பாதத்தை உயர்த்தி ஜெகந்நாதின் மார்பில் வைத்தார். மிக்க மகிழ்ச்சியடைந்த ஜெகந்நாத் தனது அசௌகரியத்தை முற்றிலும் மறந்துவிட்டார்.

அப்போது ஆந்திரா அமைச்சர் எம்.ஆர். அப்பா ராவ் அவரது மனைவியுடன் உள்ளே நுழைந்ததும் பாபா அவரிடம், "**எனக்கான உங்கள் பணியில் நான் மகிழ்ச்சியடைகிறேன். என் அருள் எப்போதும் உங்கள் மீது இருக்கும். நீங்கள் இருவரும் என்னை மேலும் மேலும் நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் மனித உருவில் வருகை தந்த கடவுள்**" என்று கூறினார். பாபா அவர்களைத் தழுவிய பின்பு, தம்பதியர் திரும்பிச் சென்றனர்.

டெஹ்ரா டூன் நகரின் பால் கிஸன் பக்ஷி (BAL KISAN BAKHSHI), அவரது மனைவி மெஹர் காந்தா இருவரும் தரிசனத்திற்கு வந்த வேளையில் மனைவியிடம் பாபா, "**உங்களுக்கு என்ன வேண்டும்?**" என வினவினார்.

"உங்கள் அன்பைத் தவிர எனக்கு எதுவும் வேண்டாம்" என்று பதிலளித்தது, பாபாவை மகிழ்வித்தது; அவரது பாதங்களைத் தொட்டுவணங்கி தம்பதியர் விடைபெற்றனர்.

ஒரு ஸொராஸ்ட்ரிய ராணுவத் தலைவர் அவரது மனைவியுடன் முதல் முறையாக பாபாவை சந்திக்க வந்தார். பாபாவைப் பற்றி ஓரளவு கேள்விப்பட்டிருந்தும், படித்திருந்தும், பாபா மனித உருவில் வருகை தந்த கடவுள் என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ராணுவத்

தலைவரை அமரவைத்து அறிமுகப்படுத்திய பிறகு, பாபா அவரிடம் கூறினார், **“நீங்கள் 100 சதவிகிதம் நேர்மையாக நடந்து, நல்ல சிந்தனைகள், நல் வார்த்தைகள், நற் செயல்கள் என்ற மூன்று விதிகளைப் பின்பற்றும் வரை, கடவுள் மனித உருவில் வருகை தரும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் அதில் என்ன தீங்கு உள்ளது?”**

ராணுவத் தலைவரின் முகம் பிரகாசமாக ஒளிர்ந்தது, மேலும் அவர் மிகவும் நேர்மையானவர் என்றும் ஸொராஸ்டர் நபியின் மூன்று போதனைகளைப் பின்பற்றுவதாகவும் கூறினார். பாபா மேலும் கூறியதாவது, **“‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தால், அளவிறுதியற்ற தன்மையை மனித வடிவில் எப்படி அடையப்பெற முடியும் என்ற கருத்து உங்களுக்குப் புலப்படும். எல்லையற்ற சக்தி வாய்ந்த கடவுள், எதையும் செய்ய முடியும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். கவலைப்பட வேண்டாம். ‘கடவுள் பேசுகிறார்’ புத்தகத்தைப் படியுங்கள், கடவுளைத் தவிர வேறு எதுவும் உண்மை இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். நீங்களும் கடவுள்தான், ஆனால் ஒரு மனிதர் என்ற மாயையில் இருக்கிறீர்கள்.”**

தயக்கமின்றி, ராணுவத் தலைவர் பதிலளித்தார், “ஆம், நாம் அனைவரும் கடவுள்!”

வாஸ் தேவ் கெய்னிடம், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார், **“உண்மையில், உலகில் எதுவும் முக்கியமில்லை. எனது உண்மையான ரூபத்தில் என்னைப் பார்ப்பது ஒன்றுதான் முக்கியம்.”**

காலை 7:45 மணிக்கு பாபா மேடைக்கு வந்தார். அந்த நாள் ஹமிர்பூர் அன்பர்களுக்கான தரிசன நாள். ஒவ்வொருவரும் பாபாவின் பாதங்களில் விரைந்து சென்று தலைவணங்கினர். தங்கள் பிரியமானவரின் கடைக்கண் பார்வை என்ன ஒரு பொக்கிஷத்தை வழங்கியது என்பதை நன்கு அறிந்து, நீண்ட பயணத்தை மேற்கொள்ள அவர்கள் பல தியாகங்களைச் செய்தனர், இப்போது ஒவ்வொருவரும் அவரவர் வெகுமதியை அடையப் பெற்றனர்.

ஸ்ரீபத் ஸஹாய் ஒரு கவிதையை இயற்றி இருந்தார், ஒலிபெருக்கியில் அதை மொழியுமாறு பாபா அவரைக் கேட்டுக்கொண்டார். அன்று திட்டமிடப்பட்ட கவாலி நிகழ்ச்சி எதுவும் இல்லை, ஆனால் தரிசனத்தின் போது பல்வேறு குழுக்கள் பஜனை மற்றும் கஸல்களைப் பாடினர். இதற்காக பிரத்யேகமாக சிறிய மேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

தரிசன நிகழ்ச்சியின் போது, தனது முறைக்காகக் காத்திருந்த ஒருவர் திடீரென மயக்கமானார், ஆனால் அவர் விரைவில் பழைய நிலைக்குத் திரும்பி வந்து தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். இந்த ஆறு நாட்களில் ஒரே ஒரு முறை பாபா, ஹமிர்பூர் அன்பர் ஒருவர் வழங்கிய மலர் மாலை ஒன்றை, கைகளில்

வாங்கி அவரே அணிந்துகொண்டார். இதர மாலைகள் அனைத்தும் அன்பர்களால் அவரது காலடியில் வைக்கப்பட்டன.

காலை 10:40 மணிக்கு ஆரத்தி நிகழ்த்தப்பட்டது. கடைசி வரிகள் முடிவடைவதற்கு முன்பே, பாபா எரச், பரூச்சா இருவரிடமும் அவர் எழுந்து நிற்க உதவுமாறு சைகையால் தெரிவித்து, மேடையிலிருந்து விரைந்து சென்று, அவரது சக்கர நாற்காலியில் சிரமப்பட்டு அமர்ந்தார். அபரிமிதமான சுமையைத் தாங்க முடியாமல் உடல் முழுவதும் நடுங்கத் தொடங்கியது. பாபா தமது அன்பர்களுக்காக தன் உடலை தியாகம் செய்து கொண்டிருந்தார்; அவர் எப்படி அவதிப்பட்டார் என்பது மண்டலி மற்றும் மருத்துவர்களுக்கு மட்டுமே தெரியும். எரச், பரூச்சா இருவரும் அவரது கால்களை மஸாஜ் செய்தனர், ஆனால் அவர்களின் முயற்சியால் அவர் தன் மீது எடுத்துக் கொண்ட துன்பத்திலிருந்து சிறிது கூட விடுபட முடியவில்லை.

வேதனையையும் பொருட்படுத்தாமல், பாபா மீண்டும் மாலை 3:30 மணிக்கு மேடைக்கு வருகை தந்தார். மும்பை, பாவ்நகர் (BHAVNAGAR) மற்றும் நாசிக் அன்பர்கள் இன்னும் அவரை தரிசனம் செய்யவில்லை. அன்று மதியம் பாபா நல்ல மனநிலையில் இருப்பதாகத் தோன்றியது. மாலை 4:30 மணிக்கு ஆரத்திக்குப் பின்பு, பாபா நிகழ்ச்சியை நிறைவுசெய்தார்.

தரிசனத்தின் இறுதி நாளான மே 6 வியாழன் அன்று, பாபா காலை 7:05 மணிக்கு பக்கத்து அறைக்குள் நுழைந்த போது, இந்துமதி தேஷ்முக், நானா கேர், நாக்பூரின் தின்கர் டாகே (DINKAR DHAGE) மூவரும் இணைந்து மராட்டியில் மொழிபெயர்ப்பு செய்த 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) புத்தகத்தின் முதல் மூன்று பிரதிகளை எரச், பாபாவிடம் காட்டியபோது, ஒவ்வொரு பிரதியிலும் பாபா கையெழுத்திட்டார்.

ஆந்திர மாநில அமைச்சர்கள் அப்பா ராவ், சன்னா ரெட்டி இருவரும் குடும்பத்துடன் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, பாபா ஒவ்வொரு குடும்பத்துடனும் தனித்தனியாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

ஹாரி கென்மோரின் பக்கம் திரும்பிய பாபா, "**எனது கழுத்து மற்றும் இடுப்புப் பாகங்களில் வலி மிகவும் அதிகமாக உள்ளது. நான் எனக்காக அல்ல, உங்கள் அனைவருக்காகவும் துன்பப்படுகிறேன்**" என்று குறிப்பிட்டார்.

சுமார் ஐந்து வயது சிறுமி தனது பெற்றோருடன் தரிசனத்திற்காக வந்த வேளையில் பாபாவைத் தனது இல்லத்திற்கு வருமாறு, "கணேஷ்கிந்திற்கு வாருங்கள்!" என்று தைரியமாக அழைப்பு விடுத்தாள்.

அதற்கு பாபா, "**நான் ஏற்கனவே அங்கு இருக்கிறேன்**" என்று பதிலளித்து, "**ஒரு நாள் வருவேன்**" என்று சைகையால் ஆறுதல் கூறினார்.





பாபா காலை 7:45 மணிக்கு மேடைக்கு வந்த வேளையில், ஷிண்டே அவருக்கு மாலை அணிவித்தார். இந்துமதி, நானா கேர், தின்கர் டாகே மூவரும் மேடைக்கு அழைக்கப்பட்டனர், மேலும் பாபா ஒவ்வொருவருக்கும் 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) புத்தகத்தின் மராட்டி மொழிபெயர்ப்பின் கையெழுத்திடப்பட்ட பிரதியை வழங்கினார்.

ஒரு பக்தர் ஆந்திராவிலிருந்து ஒரு சிறிய தென்னை மரக் கன்று மற்றும் முந்திரி விதைகளை கொண்டு வந்தார். பாபாவால் தொட்டு ஆசீர்வதிக்கப்பட்ட அவை பூனா மையத்தின் வளாகத்தில் நடப்பட வேண்டும்.

அன்று அஹமதுநகர் மற்றும் பூனா அன்பர்கள் தரிசனம் செய்யவிருந்தனர். அவர்களைத் தவிர, இதுவரை தரிசனம் செய்யாத அன்பர்கள் அனைவரும் பாபாவிடம் வர அனுமதிக்கப்பட்டனர்.

கடைசி நாள் என்பதால், பலர் இரண்டாவது முறை தரிசனத்திற்கு வர ஆசைப்பட்டனர், ஆனால் பாபா தம் அருகில் வருவதற்கு முன்னரே வரிசையில் அவர்களைச் சுட்டிக் காட்டினார். பாபா பொது ஜனங்களை சந்திக்க விரும்பாத போதிலும், பூனாவிலிருந்து பலர் தரிசனத்திற்காக வந்திருந்தனர். சகவாசம் அவரது நெருங்கிய அன்பர்களுக்காக மட்டுமே. அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்கும் வகையில் விரைவாக தரிசனம் செய்யுமாறு பாபா மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

காலை 9:55 மணிக்கு தரிசனம் நிறைவடைந்ததும் ஆரத்தி நிகழ்த்தப்பட்டது. பாபா எழுந்து நின்று கைகளை அசைத்தார். அன்று மேடைக்கு கொண்டு வரப்பட்ட தனது சக்கர நாற்காலியில் பாபா அமர்ந்திருந்த போது, "அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" கோஷங்கள் எதிரொலிக்கவே, மெதுவாக பாபா சக்கர நாற்காலியில் அழைத்துச் செல்லப்பட்டார்.

பாபா அன்று மதியம் 3:40 மணிக்கு பக்கத்து அறைக்கு வந்தபோது, குண்டூர் மற்றும் ஹைதராபாத்தைச் சேர்ந்த அன்பர்களுடன் குழுவாகப் புகைப்படம் எடுக்க அவர் இணக்கம் தெரிவித்தார். முதல் குழு, குருபிரசாத்தின் நுழைவாயில் படிகளில் தங்களை சீரமைத்து முடிந்ததும், பாபா அவரது சக்கர நாற்காலியில் அழைத்து வரப்பட்டு, அவர்கள் நடுவில் அமர்ந்தார். குண்டூர் குழு மிகப் பெரியதாக இருந்ததால், பாபாவுடன் இரண்டு புகைப்படங்கள், ஒன்று ஆண்களுடனும், மற்றொன்று பெண் அன்பர்களுடனும் எடுக்க வேண்டியிருந்தது. இவ்வாறு பாபா மூன்று முறை அன்பர்கள் மத்தியில் அமர்ந்தார்.

மே 6ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக தரிசனம் நிறைவடைந்தாலும், பள்ளி மற்றும் கல்லூரி தேர்வுகளுக்கு நடுவில் மும்முரமாக இருந்த பல மாணவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாததால், அது மேலும் மூன்று நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டது. பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத அன்பர்களும் இந்த நேரத்தில் குருபிரசாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டனர். இப்படி

மூன்று நாட்கள் காலையிலும் மதிய வேளையிலும் பாபா தன்னை நாடி வந்தவர்களை சந்தித்தார். இதற்குப் பிறகும், பலர் தினமும் குருபிரசாத்திற்கு வந்தனர், பாபா நீண்ட நேரம் கழுத்து மற்றும் இடுப்புப் பாகத்தில் வலியுடன் அமர்ந்திருந்தாலும் அவர்களையும் சந்தித்து, அவரைத் தலைவணங்க அனுமதித்தார்.

ஜோஸஃப் ஹார்ப், பென் ஹேமன் இருவரும் மே 7ஆம் தேதியும், அவர்களுக்குப் பிறகு ஹாரி கென்மோரும் புறப்பட்டுச் சென்றனர். அன்று காலை 8:00 முதல் 11:00 மணி வரையிலும், தொடர்ந்து பிற்பகல் 3:00 மணிக்கு ஒரு மணி நேரத்திற்காகவும் அவர்கள் குருபிரசாத்தில் பாபாவுடன் நேரத்தைக் கழிக்க முடிந்தது. ஜோஸஃப் பின்னர் அவரது மனைவி காரிக்கு (KARI) இவ்வாறு எழுதினார்:

"பாபாவிடமிருந்து விடைபெறுவதிலும், அவர் துன்பப்படுவதைப் பார்த்ததிலும் மனம் உடைந்து போனது. மாலை சுமார் 4:00 மணிக்கு அவர் தனது அறைக்குச் சென்று ஓய்வெடுக்க விரும்பினார். நான் அன்பான பாபாவை சோர்வுடனும் வேதனையுடனும் விட்டுவந்தேன். இந்த தரிசன நிகழ்ச்சி அவரது உடல், மனம் மற்றும் உள்ளத்தில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியது. அவர் தனது இரு கைகளாலும் அழுத்தும் அறிகுறியை நான் கவனித்தேன் - அதாவது சூழ்நிலைகள் தாங்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்தும் போது, அவரது உடல், மனம், ஆவி ஆகியவற்றில் அழுத்தத்தை ஏற்படுத்திய உணர்வுகள், அவரது மௌனத்தைக் கலைக்கச் செய்யும்.

"மருத்துவர்களால் பாபாவை குணப்படுத்த முடியாது. அவர் மீதுள்ள அன்பின் காரணமாக மட்டுமே பாபா மருத்துவர்களை முயற்சி செய்ய அனுமதிக்கிறார். பாபா குணமடைய விரும்பவில்லை. அந்தத் துன்பத்தை அவர் விரும்பவில்லை என்றால், அவர் அதைத் தன் மீது ஏற்றிருக்க மாட்டார். அவரது மிகப்பெரிய துன்பம் மனித துயரங்களைத் தணிப்பது.

"மாபெரும் அழுத்தத்தின் தாக்கம் அவர் மீது விழும் போது, அவரது மௌனம் கலைக்கப்படும். இந்த வேதனையான பொறுப்புக்குப் பின்னால் பாபாவின் நோக்கம் உள்ளது. அவர் மௌனத்தைக் கைவிடும் போது, அவருடைய உண்மையான நிலையை முழு உலகமும் அறிந்துகொள்ளும் என்கிறார் பாபா. ஜூலை மாதத்திற்குப் பிறகு, பாபா சில துன்பங்களையும் வலிகளையும் நீக்கிவிடுவதாகக் கூறுகிறார். உலக விவகாரங்களைப் பார்க்கும் போது, அவை எவ்வளவு தீவிரமடைகிறதோ, அவ்வளவு அதிகமாக பாபாவின் துன்பமும் இருக்கும். அதன் தாக்கத்தை அவர் தம் மீது தாங்கிக்கொள்ளும் கருவியாகத் தமது உடலைப் பயன்படுத்துகிறார் - இல்லையெனில் நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கும்."

ஜோஸஃப் ஹார்ப் புறப்படுவதற்கு முன்னர், ஐவி டியூஸ் எப்படி இருக்கிறார் என்று பாபா அவரிடம் கேட்டதற்கு, ஜோஸஃப் இவ்வாறு பதிலளித்தார், "எங்களின் அயராத முயற்சிகள் இருந்தபோதிலும், (ஸான்

ஃபிரான்சிஸ்கோ) ஸூஃபி மையம் (உறுப்பினர்களின் எண்ணிக்கையில்) வளரவில்லை என்பதால் அவர் விரக்தியில் உள்ளார்."

பாபா பதிலளித்தார், "**இது இப்போது நடவாது - இது அதற்கான நேரமும் அல்ல! ஒரு பெரிய கருவேல மரத்தைத் தாங்கிப்பிடிக்கும் அளவுக்கு மண்ணில் ஆழமாக வேரூன்ற வேண்டும். நான் விரும்பும் வலுவான ஸூஃபி அமைப்பைக் கட்டி எழுப்பும் நோக்கத்தில் நீங்கள் அனைத்தையும் செய்கிறீர்கள்.**"

பாபா ஒருமுறை இவ்வாறு வெளிப்படுத்தினார்: "**நான் அனைவருக்காகவும் வருகிறேன், ஆனால் நான் ஒரு சிலருக்காக மட்டுமே இருக்கிறேன்,**" அதனால்தான் அவர் பூமியில் வருகை தரும் வேளையில், ஒப்பீட்டளவில் ஒரு சிலரே அவரை அடையாளம் கண்டுகொள்கிறார்கள்.

ஒரு நாள் பிற்பகலில், பாபா பூனா மையத்தின் பல சேவகர்கள் மற்றும் தன்னார்வலர்களை சந்தித்தார்; அவர்கள் ஆறு நாள் தரிசனத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதில் மிகவும் கடினமாக உழைத்தவர்கள், வெளியூர்களிலிருந்து வருபவர்களின் தேவைகளை கவனித்துக் கொண்டனர். இதனால் அவர்களால் பெரும்பாலான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியவில்லை. ராமகிருஷ்ணன், பவ்ஸார் இருவரும் குறிப்பாக மிகக் கடினமாக உழைத்தனர்; பாபா அனைவருக்கும் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். பெண்டுவின் அறிவுறுத்தல்களின்படி ஷிண்டே பந்தல் எழுப்பும் பொறுப்பை முழுமையாக ஏற்றுக்கொண்டார்; மேலும் குருபிரசாத்தில் தரிசனத்திற்காக வருபவர்களின் வசதிகளை ஏற்பாடு செய்வதில் பெண்டு, பாவ் கல்சூரி இருவரும் ஒன்றிணைந்து செயல்பட்டனர்.

தரிசன நிகழ்ச்சிக்குப் பிறகு, கேக்கி நலவாலாவும் அவரது மகன் நவ்ஷேர்வானும் பூனாவில் மேலும் மூன்று நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டனர். நவ்ஷேர்வானுக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருந்ததால், டாக்டர் கிரான்டை கலந்தாலோசிக்க பாபா விரும்பினார். இது ஏற்பாடு செய்யப்பட்டு, நவ்ஷேர்வானின் சிகிச்சைக்காக பாபா சிறிது தொகையையும் வழங்கினார்.

ஜிம் மிஸ்திரியின் மூத்த மகன் மெஹர்வான் (16), இந்த நேரத்தில் கேம்பிரிட்ஜ் தேர்வில் (CAMBRIDGE EXAM) தேர்ச்சி பெற்றதாக, பாபாவிற்கு தொலைத்தந்தி ஒன்று அனுப்பப்பட்டது. அதற்கு பாபா, "**நீங்கள் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், என் அன்பில் நீங்கள் முதலிடத்தைப் பிடித்தால் நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன்**" என்று பதிலளித்தார்.

ஒருமுறை மெஹர்வான் பாபாவின் தரிசனத்திற்காக குருபிரசாத் வந்திருந்தபோது, பாபா, அவரைச் சுற்றி சில நபர்களுடன் அமைதியாக மண்டபத்தில் அமர்ந்திருந்தார். திடீரென அவர் மெஹர்வானிடம் குறிப்பிட்டார்: "**நான் 100 சதவீதம் கடவுள்!**"

ஆதியும், ரோடா துபாஷும் கராச்சியிலிருந்து தரிசனத்திற்காக வந்திருந்தவர்களை, ஜூன் மாத இறுதி வரை, பூனாவில் தங்குமாறு பாபா கேட்டுக் கொண்டார். அவர்கள் தினமும் குருபிரசாத்தில் பாபாவை சந்தித்தனர். மினூ கராஸும் தனது குடும்பத்துடன் கராச்சியிலிருந்து வந்து 9 மற்றும் 10ஆம் தேதிகளில் பாபாவை சந்தித்தார். மே 25 அன்று பாபாவை சந்தித்து, திரும்பிச் சென்றவருக்கு அது தெய்வீக அன்பானவருடனான அவரது இறுதி சந்திப்பாக இருந்தது.

ஃபிரீனி தாதாச்சாஞ்சியின் சகோதரி ஸரீன் மவல்வாலாவும் (ZARINE MAVALWALA) கராச்சியிலிருந்து தரிசனத்திற்காக வந்திருந்தார். ஸரீனுக்கு பாபா மீது அன்பு இருந்தாலும், அவர் கடவுள், அவதார புருஷராக வருகை தந்தவர் என இதுகாறும் முழுமையாக நம்பவில்லை. ஒரு தருணத்தில், மும்பை பெண்மணிகள் பாபாவுடன் இருந்தபோது, அவரைப் பற்றிய பயங்கரமான சந்தேக சிந்தனைகள் ஸரீனின் மனதில் அலை பாய்ந்தன. திடீரென ஸரீனை நோக்கி, பாபா, "**சந்தேக சிந்தனைகளால் அஞ்ச வேண்டாம். உங்களது மனதை தெளிவுபடுத்தும் நோக்கத்தில் நான் வேண்டுமென்றே இதை உருவாக்குகிறேன். நான் மனித உருவில் வருகை தந்த கடவுள்! இது உண்மையல்லவா ஸரீன்?**" ஸரீன் வெட்கத்துடன் அமைதியாக இருந்தார்; ஆனால் அந்த கணத்திலிருந்து பாபாவை முழு மனதுடன் அவதார புருஷராக ஏற்றுக்கொண்டார்.

1965 மே 12 அன்று, எரச், டாக்டர் ராம் கிண்டேக்கு இவ்வாறு எழுதினார்:

இதை எழுதும் நேரத்திலும், பாபாவின் தரிசனத்திற்காக குருபிரசாத்திற்கு ஒரு சில பார்வையாளர்கள் தாமதமாக வருகின்றனர்; அவர், உடலின் வலி மற்றும் அசௌகரியத்தை பொருட்படுத்தாமல், பாபாவின் அன்பு அவர்கள் அனைவரையும் திருப்திப்படுத்துகிறது. இந்த தரிசன நிகழ்ச்சிகளின் சிரமம் மிகவும் அதிகமாக உள்ளது, மேலும் அன்பான பாபா மிகவும் சோர்வாக இருப்பதை நாம் எளிதாகக் காண முடிகிறது. கழுத்தில் வலி வழக்கம் போல் உள்ளது, மேலும் அவர் அடிக்கடி, குறிப்பாக அவர் இருக்கையில் அங்கும் இங்கும் சற்று நகர்ந்து அமரும்போது தலை சுற்றுவதாகப் புகார் கூறுகிறார். பாபா இப்போது பகல் நேரத்திலும், அதிக ஓய்வெடுக்கத் தொடங்கியுள்ளார். அவர் இரண்டு மணி நேரம் கழுத்துப்பட்டையை மீண்டும் அணிந்து வருகிறார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, கோஹேர், அடெல் வோல்கினுக்கு (ADELE WOLKEN) இவ்வாறு எழுதினார்:

பிரியமான பாபாவின் கிழக்கத்திய அன்பர்களுக்கு, தரிசனம் என்பது மகிமை நிறைந்த தருணமாக இருந்தது; அந்த நாட்களில் பாபா அற்புதமான ஒளிரும் தோற்றத்தில் இருந்ததைக் காண முடிந்தது; பாபா, அவரது அன்பர்கள் மிகவும் பணிவுடன் அவரது பாதங்களில் தலைவணங்கி வெளிப்படுத்திய அன்பிற்கு பதிலளித்தார்.

இப்போது மீண்டும் குருபிரசாத்தில் அனைத்தும் அமைதியாகிவிட்டதால், பாபா எதிர்வினையை உணர்கிறார்: கழுத்து மற்றும் தோள் பாகங்களில் வலி தொடர்ந்து கொண்டே இருக்கிறது, மேலும் அவருக்கு இடைவிடாமல் தலைவலியும் உள்ளது. வற்புறுத்தலின் பேரில், பகலில் முடிந்த அளவு ஓய்வு எடுக்கத் தூண்டப்படுகிறார்; ஆனால் அவதார புருஷர், அவர் தாங்கிக்கொள்ள வேண்டிய துன்பத்தை மருந்து மாத்திரைகளின் மூலம் தணிக்க முடியாமல் தவிக்கிறோம் என்பதால், அவர் துன்பப்படுவதைக் கண்டு எங்கள் இதயம் வலிக்கிறது.

இதற்கிடையில் பாபா, சளி மற்றும் தொண்டை வலியால் அவதிப்பட்டார்.

டாக்டர் கிண்டே தினமும் டி.எம்.எஸ்.ஓ. (D.M.S.O.) தைலத்தை, சருமத்தில் எரிச்சல் ஏற்படாத விதத்தில் லேசான சிகிச்சையைப் பரிந்துரைத்தார்; ஆனால் பாபா அதை சிறிது காலத்திற்குப் பயன்படுத்த விரும்பவில்லை. பின்னர் ஒரு சிறிய அளவில் இடுப்புப் பாகத்தில் பயன்படுத்தப்பட்டது, ஆனால் பாபாவின் தொடை மற்றும் விதைப்பையின் ஒரு பகுதியில் வெடிப்பு ஏற்பட்டது. அவரது சருமம் இந்த எண்ணெயைப் பயன்படுத்த மிகவும் மென்மையானதாக இருந்தது.

குருபிரசாத்தில் தலைவலி மற்றும் தலைச்சுற்றல் இடைவிடாமல் இருந்து வந்ததால், பாபாவை பரிசோதிக்க மே 12 அன்று டாக்டர் கிரான்ட் அழைக்கப்பட்டார்; மேலும் கீழ்த்தமனிகள் (BASILAR ARTERIES) சுருங்குவதால் மூளையில் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டதாக கிரான்ட் உணர்ந்தார். அன்று, குருப்பிரசாத்திலிருந்து டாக்டர் டான் மும்பைக்குச் சென்று கொண்டிருந்தார்; மே 16ஆம் தேதி அவர் தனது குடும்பத்தினரை சந்திக்கவும், அவரது சகோதரனின் இழப்பைத் தொடர்ந்து, சொத்து தொடர்பான விஷயங்களைக் கண்காணிக்கவும் இங்கிலாந்துக்குச் சென்றுகொண்டிருந்தார்.

நாக்பூரைச் சேர்ந்த எஸ்.டி. லலித் (S.D. LALIT) என்பவர் (31), மே மாத தரிசனத்தில் பாபாவை முதன்முதலாக சந்திக்க நேர்ந்தது. லலித் திருமணமானவர், அழகான தோற்றமும், புத்திசாலித்தனமும் மிக்கவர் (புவி இயற்பியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர்), ஆனால் அவரது மனைவி ராஜ், கற்றறிந்தவராயினும் எளிமையான, கபடமற்ற, உணர்வுப்பூர்வமாக பலவீனமான பெண்மணியாக இருந்தார். பூனா வருவதற்கு முன்பு, திருமணமான நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, லலித் விவாகரத்துக்காக விண்ணப்பித்தார். ராஜின் உறவினர்கள் சமூகத்தில் நன்கு அறியப்பட்டவர்கள். இந்த நடவடிக்கைக்கு எதிராக லலித்தை வற்புறுத்தும் விதத்தில் அவர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்தனர்; ஆனால் அவர் கேட்பதாக இல்லை, விவாகரத்து செய்வதில் விடாப்பிடியாக இருந்தார். லலித்தின் அலுவலக பணி மாற்றத்தால் அவர் நாக்பூரிலிருந்து கொல்கத்தாவிற்குக் குடிபெயர வேண்டிய கட்டாயம்; அந்த சூழ்நிலையில் அவர் ராஜை அவரது குடும்பத்துடன் விட்டுச் சென்றார். சில நாட்களில், ராஜின் சகோதரியிடமிருந்து பாபாவிற்கு இது குறித்த கடிதம் வந்தது.

லலித் மற்றும் ராஜின் குடும்பத்தினர் இடையேயான பரஸ்பர பகை மிகவும் பதட்டமான நிலையை எட்டியது; அவர் பூனாவிற்குச் சென்ற நேரத்தில், இரு குடும்பங்களுக்கும் இடையே பேச்சு வார்த்தையும் இல்லாத நிலை உருவானது.

பாபாவின் தரிசனத்தை அடையப்பெற்ற அந்த கணத்தில் லலித், பாபாவின் பாதங்களில் சரணடைந்தார். அவர் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார், அவர் வீடு திரும்பியதும் விவாகரத்து வழக்கைத் திரும்பப் பெற்றார், இருப்பினும் அவரது மனைவி மீதான அவரது அலட்சிய உணர்வு இன்னமும் மாறவில்லை.

நானா கேர், லலித்தை அறிந்திருந்தார்; சில நாட்கள் கழித்து பாபா அவரிடம், "**லலித் என்னை நேசிக்கிறாரா?**" என வினவினார்.

"அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார், பாபா," நானா பதிலளித்தார்.

லலித் அவரது மனைவியைக் கைவிட்டதற்கான காரணத்தை விசாரித்து அவருக்குக் கடிதம் எழுதுமாறு பாபா, பாவ் கல்சூரியிடம் கூறினார். இதற்கிடையில், ராஜின் தந்தையும் சகோதரியும் பாபாவிற்குக் கடிதம் எழுதி, தம்பதியர் இடையே சமரசம் ஏற்பட வழிவகுக்குமாறு வேண்டிக்கொண்டனர். லலித் ஒரு நீண்ட கடிதத்தை மீண்டும் எழுதினார், அதில் அவர், திருமண வாழ்க்கையில் அவரது முழுமையான அதிருப்தியை வெளிப்படுத்தி இருந்தார். அதற்கு பாபா, "**லலித் என்னை எவ்வளவு நேசிக்கிறார் என இப்போது பார்க்கலாம்!**" என்று கூறி, பாவ் கல்சூரிக்கு இவ்வாறு அறிவுறுத்தினார், "**ஒரு வார காலத்திற்கு, ஒவ்வொரு நாளும் லலித்திற்கு ஒரு கடிதம் அனுப்பவும், அதில் கூறியதையே திரும்பத் திரும்பக் கூறவும்: 'உங்களுக்கு எது மிகவும் சிறந்ததாகத் தோன்றுகிறதோ, அதையே செய்யுங்கள்.'**" அதற்கிணங்க, பாவ் கல்சூரி ஒவ்வொரு நாளும் அவருக்கு எழுதினார், ஐந்தாவது கடிதத்தில் பாவ் இவ்வாறு எழுதினார், "**ராஜ் உங்களுடன் இணைந்து வாழ பாபா கூறினால், நீங்கள் அதைச் செய்வீர்களா?**" லலித் முழுமனதாக அதற்கு சம்மதம் தெரிவித்து, ராஜின் தந்தை மற்றும் சகோதரிக்கு அவரை கொல்கத்தாவிற்கு அழைத்துவருமாறு கடிதம் எழுதினார்.

இந்தத் தம்பதியர் அன்பான வாழ்க்கையை வாழத் தொடங்கினர் மற்றும் ராஜின் பெற்றோர்கள் தங்கள் மருமகனில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு முற்றிலும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். கடந்த காலங்களில், செல்வாக்கு மிக்க அரசியல் கட்சிகள் மூலம் லலித் மீது அழுத்தங்களைக் கொண்டுவரும் அளவிற்குச் சென்று, நல்லிணக்கத்தை ஏற்படுத்த அவர்கள் தங்களால் இயன்றதைச் செய்ய முயன்றனர், ஆனால் லலித் அதற்கு இணங்கவே இல்லை.

ஆர்ய ஸமாஜின் (ARYA SAMAJ, தீவிர தேசியவாத இந்து அமைப்பு) உறுப்பினரான ராஜின் மாமா, பாபாவிற்கு எழுதினார்:

ஆர்ய ஸமாஜ் அமைப்பைச் சேர்ந்த நான், கடவுள் மனித உருவில் வருகை தரும் கொள்கையில் அல்லது தெய்வீக சக்தியில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால் இப்போது தெய்வீக சக்தி இருப்பதாக என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். மனிதனால் இயன்ற அனைத்தையும் செய்தோம்;

லலித்தை இணங்கச் செய்ய நாங்கள் செய்யாதது எதுவும் இல்லை; அனைத்திலும் எந்த பயனுமில்லை. இறுதியாக, ராஜ், லலித் இருவருக்கும் இடையே இணக்கம் சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வந்தோம். ஆனால் குறுகிய நேரத்தில், பல வருடங்களாக எங்களுக்கு இருந்த பயங்கரமான தலைவலியை நீங்கள் அப்புறப்படுத்தி விட்டீர்கள்.

இதுவே பாபாவின் அன்பின் அதிசயம். ராஜ், லலித் இருவரும் மீண்டும் ஒன்றிணைந்து, அவரது அன்பில் ஒற்றுமையாக வாழத் தொடங்கினர்.

இந்த நேரத்தில், நானா கேரின் சகோதரர் வினூவின் மகள் வீணா, தனது பி.எஸ்சி. (இளங்கலை அறிவியல்) தேர்வில் ஒரு மதிப்பெண்ணில் தோல்வியடைந்தார்; மேலும் வினூ அதை ஒரு கடிதம் மூலமாக பாவ் கல்சூரிக்குத் தெரிவித்தார். அன்று மாலை பாவ் கல்சூரி, பாபாவின் இரவுக் கண்காணிப்புக்குச் சென்றபோது, பாபா அவரிடம், "**இன்று ஏதேனும் செய்தி உள்ளதா?**" என வினவினார்.

பாபா ஒவ்வொரு நாளும் இந்தக் கேள்வியைக் கேட்பது வழக்கம்; அன்றைய தினம், அவருக்கு வழங்கிய பிற செய்திகளோடு, வீணா தேர்வில் தேர்ச்சி பெறாததைப் பற்றியும் பாவ் கல்சூரி அவரிடம் கூறினார். அதற்கு பதிலளித்த பாபா இவ்வாறு எடுத்துரைத்தார், "**என்ன அநீதி! ஒரே ஒரு புள்ளியால் மாணவர் தோல்வியடைகிறார்! இது அநீதி. அது என்ன மாதிரியான பல்கலைக்கழகம்; துணைவேந்தர் என்ன இந்த அளவுக்கு முட்டாள்தனமாகவா இருக்க வேண்டும்! மாணவர்களின் நன்மையைக் கருத்தில் கொள்ளும் சிந்தனையே அவருக்கு இல்லையா? ஐந்து மதிப்பெண்கள் வரை குறைவாகப் பெற்றவர்கள் தேர்ச்சி பெற வேண்டும்!**"

பாபா இந்த விஷயத்தை நீண்ட நேரம் தொடர்ந்து விவாதித்தார். வினூவிடம் கவலைப்பட வேண்டாம் என்று பாவ் கல்சூரி மூலம் நானா கேருக்கு தகவல் வழங்கப்பட்டது. ஒரு மாதத்திற்குப் பிறகு, வீணா பி.எஸ்சி தேர்ச்சி பெற்றதாக செய்தி வந்தது - ஒன்று முதல் ஐந்து மதிப்பெண்கள் வரை குறைவாக எடுத்து தோல்வி அடைந்தவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டது!

'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத் தொகுப்பு, பல ஸூஃபி மற்றும் வேதாந்த சொற்களை உள்ளடக்கியது. பாபா இந்த நேரத்தில் குருபிரசாத்தில் லட் டிம்ப்ஃபில் தயார் செய்த 'கடவுள் பேசுகிறார்' தொகுப்பின் சொற்களஞ்சியத்தை சரிபார்த்து திருத்திக் கொண்டிருந்தார். பால் நாத்து ஒவ்வொரு வார்த்தையையும் அதன் அர்த்தத்தையும் படித்து, தேவைப்படும் போது, பாபா ஒரு குறிப்பை சரிசெய்து வந்தார். சொற்களஞ்சியம் பாபாவின் ஒப்புதலுடன், வாசகருக்கு விதிமுறைகளை வேறுபடுத்தி அறிய உதவும் வகையில் தொகுக்கப்பட்டது.

இதற்கிடையில் இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளுக்கும் இடையிலான போர் இன்னமும் முடிவுக்கு வராத நிலையில், இது குருபிரசாத்தின் தினசரி

விவாதப் பொருளாக இருந்தது. அலோபா, ஒரு ஸொராஸ்ட்ரியன் மற்றும் முஸ்லீம் என்பதால், சொர்க்கத்தைப் பார்த்து, “யா, பாபா, பாகிஸ்தானைக் காப்பாற்றுங்கள்!” என்று குரல் கொடுத்தார்.

அதைக் கேட்ட பாபா, “**ஏன் இப்படிப் பிரார்த்தனை செய்கிறீர்கள்?**” என்று வினவினார்.

அலோபா அப்போது பதிலளித்தார், “என்னால் அதை விளக்க முடியாது; பிரார்த்தனை எனது வாயிலிருந்து அதுவாகவே வருகிறது!”

பாபா அவரைக் கடிந்து கொண்டார், “**இவரைப் பாருங்கள்! இந்தியாவில் வாழ்கிறார், ஒவ்வொரு நாளும் இந்தியாவில் விளையும் உணவை உண்கிறார் - இருந்தும் பாகிஸ்தானுக்காகப் பிரார்த்தனை செய்கிறார்!**”

1965 மே 23 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணியளவில், தற்போது நிலவும் போர் நெருக்கடியைப் பற்றி பாபா இவ்வாறு தெரிவித்தார்: “**தற்போதைய போர்க்கால நடவடிக்கைகள் தற்காலிக அமைதியை கொண்டுவரும். ஆனால் இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு - நவம்பர் 1967 இறுதியில் - உலகில் நான்கில் மூன்று பங்கை அழிக்கும் போராக உருவெடுக்கும். இந்தியா வெறுமையாக உணரும். எல்லா நாடுகளும் சொல்லொணா பேரழிவை சந்திக்கும், ஆனால் அமெரிக்கா உலகின் பிற நாடுகளை விட சற்று அதிகமாகவே பிழைத்துக் கொள்ளும். அதற்குப் பிறகு நான் எனது மௌனத்தைக் கலைப்பேன். அது எனது உலகளாவிய வெளிப்பாடாக இருக்கும், மேலும் நான் யார் என்பதை உலகம் அறிந்து கொள்ளும். எனது மௌனம் கலைந்த ஒரு வருடத்திற்குப் பிறகு, நான் என் உடலைக் கைவிடுவேன்.**”

அதைத் தொடர்ந்து பிற்பகல் நான்கு மணிக்கு பாபா கூறினார்: “**நான் மனித உருவில் வருகை தந்த கடவுள், நான் எனது மௌனத்தைக் கலைக்கும் போது, யுகத்தின் அவதார புருஷர் என்பதை உலகம் அறியும். சிறிது காலத்திற்கு, போர்வெறி உச்சத்தை எட்டும்; வெவ்வேறு நடவடிக்கைகள் தற்காலிக அமைதியைக் கொண்டுவரும். அதைத் தொடர்ந்து 1967 நவம்பர் இறுதிக்குள், உலகில், இதுவரை கண்டிராத போர் நிகழும்.**

“**இவை அனைத்தும் ஐயத்திற்கிடமின்றி உண்மைகள்; ஆனால் நான் உங்களுக்கு உத்தரவிடாதவரை இதை வெளியிடக்கூடாது. இந்த உண்மைகளை முன்கூட்டியே அறிவிப்பதால், இயல்பாக எழும் பல கேள்விகளுக்கு பதிலளிக்கும் தலைவலியைத் தவிர்ப்பதற்காகவே, இந்தக் கட்டுப்பாட்டை விதிக்கிறேன்.**”

இதற்கிடையில் ஃபிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரைச் சேர்ந்த ராபர்ட் அந்தோனி (ROBERT ANTONY OF PARIS, FRANCE), 1965 மே மாதத்தில் கடுமையான கார் விபத்தில் சிக்கினார்; அதில் உருவான பேரதிர்ச்சி அவருக்கு நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தியது. அவரது உடல்நிலை மிகவும் மோசமானதைத் தொடர்ந்து, அவர் தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என அவரது மனைவி இவோன் (YVONNE)

கவலைப்படவே, தனது கவலையை பாபாவிடம் தெரிவித்தார். பாபா, இவோனுக்கு இவ்வாறு பதில் அனுப்பினார்:

**என் அன்பான குழந்தைகளான இவோன், ராபர்ட் இருவருக்கும் என் அன்பை இத்துடன் அனுப்புகிறேன். ராபர்ட்டிடம், 'அவர் எதிர்கொள்ளும் இந்த சூழ்நிலையிலிருந்து தப்பிக்க நினைக்கவே கூடாது' என்று சொல்லுங்கள். தற்கொலை மூலமாகத் தப்பித்துக்கொள்வது என்பது, மாறாக, ஒரு பயங்கரமான பிணைப்பு. அவர் பாபாவின் அன்பின் வலிமையுடன் அனைத்தையும் எதிர்கொண்டு என்னை இடைவிடாது நினைவுகூர வேண்டும்.**

சிறிது நேரத்தில் ராபர்ட் அந்தோனி அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மூன்று நாட்கள் நினைவிழந்த நிலையில் இருந்தார். இவோன் மீண்டும் பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பினார். அவர் கணவரைப் பார்க்கவும் அனுமதிக்கப்படாமல், இதுவே முடிவு என்றும், செயற்கை முறையில் அவர் உயிருடன் வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. இரவு முழுவதும், இது அவருடைய விருப்பமாக இருந்தால், ராபர்ட்டை மீண்டும் உயிர்ப்பிக்கும்படி இவோன், பாபாவிடம் பிரார்த்தனை செய்தார். மறுநாள் காலை பாபாவிடமிருந்து ஒரு தொலைத்தந்தி வந்தது: "**ராபர்ட் உயிர்வாழ்வார்**." நண்பகலில் இவோன் மருத்துவமனைக்கு அழைக்கப்பட்டு, ராபர்ட் நன்றாக இருப்பதாகவும், அவரைப் பார்க்க அனுமதிக்கப்படுவார் என்றும் கூறப்பட்டது.

விபத்தால் இன்னும் நோயுற்று இருந்தாலும், ராபர்ட் மேலும் ஒன்றரை ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். டிசம்பர் 1966இல், கடந்த ஒன்றரை வருடங்களாக, மருத்துவமனைக்கும் பாதுகாப்பு இல்லத்திற்கும் முன்னும் பின்னுமாக சென்றுவந்த நிலையில், இறுதியில் ராபர்ட், 'அவர் எப்போதேனும் குணமடைவாரா' என்று கேட்டு, இவோனிடம் பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். டிசம்பர் 27 அன்று, பாபா கீழ்வரும் பதிலை அனுப்பினார்: "**ராபர்ட் தனது விதியை ஏற்றுக்கொள்ள வேண்டும்**." ராபர்ட் அந்தோனி இது தான் முடிவு என்பதை புரிந்துகொண்டு, "நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று அமைதியான குரலில் பதிலளித்தார்.

ஒரு மாதம் கடந்தது, 1967 ஜனவரி 27 அன்று, ராபர்ட் அந்தோனி தனது 58 வயதில் காலமானார். இது குறித்து மருத்துவமனையிலிருந்து இவோனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. தொலைபேசியை தொங்கவிட்டுக்கொண்டு இருந்த அந்த நேரத்தில் வாசல் மணி ஒலித்தது; பாபாவிடமிருந்து தொலைத்தந்தி ஒன்று வந்தது; அதில், "**இவோன், மகிழ்ச்சியாக இருங்கள், ராபர்ட் என்னுடன் இருக்கிறார். உங்கள் உடல்நிலையை கவனித்துக் கொள்ளுங்கள். பாபா**."

பின்னர் 1965 மே மாத தொடக்கத்தில் நடந்த சகவாசத்தில் கலந்து கொள்ள முடியாத சில நபர்களை பாபா நினைவு கூர்ந்தார், மேலும் அவர்களுக்காக 1965 ஜூன் முதல் வாரத்தில் ஒரு சிறப்பு தரிசன நிகழ்ச்சிக்கான

திட்டத்தை நிர்ணயித்தார். சம்பந்தப்பட்ட அன்பர்களுக்கு அவர் கடிதம் எழுதினார். பருவா ஸாகரின் ராம்ஸஹாய் யாதவ் (RAMSAHAI YADAV OF BARUA SAGAR), மாண்ட்லாவின் நாராயணிதேவி ஜா (NARAYANIDEVI JHA), ஹமிர்பூர் கிராமத்தின் ஆதர்ஷ் கரே (ADARSH KHARE) மற்றும் சில பக்தர்கள் வரவிருப்பதாக ஜால்பாய் மூலமாக தகவல் அனுப்பப்பட்டது.

பாபா அப்போது, "**இது எனது கடைசி தரிசனம், இதற்குப் பின்னர் இனி தரிசன நிகழ்ச்சிகள் எதுவும் இருக்காது**" என்று கூறினார்.

லக்னோவைச் சேர்ந்த ஷிவேந்திர ஸஹாய் (SHIVENDRA SAHAI OF LUCKNOW) மே மாத தரிசனத்தில் கலந்து கொள்ள முடியவில்லை, மேலும் அவர் முன்கூட்டியே அழைக்கப்பட்ட போது தனிப்பட்ட நேர்காணல் வழங்கப்பட்டது. பாபா அவரிடம், "**நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?**' என வினவினார்.

அவர் "எனக்குத் தெரியாது பாபா" என்று நேர்மையாக பதிலளித்தார்.

மண்டலி திடுக்கிட்டனர், ஆனால் பாபா அவரது கைகளை உயர்த்தி, "**நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்து, நான் சொல்வதைச் செய்வீர்களா?**" என்று கேட்டதற்கு ஷிவேந்திரா 'ஆமாம்' என்று பதிலளித்தார்.

பாபா அவரது கண்களை நேராகக் கூர்ந்து நோக்கி, மிகவும் தீவிரமான முகபாவத்துடன், "**பாவ் கல்சூரியின் கழுத்தை வெட்டச் சொன்னால், நீங்கள் அதைச் செய்வீர்களா?**" என்று கேட்டார்.

ஷிவேந்திரா ஒரு கணம் தயங்கினாலும், பின்னர் "ஆம்" என்று பதிலளித்தார். பாபா மகிழ்ச்சியடைந்து அவருக்கு சில தனிப்பட்ட கட்டளைகளை வழங்கினார்.

1965 ஜூன் 6 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3:30 முதல் 4:30 மணி வரை, குருபிரசாத் மண்டபத்தில் சிறப்பு தரிசன நிகழ்ச்சிக்காக கிட்டத்தட்ட 500 அன்பர்கள் ஒன்றுதிரண்டனர். தரிசனம் நிறைவடைந்த அந்த நேரத்தில், பாபாவின் கால்கள் பயங்கரமாக நடுங்கத் தொடங்கின. அன்பர்கள் திரும்பிச் சென்றதும், எரச், நரிமன், பெண்டு, மெஹர்ஜி, பாவ் கல்சூரி ஆகியோர் பாபாவை சக்கர நாற்காலியில் அவரது அறைக்கு அழைத்துச் சென்றனர். டாக்டர் கிண்டே அவரை பரிசோதனை செய்து, சிறிது நேரம் படுக்கையில் ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தினார். ஒரு கடினமான தரிசன நிகழ்ச்சிக்குப் பிறகு, பாபா, டாக்டர் கிண்டேயிடம், தரிசன நிகழ்ச்சி நேரத்தில் இடுப்புப் பாகத்தில் வலி மிகவும் அதிகமாக இருந்ததாகக் கூறி, "**தானியத்தின் நான்கில் ஒரு பாகம் அளவிலான 'வலி நிவாரண' மருந்தின்** (மார்ஃபீன் - MORPHINE) **நான்கு ஊசிகள் கூட வலியைக் குறைத்திருக்காது**" என்றார்.

பாபாவின் உடல்நிலை மிகவும் பலவீனமாக இருந்தது, அதுதான் அவர் வழங்கிய கடைசி தரிசனம் என்று தோன்றியது. காலம் இதை இவ்வாறு பார்த்தது: "பாபாவைப் பொறுத்தவரை, தரிசனம் வழங்குவது என்பது, பிறரின் மனப்படிவங்களைத் தம் மீது சுமந்துகொண்டு, அதற்கு பதிலாக, அவருடைய

அன்பைக் கொடுப்பதாகும். ஆனால், அதைச் செய்வதன் மூலம், ஒவ்வொரு முறை ஒருவர் அவரைத் தலைவணங்கும்போதும் அவருடைய பாதங்களில் தனது மனப்படிவங்களின் சுமையை இறக்குவது என்பது வலுவான ஓர் அறை கொடுப்பதற்கு நிகரானது.”

குருபிரசாத்தில் நடந்த மே மாத தரிசன நிகழ்ச்சியின் காணொளித் திரைப்படம் அன்று மாலை 7:00 மணிக்குத் திரையிடப்பட்டது. பாபா பாதியைப் பார்த்துவிட்டுத் தன் அறைக்குத் திரும்பிச் சென்றார்.

கோக்கரன் ஸ்ரீவஸ்தவா (GOKARAN SHRIVASTAVA), அவரது மனைவி ஊர்மிளா (URMILA, 25) இருவரும் மே மாத தரிசனத்திற்காக பூனா வந்திருந்தனர். ஊர்மிளா, முதல் வகுப்பு எம்.எஸ்சி. (M.Sc. அறிவியலில் முதுகலைப் பட்டம்) தேர்ச்சி பெற்று ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர், பாபாவை முதன்முறையாக சந்தித்து, அவரது அன்பு மழையில் முழுவதுமாக ‘நனைந்தார்’. இல்லம் திரும்பிய பின்னர் அவர், தன் இயல்பு நிலைக்கு வருவதற்கு முன்பு, பல நாட்கள் தெய்வீக ஆனந்தத்திலும், போதையிலும் மூழ்கி இருந்தார். ஊர்மிளா மீண்டும் பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கினார், ஆனால் பாபா பார்வையாளர்களுக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளால் அதை அடையப்பெற முடியவில்லை.

அதன் விளைவாக, அவர் வேறொரு குருவின் ஆசிரமத்திற்குச் சென்று, மூன்று நாட்கள் அங்கேயே இருந்துவிட்டு பின்பு இல்லம் திரும்பினார். பாபாவிற்குக் கடிதம் எழுதி தரிசனத்திற்காக வேண்டவே, ஜூன் 6ஆம் நாள் அவரைத் தனது கணவருடன் வர பாபா அனுமதித்தார். மே மாதத்தில் சில காரணங்களால் முந்தைய தரிசனத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு மட்டுமே இந்த தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், பாபா, ஸ்ரீவத்ஸவா தம்பதியரை வர அனுமதித்தார்.

நிகழ்ச்சி நிறைவடைந்ததும் ஊர்மிளா, பாவ் கல்சூரியிடம் நடந்ததை விவாதித்தார்: “நான் ஒரு குருவிடம் மூன்று நாட்கள் சென்றேன், நாள் முழுவதும் அவர் முன்னிலையில் பலவிதமான சொற்பொழிவுகள், பஜனைப் பாடல்கள் மற்றும் வியாக்கியானங்கள் வாசிப்பது நடந்து கொண்டிருந்தன. ஆனால் எதுவும் இதயத்தைத் தொட்டதாக இல்லை, அதனால் நான் இல்லம் திரும்பிச் சென்றேன்.

“மே மாதத்தில், பாபாவுடன் பேச வாய்ப்பில்லை என்றாலும், அவரைப் பார்த்த வேளையில், விவரிக்க முடியாத அளவுக்கு மகிழ்ச்சி அடைந்தேன்! அதைத் தொடர்ந்து, வேறொரு குருவிடம் சென்றது எனக்கு மிகவும் அவநம்பிக்கையை ஏற்படுத்தியது; பாபா இல்லாத வாழ்க்கை எனக்கு பெரும் சுமையாகிவிட்டது. இப்போது பாபா என்னை அழைக்காமல் இருந்திருந்தால், தொடர்ந்து வாழ்வது மிகவும் கடினமாக இருந்திருக்கும். பாபாவின் மௌனத்தால் அடையப் பெறும் மகிழ்ச்சியை வேறு எவரிடமிருந்தும் பெற முடியாது. வெறும் வார்த்தைகளால் அதை உருவாக்க முடியாது.”

அன்று முதல் ஊர்மிளா, பாபாவின் பாதங்களில் முழு அர்ப்பணிப்புடன் இருந்தார்.

இந்த தரிசனத்திற்குப் பிறகு, பாபா, முற்றிலும் தொந்தரவு இல்லாமல் இருக்க விரும்புவதாகத் தனது அன்பர்களுக்குத் தெரிவித்தார், மேலும் கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளிலிருந்து வரும் கடிதங்கள், எந்த முகவரிக்கு அனுப்பப்பட்டாலும், இனிமேல் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட கூடாது என்றும் கட்டளையிட்டார். அமெரிக்காவில் வாழும் இர்வின், எட்வர்ட் லக் சகோதரர்களிடமிருந்து சமீபத்தில் வந்த ஒரு கடிதத்திற்கு ஜூன் 10 அன்று விதிவிலக்கு அளிக்கப்பட்டது. பாபா, எரச் மூலமாக இந்த பதிலை அனுப்பினார்: “பாபா, **நீங்கள் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறார்: அவர் தமது மௌனத்தைக் கலைக்கும் அந்த நாள் விரைவில் வரும் வேளையில், அவர் முகத்திரைகளை அகற்றி, அன்பிற்குரியவரின் அழகைக் காண தனது அன்பர்களை அனுமதிப்பார்**.”

தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்த பின்னரும், பூனா சேவகர்களை அவ்வப்போது குருபிரசாத்திற்கு வர பாபா அனுமதித்தார்; மண்டபத்தின் வரவேற்பு அறையில் அமர்ந்து உரையாடுவதும், சீட்டு விளையாடுவதும் தவறாமல் நடந்துவந்தது. முழுக் குழுவையும் ஒன்றாக சந்திப்பது மட்டுமின்றி, சில நேரங்களில் அவர் பாப்புஸாஹேப் ஷிண்டேயை தனது படுக்கையறைக்கு அழைத்து, அவர் மீதான அன்பு மற்றும் அக்கறையை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தினார். பாபாவுடன் நெருக்கமாக இருந்த பூனா குழுவில், பாபாவைத் தனியாகப் பார்க்கும் வாய்ப்பு ஷிண்டேக்கு மட்டுமே வழங்கப்பட்டது. ஐந்து மாதங்களுக்குப் பிறகு, ஷிண்டே இறைவனடி சேரும் வரை, அவருக்கு வழங்கப்பட்ட சிறப்பு சகவாசத்திற்கான காரணம், அப்போது எவருக்கும் புரியவில்லை.

இதற்கிடையில், காக்கா பாரியா பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு 1965 ஜூன் 14 அன்று பாதிரி, ஆதி சீனியர் ஆகியோரால் பூத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். காக்கா, உயிரைத் துறந்துவிடுவார் போல் இருப்பதாக பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டது. உண்மையில், பாபா, மெஹராஸாத்தில் காக்காவை அடக்கம் செய்வது குறித்த அறிவுரைகளை வழங்கினாலும், “**நான் பூனாவிலிருந்து திரும்பி வந்த பிறகு, காக்கா உயிரைத் துறந்தால் நல்லது**” என்று கூறினார். ஆச்சரியப்படும் விதத்தில், காக்கா குணமடைந்தார், ஜூன் 26ஆம் தேதி குஷ்ரு குவார்ட்டர்ஸில் அமைந்த குல்மாயின் அறைக்கு மாற்றப்பட்டு, அங்கு அவர், பாபா மெஹராஸாத் திரும்பிச் செல்லும் முன்னர் ஒரு வாரம் தங்கினார்.

1965 ஜூன் 22ஆம் நாள், அவர்களின் வழக்கமான நடைமுறைக்கு மாறாக, ‘**பாபாவின் கார் அஹமதுநகர் வழியாக மெஹராஸாத்திற்குச்**

**செல்லும் போது, அன்பர்கள் சாலையோரம் நின்று வரவேற்க வேண்டாம்**' என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்குமாறு பாபா அறிவுறுத்தினார்.

ஆதி துபாஷ் அலுவலக பணி நிமித்தம் கராச்சிக்குத் திரும்ப வேண்டியிருந்ததால், ரோடாவும் அவர்களது மகன் மெஹர்வானும் பூனாவில் தங்கி, தினமும் குருபிரசாத்திற்கு வந்தனர். ரோடா கடிதப் போக்குவரத்தைக் கையாளுவதில் உதவுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மண்டபத்தை ஒட்டிய ஒரு சிறிய அறையில் பணிபுரிந்து வந்தார். ஒரு நாள், தனது நாற்காலியில் அமர்ந்திருந்த பாபா, அவரை கவனித்து, தனது விரல்களைத் தட்டச்சு செய்வது போல் அசைத்து பாவனை செய்தார். சில நேரங்களில், பாபா மற்றும் பெண் மண்டலியுடன் மதிய உணவுக்காக மெஹரா, ரோடாவை அழைப்பது உண்டு. ரோடா மிகவும் மெதுவாக சாப்பிடுவது வழக்கம் என்று பாபா சில சமயங்களில் கிண்டல் செய்து வந்தார். 1965 ஜூன் 27 அன்று பாபாவுடன் மதிய உணவு உண்ணும் வேளையில், பாபா, ஒரு பெரிய துண்டு மாம்பழத்தை அவரிடம் கொடுத்து, அதை ஐந்து நிமிடங்களுக்குள் உண்ணுமாறு கூறினார். முதலில் ரோடா அதை நகைச்சுவையாக எடுத்துக் கொண்டு, வழக்கம் போல் உண்ட போது, பாபா, "**இப்போது இன்னும் நான்கு நிமிடங்கள் மட்டுமே உள்ளது. சீக்கிரம்!**" என்றதும், பாபா நிஜமாகவே கூறுகிறார் என்பதை உணர்ந்த ரோடா, மாம்பழத்தை வேகமாக உண்ணத் தொடங்கினார். "**இப்போது ஒரு நிமிடம் மட்டுமே உள்ளது!**" பாபா சுட்டிக்காட்டினார். எனவே ரோடா, மீதமுள்ள துண்டுகளை வாயில் திணித்ததும், பாபா கைகளைத் தட்டினார். அவரது கன்னங்கள், பலூன் போல வீங்கியதைப் பார்த்து பெண் மண்டலி கலகலவென சிரித்தனர், பாபா அவரிடம், "**இப்போது பக்கத்து அறைக்குச் சென்று, வாயில் திணித்ததை மெதுவாக மென்று உண்ணுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களாக, டாக்டர் அலு கம்பட்டா தன் உறவினருடன் குருபிரசாத் அருகே அமைந்த மோபோஸ் ஹோட்டலில் தங்கி, இயன்றவரை பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டார். ஜூன் 30 அன்று, பாபா அவர்களை குருபிரசாத்திற்கு அழைத்து, "**கோஹெர் கூறுகிறார், 'நமக்கு ஒரு மருத்துவர் தேவை, அதனால் நாம் ஏன் அலுவை நம்முடன் அழைக்கக்கூடாது. அவர் நமக்கு உதவியாக இருப்பார்.' நான் உங்களை, பத்து நாட்களுக்காக எங்களுடன் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். நீங்கள் வரத் தயாரா?**" என வினவினார்.

அலு அளப்பரிய மகிழ்ச்சியடைந்தார், பத்து மணி நேரமாக இருந்திருந்தால் கூட அவர் அதே மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்திருப்பார். பாபா கேட்டார், "**உங்கள் ஆடைகளை எப்படிக் கொண்டு வருவீர்கள்?**"

"என்னிடம் ஒரு பயணப் பெட்டி உள்ளது," அவர் பதிலளித்தார்.

"**பயணப் பெட்டியா? பத்து நாட்களுக்கு!**" ஒரு சிறிய பையை அவரிடம் காட்டி, "**இவ்வளவு மட்டும் போதுமானது**" என்றார்.

அலு கம்பட்டா அந்தப் பையில் துணிமணிகளை வைத்து, பெண் மண்டலியுடன் மெஹராஸாத் திரும்பினார். பத்து நாட்கள் கடந்த பின்னர், அவர் உண்மையிலே மிகுந்த உதவியாக இருந்ததைக் கண்டு, பாபா அவரை நீண்ட காலம் தங்குமாறு அறிவுறுத்தினார். இறுதியில், அவர் ஆறு மாதங்கள் டாக்டர் அலுவை மெஹராஸாத்தில் தங்க அனுமதித்து, அவருக்குப் புதிய ஆடைகளையும் வழங்கினார்.



நோஷிர் (ஸாம்) ஈரானி (NOSHIR – SAM - IRANI)

# மெஹராஸாத் ஏகாந்தவாசம்

**(Seclusion in Meherazad)**

இந்த நேரத்தில் ஸாக்கோரியைச் சேர்ந்த யஷ்வந்த் ராவ் போராவாக்கே (YASHWANT RAO BORAVAKE), பூனா மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சதாஷிவ் பாட்டீலை அங்குச் சென்று அவரை சந்திக்குமாறு பாபா கேட்டுக்கொண்டார். அவரது உடல்நிலை தீவிரமடைந்ததால், அவரை ஸாக்கோரிக்கு அழைத்துச் செல்லுமாறு பாபா, யஷ்வந்தின் உறவினர்களுக்கு அறிவுறுத்தினார். யஷ்வந்த் ராவின் மகள், பிறரின் ஆட்சேபனைகளை மீறி, பாபாவின் அறிவுறுத்தலின்படி, ஜூன் 30 அன்று அவசர மருத்துவ ஊர்தி மூலமாக யஷ்வந்த் ராவை ஸாக்கோரிக்கு அழைத்துச் சென்றார். மெஹர்ஜி மற்றும் சதாஷிவ் மூலம் பாபா, யஷ்வந்த் ராவின் குடும்பத்திற்கு அடிக்கடி செய்திகளை அனுப்பி வந்தார். யஷ்வந்த் இரண்டு நாட்களுக்குப் பின்னர் இரவு 11:25 மணிக்கு உயிரைத் துறந்தார். 1965 ஜூலை 2 அன்று, பாபா இந்தத் தொலைத்தந்தியை பி.டி. வாக் (P.T. WAGH, ஆசிரம மேலாளர்) மற்றும் ஸாக்கோரியின் இதர அன்பர்களுக்கு அனுப்பிவைத்தார்: "**யஷ்வந்த் ராவ் என்னிடம் வந்துள்ளார்**."

இதற்கிடையில் ஜூன் 30 அன்று இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அன்று காலை ஆதி குருபிரசாத்தை வந்தடைந்தார். பாபாவின் இடுப்புப் பாகம் மிகுந்த வலியாக இருந்தபோதிலும், அவர் எரச், மணி, மெஹர்ஜி, நரிமன், ஜால்பாய், பெண்டு, வாமன், ஆதி ஆகியோரை தனது படுக்கையறைக்கு அழைத்தார். பாபா படுக்கையில் ஓய்வெடுத்த வண்ணம், "**டிசம்பர் மாதத்தில் நீங்கள் ஒரு சகவாச நிகழ்ச்சிக்குத் தயாராக வேண்டும் என்று நான் விரும்புகிறேன்**" என்று சைகையால் தெரிவித்தார். '**1966 பிப்ரவரி 1 முதல் 40 நாட்களுக்கு நான் ஆந்திராவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளலாம்**' என அறிவித்து, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

அடுத்த நாள் 1965 ஜூலை 1 வியாழன் காலை 7:45 மணிக்கு, பாபா பூனாவிலிருந்து மெஹராஸாத் திரும்பிச் சென்றார். ஆதி, பாபாவையும் பெண்மணிகளையும் டிசோட்டோ (DeSOTO) காரில் அழைத்துச் சென்றார்; ஸரோஷின் காரில் ரானோ, நாஜா இருவரும் ஓட்டுநர் ஷேக்குடனும், ஆதியின் காரில் வாமன் ஆண் மண்டலியுடனும் புறப்பட்டுச் சென்றனர். அனைத்து பெட்டி படுக்கைகளுடன் பகீரத்தின் சரக்கு வாகனம் பின் தொடர்ந்தது. அவர்கள் இடைவிடாமல் பயணத்தைத் தொடர வேண்டும் என்று பாபா வற்புறுத்தினார், ஆனால் சாலையின் ஒரு பகுதி பழுதுபார்க்கப்பட்டு வந்ததால், சமதளமற்ற சாலையின் அதிர்வுகள் அவரது இடுப்புப் பாகத்தின் வலியை மிகவும்

தீவிரமடையச் செய்தது. அதைத் தொடர்ந்து பல நாட்கள் பாபாவின் கால்கள் எடையைத் தாங்க இயலாத நிலையில், நடக்க முடியாமல் அல்லல்பட நேர்ந்தது.

மெஹராஸாத் வந்தடைந்த பிறகு பாபா தனது அறையில் ஒரு மாதம் தனிமையில் இருந்தார், மேலும் அவர் பிரதான வீட்டை விட்டு வெளியிலும், மண்டபத்திற்கும் வரவில்லை. **"இது ஏகாந்தவாசத்தில் நான் மேற்கொள்ளும் ஏகாந்தவாசம்"** என்று குறிப்பிட்டார். ஜூலை 3 அன்று ஸரோஷ், காக்கா பாரியாவை மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார்; அடுத்த நாள் ரமா, ஷீலா, மெஹர்நாத் ஆகியோரும் வந்தனர். 6ஆம் தேதி பாதிரி மெஹராபாத்தில் தங்குவதற்காக திரும்பிச் சென்ற அதே நாளில், கைக்கோபாத் மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

ஒரு நாளைக்கு இரண்டு முறை பாபா தனது அறைக்கு ஆண் மண்டலியை வரவழைத்து, மேற்கத்திய அன்பர்கள் பங்கெடுக்கும் சகவாசத்திற்கான ஏற்பாடுகளைப் பற்றி விவாதித்தார். சகவாசம் அஹமதுநகரில் 1965 டிசம்பர் 23 முதல் 29 வரை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. மொத்தத்தில் 250 அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் ஆஸ்திரேலிய அன்பர்கள் எதிர்பார்க்கப்பட்டனர். அவர்கள் நகரத்தில் தங்கியிருக்கும் வேளையில், பாபாவுடனான உண்மையான சகவாசம் மெஹராஸாத்தில் ஒவ்வொரு நாளும் காலை 9:00 மணி முதல் மூன்று மணிநேரம் நடைபெறும்.

ஆதி, ஸரோஷ், விலூ, அண்ணா குணே (ANNA GUNE), கஜ்வானி, ஸிகன்போரியா ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆதி, ஸரோஷ், விலூ மூவரையும் பாபா மெஹராஸாத்திற்கு வரவழைத்து, மேற்கத்திய அன்பர்களின் தங்குமிடத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவுறுத்தினார். அவர்கள், "பாபா, அஹமதுநகரில் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது. இந்த ஆண்டு போதிய மழை பொழிவது எங்கள் கைகளில் இல்லை எனும் போது, வருபவர்களுக்கு வேண்டிய தண்ணீர் விநியோகம் செய்வது கடினம்" என்று முறையிட்டனர்.

அதற்கு பாபா சிரித்துக்கொண்டே, **"அதை நான் பார்த்துக் கொள்கிறேன்; நீங்கள் தங்கும் வசதிகளைப் பாருங்கள்"** என்றார். பொதுநல மருத்துவமனைக்கு அருகில் புதிதாகக் கட்டி எழுப்பிய கட்டிடம் அல்லது அதற்கு மாற்றாக அஹமதுநகர் கல்லூரி விடுதிகளை வாடகைக்கு எடுக்க முயற்சி செய்து, பாபாவின் கட்டளைகளை நிறைவேற்றத் தொடங்கினர்.

இதற்கிடையில், நியூயார்க் நகரில், ஹாரி கென்மோர் ஒரு விமானத்தை வாடகைக்கு எடுப்பதற்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தார்; மே மாதம் குருபிரசாத்தில் அது குறித்து பாபாவுடன் கலந்துரையாடிய போது, பாபா அதற்கு ஒப்புதல் அளித்தார். **'சகவாசம் என்பது அவரை உண்மையாக நேசிப்பவர்களுக்கு மட்டுமே; வெறுமனே தற்காலிக ஆர்வமும், உற்சாகமும் உள்ளவர்களுக்காக அல்ல'** என அறிவுறுத்தினார். குழந்தைகளும் இந்த நிகழ்ச்சிக்காக வர அனுமதிக்கப்பட்டனர். கிழக்கு-மேற்கு சகவாசத்தில் பங்கெடுத்தவர்களில் பெரும்பாலோர், கடந்த மூன்று ஆண்டுகளில் பாபாவைப்

பார்க்கவில்லை என்பதால், இந்த சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொள்ளத் திட்டமிட்டிருந்த பல அன்பர்களுடன், மேலும் பல புதியவர்களும் புனித யாத்திரையை மேற்கொள்ள ஆயத்தமாயினர். புதிய, பழைய அன்பர்கள் அனைவரும், மீண்டும் ஒருமுறை அன்பான பாபாவின் பிரசன்னத்தில் இருக்கும் வாய்ப்பில் எஞ்சிய நாட்களைக் கணக்கிடத் தொடங்கினர்.

எதிர்வரும் சகவாசத்தில் கலந்து கொள்ளாதவர்களில் ஒருவர் சார்லஸ் பர்டம். பர்டம் லண்டனில் பித்தப்பை நோய்க்கான அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து, மாரடைப்பால் நீண்ட காலமாக அவதியுற்று, இறுதியில் உயிரைத் துறந்தார். பர்டம் காலமான போது அவருக்கு வயது 82. மோலி ஈவ் (MOLLIE EVE) ஒரு தொலைத்தந்தி மூலம் மெஹராஸாத்தில் அனைவருக்கும் இந்த செய்தியைத் தெரிவித்த வேளையில், பாபா, கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்: "**என் அன்பான சார்லஸ் என்னுடன் இருக்கிறார், எனது நித்திய அன்பில் ஆசீர்வதிக்கப்பட்டவர். அவரது மனைவி அன்தோனியாவிற்கும், எனது நோக்கத்திற்காக சார்லஸுடன் அவரது சேவையைப் பகிர்ந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் என் அன்பு.**"

சார்லஸ் பர்டம் காலமான அதே நாளில், ஜூலை 8ஆம் நாள் மெஹராஸாத்தில், மணியின் செல்லப்பிராணியான காக்கர் ஸ்பானியல் பீட்டர் (COCKER SPANIEL PETER) நிரந்தரமாக தூங்க வைக்கப்பட்டது. அந்த நாய் புற்றுநோயால் தாக்கப்பட்டது, பாபாவின் அறிவுறுத்தலின்படி டாக்டர் அலு கம்பட்டா அதற்கான ஊசி மருந்தை செலுத்திய போது, பீட்டர், பாபாவின் முன்னிலையில் படுக்கையறையில் தனது இறுதி மூச்சை விட்டது. சில நிமிடங்களுக்கு முன்பு, பாபா அந்தச் செல்லப்பிராணியை அன்புடன் அரவணைத்த வேளையில் பீட்டர் பலவீனமாகத் தனது வாலை ஆட்டியது. பீட்டர் பன்னிரண்டு வருடங்கள் பாபாவுடனும் பெண் மண்டலியுடனும், அவர்களுக்கு மிகவும் பிரியமான செல்லப்பிராணியாக இருந்தது. மாமரங்களின் வரிசைக்கு இடையில் ஒரு குழி தோண்டப்படும் வரை, அதன் உடல் பாபாவின் அறையில் கிடை மட்டத்தில் வைக்கப்பட்டது (இந்த மா விதைகள் பல ஆண்டுகளுக்கு முன்பு மதராஸில் மஸ்த் ஒருவரால் பாபாவிற்கு வழங்கப்பட்டது). பாபா அவரது கைக்குட்டையை பீட்டரின் உடலில் வைத்து, அதை அத்துடன் அடக்கம் செய்ய வேண்டும் என்று பலமுறை கூறினார்.

பாபா கூறினார், "**பீட்டர் அளவிட முடியாத அளவுக்கு ஆசீர்வதிக்கப்பட்டது, ஏனெனில் எனது அவதார காலகட்டத்தின் போது, எந்த ஒரு பிராணியும் எனது முன்னிலையில் உயிரைத் துறந்தது இதுவே முதல் நிகழ்வு. இப்போது, ஒரு வருடத்திற்குப் பின்னர் அந்த ஆத்மா ஓர் ஆண் மனித உருவில் பிறந்து, என்னிடம் வரும். ஓர் ஆண் குழந்தையாக எனது கைகளில் தவழ்ந்து என்னால் அரவணைக்கப்படும்.**"



மணியுடன் பீட்டர் (PETER WITH MANI)



பாபாவுடன் மஸ்தான் (MASTAN WITH BABA)

பீட்டர் புதைக்கப்பட்டதும் அதன் நினைவாக கல்லறைக்கு மேல் நறுமணம் வீசும் சம்பங்கி மரம் ஒன்று நடப்பட்டது. கீழ்வரும் வார்த்தைகளை அந்தக் கல்லறையில் பொறிக்குமாறு பாபா அறிவுறுத்தினார்: '**பாபாவின் செல்லப்பிராணி**, **பீட்டர்**'. பாபா இவ்வாறு அவதானித்தார், "**பீட்டர்**, **தான் அடையப் பெற்ற அதிர்ஷ்டத்திற்குத் தகுதியானது**."

பீட்டரின் தோழன் மஸ்தான் (MASTAN); இருவரும் ஒன்றாக விளையாடியதால், பீட்டரின் பிரிவை மஸ்தான் பெரிதும் உணர்ந்தது. பாபாவும் பீட்டரை இழந்ததைத் தொடர்ந்து, "**நான் கடவுளாக இருந்து**, **பீட்டர் உண்மையிலேயே எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டது என்பதை அறிந்த எனக்கு கூட**, '**பீட்டர்' இல்லாதது ஒரு பேரிழப்பு**" என்று குறிப்பிட்டார்.

1965 ஜூலை 10ஆம் தேதி சனிக்கிழமையன்று உலகம் முழுவதும் மற்றும் மெஹராஸாத்தில் மௌன தினம் அனுசரிக்கப்பட்டது. இது பிரியமான பாபாவின் மௌனத்தின் 40ஆவது ஆண்டு நிறைவாகும். சில காரணங்களால் மௌனம் கடைப்பிடிக்க முடியாத அன்பர்களுக்கு உபவாசம் கடைப்பிடிக்கும் வழக்கமான சுதந்திரம் வழங்கப்பட்டது.

ஜூலை முழுவதும் பாபா தனது அறையில் தனிமைப்படுத்தப்பட்டார். மழைக்கால வானிலை ஈரமாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது, பாபா தனிமையை விரும்புவதற்கு மற்றுமொரு காரணம். அந்த ஆண்டு ஏறத்தாழ மழை இல்லை, ஆனால் இரவும் பகலும் பலத்த காற்று வீசியது. மெஹராஸாத், அஹமதுநகர் போன்ற இடங்களில் நல்ல மழை பொழியத் தொடங்கியதும், மண்டலி மண்டபத்திற்கு வருவதாக பாபா கூறினார். பெரும்பாலும், வெளியளவிலான விஷயங்களில் மிகக் குறைந்தபட்ச கவனம் செலுத்தப்பட்டது; ஒரு சில அவசர கடிதங்கள் மட்டுமே பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டன.

பாபா மெஹராஸாத் திரும்பி வந்த பின்னர், அவரது இடுப்புப் பாகத்தில் வலி கடுமையாக இருந்தது. டாக்டர் கோஹெரிடம் கார்டிஸோன் (CORTISONE) ஊசி மருந்து போடுமாறு அவர் வலியுறுத்தவே, ஜூலை 7ஆம் நாள் அது போடப்பட்ட பின்பு, காலில் பாரத்தைத் தாங்கி சிறிது நடக்க முடிந்தது. ஊசி போடப்பட்ட முதல் இரண்டு நாட்களுக்கு 90 சதவீதம் வலி குறைந்ததாக பாபா குறிப்பிட்டார். அதற்குப் பிறகு, மீண்டும் இடுப்புப் பக்க வலி தீவிரமடையத் தொடங்கியது. ஆனால் 12ஆம் தேதிக்குள், பாபா ஊன்றுகோலைப் பயன்படுத்தி ஒரு நாளைக்கு ஒரு முறை வீட்டிற்குள் நடமாடினார்.

1965 ஜூலை 16ஆம் தேதி, தனது மகள் ஸர்வாருடன் தங்கியிருந்த பைதூலை கர்மன் மாசியின் மகன் ஹோமி மும்பையிலிருந்து மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார்.

இந்த நேரத்தில், எதிர்வரும் சகவாச நிகழ்ச்சி தொடர்பான மண்டலியின் பணி அதிகரித்து வந்தது. மேலும், பாபா இடைவிடாது வசைபாடிக் கொண்டிருந்ததால், பாவ் கல்சூரி மிகவும் துன்புறுத்தப்பட்டதாக நினைத்தார்.

இரவு கண்காணிப்பாளராக, அவரது கடமையில் கவனமாக இருக்க வேண்டிய நிலையில், பகலிலும் அவர் பாபாவின் அறையில் அதிக நேரம் இருக்க வேண்டிய கட்டாயம் உருவானது. இதன் விளைவாக பாவ் கல்சூரிக்கு, கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபடவோ அல்லது சொற்பொழிவுக்கான உரைகளைத் தயார் செய்வதற்கோ நேரமில்லாத சூழ்நிலை. ஸரோஷ், விலூ, சகன் ஆகியோரை பாபா, உத்தரபிரதேசம் மற்றும் பிற இடங்களுக்கு முக்கியமான பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்க தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்தார்; இவ்வேளையில், பாவ் கல்சூரியின் பணிகளில் ஒன்று அவர்களின் பல்வேறு உரைகளை இந்தி மொழியில் எழுதுவது.

ஒரு நாள் பாபா சில அவசர வேலைகளை பாவ் கல்சூரிக்கு வழங்கினார்; ஆனால், முழு நாளும் பாபாவுடன் அவர் அறையில் அமர்ந்திருந்ததால், அதை நிறைவு செய்ய நேரமில்லாமலாயிற்று. பாவ் கல்சூரியிடம் பாபா '**அந்த வேலையைச் செய்தாரா**' என்று கேட்டதற்கு அவர், "இல்லை, எனக்கு நேரமில்லை" என்று பதிலளித்தார்.

பாபா அவரை வெகுவாகக் கடிந்து கொண்டார்; பின்னர், அவர் பாபாவின் கால்களை அழுத்திக்கொண்டிருந்த வேளையில், பாவ் கல்சூரி மிகுந்த வருத்தத்தில் ஆழ்ந்திருந்தார்: "நான் உயிரை விடுவது நல்லது, ஏனெனில் பாபாவை விட்டு விலகி என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது, அதே வேளையில் என்னால் அவருக்கு சேவை செய்யவும் முடியாது. அவரோ, நான் எதுவும் சரியாகச் செய்யவில்லை என்று என் மீது எரிச்சலடைகிறார். எனவே நான் உயிரைத் துறப்பதே நல்லது!"

இந்த எண்ண அலைகள் அவர் மனதில் பாய்ந்த போது, திடீரென பாபா எழுந்து அமர்ந்து, "**உங்களுக்கு 70 வயதாகும் போது எப்படி நடப்பீர்கள் என்பதை எனக்குக் காட்டுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

பாவ் கல்சூரி உடனே, "ஆனால் நான் 70 வயது வரை வாழ விரும்பவில்லை! நான் இப்போதே உயிரைத் துறக்க விரும்புகிறேன்!" என்றார்.

"**ஆனால் நீங்கள் எப்படி நடப்பீர்கள் என்பதை மட்டும் எனக்குக் காட்டுங்கள்.**"

எனவே பாவ் கல்சூரி ஒரு வயதான மனிதரைப் போல குனிந்து, படுக்கையறை முழுவதும் முன்னும் பின்னுமாக நடக்க வேண்டியிருந்தது. பாபா அவரை ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு சுமார் நான்கு முறை நடக்கச் செய்தார். மூன்றாவது முறை நடந்த பின்பு, பாவ் கல்சூரி அடக்கமுடியாமல் சிரிக்கத் தொடங்கிய அந்த நேரத்தில், அவரது மனச்சோர்வு முற்றிலும் மறைந்தது. பாபா அப்போது, "**நீங்கள் செய்ய வேண்டிய பணி இன்னும் ஏராளம் உள்ளது. அதைக் குறித்து உங்களுக்கு இப்போது எதுவும் தெரியாது**" என்று குறிப்பிட்டார்.

1965 ஆகஸ்ட் 1 அன்று இடுப்புப் பக்கம் வலி 75 சதவிகிதம் குறைந்துவிட்டது என்பதைக் குறிக்கும் வகையில், பாபா மீண்டும் மண்டலி

மண்டபத்திற்கு, ஆனால் தினமும் காலையில் ஒரு மணி நேரத்திற்காக மட்டுமே வரத் தொடங்கினார். ஊன்றுகோலின் உதவியுடன் அல்லது ஒருவரின் கையில் சாய்ந்த வண்ணம் அவர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிரதான வீட்டைச் சுற்றி வந்தாலும், நீண்ட தூரம் நடக்க முடியாமல் தோட்டக்கார சிறுவர்களால் தூக்கு நாற்காலியில் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். மண்டலி மண்டபத்திற்கு வந்ததும், காக்கா, ஃபிரான்சிஸ் இருவரின் உதவியுடன் அவர் தனது நாற்காலியின் பின்புறத்தில் சில அடிகளை எடுத்து வைத்து நடந்து வந்தார். இந்த வழக்கம் கடைசி வரை நீடித்தது.

பாபா தனது கழுத்து வலியும் 50 சதவீதம் சீராகி விட்டதாகக் குறிப்பிட்டார். அன்றிலிருந்து, பாபா மண்டபத்தில் இருக்கும்போதெல்லாம், பாவ் கல்சூரி அவரது காலடியில் அமர்ந்து, அவரது கால்களை அழுத்திவிட்டார்; பல மாதங்கள், மதிய வேளையில் எரச்சும் அவரது உடலை அழுத்தி விடுவது வழக்கமாக நடந்து வந்தது.

'**டிசம்பர் மாதத்தில் நடைபெற இருக்கும் மேற்கத்திய அன்பர்களுக்கான சகவாசத்தை வழங்கும் அளவுக்கு வலுவாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க, அவர் எவ்வித இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டும்**' என்று பாபா அறிவித்தார். மீண்டும், அனைத்து அன்பர்களும் அவசரநிலை காரணமாக மட்டுமே பாபாவுடன் தொடர்புகொள்ள, தொலைத்தந்தி அனுப்ப வேண்டும் என்பதை நினைவுபடுத்தினார். மிகவும் நெருங்கிய அன்பர்கள் (டாக்டர் கிண்டே போன்றவர்கள்) தவிர, வேறு யார் ஒருவருடைய கடிதமும் பாபா முன்னிலையில் வாசிக்கப்படவில்லை; மெஹராஸாத்திற்கு எவரும் அனுமதிக்கப்படவுமில்லை. ஆதி சீனியர் ஒருவரே அவரது வழக்கமான பணிகள் மற்றும் சகவாச ஏற்பாடுகள் குறித்து விவாதிக்க, வழக்கமாகச் சென்று வந்தார். வாமன் படாலே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மெஹராஸாத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவதும் வழக்கம் போல நடந்தது. பதினொரு நாட்கள் மெஹராஸாத்தில் தங்குவதற்காக அழைக்கப்பட்ட பாதிரி, ஆகஸ்ட் 2 அன்று மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

ஸ்ரீராம் போஃபலி, நாக்பூரின் வாமன் நாத்துஜி நாயிக் (VAMAN NATHUJI NAIK) இருவரும் எந்த அழைப்பும், முன்னறிவிப்புமின்றி ஒரு நாள் வந்த வேளையில், பாபா, ஆண் மண்டலியுடன் மண்டபத்தில் அமர்ந்திருந்தார்; பாபா அவர்களை மண்டபத்திற்கு அழைத்தார். வாயிலுக்கு அருகில், பாபாவின் ஏகாந்தவாசம் குறித்தும் அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா தனது அறைக்கு தூக்கு நாற்காலியில் அழைத்துச் செல்லப்படுவதை அவர்கள் பார்க்காதபடி, வாயிலின் ஓரத்தில் நிற்குமாறு பாபா அலோபாவிடம் கூறி அனுப்பினார். இருவரும் வெகுதூரம் பின்னோக்கி நகர்ந்து, உண்மையில் பார்வையின் எல்லைக்கு வெளியே நடந்து சென்றபோது, பாபா, இருவரையும் தனது படுக்கையறைக்கு அழைத்து வருமாறு அலோபாவை மிதிவண்டியில் அனுப்பினார். அவர்கள்

வந்ததும், பாபா, "**நான் உங்கள் இருவராலும் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்**" என்று கூறினார். அவர்களுடன் சில நிமிடங்கள் பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதித்தார்; மேலும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட போஃபலியின் தற்போதைய நிலையைப் பற்றி கேட்டு, பாபா, '**அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம்**' என்று கூறினார்.

1965 ஆகஸ்ட் 9ஆம் தேதி திங்கட்கிழமை மெஹராஸாத்திற்கு வந்த அமெரிக்க ஸூஃபி உறுப்பினர்களில் ஒருவரான ஹெர்மன் அல்வராடோ (HERMAN ALVARADO) விஷயத்தில் பாபா மற்றுமொரு விதிவிலக்கை வழங்கினார். ஹெர்மன் வணிகக் கப்பலில் பணிபுரிந்தார், வியட்நாம் போரின் காரணமாக, அவரது சரக்குக் கப்பல் அடிக்கடி மும்பையில் நின்று கொண்டிருந்தது. பெயோட்டே (PEYOTE என்று அழைக்கப்பட்ட ஒரு வகை கற்றாழை பூ மொட்டு) எனும் போதையூட்டும் காளான்களை உண்பது ஆன்மீக அல்லது இறை உணர்வுக்கான குறுக்குவழி என்று கூறிய கனடிய நாட்டு உளவியலாளரின் (CANADIAN PSYCHOLOGIST) புத்தகத்தை ஹெர்மன் படித்திருந்தார். அந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள பூர்வீக அமெரிக்க மற்றும் மெக்சிக்கன் இந்திய (NATIVE AMERICAN AND MEXICAN INDIAN) மருத்துவ நிபுணர்களின் மாய சக்திகளின் அனுபவங்களால் அவர் வெகுவாக ஈர்க்கப்பட்டு, வந்ததும் பாபாவிடம் அதைக் குறித்து விசாரிக்கும் எண்ணத்தில் இருந்தார். ஆனால் அல்வராடோ அதைப் பற்றி பேச முற்பட்டபோது, பாபா அவரைத் தடுத்து, எரிச்சலுடன் கைகளை அசைத்து, "**இல்லை, இல்லை, போதை மருந்துகளால் கடவுளை அவ்வளவு எளிதாக அடையப் பெற முடியுமாயின், தேடிக் கண்டுகொள்வதற்கு கடவுள் தகுதியற்றவர்!**" என்று உறுதியாக அறிவித்தார். '**டிசம்பர் மாத சகவாசத்தில் கலந்துகொள்ள இதர ஸூஃபிக்களுடன் வருவீர்களா**' என்று பாபா அல்வராடோவிடம் கேட்டதற்கு, அவர் அதில் கலந்துகொள்ளும் இயலாமையை வெளிப்படுத்தினார்.

உலகில் வியட்நாம், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தொடர்ந்த மோதல்களுக்கான காரணங்களைப் பற்றி ஹெர்மன், பாபாவிடம் வினவிய போது, '**அவற்றைப் பற்றி கவலைப்பட வேண்டாம்**' என்று பாபா கூறினார்: "**அவை அவதார புருஷரின் நோக்கத்திற்காக மக்களுக்குப் புரியாத வகையில் செய்யப்படுகின்றன; மேலும் அவை நடைமுறையில் விளையும் சூழ்நிலைகளால் மட்டுமே நிகழ்கின்றன.**"

காக்கா பாரியா ஆகஸ்ட் 8 அன்று மீண்டும் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அவருக்கு சிறுநீர் கழிக்க இயலாமல் போனதால், அவரைப் பரிசோதனை செய்வதற்காக டாக்டர் ஸவுத்வெல் (DR. SOUTHWELL) 9ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார். சிதுவும் மெஹராபாத்திலிருந்து காக்காவைக் கண்காணிக்க சில நாட்களுக்காக அழைக்கப்பட்டார்.

ஐவி டியூஸின் கணவர் டெர்ரி (TERRY) ஆகஸ்ட் 15 அன்று காலமானார்; ஐவிக்கு ஆறுதல் கூறும் வகையில் பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பி வைத்தார்: “**டெர்ரி ஆசீர்வதிக்கப்பட்டார், ஏனெனில் அவர் என்னிடம் வந்துள்ளார்**.”

ரமா, ஷீலா, மெஹர்நாத் மூவரையும் ஆதி ஆகஸ்ட் 15 அன்று மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். அடுத்த நாள் குடும்ப சாஸ்திரியும் பாபாவை சந்தித்தார். 18ஆம் தேதி, கோஹெரின் சகோதரர் ஜால், சகோதரி ரோஷன், அவரது குழந்தை ஆகியோர் பாபாவையும் மண்டலியையும் மெஹராஸாத்தில் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். 22ஆம் தேதி, பெஹராம், ருஸ்தம், ஸொராப், ஜெஹாங்கு ஆகியோர் பூனாவிலிருந்து பாபாவை சந்திக்க வந்தனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு, தாதியின் பிறந்தநாளை முன்னிட்டு, மெஹராஸாத்திற்கு உணவு வழங்க தாதி கேரவாலாவை அனுமதித்ததைத் தொடர்ந்து, தேவையான உணவை சகன் தயார் செய்து, தூன் ஸட்டாவுடன் அதைக் கொண்டு வந்தார்; ராணுவத்தில் பணிபுரிந்த கோஹெரின் சகோதரர் ஆஸ்பியும் (ASPI) அவர்களுடன் பாபாவின் தரிசனத்திற்காகச் சென்றார்.

1965 ஆகஸ்ட் 26 அன்று பைதூல் டைஃபாய்டு ஜுரத்தால் தாக்கப்பட்டது கண்டறியப்பட்டபோது, சிது மீண்டும் ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் அவரைக் கண்காணிக்க மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். ஷெரூ, ஜெஹாங்கு, குல்னார், மகள் மெஹர்னாஸ் ஆகியோர் 28ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டனர். 1965 ஆகஸ்ட் 29 அன்று அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையின் கூட்டம் மெஹராஸாத்தில் பிற்பகல் 3:00 முதல் 5:00 மணி வரை நடைபெற்றது; நரிமன், ராம்ஜூ இருவரையும் தவிர அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

1965 செப்டம்பர் 1 அன்று காலை 9:30 மணிக்கு, கஜ்வானி, அவரது மகள் ஷியாமா (SHYAMA) மற்றும் சிறிய மகன் அனில் (ANIL) ஆகியோருக்கு ஒரு மணி நேரம் பாபா தனது சகவாசத்தை வழங்கினார். சுட்டித்தனமான சிறுவன், பாபாவின் நாற்காலிக்கு அருகில் தரையில் அமைதியாக அமர்ந்திருந்தான். மணி, பாபாவுடன் முழுக் குடும்பத்தையும் புகைப்படம் எடுத்தார். ஷியாமாவும் சிறுவனும் மெஹராவை சந்திக்க அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் புறப்பட்டுச் சென்றதும், பாபா, எரச்சை பிம்பல்காவ்ம் நீர்வள நிலையத்திற்கு அனுப்பி, குஷ்ரு குவார்ட்டர்ஸில் ஆதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ‘சிறுவன் அனில் வியர்வையுடன் காற்று வீசும் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்” என்று ஷியாமாவிற்குத் தகவல் வழங்குமாறு கூறி அனுப்பினார்.

மெஹர்வானால் பாபாவுக்காக அனுப்பப்பட்ட ஷிண்டே தயார் செய்த புதிய கழுத்துப்பட்டைகள் அன்று வந்து சேர்ந்தன.

இந்த நேரத்தில் பாபா காலை 9:15 மணி அளவில் தூக்கு நாற்காலியில் மண்டலி மண்டபத்திற்கு வருவது வழக்கம். உடற்பயிற்சிக்காக மண்டபத்தின் உள்ளே சில முறை நடப்பதும், பின்னர் அங்கிருந்த படுக்கையில் ஓய்வெடுப்பதையும் வழக்கமாகக் கொண்டார். பாபா முன்னிலையில் கடிதங்கள் வாசிக்கப்படும் வேளையில் மண்டலி பாபாவின் உடலை அழுத்தி மஸாஜ் செய்தனர். காலை 11:00 மணிக்குள் பாபா தனது நாற்காலிக்கு நகர்ந்து ஃபிரான்சிஸ், காக்கா, பெண்டு ஆகியோருடன் 30 முதல் 45 நிமிடங்கள் வரை சீட்டு விளையாடுவதும் வழக்கமாக நடந்தது.

காலை 11:45 மணிக்கு பாபா மீண்டும் தூக்கு நாற்காலியில் பிரதான இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பிற்பகல் சுமார் 2:30 மணியளவில் மண்டலியுடன் அவரது அறையில் மீண்டும் அரை மணி நேரம் சீட்டு விளையாட்டு தொடர்ந்தது.

1965 ஆகஸ்ட் இறுதியில், கோஹெர் மீண்டும் கார்டிஸோன் ஊசி மருந்தை இடுப்புப் பாகத்தில் கொடுக்கத் தொடங்கினார், இதன் விளைவாக அவரது இடுப்பு வலி குறைந்தது. இருப்பினும் பாபாவின் கழுத்தில் வலி தொடர்ந்தது. அவர் தினமும் காலை 9:45 முதல் 10:45 வரை, படுக்கையில் ஏழு பவுண்டுகளை தாங்கிய இழுவை பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டார். மண்டலி மண்டபத்தில், அவர் நாற்காலியில் அமர்ந்திருந்த போது, மேலும் ஒரு மணி நேரம் கழுத்துப்பட்டையை அணிந்திருந்தார்.

எரச், (செப்டம்பர் 9 அன்று வெளியிடப்பட்ட ஒரு கடிதத்தில்) பாபாவின் நிலையை இவ்வாறு விவரித்தார்: “பாபாவின் உடல்நிலை வழக்கம் போல் உள்ளது, விதிவிலக்காக அவர் ஒவ்வோர் அறைக்குமிடையே தனது கால்களை அசைத்து சிறிது தூரம் நகர முடிந்தது. இடுப்புப் பாகத்தில் தொடர்ந்த வலி இந்த நாட்களில் அவரை தொந்தரவு செய்யவில்லை, ஆனால் கழுத்தில் வலி சில நேரங்களில் குறைந்தும் அதிகமாகவும் இருந்து வந்தது. கழுத்தில் உருவான இந்த வலிக்கு எந்த நோயியல் காரணத்தையும் குறுப்பிட முடியாது; ஆனால் பிரபஞ்சமே அன்பான பாபாவிற்கு ‘கழுத்தில் வலி’யாக மாறிவிட்டது.”

1965 செப்டம்பர் 11 அன்று பாபா இதை உறுதிப்படுத்தினார்: “**எனது இடுப்புப் பாகம் இப்போது நன்கு செயல்படுகிறது, வலி மிகவும் குறைவாக உள்ளது, மேலும் நான் அறைகளுக்கு இடையே சிறிதளவும் சிரமமின்றி நடக்க முடிகிறது. கழுத்து வலி கிட்டத்தட்ட மறைந்துவிட்டது. ஆனால், ஜூலை இறுதியில், அது மிகவும் கடுமையாக இருந்தது. முழுப் பிரபஞ்சத்தின் சுமையும் ‘கழுத்தில் வலி’யாக உருவெடுத்தது! தற்போது உலகளாவிய பணியின் சுமையும், அதன் விளைவாக உருவாகும் துன்பமும் மிகவும் அதிகமாக உள்ளது. இதுவே கழுத்தில் ஏற்படும் கடுமையான வலிக்கு முக்கிய காரணம்.**”

இரவில் பாபாவின் படுக்கையறையின் ஜன்னல்களுக்கு வெளியே, இரண்டு மண்ணெண்ணெய் விளக்குகள் தொங்கவிடப்பட்டு, உள்ளே வெளிச்சம்

வரும் அளவுக்குத் திரைச்சீலைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இந்த நேரத்தில், இரண்டு விளக்குகளையும் அணைக்குமாறு பாபா கட்டளையிட்டார். **“விளக்குகளைச் சுற்றி விட்டில் பூச்சிகள் ரீங்காரம் செய்வது எனக்குத் தொந்தரவாக உள்ளது”** என்று அவர் குறிப்பிட்டார். இதுபோல் அவர் இதற்கு முன்னர் எப்பொழுதும் குறிப்பிட்டதில்லை; இரவு கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, பாவ் கல்சூரி, பெண்டு, ரானோ ஆகியோர் முழு இருளில் அறையில் அமர வேண்டியிருந்தது. அவரது கை சைகைகளைப் புரிந்துகொள்ள ஒளிரும் விளக்கு ஒன்றைப் பயன்படுத்திய இந்த சூழலில், இருட்டில் அவரைப் பார்ப்பது மிகவும் சிரமமாக இருந்தது. பாபா ஏன் இதை வலியுறுத்திக் கூறினார் என்பது அப்போது புலப்படவில்லை. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, செப்டம்பர் 1ஆம் தேதி, காஷ்மீர் போர்நிறுத்த எல்லைக்கோட்டைத் தாண்டி பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்கிய அவ்வேளையில் - ஓர் இருட்டடிப்பு அமல்படுத்தப்பட்ட சம்பவம், பாபாவின் இந்தச் செயலை மண்டலி ஊர்ஜிதம் செய்யும் வகையில் அமைந்தது.

போர் தொடங்கியது, காஷ்மீர் மீது தொடுத்த போர் மூன்று வாரங்கள் தொடர்ந்தது. இப்போது நாடு முழுவதும் இருட்டடிப்பு அமலில் இருந்த நிலையிலும், பாபா மீண்டும் ஜன்னல்களுக்கு வெளியே மண்ணெண்ணெய் விளக்குகளை தொங்கவிட உத்தரவிட்டார். அவர் இந்த நேரத்தில் பூச்சிகளால் பாதிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்; தற்போதைய ‘தொந்தரவு’ வேறு வகையானது!

குருபிரசாத்திலும் அதேதான் நிகழ்ந்தது. பூனா ரயில் நிலையம் குருபிரசாத்திலிருந்து சிறிது தொலைவில் இருந்தது, மேலும் இரயில்கள் வந்து செல்வது இரவும் பகலும் தொடர்ந்தது. இது தவிர, குருபிரசாத் எதிரில் அமைந்த சாலையில் எந்நேரமும் போக்குவரத்து நெரிசல் இருக்கும், மேலும் அவ்வப்போது அருகில் ஒலிபெருக்கிகள் அதீத ஆரவாரத்தை எழுப்பியது. பாபா இந்த அதிரும் ஒலிகளின் கலவையால் கவலைப்படவில்லை; ஆனால் அவரது இரவு கண்காணிப்பாளரின் சிறிய அசைவுகள் கூட அவரை மிகவும் எரிச்சலடையச் செய்தது. முன்பு கூறியது போல, பாவ் கல்சூரி அணிந்திருந்த பருத்தி கால்சட்டை லேசாக படபடத்தது கூட அவருக்கு இடையூறாக இருந்தது!

அஹமதுநகரில் அமைந்த ஆதியின் அலுவலகம், எதிர்வரும் மேற்கத்திய சகவாசத்தின் நிமித்தம் அதிக அளவிலான நடவடிக்கைகளில் முழுமுனைப்பில் ஈடுபட்டது. அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, இஸ்ரேல், ஆஃப்ரிக்கா, லெபனான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து கலந்துகொள்ளத் திட்டமிடும் அன்பர்களின் பெயர்களுடன் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பங்கள் வரத் தொடங்கின. கடுமையான பருவமழை பொழிந்ததால், அஹமதுநகர், மெஹராஸாத், மெஹராபாத் போன்ற இடங்களில் அந்த ஆண்டு தண்ணீர் பிரச்சினைக்கு வாய்ப்பில்லை. மும்பைக்கு மேற்கொண்ட பல பயணங்களுக்குப் பின்னர், ஆதி,

புதிதாகக் கட்டப்பட்ட மருத்துவமனைக் கட்டிடத்தை, சகவாச நிகழ்ச்சிகளுக்காக வரும் மேற்கத்திய அன்பர்களை தங்க வைக்க அரசாங்கத்திடம் அனுமதி பெற்றார். மஹாராஷ்டிர அரசின் சுகாதார அமைச்சரும், மும்பை சட்டமன்ற சபாநாயகருமான திரிம்பக் எஸ். 'பாலாஸாஹேப்' பர்டேயின் (TRIMBAK S. BALASAHEB BHARDE) தலையீடு காரணமாக இந்த அனுமதி வழங்கப்பட்டது. மும்பையிலிருந்து அஹமதுநகர் வரை குளிரூட்டப்பட்ட சிறப்பு ரயில் பெட்டிகள் இந்த சிறப்புப் பயணிகளுக்காக ஒதுக்கப்பட்டன. பூனாவைச் சேர்ந்த உணவக அதிபருடன் உணவு வழங்கும் ஒப்பந்தமும் செய்யப்பட்டது; மற்றும் கம்பளங்கள், போர்வைகள், பணியாட்கள் மற்றும் பல ஏற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. எவ்வாறாயினும், அதே வேகத்தில், அனைவரும் மகிழ்ச்சிக்குரியதல்லாத திடீர் அதிர்ச்சிக்கு ஆளாயினர்!

1965 செப்டம்பர் 4 (அந்த ஆண்டு ஸொராஸ்டரின் பிறந்த நாள்) சனிக்கிழமை அன்று காலை மண்டலி மண்டபத்திற்கு வந்த பாபா, மணி, ரானோ, கோஹெர், எரச், பெண்டு, ஆதி, அலோபா, பாவ் கல்சூரி, ஃபிரான்சிஸ் ஆகியோர் முன்னிலையில் டிசம்பர் மாத சகவாசத்தை ரத்து செய்வதாக அறிவித்தார். இதை அறிவிக்கும் போது அவர் கண்களில் எல்லையற்ற சோர்வும் சோகமும் தென்பட்டது. அவர் கூறினார்: "**உலக நிலைமை மிகவும் மோசமாக உள்ளது; அது நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. எனது உலகளாவிய பணியின் அழுத்தம் ஆரோக்கியத்தை பெரிதும் பாதிக்கிறது; மேலும் எனது கழுத்துப் பாகத்தில் வலி, வரம்பிற்கு அப்பாற்பட்டதாக உள்ளது. இது நான் என் மீது தாங்கிக்கொள்ளும் உலகளாவிய துன்பம் (ஏசு சிலுவையில் அனுபவித்த துன்பத்திற்கு இணையானது). டிசம்பரில் நடைபெறவிருந்த மேற்கத்திய சகவாச நிகழ்ச்சிகளை ரத்து செய்ய வேண்டும் என்று நான் முடிவு செய்துள்ளேன். சகவாசத்தை ரத்து செய்வதில் எனக்கு சிறிதளவும் விருப்பமில்லை, ஆனால் நான் அதைச் செய்தாக வேண்டும். நான் என்ன செய்கிறேன் என்பது எனக்குத் தெரியும்.**"

அவர் மேலும் கூறினார், "**எப்போதேனும், எங்கேயேனும், எப்படியேனும், நான் எனது மௌனத்தைக் கலைக்கும் முன்னர், எனது பழைய மற்றும் புதிய மேற்கத்திய அன்பர்களை சந்திப்பேன்.**"

ஃபிரான்சிஸ் பக்கம் திரும்பிய பாபா இவ்வாறு வினவினார், "**திட்டமிடப்பட்ட இந்த சகவாசம் நிகழாது என்பதை அறிந்த மேற்கத்திய அன்பர்களின் என்மீதான அன்பு பாதிக்கப்படுமா அல்லது குறைந்துவிடுமா?**"

எந்தத் தயக்கமுமின்றி, ஃபிரான்சிஸ் பதிலளித்தார், "நான் அப்படி நினைக்கவில்லை பாபா. அவ்வாறு நடந்தால் அது ஒரு விசித்திரமான வகையைச் சேர்ந்த அன்பாக இருக்கும்."

பாபா, ஆதியிடம் கேட்டபோது அவர், "மேற்கத்திய அன்பர்கள் நிச்சயமாக பெரும் ஏமாற்றமடைவார்கள், ஆனால் அவர்கள் உங்கள் விருப்பத்தை

எந்தவிதமான கேள்விக்கும், சந்தேகத்திற்கும் இடமின்றி ஏற்றுக்கொள்வார்கள் என்பது உறுதி” என்று பதிலளித்தார்.

ஆதியின் பதிலைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த பாபா, “1967 **நவம்பர் வரை எனக்கு எந்த இடையூறும் இருக்கக்கூடாது. எனவே, அதற்கு முன்பு கிழக்கத்திய அன்பர்களுக்கும் தரிசனம் வழங்கும் வாய்ப்பு இராது**” என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தின் முடிவில், பாபா இந்த உபகதையை விவரித்தார், இது அவரது ரத்து செய்யப்பட்ட நிகழ்ச்சியின் பார்வையில் பொருத்தமானதாகத் தோன்றியது:

**ஒரு பரிபூரண குருநாதர் (சத்குரு) இருந்தார், அவர் தனது சீடர் ஒருவருக்கு குறிப்பிட்ட நாளில், நிச்சயமாக, இறை உணர்வை வழங்கப்போவதாகத் திரும்பத் திரும்ப உறுதி அளித்து வந்தாலும், அதைத் தொடர்ந்து ஒத்திவைத்தார். கடைசியாக, சீடர் வருத்தமடைந்து, “அனைத்தும் அறிந்தவரே! குருநாதரே! எனக்கு இறை உணர்வை வழங்கும் நாளை மட்டும் உங்களால் ஏன் அறிய முடியவில்லை?” என்ற கேள்விக்கு குருநாதர் பதிலளித்தார், “பரிபூரண குருநாதர் அனைத்தும் அறிவார்; அதே வேளையில் அவர் ஒன்றும் அறியாதவர்; அவர் எதையும் அறியாதவர் போலத் தோன்றுகிறார்!”**

அன்று ஆதியின் பிறந்தநாள். கைக்கோபாத் இதை பாபாவிடம் கூறியபோது, அவர் ஆதியை முன்னால் அழைத்து அவரை அணைத்து, கன்னத்தில் முத்தமிட அனுமதித்தார்.

சகவாச நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது தொடர்பாக, செப்டம்பர் 4 அன்று, பாபாவிடமிருந்து கீழ்வரும் தொலைத்தந்தி அமெரிக்காவில் வாழும் ஹாரி கென்மோர், எலிஸபெத் பேட்டர்ஸன், ஐவி டியூஸ், இங்கிலாந்தில் டிலியா டிலியோன், ஆஸ்திரேலியாவில் பில் லே பாஜ், டெனிஸ் ஓ’பிரைன் மற்றும் பாகிஸ்தானில் வாழும் ஆதி அர்ஜானி ஆகியோருக்கு அனுப்பப்பட்டது:

**டிசம்பர் மாத சகவாசத்தை நான் ரத்து செய்துவிட்டேன் என்பதை உங்கள் அருகில் வாழும் சம்பந்தப்பட்ட அனைத்து அன்பர்களுக்கும் தெரிவிக்கவும். என் அன்பர்கள் எவ்வளவு ஏமாற்றமடைவார்கள் என்பது எனக்குத் தெரியும், ஆனால் என் அன்பர்கள் எனது முடிவை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வார்கள் என்பதையும் நான் அறிவேன். எனது உலகளாவிய பணி மற்றும் துன்பத்தின் மாபெரும் சுமைக்கு இணங்க, அனைவருக்கும் சிறந்ததாக அமையும் வகையில் நான் இந்த முடிவை எடுத்துள்ளேன்.**

**எப்போதேனும், எங்கேயேனும், எப்படியேனும் எனது மௌனத்தைக் கலைக்கும் முன்பு, பழைய மற்றும் புதிய மேற்கத்திய அன்பர்களை சந்திப்பேன். என் அன்பர்கள் அனைவருக்கும் அன்பும் ஆசிகளும்.**

**தொலைத்தந்திக்கு பதில் அனுப்பவும்.**

இவ்வாறு, எல்லா தீர்மானங்களும் ஏற்பாடுகளும் செய்யப்பட்ட பிறகு, பாபா சகவாசத்தை ரத்து செய்தார். மேற்கத்திய அன்பர்கள் நிச்சயமாக மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளாயினர், ஆனால் அனைவரிலும் மிகவும் ஏமாற்றமடைந்தவர் ஸரோஷ்; பாபா இந்த அறிவிப்பை வெளியிட்ட வேளையில், அவர் அறுவை சிகிச்சைக்குப் பிறகு, மும்பை மருத்துவமனையில் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அவர் (நகரத்தின் மேயராக இருந்தாலும் கூட), விலூ, ஆதி இருவரும் அஹமதுநகரில் அமைந்த புதிய மருத்துவமனை கட்டிடத்தைப் பயன்படுத்தத் தேவையான அனுமதியைப் பெற மாபெரும் சிக்கல்களை சந்திக்க வேண்டியிருந்தது, மேலும் அவர் சகவாசம் நடத்தப்பட வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார்.

மெஹராஸாத் மண்டலிக்கு, பாபாவின் முடிவு முற்றிலும் எதிர்பாராதது அல்ல. இறுதியாக மருத்துவமனைக் கட்டிடத்தின் பயன்பாட்டிற்கான அனுமதி அடையப்பெற்ற தகவல் பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டபோது, அவர் எந்த விதமான திருப்தியையும், குறைந்த அளவிலான மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தவில்லை, '**ஆனால் சகவாச நிகழ்ச்சியை நடத்துவது என்பது அவரது பணி மற்றும் உடல்நிலையைப் பொறுத்தது**, **அது ஒரு பெரிய தடையாக இருந்தது**' என்று கருத்துத் தெரிவித்தார்.

'**பாபாவின் அனுமதியின்றி**, **ஏர் இந்தியா இன்டர்நேஷனலுக்கு** (தனிப்பட்ட விமானத்திற்கான ஏற்பாடு - CHARTERED AIRLINE) **எந்த முன்பணமும் செலுத்த வேண்டாம்**' என்று ஹாரி கென்மோருக்கு ஆகஸ்ட் மாதம் ஒரு தொலைத்தந்தி அனுப்பியிருந்தார் பாபா. இதைத் தொடர்ந்து எரச்சிடமிருந்து ஒரு தனிப்பட்ட கடிதமும் அனுப்பப்பட்டது: 'இது சாத்தியமற்றதாகத் தோன்றினாலும், பாபா சகவாசத்தை ரத்து செய்வார் என்பது சாத்தியமற்றதல்ல.' (சகவாசம் நடக்கும் என்று பாபா பலமுறை மணி மூலமாக, குடும்பக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்); ஹாரி இவ்வாறு எழுதியிருந்தார்:

எதிர்பார்ப்பும் அதைத் தொடர்ந்த பதற்றமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆஹா, டிசம்பர் மாதத்தில் பாபாவிடம் செல்லும் ஆர்வத்துடன் இருக்கும் அனைவரும் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள்! பயணம் உறுதி செய்யப்பட்டு, நாங்கள் 182 அன்பர்கள் நேரடித் தொடர்பு மூலமாகத் தொகையை செலுத்தி பதிவு செய்துள்ளோம். முழு முயற்சியும் ஏறக்குறைய சுமூகமாக நடந்துள்ளது... எரச், உங்களுக்கு நன்றாகத் தெரியும், சிலர் உல்லாசப்பயண நாளில் அனுபவிப்பதை விட அதற்கான முன்னேற்பாடுகளில் அதிக ஆனந்தத்தை அடையப் பெறுகிறார்கள். ஆனால், இந்த விஷயத்தில், அனைத்தும் முடிந்துவிட்டது என்று சொல்லப்பட்டவர்களுக்கு இது உல்லாசப்பயணம் ஆகாது!... மேலும், பாபாவின் ஆர்வமும் விருப்பமும், அவர் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும், அவர் வழிநடத்தியபடியே எப்பொழுதும் கடைப்பிடிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லாமல் உறுதியாக இருங்கள். அதில் உங்கள் கடைசி நயாபைசாவையும் பந்தயம் வைக்கத் தயங்கவேண்டாம்! குருநாதர்

கூறினாலொழிய எவருக்கும் எதுவும் கிடைக்கப் போவதில்லை! பிற அனைத்து நிகழ்ச்சிகளையும் போலவே இந்த நிகழ்ச்சியையும் வழிநடத்தும் படை பெருந்தலைவர், பொறியியல் கட்டமைப்பாளர், முதன்மையானவர்! அவருடைய முடிவு அனைத்தும் நமது நன்மைக்காகவே; எனவே அவருடைய விருப்பம் நிறைவேறட்டும்!!!

அதைத் தொடர்ந்து, பாபா கீழ்வரும் செய்தியை ஹாரி கென்மோருக்கு அனுப்பினார்:

**டிசம்பர் சகவாச நிகழ்ச்சிகளை நான் ரத்து செய்துவிட்டேன். நான் என்ன செய்கிறேன் என்பதை நான் அறிந்திருப்பதால், நீங்கள் எந்தவிதமான ஏமாற்றமோ அல்லது மனச்சஞ்சலமோ அடைய வேண்டாம் என்று விரும்புகிறேன். நீங்களும் அன்னரோஸாவும்** (கர்ராஷ்) **எப்படி உழைத்தீர்கள், என் அன்பர்கள் அதிக எண்ணிக்கையில் என்னிடம் வருவதற்கு உங்களால் இயன்ற அனைத்தையும் செய்தீர்கள் என்பதையும் நான் அறிவேன். உங்களை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். எனது விருப்பத்திற்கும் மகிழ்ச்சிக்கும் நீங்கள் உடன்பட்டு இருக்க வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்.**

**சகவாசம் ரத்து செய்யப்பட்டாலும், அதைச் செவ்வனே நடத்தும் நோக்கத்தில் அயராது உழைத்த ஒவ்வொருவரும் வெளிப்படுத்திய ஒருங்கிணைந்த ஆற்றல், மற்றும் அதைத் திட்டமிடுவதில் பாபாவை மையமாகக் கொண்ட ஒருமுகப்படுத்தும் முயற்சி அனைத்தையும் அவர் தனது உலகளாவிய பணிக்கு பயன்படுத்தினார் என்பதில் சந்தேகமில்லை. செப்டம்பர் 4ஆம் தேதி உலகம் முழுவதும் அனுப்பப்பட்ட அவரது தொலைத்தந்திக்கு பதிலளிக்கும் விதமாக, பாபாவின் முடிவை மேற்கத்தியர்கள் பணிவுடனும், முழு மனதுடனும் ஏற்றுக்கொண்டதற்கான தொலைத்தந்திகள் வந்த வண்ணம் உள்ளன. அவர்களின் பதில்கள் பாபாவின் மனதைத் தொட்டது மட்டுமின்றி, கடிதப் பரிமாற்றத்திற்கு கடுமையான தடை இருந்தபோதிலும், தமது அன்பர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில், 1965 செப்டம்பர் 8 அன்று, மணி வரையும் குடும்பக் கடிதத்தின் மூலம், அவர் கீழ்வரும் செய்தியை வழங்கினார்: "பாபா தமது மேற்கத்திய அன்பர்கள் - பழையவர்கள், புதியவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் - அனைவரும் அவருக்கு நேரடியாக ஒரு கடிதம் எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.+**

பல மாதங்கள், பாபா, நோஷிர் ஈரானியை மெஹராஸாத்தில் தங்க அனுமதித்தார். ஆனால் அவரது இயல்பு சுதந்திரமாகவும், விரும்பத்தகாத வகையில் பெருமிதத்துடனும், ஒத்துழைப்பின்றியும் இருந்ததால், நோஷிர் தினசரி வழக்கத்துடன் ஒத்துப்போக முடியவில்லை. அவர் கூடத்தில் இடைவிடாது பேசுவது பாபாவை தொந்தரவு செய்தது; மண்டபத்தில்

அமர்ந்திருக்கும் போதெல்லாம் பாபா அவரை அமைதியாக இருக்குமாறு அறிவுறுத்தினார். அனைத்து மண்டலியும் அவருக்கு வேண்டிய இடமளித்து, அவரைத் தங்களில் ஒருவராக நடத்த மிகுந்த முயற்சி செய்த போதிலும், அவரது அணுகுமுறையால் அவர்கள் சோர்வடைந்து போயினர்.

உடல்நலம் மற்றும் சூழ்நிலையில் மாற்றத்தை விரும்பி, நோஷிர், ஸாக்கோரியில் அமைந்த உபாஸனி மஹாராஜின் ஆசிரமத்திற்கும், கேட்காவ்ம் நாராயண் மஹாராஜின் ஆசிரமத்திற்கும் செல்ல அனுமதிக்குமாறு அடிக்கடி பாபாவிடம் கோரிக்கை வைத்து வந்தார். பாபா தமது உள்வாசி மண்டலியில் எவரும் வளாகத்தை விட்டு வெளியேறுவதை விரும்பவில்லை என்றாலும், 1965 ஜூலை மாதத்தில் நோஷிர், ஸாக்கோரி, கேட்காவ்ம் அல்லது மெஹராஸாத்தை விட்டு அவர் எங்குச் செல்ல விரும்பினாலும் அதை அனுமதித்தார், ஆனால் ஜனவரி 1967க்கு முன்பு மெஹராஸாத் திரும்பக் கூடாது என்ற நிபந்தனையும் விதித்தார். நோஷிர் அங்கிருந்து வெளியேறிச் சென்ற இரண்டு வாரங்களுக்குப் பின்னர் திரும்பி வந்தார்.

ஒரு கட்டத்தில், பாபா, நோஷிரை மும்பைக்குச் சென்று, தன அவரது பெற்றோர் மற்றும் சகோதரருடன் வாழுமாறு அறிவுறுத்தினார்; ஆனால் இதையும் அவர் செய்ய மறுத்துவிட்டார். இறுதியாக, 1965 செப்டம்பர் 5 அன்று, பாபா மெஹராஸாத்தில் அவர் தங்கியிருந்த அறையிலிருந்து அவரது உடைமைகள் அனைத்தையும் அகற்றிவிட்டு, அருகிலமைந்த ரத்தன்ஷா கியாராவின் குடிலுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். ஒவ்வொரு நாளும் (சகவாச மலைக்கு எதிரே அமைந்த) கண்டோபா மலைக்கு நடந்து செல்லவும், தினமும் காலையில் மூன்று மணி நேரம் இறை நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்குமாறும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. பாபா அவரை மதியமும், மாலை 6:30 மணிக்கு இரவு உணவுக்காகவும் மெஹராஸாத்திற்கு வர அனுமதித்தார் - ஆனால் இரண்டு வேளை உணவும் உண்ட பின்னர், உடனடியாக மெஹராஸாத்தை விட்டு வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டார்.

நோஷிர் இதை பல மாதங்கள் செய்து, பின்னர் அவர் அப்பகுதியை விட்டு வெளியேறினார். 1965 டிசம்பர் 3 அன்று அஹமதுநகருக்குத் திரும்பி வந்து, அவரது சார்பாக ஆதி தலையிட்டு, பாபாவை சந்திக்கும் வாய்ப்புக்கான கோரிக்கையை முன்வைத்தார். பாபா அவரைப் பார்க்க மறுத்துவிட்டதால், நோஷிர் அங்கிருந்து வெளியேறி, பாபாவுடனான தனிப்பட்ட தொடர்பு எதுவும் இல்லாமல் இருந்தார் (ஆதிக்கு, அவர் தொடர்ந்து கடிதங்களை எழுதி தொந்தரவு செய்தார்).

1965 செப்டம்பர் 10 வெள்ளிக்கிழமை அன்று அஹமதுநகர் வந்தடைந்த ஜால்பாயை, ருஸ்தம் காக்கா மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். மறுநாள் மதியம், நாக்பூர் மராட்டி வார இதழான ‘சாவதா’வின் (CHAVHATHA - நாற்சந்தி) ஆசிரியர் பி.என். ஸாவ்ஜி (B.N. SAOJI), பாஸ்கருடன் எதிர்பாராதவிதமாக மெஹராஸாத்திற்கு வந்த வேளையில், பாபா தனது

அறையில் பாவ் கல்சூரியுடன் இருந்தார். தேநீர் அருந்துவதற்காக வெளியே சென்ற பாவ் கல்சூரி திரும்பி வந்ததும் பாபா அவரிடம், "**ஏதாவது செய்தி?**" என வினவியபோது, அவர் ஸாவ்ஜியின் வருகையைக் குறித்து அவரிடம் கூறினார், பாபா அந்த நபரை அழைத்தார். வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த ஸாவ்ஜியைப் பார்த்து, "**உங்களை சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்**" என்று சைகையால் தெரிவித்த பாபாவை, பயபக்தியுடன் வணங்கினார் ஸாவ்ஜி. நாக்பூருக்குத் திரும்பிய பிறகு, மெஹர் பாபாவின் பணியில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்ட ஸாவ்ஜிக்கு இந்த ஒரு நிமிட தரிசனம் விலைமதிப்பற்றதாக அமைந்தது.

ஸாவ்ஜி வருவதற்கு முன்னர் அவர், பால் பிரண்டனின் (PAUL BRUNTON) 'எ ஸெர்ச் இன் ஸீக்ரெட் இந்தியா' (A SEARCH IN SECRET INDIA) என்ற புத்தகத்தைப் படிக்க நேர்ந்தது; அதில் பிரண்டன், பாபாவைக் கொச்சைப்படுத்திக் குறிப்பிட்டிருந்தார். பாபா அவரது மௌனத்தைக் கலைப்பதைப் பற்றி அடிக்கடி கூறுவதையும் அவர் அறிந்திருந்தார், அதை பாபா இதுகாறும் செய்யவில்லை. ஹாலிவுட்டில் (1932இல்) மௌனத்தைக் கலைத்துப் பேசுவதாக பாபா அறிவித்ததையும், அவ்வாறு செய்யாமல் இந்தியாவிற்குத் திரும்பி வந்ததையும் அவர் அறிந்திருந்தார். இதேபோல பாபா உலகின் நான்கில் மூன்று பாகம் அழிவதைக் குறித்து (1954இல்) முன்கூட்டியே அறிவித்து, பின்னர் அவரது சுய மொழி மற்றும் சாதாரண மனித மொழி என்று வேறுபடுத்தி காட்டினார். இருப்பினும், ஆயிரக்கணக்கானோர் அவரிடம் தங்கள் உயிரை அர்ப்பணிக்கத் தயாராக இருந்தனர்! ஏன்? ஒரு சாதாரண மனிதன் இப்படிச் செய்திருந்தால் அவன் அவதூறுக்கு உள்ளாயிருப்பான். இதையெல்லாம் நினைவில் கொண்டு, ஸாவ்ஜி தரிசனத்திற்காக வந்திருந்தார்; முழுப் பிரபஞ்சமும் பாபாவின் உள்ளங்கையில் தவழ்கிறது என்பதை உறுதியாக நம்பிய ஸாவ்ஜி, மெஹராஸாத்திலிருந்து திரும்பிச் சென்றார்!

அர்னவாஸ், நரிமன் தாதாசாஞ்சி, ஜிம் மிஸ்திரி ஆகியோர் 11ஆம் தேதி மும்பையிலிருந்து வந்து எட்டு நாட்கள் மெஹராஸாத்தில் தங்கியிருந்தனர். கெய்மாய் ஜெஸவாலா (எரச்சின் தாயார்), நர்கிஸ் தாதாசாஞ்சி (அர்னவாஸின் சகோதரி) இருவரும் செப்டம்பர் மாதம் ஏழு நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டனர்.

ஸரோஷ், விலூ இருவரும் மும்பையிலிருந்து திரும்பி வந்து, செப்டம்பர் 15 அன்று ஆதியுடன் மெஹராஸாத்திற்கு வந்தனர். ஸரோஷ் உணர்ச்சிவசப்பட்டு, கண்கலங்கி அழுது, பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கி, அவர் சமீபத்தில் மும்பை மருத்துவமனையில் அனுபவித்த வேதனையிலிருந்து மீண்டு வந்ததற்கு நன்றி தெரிவித்தார். அன்றைய தினம் சிது மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

பாபா தரிசனத்திற்குத் தடை விதித்திருந்தாலும், அவ்வப்போது நடப்பது போல, பல்வேறு அதிகாரிகளும், தனி நபர்களும் ஆதியின் அலுவலகத்திற்கு

வந்து, மெஹர் பாபாவின் தரிசனத்தைக் கோரினர். செப்டம்பர் 15 அன்று தாடியுடன் கூடிய சாது ஒருவர் ஆதியின் அலுவலகத்திற்கு வந்தபோது, ஒரு கோப்பை தேநீர் வழங்கி, அவரது வழியில் திருப்பி அனுப்பினார். இருப்பினும், சாது தனது அதிர்ஷ்டத்தை சோதிக்கும் விதத்தில், மெஹராஸாத்தை நோக்கி நடந்தார். யார் ஒருவருடைய தரிசனத்திற்கான கோரிக்கையையும் பாபா முன்னால் குறிப்பிடக் கூடாது என எரச் அவரிடம் கூறியபோது, அந்த சாது வெளியேற மறுத்து, அருகிலிருந்த வயல்வெளியில் முகாமிட்டு, மெஹராஸாத் சமையலறையிலிருந்து வேண்டிய உணவைக் கேட்டு வாங்கினார்! பாபா அவரை சந்திக்காததால், மூன்று நாட்களுக்குப் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறியது மண்டலிக்கு மிகவும் நிம்மதியாக இருந்தது.

செப்டம்பர் 18 அன்று ஆதி மெஹராஸாத்திற்கு வந்த வேளையில், தற்போது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் மோதல் போக்கு குறித்து பாபா கவலையை வெளிப்படுத்தினார். "**நவம்பர் மாதத்திற்கு முன்பு போர் நிறுத்தம் ஏற்பட்டால், அது சிறப்பாக இருக்கும்**" என்று பாபா கருத்துத் தெரிவித்தார்.

1965 செப்டம்பர் 21 அன்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த பாபாவின் தரிசனத்திற்கான பயணத்தை ரத்து செய்யும் கீழ்வரும் செய்தி, எரச்சால் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அனுப்பப்பட்டது:

**அவதார் மெஹர் பாபா, 1966 பிப்ரவரி 1 முதல் இந்தியாவில் 40 அன்பர்களுடன் 40 நாட்கள் தரிசன சுற்றுப்பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்ததை நான் உங்களுக்கு நினைவுகூர விரும்புகிறேன். பிரியமான பாபா இப்போது இந்த தரிசன சுற்றுப்பயணம் ரத்து செய்யப்பட்டதையும், 1966, 1967ஆம் ஆண்டுகளில் தரிசனம் வழங்கும் நோக்கத்தில் இந்தியாவில் எந்த இடங்களுக்கும் செல்லப் போவதில்லை என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.**

**தயவுசெய்து இதை கவனத்தில் கொண்டு, பதில் தொலைத்தந்தி அனுப்பவும்.**

1965 செப்டம்பர் 29 புதன்கிழமை அன்று தேஷ்முக் நாக்பூரிலிருந்து காலை 10:45 மணிக்கு மெஹராஸாத்திற்கு வந்து, 20 நிமிடங்கள் பாபாவை சந்தித்தார். அவர் சமீபத்தில் ஜெர்மனி மற்றும் ஸ்விட்சர்லாந்து நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டதைக் குறித்து பாபாவிடம் விவரித்து, அங்கு அவர் ஒரு மாநாட்டில் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்து பாபாவைப் பற்றிய உரை நிகழ்த்தினார்.

நரிமன் மற்றும் ஸூனா ஹோடிவாலா (NARIMAN & SOONA HODIWALA) தம்பதியர் 1937ஆம் ஆண்டில் பாபாவைப் பற்றி தங்கள் உறவினரான பானுமாசி கேரவாலா மூலம் கேள்விப்பட்டனர்; அதைத் தொடர்ந்து, அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பெங்களூரில் முதல் முறையாக பாபாவை சந்தித்தனர்.

தொடக்கத்தில் ஸூனா, பாபாவால் ஈர்க்கப்பட்டதாக உணரவில்லை, ஆனால் ஸொராஸ்டரின் உருவப்படத்தில் பாபாவின் முகத்தைப் பார்த்த அனுபவத்தை அடையப் பெற்ற பின்னர், அவர் முற்றிலுமாக பாபாவின் அரவணைப்பில் வர முடிந்தது. ஹோடிவாலா தம்பதியர் ஏதன் நாட்டிற்கு குடிபெயர்ந்து, பின்னர் அவர்கள் தங்கள் மகன் ஜிம்மின் திருமணத்திற்காக 1965 ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவிற்குத் திரும்பி வந்தனர். ஜிம் ஹோடிவாலா, பாபாவின் தரிசனத்தைப் பெற ஆர்வமாக இருந்தார், ஆனால் பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்ததால் இது சாத்தியமற்றதாகத் தோன்றியது. அவர் ஸாம் கேரவாலாவிடம் இதைக் குறித்து எரச்சிற்கு எழுதுமாறு கூறியதும், எரச், ஹோடிவாலா தம்பதியரை 'இரண்டு நிமிடங்களுக்கு மட்டுமே' பார்க்க பாபா ஒப்புக்கொண்டதாகத் தொலைத்தந்தி அனுப்பினார்.

அவர்கள், 1965 அக்டோபர் 1 அன்று மெஹராஸாத்திற்கு வந்த வேளையில், பாபா அவர்களுடன் அரை மணி நேரம் செலவிட்டார். ஜிம், பாபாவின் சில புகைப்படங்களை எடுக்க விரும்பினார், அதை பாபா அனுமதித்தார். பாபா பின்பு, ஸூனா, நரிமன் இருவரையும் இருபுறமும் அமர வைத்து அவர்களின் புகைப்படங்களையும் தன்னுடன் எடுத்துக் கொள்ளுமாறு அழைத்தார்; மேலும் அவர் ஜிம்முடன் அவ்வாறே செய்தார். ஜிம்மின் மணமகள் அவர்களுடன் ஏன் வரவில்லை என்று பாபா கேட்டதற்கு, மணமகளும், அவரது குடும்பத்தினரும் பாபாவின் தெய்வீக ஆளுமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவரிடம் கூறப்பட்டது. பாபா அவர்களிடம், "**கவலைப்படாதீர்கள். நான் திறவுகோலைத் திருப்புகிறேன்**" என உறுதியளித்தார்.



ஸூனா & நரிமன் ஹோடிவாலா, மெஹராஸாத், 1 அக்டோபர் **1965** (SOONA & NARIMAN HODIWALA, 1 OCTOBER 1965)

ஹோாடிவாலா குடும்பம் ஏதனுக்குத் திரும்பிச் சென்றது; ஜிம் திருமணம் செய்து கொண்டார்; அவருடைய மனைவி ஸூனு, பாபாவின் அரவணைப்பில் வந்ததாகத் தெரியவில்லை. இருப்பினும், பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஜிம்மின் மகள் கைர்பான் (KAIRBAAN) கூறியதாவது: “ஒரு நாள் எனது தாயார் பாபாவை கனவில் காண நேர்ந்தது. அவர் கண்ணீர் சிந்தி அழுது, மிகவும் அதிர்ச்சியடைந்து படுக்கையிலிருந்து எழுந்த போது, அன்று காலையில் பாபா அவரது உடலைத் துறந்துவிட்டதாகச் செய்தி வந்தது. அந்த சம்பவம் எனது தாயாரை முற்றிலுமாக மாற்றிவிட்டதாக நான் நினைக்கிறேன். எனது தாயார் மிகவும் கனிவான மற்றும் மென்மையான பெண்மணி. அவர் ஒருபோதும் மக்களை எடைபோடுவதில்லை. அவர் எப்பொழுதும் ‘சத்ரா மற்றும் குஸ்தி’ (புனித நூல்) அணிந்திருந்தாலும், சடங்கு சம்பிரதாயங்களை பின்பற்றுபவர் அல்ல. பாபாவின் சித்திரங்கள் இல்லத்தின் சுவர்களை அலங்கரிக்க அவர் பாபா-வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். பாபா திறவுகோலைத் திருப்பினார் என்று எனக்குத் தெரியும்.”

1965 அக்டோபர் 3 அன்று மெஹர்ஜி, ஸாம் கேரவாலாவுடன் வந்த வேளையில், பூனாவில் தயார் செய்யப்பட்ட குஸ்தாஜி மற்றும் பீட்டரின் கல்லறை அடையாளச் சின்னங்களை காரில் கொண்டு வந்தார்.

ஏற்கனவே விவரித்தபடி, ஃபிலிஸ் ஆட்ட் (PHYLLIS OTT) 1964 டிசம்பர் மாதத்தில் பாபாவை சந்தித்த அந்த நேரத்தில், ‘**அவரது கணவர் லின் இந்தியாவிற்கு வர வேண்டும்**, **ஃபிலிஸும் அவருடன் வர வேண்டும்**’ என்று பாபா விரும்புவதாகத் தெரிவித்தார். எதிர்பார்க்கப்பட்ட சகவாச நிகழ்ச்சி, இயல்பான மற்றும் பொருத்தமான தருணமாகத் தோன்றினாலும், இந்த நிகழ்ச்சிக்கான காலநேரம் குறித்து எந்த விவாதமும் நடைபெறவில்லை. ஆனால், சகவாசம் ரத்து செய்யப்பட்ட செய்தி, லின் ஆட்ட்டின் செவிகளில் விழுந்த அந்த நாள், இனி கால தாமதம் செய்யாமல் பாபாவை சந்திக்க தான் பயணிக்க வேண்டும் என்பதை உள்ளூர உணர்ந்தார். “இப்போது வர முடியுமா என்று நான் எழுதி பாபாவிடம் கேட்பதானால், அவர் நிச்சயமாக இல்லை என்று கூறுவார் என்று எனக்குத் தெரியும்,” லின் இவ்வாறு நினைவு கூர்ந்தார், “நான் குருநாதரைப் பற்றி இந்த அளவுக்குப் புரிந்து கொண்டேன். எனவே, நான் அங்குச் செல்வது எனது சொந்த முடிவாகவும், உள் தூண்டுதல் மற்றும் உள்ளளவிலான பாபாவின் அழைப்பாகவும் இருக்க வேண்டும்.

அவர்களின் முடிவு உறுதிசெய்யப்பட்ட அடுத்த கணமே, ஆட்ட் தம்பதியர் புறப்படுவதற்கு சற்று முன்பு, பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பினர்: “உங்கள் அழைப்பு, தவிர்க்க முடியாமல் எங்கள் இதயங்களில் ஆழமாகப் பதிந்துவிட்டது, நாங்கள் உங்களை நோக்கி வந்துகொண்டிருக்கிறோம். உங்கள் விருப்பம் எதுவோ அதுவே நடக்கும்!” ஆனால், இந்தியாவிற்கு வருகை தந்த லின் (39), ஒருவேளை அவர் தனது வார்த்தைகள், ‘குருநாதரின் ஏகாந்தவாச கோட்டைக்கு சவால் விட்டதாகக் கருதப்படுமா?’ என்று சந்தேகிக்கத்

தொடங்கினார்; இருப்பினும், உண்மையில் பாபா அவர்கள் வருவதில் மிக்க மகிழ்ச்சியாக இருந்தார்.

1965 அக்டோபர் 3 ஞாயிறு இரவு அஹமதுநகர் ரயில் நிலையத்திற்கு வந்த ஆட்ட் தம்பதியரை ஆதி சந்தித்து, “பாபா உங்களை, காலை ஒன்பது மணிக்கு, அரை மணி நேரம் சந்திப்பதாகக் கூறியுள்ளார். இரவில் நன்றாக ஓய்வெடுங்கள்” என்று கூறி, அவர்கள் விலூ வில்லாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கு அவர்கள் இரவைக் கழித்தனர்.

அடுத்த நாள் காலை, ஆதி அவர்களை சற்று முன்னதாகவே மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்ற போது, எரச், லினை தோட்டத்தைச் சுற்றி அழைத்துச் சென்று இதர மண்டலிக்கு அறிமுகப்படுத்தினார்; ஃபிலிஸ் மண்டபத்திற்கு வெளியே இருந்த ஒரு நீள் இருக்கையில் அமர்ந்து ஃபிரான்சிஸுடன் உரையாடிக் கொண்டிருந்தார். விரைவில் எரச், லின் இருவரும் திரும்பி வந்தபோது, எரச், “பாபாவைப் பார்க்க உள்ளே செல்ல நேரமாகிவிட்டது” என்றார்.

ஃபிலிஸ் எழுந்து நின்றதும், எரச், “ஃபிலிஸ், நீங்கள் எங்கே போகிறீர்கள்?” என வினவினார்.

அவர் வெட்கத்துடன் பதிலளித்தார், “நான் பாபாவைப் பார்க்கப் போகிறேன்!”

“ஆனால் இந்த வருகை லினுக்கு மட்டுமே” என்று எரச் கூறினார்.

ஃபிலிஸ் மயக்கத்தில் கீழே விழ இருந்தவரை, எரச் பற்றிப் பிடித்துக் கொண்டார். பாபாவைப் பார்க்க முடியாதோ என்ற எண்ணத்தில் தவித்தார்! பின்னர் எரச் சிரித்துக்கொண்டே, “நான் வேடிக்கையாகக் கூறினேன், வாருங்கள் போகலாம்!” என்றார்.

என்ன நடந்தது என்பது குறித்த லின் ஆட்ட்டின் சொல்வன்மை மிக்க விளக்கம் பின்வருமாறு:

ஆதிகாலப் புருஷரும், எனது ஆசிரியரும், ஆழ் இதயத்தில் நிலைகொண்டுள்ள ‘ஒன்றுமில்லாத மற்றும் அனைத்திற்கும்’ மொத்த உருவமாகத் திகழும் - நம்பினாலும் நம்பாவிடிலும் - ஏக இறைவனான மெஹர் பாபாவை சந்திக்கும் நேரம் இது; எனது சிந்தனை திடீரென நின்றுவிட்டது.

மெஹர் பாபாவைப் பற்றி நான் கேள்விப்பட்டபோது, அவருடைய கூற்றை சோதிக்கவோ அல்லது என்னை சரிசெய்து கொள்ளவோ நேரமில்லை. நான் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது விட்டுவிட வேண்டும், இல்லையேல் மனித சந்தேகத்தின் ஊசலாட்டத்தில் வாய்ப்பை இழக்க நேரிடும். ஒரு குருநாதரைப் பார்க்கச் செல்வது, ஒரு நல்ல விஷயமாகவும், மிகவும் பலனளிப்பதாகவும் இருக்கலாம். ஆனால் கடவுளைப் பார்க்கச் செல்வது, அவரைக் கடவுள் என்று நம்புவது, அது முற்றிலும் அச்சுறுத்தும் ஓர் அரிய வாய்ப்பு. மெஹர் பாபாவைப் பார்க்க நான் செல்லும் எனது பாதையில் பயங்கரமாக அச்சுறுத்தும் இந்த மனநிலையும் என்னைப் பின்தொடர்ந்தது.

நான் எனது பாத அணிகளை விட்டு வெளியே வந்து, வாசலைத் தாண்டி, பாபாவின் முன்னிலையில் நுழைந்தபோது, பயங்கரமான அச்சுறுத்தல் என்னைப் பற்றிக்கொள்ளாமல் எனது பாத அணிகளில் சிக்கிக் கொண்டது போல் இருந்தது. நான் அந்த அறைக்குள் நுழைந்ததும், அனைத்தும் நின்றுவிட்டன; எனது கால்கள் மட்டும் என்னை நேராக, தடுமாறாமல், தெய்வீக அன்பானவரின் காத்திருந்த கரங்களுக்குள் கொண்டு சென்றன.

நான் பாபாவை சந்திக்க உள்ளே சென்றபோது, மிகுந்த அச்சத்துடனும், கவலையுடனும் வந்தேன். பாபா, அவரது முகத்தை அதன் உண்மை ரூபத்தில் எனக்குக் காட்டுவதாகக் கூறியிருந்தார். அதன் அர்த்தம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை; ஆனால் அவரைப் பார்ப்பதற்கு முன்னரே அது எனது மனதில் ஒரு பெரிய அச்சத்தை உருவாக்கியது. நான் அறைக்குள் வந்தபோது, ஒரு சிறிய மனிதன் நாற்காலி ஒன்றில் அமர்ந்திருப்பதைக் கண்டு நான் மிகவும் நிம்மதியடைந்தேன். நான் நினைத்தேன், கடவுளே, இங்கே ஓர் உண்மையான மனிதர் அமர்ந்திருக்கிறார். நான் அப்படிக் கற்பனை செய்து பார்த்ததில்லை.

பாபா என்னைத் தழுவி இரு கன்னங்களிலும் முத்தமிட்டார். அவர் என்னைத் தழுவுவதற்கு முன்னர், எனது மூக்குக் கண்ணாடியைக் கழற்றி எரச்சிடம் ஒப்படைக்குமாறு கூறினார். பாபா எனது முகத்தை, தமது குளிர்ந்த கைகளுக்கு இடையே வைத்திருந்தார். எதிர்பார்ப்பின் வேட்கையால் முகம் சிவந்து போயிருந்தது. அந்த குளிர்ச்சியான கைகள் எனது வேட்கையைத் தணித்தது, பாபா எனது முகத்திலிருந்து ஓர் அங்குல தூரத்தில் அவரது முகத்தை வைத்து, எனது கண்களைக் கூர்ந்து பார்த்தார். அந்த நேரத்தில் பிரபஞ்சத்தில் வேறு எதுவும் இல்லை. அந்த நேரத்தில் ஒரு சின்னஞ்சிறு ஆத்மா (SOUL) பரமாத்மாவுடன் (OVERSOUL) நேருக்கு நேர் வந்தது - மேலும் அந்த ஆத்மா அற்புதமான விதத்தில் அழிக்கப்படாமல் இருந்தது.

பாபாவைத் தழுவுவது என்பது வானைத் (ஈதர்) தழுவுவதாகும். அவர் எனது இரு கன்னங்களிலும் முத்தமிட்டார், நான் எனது துன்பங்களை அவர் பாதங்களில் வைத்ததும், அவர் கண் இமைக்கும் அந்தக் குறுகிய நேரத்தில் நான் நிம்மதியாக உணர்ந்தேன்; எனது தந்தையின் இல்லத்தில் பரப்பப்பட்ட கம்பளத்தின் மீது நின்றவண்ணம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திகைத்துப் போனேன். பாபா என்னைத் தழுவி, எனது முகத்தை அவர் முன் நிறுத்தி, எனது கண்களை உற்றுநோக்கிய போது, ஒவ்வொன்றும் நின்றுவிட்டது. பாபா என்னிடம் கூறிய முதல் விஷயம்: **“எனது முகத்தை நன்றாகப் பார்க்க முடிகிறதா?”** (அவர் இதை எப்படி கை சைகைகளால் சொன்னார் என எனக்குத் தெரியவில்லை, ஏனெனில் அவருடைய கைகள் எனது முகத்தில் இருப்பதைப் போன்ற உணர்வு.)

அவர் எனக்குள் ஊடுருவிச் சென்றது போல் உணர்ந்தேன், எனது கண் பார்வையின் வேர்கள் வரைச் சென்று, திரும்பி, எனது கண்கள் மூலமாகத் தன்னையே பார்த்தார். நான் ஒரு கிசுகிசுப்புடன் பதிலளித்தேன்: “தெளிவாகத் தெரியவில்லை, பாபா.” எனது பதிலில் ஏதோ வருத்தத்தைத் தெரிவிக்கும் தொனியும், பாபாவின் முகத்தைப் பார்த்த மகிழ்ச்சியை வெளிப்படுத்த

முடியாமல் போனதில் ஏதோ ஏமாற்றமும் தென்பட்டது. பாபாவும் நானும் பகிர்ந்துகொண்ட இந்த ஏமாற்றம்தான் எனது உண்மையான சரணாகதிக்கு மிக நெருக்கமான கட்டம் என்று நினைக்கிறேன்; இப்போது திரும்பிப் பார்க்கும்போது, அந்த நேரத்தில் எனக்கு உண்மையான நம்பிக்கை இல்லை என்பதையும், கடவுளின் கைகளில் நான் முற்றிலும் உதவியற்றவனாக இருப்பதையும் உணர்ந்தேன்.

எனக்கு பலத்தைக் கொடுக்காமல், எனது முழு பலத்தையும் பறித்து விட்டதால், அந்த நேரத்தில் எனக்கு சரணடைவதைத் தவிர வேறு எந்த மார்க்கமும் தெரியவில்லை. பதற்றம் நீங்கிய அந்த நேரத்தில் நான் எனது கடைசி நகர்வை மேற்கொண்டேன், நான் தோற்றுவிட்டேன். இது தான் நான் சரணடைந்த தருணம்; பாபா அப்போது கூறியது மட்டும் தான் எனக்குத் தெரியும்: “நீங்கள் அவருடைய பாதத்தில் விழுந்து வணங்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார்.” உடனடியாக நான் அவருக்குக் கீழ்ப்படிந்தேன். நான் படைப்பின் ஓய்விடத்தில் எனது தலையை வைத்தேன், அனைத்தும் அவருடையது. பாபா என்னை மிகவும் தனிப்பட்ட பாசத்துடனும் நெருக்கத்துடனும் நடத்தியதால் அவருடைய அன்பை நான் உணர்ந்தேன். அந்த கணத்தில் அவர் எனக்கு ஆசிரியராகவோ அல்லது குருநாதராகவோ அல்ல, அன்பான தந்தையாகவும் தோழராகவும் இருந்தார்.

லின் தரையில் பாபாவின் வலது புறமும், ஃபிலிஸ் இடது புறமும் அமர்ந்தனர். எரச், ஃபிரான்சிஸ், நரிமன் (தாதாசாஞ்சி அன்றைய தினம் வந்திருந்தார்), ஆதி, பாவ் கல்சூரி, மணி, ரானோ, டாக்டர் அலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பாபா கூறினார், “**உங்கள் இருவரையும் நான் மிகவும் நேசிக்கிறேன். நீங்கள் வந்ததில் எனக்கு மகிழ்ச்சி. நான்தான் உங்களை இங்கு அழைத்தேன். உங்கள் இலக்கு இப்போது மாயையில் மட்டும் இல்லாமல் நிஜத்தில் என்னிடம் வர வேண்டும் என்பதாகும். அதை நான் உங்களுக்கு சாத்தியமாக்குவேன்.**”

மேலும் பாபா அவர்களிடம் கூறினார், “**நீங்கள் உயிரைத் துறக்கும் போது, இருவரும் என்னிடம் வருவீர்கள்.**”

பாபா அவர்களிடம் வினவினார், “**நான் மேற்கத்திய சகவாச நிகழ்ச்சிகளை ரத்து செய்ததைக் குறித்து எனது மேற்கத்திய அன்பர்கள் எப்படி உணர்கிறார்கள்?**”

ஃபிலிஸ், “பாபா, நீங்கள் எது செய்தாலும் நல்லது” என்றார்.

“**ஆனால் சகவாசம் ரத்து செய்யப்பட்டதைக் குறித்து அவர்கள் எப்படி உணர்கிறார்கள்?**” என்று பாபா மீண்டும் கேட்டார்.

“பாபா, உங்கள் அன்பர்கள் உங்கள் விருப்பத்திற்கு அடிபணிந்து விட்டார்கள்” என்றார்.

“**ஆனால் எனது மேற்கத்திய அன்பர்கள் இப்போது அவர்களின் சகவாசத்தை ரத்து செய்துவிட்டதால் எப்படி உணர்கிறார்கள்?**”

ஃபிலிஸ் பதிலளித்தார், "உங்கள் மேற்கத்திய அன்பர்களை நீங்கள் அடிக்கடி பார்க்க வேண்டும், ஏனெனில் அவர்கள் உங்களைப் பார்க்காதபோது, மனதில் தேவாலயங்களைக் கட்டி எழுப்புகிறார்கள்."

அன்பைப் பொழியும் தொனியில், லின் மேலும் கூறினார், "ஆம், பாபா, நாங்கள் உங்களுக்கு தேவாலயங்களைக் கட்ட வேண்டும்!"

பாபா பதிலளித்தார், "**தேவாலயங்கள் கீழே விழுந்தால், எனது வேலையும் முடிந்துவிடும்**!"

எரச் மூலம் பாபா பேசும்போது, லின்னின் முதுகில் தட்டி, சில சமயங்களில் கன்னத்தைச் சுற்றி மென்மையாக வருடவும் செய்தார். திடீரென, பாபா லின் பக்கம் திரும்பி, "**இன்று சவரம் செய்தீர்களா**?" என்று கேட்டார். ஆம் என்ற அவரது பதிலுக்கு, பாபா, "**ஆமாம், நீங்கள் அதை சிறப்பாகச் செய்யவில்லை**" என்று கூறி, "**எனது முகத்தை வருடி, எப்படி உள்ளது என்பதை நீங்கள் உணர விரும்புகிறேன்**" என்றார்.

"பாபாவின் முகம் மிகவும் மென்மையாக இருந்தது; அவர் ஓர் அற்புதமான சவரம் செய்திருந்தார்." லின் அப்போது கூறினார், "நான் சவரம் செய்யும் போது, 'பாபா சவரம் செய்வதுண்டா?' என்று நினைத்துக் கொண்டிருந்தேன்."

பாபா ஆச்சரியத்துடன் பதிலளித்தார், "**நான் ஏன் சவரம் செய்யக்கூடாது**?"

லின் உடனே, "சரி, பாபா, இன்றைய காலை நேரத்திற்கு முன்பு, சவரம் செய்வதை நான் கடவுளோடு தொடர்புபடுத்தி பார்த்ததே இல்லை!" என்றார்.

பாபா அவரைத் தீவிரமாகப் பார்த்து, "**நான் உங்களை விட மனிதனாக உள்ளேன். ஒரு நாள் எனது முகத்தை அதன் உண்மையான ரூபத்தில் நீங்கள் பார்ப்பீர்கள்**" என்று கூறினார்.

பாபா அவர்களின் பயணத்தைப் பற்றிக் கேட்டார், அதற்கு முந்தைய நாள் பாபாஜானின் சமாதிக்குச் சென்றதாகக் கூறினார்கள். பாபா அதைப் பற்றி கேட்க மிகவும் ஆர்வமாக இருந்தது போலத் தோன்றியது; மேலும் பல கேள்விகளைக் கேட்டார். "**பாபாஜானின் சமாதியில் தலைவணங்கினீர்களா**?"

ஃபிலிஸ், "எனக்கு எப்படி செய்வது என்று தெரியவில்லை" என்றார்.

பாபா அவரிடம், "**நீங்கள் அதைச் செய்வீர்கள்**" என்று உறுதியளித்தார்.

லின் உடனே, "எனக்கு மனித உருவில் உயிர்வாழும் ஒரு குருநாதர் இருக்கிறார் என்பதற்கு நான் நன்றி சொல்ல வேண்டும் என்பதைத் தவிர, பாபாஜானின் சமாதிக்குச் செல்வதில் என்னைப் பொறுத்தவரை எதுவும் இல்லை" என்று கூறினார்.

பாபா உடனே, "**பாபாஜான் என்னுள் இருக்கிறார்**" என்று குறிப்பிட்டார்.

அப்போது அவர், "**சமாதியில் என்னையும் பாபாஜானுடைய சித்திரங்களையும் பார்த்தீர்களா**?" என்று கேட்டதற்கு, அவர்கள் இல்லை என்று பதிலளித்தபோது, பாபா விளக்கினார், "**பாபாஜானின் சமாதியைப் பராமரிப்பவர் ஒரு முஸ்லீம், கடவுளின் சித்திரங்களைக் காட்டக்கூடாது என்று நம்புகிறார்**;

**ஆனால், நீங்கள் கேட்டிருந்தால், அவர் தனித்தனியாக கண்ணாடியுடன் சட்டம் செய்யப்பட்ட, நானும் பாபாஜானும் ஒன்றாக இணைந்திருக்கும் சித்திரங்களை உங்களுக்குக் காட்டும் விதத்தில் ஒரு திரையை அகற்றியிருப்பார்.**"

பாபா, ஃபிலிஸிடம், "**நேற்று இரவு எப்படித் தூங்கினீர்கள்?**" என்று கேட்டார்.

அவர் பதிலளித்த பிறகு, பாபா லின்னிடம் அதே கேள்வியைக் கேட்டார்; லின் கூறினார், "தூங்கவே இல்லை, பாபா; அல்லது அரிதாகவே தூங்கினேன்" என்றார். லின் முந்தைய நாள் இரவு அமைதியின்றி இருந்ததை கூறி மேலும் தொடர்ந்தார், "பாபா, நான் உங்களை நேரத்திலும் இடத்திலும் நெருங்கி நெருங்கி வரும் வேளையில், நான் ஏன் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டேன்?" என்று கேட்டார்.

அதற்கு பாபா, "**என்னுடைய துன்பத்தில் சிறிதளவு பகிர்ந்து கொள்வதில் நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். விரைவில், முழு உலகமும் என்னை நோக்கித் திரும்பும்**" என்று பதிலளித்தார்.

லின் கூறினார், "பாபா, உங்கள் துன்பத்தைப் பற்றி நான் நிறைய நினைக்கிறேன், ஆனால் நான் இங்கே உங்களுடன் இருக்கும்போது, நீங்கள் துன்பப்படுவதை என்னால் நம்ப முடியவில்லை."

பாபா பதிலளிக்கவில்லை, ஏனெனில் அவர் அதே கிறிஸ்து, மனிதகுலத்திற்காகவும் அனைத்து படைப்புகளுக்காகவும் துன்பப்பட அவதார புருஷராக பிறவி எடுத்தவர்.

சிறிது நேரம் கழித்து, பாபா கூறினார், "**நீங்கள் ஏற்கனவே இங்கு வந்து அரை மணி நேரம் ஆகிவிட்டது. பொதுவாக, இந்த நாட்களில் நான் ஐந்து நிமிடங்கள் மட்டுமே தரிசனம் வழங்குகிறேன்.**" அவர்களை வெளியேறச் சொல்லக்கூடும் என்று நினைத்த லின், பாபா அவரைத் தழுவியபோது கழற்றச் சொன்ன கண்ணாடியை மீண்டும் அணியத் தொடங்கினார். ஆனால் அப்போது, லின் மீது கை வைத்து பாபா, "**நீங்கள் செல்லும் நேரம் இன்னும் வரவில்லை**" என்று கூறினார்.

பாபாவின் இடது காதில் வட்ட வடிவில் ஒரு சிறிய பிளாஸ்திரி இருந்தது, அது ஏன்? என்ன? என்று ஃபிலிஸ் கேட்டார்.

பாபா, "**நீங்கள் மிகவும் அவதானமாக இருக்கிறீர்கள்**" என்று குறிப்பிட்டார், மேலும் 'பாபா தினமும் நான்கைந்து மணிநேரம் அசையாமல் அந்தப் பக்கம் படுத்திருந்ததாகவும், காதருகில் தோல் தேய்ந்ததாகவும்' எரச் விளக்கினார்.

லின் கேட்டார், "பாபா, நீங்கள் ஏன் ஒரு சிலரை, பிறரை விட அதிகமாக நேசிக்கிறீர்கள்?"

பாபா பதிலளித்தார், "**உங்கள் விரல் நகத்தை விட உங்கள் கண்களை நீங்கள் நேசிக்கவில்லையா?**"

ஃபிலிஸ், தனது நகத்தின் வளைவில் கண்ணாடி போன்ற நகச்சாயம் பூசியிருந்ததை நினைவு கூர்ந்து கூறினார், "சில சமயங்களில் எனது விரல் நகமும் எனக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது."

பாபா உடனே, "**உங்கள் கண்ணில் தூசி போன்ற ஏதேனும் விழ நேர்ந்தால், அதை வெளியே எடுப்பதற்கு நீங்கள் எந்த எல்லைக்கும் செல்வீர்கள், ஆனால் உங்கள் விரல் நகத்தில் ஏதாவது பிரச்சினை என்றால், நீங்கள் அதை வெட்டிவிட முடியும்**" என்று விளக்கினார்.

ஆசன வாய் அருகே இருந்த இடது பிட்டத்தை லேசாக உயர்த்தி, இடது ஆள்காட்டி விரலால் அதைச் சுட்டிக்காட்டி, பாபா வினவினார்: "**நீங்கள் வெளியேற்றும் மலத்தை விட உங்கள் வாயால் உண்பதை நீங்கள் அதிகம் விரும்புவதில்லையா?**"

பாபா மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே இருந்தார் "**விரைவில் முழு உலகமும் பாபாவிடம் வரும்**."

புதியவராகவும் பாபாவின் வழிகளை அறியாதவராகவும் இருந்ததால், ஃபிலிஸ் அசௌகரியமாக உணர்ந்தார்; ஏதோ ஒரு விதத்தில் பாபா 'தற்பெருமை' கொள்வதாக நினைத்தார்.

பாபா அவரிடம் அழுத்தம் திருத்தமாக சைகையால் தெரிவித்தார், "**பாசாங்குத்தனம் ஆகாது! நீங்கள் மனதில் நினைப்பதைச் சொல்லுங்கள்!**"

அதற்கு ஃபிலிஸ், "இதில் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. பாபா, தூய்மையற்றதை தூய்மையாகவும், பாசாங்குத்தனம் இல்லாததை பாசாங்குத்தனமாகவும் ஆக்குவது உங்களைப் பொறுத்தது" என்று பதிலளித்தார்.

இதற்கு முன்னதாக பாபாவைப் பார்த்ததிலிருந்து, ஃபிலிஸ் அறிவுறுத்தியபடி மூன்று முறை 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் படித்தார். யூதர் இனத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர் 'நான் கடவுள்' (அனல் ஹக்) என்று கூறிக்கொண்டே, இயேசுவின் கண்களின் சித்திரத்தையும், அவற்றில் அவரது கண்களின் பிரதிபலிப்பையும் பார்த்து தியானம் செய்யத் தொடங்கினார். பாபாவிடம் ஃபிலிஸ், "அமெரிக்காவில் எங்கள் இல்லத்தில், நான் கண்ணாடியில் உற்றுநோக்கி, 'நான் கடவுள், நான் கடவுள்...' என்று கூறும் வேளையில் அது உண்மையல்ல என உணர்கிறேன்; ஆனால் இங்கே, உங்களுடைய கண்களைப் பார்த்து, பாபா, 'நானே கடவுள்' என்று என்னால் உண்மையாகச் சொல்ல முடியும்" என்றார்.

ஃபிலிஸ் அப்போது குழப்பமாக உணர்ந்தார், "பாபா, நீங்கள் கடவுள் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் என்ன? ...உணர்வா?"

"**ஆம்**" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

"ஆனால் அந்த உணர்வு எங்கே உள்ளது? எனது தலையில், எனது கால்களில், எனது வயிற்றின் நரம்பு அலைகளிலா? எங்கே உள்ளது?" பாபா அவரது பொறுமையை இழப்பதை அவர் உணர்ந்த அதே வேகத்தில், அவரது உணர்வு உடலின் எல்லா பாகங்களிலும் உள்ளதாகவும், 'நான்' எனும் கீழ்நிலை அல்ல என்பதே அதற்கான பதில் என்பதையும் அவர் புரிந்துகொண்டார். ஃபிலிஸ்

அப்போது, "பாபா, நீங்கள் எதுவும் சொல்லாதீர்கள், நான் புரிந்துகொண்டேன்" என்றார்.

பாபா அவரது முகத்தைச் சுற்றி விரலால் ஒரு வட்டம் வரைந்து ஃபிலிஸிடம் காட்டினார்; ஃபிலிஸ் அவரது முகம் கவர்ச்சியாக இருப்பதாகக் கருதவில்லை என்றாலும், "**உங்கள் முகம் எனக்குப் பிடிக்கும்**" என்று பாபா கூறுவதை அவர் புரிந்துகொண்டார். பாபா, ஃபிலிஸிடம், "**நீங்கள் ஏன் என்னை அடிக்கடி பார்க்க வருகிறீர்கள் தெரியுமா?**" என்று கேட்டு, அவர் பதிலளிப்பததற்கு முன்னர், "**என்னைப் புரிந்து கொள்ள விரும்புவதால்**" என்று பாபாவே பதிலளித்தார்.

ஃபிலிஸுக்கு நான்கு குழந்தைகள் - இளைய பெண் குழந்தை லெஸ்லிக்கு (LESLIE) மூன்று வயது. சிறுமி லெஸ்லி தனது தாயிடம், "எனக்கு அவர் ஒரு குழந்தையாகத் தேவை" என்று பாபாவிடம் கூறுமாறு கேட்டுக்கொண்டாள். இதற்கு செவிமடுத்த பாபா சிந்தனையில் ஆழ்ந்தார்.

பாபா பின்னர் ஆட்ட் தம்பதியருக்கு பரிசுகளை வழங்கினார் - 1958இல் அவர் அணிந்திருந்த தங்க நிற கழுத்துக் குட்டை, குளிர்காலத்தில் அவர் முழங்கால்களில் அணிந்திருந்த கைவேலை செய்யப்பட்ட சால்வை மற்றும் மெஹராவிடமிருந்து ஃபிலிஸுக்கு ஒரு பட்டு சால்வை. மேலும் அவர் தனது ஒரே புகைப்படத்தை மூன்று வெவ்வேறு அளவுகளில் வழங்கினார். லினுக்கு மிகப்பெரியது, ஃபிலிஸுக்கு நடுத்தர அளவிலானது, மூன்றாவது பிரதியை டாம் ரைலீக்கும் (TOM RILEY, பாபா-அன்பர்) அவர்கள் உட்ஸ்டாக் (WOODSTOCK) இல்லத்திற்குச் சென்றதும் கொடுக்க வேண்டும். பாபா புகைப்படங்களை ஒரு பெட்டியில் வைத்து ஆட்ட் தம்பதியரிடம் கொடுத்து, "**டிசம்பர் சகவாசம் ரத்து செய்யப்பட்டதில் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி; ஏனெனில், அந்த சகவாச நிகழ்ச்சியில் நீங்கள் இவ்வளவு நெருக்கமான தரிசனத்தைப் பெற்றிருக்க முடியாது**" என்று கூறினார்.

லின் அப்போது, "பாபா, நான் வர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன், உங்களிடம் எதுவும் கேட்க விரும்பவில்லை, எனது முடிவு உங்கள் விருப்பமாக இருக்கும் என்று நாங்கள் எடுத்துக் கொண்டோம்" என்றார்.

"**நீங்கள் கூறுவது சரிதான்; நீங்கள் வர வேண்டும் என்று நான் விரும்பினேன்; ஆனால் நீங்கள் எனக்கு எழுதியிருந்தால், நான் இல்லை என்று சொல்ல வேண்டியிருந்திருக்கும்.**"

"வாய்ப்பு வழங்கியமைக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்," என்று ஃபிலிஸ் கூறினார்.

"**என்னை எனது உண்மையான ரூபத்தில் பார்க்கும் வரை நன்றியுணர்வு தேவையில்லை**" என்றார் பாபா.

லின் ஆட்ட் கண்பார்வையை இழந்து கொண்டிருந்தார், பாபா அவரைத் தழுவி, அவரது முகத்தைப் பற்றிக் கொண்டபோது, பாபாவின் முகத்தின் இடது பக்கத்தை மட்டும் ஜன்னல் வழியாக ஒளிர்ந்த வெளிச்சத்தில் லின் பார்க்க முடிந்தது. பாபா இதைக் குறித்துக் கவலையை வெளிப்படுத்தும் விதத்தில்,

‘**அவரை எவ்வளவு நன்றாகப் பார்க்க முடிகிறது**’ என்று மீண்டும் லினிடம் கேட்டார். பின்னர் ஒரு கட்டத்தில், “**என்னை, எனது உண்மை ரூபத்தில் பார்க்க முடியாததால் எல்லா மக்களும் குருடர்களே, ஆனால் ஒரு நாள் நீங்கள் எனது முகத்தை உள்ளளவில் பார்ப்பீர்கள்**” என்று கருத்துத் தெரிவித்தார்.

1964 டிசம்பர் மாதத்தில் அவர் ஃபிலிஸிடம், “**எனது முகத்தை உண்மையில் உள்ளபடியே லின் பார்ப்பார்**” என்று குறிப்பிட்டிருந்தார். திடீரென, ஒரு பிரகாசமான ஒளி பாபாவின் முகத்தில் பளிச்சிட்டது, அதனால் லின் அதைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அந்த நிகழ்வின் (8 மி.மீ) காணொளியை பதிவு செய்ய மணி அமைதியாக பின்பக்கத்திலிருந்து மண்டபத்திற்குள் நுழைந்து, ஒளிரும் விளக்குகளை இயக்கினார். இப்போது லின், பாபாவை மிகத் தெளிவாகப் பார்க்க முடிந்ததில் பாபா மகிழ்ச்சியடைந்தார். லின் பின்னர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

பாபாவின் முகத்தைப் பார்த்தபோது, என்னில் ஏற்பட்ட சிந்தனை ஓட்டம், அது எவ்வளவு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது என்பதுதான். மிக நுண்ணிய கோடுகளுடன், ஒரு தலைசிறந்த சிற்பியால் பளிங்குக் கற்களில் செதுக்கப்பட்டதைப் போல, மிகவும் கூர்மையாக வரையறுக்கப்பட்ட அம்சங்கள். அவரது கண்களுக்குக் கீழே அமைந்த கோடுகள் மிகவும் நேர்த்தியாக உருவாக்கப்பட்டுள்ளன.

மீண்டும், அவர்கள் அதிக நேரம் பாபாவின் சகவாசத்தில் இருப்பதை அவர் நினைவுபடுத்தினார். அப்படியிருந்தும் பாபா அவர்களை வெளியேறச் சொல்லவில்லை. அதற்கு பதிலாக, அவர், ஃபிலிஸ் பெண் மண்டலியை சந்திக்கவும், மேலும் ஆண்களுடன் பிற விஷயங்களைப் பற்றி விவாதித்த வேளையில், லின் அங்கேயே அமர்ந்திருக்கவும் அனுமதித்தார். ஒரு கட்டத்தில், பாபா, லினிடம் ஒரு டம்ளர் ஷர்பத்தை நீட்டி, “**நீங்கள் இதைப் பருக விரும்புகிறேன்**” என்று சுட்டிக்காட்டினார்.

பாபா மேலும் அவரிடம் குறிப்பிட்டார்: “**நேரம் என்ற ஒன்று ஒருபோதும் இருந்ததில்லை.**”

பல்வேறு பணிகளைப் பற்றிய உரையாடலுக்குப் பிறகு, பாபா, லின் பக்கம் திரும்பி, “**ஒவ்வொரு விவரத்தையும் நான் எப்படி நிர்வகிக்கிறேன் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்**” என்று கூறினார்.

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா மணியோசை எழுப்பி ஆண் மண்டலியில் ஒருவரிடம் ஃபிலிஸை மீண்டும் மண்டபத்திற்கு அழைக்குமாறு அறிவுறுத்தினார். பாபா மறுபடியும் லின், ஃபிலிஸ் தம்பதியரை தழுவிக் கொண்டார். லின் ஆட்ட் பின்னர் இவ்வாறு விவரித்தார்:

நாங்கள் வாசலைக் கடந்து செல்லும்போது, மீண்டும் ஒரு முறை பாபாவைப் பார்க்கத் திரும்பினேன். அவர் மிகவும் குறுகிய வடிவத்தில் காணப்பட்டார்; நான் அவரை எனது கைகளில் எடுத்து சட்டைப் பாக்கெட்டில் திணிக்க முடியும் என்று நினைத்தேன். ஃபிலிஸுக்கும் அதே உணர்வு இருந்தது.

நாங்கள் வாசலைத் தாண்டிச் செல்லும்போது பாபா, **“நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்”** என்றார்.

பாபாவுடனான இந்த சந்திப்பிற்குப் பிறகு நேரடியாக அவர்கள் இல்லத்திற்குச் செல்லுமாறும், திட்டமிட்டதை விட விரைவில் விமானத்தில் பயணம் செய்யுமாறும் பாபா இருவருக்கும் அறிவுறுத்தினார்; அதற்கு, கூடுதலாக $500 கட்டணம் (ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் மூலம் வழங்கப்பட்டது) செலுத்த வேண்டி இருந்தாலும் அவர்கள் அதைச் செய்ய ஒப்புக்கொண்டனர். அவர்கள் அன்று மதிய ரயிலில் மும்பைக்குச் சென்று, இரண்டு நாட்களுக்குப் பின்னர் அமெரிக்காவை நோக்கி விமானத்தில் பயணம் செய்தனர்.

அதே மதியம், பாபா, எரச்சிடம் ஆதிக்கு எழுதுமாறு கூறி, ஆட்ட் தம்பதியர் பாபாவுடனான சந்திப்பைக் குறித்து என்ன கூறினார்கள் என்பதை விரிவாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார், **“அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தனரா? எப்போது புறப்பட்டனர்? அவர்களின் பயணத்தைக் குறித்த திட்டவட்டமான வழிமுறைகளை அவர்களுக்கு வழங்கினீர்களா? அவர்கள் டோண்ட் அல்லது பூனாவில்** (ரயில்களை) **மாற்ற வேண்டியதில்லை என்று அவர்களிடம் கூறினீர்களா? பயணத்தின் போது அவர்களுக்காக சிற்றுண்டி வழங்கப்பட்டதா?”**

அக்டோபர் 6ஆம் நாள் மும்பையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர், ஆட்ட் தம்பதியர் பாபாவிடமிருந்து இந்தச் செய்தியை அடையப் பெற்றனர்:

**ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட், நீங்கள் அமெரிக்கா திரும்பிச் செல்லத் தேவையான கட்டணத்தின் வித்தியாசத் தொகை $500 செலுத்தியதை நீங்கள் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார். 1967 நவம்பர் வரை, பாபா எந்த விதமான தொந்தரவையும் விரும்பாததால், நீங்கள் இந்தியாவிற்குத் திரும்பி வர வேண்டாம் என்று பாபா கூறுகிறார்; இது அவரது உலகளாவிய பணிக்கு மிகவும் இன்றியமையாதது. உட்ஸ்டாக் அல்லது வேறு இடங்களில் வாழும் யார் ஒருவரையும் இந்தியாவிற்கு வர ஊக்குவிக்க வேண்டாம்.**

**பாபா அவரது அன்பையும் ஆசீர்வாதத்தையும் பிரியமான லின் மற்றும் ஃபிலிஸுக்கு அனுப்புகிறார். பாபா அவர்கள் மீது கொண்ட அன்பாலும், அவர்களின் முழுமையான கீழ்ப்படிதலாலும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். இருவரும் அவரை சந்தித்ததில் பாபா மிக்க மகிழ்ச்சியடைகிறார், ஏனெனில் நீண்ட காலத்திற்கு முன்பே லின், பாபாவைப் பார்க்க வாய்ப்பளிப்பதாக அவருக்கு அளித்த வாக்குறுதி, இப்போது நிறைவேறியது.**

அடுத்த ஆண்டு, பாபா, இருவருக்கும் எழுதினார்: **“லின் அவருடைய அன்பிற்குரியவரை சந்திக்கும் நோக்கத்தில், ஃபிலிஸ் அவரை அழைத்து வந்ததன் மூலம், இறைவனுக்கும் இறை மனிதனுக்கும் சேவை செய்துள்ளார்.”**

‘பௌதீக உலகில் உண்மைப்பொருளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவருடன்’ நிகழ்ந்த அவரது சந்திப்பை லின் ஆட்ட் சுருக்கமாக எடுத்துரைத்தார்:

பரிபூரணத்தின் முன்னிலையில் அமர்வதே வியப்பூட்டும் வெளிப்பாடாகும். இந்த நாள், இதே தரிசன நாள், கடந்த காலங்களில் பஹவான் கிருஷ்ணர், உலகில் உள்ள அழிவு சக்திகளின் மீது அவதார புருஷராக வெற்றி கண்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் அந்த தரிசன வேளையில் பாபா, பஹவான் கிருஷ்ணராகவோ அல்லது அவதார புருஷராகவோ இல்லை: அவர் அன்பு, கருணை மற்றும் உண்மையின் எனது சொந்த மனித குருநாதராக, மனித-கடவுளாக இருந்தார்; மேலும் கடவுள் என்னை அவரது பணிவான, ஆடம்பரமற்ற பரிபூரணத்தில் அவரை நேசிக்கச் செய்தார்.

எனது குருநாதர், என் மீது செலுத்திய அன்பிற்கு நான் முற்றிலும் தயார் நிலையில் இல்லை. அவர் எனது நிலைக்கு இறங்கி வந்து, அவரது அன்பால், எனது முதுகில் தட்டி, எனது முகத்தை வருடி, அறிவு மற்றும் அளப்பரிய ஆனந்தத்தின் புரிந்துகொள்ள முடியாத புன்னகையை வெளிப்படுத்தினார்.

இங்கே நான் இறுதியாக ‘ஓம் எனும் மையப்புள்ளி’யில் (OM POINT) இருந்தேன். பாபா எங்கு அமர்ந்திருக்கிறாரோ அதுவே பிரபஞ்சத்தின் மையம். மெஹர் பாபா, இந்தியாவின் இதயப் பகுதியில் மெஹராஸாத்திற்குப் பின்னால் அமைந்த அந்த சிறிய, விசித்திர குன்றுகளின் அடிவாரத்தில் அமர்ந்திருப்பது, இந்திய தேசத்தை பிரபஞ்சத்தின் மையமாக மாற்றுகிறது. அங்கு எதிர்கால நிகழ்வுகளுக்கான அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது, அதிலிருந்து முழு உருவில் மின்னும் மாயத்தோற்றங்களின் பொருட்காட்சி மற்றும் படைப்பின் கனவு வெளிப்படுகிறது. அங்குதான் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழும் புராணத்தின் உச்சம் உள்ளது. எனவே ஒருவர் அங்கு இருக்கும்போது, செல்வதற்கென வேறு இடமுமில்லை, செய்வதற்கென வேறு ஒன்றுமில்லை. எல்லாமே பிரபஞ்ச விதியின் தலையாய கையால் அவருக்காக செய்யப்படுகிறது என்பதை அந்த நேரத்தில் ஒருவர் அறிவார்.

மெஹர் பாபா அவர் சொல்வது போலவே இருக்கிறார். அவருடன் பௌதீக ரீதியாகத் தொடர்பு கொண்டதன் அடிப்படையில் எனது நம்பிக்கை உள்ளது. அவருடைய அன்பும் அதிகாரமும் எனக்கு மிகத் துல்லியமாக வெளிப்பட்டது.

நான் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக இந்தியா சென்றேன். அன்புப் பரிசை அடைய வந்திருக்கிறேன் என்பதை அறிந்தேன். கடவுளிடமிருந்து அன்பை அடையப் பெறுவதற்கான வாய்ப்பு என்னில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது. அந்த அன்பின் ஆதிக்கத்தால் நான் மேலெழுந்து அழிந்துவிடுவேனோ என அஞ்சினேன், அதை நான் விரும்பவில்லை. ஆனால் தெய்வீகப் பிரியமானவரை நேருக்கு நேர் சந்திப்பதன் மூலம், என் மீது ஆதிக்கம் செலுத்தப்படவுமில்லை, அல்லது நான் அழிக்கப்படவுமில்லை.

மெஹர் பாபாவைப் பற்றி நான் அறியும் முன்னர், ஓவியம்தான் எனது வேதம்; எனக்கு வேறு எதுவும் தெரியாது. அந்த ஆசீர்வாதமான நாளில், பாபா அந்த நீண்ட நெடிய பார்வையை எனது கண்களுக்குள் அனுப்பினார், அவர் என்னை எனது வேதத்தின் பொருளாக ஆக்கினார்... நான் பாபாவைப் பார்த்தபோது, நான் பார்த்த அந்த முகம் உண்மையில் கடவுளின் வடிவத்தில் வெளிப்பட்டது. அதுதான் இந்த யுகத்தில், இந்த உலகத்தில், இந்த உடலில் இறைவனாகத் தோற்றமளிப்பது. இது உண்மையில் இறைவனின் முகம், அடர் சிவப்பான வானுலகங்கள் மூலம் பௌதீகத் தளத்தை ஊடகமாகப் பயன்படுத்திக் காட்டப்படுகிறது; இதனால் அங்கே நாம், ஒரு பௌதீக மனித முகத்தைக் காண்கிறோம், இது உண்மையில் கடவுளின் முகத்தின் பிரதிபலிப்பைத் தவிர வேறொன்றுமில்லை.

ஆனால் பாபாவின் முகம் கடவுள் படைத்த மாயையின் பிரதிபலிப்பாகும். மேலும் பாபா கூறியதும் அதுதான் என்று நான் நினைக்கிறேன்: **“எனது முகத்தை உண்மையில் உள்ளபடியே லினிடம் காட்டுவேன்**.” நான் அதை நம்புகிறேன், உண்மையில் நான் கடவுளின் முகத்தை மாயையில் பார்த்தேன் என்று எனக்குத் தெரியும், அது உண்மையில் மாயையில் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. அதை அவர் எனக்குக் காட்டினார். அதுவே பாபாவின் முகம்.

நான் மெஹர் பாபாவை ஒரே ஒருமுறை பார்த்தேன், அவர் என்னை அவருடன் ஒன்றரை மணி நேரம் அமர அனுமதித்தார். ஒரே ஒரு முறை பார்ப்பது ஒன்றைத்தான் அருட்பார்வை என்று அழைக்கப்படுகிறது. அதுதான் எனக்கு வேண்டும் என்று பாபா விரும்பினார். மேலும் நான் வரைந்த அவரது ஓவியங்கள் அனைத்தும் அந்த அருட்பார்வையின் நெருப்பிலிருந்து வந்தவை.

எனது இந்திய பயணம், இறை நாட்டம் மிக்க ஒருவராக, ஆன்மீகப் பாதையில் ஒரு யாத்ரீகராக எனது சுயம் என்ற நதியின் மூலாதாரத்தைக் கண்டுபிடித்து, அந்த வழியில் செல்வதுபோல் இருந்தது. இது பாபாவால் எனக்கென உருவாக்கப்பட்ட ஒரு நேரடி யாத்திரை. அந்த யாத்திரை மூலமாக அவருடைய அன்பைப் பரிசாக அடையப் பெற்றேன். இதுவே என்னைப் பொறுத்தவரை அனைத்து தேடுதலின் முடிவாகவும், யாத்ரீகரின் இலக்காகவும், யாத்ரீகரின் முன்னேற்றத்தின் தொடக்கமாகவும் இருந்தது. நான் வழக்கத்தின் முறைப்படி ஒரு சீடன் என்று அழைக்கப்பட்டேன்.

1965 அக்டோபர் 5 செவ்வாய்கிழமை காலை 9:00 மணிக்கு, டாக்டர் மூர்த்தி, அவரது மனைவி ஸவிதி (SAVITI), அவர்களது ஆறு மாதக் குழந்தையுடன் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பாபாவை சந்தித்தனர். மெஹரா மற்றும் இதர பெண்மணிகளை சந்திக்க ஸவிதி உள்ளே அழைத்துச் செல்லப்பட்டார். திருமணமாகி 20 வருடங்களுக்குப் பிறகும் குழந்தை இல்லாத நிலையில், குழந்தை பிறந்ததற்கு நன்றி தெரிவிக்கும் நோக்கத்தில் தம்பதியர் வந்திருந்தனர்.

நேற்று மதியம் அஹமதுநகர் ரயில் நிலையத்திற்கு மூர்த்தி குடும்பத்தினர் வந்தபோது, அவர்கள் ஃபிலிஸ், லின் ஆட்ட் இருவரையும் சந்திக்க நேர்ந்தது. மூர்த்தி தங்கள் 'அதிசய' குழந்தையின் கதையை விவரித்த வேளையில், ஃபிலிஸ், லின் இருவரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். கடந்த ஆண்டு மெஹராஸாத்திற்கு ஃபிலிஸ் சென்றபோது, தனக்கு ஏற்பட்ட கருக்கலைப்பு பற்றி பாபாவிடம் கூறியிருந்தார். மூர்த்தி தம்பதியரை சந்தித்து அவர்களின் கதையைக் கேட்ட பின்பு, பாபா தனக்குப் பிறக்கவிருந்த குழந்தையை, கல்கத்தாவில் வாழும் டாக்டர் மூர்த்தி மற்றும் அவரது மனைவிக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டாரோ என்று யோசனை செய்யத் தொடங்கினார் ஃபிலிஸ். இது ஓர் ஆறுதலான சிந்தனை. ஒருவேளை ரயில் நிலையத்தில் இரண்டு தம்பதியர்களின் சந்திப்பு 'தற்செயலாக' நடந்திருக்க முடியாது!

ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் ஒவ்வொரு பாபா-அன்பர்களும் தனக்கு நேரடியாக ஒரு கடிதம் எழுத வேண்டும் என்ற பாபாவின் கட்டளையை நிறைவேற்றும் விதமாக, மெஹராஸாத்திற்கு கடிதங்கள் வரத் தொடங்கின. 1965 அக்டோபர் 6 முதல் பாபா, கடிதங்களுக்கு செவிமடுக்கும் ஆர்வத்தில் இருந்தார். ஒவ்வொரு காலையிலும், சிலவற்றை எரச் மண்டலி மண்டபத்தில் பாபா முன்னிலையில் வாசித்தார். மேலும் அவற்றினுடனான இணைப்புகளும் (புகைப்படங்கள் அல்லது வரைபடங்கள்) அவருக்குக் காட்டப்பட்டன. கடிதங்கள் அனைத்தும் அன்பினால் பொங்கி வழிந்தன, பாபா தமது இதயத்தில் கையை வைத்து, பதிலுக்கு இந்த செய்தியை எடுத்துரைத்தார்: "**என் மீதான உங்கள் அன்பும், எனது விருப்பத்திற்கு நீங்கள் முழுவதுமாக அடிபணிந்து இருப்பதும் என் ஆழ் இதயத்தைத் தொட்டது, என்னை மிகவும் மகிழ்வித்தது. எனக்கு சொந்தமான உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறேன்.**"

ரமாவிற்கு உடல்நிலை சீரில்லாமல் இருந்ததால், டாக்டர் ஸவுத்வெல் (DR. SOUTHWELL) அவரை சிகிச்சைக்காக பூத் மருத்துவமனையில் அனுமதிக்குமாறு அறிவுறுத்தினார். ரமா மற்றும் குழந்தைகளை அக்டோபர் 10 அன்று பாபா மெஹராஸாத்திற்கு அழைத்தார், அங்கு அவர் அவர்களுடனும் ஆதியுடனும் அரை மணி நேரம் விவாதித்தார். ரமா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், ஷீலா, மெஹர்நாத் இருவரையும் கவனிக்கும் பொருட்டு, ரமா தனது சகோதரர்களான தீரஜ் மற்றும் சம்பத்திற்கு கடிதம் எழுதினார். அவர்கள் 21ஆம் தேதி வந்தபோது பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். அக்டோபர் 27ஆம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ரமா, ஒரு மாதத்திற்கும் மேலாக அங்கேயே இருந்தார். பாவ் கல்சூரி ஒவ்வொரு வாரமும் ரமா மற்றும் குழந்தைகளைப் பார்க்க மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

ஒருமுறை, பாவ் கல்சூரியின் குடும்பத்தை பாபா, மெஹராஸாத்திற்கு அழைத்தபோது, அவர் தனது பக்கத்தில் ஒரு சிறிய இருக்கையில் வைத்திருந்த சாக்லேட் பொட்டலம் மீது ஷீலா மற்றும் மெஹர்நாத்தின் கவனம் சென்றது. பொட்டலத்தை எடுத்து பாபா, அவர்களைத் தவிர பிற அனைவருக்கும் சாக்லேட்டுகளை விநியோகித்தார். இது இயற்கையாகவே ஒரு சிறிய சாக்லேட் துண்டுக்காக குழந்தைகளுக்குள் அமைதியின்மையை ஏற்படுத்தியது; அதைக் கண்டு பாபா மிகவும் மகிழ்ந்தார். இறுதியாக, சாக்லேட்டுகளைக் கொடுத்து, **“உங்களுக்கு சாக்லேட்டுகள் மீது இருக்கும் அதே ஏக்கம் என் மீதும் இருக்க வேண்டும்”** என்று அறிவுறுத்தினார்.

வாமன் படாலே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஆதியின் இரு சக்கர வாகனத்தில் மெஹராஸாத்திற்கு வருவது வழக்கம், இதர நாட்களிலும் ஆதியின் அலுவலகத்திலிருந்து கொண்டுவர வேண்டிய முக்கியமான அஞ்சல்கள் ஏதேனும் இருந்தால் வருவதுண்டு. வாமன் எந்த ஓர் இந்து சிலையைப் பார்த்தாலும் வணங்கி வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்; ஒரு நாள் பாபா அவரை கடுமையாகத் திருத்தினார், **“நான் மனித உருவில் வருகை தந்த கடவுள். நீங்கள் ஏன் தேவ தேவிகளின் சிலைகளை வணங்குகிறீர்கள்? அதை மீண்டும் செய்ய வேண்டாம். இன்றிலிருந்து அவ்வாறு வணங்குவதை நிறுத்தி விடுங்கள்.”** வாமன் குறிப்பிடத்தக்க காலத்திற்குக் கீழ்ப்படிந்தார்.

ஆனால் ஒருமுறை அவர் தனது உறவினர்களுடன் இருந்தபோது, அவர்களில் ஒருவர் கோவிலில் நுழைந்த அவ்வேளையில், வாமன் அவருடன் சென்று, தனது உறவினர் தவறாக நினைக்கக் கூடாது என்பதற்காக சிலையை வணங்கினார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை அவர் மெஹராஸாத்திற்கு வந்தபோது, பாபா அவரிடம் அதைக் குறித்துக் கேட்டார், வாமன் உண்மையை ஒப்புக்கொள்ள, பாபா வெகுவாக அவரைக் கடிந்துகொண்டார், **“உங்கள் உறவினர்களை மகிழ்விப்பதற்காக நீங்கள் அவ்வாறு செய்தீர்கள், ஆனால் என்னை மகிழ்விக்கும் எண்ணம் உங்களுக்கு எள்ளளவும் இல்லை. எனது விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு, முழு உலகமும் உங்களுக்கு எதிராகச் சென்றாலும் நீங்கள் கவலைப்படக் கூடாது!”** பாபா அவர் முன்னிலையில் ஏழு முறை மூக்கைத் தரையில் உரசுமாறு வாமனுக்குக் கட்டளையிட்டு, அதன் மூலம் அவரை மன்னித்தார்.

ஸரோஷ் தனது பணிக்குத் திரும்பும் அளவுக்கு உடல்நலம் சீரானது; ஆனால் அதற்கு முன்னர், அவரும், மனைவி விலூவும் 1965 அக்டோபர் 15 அன்று ஆதியுடன் மெஹராஸாத்திற்கு வந்தனர். மெஹர்ஜி, மெஹர்வான், ஸாம் கேரவாலா ஆகியோர் 17ஆம் தேதி பாபாவை சந்தித்தனர், பால் நாத்துவும் அடுத்த நாள் வருகை தந்தார். மெஹர்ஜி மறுபடியும் 24ஆம் தேதி மெஹராஸாத் வந்தார்.

மர்ட்டில் பீச் மெஹர் மையத்தில் (MEHER CENTER IN MYRTLE BEACH) பாபாவின் அனைத்துப் புத்தகங்களின் கையொப்பமிடப்பட்ட நகல்களை நூலகத்தில் வைக்குமாறு மணி எழுதிய கடிதம் மூலம், பாபா, கிட்டிக்குப் பரிந்துரைத்திருந்தார்; மேலும், அக்டோபர் 24 தீபாவளி தினத்தன்று, 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING), 'லிஸன் ஹியூமானிட்டி' (LISTEN HUMANITY), 'பீம்ஸ்' (BEAMS), மற்றும் 'லைஃப் அட் இட்ஸ் பெஸ்ட்' (LIFE AT ITS BEST) போன்ற புத்தகங்களின் பிரதிகளில் பாபா கையொப்பமிட்டார். இந்தக் காலக்கட்டத்தில் பாபா கடிதம், புத்தகம் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவது அரிதாகவே இருந்ததால், இது விதிவிலக்காகக் கருதப்பட்டது.

அக்டோபர் 27 அன்று, 'மனித மனம் மற்றும் மனித இயல்பு' (HUMAN MIND AND HUMAN NATURE) குறித்து நியூயார்க் நகரில் ரத் ரிங்கர் (RUTH RINGER) எழுதிய கடிதத்திற்கு பதிலளித்த பாபா கூறினார்: **"எல்லாமே கடவுள் திட்டமிட்டபடி நடக்கிறது, அதுவே இன்றியமையாதது."**

அடுத்த நாள் மன்ஸாரி, சுஷீலா இருவரும் மெஹராஸாத்திற்கு வந்து பாபாவை சந்தித்தனர்.

அக்டோபர் 27ஆம் நாள், பூனா, 'ரூபி ஹால்' மருத்துவமனைக்கு (RUBY HALL CLINIC) பாபாவின் சிறுநீர் மற்றும் ரத்த மாதிரிகள் அனுப்பப்பட்டு, அங்கு டாக்டர் கிரான்ட் சர்க்கரை மற்றும் யூரியாவின் அளவை பரிசோதித்தார். மற்றுமோர் இரத்த மாதிரி நவம்பர் 3 அன்று அலோபாவால் பூனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது.

பாபாவின் உடல் ரீதியான இடர்பாடுகளுக்கு நிவாரணம் தேடி, பாபாவின் உடல்நிலை மற்றும் அவரது கழுத்து வலி குறித்து டாக்டர் ராம் கிண்டேக்கு எரச் கடிதம் எழுதியிருந்தார். கிண்டே 1965 அக்டோபர் 28 அன்று மீண்டும் எழுதினார்: "பிரியமான பாபாவின் விஷயத்தில், நான் முன்பே பலமுறை கூறியது போல், அவருக்கு ஏற்படும் அனைத்து வலிகளையும் என்னால் விளக்க முடியவில்லை, அல்லது நமக்குத் தெரிந்த வழக்கமான சிகிச்சை முறைகளால் என்னால் அதைத் தணிக்க முடியவில்லை." எனினும், இனிமேல் எந்த எக்ஸ்-ரேக்களும் எடுக்கக்கூடாது என்று டாக்டர் கிண்டே ஆலோசனை கூறினார், அது இப்போது தீங்கு விளைவிப்பதாக அவர் தீர்மானித்தார், மேலும் நிலைமை மோசமாகும் எனவும், கழுத்தில் இழுவை சிகிச்சைக்கு எதிராகவும் பரிந்துரைத்தார்; மாறாக, கழுத்துப்பட்டை அணிந்துகொண்டு, முடிந்தவரை தலையணைகளின் துணையுடன் ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தினார்.

டாக்டர் கிண்டே மேலும் கூறினார்: "ஆனால் நீங்கள் கூறியது போல், எங்களுக்கும் தெரியும், அவருடைய வலியின் பெரும்பகுதி உலகளாவிய பெருங்குழப்பம் மற்றும் துன்பம் காரணமாக இருக்கலாம், மேலும் அவர்

விரும்பினால் மட்டுமே அவரது வலியை உண்மையில் அகற்ற முடியும். இந்த விஷயங்களைப் பற்றி நான் முற்றிலும் அறியாதவனாக இருக்கிறேன், பிரியமான பாபாவின் வலிகள், மானிடர்களின் நலன் கருதி குறைக்கப்பட வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதைத் தவிர, இதர விஷயங்களை அப்படியே விட்டுவிட விரும்புகிறேன்."

அதிர்ஷ்டவசமாக, நவம்பர் 9ஆம் தேதிக்குள் இடுப்புப் பாகத்தில் வலி குறைந்தது, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் அளித்தது.

1965 நவம்பர் 1 அன்று, டெஹ்ரா டூனைச் சேர்ந்த நௌஷேர்வான் நலவாலா (NAOSHERWAN NALAWALA), 'ஸ்பார்க்' (SPARK) என்ற தலைப்பில் பாபாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகையின் முதல் இதழை வெளியிட்டார்.

5ஆம் தேதி, கேரி பென் ஷம்மாய் (CARRIE BEN SHAMMAI) அவரது தந்தை காலமான செய்தி குறித்து அனுப்பிய தொலைத்தந்திக்கு, பதிலளிக்கும் விதத்தில் பாபா இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "**இஸ்ரேல் நாட்டின் இதயத்தில் ஒளிர்ந்த உங்கள் அன்பின் மூலம் உங்களின் தந்தை உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டார்.**"

நவம்பர் 11ஆம் தேதி, கொவ்வூர் மெஹர்ஸ்தான் கட்டிடத்தை நிறுவிய கோடூரி கிருஷ்ணாராவ் மாரடைப்பால் காலமானார். பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது: "கோடூரி கிருஷ்ணா ராவ் அதிகாலை 4:00 மணியளவில் இதயச் செயலிழப்பால் காலமானார்." அவரது மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு பாபா கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**உங்கள் கணவர் கோடூரி கிருஷ்ணராவ் என் மீது கொண்ட அன்பும், அவதார புருஷருக்காக அவர் ஆற்றிய சேவையும் அவரை காலத்தால் அழியாதவராக மாற்றியுள்ளது. கிருஷ்ணராவ் இப்போது என்னுள் நித்தியமாக வாழ்ந்து பேரின்பத்தை அனுபவிக்கிறார். நீங்கள் மனம் தளராமல், கிருஷ்ணாராவின் மனநிறைவில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்களுக்கும் உங்கள் அன்பான குழந்தைகளுக்கும் என் அன்பும் ஆசீர்வாதமும்.**

பாபாவின் ஆந்திர அன்பர்களுக்கு, கீழ்வரும் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது:

**கோடூரி கிருஷ்ணாராவ் எனது பிரியமான அன்பர்களில் ஒருவராக இருந்து என்னுள் நித்தியமாக வாழ்கிறார்.**

கோடூரியின் மகன் பிரசாத் (PRASAD) தந்தையின் அஸ்தியை எங்கே புதைக்க வேண்டும் என்று கேட்க, பாபா அதனை மெஹர்ஸ்தான் வளாகத்தின் நுழைவாயிலுக்கு அருகில் வைக்க வேண்டும் என்று பதிலளித்து, இந்த வார்த்தைகளைக் கல்லறையில் பொறிக்குமாறு கட்டளையிட்டார்: "**எனது பிரியமான அன்பர்களில் ஒருவரான கோடூரி கிருஷ்ணாராவின் இறுதி உடல் இங்கே வைக்கப்பட்டுள்ளது. மெஹர் பாபா.**"

நரிமன், அர்னவாஸ், அவரது சகோதரி ரோடா (மிஸ்திரி) ஆகியோர் 15ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வந்து ஆறு நாட்கள் தங்கினர்.

1965 வசந்த காலத்தில், பாஸ்டன் பல்கலைக்கழகத்தின் (BOSTON UNIVERSITY) மூத்த கல்லூரி மாணவர் ராபர்ட் நீல் ட்ரேஃபஸ் (ROBERT NEAL DREYFUSS, **22**), ஹார்வர்டில் (HARVARD) பயின்று வந்த தனது நண்பர் அலன் கோஹெனை (ALLAN COHEN) சந்தித்தார்; அலன் மேல்நிலை பட்டதாரி பிரிவில் உளவியல் மற்றும் சமூக உறவுகள் துறைகளில் பயின்று வந்தார். அலன் கோஹெனின் அலுவலக வாசலில் பாபாவின் குறுகிய உரை ஒன்றை மேற்கோள் காட்டிய அட்டை ஒன்று வைக்கபட்டிருந்தது:

**அனைத்து உயிரினங்கள் மற்றும் அவற்றின் உட்பொருளின் சாராம்சத்தில் ஊடுருவி, பிற அனைவரின் வழிகாட்டுதலுக்காகவும் நன்மைக்காகவும், அந்த உள்ளளவிலான சாதனையின் நறுமணத்தை, உலகின் பல்வேறு வடிவங்கள், உண்மை, அன்பு, தூய்மை மற்றும் அழகு போன்றவற்றில் வெளிப்படுத்துவது ஒன்றுதான் உள்ளார்ந்த மற்றும் முழுமையான மதிப்பு மிக்க தெய்வீக விளையாட்டு. பிற அனைத்து நிகழ்வுகளும், சம்பவங்களும், சாதனைகளும், தங்களுக்குள்ளே நீடித்த முக்கியத்துவத்தை கொண்டிருக்க முடியாது.**

ராபர்ட் உடனடியாக இந்த வார்த்தைகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டதை, பின்பு நினைவு கூர்ந்தார்: “நான் அதை வாசித்தேன் மீண்டும் மீண்டும் வாசித்தேன், வாழ்க்கையின் ‘நோக்கத்தை’ இந்த அளவுக்கு சுருக்கமாகவும், சொல்வன்மை மிக்கதாகவும் எடுத்துரைக்க முடியுமா என்று ஆச்சரியப்பட்டேன்.” இரண்டு வாரங்களுக்கு முன்பு, பாபாவின் சித்திரத்தைப் பார்த்த அவர், அலன் கோஹெனின் அலுவலகத்திற்குள் நுழைந்து, அதே புகைப்படத்தைப் பார்த்து, “மீண்டும் அதே நபர்! அவர் யார்?” என வினவியபோது, அலன் அவரிடம் பாபாவைப் பற்றி கூறினார், மேலும் அவர் ஒரு நூலகம் அல்லது புத்தக விற்பனையகம் சென்று படிக்க சில புத்தகங்களைப் பரிந்துரைத்தார்.

ராபர்ட் சில ஆண்டுகளாக இந்தியாவிற்குச் செல்லும் ஒரு பயணத்தைத் திட்டமிட்டிருந்தார்; இப்போது அது, ‘மெஹர் பாபாவை சந்திப்பதற்காக’ என்பதைத் தெரிந்து கொண்டார்! அவர், 1965 டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் சகவாசத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார்; ஆனால் ஹாரி கென்மோரின் குழுவுடன், சிறப்பு வாடகை விமானத்தில் பயணம் செய்யும் அளவுக்கு பணமோ அல்லது விருப்பமோ இல்லாததால், ராபர்ட் செப்டம்பர் 1 அன்று ஒரு-வழி பயணமாக லண்டனுக்கு விமானத்தில் சென்று, அடுத்த இரண்டரை மாதங்களில் ஐரோப்பா, துருக்கி மற்றும் ஈரான் முழுவதும் தாவித் தாவி உல்லாசப்பறவை போல் இந்தியாவை நோக்கிச் சென்றார். பாகிஸ்தான் - இந்தியா இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை போர் காரணமாக, பாதைகள் மூடப்பட்டதால், எட்டு நாட்களுக்கு குவைத்திலிருந்து (KUWAIT) கப்பல் தளத்தில் பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ராபர்ட் ட்ரே∴பஸ் 1965 நவம்பர் 14ஆம் தேதி மும்பையை வந்தடைந்தார். அங்கு ஒரு சீக்கிய கோவிலில் தரையில் தூங்கி, ஓர் இரவைக் கழித்து, மரத்தளபாடங்களை ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனத்தில் ஒரு பெரிய நாற்காலியில் அமர்ந்து, இலவசப் பயணம் செய்து, இறுதியில் அவர் பூனா வந்தடைந்தார். பூனா (மெஹர் பாபா) மையத்தில் ராமகிருஷ்ணன் அவரிடம், 'யார், ஏன் வந்தீர்கள்' என்று கேட்க, ராபர்ட் சகவாசத்திற்காக வந்திருப்பதை அறிந்ததும், ராமகிருஷ்ணன் அமைதியாக இருந்து, பின்பு வினவினார், "நீங்கள் மிகவும் வேடிக்கையாகப் பேசுகிறீர்கள்! மெஹர் பாபா சகவாசத்தை ரத்து செய்துவிட்டார் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

ராபர்ட், "இல்லை, எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார்.

"பாபா, செப்டம்பர் 4 அன்று அதை ரத்து செய்தார்."

செப்டம்பர் 1 அன்று, ராபர்ட் அமெரிக்காவை விட்டு வெளியேறினார்; அவர் இருக்குமிடம் எவருக்கும் தெரியாததால், எந்த அஞ்சலும் வரவில்லை. அவரது முதல் எதிர்வினை அதிர்ச்சியாக இருந்தது. "நான் 12,000 மைல்கள் பயணித்தேன், இப்போது சகவாசம் இல்லை என்று சொல்கிறீர்களா?" என அவர் நம்பமுடியாமல் கேட்டார். "சரி, நான் பாபாவைப் பார்க்கலாமா?"

"அவர் கடுமையான ஏகாந்தவாசம் கடைப்பிடிக்கிறார், எவரையும் பார்க்கவில்லை."

'ஒரு கணம், உலகம் சுழல்வது நின்றது போல் உணர்ந்ததாக' ராபர்ட் நினைவு கூர்ந்தார்.

பாபா 75 மைல் தொலைவில் அமைந்த மெஹராஸாத்தில் இருப்பதாக ராபர்ட்டிடம் கூறப்பட்ட போது, அவரைப் பார்க்க முயற்சிக்க வேண்டும் என்றார். அதற்கு ராமகிருஷ்ணன், "ஓ ஆமாம், நீங்கள் முயற்சி செய்யுங்கள், ஆனால் உங்களால் முடியும் என எனக்குத் தோன்றவில்லை."

ராபர்ட், பாபாஜானின் சமாதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அதைத் தொடர்ந்து ஜால்பாயை சந்திக்க, அடுத்த நாள் நவம்பர் 16 அதிகாலை, அவர் அஹமதுநகருக்குச் சென்றார்; ஆதியை சந்தித்த அவர், முந்தைய மாலையில் நிகழ்ந்த உரையாடலை அவரிடம் பகிர்ந்து கொண்டார். ராபர்ட், பாபாவைப் பார்ப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆதியும் நம்பிக்கை தெரிவிக்கவில்லை, ஆனால் அவர் குறைந்தபட்சம் முயற்சி செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

வாமன் மூலமாக அவர் பாபாவிற்கு ஒரு குறிப்பை அனுப்பியபோது, '**ராபர்ட் மெஹராஸாத் வந்து பாபாவைப் பார்க்க வேண்டும்**' என்ற பதிலை அனுப்பிவைத்தார்; ஏனெனில் அவர் இவ்வளவு தூரம் வந்ததால் மண்டலி அவரை சந்திக்க விரும்பினர், பாபா அவரை அடுத்த நாள் பார்க்க வாய்ப்புள்ளது. ராபர்ட் திருப்தி அடைந்தார், அவர் எப்படியும் அடுத்த பல வருடங்களை இந்தியாவில் கழிக்க திட்டமிட்டிருந்ததால், ஒருவேளை பாபா அவரை, பின்னர் ஒருநாள் பார்க்க அனுமதிப்பார் என்று நினைத்தார்.

நண்பகலில், மானேக் இரு சக்கர வாகனத்தில் ராபர்ட்டை பின்புறத்தில் அமர்த்தி (வழியில் இரண்டு முறை சக்கரம் பழுதடைந்தது) மெஹராஸாத்திற்கு

அழைத்துச் சென்றார். அவர்கள் மெஹராஸாத்தின் வாயில்களை நெருங்கவே, ஸென் பௌத்த மதத்தில் (ZEN BUDDHISM) குறிப்பிடப்பட்டுள்ள புகழ்பெற்ற உருவமான 'வாயில் இல்லாத வாயில்' (THE GATELESS GATE) ராபர்ட்டின் நினைவுக்கு வந்தது - ஒருவர் அதைக் கடந்து செல்லும் வேளையில், தனது சுயத்தை விட்டு வெளியேறும் வாயில் என்று பொருள்படும்.

மெஹராஸாத்தில், ராபர்ட் ஆண்கள் பக்கத்தில் நீள் மர இருக்கை ஒன்றில் காத்திருந்த சற்று நேரத்தில், எரச் அங்கே வந்து அவருடன் உரையாடி, அவரை 'இந்த நிலைக்குக் கொண்டு வந்தது என்ன' என்று கேட்டார். சுமார் 45 நிமிடம் அவர்கள் உரையாடினர். எரச் அவரை சற்று காத்திருக்குமாறு கூறி, அந்த இளைஞனைப் பற்றி பாபாவிடம் தெரிவித்தார். பாபா ஏற்கனவே அவரது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார். எரச் திரும்பி வந்து கூறினார், "உங்களுக்காக என்னிடம் ஒரு நல்ல செய்தி உள்ளது. பாபா உங்களை நாளை காலையில் சந்திப்பார். நீங்கள் நீலப்பேருந்தில் இன்றைய இரவைக் கழிக்க வேண்டும், இது மிகவும் அரிதான பாக்கியம்."

மேலும் உரையாடலைத் தொடர்வதற்காக எரச் அவரை தன் அறைக்குள் அழைத்துச் சென்றார்; சில மண்டலியும் அவர்களுடன் இணைந்தனர். பாபாவைப் பற்றி ராபர்ட் கேள்விப்பட்டதை அவர்களிடம் கூறவே, அலன் கோஹென் கிட்டிக்கு எழுதிய கடிதத்தை எரச் கொண்டு வந்தார், அதில் கோஹென் போதைப்பொருள் (எல்.எஸ்.டி - L.S.D.) குறித்த அவரது அனுபவங்களை விவரித்திருந்தார். அவர்கள் ராபர்ட்டிடம், "இந்த 'எல்.எஸ்.டி' போதைப்பொருள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டதற்கு, "தெரியும்" என்று பதிலளித்தார். (அவரது தோள்பையில் இரண்டு வேளைக்கான எல்.எஸ்.டி போதை மருந்து இருந்தது; அவர் நேபாள தேசத்தில் புத்தாண்டு தினத்தன்று இதை உட்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்...) "நீங்கள் எப்போதேனும் அதை உட்கொண்டதுண்டா?" என்ற கேள்விக்கு, ராபர்ட் "ஆமாம்" என்று தயக்கத்துடன் பதிலளித்தார். "அது என்ன மாதிரியான போதைப்பொருள்?" என்று கேட்டபோது, 'செயற்கையாக தயாரிக்கப்பட்ட போதைப்பொருள்' (ACID TRIP) என்றால் என்ன என்பதை அவர் சுருக்கமாக அவர்களிடம் விவரித்து, அவரது நண்பர்களும் அவரும் 'எல்.எஸ்.டி'யை 'உண்மைப்பொருளை உள்ளடக்கும் பொதியுறை' (REALITY CAPSULES) என்று குறிப்பினர்; அப்போது மண்டலி அவர்களின் சிரிப்பை அடக்க முடியாமல், திகைப்பில் தலையை அசைத்து, "மேற்கத்திய நாடுகளில் மட்டும்" என்று குறிப்பிடுவதாகக் கூறினார்.

"பல இளைஞர்கள் இந்த 'எல்.எஸ்.டி' மாத்திரையை எடுத்துக்கொள்கிறார்களா?" எரச் வினவினார்.

"ஆம், பலர்," ராபர்ட் பதிலளித்தார்.

எரச் வெளியே சென்று சில கணங்கள் கழித்து திரும்பி வந்து, "இப்போது பாபாவைப் பார்க்க விரும்புகிறீர்களா?" என வினவி, பிற்பகல் சுமார் 3:00 மணியளவில் அவர் டிரேஃபஸை பாபாவின் அறைக்கு அழைத்துச் சென்றார்.

ராபர்ட் ட்ரே:ஃபஸின் 'இறைப் பேரரசர்' (LORD OF LORD) உடனான தனது முதல் சந்திப்பின் விளக்கம் பின்வருமாறு:

திடீரென, அவர் அங்கே இருந்தார்! அவரது படுக்கையில் அமர்ந்து, இடுப்பு வரை ஆடையின்றி ஒளிர்ந்து கொண்டிருந்தார் - பேரரசர்களின் பேரரசர். அப்போது நடந்ததை என்னால் மறக்க முடியாது - மாபெரும் தளர்ச்சியுற்ற நிலை, உள்ளளவில் ஒரு நடுக்கம் எனக்கு. நான் ஏதேனும் காட்சிகளையோ, விசித்திரமான பொருட்களையோ அல்லது மாயத்தோற்றங்களையோ காணவில்லை, ஆனால் அவரது உடல் வடிவத்தைப் பார்த்த அந்த கணம், நான் பார்த்தது ஒரு மாபெரும் ஒளியின் மையத்தில் அவரது பிரகாசமான முகம், அனைத்தையும் உள்ளடக்கிய ஒளிமயம், மிகவும் முழுமையானதாகத் தென்பட்டது. ஆனந்த ஊற்றில் கண்ணீர் எனது பார்வையை மங்கச் செய்தது. எனக்கு அதை நிறுத்த எந்த வழியும் தெரியவில்லை. வெளிச்சத்தில் அதீத ஒளி தெரிந்தது, அது சூரியனைப் பார்ப்பது போல் இருந்தது, அதனால் இயற்கையாகவே கண்ணீர் வழியத் தொடங்கியது. இதோ அவர், தனது கருணையால் கற்பனையின் இந்த மையப்புள்ளியான இறை ஒளி எனும் சூரியனைப் பார்க்க அனுமதித்தார்!

பாபா சைகையால் தெரிவித்தார், **"உங்களைப் பார்த்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் சோர்வாகவும் தூசி நிறைந்தும் காணப்படுகிறீர்கள். வெதுவெதுப்பான நீரில் நீராடுங்கள், சூரிய அஸ்தமனத்திற்கு முன்பு, 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்திலிருந்து** (ஃபனா - FANA - **நிர்வாண நிலை மற்றும் பக்கா** - BAQA - **நிர்விகல்ப் சமாதி நிலை**யைப் பற்றி) **ஒரு குறிப்பிட்ட பகுதியை நீங்கள் படிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது சூரியன் மறைவதற்கு முன்பே செய்ய வேண்டும். நன்றாக இரவு உணவை உண்டு, நன்கு தூங்குங்கள். நாளை காலையில் நான் உங்களைப் பார்க்கிறேன்."**

ராபர்ட் தலையசைத்தார், ஏனெனில் அவர் உண்மையில் 'அவரது மௌனத்திற்கு முன்னால் வாயடைத்துப்போய்' இருந்தார். எரச் அவரை மீண்டும் ஆண்கள் பக்கத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு அவர் பாபா அறிவுறுத்தியபடி செய்து, நீலப்பேருந்தில் பாபாவின் படுக்கையில் இரவைக் கழித்தார்.

மறுநாள் காலை, 1965 நவம்பர் 17 புதன்கிழமை, பாபா உள்ளே நுழைந்தபோது, ராபர்ட் மண்டலியுடன் மண்டபத்தில் அமர்ந்திருந்தார். பாபா வந்ததும் எழுந்து நின்றார், பாபா அவரைப் பார்த்து புன்னகைத்து, அமருமாறு சைகையால் தெரிவித்தார். மெதுவாக, பாபா மண்டபத்தின் நீள்வாக்கில் மூன்று முறை நடந்தார், அவரது கை ஃபிரான்சிஸின் கைகளை லேசாகப் பற்றிக் கொண்டிருந்தது. பாபா, பைதூலைக் கடந்து செல்லும்போது, அவரது தாடியை வேகமாக இழுத்து, பெண்டுவின் கன்னங்களை வருடினார், பின்பு மூலையில் இருந்த அவரது நீல நாற்காலியில் அமர்ந்தார். ராபர்ட் ட்ரே:ஃபஸ் அவருக்கு நேர் எதிரே தரையில் அமர்ந்திருந்தார், இதர ஆண் மண்டலி சுவருக்கு எதிராக வழக்கமான இடங்களில் அமர்ந்திருந்தனர்.

பாபா, ராபர்ட்டை அணைத்துக்கொள்ள வருமாறு சைகையால் அழைத்தார். பாபா அவரைத் தழுவி கன்னங்களில் முத்தமளித்ததும், ராபர்ட் பாபாவின் ஒவ்வொரு கன்னத்திலும் முத்தமிட்டார். பின்னர் அவரை தரிசனம் செய்யுமாறு பாபா சைகையால் தெரிவித்ததும், அவர் கீழே மண்டியிட்டு பாபாவின் பாதங்களில் முத்தமிட்டார்.

அதற்குப் பிறகு பாபா தொடர்ந்தார்: "**நான் மிகவும் கடுமையான ஏகாந்தவாசம் கடைப்பிடிக்கிறேன், நான் பார்வையாளர்கள் எவரையும் பார்க்கவில்லை, எவரும் இங்கு வரவும் அனுமதிக்கப்படவில்லை. நான் இந்த மண்டபத்திற்கு வெளியே செல்லவில்லை, ஆனால் நான் என் ஏகாந்தவாசத்தை நிறைவு செய்ததும், அவ்வாறு செய்வேன். இந்த ஏகாந்தவாசம் எனது பணிக்கு மிகவும் அவசியம். நான் என் உடலைக் கைவிடுவதற்கு சற்று முன்னர் எனது மௌனத்தைக் கலைப்பேன், பின்னர் உலகில் எஞ்சியிருக்கும் அனைத்தும் நான் யார் என்பதை அறியும்.**

"'**இறைவனுடன் இணைந்திருங்கள்**' (STAY WITH GOD) **புத்தகத்தை நீங்கள் படித்தீர்களா?**"

"இல்லை பாபா," ராபர்ட் பதிலளித்தார்.

பாபா, ஃபிரான்சிஸிடம் புத்தகத்தின் ஒரு பிரதியைக் கொண்டு வருமாறு சைகையால் தெரிவித்தார், அதை ஃபிரான்சிஸ் கையெழுத்திட்டு ராபர்ட்டிடம் கொடுத்தார்.

"**உங்களிடம் ஏதேனும் கேள்விகள் உள்ளனவா? நீங்கள் ஏதாவது தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?**" என்று பாபா கேட்டதற்கு, இல்லை என்று ராபர்ட் பதிலளித்தார். பாபா சிரித்துக்கொண்டே, "**நல்லது. போதிய வார்த்தைகளைக் கேட்டுவிட்டீர்கள்**" என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே, "**உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?**" என வினவினார்.

"ஆம், பாபா. உங்களை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி நான் உங்களை நேசிக்க விரும்புகிறேன். எல்லோரிடமும் எல்லாவற்றிலும் உங்களைப் பார்க்கவும், நேசிக்கவும் விரும்புகிறேன், எப்பொழுதும், பிறரின் நன்மைக்காக."

பதிலளித்த பாபா இவ்வாறு கூறினார்:

**நீங்கள் விரும்பும் இந்த அன்பை (பிரேம்) அடையப்பெற விரும்பினால், பிறரின் சேவைக்காக, நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்து, நான் சொல்வதை சரியாகச் செய்ய வேண்டும். உங்களால் இதைச் செய்ய முடியுமா? எனக்குக் கீழ்ப்படிய பெரும் துணிச்சல் தேவை. தைரியமாக இருங்கள், அஞ்ச வேண்டாம். நான் உங்களுடன் இருக்கிறேன். நான் மனித உருவில் வருகை தந்த கடவுள். அவமானங்களைத் தாங்கிக்கொள்ளவும்; அவமானமாக இருந்தாலும் சரி, வெகுமதியாக இருந்தாலும் சரி, அனைத்தையும் எனது பாதங்களில் அர்ப்பணிக்கவும். உங்கள் சிந்தனையில் நல்லது தீயது எதுவாக இருந்தாலும், அவற்றை எனது காலடியில் சமர்ப்பிக்கவும். அவற்றைக் குறித்து கவலைப்பட வேண்டாம்.**

**'உலகமும் அதன் விவகாரங்களும் ஒரு பெரிய பூஜ்ஜியம் - ஒன்றுமில்லாத ஒன்று' என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கடவுள் ஒருவரே உண்மையானவர், சந்தேகத்திற்கு இடமின்றி கடவுள் உளதாயிருக்கிறார். நானே கடவுள். நானே மனித உருவில் வருகை தந்த கடவுள்; மேலும், அதற்கும் அப்பாற்பட்ட கடவுள். எந்த இடைவெளியுமின்றி நான் எல்லையற்றவனாக இருப்பதை தொடர்ந்து உணர்கிறேன். நான் எல்லையற்ற துன்பங்களை அனுபவிக்கிறேன்; முழுப் பிரபஞ்சத்தின் பாரம் எனது தலையில் உள்ளது. நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன், மேலும் நான் மிகவும் தாழ்ந்த நிலைக்கும் வருகிறேன், ஒவ்வொரு சிறிய விவரங்களையும் கருத்தார்வத்துடன் கவனிக்கிறேன்.**

**உங்கள் கால்களை நீட்டி சௌகரியமாக அமருங்கள்; கவலை வேண்டாம். சுதந்திரமாக இருங்கள். நான் எல்லா இடங்களிலும், எல்லா திசைகளிலும் இருக்கிறேன். நீங்கள் சுவாசிக்கும் உங்கள் மூச்சும் நானே. என்னில் உங்கள் இருப்பிடத்தை உருவாக்குங்கள்.**

**கடவுளை எதிர்ப்பதை விட, கடவுளை மறுப்பதே மேல். இதன் பொருள் என்னவெனில், கடவுளை நம்பாமல், தனது கடமைகளை நேர்மையாகச் செய்பவன், தனக்குள் இல்லாததை இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் பாசாங்குத்தனம் பிடித்தவர்களைக் காட்டிலும் மிகச் சிறந்தவன்.**

ராபர்ட்டிற்கு பாபா அறிவுரை வழங்கினார், "**(அமெரிக்காவிற்கு) திரும்பிச் செல்லுங்கள், ஏனெனில் நீங்கள் தேடுவதை, இந்திய தேசத்தைச் சுற்றித் திரிவதன் மூலமோ அல்லது இமயமலையில் அமைந்த மடாலயங்களில் அமர்ந்திருப்பதன் வாயிலாகவோ காண முடியாது** (உண்மையில், இந்த இரண்டு கருத்துக்களுக்கும் ராபர்ட் தன் இதயத்தில் அடைக்கலம் கொடுத்திருந்தார்; ஆனால் இதை எவரிடமும் கூறியதில்லை) **ஆனால் மக்களுக்கு சேவை செய்ய முயற்சித்து, அவர்களை நேசிப்பதன் மூலம் சமூகத்தில் அதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.**"

**'அமெரிக்காவில் பல இளைஞர்கள் எல்.எஸ்.டி போன்ற போதைப்பொருட்களை உட்கொள்கிறார்களா?'** என்று பாபா கேட்டதற்கு, ராபர்ட் 'ஆம்' என்று கூறினார், பாபா அப்போது, "'**போதை மருந்துகளால் கடவுளை உணர முடிந்தால், கடவுள் கடவுளாக இருக்க தகுதியற்றவர்' என அங்கு வாழும் இளைஞர்களுக்குச் சொல்லுங்கள்**" என்றார்.

பாபா, ராபர்ட்டிடம் அழுத்தம் திருத்தமாக, அதிகாரப்பூர்வமாக, **'போதைப்பொருள் உட்கொள்வதை நிறுத்துமாறும், பிறரிடம் அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறுமாறும்'** அறிவுறுத்தினார். "**போதைப்பொருள் வேண்டாம்**" என்று பலமுறை கடுமையாக சைகையால் வெளிப்படுத்தினார். பாபா இதை விவரித்து தொடர்ந்து விளக்கினார்:

இந்தியாவில் பலர் ஹாஷிஷ் மற்றும் கஞ்சா (HASHISH AND GANJA) புகைக்கிறார்கள் - அவர்கள் வண்ணங்களையும் வடிவங்களையும் ஒளிவிளக்குகளையும் காண்கிறார்கள். இது அவர்களை உற்சாகப்படுத்துகிறது, உயர் நிலைக்குக் கொண்டு செல்வது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. ஆனால் இந்த நிலை தற்காலிகமானது; அது ஒரு தவறான அனுபவம். இது மாயையின் அனுபவத்தை மட்டுமே தருகிறது - அது மாயையை உயர்வாகக் காட்டுகிறது - மேலும் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் மீது மற்றுமொரு திரையாகச் செயல்படுகிறது, அதிலிருந்து ஒருவரை வெகுதூரம் அழைத்துச் செல்கிறது.

'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை மீண்டும் மீண்டும் படியுங்கள், அது உங்கள் நரம்புகளில் இசையாகத் தவழ்வது வரை படியுங்கள்! நீங்கள் போதுமான வார்த்தைகளுக்கு செவிமடுத்துவிட்டீர்கள்; இப்போது உங்கள் இதயம் என்ன விரும்புகிறது என்பதைச் சொல்லுங்கள்.

உங்களுக்கு இன்றியமையா தேவை என்பது அசைக்கமுடியாத நம்பிக்கை. நம்பிக்கையில் மூன்று வகை உள்ளன: 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தைப் படிப்பது உங்களுக்கு அறிவார்ந்த நம்பிக்கையை நல்கும்; இது முதல் வகை. ஆனால் கடவுள் உளதாயிருக்கிறார், நீங்கள் அவரை பார்க்க வேண்டும். எங்கும் எதிலும் அவரைப் பார்ப்பது பார்வையின் மூலம் நம்பிக்கையைத் தருகிறது. நீங்கள் அவரை எல்லாவற்றிலும், எல்லா இடங்களிலும், எல்லையற்ற பிரகாசத்தின் பெருங்கடலாகக் காண்கிறீர்கள். நீங்கள் எல்லோரிடமும் எல்லாவற்றிலும் கடவுளைக் காண்கிறீர்கள். இது உண்மையான ஏக்கத்தின் ஆரம்பம் - அன்பான கடவுளுடன் ஒன்றிணைய வேண்டும். இந்த அனுபவத்தை நீங்கள் அடையப் பெற்றதும், வேறு எந்தக் கவலைகளும் இராது, எதுவும் உங்களைத் தொந்தரவு செய்யாது.

கடவுளோடு ஐக்கியமாக வேண்டும் என்ற ஏக்கத்தின் நிறைவு, மூன்றாவது மற்றும் மிக உயர்ந்த நம்பிக்கையின் வகையைச் சார்ந்தது. இது மட்டுமே உண்மையான அனுபவம். இது மிக மிகக் கடினமானது மற்றும் ஒரு சிலரே இந்த அனுபவத்தை அடையப் பெறுகிறார்கள். இது மிகவும் கடினமானது என்றாலும், மிகவும் எளிதானதும் கூட; எனது காலடியில் உங்களைத் தூள் தூளாக்கி, உங்களுடைய அனைத்தையும் என்னிடம் ஒப்படைத்தால் இது மிகவும் எளிதானது. இந்த 'அனைத்தும்' என்பது உங்கள் ஆசைகள் - நல்லது, தீயது மற்றும் உயர்ந்தது, தாழ்ந்தது. அனைத்தையும் என்னிடம் ஒப்படைத்து, நான் கூறியபடியே செய்யுங்கள். நான் கூறியது போல் உறுதியான தீர்மானத்துடன் செய்வதானால், கடவுள் உளதாயிருக்கிறார் எனும் போது, அவரைக் காண வேண்டும். ஒரு நாள் என்னை எனது உண்மை ரூபத்தில் காண நான் உங்களுக்கு உதவுவேன்.

இந்த போதைப் பொருட்களை (எல்.எஸ்.டி, மரிஜுவானா - MARIJUANA மற்றும் பிற வகைகள்) உட்கொள்பவர்களிடம், அது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் தீங்கு விளைவிக்கும் என்றும், இந்த

**போதை மருந்துகளைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் கூறுங்கள். நீங்கள் கூறுவதை அவர்கள் ஏற்றுக்கொண்டாலும், இல்லாவிடிலும், அவர்கள் உங்களைக் கேலி செய்தாலும் அல்லது அவமானப்படுத்தினாலும், தைரியமாகவும், துணிச்சலுடனும் இவற்றை எதிர்கொள்ள வேண்டியது உங்கள் கடமை. முடிவுகளை என்னிடம் விட்டு விடுங்கள்; எனது பணியில் உங்களுக்கு உதவுவேன்.**

ராபர்ட்டிடம் பாபா கேட்டார், “**நீங்கள் இந்தியா வருவதற்கு முன்னர் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?**”

ராபர்ட் ஒரு மனநல மருத்துவமனையில் பணிபுரிந்ததாகக் கூறினார். பாபா சிரித்துக்கொண்டே தொடர்ந்தார்:

**மிகவும் நல்லது. நீங்கள் மீண்டும் அமெரிக்காவிற்குச் செல்லும்போது, மறுபடியும் அந்த மருத்துவமனையில், அதே தனிப்பிரிவுக்குச் செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன், உங்கள் மூலமாக நோயாளிகளுடன் நான் பணிபுரிவேன். நீங்கள் மருத்துவமனைக்குத் திரும்பிச் சென்று, நோயாளிகளுக்கு சேவை செய்யவும், அவர்களுக்கு என் அன்பை வழங்கவேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்; என் அன்பை அவர்களிடம் கொண்டு செல்ல நான் உங்களுக்கு உதவுவேன். நான் உங்கள் மூலம் அவர்களுடன் பணிபுரிவேன். நல்லதோ தீயதோ, எல்லா சூழ்நிலைகளையும் எனது பாதங்களில் அர்ப்பணிக்க வேண்டியது உங்கள் நினைவில் இருக்கட்டும்.**

**போதைப்பொருள் வலையில் சிக்கித் தவிப்பவர்களுக்கு நீங்கள் எனது செய்தியைக் கொண்டுச்செல்ல வேண்டும், அவர்கள் அவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும், போதைப்பொருள் நன்மையை விட அதிக தீமையையே விளைவிக்கும். அவர்களுக்கு என் அன்பை வழங்குகிறேன்.**

**நீங்கள் இங்கு வந்ததில் மகிழ்ச்சி. நானே தான் உங்களை என்னை நோக்கி ஈர்த்தேன். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர். இப்போது நான் உங்களுக்கு எனது நேரத்தையும், அன்பையும் வழங்கியுள்ளேன், நீங்கள் என் அன்பிற்குத் தகுதியானவராக இருப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன். நான் கூறுவதைச் செய்வதில் உறுதியாக இருங்கள். நான் கூறும் அனைத்தையும் 100 சதவிகிதம் நீங்கள் கடைப்பிடித்தால், ஒருவேளை நீங்கள் ஒரு நாள் உங்கள் தொடர்பில் வரும் முழுக் குழுவையும் என்னிடம் கொண்டு வரும் கருவியாக இருப்பீர்கள். யோகிகளையும் துறவிகளையும் தரிசிக்க வேண்டாம், சமாதிகளுக்கும் புனித ஸ்தலங்களுக்கும் செல்ல வேண்டாம், ஏனெனில் இதற்கெல்லாம் இனிமேல் எந்தத் தேவையுமில்லை. நான் கடவுள்; எனது வார்த்தை உண்மையின் மொத்த வடிவம்.**

மதியம் ராபர்ட்டை மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்று, பாபாவின் எதிர்கால சமாதியைக் காட்டுமாறு பாதிரிக்கு அறிவுறுத்தினார். அரை மணி நேரம் பாபாவுடன் இருந்ததைத் தொடர்ந்து நேர்காணல் முடிவுக்கு வந்தது.

பின்னர் எரச், ராபர்ட் இருவரும் வெளியே ஒன்றாக அமர்ந்து, நடந்ததை நாட்குறிப்பில் பதிவுசெய்தனர்.

பாபா சிரித்துக் கொண்டிருக்கும் புகைப்படம் ஒன்றை ராபர்ட் முதன்முதலில் பார்த்தபோது, அவர் நினைத்தார்: “பாபா, டென்னசி மாகாணத்தின் எர்னி ஃபோர்டு (TENNESSEE ERNIE FORD, ஒரு அமெரிக்க பாடகர்) மற்றும் குட்ஜீஃப் (GURDGIEFF - ஓர் ஆன்மீக ஆசிரியர்) இருவருக்கும் இடையேயான ஒரு கலவை போலத் தெரிகிறார்” என அவர் எரச்சிடம் குறிப்பிட்டார்; எரச் அதை பாபாவிடம் கூறியபோது, பாபாவும் இந்த ஒப்புமையை ரசித்தார்.

அன்று மதியம், மணி அவர்களிடம் வந்து, “நீங்கள் இங்கு வருவதற்காகத் தேர்ந்தெடுத்த பாதையை பாபா பார்க்க விரும்புகிறார்” என்று கூறி, ராபர்ட்டிடம் அதை ஒரு வரைபடத்தில் கோடிட்டு காட்டுமாறு கூறினார். மணி அதை பாபாவிடம் எடுத்துச் சென்று, திரும்பக் கொண்டு வந்து, “**பாபா உங்களுடன் முழுப் பாதையிலும் இருந்ததாகவும், அது உங்களை அவரிடம் ஈர்த்து வந்ததாகவும் சொல்லச் சொல்கிறார்**” என்று கூறிச் சென்றார்.

சிறிது நேரத்தில் மீண்டும் மணி ஒரு கைக்குட்டையுடன் திரும்பி வந்தார். பாபா, அவரது முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைக்கப் பயன்படுத்தியதால் அது இன்னமும் சற்று ஈரமாக இருந்தது. மணி, ராபர்ட்டிடம் “பாபா, நீங்கள் இதை வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்” என்றார்.

ஃபிரான்சிஸ் இவ்வாறு அவதானித்தார், “பாபாவுடனான ராபர்ட்டின் சொற்பகால சகவாசம் ‘ஆமை மற்றும் முயல்’ குறித்த ஈஸாப்பின் (AESOP) கதையை நினைவூட்டுகிறது: தனி விமானம் மூலம் சகவாசத்திற்காக வரத் திட்டமிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் அவர்கள் பயணத்தைத் தொடங்கும் முன்னரே தடுத்து நிறுத்தப்பட்டனர்; இந்த அதிர்ஷ்டசாலி ‘ஆமை’, பயணம் ரத்து செய்யப்பட்டதை அறியாத போதிலும் தனது இலக்கை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார்.

ஃபிரான்சிஸ் அதன் பின்பு ராபர்ட்டிடம் குறிப்பிட்டார், “நீங்களே 1965ஆம் ஆண்டின் உண்மையான சகவாசி!”

மெஹராபாத்தில் அமைந்த பாபாவின் எதிர்கால சமாதிக்கு மரியாதை செலுத்திய பிறகு, ராபர்ட் மாலையில் மெஹராஸாத் திரும்பிச் சென்று, நீலப்பேருந்தில் மற்றுமோர் இரவைக் கழித்தார். அவர் மீண்டும் பாபாவை பார்க்கவில்லை. அவர் புறப்படுவதற்கு முன்பு, பாபா, அவரது சொந்த ஆடைகளில் சிலவற்றை ராபர்ட்டிற்கு அனுப்பி வைத்தார்: பாபா மேற்கத்திய நாடுகளுக்கு மேற்கொண்ட பயணத்தின்போது அணிந்திருந்த ஒரு கம்பளி, ஒரு மேல்சட்டை, ஒரு ஜோடி கால் அணி உறை மற்றும் ஓர் உள்ளாடை. ‘**ராபர்ட் ஒரு முறையேனும் அவற்றை அணிய வேண்டும்**’ என்று பாபா கூறினார்.

பாபாவின் அறிவுறுத்தலைப் பின்பற்றி, ராபர்ட் மறுநாள் அதிகாலை பூனாவிற்குப் புறப்பட்டார். பூனாவில் ராமகிருஷ்ணனுடன் ஐந்து நாட்கள் தங்கி, பின்னர் அவர் மும்பைக்குச் சென்று, இரண்டு வாரங்கள் நரிமன் -

அர்னவாஸுடன் தங்கி, பின்பு ஜெனோவா நகருக்குக் கப்பலில் பயணம் செய்து, அங்கிருந்து பாஸ்டன் சென்றடைந்தார்.

பாபாவின் சகவாசத்தில் இருந்த நேரத்தைப் பற்றி, ராபர்ட் ட்ரே:ஃபஸ் பின்னர் எழுதினார்:

பாபாவுடன் இருப்பது போன்ற, வார்த்தைகளால் விவரிக்க முடியாத அனுபவத்திற்கு, வாய்மொழி வடிவம் கொடுப்பது என்பது எனக்கு எப்பொழுதுமே கடினமாக இருக்கிறது, ஆனால்... அவரிடமிருந்து வெளிப்பட்ட முழு அமைதியின் ஒளி, நிச்சயமாக புதிய ஏற்பாட்டில் 'அனைத்து புரிதலுக்கும் அப்பாற்பட்ட அமைதி' என்று கூறலாம். இது அவருடன் இருக்கும்போது நான் புரிந்துகொண்ட ஒன்றல்ல, மாறாக இதை என் உள்ளத்தின் மையத்தில் உணர்ந்தேன். அங்கு வேடிக்கையான விளையாட்டுகள், பாசாங்குத்தனங்கள் அல்லது முகத்திரைகளுக்கு இடமில்லை; அது நான் என்னவாக இருக்கிறேன் மற்றும் இல்லை என்பதற்காக, வெறுமனே என் உள்ளார்ந்த ஏக இறைவன் எனும் பரமாத்மாவுடன் தனியாக இருப்பது, முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாபாவிடமிருந்து அன்பெனும் அலை ஒன்று எங்கும் வியாபித்திருந்தது; அது அந்தக் காலத்திற்கும், இடத்திற்கும் மட்டுப்படுத்தப்படாத, 'ஆற்றலும் கருத்து வளமும் மிக்க, உரமும் ஊக்கமும் வாய்ந்த' சக்தி என்று மட்டுமே அழைக்க முடியும்; ஆனால் இப்போதும் அது என்னுடன் உள்ளது, காலப்போக்கில் இன்னும் தெளிவாகிறது. இந்த அசாதாரண ஆற்றல்மிக்க அன்பு, சூரியனிடமிருந்து ஒளியை அடையப் பெறுவது போல, பாபாவிடமிருந்து சிரமமின்றி வெளிப்பட்டது. அவரே, அவர் யார் என்று கூறுவதைத் தவிர வேறு எவராகவும் இருக்க முடியாது!

புது டில்லியிலிருந்து கொச்சியை நோக்கி வணிகப் பயணம் மேற்கொண்ட விமானத்திலிருந்து வெளியே வந்து, டான் ஸ்டீவன்ஸ் 1965 நவம்பர் 27ஆம் நாள் காலை மீண்டும் ஒரு நாளுக்காக மெஹர்வான் ஜெஸவாலாவுடன் மெஹர்ஜியின் காரில் மெஹராஸாத்திற்கு வந்தார். ஸ்டீவன்ஸின் தாயார் சமீபத்தில் காலமானார். பாபாவிற்கு எழுதிய கடிதத்தில் டான் அதைக் குறிப்பிட்டிருந்தாலும், அவர் வந்ததும் பாபா, கண்களில் நெருப்புடன் அவரை வரவேற்றார். **"டான், உங்கள் தாயாரின் மரணம் குறித்து எனக்கு ஏன் குறிப்பாக தொலைத்தந்தி அனுப்பவில்லை?"**

டான் ஸ்டீவன்ஸ் பின்னர் இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தார்:

பாபா உண்மையில் கொதித்துக் கொண்டிருந்தார். அவதார புருஷர் அவரது சீற்றத்தை வெளிப்படுத்தும் போது, நீங்கள் அவர் அருகில் இருந்ததில்லை என்றால், நீங்கள் ஓர் அனுபவத்தைத் தவறவிட்டீர்கள் என்று அர்த்தம். ஒரு நிமிடம் மட்டும் தடுமாறும் அளவுக்கு அதிர்ந்து போனேன். கடைசியாக நான் சரியானதாக உணர்ந்ததைச் சொல்ல நினைத்தேன்: "பாபா, நான் உங்களுக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பவில்லை, ஏனெனில் நீங்கள் உண்மையில் கடவுள் என்றும், உங்களுக்கு எல்லாம் தெரியும் என்றும் இப்போது

எனக்குத் தெரியும்." கண்களிலிருந்து தீப்பொறி பறந்து, அவர் பிரகாசத்துடன் சிரித்தார். நான் சரியான சாவியை இயக்கியதாக நினைத்தேன்.

டான் ஆசுவாசமாக உணர்ந்தபோது, பாபா அவரைத் தழுவினார். அவர் மண்டலி மண்டபத்தின் மறுபக்கத்தில் அமர்ந்து அன்றைய நிகழ்ச்சிகளுக்காகக் காத்திருந்தார், ஆனால் திடீரென பாபாவின் முகத்தில் மீண்டும் இருள் நிறைந்தது. எரச் மூலமாக பாபா அவரிடம் கூறினார், "**அப்படியிருந்தும், டான், பாபா உங்களுக்கு ஒன்றை விளக்க விரும்புகிறார். பாபா கடவுள், அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். ஆனால் கடவுள் படைப்பின் அனைத்து வரம்புகளுடன் பூமியில் வந்துள்ளார்; நீங்களும் அதே படைப்பில் இருக்கிறீர்கள், அதற்கேற்ப வரையறுக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையில் கிட்டத்தட்ட முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் ஒன்று நிகழும் போது, பாபாவிற்குத் தெரியப்படுத்துவது உங்கள் பொறுப்பு. மிகவும் பொருத்தமான, நேரடியான, பௌதீக வழிமுறைகளால் என்ன நடந்தது என்பதில் நீங்கள் பாபாவின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.**"

அதன்படி, டான் ஸ்டீவன்ஸ் கடிதங்கள் எழுதத் தொடங்கினார், மேலும் பாபாவிற்கு அவரது தனிப்பட்ட மற்றும் வணிக விவகாரங்கள் குறித்து அடிக்கடி தொலைத்தந்தி அனுப்புவதை வழக்கமாகக் கொண்டார். (அதைத் தொடர்ந்து, பாபா அவரது பௌதீக உடலைத் துறந்த பிறகு, ஸ்டீவன்ஸ் தனது வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளை அவருக்குத் தெரிவிப்பது குறித்த பாபாவின் அறிவுறுத்தல்களை நினைவு கூர்ந்தார். முதலில் ஸ்டீவன்ஸ் பாபாவிடம் தனது அறிக்கையை அமைதியாக 'சமர்ப்பித்தார்', ஆனால் அவரது உள்ளுணர்வு அது போதுமானதாக அல்ல என்று அவரைத் தூண்டிக் கொண்டிருந்தது. இந்த விஷயத்தில் பாபாவின் விருப்பத்தை நிறைவேற்றும் விதத்தில், தனது விருப்பத்திற்கு மாறாக, ஒரு நாள் படுக்கையறையின் கதவை மூடிவிட்டு, பாபா, பௌதீக உடலில் அங்கு இருப்பதாக பாவித்து, டான் உரத்த குரலில் அறிக்கையை எடுத்துரைத்தார். அதற்குப் பிறகு, நிகழ்வுகள் அனைத்தும் ஒரே நேரத்தில், விமானம் விரைந்து பறந்து சென்றது போல நடந்ததாக அவர் விவரித்தார். இவ்வாறு அவர் 'பாபாவிடம் அறிக்கையை சமர்ப்பிக்கும்' முறையைத் தொடர்ந்தார்.)

டான் ஸ்டீவன்ஸ் சொற்பொழிவுகளைத் திருத்தும் பணியில் முழு முனைப்புடன் ஈடுபட்டிருந்தபோது, பணியின் நடுவே இந்த உணர்வு உதயமானது: "அட கடவுளே! தியானம் குறித்த பல சொற்பொழிவுகள் இங்கே உள்ளன, நான் பாபாவின் கட்டைவிரலின் கீழ் இருந்த எந்த ஒரு தருணத்திலும் அவர் எனக்கு தியானம் (MEDITATION) அல்லது ஒருமித்த கவனம் (CONCENTRATION) குறித்து ஒருபோதும் அறிவுறுத்தியதில்லை."

உண்மையில், பாபா அவருடன் நெருக்கமானவர்களுக்கு மிகவும் எளிமையான மற்றும் சுருக்கமான தியான வழிமுறைகளை வழங்கிய ஓரிரு சந்தர்ப்பங்களை மட்டுமே ஸ்டீவன்ஸால் நினைவுகூர முடிந்தது. ஆகவே, தியானத்தைப் பற்றிய சொற்பொழிவுகளில் பாபா அதிக நேரத்தைச்

செலவிட்டிருக்க வேண்டும், ஆனால் மிகவும் அரிதாகவே தியானத்தில் ஈடுபடச் செய்தது அல்லது திறம்பட நடைமுறையில் பயன்படுத்தியது அவருக்கு விசித்திரமாகத் தெரிந்தது.

பாபாவை சந்தித்த அடுத்த தருணத்தில், தன்னைப் போன்றவர்களுக்கு ஏன் பாபா, தியான முறைகளில் ஈடுபட அறிவுறுத்தல்களை வழங்கவில்லை என்று கேட்டார்.

பாபா சிரித்துக்கொண்டே விளக்கினார்.

**அவதார புருஷராகிய நான், பௌதீக உடலைத் துறந்த பின்பு, மீண்டும் வரும் வரை 700 முதல் 1400 ஆண்டுகளுக்கு அனைத்தையும் வழங்க வேண்டும். எனது இறை வெளிப்பாட்டின் போதும், நான் எனது பௌதீக உடலைக் கைவிட்ட பின்னரும், உள் வளர்ச்சிக்கான அனைத்து சாலைகளின் நெடுஞ்சாலை 'அன்பு' என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

**அந்தச் சாலை இப்போது அவதார புருஷரின் எஞ்சிய காலத்திலும், அதற்குப் பிறகு சில காலத்திற்கும், இறை நாட்டம் மிக்கவர்களுக்காக முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளது, அதை முற்றிலும் பயன்படுத்த வேண்டும். இருப்பினும், இறுதியில், நுழைவுப் பாதை படிப்படியாக குறுகிவிடும்; பின்னர் அந்தக் காலகட்டத்தின் முடிவில் பாதை, மிகவும் அரிதான ஒரு சிலருக்காக மட்டுமே திறந்திருக்கும். நான் மீண்டும் வரும் வரை, பலநூறு ஆண்டுகளுக்காக என் அன்பர்களுக்கு நான் வழங்க வேண்டியிருப்பதால், அந்தக் காலக்கட்டத்தில் அவர்கள் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இப்போதே செய்ய வேண்டியது இன்றியமையாதது. இதற்காக, அவர்கள் இரண்டாம் வழியைப் பயன்படுத்துவது என்பது அவசியமாகிறது. இவற்றில் மிகச் சிறந்த ஒன்று தியானம், அதனால்தான் தியானம் பற்றிய இந்த விரிவான சொற்பொழிவுகளை நான் வழங்கியுள்ளேன்.**

**இருப்பினும், என்னைத் தவறாக நினைக்காதீர்கள், ஏனெனில் இதற்கிடையில் - எனது வாழ்நாளிலும் அதைத் தொடரும் சில காலத்திற்கு - தியானத்தில் ஈடுபடுவது என்பது ஒரு நபரின் நேரத்தையும் ஆற்றலையும் திசை திருப்பிவிடும்; அவருக்கென முழுமையாகத் திறந்திருக்கும் இந்த அன்பின் பாதையில் பயணிப்பதில் அவர் தனது முழு சக்தியையும் ஆற்றல்களையும் பயன்படுத்த வேண்டும்.**

உரையாடலின் போது, பாபா திடீரென சைகைகளால் எடுத்துரைத்ததை நிறுத்தி, எரிச்சலுடன் எரச்சைக் கூர்ந்து பார்த்தார். அவர் சைகைகளைத் தொடர்ந்து, மறுபடியும் நிறுத்தி, எரச்சை மிகுந்த கவலையுடன் பார்த்து, வெளியே செல்லுமாறு சைகையால் தெரிவித்தார். பாபா அவருடன் தொடர்ந்து உரையாடியதால், பாபாவின் கவனத்தை திசைதிருப்பியது என்னவென்று ஸ்டீவன்ஸுக்குத் தெரியவில்லை.

எரச் திரும்பி வந்து, பாபாவின் காதில் ஏதோ கிசுகிசுத்ததும், பாபா சற்று விரக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் இரு உள்ளங்கைகளையும் உயர்த்தி, **"இப்போது என்ன செய்வது?"** என்று சைகையால் வினவினார்.

ஏறக்குறைய தனது இருபதுகளில் இருந்த அமெரிக்க இளைஞர் ஒருவர் பாபாவைப் பார்க்க விரும்பி, மெஹராஸாத்திற்கு வந்ததாக எரச் விளக்கினார். அவர் பெயர் ஸ்டீவன் ஆர். ஸைமன் (STEVEN R. SIMON). மியாமி (MIAMI) நகரில் எட்வர்ட் ஷார்ட் (EDWARD SHORT, கிழக்கு-மேற்கு சகவாசத்தில் பாபாவை சந்தித்தவர்) என்றழைக்கப்பட்ட முன்னாள் காவல்துறை அதிகாரியிடமிருந்து ஸ்டீவ் அசாதாரணமான முறையில் பாபாவைப் பற்றி அறிந்து கொண்டார். ஸைமன் எல்.எஸ்.டி போதை மருந்தை வழக்கமாக உட்கொண்டு வந்த வேளையில், அதன் ஆதிக்கத்தின் கீழ் அவர் ஒரு காட்சியைக் காண நேர்ந்தது: ஒளிரும் வெளிச்சத்தின் மாயத் தோற்றத்தில், நீண்ட முடியும் மீசையுடனும் அவர் இதுவரை பார்த்திராத ஒரு மனிதனின் உருவத்தைப் பார்க்க நேர்ந்தது. அடுத்த நாள், எட்வர்ட் ஷார்ட்டை முதன்முறையாக சந்தித்த போது, அவர் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் படிக்கக் கொடுத்தார். ஸைமன் புத்தகத்தைத் திறந்து, முகப்பிலிருந்த புகைப்படத்தைப் பார்த்தபோது, எல்.எஸ்.டி. போதை மருந்தின் தாக்கத்தில் இருந்தபோது தான் பார்த்த அதே நபராக மெஹர் பாபாவை அடையாளம் கண்டுகொண்டார். அந்த அனுபவத்திற்குப் பின்னர் அவர் போதைப்பொருளைக் கைவிட முடிவு செய்தார்.

ராபர்ட் ட்ரே:பஸ்ஸைப் போலவே, ஸ்டீவ் ஸைமனும் டிசம்பர் 1965 சகவாச நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதை அறிந்து கொள்வதற்கு முன்னரே, அமெரிக்காவை விட்டு வெளியேறினார். பயணத்திற்கு அவரிடம் போதிய பணம் இல்லாதபோதும் மியாமி நகரிலிருந்து (அவரது வார்த்தைகளில், 'பேய்களால் துரத்தப்பட்டு') அமெரிக்க தேசத்தில் 3,000 மைல் கடந்து ஸான் பிரான்சிஸ்கோ நகரைச் சென்றடைந்தார். அங்கு அவர் ஒரு விலைமாதுவை சந்தித்து, அவருடன் ஏற்பட்ட நட்பின் மூலமாக சிறிது பணத்தைப் பெற்றுக்கொண்டார். ஸைமன், வியட்நாம் போர்க்காலத்தில் அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியதால் ஸான் பிரான்சிஸ்கோ நகரிலிருந்து தைவானுக்குச் (TAIWAN) சென்ற இராணுவ சரக்கு விமானத்தில் இலவசப் பயணம் செய்ய முடிந்தது. அக்டோபர் மாதத்தில் அவர் சிங்கப்பூர் சென்றடைந்த வேளையில், ஸைமன் நடைமுறையில் உடைந்து போனார், அவர் மிக் ஹாமில்டன் & அர்ஸுலா ரயின்ஹார்ட் (MIK HAMILTON & URSULA REINHART) என்ற இளம் தம்பதியரை சந்தித்தபோது, பாபாவைப் பற்றி அவர்களிடம் கூறினார். ஸைமன் இந்தியாவிற்குச் செல்வதில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்ததைக் கண்டு, ஹாமில்டன் தம்பதியர் கப்பல் வழி மும்பைக்குச் செல்லத் தேவையான பணத்தைக் கொடுக்க முன்வந்ததன் மூலம் அவரை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினர்; அங்கிருந்து அவர் எப்படியோ அஹமதுநகருக்குப் பயணத்தை மேற்கொள்ள முடிந்தது.

ஸ்டீவ் ஸைமன், ஆதியின் அலுவலகத்தை வந்தடைந்ததும், ஆதி அவர் மீது பரிதாபப்பட்டு, மானேக்கின் இரு சக்கர வாகனத்தில் அவரை

மெஹராஸாத்திற்கு அனுப்ப முடிவு செய்தார். ஆதியின் இந்த முடிவு பாபாவை சீற்றமுறச் செய்தது: "**நான் ஆழ்ந்த ஏகாந்தவாசம் கடைப்பிடிக்கிறேன் என்று ஆதிக்குத் தெரியும். எவரும் என்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று நான் கண்டிப்பான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன் - இருந்தும் அவர் இந்த சிறுவனை என்னிடம் அனுப்புகிறார்! இப்போது நான் செய்யமுடிவதெல்லாம், அவர் உலகின் அரைக்கோளத்தைக் கடந்து தனது நாட்டிற்குத் திரும்பிச் செல்லவேண்டியதுதான்.**"

ஸ்டீவ் ஸைமனைப் பார்க்கக் கூடாது என்ற தனது முடிவை எரச்சிடம் பாபா விளக்கிக் கொண்டிருந்த வேளையில், டான் ஸ்டீவன்ஸ், கூர்மையான குத்துவாள் ஒன்று தனது இதயத்தைத் துளைத்தது போல் உணர்ந்தார். அந்த இளைஞரின் ஏமாற்றத்தில் ஆழ்ந்த, தனிப்பட்ட வேதனையைத் தவிர, அவர் மீது இரக்கம் காட்டாததற்காகவும், இவ்வளவு தூரம் பயணம் செய்து, கடுமையான இடர்பாடுகளைக் கடந்து வந்தும், அவரைப் பார்க்க இணங்காததற்காகவும் டான், பாபா மீது ஆழ்ந்த எரிச்சலை உணர்ந்தார்.

உடனே, பாபா, டானின் கண்களை உற்று நோக்கி, கைகளைத் தட்டி, "**என்ன யோசனை?**" என்று கேட்டார்.

டான், 'அந்த சிறுவனைப் பார்த்து இரக்கப்படாமல் மிகவும் மோசமாக நடந்து கொள்கிறார்' என்று நினைத்துக் கொண்டிருந்தாலும், அவர், "பாபா, உங்கள் காலடியில் அமர எனக்கு என்ன உரிமை இருக்கிறது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று பதிலளித்தார்.

பாபா ஒளிமயமான முகத்துடன், ஸ்டீவ் ஸைமனை மண்டபத்திற்கு அழைத்து வருமாறு எரச்சிடம் சைகையால் தெரிவித்தார். அவர் உள்ளே நுழைந்த அந்த கணத்தில், ஸைமன் அவருடைய வார்த்தைகளில், 'மார்ஷ்மெல்லோவைப் (MARSHMALLOWS - பஞ்சு போன்ற இனிப்பு தின்பண்டம்) போல் இனிமையான மற்றும் மென்மையான ஒரு சூழ்நிலையை' அனுபவித்தார். பாபாவின் முன் அமர்ந்திருந்த ஸைமன், மதிமயங்கிய நிலையில் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தார்.

கடந்த காலங்களில் ஸைமன் தொடர்ந்து போதைப்பொருள் உட்கொண்டதை அவர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். "**நீங்கள் அதை எப்போதேனும் நிறுத்த முயற்சித்தீர்களா?**" என்று பாபா கேட்டார்.

"பல முறை, ஆனால் ஒவ்வொரு முறையும் நான் மீண்டும் தொடங்கினேன்" என்று அவர் பதிலளித்தார்.

பாபா அவரையும் அவரது பின்னணியைப் பற்றியும் மேலும் கேட்டார், பின்னர் எரச் போதைப்பொருள் பற்றி ராபர்ட் ட்ரே:பஸ்ஸிடம் கூறப்பட்டதைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். இறுதியில், பாபா கூறினார், "**இப்போது நீங்கள் போதைப்பொருள் உட்கொள்வதை நிறுத்த உங்களால் முடிந்த அனைத்தையும் செய்வீர்கள் என்று உறுதியளிக்கவும். உங்களால் அதன் மோகத்தைத் தவிர்க்க முடியாத பட்சத்தில், என்னை நினைவுகூருங்கள், நான் உங்களுக்கு உதவுவேன்.**" ஸைமன் முயற்சி செய்வதாக உறுதியளித்தார்.

**“அமெரிக்கா திரும்பிச் செல்வதற்கு உங்களிடம் போதிய பணம் உள்ளதா?”**

சைமன் தன்னிடம் மிகக் குறைவாகவே இருப்பதாகக் கூறினார், மேலும் பாபா, மெஹர்ஜியிடம் மும்பையில், அவர் அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்லும் கப்பலைக் கண்டுபிடிக்கும் வரை, எளிய ஹோட்டல் ஒன்றில் அறை மற்றும் உணவுக்கான செலவுகளைச் சமாளிக்க ரூ.100 வழங்குமாறு அறிவுறுத்தினார்.

டான் ஸ்டீவன்ஸிடம் பாபா கூறினார், **“நீங்கள் இருவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள், எனவே நீங்கள் ஸ்டீவுடன் தொடர்பில் இருந்து, அவருக்கு உதவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.”** ஸ்டீவ், டான் இருவரும் மதியம் 1:30 மணிக்கு மெஹர்ஜியின் காரில் மெஹராஸாத்திலிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச் சென்ற வேளையில், அங்கு, நரிமன் மற்றும் அர்னாவாஸின் குடியிருப்பான ஆஷியானாவில் ராபர்ட் டிரே஼பஸை சந்தித்தனர்.

ஸ்டீவ் சைமன் மும்பைக்கு வந்ததும், மெஹர்ஜி கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு சில போதை மருந்துகளை வாங்கினார் என்பது பின்பு தெரியவந்தது. சைமன் போதைப்பொருளைக் கைவிட முடியவில்லை, ஆனால், அவரது வார்த்தைகளில், “பாபா அதைவிட மிகவும் மோசமான ஒன்றை என்னிடமிருந்து பறித்துச் சென்றார்; அதுதான் மக்களின் உயிரைப் பறிக்கும் என் ஆசை.” இராணுவத்திலிருந்து வெளியே வந்த பின்பு, சைமன் மியாமியில் கொலை, கொள்ளைக்கார கூட்டத்துடன் இணைந்து, பணத்திற்காக மக்களைக் கொன்றார். பாபாவை சந்தித்த பின்னர் அவர் இதை மீண்டும் செய்யவில்லை. சைமன் வழக்கத்திற்கு மாறாக குழப்பமடைந்த மனிதராக இருந்தார், மேலும் அவரது வார்த்தைகளில், “உண்மையில் தீமை மற்றும் இருண்ட பக்கம் என்னவென்று எனக்குத் தெரியும்.” சைமன் எப்பொழுதும் பாபாவைப் பற்றி இவ்வாறு கூறிவந்தார், “எனது வாழ்க்கையில் அவர் மிகவும் நல்லவராக இருந்தார்.”

ஸ்டீவ் சைமன் அமெரிக்கா திரும்பிய பின்னர், அவர் மியாமியில் இர்வின் மற்றும் எட்வர்ட் லக் (IRWIN &EDWARD LUCK) சகோதரர்களை சந்தித்தார். அவர் இன்னமும் போதைப்பொருட்களைப் பயன்படுத்துவதாக ஒப்புக்கொண்டார், அவர் மரிஜுவானாவை (MARIJUANA - HEMP) சிகரெட் வடிவில் உருவாக்கி புகைத்து வந்தார். லக் சகோதரர்கள், ஸ்டீவ் சைமனை சந்தித்ததாக பாபாவிற்குக் கடிதம் எழுதினர். அதற்கு 1965 டிசம்பர் 11 தேதியில் பதிலளித்த பாபா, **‘ஸ்டீவ் தொடர்ந்து போதைப்பொருள் பயன்படுத்தினால், இர்வின், எட்வர்ட் சகோதரர்கள் இருவரும், அவருடன் தொடர்பு கொள்ள வேண்டாம்’** என்று எச்சரித்தார்; மேலும் எரச் மூலம் கடிதம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: **“...எல்.எஸ்.டி. போன்ற போதைப் பொருட்களால் தூண்டப்பட்ட அனுபவங்கள், எந்த வகையிலும் ஆன்மீக மாயத்தோற்றங்களை விட குறைந்தது அல்ல.**

**போதைப்பொருள் மற்றும் அதன் சுருள்கள் மூலம் இறை உணர்வை அனுபவிக்க முடிந்தால், கடவுள் கடவுளாக இருக்கத் தகுதியற்றவர்!"**

பாபாவின் அறிவுறுத்தலின்படி, ராபர்ட் ட்ரேஃபஸ் அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்று, இளைஞர்கள் போதைப்பொருள் உட்கொள்வதைத் தடுக்க, பாபா வழங்கிய பணியில் ஈடுபடத் தொடங்கினார். ஒரு நாள் ஹார்வர்ட் பல்கலைகழகத்தில் அலன் கோஹெனின் முன்னாள் பேராசிரியரான மருத்துவ உளவியலாளர் டாக்டர் ரிச்சர்ட் ஆல்பர்ட்டிடமிருந்து (DR. RICHARD ALPERT) அவருக்கு நெடு தூர தொலைபேசி அழைப்பு வந்தது. டாக்டர் ஆல்பர்ட், டாக்டர் திமோதி லியரி (Dr. TIMOTHY LEARY) மற்றும் டாக்டர் ரால்ஃப் மெட்ஸ்னர் (Dr. RALPH METZNER) ஆகியோருடன், எல்.எஸ்.டி. மற்றும் பிற செயற்கை போதை மருந்துகளை பரிசோதித்து வந்தார்; மேலும் ட்ரேஃபஸ் சமீபத்தில் பாபாவை சந்தித்துவிட்டு திரும்பியதை கோஹென் மூலம் கேள்விப்பட்டார். எல்.எஸ்.டி. குறித்து பாபா என்ன கூறினார் என்று ஆல்பர்ட் அவரிடம் வினவியபோது, ட்ரேஃபஸ் அவரிடம் வார்த்தைக்கு வார்த்தை அதை விளக்கமாக எடுத்துரைத்தார்: "**போதை மருந்துகள் ஆகாது**! (NO DRUGS)"

"நீங்கள் கூறுவதில் உறுதியாக இருக்கிறீர்களா?" என ஆல்பர்ட் கேட்டதற்கு, ட்ரேஃபஸ் "ஆமாம்" என்று பதிலளித்தார். ட்ரேஃபஸ் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, ஆல்பர்ட் எல்.எஸ்.டி போதை மருந்தை உட்கொள்ளும் முனைப்பில் இருந்ததை அவரால் கண்டுகொள்ள முடிந்தது, ஆனால் பாபாவின் '**போதை மருந்துகள் ஆகாது**!' என்ற செய்தியைக் கேட்டதும் அவர் போதைப்பொருட்களை ஒதுக்கி வைத்தார்.

மெஹர் பாபா கூறியதைத் தெளிவுபடுத்தக் கோரி, டாக்டர். ரிச்சர்ட் ஆல்பர்ட், பாபாவிற்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார்:

நான் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளேன், உங்கள் ஆலோசனையை மதிக்கும் மனநிலையில் இருக்கிறேன். 1961ஆம் ஆண்டில், ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்தபோது, மெக்ஸிக்கோவில் விளையும் காளான்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ரசாயனத்தை, ஊசி மூலம் செலுத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டது; இது அவர்களின் பதிவு செய்யப்பட்ட பழங்கால வரலாற்றின் மூலம் மெக்ஸிக்கன் இந்தியர்களால் புனிதமாக கருதப்படுகிறது. எனது சக ஊழியரான திமோதி லியரிக்கும் எனக்கும் ஏற்பட்ட அந்த அனுபவம், எங்கள் வரையறுக்கப்பட்ட உண்மையில், ஒரே உண்மை என்ற மாயையின் திரையைத் துளைத்து, மனிதனின் உண்மையான அடையாளத்தின் சாத்தியத்தை, அது எவ்வளவுதான் சுருக்கமாக இருந்தாலும், நமக்குக் காட்டுகிறது. சக மனிதனுக்கு உதவுவதில் ஆர்வமுள்ள சமூக விஞ்ஞானிகளாக இருந்ததால், இதுபோன்ற போதைப்பொருள் இரசாயனங்களில் (எல்.எஸ்.டி உட்பட) முறையான ஆய்வுகளை மேற்கொண்டோம்.

எங்கள் பணி மிகவும் சர்ச்சைக்குரியதாக இருந்தது, ஆனால் அது முக்கியமானதாக உணரப்பட்டது. யதார்த்தத்தின் கலாச்சார விளக்கத்தில்

கிட்டத்தட்ட முழுவதுமாக மூழ்கியிருக்கும் மேற்கத்திய மனிதனுக்கு, இந்த இரசாயன போதைப்பொருட்கள், புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தப்பட்டால், உண்மைப்பொருளின் சூரிய ஒளியை ஒரு கணம் பிரகாசிக்க அனுமதிக்கும் கதவைத் திறப்பதற்கான ஒரு திறவுகோலை அவை வழங்குவதாகத் தோன்றியது. இவர்களில் பலருக்கு, முன்பு, வெறுப்பு மனப்பான்மை இருந்தபோது ஏற்பட்ட அனுபவம், இப்போது, நம்பிக்கையை அளித்தது; நாத்திக அறிவுஜீவித்தனத்தில் தொலைந்து போவதை விட, தங்கள் ஆன்மீகப் பணியைத் தீவிரமாகக் கருத்தில் கொள்ள இது மக்களுக்கு உதவியாக அமைந்தது.

ஆரம்பத்தில், இரசாயன போதைப்பொருள் அனைத்தும் - உண்மையாக என்றென்றும் கடவுளிடம் ஒருவரைக் கொண்டுச் செல்லும் என்பது போலத் தோன்றியது. எவ்வாறாயினும் காலப்போக்கில், இரசாயன போதைப்பொருட்கள் அதற்கான ஒரு சாத்தியத்தை அனுபவபூர்வமாகக் காட்டியுள்ளன என்பதை நாங்கள் உணர்ந்தோம்; ஆனால் முன்னர் அது சாத்தியமல்ல அல்லது அறிவு சார்ந்ததாக மட்டுமே இருந்ததாகத் தோன்றியது.

அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான மக்கள் இரசாயன போதைப்பொருட்கள் மூலம் பல்வேறு அனுபவங்களை அடையப் பெற்றுள்ளனர், இது அவர்களின் ஆன்மீகப் பயணத்தை மிகுந்த தீவிரத்துடன் மேற்கொள்ள வழிவகுத்தது. அவர்களில் பலருக்கு (நான் உட்பட), உங்கள் புத்தகங்களும் செய்திகளும் மிகவும் அர்த்தமுள்ளதாகத் தெரிந்தது, சரியானதாக உணர முடிந்தது, எங்கள் சொந்த ஆழ்ந்த அனுபவத்தை உறுதிப்படுத்தியது. மனிதன் தனது உணர்வு நிலையில், ஆன்மீக ரீதியில் திவாலாகிவிட்டான் என்று தோன்றியது; அந்த உணர்வு நிலையை அடையாமல் இருப்பதை விட இரசாயன போதைப்பொருளால் அதை அனுபவிப்பது சிறந்ததாகத் தோன்றியது.

எல்.எஸ்.டி மற்றும் பிற இரசாயன போதைப்பொருட்கள் புலன்களை தீவிரப்படுத்துகின்றன என்பது உண்மைதான், சில வேளைகளில் மாயத்தோற்றங்களுக்கும் வழிவகுக்கும். எல்.எஸ்.டி போதைப்பொருளைப் பயன்படுத்திய பெரும்பாலானோர், அதைத் தவறாக பயன்படுத்தியதும் உண்மைதான். சிறையில் அடைக்கப்பட்டது போன்ற உணர்வு இல்லாமல், இது ஒரு திறவுகோலாக, ஊன்றுகோலாக, விடுதலை வழங்குவதுபோல, செயல்பட வேண்டுமானால், பொறுப்புணர்வு அதன் பயன்பாட்டுடன் கைகோர்த்துச் செல்ல வேண்டும்.

சமீபத்தில் அலன் கோஹென் (ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்ற எனது கடந்தகால மாணவர்களில் ஒருவர்) எங்களை சந்தித்தார். நீங்கள் எங்கள் இல்லத்தில் உண்மையான உணர்வுடன் வியாபித்திருந்ததால், அவரும் எங்களுடன் தனது இல்லத்தில் இருப்பது போன்ற உணர்வை அடையப்பெற முடிந்தது. ட்ரே∴பஸ் உங்களிடமிருந்து கொண்டு வந்த '**போதைப்பொருட்கள் ஆகாது**!' (NO DRUGS) என்ற செய்தி நேற்று அவரிடமிருந்து எங்களுக்கு வந்தது! நாங்கள் ட்ரே∴பஸை அழைத்துப் பேசினோம், ஆனால், சற்று அதிக அளவிலான தெளிவு தேவை என்று உணர்ந்தேன்.

நேர்மையுடன் கூடிய இயல்பான எனது சொந்த வாழ்க்கையில் எல்.எஸ்.டி. போதைப்பொருள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதையும், அமெரிக்காவில் நான் செய்து வரும் பணி மனிதாபிமான ரீதியில் நல்லது என்பதையும் என்னுள் உணர்கிறேன். நானும் உங்கள் செய்தியைக் கேள்விப்பட்டேன், ஒருவேளை உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று புரிந்துகொள்கிறேன்.

எல்.எஸ்.டி. போதைப்பொருள் முற்றிலும் வேறுபட்டது (உண்மையில், ஓபியம் போன்ற போதைப்பொருளுக்கு முற்றிலும் எதிரானது) என்பதை நீங்கள் புரிந்து கொள்ளாததன் சாத்தியத்தை முதலில் நான் நினைத்துப் பார்த்தேன். ஆனால் நீங்கள் எழுதிய வார்த்தைகளின் மூலம் பிரதிபலித்து, உங்களுடன் தொடர்புகொள்வது, எனது ஆரம்ப எதிர்வினையை ஆதரிக்கத் தவறிவிட்டது. எனவே, தற்போது, நீங்கள் புரிந்து கொண்டிருப்பதாக உணர்கிறேன். நானும் புரிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எனக்கு உதவ முடியுமா?

ரிச்சர்ட் ஆல்பர்ட் ஒரு நேர்மையான, இறை நாட்டம் மிக்க மனிதர் என்று கூறி, ஆதி சீனியர் மூலமாக அவருக்கு அனுப்பப்பட்ட இந்த விரிவான பதிலை பாபா எடுத்துரைத்தார்:

**24** ஜனவரி **1966**

அன்புள்ள திரு. ஆல்பர்ட்,

மெஹர் பாபாவிற்கு நீங்கள் அனுப்பிய கடிதமும், புத்தகமும் பெறப்பட்டு, அவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, அவர் உங்களுக்கு (லாஸ் ஆல்டோஸ், கலிஃபோர்னியா முகவரிக்கு) பின்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**“உங்கள் கடிதம் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. நீங்கள் ஏக இறைவனான உண்மைப்பொருளைத் தேடுவதில் நேர்மையானவர் என்று எனக்குத் தெரியும். உங்களுக்கும், உங்களுடன் இருப்பவர்களுக்கும் என் அன்பும் ஆசிகளும். கடிதம் தொடர்கிறது. மெஹர் பாபா.”**

**மெஹர் பாபா, அவருக்கு அனைத்தும் தெரியும் என்று உங்களுக்குச் சொல்லச் சொன்னார் - எல்.எஸ்.டி. போதை மருந்து, ஓபியம் வகைகளிலிருந்து வேறுபட்டது என்று அவருக்குத் தெரியும்; மேலும் ஆன்மீக அனுபவங்களுக்காக, மெஹர் பாபா, போதை மருந்து உட்கொள்வதை அங்கீகரிக்கவில்லை என்பதை இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டதிலிருந்து நீங்கள் கண்டுகொள்ள முடியும் என்று கூறுகிறார். நீங்கள் விரும்பினால், எல்.எஸ்.டி.யை தொடர்ந்து மூன்று முறை உட்கொண்டு, பின்னர் அதை முழுவதுமாக நிறுத்த வேண்டும்.**

**இந்த வருடம் நீங்கள் இந்தியாவிற்கு வரவேண்டாம், ஆனால் நீங்கள் அவரை மேலும் மேலும் நேசிக்க வேண்டும், அவரை முழு மனதுடன் நினைவில் கொண்டு, அவருடைய புத்தகங்களைப் படிப்பதைத் தொடர வேண்டும் என்று மெஹர் பாபா கூறுகிறார். மேலும், ஃபிரான்ஸிஸ்**

பிராபஸோனின் கைவண்ணத்தில் உருவான 'ஸ்டே வித் காட்' (STAY WITH GOD), கிழக்கு-மேற்கு சகவாசம் (EAST-WEST GATHERING) போன்ற புத்தகங்களைப் படிக்கவும்; முடிந்தால் கிழக்கு-மேற்கு சகவாசத்தின் திரைப்படத்தைப் பார்க்கவும் பரிந்துரைக்கிறார். (இந்த இரண்டு புத்தகங்கள் மற்றும் திரைப்படத்திற்கு, கார்னகி ஹவுஸ், 100 மேற்கு 57ஆவது வீதி, நியூயார்க், 10019 முகவரியில் வாழும் திரு, திருமதி ஃபிரெட் வின்டர்ஃபெல்ட் இருவரையும் தொடர்பு கொள்ளவும்.)

மெஹர் பாபா ஏகாந்தவாசம் கடைப்பிடித்தாலும், அவருடனான அனைத்து கடிதப் போக்குவரத்தும் கடுமையாகத் தடை செய்யப்பட்டிருந்தாலும், அவர் தனது அன்பில், ஆன்மீகத்திற்காக போதைப்பொருள் உட்கொள்வதால் ஏற்படும் விளைவுகளை நமக்கு விளக்கியுள்ளார், அதன் சாராம்சம் பின்வருமாறு:

எந்த ஒரு போதை மருந்தும், அதன் வாக்குறுதி எந்த அளவுக்கு மிகையாக இருந்தாலும், ஆன்மீக இலக்கை அடைய ஒருவருக்கு உதவ முடியாது. பரிபூரண குருநாதரின் அருளால் மட்டுமே அதை அடையப்பெற முடியும் என்பதைத் தவிர, இறுதி இலக்கிற்கு குறுக்குவழி என எதுவும் இல்லை; மேலும் போதைப்பொருட்கள், மற்றும் பிற வகைகளை விட எல்.எஸ்.டி, 'ஆன்மீக அனுபவங்களின்' சாயலாக, உண்மைப்பொருளின் தவறான ஒரு பார்வையை வழங்குகிறது.

உங்கள் கடிதம் மற்றும் புத்தகத்தில் நீங்கள் விவரிக்கும் அனுபவங்கள் அனைத்தும், தண்ணீரிலிருந்து வேறுபடுத்தப்பட்ட கானல்நீரைப் போல், உண்மைப்பொருளாகிய யதார்த்தத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளன. நீங்கள் எவ்வளவுதான் கானல்நீரை நோக்கி விரைந்தாலும், நீங்கள் ஒருபோதும் தண்ணீரைச் சென்றடைய மாட்டீர்கள், அதுபோல, போதைப்பொருள் மூலம் கடவுளைத் தேடுவது ஏமாற்றத்தில் முடிவடையும். ஆன்மீகப் பாதையை அறிந்தவராகவும், அந்தப் பாதையாகவும் இருக்கும் மெஹர் பாபா, முற்றிலும் பயனற்றது என்பதை நிரூபிக்க வேண்டிய ஒரு வழிமுறையைத் தொடர்ந்து பின்பற்றுவதை அங்கீகரிக்க முடியாது; ஆனால் அது உண்மைப்பொருளை நோக்கி அழைத்துச் செல்லும் பாதையிலிருந்து விலகிச் செல்கிறது.

போதை மருந்தின் இறுதி முடிவை, அதன் உடனடி ஒப்பீட்டு விளைவுகளால் பார்ப்பது, மானிடனாக இருப்பதால் பார்வை தவறானதாகவே இருக்கும் - அதன் இறுதி முடிவைக் கணக்கிடும் இயலாமை என்பது மனித அறிவுக்கு அப்பாற்பட்டது, மேலும் உண்மையான இறைப்பெருந்தகையால் மட்டுமே அந்த ஆன்மீகப் பாதையைக் காட்ட முடியும்.

உங்களைப் போன்ற ஒரு சில நேர்மையான, இறை நாட்டம் மிக்கவர்களுக்கு, எல்.எஸ்.டி. போதை மருந்து, உங்களை மெஹர் பாபாவின் தொடர்பில் கொண்டுவந்து, ஆன்மீக ஏக்கத்தைத் தூண்டுவதற்கான ஓர்

ஊடகமாகச் செயல்பட்டிருக்கலாம்; ஆனால் அந்த நோக்கம் நிறைவேறியதைத் தொடர்ந்து, போதைப்பொருளை மேலும் உட்கொள்வதானால், அது அதீத தீங்கு விளைவிப்பது மட்டுமின்றி, அதில் எந்த அர்த்தமும், நோக்கமும் இராது. இப்போது, ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளுக்கான உங்கள் ஏக்கத்தை போதைப்பொருள் உபயோகிப்பதன் மூலம் நிலைநிறுத்த முடியாது; ஆனால் பரிபூரண குருநாதர் மீதான உங்கள் உள்ளார்ந்த அன்பால் மட்டுமே முடியும், இது உங்கள் மீதான அவருடைய அன்பின் பிரதிபலிப்பாகும்.

எல்.எஸ்.டி. போதைப்பொருள் உங்களை சமூக ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் ஒரு ‘சிறந்த’ மனிதனாக உருவாக்கியுள்ளது என நீங்கள் உணரலாம். ஆனால் போதைப்பொருள் அல்லது வேறு எந்த செயற்கை முறையிலான உதவியையும் விட, ஒருவர் உள்ளார்ந்த அன்பின் மூலமாக சிறந்த மனிதராக இருப்பார். மேலும், தனிப்பட்ட அல்லது சமூக அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் பரிபூரண குருநாதரிடம் சரணடையும் ஒருவர் தலைசிறந்த மனிதர்.

போதைப்பொருள் மூலம் அடையப்படும் அனுபவங்கள், சூட்சும தளங்களின் நிழல்கள், பௌதீக உலகில் பிரதிபலிப்பதால் விளையும் அனுபவங்கள், மேலும் அவை தொடர்ச்சியானவை அல்ல என்றும் மெஹர் பாபா சுட்டிக்காட்டியுள்ளார். சூட்சும உலகில் ஒருவரால் அடையப்பெறும் அனுபவங்கள் தொடர்ச்சியானவை ஆனால் இந்த அனுபவங்கள் கூட பொய்யும் போலியுமான மாயையே, ஏனெனில் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள் அவற்றிற்கும் அப்பாற்பட்டது. எனவே எல்.எஸ்.டி. ஒருவரை தனிப்பட்ட முறையில் ஒரு சிறந்த மனிதனாக உணர வழிவகுத்தாலும், உண்மைப்பொருளின் ஒரு பார்வையை அடைந்தது போன்ற உணர்வு, ஒருவரை தவறான பாதுகாப்பு அரணுக்குள் தள்ளுவது மட்டுமல்லாமல், இறுதியில் ஒருவரின் மனதை சிதைத்து சீரழித்துவிடும். எல்.எஸ்.டி ஒருவரை அடிமைக்குள்ளாக்கும் போதைப்பொருள் அல்ல என்றாலும், அதன் பயன்பாட்டிலிருந்து எழும் அனுபவங்களுடன் ஒருவர் இணைந்திருக்கும் வேளையில், மேலும் ஆழமான அனுபவங்களின் நம்பிக்கையில், மீண்டும் மீண்டும் அதிக அளவுகளில் அதைப் பயன்படுத்த ஆசைப்படுகிறார். ஆனால் இறுதியில் இது பைத்தியக்காரத்தனம் அல்லது மரணத்தை ஏற்படுத்துகிறது.

உண்மைப்பொருளை உணர்ந்து அனுபவிப்பவருக்கு மட்டுமே, உண்மையிலிருந்து பொய்யும் போலியுமான ஒன்றைச் சுட்டிக்காட்டும் திறனும் அதிகாரமும் உள்ளது. எனவே, மெஹர் பாபா, அவரது கட்டளைகளுக்கு செவிசாய்க்க விரும்புவோருக்கு, ஒரே உண்மைப்பொருளின் அனுபவம், முடிவின்றி பிரகாசிக்கும் இறைப் பெருங்கடலாகத் தனக்குள்ளேயே கடவுளைக் காண்பதும், பின்னர் இந்த எல்லையற்ற இறைப் பெருங்கடலில் ஒன்றாகி, அளவிறுதியற்ற சக்தி, அறிவு

**மற்றும் ஆனந்தத்தை தொடர்ந்து அனுபவிப்பதும் மட்டுமே உண்மையான அனுபவம் என்று கூறுகிறார்**.

‘**கடவுள் ஒரு மாத்திரையிலா?**’ (GOD IN A PILL?) என்ற தலைப்பின் கீழ், ரிச்சர்ட் ஆல்பர்ட்டிடம் வழங்கப்பட்ட இந்த அறிக்கைகள் மற்றும் பாபா கூறிய இதர அறிக்கைகள் அனைத்தும், துண்டுப்பிரசுரம் ஒன்றில் அச்சிடப்பட்டு 1960களின் பிற்பகுதியிலும், 1970களின் தொடக்கத்திலும் அமெரிக்காவில் வேறு வேறு கல்லூரி மாணவர்களுக்கு இது பரவலாக விநியோகிக்கப்பட்டது; இது, எல்.எஸ்.டி, மரிஜுவானா போன்ற சட்டவிரோத போதைப்பொருட்களை உட்கொள்வதை நிறுத்துமாறு வலியுறுத்தியது.

1965 நவம்பர் 28அன்று, ஜெஹாங்கு, ருஸ்தம், ஸொராப், எல்சா மிஸ்திரி ஆகியோர் மெஹராஸாத்திற்கு வந்தனர். அடுத்த நாள், ரமாவின் சகோதரர் தீரஜ் மற்றும் கில்னானி குடும்பத்தினர் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர். இதற்கு சில மாதங்களுக்கு முன்பு, பிரேம் கில்னானியின் பதவி உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டது. அவரது வழக்கமான தொழில் சம்பந்தப்பட்ட வாழ்க்கையில், அவர் மாவட்ட நீதிபதியாக இருந்திருக்க வேண்டும். பதவி உயர்வு மற்றும் அலிபாக் (ALIBAG) நகரத்திற்கு இடமாற்றம் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவருக்கு கடிதம் வந்திருந்தது, ஆனால் அதிகாரப்பூர்வமாக எதுவும் முடிவு செய்யப்படவில்லை. மெஹராஸாத்தில், பாபாவின் தரிசனத்திற்குப் பிறகு, பிரேம் கடிதத்துடன் கூடிய உறை ஒன்றை பாபாவிடம் கொடுத்தார். “**உள்ளே என்ன பணமா?**” என்று கேட்டு பாபா கேலி செய்தார். பிரேம் அமைதியாக இருக்க, பாபா சிரித்தார்.

1965 நவம்பர் 29 அன்று, பாபா மீண்டும் ஒரு குறிப்பை ஆதிக்கு அனுப்பினார்; அதில், பாபா பூனாவிற்குச் செல்லும் வரை, அடுத்த நான்கு மாதங்களுக்கு இடையூறு எதுவும் இல்லாமல் இருக்க விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார், எனவே பார்வையாளர்கள் (மேற்கத்தியர்கள் உட்பட) மெஹராஸாத்திற்கு அனுப்பப்பட வேண்டாம். “**நான்கு மாதங்கள் என்னை எந்த இடையூறுமின்றி இருக்க அனுமதித்தால், நான் ஆரோக்கியமாக இருப்பேன், எனது உடல்நிலையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும். இல்லையேல், அது மோசமாகிவிடும்**” என்று பாபா குறிப்பிட்டிருந்தார்.



ஜால்பாய், ராபர்ட் ட்ரே:ஃபர்ஸ், ராமகிருஷ்ணன், பூனா, நவம்பர் **1965**
(JALBHAI, ROBERT DREYFUSS, RAMAKRISHNAN, POONA, NOVEMBER 1965)



பைதூல், பாபா, ஃபிரான்சிஸ் - மெஹராஸாத் மண்டலி மண்டபம் - **1965**
(BAIDUL, BABA, FRANCIS - MEHERAZAD MANDALI HALL - 1965)

# மெஹராஸாத் - உலகளாவிய பணி

**(Universal Work at Meherazad)**

1965 டிசம்பர் 1 முதல், பாபா கிழக்கு அல்லது மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்த அனைத்து கடிதங்களுக்கும் செவிமடுப்பதை நிறுத்தினார். கழுத்து வலி அவரைத் தொடர்ந்து துன்புறுத்தியது. கடந்த சில மாதங்களில், பாபா ஓய்வின்றி பகலில் நீண்ட நேரம் அமர்ந்திருந்தபோது, டாக்டர் கிண்டே அறிவுறுத்தியதற்கு இணங்க, மண்டலி, கழுத்து சீராகும் விதத்தில் படுக்கையில் சாய்ந்து ஓய்வெடுக்குமாறு கெஞ்சினர். இப்போது அவர் நீண்ட நேரம் படுக்கையில் ஓய்வெடுப்பதைக் கண்டு அவர்கள் வருந்தினர், ஏனெனில், தொடர்ந்து சிறிது நேரத்திற்கு மேல் அமர்ந்திருப்பது வலியை அதிகரித்தது. அவர் மண்டலியிடம் வரும் வேளையில், தினமும் காலையில் சுமார் இரண்டு மணி நேரம், அவரது இடுப்புப் பாகத்தில் வலியும் அதிகமாக இருந்தது; இந்த நிலையிலும், ஏகாந்தவாசத்தில் பாபாவின் உட்பணி தொடர்ந்தது.

டாக்டர் அலு கம்பட்டா மெஹராஸாத்தில் தங்கியிருந்தார்; முதன்மையாக பைதூலைப் பராமரிக்கும் பணியில் உதவினார்; ஆனால் 1965 டிசம்பர் 2 அன்று, அலு மும்பைக்குத் திரும்பிச் சென்றார். பாதிரி டிசம்பர் 8 அன்று, அவரது வழக்கமான பணிக்காக மெஹராஸாத்திற்கு வந்தார், மேலும் ஆதி (ஒரு மாத இடைவெளிக்குப் பின்னர்) 9ஆம் தேதி அழைக்கப்பட்டார். ரமா அதற்கு முந்தைய நாள் பூத் மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினார்; ரமா, ஸரோஷ் இருவரின் உடல்நிலை குறித்து பாபா விசாரித்தார். ஆதி, பெண்டு மற்றும் பிறருடன் எல்லை தகராறு குறித்து விவாதித்தார். (அவர்களது அண்டை விவசாயிகளில் ஒருவர், தனது நிலத்தில் மெஹராஸாத் கிணறு ஒன்று இருப்பதாகக் கூறிக் கொண்டிருந்தார்.)

ஸவக் கொத்வாலின் மகன் ஆதி, மகள் ஹில்லா (HILLA) இருவரும் ஒரு காலத்தில் தங்கள் குடும்பத்துடன் மெஹராபாத்தில் வாழ்ந்து வந்தனர். 1965 டிசம்பர் 13 அன்று ஆதியும், ஹில்லாவும், ஹில்லாவின் ஒன்பது வயது மகன் தீபக்குடன் (DEEPAK) காலை 9:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டனர். அவரது திருமணத்திற்குப் பிறகு, ஹில்லா லண்டனுக்குக் குடிபெயர்ந்தார்; ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் இந்தியாவிற்கு வந்த ஹில்லாவால், பாபாவின் முன்னால் அவரது அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு கட்டத்தில், **“இத்தனை வருடங்களுக்குப் பின்னர் உங்களை நான் பார்க்கிறேன், நீங்கள் அழுவதை மட்டுமே செய்கிறீர்கள்! என்னை சந்திக்க வந்தீர்களா இல்லை அழவா?”** என்று பாபா, ஹில்லாவைக் கேலி செய்தார். அவர்கள் நாள் முழுவதும் மெஹராஸாத்தில் பொழுதைக் கழித்து, பின்பு மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றனர். மன்ஸாரியும் டிசம்பர் 16ஆம் தேதி மெஹராஸாத்தில் அனைவரையும் பார்க்க வந்தார்.

பாப்புஸாஹேப் ஷிண்டே பூனா, ரூபி ஹால் மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு முன்னர் அனுமதிக்கப்பட்டவர், டிசம்பர் 13 அன்று மாலை 6:00 மணியளவில் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு காலமானார். பாபா இந்தத் தொலைத்தந்தியை பூனா மையத்திற்கு அனுப்பி வைத்தார்: "**பாப்புஸாஹேப் ஷிண்டே என்னில் நித்தியமாக இளைப்பாறுவதற்காக என்னிடம் வந்துள்ளார். எனது பிரியமான அன்பர்கள் மற்றும் சேவகர்களில் ஒருவரான பாப்புஸாஹேப், முழு மனதுடன் சேவை செய்து, எனது துன்பத்தில் பங்கெடுத்தார்.**" அவர் மண்டலியிடம், "**நான் பாப்புவை இழந்துவிட்டேன், ஆனால் அவர் என்னைக் கண்டுகொண்டார்**" என்று குறிப்பிட்டார்.

1965 டிசம்பர் 23 வியாழன் அன்று, மெஹராஸாத்தில் மெஹராவின் பிறந்தநாள், தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட்டது. ஜிம் மிஸ்திரி, அர்னவாஸ், கேட்டி, கோர்ஷெத் ஆகியோர் 19ஆம் தேதி மும்பையிலிருந்து வந்தனர். கோர்ஷெத், ஜிம் இருவரும் 24ஆம் தேதி மும்பைக்குத் திரும்பிச் சென்றனர்; கேட்டி, நரிமன், அர்னவாஸ் ஆகியோர் இரண்டு வாரங்கள் மெஹராஸாத்தில் தங்கினர்.

டிசம்பர் 24 அன்று பாபா வழங்கிய இந்தச் செய்தி, 1966ஆம் ஆண்டு, அவரது பிறந்த நாளான பிப்ரவரி 16 அன்று வெளியிடப்பட இருந்தது:

**என் அன்பெனும் உண்மையில், அமைதியாகவும் நிறைவாகவும் இருங்கள், ஏனெனில் உங்களின் சுய நிழலாக இருக்கும் அனைத்து குழப்பமும் விரக்தியும், நான் எனது இறை வார்த்தையை மொழியும்போது மறைந்துவிடும்.**

டிசம்பர் 24ஆம் தேதி, பாபா தமது உள்ளூர் அன்பர்களான கில்னானி குடும்பத்தினர், விலூ, அவரது மகள்கள் குல்னார் மற்றும் ஃப்ரீனி, பிரோஜா, பானுமாசி, ஸாம் கேரவாலா அவரது மகள்கள் உட்பட பலருக்கு அவரது சகவாசத்தை வழங்கினார். பிரேம் கில்னானியிடம் பாபா, "**நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?**" என்று கேட்டதற்கு, அவர் தனது பதவி உயர்வு குறித்த தொடர்ச்சியான கவலையைப் பற்றி அவரிடம் கூறினார். பாபா அவரிடம் ஒரு ஃபக்கீரைப் (FAKIR, துறவி) போல் இருக்குமாறு அறிவுறுத்தினார் - அதாவது கவலையின்றி அலட்சியப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். கபீரின் இந்த வசனத்தை மேற்கோள் காட்டுமாறு பாபா, நரிமனிடம் கேட்டுக்கொண்டார்:

முழு உலகையும் கவலை பேராவலுடன்
விழுங்கக் காத்திருக்கிறது,
மேலும் கவலையே அதன் எஜமானர்,
ஆனால் கவலையை விழுங்குகிறவனே உண்மையான ஃபக்கீர்!

"**ஒரு ஃபக்கீராக இருங்கள்!**" பாபா, பிரேம் கில்னானியிடம் வலியுறுத்திக் கூறினார். "**நான் ஃபக்கீர்களின் ஃபக்கீர்! அனைத்தையும் என்னிடம்**

**விட்டுவிட்டு சுதந்திரமாக இருங்கள். இந்தப் படைப்பு, ஒன்றுமே இல்லாத ஒன்று! என்னைத் தவிர வேறு எதுவும் இல்லை!"**

பாபா அவரை ஒரு ஃபக்கீரைப் போல வாழுமாறு வற்புறுத்தியதால், பாபாவின் வார்த்தைகள் அவருக்கு நம்பிக்கையூட்டுவதற்கு பதிலாக, நீதிபதி கில்னானிக்கு பதவி உயர்வுக்கான நம்பிக்கை இல்லை என்பதை நம்ப வைத்தது! ஆனால் தனது மனநிலையை மாற்றிக்கொண்ட பாபா சிரித்துக்கொண்டே, **"உங்கள் பதவி உயர்வு குறித்த உத்தரவுகளை உடனடியாக எனக்கு அனுப்புங்கள்"** என்று குறிப்பிட்டார். கில்னானி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். இரண்டு வாரங்களுக்குப் பின்னர், உயர் பதவிக்கான உத்தரவு வந்தது, பிரேம் சிறப்புத் தூதுவர் ஒருவர் மூலம் இந்தச் செய்தியை மெஹராஸாத்திற்கு அனுப்பி வைத்தார்.

1965 டிசம்பர் 25 கிறிஸ்துமஸ் தினத்தன்று, ரமா, மெஹர்நாத் மற்றும் ஷீலாவை ஆதி மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். 26ஆம் தேதி, ஹைதராபாத்தின் காவல்துறை துணை ஆணையர் சி. ராகவேந்திர ராவ் (C. RAHGAVENDRA RAO), அவரது மனைவி, குழந்தைகள் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்களுடன் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டார். ஸ்ரீநகரைச் சேர்ந்த அவ்தார் கிஸான் டிக்குவும் (AVTAR KISAN TIKU) அன்று பாபாவை சந்தித்தார்.

1966 ஜனவரி 1 புத்தாண்டு தினத்தை ஒட்டி, இர்வின், எட்வர்ட் லக் (IRWIN & EDWARD LUCK) சகோதரர்கள் மற்றும் பிற அமெரிக்கா அன்பர்களுக்கு பாபா இந்தச் செய்தியை அனுப்பினார்: **"1967 நவம்பர் மாதத்திற்குப் பிறகு, பாபாவை ஐயத்திற்கிடமின்றி, இதயபூர்வமாக, முழு நம்பிக்கையுடன் நேசிக்கும் அனைவருக்கும், அவர் யார் என்பதை அறிந்துகொள்ளும் அருள் கிடைக்கும்."**

1965 அக்டோபரில், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை (UNITED NATIONS SECURITY COUNCIL) எடுத்த உறுதியான நடவடிக்கையால், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான போர், இறுதியாக நிறுத்தப்பட்டது. இரு நாடுகளும் போர்நிறுத்தம் செய்ய உத்தரவிடப்பட்டது. போர் ஒரு முட்டுக்கட்டையான சூழ்நிலையை எட்டியது, ஆனால் எந்த நாடும் தங்களின் தற்போதைய இராணுவ நிலைகளிலிருந்து விலகத் தயாராக இல்லை. 1966 ஜனவரியில், ஸோவியத் யூனியன் (SOVIET UNION), பாகிஸ்தானின் ஜனாதிபதி அயூப் கான் (AYUB KHAN), இந்திய பிரதமர் லால் பஹதூர் சாஸ்திரி (LAL BAHADUR SHASTRI) இருவரையும் ரஷ்ய நகரமான தாஷ்கண்டிற்கு (TASHKENT) அழைத்து, 1949 போர்நிறுத்த எல்லைக்கோட்டிற்கு பின்னால் முழுமையாக வெளியேறுவதற்கான ஒப்பந்தத்தில் அவர்கள் கையெழுத்திடுமாறு வற்புறுத்தப்பட்டனர். இரு தலைவர்களும் 1966 ஜனவரி 3ஆம் தேதி உச்சிமாநாடு பேச்சுவார்த்தைக்காக சந்திக்கத் திட்டமிடப்பட்டது.

பிரதமர் சாஸ்திரி தாஷ்கண்ட் செல்லும் போது, ஒரு நாள் இரவு பாவ் கல்சூரியிடம் பாபா கேட்டார், "**சாஸ்திரி ரஷ்யாவிலிருந்து இந்தியா திரும்பி வருவாரா?**"

"ஏன் இல்லை?" பாவ் கல்சூரி கூறினார்.

**"ரஷ்யாவில் குளிர்காலம் கடுமையாக உள்ளது, சாஸ்திரி ஓர் இதய நோயாளி. அவர் திரும்பி வரமாட்டார் என்று நான் உணர்கிறேன்."**

"சாஸ்திரி மிகவும் நல்ல மனிதர்," பாவ் கல்சூரி அவதானித்தார், "மென்மையும், தன்னடக்கமும் மிக்கவர். நீங்கள் ஏன் அயூப் கானை ஒழிக்கக்கூடாது; இந்தப் படுகொலைகளுக்கு அவர்தான் காரணம்!"

இருப்பினும், பாபா, "**அயூப் கான் மிகவும் வல்லமை மிக்கவர், வலிமையானவர், நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பவர். குளிர் அவரை பாதிக்காது**" என்று பதிலளித்தார்.

பாவ் கல்சூரி உடனே, "சாஸ்திரி உயிரைத் துறக்கும் பட்சத்தில், வேறு யார் பிரதமராகத் தகுதியானவர்?" என வினவினார்.

"**நல்ல வலிமையான பிரதமர் ஒருவர் வருவார்**" என்று பாபா பதிலளித்தார்.

சில கணங்களுக்குப் பிறகு நேருவின் மகளைப் பற்றிக் கேட்டார். "**இந்திராவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**"

"அவருக்கு என்ன அனுபவம் இருக்கிறது பாபா? அவர் அரசியலுக்கு மிகவும் புதியவர்" பாவ் கல்சூரி கூறினார்.

பாபா உடனே, "**உங்களுக்கு அவரைப் பற்றி எதுவும் தெரியாது. ஜவஹர்லால் அவருக்கு அனைத்தையும் கற்றுக் கொடுத்துள்ளார். அவர் அதி புத்திசாலி**" என்று குறிப்பிட்டார்.

பாவ் கல்சூரி பின்பு நரிமனிடம் இந்த உரையாடலைக் குறித்து கூறினார், ஜனவரி 10 அன்று தாஷ்கண்டில் சாஸ்திரி திடீரென காலமானபோது, இருவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர், மேலும் இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பேற்றார்.

சாஸ்திரி ரஷ்யாவிற்குப் புறப்படுவதற்கு சற்று முன்பு, டாக்டர் தேஷ்முக் அவரை சந்தித்து, பாபாவைப் பற்றி எடுத்துக்கூறி, குருநாதருக்கான 'பர்வர்திகார்' பிரார்த்தனை (THE UNIVERSAL PRAYER), மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிராத்தனை (PRAYER OF REPENTANCE) மற்றும் 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) புத்தகங்களின் பிரதியை அவருக்கு வழங்கினார். சாஸ்திரி அவற்றைப் படிப்பதாக உறுதியளித்தார், மேலும் தேஷ்முக்கின் கைகளில் அந்த இலக்கியங்களுடன் அவரைப் புகைப்படம் எடுக்கவும் அனுமதித்தார்.

1966 ஜனவரி 11 செவ்வாய் காலை சாஸ்திரி காலமானார் என்ற செய்தியைக் கேட்டபோது, பாபா இவ்வாறு கூறினார்:

**லால் பஹதூர் ஒரு நல்ல மனிதர், மேன்மையான ஆத்மா. அவர் உடலைத் துறக்கும் முன்பு தேஷ்முக் மூலமாக எனது பெயரைக்**

**கேட்டதாலும், என்னைப் பற்றி அறிந்து கொண்டதாலும் அவர் ஆசீர்வதிக்கப்பட்டார்.**

**ஸர் வால்டர் ஸ்காட்** (SIR WALTER SCOTT) **கூறினார்: "அவர் மெதுவாக வந்தாலும் அல்லது வேகமாக வந்தாலும், இறுதியில் வருவது மரணம் தான்." மேலும் கவிஞர் அமீரின்** (POET AMIR) **கூற்றுப்படி: "மனிதன் தனது இறுதி நாளுக்காகப் பிறக்கிறான்." அதேசமயம் நான் கூறுகிறேன்: "எவரும் இறப்பதில்லை, எப்படி இறப்பது என்பதையும் அறிவதில்லை. இறப்பது எப்படி என்பதை அறிந்த அரிதானவர் மீண்டும் பிறப்பதில்லை!"**

டெல்லியில் இருந்த வேளையில், டாக்டர் தேஷ்முக் பல ஆண்டுகளுக்கு முன்பு தான் சந்தித்த இந்திய ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனை (DR. S. RADHAKRISHNAN) மறுபடியும் சந்தித்து, 'காட்-மேன்' (GOD-MAN) புத்தகத்தின் நகலை அவருக்கு வழங்கினார். ராதாகிருஷ்ணன் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) மற்றும் 'லிஸன் ஹியுமானிட்டி' (LISTEN, HUMANITY) புத்தகங்களைப் படித்திருந்தார். '**கடவுள் பேசுகிறார்' புத்தகத்தை அவர் மீண்டும் படிக்க வேண்டும்**' என்று பாபா விரும்பினார், எனவே மனோகர் - மோனா ஸாக்கரே தம்பதியர் இருவரும் (1966 மார்ச் 6 அன்று) அவரை சந்திக்கும் போது, பாபாவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு தெரிவிக்க அவர்களிடம் கூறப்பட்டது.

1966 ஜனவரி 1 அன்று, பாபாவின் உடல்நிலை குறித்து, ஹோஷங் மற்றும் ஹவோவி தாதாசாஞ்சிக்கு (HOSHANG & HAVOVI DADACHANJI) எரச் எழுதினார்: "பிரியமான பாபா அவரது பௌதீக உடலை (ஆரோக்கியமாக அல்லது நோய்வாய்ப்பட்ட நிலையில்) அது தாங்கிக்கொள்ள வேண்டிய உலகளாவிய சுமைக்கு இசைவாக வைத்திருக்கிறார். சில சமயங்களில் அவர் உண்மையில் நோய்வாய்ப்பட்டிருப்பது போலத் தோன்றுகிறார். நீண்ட நாட்களாக உடல்நிலை சரியில்லாமல், அடுத்த நாள் (அல்லது சில மணிநேரங்களிலேயே) அவர் உடலை எந்த நோயும் தாக்காதது போலத் தோற்றமளிக்கிறார்! மற்றும் சீரற்ற (குளிர்கால) வானிலை அவரது எலும்புகள் மற்றும் உடலை அடிக்கடி துன்புறுத்துவதைக் காணமுடிகிறது."

ஜனவரி 13 அன்று, எரச், டாக்டர் கிண்டேக்கு எழுதினார், அன்று காலையில் பாபா, அவரே நினைவு கூர்ந்தார்: '**அவரது கழுத்தில் வலி 25 சதவிகிதம் சீராகி உள்ளது, இடுப்புப் பாகத்தில் வலியும் அவரைத் தொந்தரவு செய்யவில்லை. பாபா ஒவ்வொரு நாளும் மிகக் குறைவாகவே நடந்தாலும், அவர் ஓரளவு சுதந்திரமாக நடக்க முடிகிறது**' என்று கிண்டேக்குத் தெரிவிக்குமாறு எரச்சிடம் பாபா கூறினார்.

பாபாவின் இந்தச் செய்தியும் கிண்டேயின் கடிதத்தில் இணைக்கப்பட்டது: **"நீங்கள் தரிசிக்க வேண்டிய சரியான நேரத்தில் நான் உங்களை அழைக்கிறேன்."**

ஜனவரி 16ஆம் தேதி, சாது வாஸ்வானி (SADHU VASWANI) பூனாவில் காலமானார். பாபா, வாஸ்வானியின் மருமகன் ஜஷனுக்கு (JASHAN) இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்: "**தாதா வாஸ்வானி எனக்கு மிகவும் பிரியனவர்; தாதா இப்போது நித்திய பேரின்பத்தில் என்னில் மகிழ்ச்சியாக இருக்கிறார். உங்களுக்கும், ஷாந்திக்கும், கடவுளை நேசித்து, சேவை செய்வதற்காக வாழ்ந்த என் அன்பான தாதாவை நேசித்து, அவருக்கு சேவை செய்த அனைவருக்கும் என் அன்பும் ஆசிகளும்.**"

ஜனவரி 19 அன்று, ஸொராப்ஜி ஸிகன்போரியா, கிஷின்சந்த் கஜ்வானி இருவரும் அவர்களது குடும்பங்களுடன் அரை மணி நேரத்திற்காக மெஹராஸாத்திற்கு வந்தனர். ஆதியும் அவர்களுடன் சென்றார். அன்றே அனைவரும் மும்பைக்குத் திரும்பிச் சென்றனர்.

சமீபத்தில் காலமான தனது சகோதரரின் சொத்து சம்பந்தமாக இங்கிலாந்து செல்ல டாக்டர் டான், பாபாவால் அனுமதிக்கப்பட்டார். எட்டு மாதங்களுக்குப் பிறகு, டான் 1966 ஜனவரி 12 அன்று, கப்பல் வழியாக இந்தியாவிற்குத் திரும்பி வந்தார். மூன்று நாட்களுக்குப் பின்னர் அவர், ஏழு பெரிய டிரங்கு பெட்டிகள் மற்றும் எட்டு பிற மூட்டை முடிச்சிகளுடன் (மெஹராஸாத்திற்கு இங்கிலாந்திலிருந்து பல பொருட்களுடன்) மெஹராபாத் வந்தடைந்தார். பாபா அவரை 20ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வரவழைத்து, அவருடன் நீண்ட நேரம் உரையாடினார். டாக்டர் டான் பல ஆண்டுகளாக மெஹராபாத்தில் வாழ்ந்து வந்தார், ஆனால் பாதிரியுடனான கருத்து வேறுபாடுகள் காரணமாக, அவர் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்; அங்கு அவர் கில்னானியின் குடியிருப்பில் தங்க இருந்தார்; கில்னானி குடும்பம் விரைவில் அலிபாக் நகருக்குச் செல்லவிருந்தது.

ஜனவரி 20 அன்று, அமெரிக்காவில் வாழும் ராபர்ட் ட்ரேஃபஸின் (ROBERT DREYFUSS) கடிதத்திற்கு எரச் மூலமாக பாபா இவ்வாறு பதிலளித்தார்: "**பாபா, அவர் மிகவும் விசாலமான, அளவிறுதியற்ற மற்றும் புரிந்துகொள்ள முடியாதவராக இருந்தாலும், அவரது அன்பர் ஒருவரின் அப்பழுக்கற்ற, மென்மையான இதயம், அவரை அங்கேயே உள்ளடக்கி, கண்டுகொள்ள முடியும் என்று கூறுகிறார்.**"

ஆதி, டாக்கேஃபால்கர் இருவரும் ஜனவரி 23ஆம் தேதி ஸாக்கோரிக்குச் சென்று, பாபாவைப் பற்றிய செய்தியை கோதாவரி மாய்க்கு வழங்கினர், பின்னர் அடுத்த நாள், அவர்கள் சந்திப்பைக் குறித்து பாபாவிடம் தெரிவித்தனர். கில்னானி குடும்பத்தினர் 24ஆம் தேதி பாபாவிடம் விடைபெற்று, மறு நாள் அலிபாகிற்குச் சென்றனர். மினூ பரூச்சா, பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டபோது, ஆதி அவரை ஜனவரி 25 காலை 9:30 மணிக்கு அழைத்து வந்தார்.

ஜனவரி 27 அன்று, ஃபிரான்சிஸ் கோல்ட்னி (FRANCIS GOLDNEY) அவரது மனைவி ஒல்லாவுடன் (OLLA) காலை 9:30 மணிக்கு பாபாவை சந்திக்க வந்தார். அவர்கள் கிறிஸ்மஸ் விடுமுறைக்காக இந்தியா வந்திருந்தனர்; அவர் ஏகாந்தவாசம் கடைப்பிடித்த வேளையிலும், பாபா அவர்களை அரை மணி நேரம் மெஹராஸாத்திற்கு வர அனுமதித்தார். ஒல்லா கடந்த காலத்தில் பாபா மீது நம்பிக்கை இல்லாமல் அலட்சிய போக்கைக் கடைப்பிடித்தார், ஆனால் இந்த வருகையின் போது பாபாவை மிகவும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இருந்தார். கணவன் மனைவி இருவரும் பாபாவிடம் வந்த வேளையிலும், புறப்பட்டுச் செல்லும் போதும் கன்னத்தில் மெதுவாக முத்தமிட்டனர். ஒல்லா, தனது கணவர் மற்றும் ஃபிரான்சிஸ் பிராபஸோன் இருவரும் பாபாவின் இருபுறமும் அமர்ந்திருந்த சில புகைப்படங்களை எடுத்தார். ஒல்லா பின்பு மெஹரா மற்றும் இதர பெண் மண்டலியை சந்திக்கச் சென்றார். அவர்கள் அன்றே சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

மார்வின் மற்றும் ஜீனி கேம்பென் (MARVIN & JEANNIE CAMPEN), இந்த நேரத்தில் உலகம் முழுவதும் வணிக பயணம் மேற்கொண்டதால் பாபாவைப் பார்க்க அனுமதி கோரினர். பாபாவின் பதில்: **"உங்களுக்கு இந்தியாவில் வணிகம் குறித்த பணிகள் இருந்தால் மட்டுமே!"** இந்தியாவில் அவர்களுக்கு அதிகாரபூர்வ வணிகம் எதுவும் இல்லாததால், அவர்கள் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை, மேலும் அவர்கள் கிழக்கு பாகிஸ்தான் (வங்காளதேசம்) மற்றும் மேற்கு பாகிஸ்தானுக்குச் சென்றனர்.

1966 பிப்ரவரி 1 அன்று, டெல்லியைச் சேர்ந்த ஹக்குமத் ராய் கபில் (HAKUMAT RAI KAPIL) என்றழைக்கப்பட்ட பாபா-அன்பரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. அவர் இப்போதும் பாபாவுடன் நிரந்தரமாக வாழ விரும்பினார், மேலும் அவர் பாபாவிடம் நெருங்கி வரும் ஏக்கத்தில் இருந்ததால், மிகவும் மனக்கலக்கமடைந்தார்.

அவருக்கு பதிலளிக்கும் விதத்தில் பாபா, இந்தச் செய்தியை அனுப்பினார்:

**நான் உங்கள் இதயத்தில் ஆனந்தமாகவும், உங்கள் மனதின் விரக்தியாகவும் உள்ளேன், ஏனெனில் அறிவால் புரிந்து கொள்ள முடியாததை அன்பால் அடைய முடியும்.**

பிப்ரவரி 6 அன்று, பெஹராம் பூனாவிலிருந்து தனது மகன்களான ருஸ்தம், ஸொராப், மருமகன் ஜெஹாங்கு ஆகியோருடன் வந்தார். பாபாவின் பிறந்தநாளை ஒட்டி மெஹராஸாத்தில் (ஆண்டுதோறும்) சில நாட்கள் தங்குவதற்காக, மெஹர்வான் ஜெஸவாலா அடுத்த நாள் அங்கு வந்தார்; மெஹர்வான் தனது சகோதரர் எரச்சிற்கு கடிதப் பரிமாற்றத்தில் உதவுவது வழக்கம்; இந்த நேரத்தில் இது எப்பொழுதும் அதிகமாகவே இருந்தது. ஸரோஷ், விலூ இருவரும் 7ஆம் தேதி அரை மணி நேரம் பாபாவைப் பார்க்க வந்தனர்.

அந்த ஆண்டு அஹமதுநகர் மையத்தில் மெஹர் பாபாவின் பிறந்தநாளை முன்னிட்டு, திட்டமிடப்பட்ட ஒரு விழாவில் தலைமை தாங்கி உரை நிகழ்த்த, கல்கத்தாவின் தத்துவ அறிஞர், டாக்டர் ஹீரா லால் சோப்ரா (DR.HIRA LALL CHOPRA) அழைக்கப்பட்டார். அவர் பிப்ரவரி 15 அன்று ஆதியால் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, பாபாவை 20 நிமிடங்கள் சந்தித்தார். அவர் இயற்றிய உருது கவிதையை பாபா முன்னிலையில் வாசித்தார்; பாபா அவருடைய புரிதலிலும் அன்பிலும் மிக்க மகிழ்ச்சியடைந்தார். ஜால்பாயும் ஷெரூவும் மறுநாள் பாபாவை சிறிது நேரம் சந்தித்தனர்.

பிப்ரவரி 21 அன்று, பாபா, ரிச்சர்ட் ஆல்பர்ட்டுக்கு (RICHARD ALPERT) கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்: "**கவலைப்படாதீர்கள். பிரபஞ்சத்தில் நிகழும் அனைத்திற்கும் நானே பொறுப்பு. எனவே, என்னைப் பற்றி மக்களிடம் எடுத்துக் கூறுங்கள், என்னை நேசிக்கச் சொல்லுங்கள்; ஆனால் நான் அவர்களை அழைக்கும் போது மட்டுமே என்னிடம் வர வேண்டும்.**"

ஜெயந்தி (JAYANTI) என்ற ஏழு வயது சிறுவன், அஹமதுநகர் மையக் கூட்டங்களில் தவறாமல் கலந்துகொண்டான், ஆனால் இதுவரை பாபாவை நேரில் சந்திக்கவில்லை. ஆதி மற்றும் பலரிடம் அவனை பாபாவிடம் அழைத்துச் செல்லுமாறு வற்புறுத்திய பின்னர், ஒரு நாள் காலையில், பாபாவின் விருப்பத்திற்கிணங்க, வாமன் படாலே சிறுவனை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். அவனை பாபாவிடம் அழைத்துச் செல்வதற்கு முன்னர், எரச் சிறுவனிடம் கேட்டார், "நீங்கள் ஏன் மெஹர் பாபாவைப் பார்க்க விரும்புகிறீர்கள்?"

"அதனால் என்னில் உண்மையான நம்பிக்கை பிறக்கலாம்" என்று ஜெயந்தி பதிலளித்தான்.

"நம்பிக்கைக்கு பிறகு நீங்கள் எதை அடையப் பெறுவீர்கள் என்று நம்புகிறீர்கள்?"

"நான் கடவுளைக் கண்டுகொள்வேன்," சிறுவன் பதிலளித்தான்.

"கடவுளைக் கண்டதும், நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"நான் அவரை நேசிப்பேன், அவருக்கு சேவை செய்வேன்!"

சிறுவன் மண்டலி மண்டபத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டதும், பாபாவின் பாதங்களில் பயபக்தியுடன் இனிப்புப் பொட்டலத்தை வைத்தான். மண்டபத்திற்குள் நுழையும் முன்பு சிறுவன் தனது காலணிகளைக் கழற்ற வேண்டியதில்லை, ஏனெனில் அவன் அஹமதுநகரிலிருந்து புறப்படுவதற்கு முன்னரே அவற்றை அகற்றிவிட்டான்! பாபா அவனை ஆரத் தழுவி, வருடிக்கொடுத்து கூறினார், "**நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி**!"

ஜெயந்தி திடத்தன்மையுடன் 'ஆமாம்' என்று தலையசைத்தான். அவனுக்கு முன் அமர்ந்திருப்பது யார் என்று கேட்டதற்கு, "கடவுள்" என்று எளிமையாக பதிலளித்தான்.

எரச் உடனே, “சரி, இப்போது நீங்கள் அவரைப் பார்த்தீர்கள், நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்று அவரிடம் கேளுங்கள். அவரிடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும்?” என அவனைத் தூண்டுவது போலக் கூறினார்.

சிறுவன் பாபாவைப் பார்த்து, “அன்பு” என்றான்.

இந்த பதிலைக் கேட்ட பாபா மகிழ்ச்சியடைந்து, புன்னகையுடன், “**அப்படியே ஆகட்டும்**” என்று சைகையால் தெரிவித்தார்.

பாபாவின் 72ஆவது பிறந்தநாள், 1966 பிப்ரவரி 25 வெள்ளிக்கிழமை அன்று, உலகம் முழுவதும் வெவ்வேறு மையங்களில் கொண்டாடப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் கொண்டாட்டங்கள் அதிகரித்துக்கொண்டே வந்தன, மேலும் அவரது அன்பர்கள், அவரைப் புகழ்ந்து பாட ஒன்றிணைந்தது உண்மையிலேயே வசந்த காலமாகத் தென்பட்டது. முந்தைய ஆண்டைப் போலவே, இந்தியாவின் பல இடங்களில் அவரது பிறந்தநாளுக்கு 72 நாட்களுக்கு முன்னரே கொண்டாட்டங்கள் தொடங்கி, பிப்ரவரி 25ஆம் தேதி நிறைவடைந்தது.

அந்த வருடம் சமையல் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள், அஞ்சல் மற்றும் தந்திகளைக் கொண்டுச் செல்லும் சிறுவர்கள் பாபாவிடம், மெஹராஸாத்தை அவரது பிறந்தநாளை ஒட்டி அலங்கரிக்க முடியுமா என்று கேட்டனர், ஏனெனில் உலகம் முழுவதும் வாழும் அவரது அன்பர்களும், பக்தர்களும் தங்கள் மையங்களை விமரிசையாக அலங்கரித்தனர். ‘பிரியமான பாபாவின் வாழ்விடமும்’ அலங்கரிக்கப்பட வேண்டும், என்று அவர்கள் நியாயப்படுத்தினர். பாபாவும் அவர்கள் அதைச் செய்ய அனுமதித்தார், அவர்கள் அனைவரும் முழு முனைப்பில் ஈடுபட்டு, மண்டலி மண்டபத்தின் கூரை மற்றும் முகப்பை, காகிதத் தோரணங்களால் அலங்கரித்தனர்.

1956ஆம் ஆண்டு சத்தாராவிற்கு அருகில் உட்தாராவில் (UDTARA) நடந்த விபத்திற்குப் பின்னர், எரச் வாகனம் ஓட்டுவதை நிறுத்தியதால், முழு நேர ஓட்டுநர் பணியமர்த்தப்பட்டார். 1959 முதல், மெஹராஸாத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்த ஷேக், 1966இல் ஓய்வு பெற்ற பின்பு, யூஸுஃப் (YUSUF) என்ற மற்றுமோர் ஓட்டுநர் நியமிக்கப்பட்டார். யூஸூப், பாபாவின் மீதான பக்தியால் பிறந்தநாளை ஒட்டி, மெஹராஸாத் வளாகத்தை சீரமைப்பதில் தீவிரமாகப் பங்கெடுத்தார். கார் பேட்டரியைப் பயன்படுத்தி (இந்த நேரத்தில் மெஹராஸாத்தில் மின்சாரம் இல்லை), மண்டலி மண்டபத்தில் பாபாவின் சித்திரத்தைச் சுற்றி ஒளிர் விளக்குகளால் அலங்கரித்தார். அதிகாலை ஐந்து மணிக்கு அனைவரும் ‘அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்’ என்று கோஷமிட்ட பின்னர் இசைத்தட்டுகளை இசைப்பதற்காக, கிராமத்திலிருந்து ஒலிபெருக்கி கொண்டு வரப்பட்டது. பாபாவின் காலை உணவு நேரத்தின்போது, அவருக்குப் பிரியமான பாடகி பேகம் அக்தரின் பாடல்களை அவர் கேட்டு மகிழ்ந்தார்.

அதற்குள் அவருடைய கழுத்து வலி ‘20 **சதவிகிதம் நன்றாக இருந்தது**’ என்று பாபா குறிப்பிட்டார், மேலும் அவரது இடுப்புப் பாகத்தில் வலியும் அவரை

அதிகம் தொந்தரவு செய்யவில்லை. அவர் இந்நாட்களில் மிகக் குறைவாகவே நடந்தாலும், மிகவும் எளிதாக நடக்கத் தொடங்கினார். ஆனால் கழுத்து வலி காரணமாக, ஒவ்வோர் ஆண் மண்டலிக்கும் அவரது பிறந்தநாளில் பாபாவின் அரவணைப்பை வழங்குவதற்கு பதிலாக, கன்னத்தில் முத்தமளித்தார்.

டிசம்பரில் எடுத்துரைத்த பிறந்தநாள் செய்தியைத் தவிர, பாபா அந்த ஆண்டு பின்வரும் செய்திகளையும் அனுப்பினார்.

ஹைதராபாத்தில் வெளியிடப்பட்ட 'திவ்ய வாணி' பத்திரிக்கைக்கு:

**உங்கள் உலகின் இருள் நிறைந்த வானத்தை ஒரு கணம் பிரகாசமாக்கி, உங்களை மீண்டும் இருளில் ஆழ்த்தி, இடைவிடாது ஒளிர்ந்து, அணையும் பல்வண்ண மின் விளக்குகளைப் போன்ற அந்த (பொய்யும், போலியுமான) குருநாதர்களைத் தவிர்க்கவும்.**

ராய்பூரில் வெளிவந்த 'கைய்ட்' (GUIDE) இதழுக்காக:

**உங்களை அச்சமுறச் செய்வதும், குழப்பத்தில் ஆழ்த்துவதும், விரக்தியில் உங்களைப் பற்றிக்கொள்வதும் உங்கள் சொந்த நிழல்தான். இறை அன்பின் சூரியன் அதன் முழு மகிமையிலும் வெளிப்பட்டு, அனைத்து முகங்களும் அந்த இறை ஒளியை நோக்கித் திரும்பும்போது, எல்லா நிழல்களும் அகன்றுவிடும் - அவற்றின் நினைவுகளும் கூட மறைந்துவிடும்!**

திருப்பதியில் அச்சிடப்பட்ட ஒரு சிறப்புப் புத்தகத்திற்காக:

**ஒரு தூண் நிமிர்ந்து நிலையாக, உறுதியாக நிற்பதற்கு அதன் கீழ் மூட்டுப் பாகம் தரையில் ஆழமாக ஊன்றப்பட்டு நிலைநிறுத்தப்பட வேண்டும். அதுபோலவே, என் அன்பன் அவனது அன்பில் உறுதியாக இருந்தால், அவனது திடமான நம்பிக்கையின் அடித்தளம் எனது தெய்வீகத்தில் ஆழமாகப் பதிந்திருக்கும்.**

நவ்ஷேர்வான் நலவாலாவின் செய்தி இதழான 'ஸ்பார்க்' (SPARK) என்ற பெயரை மாற்ற வேண்டியிருந்தது, ஏனெனில் அந்தப் பெயரில் ஏற்கனவே ஒரு பத்திரிகை இருப்பதாக அரசாங்கம் அவருக்குத் தெரிவித்தது. பல தலைப்புப் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன, பாபா 'க்ளோ' (GLOW) என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்தார், 1966 பிப்ரவரியில் அதன் முதல் இதழுக்காக, பாபா கீழ்வரும் செய்தியை அனுப்பினார்:

**உங்களின் 'நான்' எனும் நிழலால் மறைந்திருக்கும் இறை சூரியன் நான். நீங்கள், உங்கள் நிழல் என்று நினைத்துக் கொண்டிருப்பதை நிறுத்தும் வேளையில், நானாக இருக்கும் இறை சூரியனே உங்களின் சுயமான உண்மைப்பொருள் என்பதை நீங்கள் காண்பீர்கள்.**

இந்தத் தொலைத்தந்தி பாபாவின் மேற்கத்திய சீடர்களுக்கு அனுப்பப்பட்டது:

**எனது பிறந்தநாளில் எனது பெயரில் ஒன்றுகூடியிருக்கும் அனைத்து இதயங்களிலும் நான் நிலைகொண்டிருப்பேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பையும் ஆசிகளையும் வழங்குகிறேன்.**

மேலும் 'விங் கமாண்டர்' (WING COMMANDER) ஸாக்கரேயின் கீழ் பணிபுரிந்த விமானப்படை அதிகாரிகளுக்கு இந்தத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது:

**அன்பிற்குரிய அவதார் மெஹர் பாபா என் மூலமாக உங்களுக்கு இதைத் தெரிவிக்க விரும்புகிறார்... அவரை நினைவுகூரும் அனைத்து இதயங்களிலும் அவர் எப்பொழுதும் நிலைகொண்டிருக்கிறார்.**

1966 பிப்ரவரி 24 அன்று, ஆந்திராவைச் சேர்ந்த ஒரு கணவன்-மனைவி எதிர்பாராத விதமாக மெஹராஸாத்திற்கு வருகை தந்தனர். 1965 டிசம்பர் மாதத்தில் பாபாவை சந்தித்த ஹைதராபாத் போலீஸ் கமிஷனரிடமிருந்து (POLICE COMMISSIONER), அவர்களை அறிமுகப்படுத்தும் ஒரு கடிதத்தையும் கொண்டு வந்தனர். இந்தத் தம்பதியர், முன்னர் ஆந்திராவில் வெவ்வேறு மையங்களில் நிகழ்ந்த பிறந்தநாள் விழாக்களில் பங்கேற்க நேர்ந்தது. 'பிறந்தநாள் நிகழ்ச்சிகள் எல்லா இடங்களிலும் மிகவும் பிரமாண்டமாக நடக்கும் வேளையில், மெஹர் பாபா வாழும் அவரது இல்லத்தில் எவ்வளவு சிறப்பாக இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தில் அவர்கள் மெஹராஸாத்திற்கு வந்தனர்.

பாபா அந்தத் தம்பதியரை சந்தித்தார்; மெஹராஸாத்தில் அனைத்தும் அமைதியாகவும் எளிமையாகவும் நடப்பதைக் கண்டு அவர்கள் ஆச்சரியத்தையும் குழப்பத்தையும் வெளிப்படுத்தினர். எரச் அவர்களிடம், "பாபா மெஹராஸாத்தில் வசிக்கிறார் என்றாலும், அவர் உண்மையில் அவரது அன்பர்கள் அனைவருடனும் இருக்கிறார், அவருடைய நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அதற்குத் தலைமை வகிக்கிறார். அதனால்தான் பாபா அவர்களுக்கு இந்தச் செய்தியை அனுப்பியுள்ளார்: '**என் அன்பில் ஒன்றுகூடும் உங்கள் அனைவருக்கும் மத்தியில் நான் இருப்பேன்**.' எனவே, அவர் முன்னிலையில் இருப்பதைத் தவறவிடாமல் இருக்க, உங்கள் சொந்த ஊருக்கு நீங்கள் விரைந்து செல்ல வேண்டும்!" இரவில் பாபா அவரை நினைவுகொள்ளும் விதத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மையங்களை அடிக்கடி நினைவுகூர்வார் என்பது உண்மைதான்.

மெஹராஸாத்தில் வந்து குவிந்த பிறந்தநாள் வாழ்த்துகள், அட்டைகள் மற்றும் தொலைத்தந்திகளில், பாஸ்டன் நகரின் ராபர்ட் ட்ரேஃபஸின் நண்பரான, ஹார்வர்ட் அமெரிக்கக் கல்லூரி மாணவர் ரிக் சேப்மேன் (RICK CHAPMAN) என்பவரின் கவிதை ஒன்று இருந்தது. பாபா அந்தக் கவிதைக்கு செவிமடுத்து, பிப்ரவரி 27ஆம் நாள் ரிக் சேப்மேனுக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**"உங்கள் இதயத்திலிருந்து இசைக்கப்படும் என் அன்பின் இனிய இசை, என்னை மகிழ்ச்சியடையச் செய்தது. உங்கள் இதயத் துடிப்புகள் எனது**

**பாடலாக இருக்கட்டும். உங்களுக்கும் ராபர்ட்டுக்கும் என் அன்பை இத்துடன் வழங்குகிறேன்.”**

பிப்ரவரி 25 அன்று, மெஹர்ஜி மெஹராஸாத்திற்கு வந்தார். அன்று பாபா, அலன் கோஹெனுக்கு இந்தச் செய்தியை அனுப்பினார்:

**“உங்கள் கடிதம் வந்து சேர்ந்தது. நான் அனைத்தும் அறிவேன். அன்பு ஒன்றுதான் என்னை மகிழ்வுறச் செய்கிறது, நீங்கள் என்னை மகிழ்வுறச் செய்தீர்கள். நான் உங்கள் உயிர்மூச்சாக இருக்கும்போது, ஒவ்வொரு சுவாசமும் எனக்கு சேவை செய்கிறது. நான் உங்களுக்கும், ரிக் & ராபர்ட் இருவருக்கும் ஆசீர்வாதங்களை வழங்குகிறேன்.”**

கல்கத்தாவின் நீதிபதி பிரஸந்த பிஹாரி முகர்ஜி (JUSTICE PRASANTA BIHARI MUKHARJI OF CALCUTTA), பாபாவின் பிறந்தநாளன்று உரை ஒன்று நிகழ்த்தினார், அதன் நகல் பாபாவிற்கு அனுப்பப்பட்டது. 1966 பிப்ரவரி 26 அன்று பாபா அவருக்கு அனுப்பிய தொலைத்தந்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

**நான் அந்த ஓர் இறை வார்த்தையை உச்சரிப்பதில் உங்கள் வார்த்தைகளைக் கேட்டேன், நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், ஏனெனில், தொடக்கமற்ற தொடக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட நாளில் வெளியிடப்படும் அந்த மூலமுதலான அசல் இறை வார்த்தையின் தோற்றம் நான்தான். உங்களுக்கும், உங்கள் அனைவருக்கும் என் அன்பும் ஆசிகளும்.**

பின்னர் ஒரு கடிதத்தில் (1966 ஏப்ரல் 6) எரச் மூலமாக நீதிபதி முகர்ஜிக்கு பாபா இவ்வாறு எழுதினார்:

**நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, மூலமுதலான அசல் இறை வார்த்தையை உச்சரித்ததன் விளைவை உங்களின் இந்த வாழ்விலேயே நீங்கள் காண்பீர்கள்; அதுவரை நீங்கள் எனது தாமனை (மேலங்கி) உறுதியாகப் பற்றிக் கொள்ள விரும்புகிறேன்.**

1966 பிப்ரவரி 27 ஞாயிற்றுக்கிழமை அன்று, ஆதி காலை 9:30 மணிக்கு வாமன், டாக்கே இருவருடன் மெஹராஸாத்திற்கு வந்தார். பாபா அப்போது மண்டபத்தில் இருந்தார், ஒரு மேசையில் படுத்திருந்த அவருக்கு எரச்சும், பாவ் கல்சூரியும் மஸாஜ் செய்யும் ஆயத்தத்தில் இருந்தனர். ஆதியை அருகில் அழைத்து, பாபா “**நான் கடவுள்**” என்று சைகையால் தெரிவித்ததைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளானார் ஆதி. வாழ்நாள் முழுவதும் சேவை செய்த பின்பு, நிச்சயமாக அவர் மெஹர் பாபாவை கடவுள் என்று நம்பினார். பாபாவின் வார்த்தைகள் மேலதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதாகத் தோன்றியது, அது நேரடியாக வெளிப்படுத்தப்பட்டாலும், உண்மை பிடிபடாமல் தப்பிச்சென்றது போல் உணர்ந்தார் ஆதி.

அதே நாளில், கைக்கோபாத்தின் மூத்த மகள் மெஹெரு, மெஹராபாத் மேல்மலையில் சமையலறை தீ விபத்தில் மிகவும் கடுமையான

தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரைத் துறந்தார்; அவருக்கு வயது 44. இறுதி மூச்சை விடும் வேளையில் பாபாவின் இறை நாமம் அவர் உதடுகளில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது. பாபா, "**மெஹெரு என்னிடம் வந்து, பிறப்பு மற்றும் இறப்புச் சுழலிலிருந்து நிரந்தரமாக விடுவிக்கப்பட்டுள்ளார்**" என்று குறிப்பிட்டார்.

கைக்கோபாத் மெஹராஸாத்தில் இருந்ததால் மெஹராபாத் செல்லவில்லை. எனவே பாபா, கைக்கோபாத் குடும்பத்திற்கு ஆறுதல் வார்த்தைகளை வழங்க எரச்சை அனுப்பி வைத்தார். கைக்கோபாத்தின் மனைவி ஜெர்பாய், அவர் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள வரவில்லை என்பதில் பெருமகிழ்ச்சி அடைந்தார். ஜெர்பாய், "அவர் பாபாவின் பணியை விட்டுவிட்டு வந்துவிடக் கூடும் என்று நான் அஞ்சினேன்; அவர் வராததில் மகிழ்ச்சி. மெஹெரு, பாபாவைச் சென்றடைந்ததால் நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?" பாபாவின் இறை அன்பும், இறையாண்மையும் அவரது நெருங்கிய அன்பர்களிடம் எப்படி உயிர்வாழ்ந்தது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. மகளின் மறைவால் பெற்றோர் வருத்தமுறவில்லை.

மெஹெரு பிப்ரவரி 28 அன்று மெஹராபாத் மேல்மலையில் அடக்கம் செய்யப்பட்டார்; அதற்குப் பிறகு, மார்ச் 1 அன்று, ஜெர்பாய், அவரது பிற இரண்டு மகள்கள், குலு, ஜாலு மற்றும் அவர்களது சகோதரர் ரத்தன் ஆகியோரை பாபா மெஹராஸாத்திற்கு அழைத்தார்; மன்ஸாரியும் உடன் சென்றார். பாபா, ஜெர்பாயிடம், "**உங்கள் நம்பிக்கையும் தைரியமும் என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது**" என உறுதிப்பட தெரிவித்தார். பாபாவின் விருப்பத்திற்கு ஜெர்பாய் முற்றிலும் சரணடைந்தது மண்டலியையும் வெகுவாக ஈர்த்தது.

குடும்பத்தினர் பாபாவிடம் இவ்வாறு எடுத்துரைத்தனர்: "மெஹெரு உயிரைத் துறப்பதற்கு முன்னர், அவரது படுக்கைக்கு அருகில் உங்களைப் பௌதீக உருவில் பார்த்தார்; நீங்கள் எங்களை அழைத்து, நீங்கள் அவருடன் இருப்பதாகவும், அவர் இப்போது உங்களிடம் செல்லப்போவதாகவும் கூறினீர்கள்! அதன் பின்னர் அவர் உங்கள் பெயரை இறுதி மூச்சு வரை திரும்பத் திரும்ப உச்சரித்தார்."

பாபா, "**அவர் ஆசீர்வதிக்கப்பட்டவர், இப்போது என்னில் நித்திய ஆனந்தத்தில் இருக்கிறார். அவர் இன்னொரு பிறவி எடுக்க மாட்டார்**" என்று குறிப்பிட்டார்.

நியூயார்க் உலக கண்காட்சியில் 'காட்சி அரங்கம்' (BABA'S CORNER AT THE NEW YORK'S WORLD'S FAIR) **வெற்றியை சந்தித்ததால், கனடாவைச் சேர்ந்த புதிய அன்பரான கேத்தரின் (கே) எம். டிரேப்பர்** (CATHERINE M DRAPER) **1967ஆம் ஆண்டு, மாண்ட்ரீல் கண்காட்சிக்காக** (MONTREAL EXPOSITION) **இதுபோன்ற அரங்கத்தை அமைக்க விரும்பினார். கிட்டி, இது குறித்து ஆதிக்கு எழுதிய கடிதம், பாபா**

முன்னிலையில் வாசிக்கப்பட்டது; அவர் அந்த யோசனைக்கு ஒப்புதல் வழங்கினார்.

1966 மார்ச் 1 அன்று, பாபா இந்தத் தொலைத்தந்தியை கேத்தரின் டிரேப்பருக்கு அனுப்பி வைத்தார்: "'**காட்சி அரங்கம்** (EXPO) **மூலம் எனது செய்தியைப் பரப்புவதற்கு நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்கும் அதை சாத்தியமாக்க உதவிய அனைவருக்கும் என் அன்பான ஆசீர்வாதத்தை வழங்குகிறேன்.**"

பின்னர் அவர்கள் அதே 'உலகளாவிய செய்தி' (UNIVERSAL MESSAGE) அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை தொடர்ந்து விநியோகிக்க அல்லது ஒருவேளை அவர் ஏதேனும் சிறப்புச் செய்தியை வழங்க விரும்புகிறாரா என்று கிட்டி யோசிக்கத் தொடங்கிய வேளையில், பாபா இவ்வாறு பதிலளித்தார்: **"உலகளாவிய செய்தி' எல்லா காலத்திற்கும் உலகளாவியதாகவே உள்ளது, மேலும் அதில் எந்த மாற்றமும் அல்லது வேறு எந்த சிறப்புச் செய்தியும் வழங்குவதாக இல்லை.**"

மார்ச் 6 அன்று ரமா, மெஹர்நாத், ஷீலா ஆகியோர் வாமன், டாக்கே மற்றும் ஆதியுடன் மெஹராஸாத்திற்கு வந்தனர்.

டேவிட் மைக்கேல் 'மிக்' ஹாமில்டன் (DAVID MICHAEL 'MIK' HAMILTON, **23**) என்ற அமெரிக்கர் மற்றும் அவரது ஜெர்மன் மனைவி அர்ஸூலா 'உஸ்ச்சி' ரயின்ஹார்ட் (URSULA 'USCHI' REINHART, **21**), ஸ்டீவ் ஸைமன் மூலமாக மெஹர் பாபாவைப் பற்றி அறிந்து கொண்டனர். 1965 நவம்பர் மாதத்தில் சிங்கப்பூரிலிருந்து மும்பைக்குச் செல்லும் பயணச் சீட்டிற்காக, ஸைமனுக்கு அவர்களிடமிருந்த கடைசிப் பணத்தில் சிறிதைக் கொடுத்து உதவினர். இந்த ஜோடி 1963இல் ஜெர்மனியில் சந்தித்த போது, அங்கு நிலைநிறுத்தப்பட்ட அமெரிக்க இராணுவத்தில் மிக் பணிபுரிந்தார். அடுத்த ஆண்டு, அவர் இராணுவத்திலிருந்து வெளியே வந்ததும், இருவரும் திருமணம் செய்து கொண்டனர்; 1964 கோடையில் ஐரோப்பா மற்றும் ஆசியா முழுவதும் வேறு வேறு இலவச முறைகளைக் கையாண்டு பயணத்தை மேற்கொண்டனர்.

அவர்கள் சிங்கப்பூரில் ஸ்டீவ் ஸைமனை சந்தித்த வேளையில், இருவரும் அதிக அளவிலான போதைப்பொருட்களைப் பயன்படுத்தி வந்தனர், அவற்றில் சிலவற்றை ஸைமனுக்கும் வழங்கினர்; ஆனால் ஸைமன் அதை மறுத்துவிட்டார், "நான் போதைப்பொருள் உட்கொள்ளாமல் இருக்க முயற்சிக்கிறேன்," மேலும் அவர் மெஹர் பாபாவை அவதார புருஷர் என அறிந்து கொண்டதால், அவரை சந்திப்பதற்காக இந்தியாவிற்குச் சென்று கொண்டிருந்தார்; அவரைப் பின்பற்றுபவர்கள் போதைப்பொருட்கள் பயன்படுத்துவதை பாபா விரும்பவில்லை.

மிக், அர்ஸூலா இருவரும் ஸைமனைப் போலல்லாமல் முன்னர் இந்தியாவில் பயணம் செய்தவர்கள், ஸைமனின் கூற்றை சந்தேகக் கண்களால் பார்த்தனர்: "இதோ பாருங்கள், நீங்கள் போதைப்பொருட்களை பயன்படுத்த

விரும்பினால், நீங்களே வேறொரு 'பாபா'வைக் கண்டுகொள்ளலாம்" என்று அர்ஸூலா கூறினார். "இந்தியாவில் ஆயிரக்கணக்கான 'பாபா'க்கள் உள்ளனர்! அவர்களில் பெரும்பாலானோர் போலிகள்! உங்களின் நல் அதிர்ஷ்டத்திற்காக வாழ்த்துகிறோம், ஆனால் அபரிமிதமான நம்பிக்கை வேண்டாம்!"

மிக், அர்ஸூலா இருவரும் கங்கை நதிக்கரையில் சாதுக்களுடன் வாழ்ந்திருந்ததாலும், 'பாபா'க்கள் என்று அழைக்கப்படும் பலரை சந்தித்ததாலும், இதைக் குறித்து அறிந்திருந்தனர்.

மெஹர் பாபா மற்றும் அவரது போதனைகளைப் பற்றி ஸ்டீவ் ஸைமன் அறிந்ததை இருவருக்கும் விளக்கியதைக் கேட்டு, அவர்களும் ஆச்சரியமடைந்தனர். அவர்களின் மோசமான நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, தம்பதியர், மும்பையை நோக்கிச் சென்ற கப்பலில், ஸைமனுக்கு ஒரு வழிக்கான பணத்தைச் செலுத்த முன்வந்தனர். ஒரே கப்பலில் பயணம் செய்து, இருவரும் இலங்கையில் இறங்கி, பின்னர் அவர்கள் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டு, 1965 டிசம்பர் 31 அன்று மும்பையை வந்தடைந்தனர். ஒரு முறை பூனாவைக் கடந்து செல்லும் வேளையில், மெஹர் பாபா சில நேரங்களில் அங்கு வசிப்பதாக ஸைமன் கூறியதை நினைவு கூர்ந்து, அவரைக் கண்டுகொள்ள முயன்றனர். ஒரு மூன்று சக்கர வாகன ஓட்டுநர் அவர்களை குருபிரசாத்திற்கு அழைத்துச் சென்றபோது, அவர்கள் அதிர்ச்சியடைந்தனர், ஏனெனில், இருவரும் இதற்கு முன்பு தொடர்பு கொண்ட 'புனித மனிதர்கள்' எவரும் இதுபோன்ற அரண்மனையில் வாழவில்லை!

பாபா இங்கு இல்லை என்று கூறி அவர்களை பூனா மெஹர் பாபா மையத்திற்கு அழைத்துச் செல்லுமாறு ஓட்டுநரிடம் ஒருவர் கூறினார். அங்கு, ராமகிருஷ்ணன் அவர்களிடம், பாபா அஹமதுநகரில் வசிப்பதாகவும், தமது உலகளாவிய பணியில் மும்முரமாக இருப்பதாகவும், எவரையும், அவரது நெருங்கிய அன்பர்களைக் கூட பார்க்காமல், ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதாகவும் தெரிவித்தார். ஆயினும்கூட, அவர் பாபாவிற்கு அவர்களைப் பற்றிய ஒரு செய்தியை அனுப்ப முன்வந்தார், மேலும் பதிலுக்காக மூன்று நாட்களில் மீண்டும் வருமாறு கூறி அனுப்பினார். அவர்கள் பாபாவின் புகைப்படத்தை முதன் முதலில் பூனா மையத்தில் பார்த்தனர்.

அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பிச் சென்றதும், மைக் எல்.எஸ்.டி போதைப்பொருள் விநியோகம் செய்த ஒரு அமெரிக்க சக பயணியை சந்தித்தார். அன்று இரவு மைக் தனது புதிய நண்பருடன் எல்.எஸ்.டி. போதை மருந்தை உட்கொண்டார்; அர்ஸூலா அதை உட்கொள்ளவில்லை. அடுத்த நாள் காலை, பாபாவின் எச்சரிக்கை குறித்து ஸ்டீவ் ஸைமன் கூறியதை நினைவுகூர்ந்து, போதைப்பொருள் உட்கொண்டதில் மிக் முதன்முறையாக மிகுந்த குற்ற உணர்வை உணர்ந்தார். மிக், அர்ஸூலாவிடம், "மெஹர் பாபாவைப் பற்றி நமக்கு உறுதியாகத் தெரிந்த ஒரே விஷயம் என்னவெனில், நாம் போதைப்பொருள் உட்கொள்வதை அவர் விரும்பவில்லை. அவர் மேன்மையான மனிதராக இருந்தால், அவரைப் பார்க்க நான் தகுதியற்றவன், எனவே நாம்

ஹைதராபாத்தை நோக்கி பயணத்தைத் தொடர வேண்டும். அங்கே நாம் உண்மையான குருவைக் காண்போம்." பாபாவின் பதிலை எதிர்நோக்கி அவர்கள் பூனா மையத்திற்குத் திரும்பிச் செல்லவில்லை.

வழியில், அந்நியன் ஒருவன் அவர்களிடம், "மும்பைக்குத் திரும்பிச் செல்லுங்கள்" என்று கூறிய அடுத்த கணமே, இலக்கின்றி இருந்த அவர்கள் திரும்பி மும்பைக்குச் சென்று, போதைப்பொருளின் பழக்கத்தைக் கைவிடும் நோக்கத்தில் இறுதி முறையாக ஒரு பெரிய வீதியில் பல நாட்கள் ஹாஷிஷ் (HASHISH) புகைத்தனர்.

கடைசியாக டெல்லி செல்ல முடிவு செய்து, அஹமதாபாத் செல்லும் ஒரு சரக்கு வண்டியில் சவாரி செய்து, பின்னர் உதய்பூருக்கு மற்றுமொரு சவாரியை மேற்கொண்டனர். அங்குச் சென்று, மிக், பகவத் கீதையைப் படிக்கத் தொடங்கினார், மேலும் கிருஷ்ணரின் போதனைகள் குறித்த கீதையின் பக்கங்களைப் படிக்கும் ஆர்வத்தில் இருந்தார்: "**எனது வெளிப்படையான மனித வடிவத்தை யார் ஒருவர் வணங்குகிறார்களோ, அவர்களை நான் பிறப்பு-இறப்பு எனும் கடலிலிருந்து விரைவில் மீட்டெடுப்பேன்.**" மிக் மனதில் இடைவிடாத கேள்வி எழுந்தது: "மனித வடிவில் நீ எங்கே இருக்கிறாய்?"

உதய்பூரை விட்டு வெளியேறிய மிக், அர்ஸுலா தம்பதியர் பிரதான சாலையை விட்டு விலகி, வழி தவறி, ராஜஸ்தானின் மலைப் பகுதியில் நுழைந்தனர். நாத்துவாராவிற்குச் (NATHDWARA) செல்லும் ஒரு நபர், அவர்களை தனது ஜீப்பில் ஏற்றிச் சென்றார். நாத்துவாரா வந்தடைந்ததும், அந்த மனிதர் முதலில் புகழ்பெற்ற கிருஷ்ணர் கோவிலில் (ஸ்ரீ நாத்ஜி) நின்று பூஜை செய்ய வேண்டும் என்று கூறினார். 'அவருடன் கோயிலுக்குள் வர விருப்பமா' என்று மிக்கிடம் கேட்க, மிக் உள்ளே நுழைந்ததும், கோவிலில் இருந்த கூட்டம் அவர் இந்து அல்லாததால் உள்ளே அனுமதிக்கவில்லை. கோவிலுக்கு வெளியே வந்ததும் "நீ எங்கே இருக்கிறாய்?" என்ற கேள்வி மட்டுமே மிக் மனதில் மேலோங்கி நின்றது; இரு கைகளையும் மேலே வீசி எறிந்து, "நீ எங்கே இருக்கிறாய்?" என உரத்த குரலில் கேட்டு, தனது முழங்கால்களில் கீழே விழுந்த அவ்வேளையில் "பாபா" என்ற குரல் அவர் மனதில் திரும்பத் திரும்ப ஒலித்தது. பேசவும், நடக்கவும் முடியாமல் திகைத்துப் போனார். அர்ஸுலா அவரை ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, இருவரும் டெல்லிக்கு ரயிலில் பயணம் செய்தனர். (பல ஆண்டுகளுக்குப் பிறகு, 'நாத்-துவாரா' என்றால் 'இறைவனைச் சென்றடையும் வாசல்' என்று மிக் கண்டுபிடித்தார்.)

டெல்லியை சென்றடைந்த மிக், அவருக்கு என்ன நடந்தது என்பதை உணர முடிந்தது. அவர் கிருஷ்ணரை அழைத்தார், அவர் பதிலளித்தார் - அவர் மெஹர் பாபாவின் உருவில் இருப்பதை உணர்ந்தார். மெஹர் பாபாவைப் பார்க்க அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டும் என்று அவர் அர்ஸுலாவிடம் கூறியபோது, அவரால் அதை ஏற்றுக்கொள்வது கடினமாக இருந்தது. "இது 800 மைல் தொலைவில் உள்ளது!" என்று கூறி எதிர்ப்புத் தெரிவித்தார். "அங்கு

இப்போதுதான் சென்று வந்தோம்! நீங்கள் ஏன் இந்த 'பாபா'வைப் பார்க்க விரும்புகிறீர்கள்?"

ஆனால் மிக், அவர்கள் அங்குச் செல்லவேண்டும் என்று வற்புறுத்தவே, 1966 ஜனவரி 22 அன்று பாபாவிற்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

அன்பு நிறைந்த கடவுளே, எங்களின் விழிப்புணர்வுக்காக நாங்கள் உங்களிடம் சரணடைய தயாராக இருக்கிறோம். உமது அருளை வேண்டுகிறோம். நாங்கள் உங்களிடம் வந்துள்ளோம்; அஹமதுநகரில் உங்கள் முன்னால் நாங்கள் வர வேண்டுமா?

மூன்று நாட்களுக்குப் பிறகு, பாபாவிடமிருந்து பதில் வந்தது:

**அஹமதுநகருக்கு வர வேண்டாம். என்னை இதயப்பூர்வமாக நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் எங்கிருந்தாலும் எனது பிரசன்னத்தை உணர்வீர்கள். உங்களுக்கு என் அன்பு வாழ்த்துக்கள். எனது அன்பர் வாஸ் தேவ் கெய்ன், '16, பிரசிடெண்ட் எஸ்டேட், புது டெல்லி'** (16, PRESIDENT ESTATE, NEW DELHI) **என்ற முகவரியில் அவரைத் தொடர்பு கொள்ளவும்.**

தொலைத்தந்தி வந்ததும், 'பாபா அவர்களை ஒரு கணம் நினைவு கூர்ந்ததை நினைத்துப் பார்த்த அவ்வேளையில், மிக்கின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது."

இருவரும் வாஸ் தேவ் கெய்னின் இல்லத்திற்குச் சென்றனர். அவர்களைத் தனது வீட்டில் தங்கவைக்கவோ, அவர்களுக்குப் பண உதவி வழங்கவோ கூடாது என்று கெய்னுக்கு பாபா அறிவுறுத்தி இருந்ததால், மெஹர் பாபாவின் இரண்டு சொற்பொழிவுகளை அவர்களுக்கு வழங்கினார். ஒரு புத்தகக் கடையில் மிக், 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் ஒரு பிரதியை வாங்கினார், அதை அவர் ஒரே அமர்வில் படித்தார்! 'காட் ஸ்பீக்ஸ்' குறித்து பின்னர் அவர் கூறியதாவது, "இது எனது வாழ்க்கையின் அறிவு ரீதியாக, மிகவும் திருப்திகரமான அனுபவம். சூடான ரொட்டியில் வெண்ணெய் உருகியது போல வார்த்தைகள் எனது மனதில் பாய்ந்தன; கிட்டத்தட்ட வார்த்தைகள் என்னிலிருந்து வந்தது போல் இருந்தது. இதுபோன்ற அதிகாரத்தை நான் இதுகாறும் உணர்ந்ததில்லை."

கெய்னின் ஆலோசனையின் பேரில் அவர்கள் தங்களைப் பற்றி மேலும் எடுத்துரைத்து பாபாவிற்கு மீண்டும் கடிதம் எழுதினர். ஆதி சீனியர் மூலமாக, பாபா இந்த பதிலை அனுப்பினார்:

**29 ஜனவரி 1966**

**அன்புள்ள மிக் ஹாமில்டன்,**

**23ஆம் நாள் நீங்கள் வரைந்த அன்பான வார்த்தைகள் அன்பிற்குரிய பாபாவிற்கு அவரது ஏகாந்தவாச வேளையில் வாசிக்கப்பட்டது.**

**அவருக்கான உங்கள் உன்னதமான உணர்வுகளை வெளிப்படுத்தியதில் பாபா மகிழ்ச்சியடைந்தார், ஆனால் அவர் ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதால் நீங்களும் உங்கள் மனைவியும் அவரிடம் இப்போது வர வேண்டாம் என்று அவர் விரும்புகிறார். இந்தியாவில் உங்களின் திட்டங்கள்,**

**நிகழ்ச்சிகள், நீங்கள் எவ்வளவு காலம் தங்கியிருக்க விரும்புகிறீர்கள், எப்போது, எப்படி உங்கள் இல்லத்திற்குத் திரும்பப் போகிறீர்கள் என்று எனக்கு (ஆதி கே. ஈரானி) எழுத வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார். அன்புக்குரிய பாபா நீங்கள் இருவரும் கூடிய விரைவில் தாயகம் திரும்பவும், நீங்கள் எங்கிருந்தாலும், எங்குச் சென்றாலும் அவரை முழு மனதுடன் நினைவுகூர வேண்டும் என்று வாழ்த்துகிறார்.**

**அன்பான பாபா உங்கள் இருவருக்கும் அவரது அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறார், மேலும் அவர் தனது தற்போதைய ஆழ்ந்த ஏகாந்தவாசத்தின் காரணமாக தனது அன்பர்களைப் பார்க்க அனுமதிக்கவில்லை என்று மீண்டும் கூறுகிறார்.**

ஆதி அவர் எழுதிய கடிதத்தின் நகலை வாஸ் தேவ் கெய்னுக்கு அன்றே அனுப்பி, மேலும் கூறியதாவது:

**திரு மற்றும் திருமதி ஹாமில்டன் இருவரும் விரைவில் தங்கள் தாயகத்திற்குத் திரும்பிச் செல்லவும், அவரை முழு மனதுடன் தொடர்ந்து நினைவுகூரவும் அவர் விரும்புகிறார் என்பதை நீங்கள் தெரிவிக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார். அவர்கள் அஹமதுநகர் அல்லது பூனாவிற்கு தரிசனம் செய்ய வருவதை அவர் நிச்சயமாக விரும்பவில்லை என்பதை பாபா அவர்கள் மனதில் பதிய வைக்க விரும்புகிறார்.**

இவை அனைத்தும் அன்பான பாபாவின் வழிகாட்டுதல்கள், இருவரும் அவற்றைப் பின்பற்றினால், அது அவர்களுக்கு நற்பயனை விளைவிக்கும்.

ஹாமில்டன் தம்பதியருக்கும் ஆதிக்கும் இடையே கடிதப் பரிமாற்றம் தொடர்ந்தது. மரிஜுவானா (MARIJUANA), ஹாஷிஷ் (HASHISH), ஹெராயின் (HEROIN) மற்றும் பிற போதைப்பொருட்களை உட்கொண்டதாக இருவரும் பாபாவிடம் தெரிவித்தபோது, '**அவற்றை தவிர்க்க வேண்டும்**' என்று அவர் பதிலளித்தார்; அன்று முதல் அவர்கள் அதைச் செய்வதாக உறுதியளித்தனர். தங்களுக்கென உண்மையில் இல்லம் ஒன்று இல்லை ஆதலால் இந்தியாவைத் தங்கள் இல்லமாக்க விரும்புவதாக அவர்கள் விளக்கினர். (ஜெர்மனியில் போதைப்பொருள் விற்பனை செய்ததற்காக, முன்னர் அர்ஸுலா கைது செய்யப்பட்டதால், அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்ல முடியாது என்ற எண்ணத்தில் இருவரும் இருந்தனர்.)

'**எப்படியும் அவர்கள் அங்குச் செல்ல முயற்சிக்க வேண்டும்**' என்று பாபா பதிலளித்தார். தூதரகத்தில் விண்ணப்பித்த வேளையில், அவர்களை ஆச்சரியப்படுத்தும் வகையில், அமெரிக்காவிற்குள் நுழைய அர்ஸுலாவிற்கு விஸா வழங்கப்பட்டது.

பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, இருவரும் விரைவில் அமெரிக்காவிற்குப் புறப்படப் போவதாகக் கடிதம் எழுதினர். மீண்டும் ஆதியிடமிருந்து ஒரு சிறப்புக் கடிதம் வந்தது, '**அவர்கள் இருவரும் மார்ச் 7ஆம் தேதி காலை 9:00 மணிக்கு, ஐந்து நிமிடங்களுக்கு மட்டும் அவரைப் பார்க்க அனுமதிக்க பாபா முடிவு செய்துள்ளதாகவும் - ஆனால் அதே நாளில்**

**அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்லும் பயணத்தை மேற்கொள்ளவேண்டும்**' என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

டெக்கன் பீடபூமிக்கு திரும்பிச் செல்வதைக் குறித்து அர்ஸுலா மிகுந்த அச்சத்தை வெளிப்படுத்திய அதே வேளையில், மிக் பரவசத்தில் ஆழ்ந்தார். “பாபாவின் தொலைத்தந்தி எனது கைகளை எட்டியபோது, நான் அடைந்த மகிழ்ச்சியை என்னால் சொல்ல முடியாது,” என்று அவர் நினைவு கூர்ந்தார்.

பயணத்தின் கடைசி கட்டத்தைத் தவிர, முழு வழியையும் அவர்கள் எப்படியோ கடந்து சென்றனர். 1966 மார்ச் 7ஆம் தேதி திங்கட்கிழமை அவர்களை ரயில் நிலையத்தில் சந்திப்பதாக ஆதி எழுதியிருந்ததால், மன்மாட் ரயில் நிலையத்திலிருந்து அவர்கள் அஹமதுநகருக்குப் புறப்பட்டனர். ரயில் சற்று தாமதமாக வந்தது, ஆதி அவர்களை நேராக மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். ஆதி காரை நிறுத்திவிட்டு, வழக்கம் போல் இருவரையும் மண்டலி மண்டபத்திற்கு வெளியே ஒரு நீள் இருக்கையில் அமரச் சொல்லி, அவர்கள் வந்துவிட்டதை பாபாவிடம் தெரிவிக்க உள்ளே சென்றார்.

அவதார புருஷரின் முன்னிலையில் அவர் என்ன செய்வார் என்று மிக் பதற்றமடையத் தொடங்கினார்: ‘நாம் அவருக்கு நமஸ்காரம் செய்யலாமா, அவர் பாதங்களில் விழுந்து வணங்கலாமா? அவரது காலடியில் சரணடைய தேங்காய் கொண்டு வந்திருக்க வேண்டும். ...நான் அவரிடம் என்ன சொல்வேன், அவர் வேறு மௌனமாக இருக்கிறாரே!’ என்ற சிந்தனை ஓட்டத்தில் இருந்தார்.

ஆதி அப்போது வெளியே வந்து, “**மெஹர் பாபா அவருக்கு நமஸ்காரம் செய்யவோ, அவரது பாதங்களைத் தொடவோ வேண்டாம் என்று அறிவுறுத்துகிறார். பாபா உங்களைத் தழுவ விரும்புகிறார்**” என்றார். அவர்களின் குழப்பம் தீர்ந்தது. இருவரும் மண்டபத்திற்குள் நுழைந்தனர், மண்டலியைப் பார்த்தனர், பின்பு வலதுபுறம் திரும்பி பாபா அவரது நாற்காலியில் அமர்ந்திருந்ததைக் கண்டனர். பாபா, அவர்கள் முன்னே வந்து அவரைத் தழுவுமாறு சைகையால் தெரிவித்தார். மிக் முதலிலும் பின்னர் அர்ஸுலாவும் சென்றனர். பாபா இருவரையும் அவருக்கு எதிரே இருந்த சுவரில் சாய்ந்த வண்ணம் அமருமாறு சைகையால் தெரிவித்தார். ஆதி, பாபாவின் நாற்காலிக்கு அருகில் தரையில் அமர்ந்தார்.

பின்பு நடந்ததை, மிக் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

எனது கண்கள் நேராக நான்கு ஐந்து அடி தூரத்தில் அமர்ந்திருந்த பாபாவை நோக்கி, நான் நடக்கத் தொடங்கிய அந்த கணத்தில் அறை பெரிதாகிக்கொண்டே இருப்பது போலத் தோன்றியது. பாபா மிகவும் அருகாமையில் இருந்தாலும், வெகு தொலைவில் இருந்தது போலவும், என்னால் அங்குச் செல்ல முடியாதோ எனவும் அஞ்சினேன். அப்போது திடீரென பாபாவின் கைகள் மேலே சென்றன; அவர் அரவணைப்பதற்காக அவரது கரங்களால் என்னைப் பற்றிக் கொண்டிருந்தார். அதுவே எனது வாழ்வில் நான் அடைந்த மிகவும் விலைமதிப்பற்ற, நிலையான ஸ்பரிச உணர்வு. அவர் கைகளைப் பதித்த எனது தோள்களில் அதை இன்னும் என்னால் உணர முடிகிறது.

எனது வாழ்நாளில் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக, எதையும் நான் இதுகாறும் உணர்ந்ததில்லை. தடைகள் அனைத்தும் முற்றிலும் தவிர்க்கப்பட்டதாக நான் உணர்ந்தேன். என்னை நான் அறிந்திருப்பதை விட அதிகமாக, பாபா என்னை அறிந்திருக்கிறார் என்பதை உறுதியாக நம்பினேன்; மேலும் சில நம்பமுடியாத, விசித்திரமான முறையில் என்னால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு, அவர் உண்மையில் எனது சுய 'இறை ஆன்மா' என்பதையும் நான் அறிந்தேன்.

பாபாவைப் பற்றிய அர்ஸூலாவின் முதல் பதிவுகள்:

பாபாவின் சைகைகளை எரச் விளக்க ஆரம்பித்ததும், நான் கவனித்த முக்கியமான விஷயம் என்னவெனில், அவர் மிகவும் சிறியவர். பாபா பெரிய அளவிலான மனிதர் இல்லை. நாற்காலி ஏறக்குறைய அருகாமையில் அவரைச் சுற்றி அமைந்தது. அவர் மிகவும் வெளிர் நிறத்தில் காணப்பட்டார். அவரது நிறம் ஆரோக்கியமாக இல்லை என்பதைக் குறித்தது போல, கிட்டத்தட்ட சாம்பல் நிறமாக இருந்தது. அவர் சோர்வாகவும் வயதானவராகவும் காணப்பட்டார். அது ஏதோ ஒரு விதத்தில் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால் அவர் பேசத் தொடங்கியதும், முற்றிலும் வித்தியாசமாகத் தோற்றமளித்தார். அவர் மிகவும் சோர்வாகவோ, வயதானவராகவோ அல்லது நோய்வாய்ப்பட்டவராகவோ தோன்றவில்லை. அவரது அதீத சக்திவாய்ந்த கண்களைப் போல நான் இதுகாறும் பார்த்ததில்லை - மிகவும் அழகாகவும், அன்பாகவும், இதமாகவும், வலிமையாகவும் இருந்தன; அவை அனைத்து வெளியளவிலான உடல் பலவீனங்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவது போலத் தோன்றியது. பாபாவின் கண்கள் அறையைச் சுற்றிச் சுழன்றன, ஒன்று அல்லது இரண்டு வினாடிகளுக்கு மேல் எந்த ஒரு பொருளிலும் பார்வையைப் பதிக்கவில்லை. அவரது கைகளை நாற்காலியின் கைத்தாங்கல்கள் மீது வைத்த வண்ணம், விரல்கள் வட்டத்தில் சுழன்றது கண்களைக் கவரும் காட்சியாக இருந்தது! பாபாவின் கால்களும் கைகளும் ஓர் இளம் பெண்ணின் உடல் உறுப்புகளைப் போலவே மிகவும் அழகாக இருந்தன.

"**எப்படித் தூங்கினீர்கள்?**" என பாபா வினவினார்.

ஒரு கண நேரம் கூட கண்களை மூடவில்லை என்றாலும், "நன்றாகத் தூங்கினோம்," என்று பதிலளித்தனர்.

மிக்கைப் பார்த்து பாபா, "**உடல் மிகவும் மெலிந்து காணப்படுகிறீர்கள், நீங்கள் நலமாக இருக்கிறீர்களா?**" என்று கேட்டார்.

அதற்கு மிக், "ஆம், நான் நலமாக இருக்கிறேன். இது எனது வழக்கமான உடல் அமைப்பும் எடையும்" என்று பதிலளித்தார்.

"**நீங்கள் அதிக சப்பாத்தி சாப்பிட வேண்டும்**," என்று சப்பாத்தி செய்வது போல் கைகளைத் தட்டி பாபா அறிவுறுத்தினார். இருவரும் சைவ உணவு உண்பவர்கள் என்று பாபாவிடம் கூறினர்.

மிக் தாடி வைத்திருந்தார்; அவரை அடையாளம் காட்டும் விதத்தில் பாபா தாடியிலும் கன்னத்திலும் வருடி அவரை 'ஹோ சி மின்' (HO CHI MINH - வட

வியட்நாம் நாட்டின் தற்போதைய கம்யூனிஸ்ட் ஜனாதிபதி) என்று குறிப்பிட்டார். அர்ஸூலாவிற்கான பாபாவின் அடையாளம் அவரது கட்டைவிரல் மற்றும் ஆள்காட்டி விரலால் உருவாக்கிய ஆங்கில 'யு' (U) என்ற எழுத்து.

பாபா அவர்களுக்கு '**குழந்தைகள் உள்ளனவா**' என்று கேட்டதற்கு, அவர்கள் "இல்லை" என்று பதிலளித்தனர்.

அப்போது பாபா, "**உங்களுக்கு குழந்தைகள் வேண்டுமா?**" என வினவினார்.

மிக் "வேண்டாம்" என்றார்.

அர்ஸூலா, "ஒருவேளை பின்னர் விரும்பலாம்" என்று பதிலளித்தார்.

பாபா கேட்டார், "**நான் யாரை மகிழச் செய்ய வேண்டும்? 'மிக், நீங்கள் உஸ்ச்சியை நேசிப்பதானால் அவரையும், உஸ்ச்சி, நீங்கள் மிக்கை நேசிப்பதானால், மிக்கையும் மகிழ்வுறச் செய்ய வேண்டும்' என்று சொல்லுங்கள்**."

பாபா தன்னைத் தானே மகிழ்விக்க வேண்டும் என்று மிக் ஏதோ பதிலளித்தார்.

அப்போது பாபா மிகவும் தீவிரமாகப் பார்த்தார். அறையில் அனைத்தும் சுருங்குவது போன்ற ஓர் உணர்வுடன் அமைதி வியாபித்திருந்தது. பாபா அப்போது "**போதை மருந்து உட்கொள்வதை நிறுத்திவிட்டீர்களா?**" என்று கேட்டார்.

"ஆம், பாபா, உங்கள் உத்தரவு வந்ததும்," என்றனர்.

அர்ஸூலா நினைவு கூர்ந்தார்: "பாபா மிகவும் அழகாக சிரித்தார், உலகம் முழுவதும் மகிழ்ச்சியாக இருந்தது போலத் தோன்றியது! நாங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்ததால், பாபா மகிழ்ச்சியாக இருந்தார் என்பது தெளிவாகத் தெரிந்தது."

மிக் நினைவு கூர்ந்தார்: "பாபா சிரித்தபோது அனைத்தும் ஒளிர்ந்தது! மேல் கூரை எங்கோ பறந்து சென்றது; சுவர்கள் பரந்து விரிந்தன!" பாபா மகிழ்ச்சியில் பிரகாசித்ததால், சுற்றுப்புற சூழலும் அதுபோலவே மேலோங்கி நின்றது.

பாபா "**போதை மருந்து ஆகாது**! ('NO DRUGS'!)" என்ற தனது செய்தியை மீண்டும் கூறினார். '**மரிஜுவானா புகைப்பதன் மூலமோ, எல்.எஸ்.டி. அல்லது வேறு எந்த போதைப் பொருட்களை உட்கொள்வதன் மூலமோ, இறைநிலையை ஒருவர் உணர முடியாது**' என்று விளக்கினார். "**அன்பினால் மட்டுமே இறைவனை அடையப் பெற முடியும்**" என்றார் அவர்.

"**நீங்கள் 'கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தீர்களா?**"

மிக் "ஆம்" என்றும், அர்ஸூலா "இல்லை, அது மிகவும் கடினமாக இருந்தது" எனவும் பதிலளித்தனர். அவர் ஆங்கில மொழியில் படிக்க சற்று சிரமம் இருப்பதாக விளக்கினார். **ஹில்டே ஹால்பெர்னின்** (HILDE HALPERN) **ஜெர்மன் புத்தகமான 'லீப் அண்ட் வெய்ஷெய்ட்' (**LIEBE UND WEISHEIT - அன்பும் ஞானமும்) **புத்தகத்தைப் படிக்க முயற்சிக்குமாறு** பாபா பரிந்துரைத்தார்.

“**நீங்கள் ‘ஸ்டே வித் காட்’** (STAY WITH GOD)’ **புத்தகத்தைப் படித்தீர்களா?**” என்று பாபா கேட்டார்.

“‘**கடவுள் பேசுகிறார்**’ (GOD SPEAKS) **மற்றும் ‘ஸ்டே வித் காட்**’ (STAY WITH GOD)’ **இரண்டும் படிக்க வேண்டிய மிக முக்கியமான புத்தகங்கள்**” என்று அவர் மேலும் கூறினார்.

சில கணங்களுக்குப் பிறகு, பாபா, “**நான் யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? என்னை யாராகப் பார்க்கிறீர்கள்?**” என்று கேட்டு மிக்கைப் பார்த்தார்.

மிக் பதிலளித்தார், “நீங்கள் மனித உருவில் வாழும் (கடவுள்) கிறிஸ்து!”

மிக், இதை ஒருபோதும் வெளிப்படையாகக் கூறாதது, அர்ஸுலாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பாபா, அர்ஸுலாவைப் பார்த்து, “**நான் யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**” என வினவினார்.

“எனக்கு இது குறித்த எந்தக் கருத்தும் இல்லை; எனக்குத் தெரியாது” என்றார்.

பாபா கூறினார்: “**நான் மனித உருவில் வருகை தந்த கடவுள்; நான் இதை இடைவிடாமல் தொடர்ந்து அனுபவிப்பதால் நான் அறிவேன். நீங்கள் ஒரு பெண் என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒருபோதும் உங்களிடம் ‘நான் பெண்ணா அல்லது ஆணா?’ என்று கேட்கமாட்டீர்கள். அதைப் போலவே, நான் மனித உருவில் வாழும் கடவுள் என்ற நிலையான அனுபவத்தின் மூலம் எனக்குத் தெரியும்.**”

பாபா கூறியதைக் கேட்டு அர்ஸுலா தனது உணர்வுகளை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நான் அங்கே அமர்ந்திருந்த வேளையில், பாபா என்னை நேரடியாகப் பார்த்து, அவர் கடவுள் என்று என்னிடம் கூறினார்! அது முற்றிலும் எனது மனதை உலுக்கியது. நான் உணர்ந்த மற்றும் உணர முடிந்த ஒரே விஷயம், அவர் யார் என்பதை மட்டுமே. முழு அதிகாரத்துடன் அவர் கூறிய விதம் எனது மனதில் எந்த சந்தேகத்திற்கும் இடமளிக்கவில்லை; அத்தனை எளிமையாக இருந்தது.

இது என்னை நிலைகுலையச் செய்தது; நான் கண் கலங்கி அழ ஆரம்பித்தேன், எனது அமைதியை முற்றிலும் இழந்தேன். நான் அழுதேன், தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தேன்; என்னிடம் கைக்குட்டை இல்லாததால், எனது கம்பளிச் சட்டையின் மேல் கைப் பகுதியில் எனது மூக்கில் வழிந்த நீரைத் துடைக்க வேண்டியிருந்தது.

“**நீங்கள் ஏதேனும் கேள்விகள் கேட்க விரும்புகிறீர்களா?**” என்று பாபா கேட்டார்.

அர்ஸுலா, “இல்லை” என்று முணுமுணுக்க, மிக் அவரிடமும் எந்தக் கேள்வியும் இல்லை என்று கூறினார்.

“பாபாவிடம் உங்கள் மனதில் எழுவதைக் கேட்க இதுவே வாய்ப்பு!” என அவரது மனதில் பட்டதை சொல்லுமாறு ஆதி வற்புறுத்தினார்.

மிக், பாபாவிடம், “ஒருவேளை, நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் உங்களை எங்களால் நேசிக்க முடியாது, ஆனால் நாங்கள் உங்களுக்கு 100 சதவிகிதம் கீழ்ப்படிவதாக உறுதியளிக்க முடியும்” என்றார்.

பாபா பதில் கூறாமல், மாறாக, “**அமெரிக்காவிற்கு எப்படிப் போகப் போகிறீர்கள்?**” என்று விசாரித்தார். ஜெர்மனியை எப்படியேனும் சென்றடைந்து, அங்கிருந்து அமெரிக்கா செல்வதற்கான பயணத் திட்டத்தை அவரிடம் கூறினர்.

பாபா உடனே, “**அமெரிக்கா சென்று, இளைஞர்கள் போதைப்பொருள் உட்கொள்வதை நிறுத்தவும்; அவர்களை ஊக்கப்படுத்தி, ஏற்கத்தக்க காரணங்களைக் கூறி, போதைப்பொருளுக்கு அடிமை ஆவதைத் தடுக்கவும்! அதுவே இன்று உலகில் செய்ய வேண்டிய மிக உயர்ந்த ஆன்மீகப் பணியாகும்**” என அறிவுறுத்தினார்.

பாபா, ‘**இருவரும் டெல்லியில் நடந்த பிறந்தநாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார்களா**’ என்று கேட்டார். மேலும் சில கேள்விகளுக்குப் பின்னர், “**உங்களை நீங்கள் எப்பொழுதும் நேசிப்பதை விட, நான் இருவரையும் நேசிக்கிறேன். நான் உங்களுக்கு உள்ளளவில் உதவுவேன். நான் உங்களுக்கு வழங்கும் அன்பைப் பெற்று, உங்களுக்கு வழங்கியதைப் போல பிறருக்கும் தாராளமாக வழங்குங்கள். இப்போது என்னைத் தழுவி, முத்தமிட்டுச் செல்லுங்கள்**” என்றார்.

மிக், பாபாவை அணுகி, அவரது அரவணைப்பைப் பெற்று, அவரை முத்தமிட்டார்; அர்ஸுலாவும் அவ்வாறே செய்தார். பாபா, அர்ஸுலாவின் இரு கன்னங்களிலும் முத்தமிட்டு, ‘**ஆதியுடன் மதிய உணவை உண்டு அன்றைய தினமே புறப்படுமாறு**’ அறிவுறுத்தினார். அவர்கள் சிறிதும் காலம் தாழ்த்தாமல், உடனடியாக அமெரிக்காவிற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

பாபாவை முத்தமிட்டதைத் தொடர்ந்து அர்ஸுலாவின் எண்ணோட்டம்: “எனக்கு அவரது வாசனை நினைவிருக்கிறது. அது பூக்களின் நறுமணமோ அல்லது வாசனை திரவியமோ அல்ல, அவரிடம் ஒரு பச்சிளம் குழந்தையின் வாசனையை நுகர்ந்தேன். ஒரு சுத்தமான வாசனை, அப்போது பிறந்த ஒரு அப்பாவி குழந்தையின் வாசனை.”

அவர்கள் ஆதியுடன் குஷ்ரு குவார்ட்டர்ஸில் மதிய உணவுக்காக அமர்ந்திருந்தபோது, பாபாவிடமிருந்து ‘**பணம் தேவையா?**’ என ஒரு செய்தி வந்தது. ‘**தேவைப்பட்டால், ஆதி அதை அவர்களுக்கு வழங்க வேண்டும்.**’ அவர்கள் திரும்பிச் செல்வதற்குப் போதுமான பணம் இருப்பதாகக் கூறி, அவர்கள் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்று மதியம் 1:50 மணிக்கு அஹமதுநகரிலிருந்து மன்மாட் ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டனர். பின்பு தம்பதியினர் ஜெர்மனிக்கு தரை வழியாகவும் அங்கிருந்து விமானம் மூலம் அமெரிக்காவிற்கும் சென்றனர். மிக், அர்ஸுலா இருவரும் முதலில் நியூயார்க் நகரில் தங்கி, தொடர்ந்து கலிஃபோர்னியா சென்றடைந்ததும், அங்கு அவர்கள் ராபர்ட் ட்ரேஃபஸ், ரிக் சேப்மென், அலன் கோஹென், பவுலா கார்டன் (PAULA GORDON) மற்றும் பலரை

சந்திக்க நேர்ந்தது; பாபாவின் செய்தியை கல்லூரி மாணவர்களுக்கும் 'ஹிப்பிகள்' மற்றும் 'அமிலத் தலை'களுக்கும் ('ACID HEADS' - எல்.எஸ்.டி. உபயோகிப்போர்) எந்த வகையான போதை மருந்துகளையும் எடுத்துக் கொள்வதற்கு எதிராக அவர்களை எச்சரிக்கத் தொடங்கினர்.

1966 மார்ச் 8ஆம் தேதி, டான் மெஹராபாத்திலிருந்து குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு இடம்பெயர்ந்தார். மன்ஸாரி 10ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வருகை தந்தார். 19ஆம் தேதி, சில நாட்கள் தங்குவதற்காக நரிமன் வந்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, 'ஜாம்ஷெட் நவ்ரோஸ்' (ஈரானி புத்தாண்டு) அன்று, பாபா, மெஹராஸாத் மற்றும் மெஹராபாத் மண்டலிக்கு புத்தாண்டு விருந்து தயாரிக்க சகனுக்கு போதிய பணத்தை வழங்க நரிமனை அனுமதித்தார். அன்று காலை அரை மணி நேரம் பாபாவை சந்திக்க குடும்ப சாஸ்திரியும் அவரது மகன் பாஸ்கரும் அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கிடையில், கேக்கி நலவாலாவின் மகன், நவ்ஷேர்வான் (NAOSHERWAN, 19), டெஹ்ரா டூனில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார், ஆனால் 1965 மே மாதத்தில் பூனாவில் பாபாவைப் பார்த்ததிலிருந்து, அவர் சற்று விசித்திரமாக நடந்து கொண்டார். 1966 மார்ச் 19 அன்று, உலகை முற்றிலும் துறந்து, நேரடியாக மெஹராஸாத் செல்வதற்கான முடிவை தனது பெற்றோருக்குத் தெரிவித்தார், அங்கு அவர் பாபாவுடன் மண்டலியில் ஒருவராக வாழ முடியும் என்று நம்பினார். 'பாபா மறுப்பதாக இருந்தால், தொலைதூரத்தில் அமைந்த குகைக்குச் சென்று, பாபாவை தியானம் செய்வேன்' என்றார். அவரது இளங்கலைப் பட்டப்படிப்பிற்கான இறுதித் தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்தன, ஆனால் அவர் அவற்றிற்குத் தோன்றப்போவதில்லை என்ற முடிவைக் கேட்ட அவரது தாயார், இது விஷயத்தில் பாபாவின் எண்ணத்தைக் கேட்டறியும் நோக்கத்தில், ரகசியமாகத் தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார். பாபா அந்த செய்திகளுக்கு செவிமடுத்து இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: "**அவதார புருஷரின் மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொண்ட பிறகு, வெளியளவிலான துறவு என்பது தேவையற்றது. அவதார புருஷருக்குக் கீழ்ப்படிதல் ஒன்றுதான் இன்றியமையாதது.**"

மார்ச் 22 அன்று, பாபா, நவ்ஷேர்வானுக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**துறவு என்பது தேவையற்றது. உங்கள் தேர்வு மிகவும் இன்றியமையாதது. 1967 இறுதி வரை நான் தரிசனம் வழங்கப்போவதில்லை. ஒரு நாள், நான் உண்மையில் யார் என்பதை அறிந்து கொள்ளும் என் அருள் உங்களுக்குக் கிடைக்கும் என்பதில் உறுதியாக இருங்கள். உங்களுக்கும், உங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் என் அன்பும் ஆசிகளும்.**

மேலும் பாபா, சிறுவனுக்கு இந்தக் கடிதத்தை அனுப்புமாறு கூறி இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஆன்மீக ஆர்வலர்களுக்கு துறவு உதவியாக இருக்கும், ஆனால் அவதார புருஷரை நேசிப்பவர்கள் மற்றும் அவரது நேரடி வழிகாட்டுதலின் கீழ் இருப்பவர்கள் எதையும் 'துறக்க' வேண்டியதில்லை! அவதார புருஷரின் அன்பர்கள் அவரின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிந்து அவரை மனதார நேசிக்க வேண்டும்.**

**கல்வியில் கவனம் செலுத்தி, தேர்வை சந்தித்து, அதில் தேர்ச்சி பெற்று, தொடர்ந்து 'க்ளோ'** (GLOW) **இதழை வெளியிடவேண்டும். இவை அனைத்தும் இப்போது உங்கள் பொறுப்பு என்பதை நினைவில் கொள்ளுங்கள் - ஆன்மீக ஆர்வலர் ஒருவரை வழிநடத்த, அவருக்கு அவதார புருஷரின் நேரடி உதவி இல்லாத பட்சத்தில், அனைத்தையும் துறக்க வேண்டிய கட்டாயத்துடன் ஒப்பிடுகையில், நீங்கள் சிறப்பான சூழலில் இருப்பது எவ்வகையிலும் குறைந்தது அல்ல….**

**உங்கள் உலகக் கடமைகள் அனைத்திலும் ஈடுபடும்போது, நீங்கள் அவரை மேலும் மேலும் நேசிக்க வேண்டும்** என்று பாபா விரும்புகிறார்.

1966 மார்ச் 24 அன்று, ஆதி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார்; மேலும் நவ்ஷேர்வானுக்கு அனுப்புவதற்காக மற்றுமொரு தொலைத்தந்தி அவருக்கு வழங்கப்பட்டது:

**ஒரு நாள், நீங்கள் என்னை எனது உண்மை ரூபத்தில் தெரிந்து கொள்ள விரும்பினால், எனக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படியுங்கள். கல்வியில் முழு கவனம் செலுத்தி, தேர்வு எழுதி அதில் தேர்ச்சி பெற வேண்டும்; தொடர்ந்து 'க்ளோ'** (GLOW) **இதழுக்காகப் பணிபுரியுங்கள். உங்களின் தற்போதைய மனப்போக்கைத் தவிர வேறு எதையும் கைவிடாதீர்கள்.**

பாபாவிற்குக் கீழ்ப்படிவதாக நவ்ஷேர்வான் மீண்டும் தொலைத்தந்தி அனுப்பிய வேளையில், பாபா அவருக்கு எரச் மூலம் இவ்வாறு எழுதினார்:

**இது பாபாவை பெரிதும் மகிழ்வித்தது, மேலும் 'இறை-மனிதனுக்குக் கீழ்ப்படிவதே மனித உருவில் வருகை தரும் இறைவனுக்குச் செய்யும் மிக உயர்ந்த வழிபாடு' என்று அவர் மீண்டும் கூறுகிறார். இறுதி தேர்வுக்காக அமருங்கள், நீங்கள் முழு மனதுடன் அவருக்குக் கீழ்ப்படிந்தால், வெற்றி அல்லது தோல்வி என்பது முற்றிலும் முக்கியமல்ல. நீங்கள் தேர்ச்சி பெற்றாலும் தோல்வியுற்றாலும் முடிவை பாபாவிடம் விட்டுவிடுங்கள்.**

எரச், நவ்ஷேர்வானின் தந்தை கேக்கிக்கும் (மார்ச் 30 அன்று) தனிப்பட்ட கடிதம் ஒன்றை எழுதினார்:

**நவ்ஷேர்வானின் விருப்பத்திற்கும், மகிழ்ச்சிக்கும் அனைத்தையும் விட்டுவிட வேண்டும் என்று பாபா விரும்புகிறார்; அதில் தான் நவ்ஷேர்வானின் முன்னேற்றமும், 'இறுதி வெற்றி'யும் உள்ளது. பாபாவிற்குக் கீழ்ப்படிவதே துறவறத்தின் மிக உயர்ந்த வடிவம், ஏனெனில், பாபாவின் விருப்பங்களுக்குக் கீழ்ப்படிந்து, எல்லா ஏக்கங்களையும் தானாகவே 'துறந்து', நாளடைவில், படிப்படியாக, துறவு குறித்த எண்ணத்தையும் நாம் துறக்கிறோம்!**

நான்கு மாதங்களுக்குப் பிறகு, 1966 ஜூலை மாதத்தில், நவ்ஷேர்வான் நலவாலா, பாபாவுக்காக அர்ப்பணிக்கப்பட்ட கவிதைகளின் சிறியதொரு தொகுப்பை 'இன் லாப் ஆஃப் லவ்' (IN LAP OF LOVE - அன்பின் மடியில்) என்ற தலைப்பில் வெளியிட்டார். பாபாவின் கீழ்வரும் செய்தி புத்தகத்தின் முன்புறத்தில் அச்சிடப்பட்டிருந்தது: "**இறைவன் உங்கள் பேனா வரைவதைக் கேட்பதில்லை; உங்கள் இதய கீதத்தைக் கேட்கிறார்**."

டாக்கேஃபால்கர், பாபாவிற்கு வாழ்த்து அட்டைகள் மற்றும் நகைச்சுவை துணுக்குகளை அவ்வப்போது அனுப்புவதும், எரச் அவற்றை பாபா முன்னிலையில் வாசிப்பதும் வழக்கம். டாக்கேயின் கடிதங்களில் ஒன்றிற்கு பதிலளிக்கும் விதத்தில் பாபா, 1966 மார்ச் 23 அன்று எரச்சிடம் கீழ்வருவனவற்றை அவருக்குத் தெரிவிக்குமாறு எடுத்துரைத்தார்:

**நீங்களே கடவுள் என்பதை அறியாமல், கடவுளைத் தேடுகிறீர்கள்! அதுபோலவே, உங்கள் அன்பிற்குரிய பாபாவை நீங்கள் ஆழமாகவும் தீவிரமாகவும் நேசிக்கிறீர்கள் என்பதை அறியாமல் அவரை நேசிக்க ஆசைப்படுகிறீர்கள்! உங்கள் அன்பில் பாபா மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறார் - மேலும் நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா என்பது கூட உங்களுக்குத் தெரியாது!**

மார்ச் 25 வெள்ளிக்கிழமை ஜால்பாயுடன் ஹெர்மன் அல்வராடோ வந்தார். அவருக்கு பாபாவின் இளஞ்சிவப்பு கோட் ஒன்று வழங்கப்பட்டது; ஆனால் பாபாவின் ஏகாந்தவாசத்தைக் கருத்தில் கொண்டு, மெஹராஸாத் வருகையை தனிப்பட்ட முறையில் வைக்குமாறு கூறினார்.

ஷிரின் தமானியா அடுத்த நாள் காலை 9:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். பல வருடங்களாக உடல்நிலை சீரில்லாமல் இருந்த அவரிடம் பாபா, "**நீங்கள் இப்போது உயிரைத் துறக்க மாட்டீர்கள். எனது மகிமையின் வெளிப்பாட்டை நீங்கள் காண்பீர்கள்**" என்று உறுதியளித்தார், மேலும் அவரது ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

1964 செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில், டாம் மற்றும் இவோன் ரிலே (TOM & YVONNE RILEY) இருவரும் மர்ட்டில் பீச் மையம் அமைந்த நிலத்தில் ஒரு வீட்டைக் கட்டுவதற்காக பாபாவின் அனுமதியைக் கோரவே, அவர் அதற்கு இணக்கம் தெரிவித்த பின்னரும், அங்கு ஒரு வீட்டைக் கட்டி எழுப்ப முடியவில்லை; ஆனால் அவர்களின் நெருங்கிய நண்பர்களான லின் & ஃபிலிஸ் ஆட்ட் (LYN & PHILLIS OTT) இருவரும் அவருடைய அனுமதியைப் பெற்று, 1965இல் உட்ஸ்டாக் (WOODSTOCK) நகரிலிருந்து தங்கள் குழந்தைகளுடன் மர்டில் பீச் மையத்தில் வாழச் சென்றனர்.

1965 அக்டோபர் மாதத்தில் நியூயார்க் உலகக் கண்காட்சி நிறைவடைந்த பின்பு, ஜேன் ஹெய்ன்ஸ் அவரது குழந்தைகளான 'ட்ரையோ'வுடன் (TRIO - ஜான், சார்லஸ் மற்றும் வெண்டி) மர்டில் பீச் மையத்தில் குடியேறுமாறு பாபா உத்தரவிட்டார்; அங்கு எலிஸபெத், கிட்டி இருவருக்கும் ஜேன் உதவியாக இருந்தார். மர்டில் பீச் மெஹர் ஆன்மீக மையத்தில், பாபா மற்றும் எலிஸபெத்தின் இல்லங்களுக்கு அருகில், ஒரு வீட்டைக் கட்டி எழுப்ப ஜேனுக்கும் அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து 1966 மார்ச் மாதத்தில் அதன் கட்டுமானப் பணியைத் தொடங்கினார். அவரை ஓர் ஆன்மீக இரட்டை சகோதரியாக ஏற்றுக்கொண்ட எலிஸபெத், ஜேன் மீது அளப்பரிய அன்பு செலுத்தியதோடு, வீட்டைக் கட்டி எழுப்பத் தேவையான உதவியையும் வழங்கினார். அந்த ஆண்டின் பிற்பகுதியில் ஹெய்ன்ஸ் குடும்பம் தங்கள் புதிய இல்லத்திற்குக் குடிபெயர்ந்த போது, பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**இப்போது ஜேன் மற்றும் 'ட்ரையோ' (மூன்று குழந்தைகள்) எனது மையத்தில் இருப்பதால், அவர்கள் தொடர்பு கொள்ளும் அனைவருக்கும் எனது அன்பு மற்றும் உண்மையின் செய்தியாக விளங்கும் ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழ வேண்டும். அவர்கள் எனக்கு மிகவும் பிரியமானவர்கள் என்பதால், என்னை வீழச் செய்யவும், நிச்சயமாக வீழ்த்தவும் மாட்டார்கள்.**

அதைத் தொடர்ந்து, டார்வின் & ஜீன் ஷா, ஃபிரெட் & எல்லா வின்டர்ஃபெல்ட் மற்றும் ஜூலியா மாவ்ரிஸ் (JOULIA MAVRIS) போன்ற பிற அன்பர்களும் மெஹர் மையத்திற்குச் செல்லும் ஆர்வத்தை வெளிப்படுத்தினர், ஆனால் அந்த நேரத்தில் எலிஸபெத், மையத்தில் கூட்டம் அதிகமாக இருப்பதை உணர்ந்து, கவலையை வெளிப்படுத்தி, பாபாவிடம், மையத்தில் வாழும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில், 'வாயில்களை மூடுமாறு' கேட்டுக்கொண்டார்.



பாபாவுடன் கோஹெர், குருபிரசாத்
(GOHER WITH BABA IN GURUPRASAD)

# குருபிரசாத் ஏகாந்தவாசம்

**(Seclusion in Guruprasad)**

1966 ஏப்ரல் 1 வெள்ளியன்று ஆண், பெண் மண்டலியுடன், பூனாவில் தனது வழக்கமான கோடைகாலத்தைக் கழிப்பதற்காக மெஹராஸாத்தை விட்டு வெளியேறினார் பாபா. அஹமதுநகர் வழியாகச் செல்லும் பாபாவின் காரை, சாலையில் நின்று வரவேற்க உள்ளூர் அன்பர்கள் அனுமதிக்கப்படவில்லை. பாபா இல்லாத நேரத்தில் கைக்கோபாத் மெஹராபாத்தில் தங்கச் சென்றார். மெஹராஸாத்தில் தங்கியிருந்த, காக்காவின் உடல்நிலை பலவீனமாக இருந்ததால், பாதிரி அவருடன் தங்கினார். உண்மையில், பாபாவின் அருட்பார்வை ஒன்றுதான் காக்காவை உயிர்வாழச் செய்தது. முந்தைய மாரடைப்பு காரணமாக அவரது இதயத் துடிப்பு சீரற்றதாக இருந்ததால், அவர் இன்னும் உயிர் வாழ்வது மருத்துவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. காக்கா 'உயிருள்ள நடை பிணமாக' இருந்தார்; பாபா ஒருவரே அவரைத் தாங்கிக் கொண்டிருந்தார்!

பாபாவின் தரிசனத்திற்காக நூற்றுக்கணக்கானோர் வந்திருந்த முந்தைய ஆண்டிற்கு முற்றிலும் மாறாக, 1966ஆம் ஆண்டு குருபிரசாத்தில் முழு அமைதி நிலவியது, நடைமுறையில் அன்பர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலர் மட்டுமே சில நிமிடங்களுக்காக பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். ஜால்பாய், ஷெரூ, ருஸ்தம், ஸொராப், ஜெஹாங்கு, மெஹர்ஜி, மெஹர்வான் ஜெஸவாலா ஆகியோர் குருபிரசாத்திற்கு வர எந்தத் தடையும் இல்லை, மேலும் அவர்கள் தங்கள் வசதிக்கேற்ப வந்து சென்றனர்.

அந்த ஆண்டு மும்பை வாழ் பார்சி குழு பூனாவிற்கு வரவில்லை என்றாலும், நரிமன் தாதாச்சாஞ்சி மற்றும் கோஹெரின் சகோதரி கேட்டி ஆகியோர், ஒவ்வொரு வார இறுதியிலும் வருவது வழக்கம்; மேலும் அர்னவாஸ் சில நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார். நானா கேர், கோர்ஷெத் இருவரும் வழக்கம் போல முழு மூன்று மாதங்களுக்கும், பால் நாத்து ஆறு வாரங்களுக்கும் அங்கு வந்து தங்கினர். அலோபாவும் நானாவும் பகல் வேளையில் வராண்டாவில் அமர்ந்து, கண்காணித்து, முன் வாசல் வழியாக எவரும் வளாகத்திற்குள் நுழையாமல் இருப்பதை ஊர்ஜிதம் செய்தனர்; விஷ்ணுவின் உறவினர் சுஷீலாவும் சில சமயங்களில் இந்தக் கடமையைப் பகிர்ந்து கொண்டார். டாக்டர் அலு கம்பட்டா ஒரு வழக்கமான பார்வையாளராக இருந்தார், மேலும் நோய்வாய்ப்பட்டவர்களை கவனிப்பதில் அல்லது வேறு வேறு நபர்களை பரிசோதனைக்காக மருத்துவரிடம் அல்லது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதில் உதவியாக இருந்தார்.

பிறப்பால் ஓர் இந்துவான பால் நாத்து, பாரம்பரிய முறைப்படி வேட்டியை (கால்சட்டைக்கு பதிலாக இடுப்பைச் சுற்றி அணியும் நீண்ட துணி)

அணிந்திருந்தார். ஒரு முறை, குருபிரசாத்தில் பால் நாத்து தங்கியிருந்த காலகட்டத்தில், பாபா, மண்டலியுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த வேளையில், அவர் தனது வேட்டியில் தடுக்கி விழுந்தார்; பால் நாத்து வேட்டி அணிந்ததை பாபா பலமுறை விமர்சித்தார். உண்மை என்னவெனில், பால் எப்பொழுதும் வேட்டி அணிந்திருந்ததால், கால்சட்டை உடுத்திக்கொள்ள வெட்கப்பட்டார், மேலும் அவரது உடையின் மீதான பற்றுதலைப் போக்கவே பாபா அதைத் தொடர்ந்து குறிப்பிட்டார். பிற்காலங்களில், பால் மேற்கத்திய பாணி கால்சட்டைகளை அணியத் தொடங்கியது பாபாவை மகிழ்வித்தது.

'சாவ்ஹதா' (CHAVHATA) பத்திரிகையின் ஆசிரியர் பி.என். ஸயொஜி (B.N. SAOJI), ஒரு நாள் குடும்பத்துடன் வந்த போது, அவரிடம் இவ்வாறு கூறப்பட்டது: "'**எனது மௌனத்தைக் கலைப்பது நான் நிகழ்த்தும் மிகப் பெரிய அதிசயம்**' **என்று உலகிற்குச் சென்று பறைசாற்றவும்**." மஹாராணி ஷாந்தாதேவியும் குருபிரசாத்தில் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்படவே, சுமார் ஒரு வாரம் தினமும் வந்தார். பாபா ஒரு நாள், ஷிண்டே குடும்பத்தாரை அழைத்து, பாப்புஸாஹேபின் இழப்பு குறித்து ஆறுதல் கூறினார்.

ஏறக்குறைய ஐம்பது வயதான, உயரமான டென்னிஸ் கிர்க்பாட்ரிக் (DENNIS KIRKPATRICK) என்ற ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த 'விசித்திரமான நபர்' ஒருவருக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அவரது தந்தை, பூனா மருத்துவமனையில் ஒரு முக்கிய பொதுநல அறுவை சிகிச்சை நிபுணராக இருந்தார். கிர்க்பாட்ரிக் நன்கு கற்றறிந்தவர், சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவில் தொடர்ந்து வாழ்ந்துவந்தார். அவர் ஒரு தேவாலயத்தில் செயலாளராகவும், மத போதகராகவும் பதவி வகித்தார்; ஆனால் மிகவும் கடினமான காலங்களை சந்திக்க நேர்ந்தது. அவர் இப்போது அன்றாடத் தேவைகளில் பத்தும் பத்தாமல் தனிமையில் வாழ்ந்து, ஒரு பிச்சைக்காரனைப் போலத் தென்பட்டார். வாடகைப் பணத்தைக் கூட செலுத்த இயலாததால், குருபிரசாத்தை ஒட்டியிருந்த ஒரு சிறிய அறையிலிருந்து அவர் வெளியேற்றப்படவிருந்தார். வீட்டு உரிமையாளர் அந்த அறைக்கு வழங்கும் தண்ணீர் குழாயை மூடிவிட்டதால், கிர்க்பாட்ரிக் தினமும் குருபிரசாத்திற்கு நடந்து வந்து, ஒரு சிறிய பித்தளை வாளியில், கொதிக்கும் வெயிலில் தண்ணீரை எடுத்துச் சென்றார். பாபா 'அவர் மீது கவனம் செலுத்தி, அவருக்குப் பண உதவி செய்யுமாறு' மெஹர்ஜிக்கு அறிவுறுத்தினார். "**அவர் ஒரு மஸ்த் போன்றவர்**" என்று பாபா குறிப்பிட்டார்.

குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்ததை கிர்க்பாட்ரிக் பலமுறை பார்த்தார். பாபா அவரிடம், "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?**" என்று கேட்ட வேளையில், மண்டியிட்டு அமர்ந்திருந்த அயர்லாந்து நாட்டைச் சார்ந்தவர் அமைதியாக பாபாவைப் பார்த்து தலையசைத்தார்.

ஒரு நாள் பாபா, கிர்க்பாட்ரிக்கிடம், "**உங்களுக்குத் தேவையான அனைத்தும் உள்ளதா?**" என்று கேட்டதற்கு, கிர்க்பாட்ரிக் 'ஆமாம்' என்று

கூறினார். பாபா, மெஹர்ஜியின் பக்கம் திரும்பி, '**அவருக்கு மாதாந்திர உதவித் தொகையைத் தொடர்ந்து வழங்குமாறு**' அறிவுறுத்தினார்.

மெஹர்ஜியின் முகத்தில் 'மறுப்பு' வெளிப்பட்டது; அவரது முகபாவத்தைப் பார்த்த பாபா, "**ஆம்" என்று சந்தோஷமாகச் சொல்லுங்கள்; இல்லையெனில் அதற்கு இணங்காதீர்கள்! இதில் உங்களுக்கு என்ன நன்மை என்பது உங்களுக்குத் தெரியாது. நான் அவருக்கு வழங்குவேன், அதைப் பற்றி யோசிக்காதீர்கள்**!" என்று அவரைத் திருத்தினார்.

மெஹர்ஜி எதிர்ப்புத் தெரிவித்தார், "ஆனால் பாபா, நான் இல்லை என்று சொல்லவில்லையே."

பாபா அவரை மீண்டும் திருத்தினார், "**உங்களிடம் இவ்வளவு பணம் உள்ளது, ஆனால் இந்த சிறிய தொகையைக் கூட அதிகம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். நான் அதை கிர்க்பாட்ரிக்கின் நன்மைக்காகக் கேட்கவில்லை. எனக்கு சேவை செய்யும் வாய்ப்பை நான் உங்களுக்கு வழங்குகிறேன்; அதை நீங்கள் உணரவில்லை**."

மெஹர்ஜி அந்தத் தொகையை அவருக்கு வழங்கி, அவரது நலனை கவனிக்கத் தொடங்கினார்.

பூனாவில், டாக்டர் கோஹெர், பாபாவிற்கு சில மருத்துவப் பரிசோதனைகளைச் செய்தார். 1966 ஏப்ரல் 7 அன்று, மருத்துவமனையில் பாபாவின் இரத்த எண்ணிக்கை மற்றும் சர்க்கரை அளவு சோதனை செய்யப்பட்டது, 12ஆம் தேதி பாபாவின் சிறுநீரும் சோதனைக்கு அனுப்பப்பட்டது.

ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள், பாபா தனது சகோதரர் பெஹராம் மற்றும் அவரது முழு குடும்பத்தினரையும் வரவழைத்தார்: பெரின், ஷெரூ, ஸொராப் மற்றும் ருஸ்தம்; பெஹராமின் மகள் குல்னார், அவரது கணவர் ஜெஹாங்கு ஸுகத்வலா இருவரும் தங்கள் மகள் மெஹர்னாஸ் மற்றும் மகன் மேர்வானுடன் வந்தனர்.

பெஹராமின் குடும்பத்தினர் அழைக்கப்பட்ட அதே நாளில் ஸிகன்போரியாவும் கஜ்வானியும் வந்திருந்தனர். குல்னாரின் மகள் மெஹர்னாஸ் மிகவும் சிறியவள், அவளது பாட்டி பெரின் இரு கைகளிலும் மிட்டாய்களை நீட்டிக் கொண்டிருந்ததை கவனித்த கஜ்வானி, கேலி செய்தார், "மெஹர்னாஸ் இப்படி மிட்டாய் சாப்பிட்டால், அவளும் ருஸ்தம் மற்றும் ஸொராபைப் போல குண்டாகி விடுவாள்!"

பாபா அதைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு, '**குழந்தைக்கு இனிப்பான எதையும் கொடுக்கக் கூடாது**' என்று தடை விதித்தார். அன்று முதல் எவரேனும் அவளுக்கு இனிப்பு வழங்கினால், "**அதை உண்ணக்கூடாது என்பது பாபாவின் கட்டளை**" என்று மெஹர்னாஸ் மறுத்துவிடுவது வழக்கம். அவளுடைய இந்த சிறு வயதிலும், அவளால் குருநாதரின் 'பர்வர்திகார்' பிரார்த்தனையை மனப்பாடம் செய்ய முடிந்தது, பாபாவின் முன்னால் அதை மொழிந்தாள்.

ஜெஹாங்குவிற்கு பாபா அறிவுரை கூறினார், "**நீங்கள் எந்தப் பணியைச் செய்தாலும், அதை முழு மனதுடன், நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் செய்யுங்கள். உங்களின் ஒரு தலை முடியைக் கூட எவராலும் வளைக்க முடியாது.**"

1960 ஆண்டுகளில், வேறொரு சந்தர்ப்பத்தில், வழக்கமான குழு குருபிரசாத்தில் பாபாவின் முன்னால் அமர்ந்திருந்தது; எந்தத் தலைப்பையும் குறிப்பிடாமல், பாபா திடீரென ஜெஹாங்குவிடம் கூறினார், "**ஜெஹாங்கு, உலகின் அனைத்து பிரச்சினைகளும் உங்கள் தலையில் இருந்தாலும், நினைவில் கொள்ளுங்கள், உங்கள் கன்னங்கள் உள்ளே செல்லக்கூடாது,**" அதாவது ஜெஹாங்கு எந்த இடர்பாடுகளையும் எதிர்கொள்ளும் அளவுக்கு உறுதியாக இருக்க வேண்டும்.

ஏப்ரல் மாதம் இந்த சந்தர்ப்பத்தில், பெரினின் மூத்த மகனைப் பற்றி பாபா அவரிடம் கூறினார், "**ஷெரூ வயதானாலும் எனது குழந்தை!**" பின்னர் அவர் ஜால்பாய் குறித்து அவரிடம் கருத்துத் தெரிவித்தார், "**நீங்கள் அனைவருக்கும் தாய், எனவே எனக்காக நீங்கள் ஜாலை கவனித்துக் கொள்ளுங்கள்.**"

பெஹராமிடம் பாபா கேட்டார், "**என்னை கடவுள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**" உறுதியுடன், பெஹராம் 'ஆம்' என்றார். அப்போது பாபா, "**நேரம் வரும்போது உங்கள் உயிரைத் தருவீர்களா?**" என்று கேட்டார். பெஹராம் 'ஆமாம்' என்று பதிலளித்தார்.

மீண்டும், மெஹராஸாத்தில் இருந்தபோது, பாபா அவரது சகோதரரிடம் அதே கேள்வியை கேட்டார்: "**என்னை கடவுள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**" பெஹராம் கூறினார், "நீங்கள் கடவுள் இல்லை என்று முழு உலகமும் பறைசாற்றினாலும், நீங்கள் கடவுள் என்று நான் நம்புகிறேன்!" அவருடைய பதில் பாபாவை மிகவும் மகிழ்வித்தது.

குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்த போது, அவர் இரண்டு பிந்த்ரா ஹவுஸ் குடும்பங்களை அழைத்தார் - கெய்மாய், மெஹர்வான், மனு ஜெஸவாலா, மற்றும் பானுமாசி (கெய்மாயின் சகோதரி), ரோஷன், மெஹரா & டாலி கேராவாலா ஆகியோருடன் அவர்களது பணிக்கார பெண்மணி கேஸர்.

டாலி நான்கு வயது குழந்தையாக இருந்தாலும், பாபாவிடம் ஓடிச்சென்று அவரது காதில் கிசுகிசுத்தாள், "அன்பான பாபா, நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்! நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?"

"**ஆம், நான் உன்னை நேசிக்கிறேன்**" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

"நீங்கள் என்னை எவ்வளவு நேசிக்கிறீர்கள்?"

"**மிகவும்.**"

"உங்களால் எப்படி என்னை இவ்வளவு நேசிக்க முடிந்தது?"

**“நீ என்னை எவ்வளவு நேசிக்கிறாயோ, அதே போல நானும் உன்னை நேசிக்கிறேன்!”**

“ஆனால் நான் உங்களை நினைவில் வைத்திருக்கிறேன்!”

**“நானும் உன்னை நினைவில் கொள்கிறேன்.”**

“நான், ‘பாபா, பாபா, பாபா’ என்று சொல்கிறேன். நீங்கள் என்னை என்ன சொல்கிறீர்கள்?”

புன்னகைத்த பாபா, **“டாலி, டாலி, டாலி!”** என்று பதிலளித்தார்.

1966 ஏப்ரல் 13ஆம் தேதி, ரிஷிகேஷிலிருந்து வந்த ஒரு நேர்மையான இறை நாட்டம் மிக்க சுவாமி லக்ஷ்மிதாஸ் (SWAMI LAXMIDAS, 40) குருபிரசாத்தை வந்தடைந்தார். ஐந்து நிமிடத்திற்காக பாபா விதிவிலக்கு அளித்து அவரை அழைத்தார். பாபா அவரைப் பார்த்த மகிழ்ச்சியில் இரண்டு முறை தழுவினார். இந்தி மொழியில் பாபாவின் இலக்கியங்களைப் படித்த சுவாமி, கேஷவ் நிகத்துடன் தொடர்பில் இருந்தார். நாக்பூரைச் சேர்ந்த இந்துமதி நாயிக் அதே நாளில் தனது இரண்டு மகன்களுடன் வந்தார்; தரிசனத்திற்குப் பின்னர் அனைவரும் புறப்பட்டுச் சென்றனர்.

ஜேம்ஸ் ஹால் மெக்ரூ (JAMES HALL McGREW, 22), ரிக் சேப்மென் (RICK CHAPMAN) இருவரும் டென்வரில் (DENVER) அமைந்த உயர்நிலைப் பள்ளியில் நண்பர்களாக இருந்து, மேலும் அவர்கள் ஹார்வர்டில் (HARVARD) புது ஆண்டு படிக்கும் போதும் ஒரே அறையில் தங்கிவந்தனர். 1965இல் கல்லூரியின் கடைசி அரை வருடத்தின் போது, ஒரு நண்பர் மூலமாக ஜேம்ஸ் (ஜிம்) இந்திய தேசத்தில் தீவிர ஆர்வம் காட்டியதோடு, அங்குச் செல்லவும் விரும்பினார். 1965 மே மாதத்தில் அவர் இந்தியாவில் ‘அமைதிப் படை’யில் (PEACE CORPS) ஒரு பதவிக்கு விண்ணப்பித்த வேளையில், அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர் ஜூலை மாதம் டென்வரிலிருந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த அவ்வேளையில் ரிக், மெஹர் பாபாவைப் பற்றி அவரிடம் கூறினார்.

1965 வசந்த காலத்தில் அலன் கோஹென் (ALLAN COHEN) மூலம் பாபாவைப் பற்றி ரிக் அறிந்துகொண்டார். முர்ஷிதா ஐவி டியூஸ், டான் ஸ்டீவன்ஸ் போன்ற பிற ஸூஃபி உறுப்பினர்களை ரிக் சந்தித்து, மெஹர் பாபாவின் மீதான மிகுந்த ஆர்வத்துடன் ரிக் சேப்மென் ஸான் ஃபிரான்சிஸ்கோவிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்; அவர் பாபாவின் திரைப்படங்களையும் பார்த்தார், சில புத்தகங்களை வாங்கினார், மேலும், அந்த நேரத்தில் மெஹர் பாபாவால் 1965 டிசம்பர் மாதத்தில் திட்டமிடப்பட்டிருந்த சகவாசத்திற்காக இந்தியா செல்லும் சிறப்பு விமானப் பயணத்திலும் இணைந்தார். ஜிம், ரிக் இருவரும் அதற்கு முந்தைய ஆண்டில், பாஸ்டன் (BOSTON) நகரில் இருந்த வேளையில், ஆன்மீகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு, மெஹர் பாபா மீது மிகுந்த ஆர்வம் காட்டத் தொடங்கினர். ஜிம் இது குறித்து இவ்வாறு எடுத்துரைத்தார்:

மேற்கத்திய நாகரீகம் எனக்கு என்ன வழங்க முடியும் என்பதில் நான் மிகுந்த ஏமாற்றமடைந்தேன். கல்லூரிப் படிப்பை நிறைவு செய்வது, தொழில் தொடர்பான வாழ்க்கையில் நுழைவது, புறநகர்ப் பகுதியில் வீடு வாங்குவது, இந்தப் பொருளுலக சமூகத்தில் வெற்றியை நோக்கி கடுமையாக முயற்சிப்பது போன்ற எதிர்பார்ப்புகள் எனது வாழ்வில் எந்த ஒரு சுவையையும் வழங்கவில்லை. வாழ்க்கை எதையெல்லாம் வழங்கப்போகிறது என்பதில் நான் மகிழ்ச்சியற்றவனாகவும், மனச்சோர்வு அடைந்தவனாகவும் மாறினேன். மேற்கத்திய நாடுகளின் மிகவும் பொதுவான பொருள்முதல்வாத வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில் ஆன்மீக வாழ்க்கை ஒரு தலைசிறந்த மாற்றாகத் தோன்றியது.

1965 செப்டம்பர் மாதத்தில், பாபா அவரது அன்பர்களை '**எப்போதேனும்**, **எங்கேயேனும்**, **எப்படியேனும்**' சந்திப்பதாக உறுதியளித்து, டிசம்பர் மாத சகவாசத்தை ரத்து செய்தார். மேலும் பாபா, தன்னைப் பார்க்கத் தவறிய அன்பர்களின் மனவேதனையை நன்கு அறிந்திருந்தும், ஏகாந்தவாசம் மேற்கொள்வதற்கான தனது விருப்பத்தையும், இடையூறு எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற தனது ஆர்வத்தையும் தெளிவுபடுத்தினார்.

ஜிம், ரிக் இருவரின் பரஸ்பர நண்பர், ராபர்ட் ட்ரே்ஃபஸ், சகவாசம் ரத்து செய்யப்படுவதற்கு முன்னர், ஐரோப்பா வழியாக இந்தியாவிற்கு எப்படியோ ஒரு பயணத்தைத் தொடங்கி, சகவாசம் ரத்து செய்யப்பட்டதையும் அறியாமல், தனது பயணத்தைத் தொடர்ந்தார். 1965 நவம்பர் மாதத்தில் ராபர்ட் ட்ரே்ஃபஸ் மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்ததாக செய்தி ஒன்று ஜிம், ரிக் இருவரையும் வந்தடைந்தது.

இந்தச் செய்தி ஜிம்மின் மனதில் பாபாவைப் பார்ப்பதற்கான வழியைக் கண்டுகொள்ளும் ஆர்வத்தைத் தூண்டியது; ஆனால் அதை எப்படிச் செய்வது என்று அவருக்குத் தெரியவில்லை. அவர் ஸான் ஃபிரான்சிஸ்கோவில் மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம் (SUFISM REORIENTED) மற்றும் டான் ஸ்டீவன்ஸுக்கும் எழுதினார். ஸூஃபி மையத்தின் காரி ஹார்ப் (KARI HARB) மெஹர் பாபாவின் செயலாளரான ஆதி கே. ஈரானியைத் தொடர்பு கொண்டு, பாபாவை சந்திப்பதற்கான உதவியைக் கோருமாறும், அவர் ஏன், எவ்வளவு காலம் இந்தியாவில் இருப்பார் என்பதை விளக்குமாறும் பதில் கடிதம் அனுப்பினார்.

மைசூர் மாநிலம் (தற்போது கர்நாடகா என்று அழைக்கப்படுகிறது) கல்கட்கியில் (KALGHATKI) அமைந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தன்னார்வத் தொண்டராகப் பணியாற்ற, அமைதிப் படை (PEACE CORPS) ஜிம்மை நியமித்தது. 1966 ஜனவரியில் ஜிம், ஆதிக்கு எழுதினார். 'பாபாவின் ஏகாந்தவாசத்திலும் இந்தக் கடிதம் அவர் முன்னிலையில் வாசிக்கப்பட்டதாகவும், பிப்ரவரி 10ஆம் தேதி ஜிம் மீண்டும் எழுதுவதை பாபா விரும்புவதாகவும்' ஆதி பதிலளித்தார். அவர் பாபாவின் வழிமுறைகளைப் பின்பற்றி, பாபா குறிப்பிட்ட தேதியில் தனது கோரிக்கையை முன்வைத்தார். ஜிம் அவரது கடிதத்தில், 'அமைதிப் படையில்

செவிலியராகப் பணிபுரியும் டயானா கிரேஸ் (DIANA GRACE) என்பவருடன் ஜிம் காதல் வயப்பட்டதாகவும், டயானா, பாபாவை சந்திப்பதில் விருப்பம் தெரிவித்திருந்ததால் அவரையும் உடன் அழைத்து வரலாமா' என்றும் ஜிம் கேட்டிருந்தார்

குருபிரசாத்தில் ஜிம்மைப் பார்ப்பதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்து, ஆதி மூலமாக பாபா பதிலளித்தார். டயானா கிரேஸ் உடன் வரவும் பாபா அனுமதி வழங்கினார். ஜிம் மெக்ரூவின் பணி நிமித்தம், அவருக்கு உகந்ததான ஏப்ரல் 15ஆம் தேதியைக் குறிப்பிட்டு, அறிவுறுத்தியபடி அதை பாபாவிற்குத் தெரிவித்துக் கடிதம் எழுதினார். (ஒருவேளை, பாபாவிடம் இன்னும் ஆழமாக ஈடுபாடு இல்லாததால், நேர்காணலுக்கு வர வேண்டாம் என்று டயானா முடிவு செய்திருப்பதாக அவர் பாபாவிடம் தெரிவித்தார்.)

ஜிம் மெக்ரூ 1966 ஏப்ரல் 14ஆம் தேதி பிற்பகலில் மும்பையிலிருந்து பூனாவிற்கு வந்தார். குருநாதரை சந்திக்கும் வாய்ப்பில் அவர் மிகுந்த மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் காணப்பட்டார். அவர் தனது வாழ்க்கையை பாபாவிற்கு அர்ப்பணம் செய்ய விரும்பினார், மேலும் அவர் 'பாபாவுடன் நிரந்தரமாக வாழலாம் அல்லது பாபாவை மீண்டும் பார்க்க அவர் அழைக்கப்படுவார்' என்று உள்ளூர நம்பினார். அவர் தனது ஹோட்டலுக்குள் நுழைந்து, காலை 5:30 மணிக்கு அவரை தூக்கத்திலிருந்து எழுப்புதற்கான கோரிக்கையை வைத்தார். ஆதியின் கடிதங்கள், நேரத்தை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்தன; ஜிம் அதிக நேரம் தூங்கிவிடலாம் என்றும், அவர் தனது வாழ்க்கையின் விலைமதிப்பற்ற சந்திப்பை இழக்க நேரிடும் எனவும் கவலைப்பட்டார்,

காலை சுமார் 8:30 மணியளவில் குருபிரசாத்தின் நுழைவாயில் வழியாக ஜிம் நடந்து சென்றபோது, அவர் சொர்க்கலோக அமைதியை உணர்ந்ததோடு, அவர் அதைக் 'கிட்டத்தட்ட சுவைக்க முடிந்தது!' பைபிளின் வெளிப்பாடான 'அனைத்து புரிதலையும் கடந்து செல்லும் அமைதி' என அவருடைய மனதில் தோன்றியது. அவர் நினைத்தார்: "எனவே கடவுள் வாழும் இடம் இதுதான். நிச்சயமாக, கடவுள் இந்த தெய்வீக நறுமணத்தால் சூழப்பட்டிருப்பார்." மாளிகையின் வராண்டாவில் எரச் காலுறையும், பனியன் சட்டையும் அணிந்த வண்ணம் அமர்ந்திருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஜிம் மெக்ரூ நினைத்தார்: "கடவுளிடம் செல்பவர்களுக்கு பனியன் சட்டைதான் உகந்த உடையா?"

எரச் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, ஜிம்மிடம் அமருமாறு சைகையால் தெரிவித்தார். சிறிது நேரத்தில் மணி, ரானோ இருவரும் அங்குத் தோன்றினர். ஜிம் மெக்ரூ, இதற்கு முன்பு பாபாவின் அன்பர்கள் எவரையும் சந்தித்ததில்லை (ரிக் சேப்மென், ராபர்ட் ட்ரே்.பஸ் இருவரையும் தவிர).

பாபா வந்திருப்பதாகவும், அவரைப் பார்க்க விரும்புவதாகவும் எரச், ஜிம்மிடம் கூறினார். அவர்கள் நடைபாதையில் நடந்து செல்லும்போது, பாபாவை வணங்குவது அல்லது பாபாவின் பாதங்களைத் தொடுவது போன்ற மரியாதைகள்

எதையும் பாபா விரும்பவில்லை, ஆனால் பாபா, அவரை அரவணைத்து முத்தமிடலாம் என்று மெக்ரூவிடம் எரச் விளக்கினார்.

ஒவ்வோர் இதயத்திலும் நிலைகொண்டிருக்கும் ஏக இறைவனுடனான தனது நேர்காணலைப் பற்றிய ஜிம்மின் விளக்கம் கீழ்வருமாறு:

நான் ஒரு பூனையைப் போல மிகவும் உற்சாகமாகவும், பதட்டமாகவும் இருந்தேன். ஆனால் இந்தப் பொன்னான வாய்ப்பில் நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். நான் எரச்சுடன் வராண்டாவில் நடந்து சென்று, பாபா ஆண் மண்டலியுடன் அமர்ந்திருந்த அறையின் வாசலில் எங்கள் பாத அணிகளைக் கழற்றினோம்.

எரச் அறையின் ஃபிரஞ்சு கதவுகளைத் திறந்தார்; நான், முதல் முறையாக மெஹர் பாபாவைப் பார்த்தேன். அவர் என்னை நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். இவ்வளவு விரைவில் அவரை அங்கே பார்த்தது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. '**என்னை வந்து கட்டித் தழுவும்படி**' சைகையால் தெரிவித்தார். பாபா சுறுசுறுப்பாக, எப்பொழுதும் நகர்ந்து கொண்டிருந்தார்; அவர் ஒருபோதும் நிலையாக நிற்கவில்லை. அவர் எந்நேரமும் ஏதாவது சைகையை தெரிவித்துக் கொண்டிருந்தார், அவரது கைகளும், கண்களும் அசையாத கணமே இல்லை. "**அங்கேயே நின்றுகொண்டு ஏன் நேரத்தை வீணடிக்கிறீர்கள்? நகருங்கள். உள்ளே வந்து என்னைத் தழுவிக் கொள்ளுங்கள். நான் உங்களை நேசிக்கிறேன்**" என்று அவரது முகபாவங்களும் சைகைகளும் ஒன்றை ஒன்று தொடர்புகொண்டு உரையாடியது போலத் தோன்றியது.

பாபா என்னைத் தழுவி இரு கன்னங்களிலும் முத்தமிட்டார். அவரது ஸ்பரிசம் இலகுவாகவும் அழகாகவும் இருந்தது - ஒருவரின் முதுகில் சாய்ந்து, நீரோடையில் மிதப்பது போல், அது மென்மையாகவும் இயற்கையாகவும் இருந்தது. பாபாவின் பிரகாசம் மண்டலி அமர்ந்திருந்த அறையில் ஊடுருவியது. இது அதி உற்சாகமாக இருந்தது. நான் 'முழுமையாக' உணர்ந்தேன். எனது செயல், சுவாசம், சிந்தனைகள் அனைத்தும் மென்மை, அழகு மற்றும் நல்லிணக்க சூழ்நிலையில் நிகழ்வதாகவும் உணர்ந்தேன்.

அவரது உடல் பலவீனமாகவும் உடைந்து நொறுங்கியது போலவும் இருந்தது. (மூன்று மாதங்களாக ஆகாரம் எதுவும் உண்ணாதவர் போலத் தோற்றமளித்தார்!) அவருடைய நிறம் பயங்கரமாக, ஓர் ஆவியைப் போலக் கொடிய வெண்மையாகத் தெரிந்தது. மனித குலத்திற்காக அவர் ஆற்றிய அளப்பரிய உட்பணியின் அழுத்தத்தை இது காட்டுகிறது. பாபாவின் அந்தத் தோற்றத்தில் அவரின் அசாத்தியமான செயலை நான் உணர்ந்தேன். சாலையில் எவரோ அதிவேகத்தில் ஓடுவது போல் இருந்தது, அந்த நபர் ஒரு நண்பரை வாழ்த்துவதற்காக அவரது பாதையில் நின்று, பின்னர் அவர் முடிந்த அளவு வேகத்தில் ஓடினார். பாபா அவரது திட்டங்களுக்குள் எனக்கென ஓர் இடத்தை வழங்க நிச்சயமாக பெரும் முயற்சி ஒன்றை செய்து கொண்டிருந்தார். அவருடைய கருணைக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

பாபாவின் நறுமணம் அலாதியானது. முதலில் அவரிடம் விசேஷமான அயல்நாட்டு வாசனைத்திரவியங்கள் இருப்பதாக நான் நினைத்தேன், ஆனால் பாபாவின் வாசனை அவருடைய இயற்கையான வாசனை என அறிந்தேன்.

ஜிம் அவரது காலடியில் அமர்ந்தபோது பாபா அவரிடம் கேட்டார், **“உங்களுக்கு ரிச்சர்ட் ஆல்பர்ட்டைத் தெரியுமா?”**

ஜிம், “எனக்கு அவரைத் தெரியும் ஆனால் தனிப்பட்ட முறையில் தெரியாது” என்றார்.

**“அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார், அதில் அவர் எல்.எஸ்.டி போதைப்பொருள் உட்கொள்வதை நிறுத்துவதாக உறுதியளித்தார். ரிச்சர்ட் போதைப்பொருளை நிறுத்தப் போகிறார் என்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்களும் அதுபோன்ற போதை மருந்துகளை உட்கொள்ள வேண்டாம்.”**

பாபாவை சந்திப்பதற்கு சுமார் எட்டு மாதங்களுக்கு முன்பே ஜிம் போதை மருந்து உட்கொள்வதை அவராகவே கைவிட முடிவு செய்திருந்தார், இருப்பினும் அவர் இதைப் பற்றி குறிப்பிடவில்லை. பாபா போதைப்பொருளைக் குறிப்பிட்டபோது, ஜிம் பின்னர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

பாபாவைப் பொறுத்தவரை, எனது ஆன்மா வெளிப்படையானது என்பதையும், எனது செயல்பாடுகள், எனது பலம் மற்றும் பலவீனம் அனைத்தையும் நான் அவரிடம் சொல்லாமலேயே அவர் பார்க்க முடியும் என்பதையும் அந்த நேரத்தில் நான் அறிந்தேன். இருப்பினும், அவரது அன்பில் நான் நனைந்ததை உணர்ந்தேன், அது எனக்கு ஆதரவாக இருந்தது. என் ஆன்மாவை பாபாவிடம் ஒப்படைக்க முடியும் என்று எனக்குத் தெரியும். மேலும் பாபாவை நம்பக்கூடிய இந்த உணர்வு எனக்குத் தலையாய உயிர்நாடியாக இருந்தது.

தொடர்ந்து பாபா கேட்டார், **“நீங்கள் அமெரிக்காவிலிருந்து புறப்படுவதற்கு முன்பு ராபர்ட் டிரே.்.பஸை பார்த்தீர்களா?”**

“இல்லை, நான் பார்க்கவில்லை,” என்று ஜிம் கூறினார், மேலும் ராபர்ட் திரும்பிச் செல்வதற்கு முன்பு, தான் புறப்பட்டுவிட்டதாக அவர் விளக்கினார்.

டயானாவைப் பற்றி பாபா கேட்டார், **“அவர் இப்போது எங்கே இருக்கிறார்?”**

ஜிம், “அவர் தென்னிந்தியாவில் தனது பணியில் இணையச் சென்றுள்ளார்.”

பாபா, **“அது நல்லது, ஆனால் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி”** என்றார்.

அப்போது பாபா கேட்டார், **“நீங்கள் ஃபிரான்சிஸ் பிராபஸோன் எழுதிய ‘ஸ்டே வித் காட்’** (STAY WITH GOD) **புத்தகத்தைப் படித்தீர்களா?”**

ஜிம் இல்லை என்று பதிலளித்தபோது, அறையின் பின்புறத்தில் பிற மண்டலியுடன் அமர்ந்திருந்த ஃபிரான்சிஸை சந்திக்க பாபா அவரைத் திரும்பச் சொன்னார். பாபா அவர்களை அறிமுகப்படுத்தி, ஜிம்மிடம் ‘ஸ்டே வித் காட்’ புத்தகத்தைப் படிக்குமாறு அறிவுறுத்தினார். உரையாடலின் போது ஒரு

கட்டத்தில், ஜிம், பாபாவின் சைகைகளை மொழிபெயர்த்த எரச்சைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பாபா, **“என்னைப் பாருங்கள், அவரைப் பார்க்கவேண்டாம்”** என்றார்.

இந்த நேரத்தில், ஜிம் சற்று பொறுமை இழந்தார்:

பாபா எனக்கு சில முக்கியமான, கடினமான பாடங்களை வழங்குவார் என்று எதிர்பார்த்தேன். எனக்குத் தெரிந்தவர்களையும், அமெரிக்க அன்பர்களையும் குறித்து அவர், இவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அனைத்திற்கும் மேலாக, எனது வாழ்நாள் முழுவதும் அந்த நபர்களைப் பற்றி நான் எந்த நேரத்திலும் சிந்திக்க முடியும். பாபா ஏன் இந்த பொன்னான ஐந்து நிமிடங்களை, பிறரைப் பற்றி பேசுவதில் செலவிடுகிறார்? பாபா ஏன் தீவிர ஆன்மீக விஷயங்களைப் பற்றி என்னிடம் பேசவில்லை? ஆன்மீகப் பாதையின் அளப்பரிய துன்பம் துயரங்களைப் பற்றி பாபா என்னிடம் பேசுவார், நான் மிகவும் இளமையாகவும் அனுபவமற்றவனாகவும் இருந்தேன் என்று கூறுவார் எனவும் எனது மனதில் எதிர்பார்த்தேன். நான் அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்று, அங்கு சாதாரணப் பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்று அவர் என்னிடம் கூறுவார் என்றும் எதிர்பார்த்தேன். அவதார புருஷரைப் பின்பற்ற முயற்சிப்பதன் தீவிரம் மற்றும் அத்தகைய பணி எவ்வளவு கடினமானது என்பதைப் பற்றிய கடுமையான பாடத்திற்கு என்னை நான் தயார்படுத்திக் கொண்டேன்.

ஆனால் பாபா எனக்குத் தேவையான பாடத்தை சொல்லிக் கொண்டிருந்தார், மேலும் அவர் தனது வார்த்தைகளை விட மேற்கோள்களை முன்வைத்து விளக்கிக் கொண்டிருந்தார். ‘**கடவுளை நேசிப்பதற்கான மிகவும் நடைமுறை வழி, சக மனிதர்களை நேசிப்பதே**’ என்று அவர் எப்பொழுதும் நமக்குச் சொல்லும் ஒன்றை அவர் எனக்குச் சுட்டிக் காட்டினார். தீவிர ஆன்மீகப் பாடங்களைக் கற்றறிய வேண்டும் என்ற எனது ஆர்வத்தில், நான் இன்னும் சுயநலமாக இருப்பதை அவர் எனக்கு எடுத்துக் காட்டினார், மேலும் சுயநலத்திற்கான ஒரே சிகிச்சை சகமனிதர்களுடனான ஈடுபாடும் அவர்கள் மீது காட்டும் அக்கறையும் அன்பும் தான் என்பதை அவர் எனக்குக் காட்டினார்.

பாபா ஜிம்மிடம் கேட்டார், **“நேற்று இரவு எப்படித் தூங்கினீர்கள்?”**

“மிகவும் நன்றாக,” ஜிம் பதிலளித்தார்.

**“உங்கள் திட்டங்கள் என்ன?”**

ஜிம், “நான் எனது பள்ளிக்கூடம் செல்வதற்காக அமெரிக்கா திரும்பிச்செல்ல விரைவில் இங்கிருந்து புறப்படுகிறேன். பூனாவிலிருந்து மாலை 3:00 மணிக்கு மும்பைக்கு ரயிலில் செல்கிறேன்” என்றார்.

**“இதைக் கேட்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் ரயிலை தவறவிடாதீர்கள். நீங்கள் அமெரிக்கா திரும்பியதும் எனக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.”** அப்போது பாபா, **“உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் உள்ளனவா?”** என வினவினார்.

ஜிம் சற்று திக்குமுக்காடினார். அவதார புருஷர் அவரிடம் இதுபோன்ற கேள்விகள் ஏதேனும் கேட்கக்கூடும் என அவருக்கு ஒருபோதும் தோன்றியதில்லை. அவரால் எதையும் அந்த நேரத்தில் சிந்திக்க முடியவில்லை. அவர் மனம் முற்றிலும் வெறுமையாக இருந்தது. இருப்பினும், அவர் பாபாவுக்காக ஒரு சிறு கவிதையை வரைந்திருந்தார், அதை அவர் பாபாவிடம் நீட்டியபோது, பாபா அவரிடம் படிக்கச் சொன்னார், ஜிம் அதை வாசித்தார்:

உம்மைக் குறித்த அறியாமை, விரக்தி.
உம்மைப் பற்றிய அறிவு, நம்பிக்கை.
உம் மீதான அன்பு, மகிழ்ச்சி.
உன்னதமானது உமக்கான சேவை.
உமக்குக் கீழ்ப்படிவதோ பேரின்பம்.

அறையின் பின்புறத்திலிருந்து, ஃபிரான்சிஸ், "இதோ, இங்கே!" என்றதும் '**கடைசி வரி மிகவும் அருமை**' என்று பாபா கூறினார்.

ஜிம் தனது சந்திப்பு குறித்த சிந்தனை ஓட்டங்களைத் தொடர்கிறார்:

உரையாடலின் இந்தக் கட்டத்தில் நான் குழம்பிப்போனேன், இருப்பினும் மகிழ்ச்சியுடன் திகைத்தேன். நான் எதிர்பார்த்தது எதுவும் நடக்கவில்லை. நான் ஒரு தீவிரமான 'ஆன்மீக' குருநாதரை எதிர்பார்த்தேன்; நான் ஓர் அன்பான, ஏறக்குறைய இயல்பான, உண்மையான மனிதனை சந்தித்தேன்; அவர் சின்னஞ்சிறிய, அன்றாட விஷயங்கள் மற்றும் சக மனிதர்களைக் குறித்து உண்மையாகவும் ஆழமாகவும் அக்கறை கொண்டிருந்தார். 'பாபா-மனிதன்' என்பதைத் தவிர, 'பாபா-கடவுள்' எனும் உண்மைப்பொருளின் பிரசன்னம் அறையில் முற்றிலுமாக ஊடுருவி இருந்தது.

பாபா என்னுடன் ஒரு முழுமையான, ஆக்கப்பூர்வமான உரையாடலை மேற்கொண்ட போதிலும், அவருக்கும் அறையின் பின்புறத்தில் அமர்ந்திருந்த மண்டலிக்கும் இடையே ஆழமான, சொற்களற்ற தொடர்பு ஒன்று நடந்து கொண்டிருந்தது. பாபாவிடமிருந்து அன்பு அருவி போலப் பாய்ந்து, ஆட்கள் அதை அள்ளி அருந்துவதையும் பொருட்படுத்தாமல் அறையின் அனைத்து மூலைகளையும் சென்றடைந்தது. என்னைப் பொறுத்தவரை, மண்டலி பாபாவின் அன்பை அதிகமாக அடையப் பெறுவதற்குக் காரணம், அவர்கள் என்னை விட உலகில் வெறுமையாக இருப்பதுதான்.

பாபா, ஜிம்மை எழுந்து நிற்கக் கூறி, அவரை தனது சகோதரர் ஜால்பாயிடம் அறிமுகப்படுத்தினார். "**ஜால் உங்களுக்கு பூனாவை சுற்றிக் காண்பிப்பார்**" என்று கூறி பாபா விளக்கினார்: "**உயரமான ஓர் அமெரிக்கரையும் குள்ளமான இந்தியரையும் பார்த்து பூனா நகர மக்கள் மிகவும் மகிழ்வார்கள்**" என்று அவர் கேலி செய்தார்.

ஃபிரான்சிஸ், "அதுதான் நீளமானதும் குறுகியதும் ஆகும் (கதையின் சாராம்சம்)" என்று திடீரெனக் குரலெழுப்பினார்.

பாபா கூறினார், "**ஜாலின் வளர்ச்சி தடைபட்டு விட்டது!**"

முடிவில் பாபா, ஜிம்மிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்: "**நீங்கள் கடவுளைத் தேடுகிறீர்கள், ஆனால் கடவுள், உங்களுக்கு முன்னால் நீங்கள் பார்க்கும் (பாபாவின்) இந்த உடல் வடிவம் அல்ல. கடவுள் உங்களுக்குள்ளே இருக்கிறார். கடவுள் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொன்றிற்கும் உள்ளே இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கடவுள் ரிச்சர்ட் ஆல்பர்ட்டின் உள்ளே உள்ளார் - நான் கடவுள், மேலும் நான் அவரை நேசிக்கிறேன்; கடவுள் ராபர்ட் ட்ரே்ஃபஸில் இருக்கிறார் - நான் கடவுள், மேலும் நான் அவரை நேசிக்கிறேன்; கடவுள் டயானாவில் இருக்கிறார் - நான் கடவுள், நான் அவரையும் நேசிக்கிறேன்; மேலும் கடவுள் உங்கள் முன்னேற்பாடுகளிலும், திட்டங்களிலும் இருக்கிறார், உங்கள் ரயிலிலும், நீங்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்வதிலும் இருக்கிறார்.**"

தொடர்ந்து பாபா கூறினார், "**படைப்பில் எல்லா மனிதர்களுக்கும் மேலாக என்னை நினைவில் கொள்ளுங்கள். அன்பு, சேவை - நான் உங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கொடுத்துள்ளேன், இப்போது நீங்கள் அவற்றில் கவனம் செலுத்த விரும்புகிறேன். உங்கள் கவிதையின் கடைசி வரியில் நீங்கள் உண்மையாக இருந்தால், நீங்கள் ஒரு நாள் என்னை எனது உண்மை ரூபத்தில் காண்பீர்கள்.**"

ஜிம் மேலும் கூறுகிறார்:

நான் பிறந்து வளர்ந்த எல்லா நாட்களிலும் கடவுளை அவரது உண்மை உருவில் பார்க்க முடியும் என்று நினைத்ததில்லை - அப்படி ஒரு சூழ்நிலை உருவாகும் என எதிர்பார்த்ததுமில்லை! அது எனக்கு அப்பாற்பட்டது என்று நினைத்தேன். அதற்காக நான் முயற்சிக்கவுமில்லை. ஆனாலும் அங்கே 'அவர்' எனது கவனத்தை இறுதி இலக்கை நோக்கி எடுத்துச் சென்றார். அவர் யார், இறுதி இலக்கு என்ன என்று பல தவறான புரிதல்களுடன் நான் உள்ளே சென்றிருந்தேன், அந்தக் குறுகிய நிமிடங்களில் பாபா எனக்கு உதாரணம் ஒன்றை வழங்கி, பல விஷயங்களை அறிந்துகொள்ள எனக்கு உதவினார்.

பாபா, ஜிம்மை அழைத்து அரவணைத்து முத்தமிட்டு விடையளித்தார். ஜால்பாயுடன் காலைப்பொழுதில் பூனாவைச் சுற்றியுள்ள பல்வேறு பாபா சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, பெங்களூர் வழியாக டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்று, மே 1 அன்று அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்றார். ஜிம் அவரது வார்த்தைகளில் இவ்வாறு கூறி முடிக்கிறார்:

அந்த நேர்காணலைப் பொறுத்தவரை, பாபாவின் பிரசன்னத்தின் வலுவான நினைவு என்னில் நிலைத்துள்ளது. எப்படியோ, அதைச் சொல்லாமல், அவர் என்னை முழுவதுமாக நேசிக்கிறார் என்றும், நான் அவரை உறுதியாக நம்ப முடியும் என்றும், எதையும் - உண்மையில் எதையும் - சகித்துக்கொள்வதும் துன்பங்களைத் தாங்கிக்கொள்வதும் மேலதிகமான பலனை நல்கும்; மேலும், அவர் தொடர்ச்சியாகவும், நித்தியமாகவும் அனுபவிக்கும் பேரின்ப அனுபவத்திற்காக அயராது உழைக்க வேண்டும் என்றும் என்னிடம் தெரிவித்தார். எப்படியோ, பாபா எனக்கு ஒன்றைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்:

சாலையின் முடிவில், அவர் ஒருவரே உளதாயிருக்கிறார் என்பது மிகவும் அற்புதமான ஒன்று. பாபா என்னுள் எழுச்சியுறச் செய்த ஏதோ ஒன்று, அதை அறிந்துகொள்ளத் தூண்டுதலாக இருந்தது.

மஸ்துகள் தங்கள் வாழ்க்கையை ஒரு பொருட்டாகக் கருதாமல், அவருக்காக அலட்சியமாக தூக்கி எறிகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. நெருங்கிய சீடர்கள் அவருடனே எப்பொழுதும் இருக்க விரும்புவதையும், அவரை நேசித்து, அவருக்கு சேவை செய்வதையும் தவிர வேறு எதையும் விரும்புவதில்லை என்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவரது இறை அன்பின் மதுபானத்தின் சுவை, என்னில் முழு தாகத்தை ஏற்படுத்தியது. அவரை, அவருடைய உண்மை ரூபத்தில் காணும் நாளுக்காக நான் எவ்வளவு ஏங்குகிறேன்.

பாபாவிற்கு ஜிம் எழுதிய கடிதத்தில், “ஒரு நாள் நான், ஒன்றுமில்லாத அளவுக்கு வளர்ந்து விடுவேன் என்று நம்புகிறேன்” என்று குறிப்பிட்டதற்கு, ஆதி மூலமாக பாபா, “**ஆமாம், ஒரு நாள் நீங்கள் அவ்வாறே மாறுவீர்கள்**” என்று பதிலளித்தார்.

டாக்டர் ராம் கிண்டே 1966 ஏப்ரல் பிற்பகுதியில் குருபிரசாத்தில் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார்; மேலும் அவரது சந்திப்பிற்குப் பிறகு விரைவில் மும்பை திரும்பிச் சென்றார். ஏப்ரல் 23 அன்று ஆதி அவரது வழக்கமான பணி நிமித்தம் குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்டார். மே 5ஆம் தேதி ஹைதராபாத் செல்லும் வழியில் ஆதி மீண்டும் பூனா வந்தார்; ஹைதராபாத் மெஹர் விஹாரில் (MEHER VIHAR) அவர் ஒரு விழாவில் உரை நிகழ்த்த இருந்தார். மெஹர் விஹாரில் பாதுகாப்பாக வைக்க வேண்டிய ஒரு ஜோடி வெள்ளி முலாம் பூசப்பட்ட பாதுகை (பழைய காலத்து பாத அணிகள்) குருபிரசாத்திற்குக் கொண்டுவரப்பட்டது, அதில் பாபா 5ஆம் தேதி தனது கால்களைப் பதித்தார். இந்த நேரத்தில் குருபிரசாத்தில் பாபாவை சந்திக்க டாக்டர் டானும் அழைக்கப்பட்டார். மே 9 அன்று, ஆதி திரும்பி வந்து, நிகழ்ச்சி தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளின் அறிக்கையை வழங்கினார்.

இதற்கிடையில், ஷீலா கல்சூரியின் காதில் இரத்த நச்சூட்டலால் சீழ் நிறைந்து, அவர் கடுமையான வலியில் இருந்தார். காதின் பின்புறம் அறுவை சிகிச்சை ஒன்று அவசியம், மேலும் அது பூனாவில் செய்யப்பட வேண்டும்; எனவே, ஷீலா, ரமா, மெஹர்நாத் மூவரையும் வரவழைத்து குருபிரசாத்தில் தங்க அனுமதித்தார். பொதுவாக, அவர்கள் பாபாவின் தரிசனத்திற்காக வரும்போதெல்லாம், ரமாவின் சகோதரர் தீரஜ் அருகில் அமைந்த ஹோட்டலில் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அந்த ஆண்டிலிருந்து அனைவருக்கும் பாபாவுடன் தங்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

1966 மே 12 அன்று, ஷீலாவின் பதினான்காவது பிறந்த நாளை ஒட்டி, பாபா அவர்களை பூனாவிற்கு அழைப்பார் என அவள் நம்பினாள், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. நான்கு நாட்களுக்குப் பிறகு, மே 16 அன்று,

அவர்களை பூனாவிற்கு அழைத்தார். அவர்கள் வந்ததும் பாபா அவளிடம் கேட்டார், **“உங்கள் அனைவரையும் குருபிரசாத்திற்கு ஏன் அழைத்தேன் தெரியுமா? இன்று ‘பேபி’க்குப்** (ஷீலாவின் செல்லப்பெயர்) **பிறந்தநாள்; அவள் முதலில் வந்து என்னைத் தழுவ வேண்டும்.”**

“இல்லை, பாபா!” அவள் எதிர்ப்பு தெரிவித்தாள். “எனது பிறந்த நாள் 12ஆம் தேதி! எனக்கு நீங்கள் பிறந்தநாள் வாழ்த்து கூட அனுப்ப மறந்துவிட்டீர்கள். நீங்கள் என்னை விட மெஹர்நாத்தை நேசிக்கிறீர்கள்! அவருடைய பிறந்தநாளை எப்பொழுதும் மெஹராஸாத்தில் கொண்டாடுகிறீர்கள். எனது பிறந்தநாளுக்கு நீங்கள் எனக்கு ஒரு வாழ்த்து அனுப்புகிறீர்கள், ஆனால் இந்த ஆண்டு அதையும் மறந்துவிட்டீர்கள்! இப்போது, இன்று எனது பிறந்தநாள் என்று சொல்லி என்னை மகிழ்விக்கப் பார்க்கிறீர்கள். எனக்கு உங்களைக் கட்டித்தழுவ வேண்டாம்!”

பாபா அவளை அமைதிப்படுத்த முயன்றார்: **“நீங்கள் எப்போது பிறந்தீர்கள் என்று எனக்குத் தெரியும், காது கொடுத்துக் கேளுங்கள்; பேபி, கடவுள் இன்று உனது பிறந்த நாள் என்று உனக்குச் சொல்கிறார். உன்னை விட எனக்கு அதிகம் தெரியும் அப்படித்தானே! இன்றுதான் உன் உண்மையான பிறந்த நாள்.”**

அப்போதுதான் ஷீலா கடவுளுடன் உரையாடுகிறாள் என்பதை உண்மையில் உணர்ந்து கொண்டாள். அவளுடைய சீற்றம் தணிந்து, பாபாவைத் தழுவிய போது, அவர் பிறந்தநாளுக்காக அன்று கப்-கேக்குகளை வரவழைத்ததாகத் தெரிவித்தார். ரமா பெண் மண்டலிக்காக காய்கறிகளை தயார் செய்து கொண்டு வந்திருந்தார். பாபா அதைப் பார்த்ததும், **“இன்று, பேபியின் பிறந்தநாளை ஒட்டி நீங்கள் அனைவரும் கப்-கேக் உண்ணும் அதே வேளையில், நான் இந்த காய்கறியை உண்பேன்”** என்று கூறினார்.

1966 மே 18 அன்று, ஷீலாவின் அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்பு, ஷீலா, ரமா, மெஹர்நாத் மூவரையும் காலை 6:30 மணிக்கு பாபா தனது அறைக்கு அழைத்தார். ஷீலாவைத் தழுவி பாபா, **“உங்களுக்கு என்ன பயமாக உள்ளதா? இந்த அறுவை சிகிச்சையில் நீங்கள் உயிரைத் துறந்துவிடுவீர்கள் என்று வைத்துக் கொள்வோம்! அப்போது என்னிடம் வருவதில் மகிழ்ச்சியாக இருப்பீர்களா?”** என்று கேட்டார்.

அதைக் கேட்டு தாயார் அழத் தொடங்கினாலும், ஷீலா, “ஆமாம் பாபா, என்றென்றும் உங்களுடனேயே இருப்பதில் மகிழ்ச்சி அடைவேன், இப்போதெல்லாம் எப்போதேனும் ஒருமுறைதான் உங்களைப் பார்க்கிறேன், ஆனால் உங்களிடம் வந்திணைந்தால் நித்தியமாக உங்களுடன் வாழ்வேன்!” என்றார்.

ரமா உடனே, “உங்கள் அருட்பார்வை அவளுடன் இருக்கட்டும் பாபா” என்றார்.

**“என் அருட்பார்வை மட்டுமா? உங்கள் மகள் என்னுடன் இருப்பதில் நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்! கண்கலங்காதீர்கள், நான் அவருடன்**

**எப்பொழுதும் இருப்பேன். மருத்துவமனையில் இருந்தாலும் நான் அவருடன் இருப்பேன். இந்த மருத்துவர்களால் இவ்வளவு சிக்கலான அறுவை சிகிச்சையை செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா? அந்த மருத்துவர் மூலமாக நான்தான் அதைச் செய்வேன்.**"

அதற்குப் பிறகு சூரியன் உதயமானதும், மெஹரா, பாபாவின் தலைமுடியை சீர்செய்து கொண்டிருந்த வேளையில், பாபா மீண்டும் மூவரையும் தனது படுக்கையறைக்கு அழைத்தார். மெஹரா இரண்டு லாக்கெட்டுகளை ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்க பாபாவிடம் கொடுத்தார். பாபா, ஷீலாவை அழைத்து, அவளது ரவிக்கையில் பொருத்தி, "**உங்கள் அறுவை சிகிச்சையின் போது இதை அகற்ற வேண்டாம், நான் உங்களுடன் இருப்பேன், ஆனால் நீங்கள் அதை அகற்றினால், நான் அங்கு வரமாட்டேன்; இது யார் என்பதை எவரிடமும் சொல்ல வேண்டாம். மருத்துவர் உங்களிடம் கேட்டால், அவரிடமும் சொல்லாதீர்கள். இந்த லாக்கெட் உங்களைத் தீங்குகளிலிருந்து பாதுகாக்கும் மேலும் உங்களைக் காப்பாற்றும். அதை எப்பொழுதும் உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.**"

மருத்துவமனையில், செவிலியர்கள் ஷீலாவிடம் அவளது ரவிக்கையை அகற்றுமாறு கூறினாலும், அவள் அறுவை சிகிச்சையின் போது லாக்கெட்டை அணிவதில் உறுதியாக இருந்தாள். நீண்ட வாக்குவாதத்திற்குப் பின்பு செவிலியர்கள் அதற்கு இணங்கினர். மெஹர்ஜி, நானா கேர் இருவரும் ஷீலாவுடன் மருத்துவமனையில் இருந்தனர்; மேலும் பல முறை, அறுவை சிகிச்சையின் போது, ஷீலாவின் உடல்நிலை பற்றிய தகவல்களை வழங்க, பாவ் கல்சூரியை தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு பாபா அறிவுறுத்தியிருந்தார். அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது, ஒரு வாரத்திற்குப் பிறகு ஷீலா குருபிரசாத்திற்குத் திரும்பிவந்தார்.

சதாஷிவ் பாட்டீலும் மெஹர்ஜியைப் போலவே ஒவ்வொரு நாளும் குருபிரசாத்திற்கு வருவது வழக்கம். ஒரு நாள் பாபாவின் கை சைகைகளை புரிந்துகொண்ட மெஹர்நாத், சதாஷிவிடம் கேட்டார், "பாட்டீல் காக்கா, நீங்கள் உட்கார்ந்து எழும் உடற்பயிற்சி எத்தனை முறை செய்கிறீர்கள்?"

அதற்கு சதாஷிவ், "நான் தினமும் 2,000 முறை அதைச் செய்கிறேன்!" என்றார்.

பாபா ஆச்சரியத்தில் கையால் வாயை மூடிக்கொண்டார். அவரது சைகைகளின் பேரில், மெஹர்நாத், "இரண்டாயிரம் முறை உட்கார்ந்து எழும் உடற்பயிற்சியை செய்கிறீர்களா! அட, கடவுளே!" என்றார்.

சதாஷிவ் பாட்டீல் அலட்சியமாகக் கூறினார், "அதெல்லாம் ஒன்றும் இல்லை! நான் தினமும் மூன்று மைல் நடந்து பர்வதி மலையில் (PARVATI HILL) ஐந்து முறை ஏறி இறங்குகிறேன்."

மீண்டும், பாபாவின் சைகைகளுக்கு இணங்க மெஹர்நாத், “நீங்கள் என்ன உண்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“இரண்டு பானை மோர், இரண்டு குவளை பால் மற்றும் ஐந்து ரொட்டி!”

பாபா அதைக் கேட்டு மிகவும் பூரிப்படைந்தார், மேலும் மெஹர்நாத் கூறினார், “பாட்டீல் காக்கா, நீங்கள் 25 வயது இளைஞனைப் போல வலிமையானவர், ஆனால் நீங்கள் ஒரு மனிதன் அல்ல, மாபெரும் ராட்சசன்!”

சதாஷிவ் உடனே கூறினார், “சரி, ஆனால் அதில் என்ன தவறு?”

ஒவ்வொரு நாளும், பாபா, ஷீலாவை சதாஷிவிடம் அனுப்பி, எப்பொழுது மழை பொழியும் என்று கேட்கச் செய்தார். சதாஷிவ் ஒவ்வொரு முறையும் ஒரு திட்டவட்டமான தேதியைத் தெரிவித்தாலும், அந்த நாளில் மழை பொழியவில்லை. இது சில முறை நடந்தது, ஒரு நாள் ஷீலா அவரிடம் கூறினார், “பாபா ஒருவர்தான் நம்மை ஏமாற்ற முடியும் என்று அவர் நினைத்தார்; ஆனால் பாட்டீல் காக்கா இப்போது அந்தக் கலையில் தலைசிறந்தவராக மாறிவிட்டார், ஏனெனில் அவர் பாபாவையும் ஏமாற்றுகிறார்! மழை பொழியாததால் கால்நடைகளுக்கும் மனிதனுக்கும் அருந்த நீர் இல்லாதபோதும், இங்கே கடவுள் விளையாடிக் கொண்டிருக்கிறார்!”

அதைக் கேட்ட சதாஷிவ், “இன்னும், நான்கு நாட்களுக்குள் மழை நிச்சயம் வரும்!” என்று கூறிய நான்காம் நாள், வானத்தில் கார்மேகங்கள் சூழ்ந்தன; சதாஷிவ், ஷீலாவிடம், “இப்போது போய் பாபாவிடம் சொல்லுங்கள், நான் சொன்னது போல் இன்று மழை நிச்சயம் வரும் என்று கூறுங்கள்” என்று கேட்டுக்கொண்டார்.

சதாஷிவ் கூறிய அதே வேகத்தில் மேகங்களும் பறந்து சென்றன, சூரியன் பிரகாசிக்கத் தொடங்கியது, ஆகையால், சதாஷிவ் மே 30ஆம் தேதியை மழைக்கான திட்டவட்டமான தேதியாக அறிவித்தார். ஆனால் அப்போதும் மழை வந்தபாடில்லை; பாபாவின் சைகைகளை கவனித்த ஷீலா, சதாஷிவிடம் “நீங்கள் ஒரு தந்திரசாலி! எங்கே மழை?” என்று கேட்டார்.

அதற்கு சதாஷிவ், “இப்போது நான் எனது கணிப்பைக் கைவிடுகிறேன்! இதற்கு மேலும் என்னால் எதுவும் செய்ய முடியாது. பாபா விரும்பும் போதுதான் மழை பெய்யும்” என்றார்.

ஒருமுறை, பாபாவின் சைகைகளைப் புரிந்துகொண்டு, மெஹர்நாத் சதாஷிவிடம், “பாட்டீல் காக்கா, என்னை உங்கள் வாரிசாக ஏற்றுக்கொள்வீர்களா?” என்று கேட்டார்.

சதாஷிவ் உடனே, “மன்னிக்கவும், நான் எந்த ஆண்மகனையும் எனது வாரிசாக ஏற்க முடியாது” என்றார்.

பாபாவின் ஒரே வார்த்தையின் பேரில், ஷீலா, “நான் ஒரு பெண்; என்னை உங்கள் வாரிசாக ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று கூறினார்.

சதாஷிவ் அப்போது, “சரி நான் உங்களைத் தத்தெடுத்துக் கொள்கிறேன்” என்றார்.

“என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்.”

"இல்லை, என்னால் அதைச் செய்ய முடியாது."

பாபா சிரித்துக்கொண்டே கூறினார், "**பாட்டீல், நீங்கள் மிகவும் சுயநலவாதி! நீங்கள் ஏதேனும் சிறுமியைத் தத்தெடுத்தால், நான்தான் அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டும்! உங்கள் நியாயம் உண்மைதான். நீங்கள் பேபியை உங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றால், நான் அவரை உங்கள் மகளாகத் தத்து கொடுப்பேன்.**"

சதாஷிவ், "இல்லை, நன்றி பாபா, நான் எவரையும் தத்தெடுக்க விரும்பவில்லை, நிச்சயமாக, நீங்கள் சொன்னால் நான் அதைச் செய்கிறேன்; ஆனால் அவருடைய பராமரிப்பு உங்கள் பொறுப்பு" என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே கூறினார், "**முதியவர் அதி புத்திசாலி! அவரை ஒன்றில் சிக்கவைப்பது சிரமம்.**"

ஷீலாவிற்கு நீண்ட விரல் நகங்கள் இருந்தன, பாபா, அவளிடம் '**ஏன் அவற்றை அவ்வாறு வைத்திருக்கிறீர்கள்**' என வினவினார். அவள் அதைத் தற்போதைய நாகரீகமாகக் கருதி வைத்திருந்தாலும், "எனக்கு அவை வரையவும், எழுதவும் உதவியாக உள்ளன பாபா" என்று பதிலளித்தாள்.

பாபா அவளிடம், "**நீங்கள் ஒரு பெண் புலி போல் இருக்கிறீர்கள்! என்னைத் தழுவும் போது, உங்கள் நகங்கள் எனது கன்னங்களைத் துளைக்கக்கூடும், எனவே அவற்றை அகற்றுவது நல்லது**" என்று கூறினார்.

"ஆனால் நான் வரைவது எப்படி?"

"**அவை இல்லாமல் உங்கள் ஓவியங்கள் நன்றாக வரும், கவலைப்பட வேண்டாம்!**"

ஷீலாவிற்குக் கீழ்ப்படிவதைத் தவிர வேறு எந்த வழியுமில்லை, பாபா அவளை எச்சரித்தார், "**இது என் உத்தரவு. இனி உங்கள் நகங்களை நீளமாக வளர விடாதீர்கள்.**"

குருபிரசாத்தில், பாபா, மண்டலியுடன் இருக்கும்போதெல்லாம், மெஹர்நாத்தை தனது பக்கத்தில் அமருமாறு அறிவுறுத்தினார். ஒரு நாள் வேறு சில குழந்தைகள் பாபாவைப் பார்க்க வந்த வேளையில், மெஹர்நாத் சற்று தூரத்தில் அமர்ந்தார். பாபா அவரிடம் கேட்டார், "**ஏன் இங்கிருந்து விலகிச் சென்றீர்கள்?**"

அதற்கு மெஹர்நாத், "பிறருக்கும் உங்கள் அருகில் அமரும் வாய்ப்பு கிடைக்கும்" என்று பதிலளித்தார்.

"**உங்களுக்குப் பிறரை மகிழ்விப்பதிலா அல்லது என்னை மகிழ்விப்பதில் ஆர்வமா? உங்களை என் அருகில் அமரச் சொன்னேன்; நீங்கள் ஏன் உங்கள் மூளையைப் பயன்படுத்துகிறீர்கள்? இந்த முறை நான் உங்களை மன்னிக்கிறேன், ஆனால் அதை மீண்டும் செய்யாதீர்கள்!**"

டாக்டர் தேஷ்முக் மே 27 அன்று பாபாவை 20 நிமிடங்கள் சந்தித்தார். ஒரு முறை குருபிரசாத்தில், தேஷ்முக் அன்றைய தினம் எதிர்பார்க்கப்பட்டதாக,

மெஹர்நாத், ஷீலா இருவரிடமும் பாபா குறிப்பிட்டு, "**அவர் வரும்போது, அவரை வெளியே அனுப்புங்கள்! அவரை உள்ளே வர அனுமதிக்காதீர்கள். இது எனது உத்தரவு**" என்று அறிவுறுத்தினார்.

தேஷ்முக் வந்தார், இரண்டு குழந்தைகளும் அவரது கையைப் பிடித்து அவர் உள்ளே நுழைவதைத் தடுக்க முயன்றனர். தேஷ்முக் உடனே, "உங்கள் பாபாவை எனது தோளில் சுமந்து, இங்கிருந்து அழைத்துச் செல்லவா நான் வந்திருக்கிறேன்? நானும் சிறிது நேரம் இங்கே அமரட்டும்" என்று கூறி அவர்களின் கைகளைத் தள்ளிவிட்டார். பாபா அவரைத் துரத்துமாறு சைகையால் தெரிவித்தார், ஷீலா அவரது கையைப் பற்றிப் பிடிக்க முயன்றபோது, அவர் அதை உதறித் தள்ளிவிட்டார். தேஷ்முக்கை உள்ளே விட வேண்டாம் என்று பாபா சைகையால் தெரிவித்துக் கொண்டிருந்தார், அதனால் ஷீலா அவரது ஒரு கையை இழுக்க, மெஹர்நாத் மறுகையைப் பிடித்துக் கடித்தார்! தேஷ்முக் அலறினார், பாபா அதைப் பார்த்து மிகவும் மகிழ்ந்தார், ஆனால் அவர் குழந்தைகளிடம், "**இப்போது தேஷ்முக் உள்ளே நுழைந்துவிட்டதால், அவரை விட்டுவிடுங்கள், அவர் உள்ளே வருவதைத் தடுக்க வேண்டும் என்று நினைத்தேன்; ஆனால் இப்போது நாம் என்ன செய்வது?**" என்று சைகையால் தெரிவித்தார்.

பாபாவுடனான சிறிது நேர உரையாடலுக்குப் பின்னர், அவருக்கு விடையளித்து, டாக்டர் தேஷ்முக்கிடம் புறப்படுமாறு கேட்டுக்கொண்டார். தேஷ்முக் அமர்ந்தே இருந்ததால், பாபா, மெஹர்நாத்தை சுட்டிக்காட்டி, "**ஓர் ஊசியால் குத்தி அவரைப் போகச் செய்யுங்கள்!**" என்றதும், மெஹர்நாத் எழுந்து அவரை நோக்கி நகர்ந்தார், தேஷ்முக் விரைந்து வெளியே சென்றார்.

தேஷ்முக் பூனாவில் தங்கியிருந்த ஒரு வார காலத்தில், ஒவ்வொரு நாளும் அதே காட்சி மீண்டும் மீண்டும் நிகழ்ந்தது. ஒரு நாள் அவர் பாபாவிடம் கேட்டார், "நான் இந்துவையும் (அவரது மனைவி) சஞ்சீவனியையும் (அவரது மகள்) உங்களைப் பார்க்க அழைத்து வரட்டுமா?"

சீற்றமடைந்த பாபா கூறினார், "**இந்த மனிதரைப் பாருங்கள்! நான் அவரைப் பார்க்கக்கூட விரும்பவில்லை, அவர் மனைவி மற்றும் மகளைப் பற்றி என்னிடம் கேட்கிறார்!**"

வேறொரு நாள், தேஷ்முக் ஒரு பொட்டலம் நிறைய பாபா-லாக்கெட்டுகளைக் கொண்டு வந்து, பாபாவிடம் தொட்டு ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொண்டார். பாபா அந்தப் பொட்டலத்தைத் தொடுவதே போதுமானது என்று கூறினாலும், தேஷ்முக் ஒவ்வொரு லாக்கெட்டையும் தனித்தனியாகத் தொடுமாறு வற்புறுத்தினார் - அதில் 200 அல்லது அதற்கும் மேலான எண்ணிக்கையில் இருந்தது! பாபா, "**அவர் எனது முன்னிலையில் அதிக நேரம் இருக்க வேண்டும் என்பதற்காகவே இதைச் செய்கிறார்**" என்று குறிப்பிட்டார். கடினமான பணியை பாபா விரும்பாதபோதும், தேஷ்முக்கின் கோரிக்கையை நிறைவேற்றினார்.

மெஹர்நாத்தின் பள்ளி விடுமுறை முடிந்ததால், 1966 ஜூன் 4 அன்று ரமா, மெஹர்நாத் இருவரும் அஹமதுநகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். ஷீலாவை ஒவ்வொரு நாளும் டாக்டரிடம் அழைத்துச் செல்ல வேண்டியிருந்ததால், அவளை குருபிரசாத்தில் தங்க வைத்தனர்.

ரமா அங்கு இருந்த வேளையில், தாயும் மகளும் பெண் மண்டலியுடன் இணைந்து உணவு உண்டனர். ஆனால் இப்போது, பாபா அவளை ஆண்களுடன் அமர்ந்து உண்ணுமாறு அறிவுறுத்தினார். அவளது அறுவை சிகிச்சையின் காரணமாக, அவளால் கடினமாக எதையும் மெல்ல முடியவில்லை; ஒரு நாள் மண்டலியின் மதிய உணவில் அத்தகைய உணவுகள் இருந்ததைக் கண்டு, பாபா, ஷீலாவை பெண் மண்டலி பக்கம் அழைத்துச் செல்ல கோஹெரை அழைத்தார்; அங்கு அவர் பாபாவுக்காகத் தயார் செய்த சாதம், பருப்பு இரண்டையும் ஷீலாவிற்குக் கொடுத்தார். பாபாவின் உணவை உண்டால், அவர் பசியுடன் இருக்கக்கூடும் என்று நினைத்து ஷீலா சற்று தயங்கினார், ஆனால் பாபா இவ்வாறு தெரிவித்தார், "**இந்த உணவு அத்தனை சுவையாக இல்லை**; **என்னால் இதை உண்ண முடியாது**, **நீங்களே உண்ணுங்கள்**" என்றதும், அவள் அதை உண்டு அதி சுவையாக இருப்பதைக் கண்டாள்.

இதற்கிடையில், ஹாரி கென்மோர் ஜூன் 4 அன்று குருபிரசாத்தை வந்தடைந்தார்; மேலும் அவர் 11ஆம் தேதி மதியம் திரும்பிச் செல்லும் வரை, ஒவ்வொரு நாளும் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். ஹாரி அமெரிக்காவிலிருந்து பாபாவுக்காக ஒரு சாய்வு நாற்காலியைக் கொண்டு வந்திருந்தார். துரதிர்ஷ்டவசமாக, நாற்காலி போக்குவரத்தில் தவறாக பெய்ரூட் நகரைச் சென்றடைந்தது. அது இறுதியில் பூனாவை வந்தடைந்த போது பாபா, ஹாரியின் சிந்தனையுடன் கூடிய அணுகுமுறையில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

சத்தாராவில் வாழும் ராம்ஜூ அப்துல்லாவை சந்திக்கவும், மெஹர் பாபாவின் தொடர்பில் அவரது ஆரம்ப கால நினைவுகளைப் பதிவு செய்யவும் எண்ணி, ஹாரி தன்னுடன் 'குரல் பதிவு கருவி'யை (TAPE RECORDER) கொண்டு வந்திருந்தார். எதுவாயினும், ஹாரியை பாபா அங்கு அனுப்பவில்லை.

ஹாரி கென்மோரின் வருகையின் போது, ஜூன் 7ஆம் தேதி, நியூயார்க்கில் பாபாவின் பெயரைப் பரப்பும் நோக்கத்தில் ஹாரி செய்து வரும் பணியைப் பற்றிப் பேசுகையில், '**நியூயார்க் நகரில் ஒவ்வோர் ஆண்டும்**, **இரண்டு பொது நிகழ்ச்சிகளை நடத்துமாறு**' பாபா அவருக்கு அறிவுறுத்தினார் - '**ஒன்று பாபாவின் பிறந்தநாள், மற்றொன்று மௌன தினம்**'.

ஹமிர்பூரிலிருந்து கேஷவ் நிகம், புக்கார் இருவரையும், பாபா அங்கு அவரது பெயரில் நடந்த பணிகள் குறித்து விவாதிக்க குருபிரசாத்திற்கு அழைத்தார். அவர்கள் ஒரு நாள் அல்லது அதற்கும் மேலாகத் தங்கி, பாபாவின் அறிவுரைகளைப் பெற்று புறப்பட்டுச் சென்றனர்.

1966 ஜூன் 5 ஞாயிறு காலை, ஜெஹாங்கு - குல்னார் அவர்களின் மகள் மெஹர்னாஸின் நவ்ஜோத் விழாவிற்காக பெஹராமின் குடும்பத்தினர் குருபிரசாத்திற்கு வந்தனர். குழந்தையின் ஸத்ரா, குஸ்தி, தொப்பி, புதிய ஆடைகள் அனைத்தும் வெள்ளித் தட்டில் பாபாவின் முன்னால் வைக்கப்பட்டன. பாபா அவளிடம் சத்ராவையும் குஸ்தியையும் கொடுத்தார், மேலும் ஷரியத் (மத பாரம்பரியம்) என்ற வெளியளவிலான சடங்கு சம்பிரதாய பிணைப்புகளிலிருந்து விடுபடுவது பற்றிய செய்தி குறிக்கப்பட்ட ஒரு துண்டு காகிதத்தையும் கொடுத்தார் (இது ஜிம் மிஸ்திரியின் மகன்களுக்கு அவர்களின் நவ்ஜோத் விழாவில் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்டது). அது எரச்சால் வாசிக்கப்பட்டது, அதைத் தொடர்ந்து, மெஹர்னாஸ் குருநாதரின் 'பர்வர்திகார்' பிரார்த்தனையை மொழிந்து, பெண் மண்டலி அமர்ந்திருந்த பக்கத்திற்குச் சென்றபோது, மெஹரா அவளுக்கு சத்ரா மற்றும் குஸ்தியை அணிவித்தார்.

குருபிரசாத்தில் அன்றாட வழக்கத்தின் ஒரு பகுதியாக பாபா கடிதப் பரிமாற்றத்தில் கலந்துகொண்டார். கடிதங்கள் மற்றும் தொலைத்தந்திகளுக்குத் தடை இருந்தபோதிலும், அவை தவறாமல் வந்த வண்ணம், ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே இருந்தன. எரச், மணி இருவரும் இந்தியா மற்றும் மேற்கத்திய நாடுகளுடன் ஆங்கிலத்தில் கடிதப் பரிமாற்றம் செய்தனர்; பாவ் கல்சூரி இந்தியாவில் இந்தி மொழியிலான கடிதங்களைக் கையாண்டார்; ஆந்திரா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலிருந்து வந்த சில கடிதங்களை ஆதி கவனித்துக் கொண்டார்; மேலும் அலோபா ஈரானில் வாழும் அன்பர்களுக்கு, பாரசீக மொழியில் பதிலளித்தார். பெண்டு குருபிரசாத்தின் மேலாளராக இருந்தவர், பாவ் கல்சூரி மற்றும் ரானோவுடன் இரவு கண்காணிப்புப் பணியைப் பகிர்ந்து கொண்டார்.

கவிதைகள், கஸல்கள், பாடல்கள் போன்றவற்றை இயற்றுவதில் ஃபிரான்சிஸ் கைதேர்ந்தவர். தினமும் காலையில், பாபாவிடம் அவருடைய கைவண்ணத்தில் உருவான பாடல்களில் ஒன்றைப் படிப்பது வழக்கம். ஒரு நாள், அவர் ஒரு பாடலின் ஒரு பகுதியைப் படித்துக் கொண்டிருந்தபோது, பாபா தன்னிச்சையாக மேலும் இரண்டு வரிகளை எடுத்துரைத்தார்:

**எனது மகிழ்ச்சியை நாடும் ஒருவர்,**
**தெய்வீகப் பொக்கிஷத்தைக் கண்டுகொள்கிறார்.**

1966 ஜூன் 12 காலை 9:00 மணிக்கு ஹர்ஜீவன் லாலின் மகன் இந்தரைப் போலவே, டாக்டர் கிண்டே மற்றும் அவரது குடும்பத்தினர், பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர். அடுத்த நாள் பூனாவின் ஆட்சியர் எம்.ஏ. தேஷ்முக் (M.A. DESHMUKH) மற்றும் சில பொதுத்துறை அதிகாரிகளுக்கு பதினைந்து நிமிடங்கள் பாபாவை சந்திக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்த ஆண்டு தஸ்தூர் பள்ளிக்கூடத்தின் (பாபா அங்குப் பயின்றார்) முதல்வர், சிந்தி இனத்தைச் சார்ந்தவர், முதல் முறையாக பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார்.

பள்ளிக்கூடத்தில் மொழியும் பிரார்த்தனைகளில் ஒன்று பாபாவின் குருநாதருக்கான பர்வர்திகார் பிரார்த்தனை என்று அந்தப் பெண்மணி கூறினார்.

ஜூன் மாதம் பூனா மைய சேவகர்களின் சந்திப்பும் நடைபெற்றது. அவர், சேவகர்களின் முன்னேற்றம் மற்றும் பூனா நகரத்திலும் அதைச் சூழ்ந்த பகுதிகளிலும் பாபாவின் செய்திகளைப் பரப்புவதில் அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள், உள் பூசல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் பற்றி விவாதித்தார். இந்த நீண்ட நெடிய சந்திப்பின் போது, பாபா மிகவும் கலகலப்பாகக் காணப்படுவதைக் கண்ட மண்டலிக்கு ஆச்சரியமாக இருந்தது; அவர் சேவகர்களின் பேச்சைக் கேட்டு, சிலரை ஊக்குவித்து, சிலருக்கு அறிவுரை கூறி, அனைவருக்கும் வழிமுறைகளை வழங்கினார். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பாபாவின் கண்களில் இருந்த அளவிலா சோர்வு, மண்டலி பொதுவாகக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், பாபா அவரது உலகளாவிய பணியின் அழுத்தத்தால் உடல் சோர்வடையாதது போல, சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் தோற்றமளித்தார்.

இந்த சந்திப்பின் போது, பாபா அடிக்கடி பாப்புஸாஹேப் ஷிண்டேயைப் பற்றி குறிப்பிட்டார், அவர் இல்லாததை மிகப்பெரிய அளவில் உணர முடிந்தது.

பூனாவிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, கோஹெர் மீண்டும் பாபாவின் இரத்தத்தையும் சிறுநீரையும் பரிசோதனை செய்தார். ஜூன் 25 அன்று இரத்த மாதிரிகளும், இரண்டு நாட்களுக்குப் பிறகு சிறுநீரும் சேகரிக்கப்பட்டது.


ஆதி ஜூன் 28 அன்று பூனாவிற்கு வந்து பாபாவை சந்தித்தார். அன்று, குருபிரசாத்தில் இருந்த வேளையில் ஜிம் மிஸ்திரிக்கு மாரடைப்பு ஏற்படவே, சிகிச்சைக்காக அவர் நரிமனால் மீண்டும் மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பிற அனைவரும் பூனாவை விட்டு வெளியேறும் ஆயத்தத்தில் இருந்த நிலையில், ஷீலா கல்சூரிக்கு மருத்துவ சிகிச்சை இன்னும் நிறைவடையாததால், ஜெஸவாலா குடும்பத்துடன் பிந்த்ரா ஹவுஸில் தங்குமாறு உத்தரவிடப்பட்டது. பாபா புறப்படுவதற்கு முந்தைய நாள் இரவு, சுமார் 8:00 மணியளவில் பாபா அவளை அவரது அறைக்கு அழைத்து, **“நான் இப்போது உங்களிடம் விடைபெற விரும்புகிறேன், ஏனெனில் நான் நாளை உங்களை பிற அனைவருக்கும் முன்னால் தழுவினால், நான் அவர்களையும் அவ்வாறு செய்ய வேண்டும்”** என்று குறிப்பிட்டார். பாபா, ஷீலாவைத் தழுவி விடையளித்தார். ஆனால் ஷீலா பூனாவில் தங்கியிருப்பதில் அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. அன்றிரவு அவள் அழுதுகொண்டே, அனைவருடனும் அஹமதுநகருக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று தனது தந்தையிடம் வலியுறுத்திக் கூறிக்கொண்டிருந்தாள்.

மறுநாள் காலை, பாபா அவளை மீண்டும் அழைத்து, "**நேற்று இரவு நீங்கள் அழுததாகக் கேள்விப்பட்டேன். கலக்கமடைய வேண்டாம்**" என்று கூறி ஆறுதல்படுத்தினார்.

"ஆனால் பாபா, எனக்கு இவர்களைத் (ஜெஸவாலா குடும்பம்) தெரியாது!" என்றாள்.

"**நீங்கள் மெஹர்வானை அறிவீர்களா, இல்லையா? கவலைப்படாதீர்கள். உங்களை எனது விருப்பத்திற்கிணங்க வைத்திருக்குமாறு அவர்களுக்கு நான் கட்டளையிட்டேன். மருத்துவ சிகிச்சைக்காக நான் உங்களை அவர்களுடன் தங்க அனுப்பவில்லை. நீங்கள், நான் விரும்பும் விதத்தில் மீன், மாமிசம் உண்டு பழகவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இது உங்களுக்கு நான் வழங்கும் உத்தரவு. அசைவ உணவுகளை உண்ணத் தொடங்குங்கள், அது உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். பத்து நாட்களுக்குப் பிறகு, நீங்கள் அஹமதுநகர் வந்ததும், என்னைப் பார்க்க உங்களை மெஹராஸாத்திற்கு அழைக்கிறேன்.**"



**பைதூல்** (BAIDUL)

# மெஹராஸாத் ஏகாந்தவாசம்

**(Seclusion in Meherazad)**

1966 ஜூலை 1 வெள்ளி அன்று, பாபா பூனாவிலிருந்து பெண்மணிகள் மற்றும் ஆண் மண்டலியுடன் மெஹராஸாத் திரும்பிச் சென்று, அங்கு அவரது ஆழ்ந்த ஏகாந்தவாசத்தைத் தொடர இருந்தார். டிஸோட்டோவில் (DeSOTO) பாபா, மெஹரா, மணி, மெஹெரு மற்றும் கோஹெர் ஆகியோரை ஆதி அழைத்துச் சென்றார்; ஆதியின் காரில் ரானோ, நாஜா இருவருடன் வாமனும், பிற மண்டலி அனைவரும் ஸொராப்ஜி ஈரானியின் (அஹமதுநகர்) வாடகை ஸ்டேஷன் வேகனிலும் பயணம் செய்தனர். பகீரத்தின் சரக்கு வாகனம் வழக்கம் போல் அவர்களின் சாமான்களை கொண்டு வந்தது. அன்று, ஜால்பாய் மற்றும் பெஹராமின் குடும்பத்தினர், ஜெஸவாலா குடும்பத்தினர், மெஹர்ஜி ஆகியோர் பாபாவிடம் விடைபெறுவதற்காக குருபிரசாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டனர். குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்த மூன்று மாதங்களில், அவர் அந்த வளாகத்தை விட்டு வெளியே செல்லவில்லை, மேலும் மெஹராஸாத்திலும், அவர் பிரதான இல்லம் மற்றும் மண்டபத்தைத் தவிர வேறு எங்கும் செல்லவில்லை. கழுத்து மற்றும் தோள் பாகத்தில் கடுமையான வலி இருந்தபோதிலும், பாபா அவரது ஏகாந்தவாசப் பணியைத் தொடர்ந்தார்; அதுவே அவருக்கு இன்றியமையாததாகத் தோன்றியது.

ஒரு நாள் குருபிரசாத்தின் பராமரிப்பாளராக இருந்த எஸ்.டி. மோஹித்தே (S.D. MOHITE), குருபிரசாத் மண்டபத்திற்கு எதிரில் சாலையைக் கடக்கும்போது, காரில் அடிபட்டு, ஸியாமி பூனை பெகு உயிரைத் துறந்தது என்ற செய்தியுடன் பிந்த்ரா ஹவுஸிற்கு வந்தார். மெஹர்வான், எரச்சிற்குத் தொலைத்தந்தி மூலம் தகவல் தெரிவித்தார்; அந்தச் செய்தி பாபாவுடன் தொடர்புடையது.

ஜூலை 7 அன்று பாபா, எரச்சிடம் மண்டலி மண்டபத்தில் உரத்த குரலில் பிரார்த்தனைகளை மொழியுமாறு கேட்டுக்கொண்டார். பிரார்த்தனைகளை மொழிந்த வேளையில் பாபாவும் மண்டலியுடன் எழுந்து நின்றார். அன்று ஆதி, நஸர்வான், பிலு மாமா ஸட்டா ஆகியோரும் வந்து பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

கைக்கோபாத் 7ஆம் தேதி மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார், ஆனால் இரவில் அவருக்கு கடுமையான தசை பிடிப்புகள் ஏற்படவே, மயக்கமடைந்து கீழே விழுந்ததில், தலை சிதைவால் இரத்தக் காயம் ஏற்பட்டது. டாக்டர் கோஹெர் காயத்திற்கு மருந்திட்டார். குருபிரசாத்தில் இருந்த வேளையில் பெண்டு தரையில் வழுக்கி விழுந்ததால், பாதிரி சில நாட்கள் இரவுக் கண்காணிப்புப் பணியைச் செய்ய வேண்டியிருந்தது.

உலகெங்கிலும் வாழும் பாபா அன்பர்கள் 1966 ஜூலை 9 நள்ளிரவு முதல் 10ஆம் தேதி நள்ளிரவு வரை முழு மௌனத்தைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். ஜூன் மாத இறுதியில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் மூலம் அவர்களுக்கு இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது:

**மெஹர் பாபா தனது மௌனத்தின் 41ஆவது ஆண்டு விழா, ஒரு மிக முக்கியமான நிகழ்வு என்பதை, அவரது அன்பர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்; மேலும் அவர்கள் அனைவரும் இந்த சந்தர்ப்பத்தில் 24 மணிநேரமும் பூரண மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.**

**அவதார் மெஹர் பாபா அவரது மௌனத்தின் 41ஆவது ஆண்டு விழாவில், கீழ்வரும் செய்தியை வழங்கியுள்ளார்: "கடவுளின் முதல் இறை-வார்த்தை 'நான் யார்?' கடவுளின் கடைசி வார்த்தை 'நான் கடவுள்'. இறை-மனிதனாகிய நான் விரைவில் உச்சரிக்கும் இறை-வார்த்தை எனது எல்லையற்ற மௌனத்தின் ஒலியாக இருக்கும்."**

நியூஸிலாந்தில் வாழும் அன்பர்களுக்கு, பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"எனது மௌனத்தின் ஆழத்திலிருந்து என் அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறேன்."**

மெஹராஸாத்தில், ஜூலை 9 இரவு 8:00 மணிக்கு, அமர் ஸிங் ஸைகல் வழங்கிய வானொலி உரையை மண்டலி கேட்டனர், அதில் அவர் 'அவதார் மெஹர் பாபா'வின் பெயரை பலமுறை குறிப்பிட்டார்.

அந்த ஆண்டு, மௌனம் காப்பதற்கு பதிலாக, உபவாசம் கடைப்பிடிக்கலாம் என்று குறிப்பிடப்படவில்லை. மேலும் பாபாவின் அறிவுறுத்தலின்படி, நியூயார்க் நகரில் 'பார்பிஸொன் பிளாஸா' ஹோட்டலில் (BARBIZON PLASA HOTEL) மௌன தினம் வெளிப்படையாகக் கொண்டாடப்பட்டது இதுவே முதல் முறை. அன்னரோஸா கர்ராஷ் (ANNAROSA KARRASCH), ஜான் பாஸ் (JOHN BASS), ஃப்ரெட் - எல்லா வின்டர்ஃபெல்ட் (FRED & ELLA WINTERFELDT) தம்பதியினர் மற்றும் பிறரின் உதவியுடன் ஹாரி கென்மோர் (HARRY KENMORE) ஜூலை 16 அன்று நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

ஷீலா கல்சூரி ஜூலை 9ஆம் தேதி ஆதியால் அஹமதுநகருக்கு மீண்டும் அழைத்து வரப்பட்டார்; பாபா கூறியபடி, 11ஆம் தேதி தனியாக மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். ரமா ஒன்பது கத்தரிக்காய்களை சமையல் செய்து ஷீலாவுடன் அனுப்ப வேண்டும் என்று பாபா அறிவுறுத்தியிருந்தார்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு, குருபிரசாத்தில் பாபா, வாழைப்பழம், பால், அத்திப்பழம் இவற்றின் கலவையை தினமும் தயார் செய்து, அதை அவரது கைகளால் ஷீலாவிற்கு வழங்கி, இது மிகவும் சத்தானது என்று குறிப்பிட்டார், **"இதை உண்ணுங்கள், இது எனது பிரசாதம். இது உங்கள் வலிமையை விரைவாக மீட்டெடுக்க உதவும்"** என்று அவளிடம் வலியுறுத்திக் கூறினார்.

ஷீலா அதை ருசித்துப் பார்த்து, குமட்டல் எடுக்கும் அளவுக்கு மனதிற்கு ஒவ்வாதது என்று நினைத்தாள். அவள் அதை வெளியே எடுத்துச் சென்று சாப்பிடலாமா என்று பாபாவிடம் கேட்டபோது, அவர் அனுமதி வழங்கினார். ஒருமுறை அவள் அந்தக் கலவையை, யார் ஒருவருக்கும் தெரியாத விதத்தில் குளியலறையின் தொட்டியில் ஊற்றினாள்.

தினமும் மாலை 4.00 மணிக்கு, மண்டலி மண்டபத்தில் பாபா அவளுக்கு ஒரு கிண்ணத்தில் பால்-வாழை-அத்திப்பழ கலவையைக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டார், ஒவ்வொரு நாளும் அவள் வெளியில் சென்று, பாபாவின் பிரசாதமாக இருந்தாலும், ஒரு தேக்கரண்டி அளவு மட்டுமே அருந்தி, மீதியை வெளியே கொட்டுவது வழக்கம்.

ஒரு வாரத்திற்குப் பிறகு, பாபாவிடம் ஒவ்வொரு பொருளையும் ஒன்றாகக் கலக்காமல் தனித்தனியாகத் தருவீர்களா என்று கேட்க, பாபா பதிலளித்தார், "**நிச்சயமாக, நீங்கள் வாழைப்பழம், அத்திப்பழம், பால் மூன்றையும் தனித்தனியாக சாப்பிடலாம். உங்களுக்கு அப்படி வேண்டுமா? நீங்கள் விரும்புவதை உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். என்னிடம் உண்மையைச் சொன்னதில் மிக்க மகிழ்ச்சி**."

11ஆம் தேதி, ஷீலா மெஹராஸாத்திற்கு வந்த வேளையில், அவளது தாயும் சகோதரனும் தன்னுடன் வரவில்லை என்று மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டாள். பாபா வழக்கம் போல் அன்புடன் நடந்துகொண்டார்; மதிய உணவு நேரத்தில் பல சுவையான உணவுகள் மேசையில் நிறைந்திருந்தது. ஷீலா நினைத்தாள்: "இன்று பாபாவுடன் மதிய உணவு உண்பதில் நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி, மிகவும் அருமையான உணவு வகைகள்!"

**கத்தரிக்காய் கொண்டு வந்தீர்களா** என்று பாபா கேட்டார், ஷீலாவிற்கும் அதில் சிறிதளவு கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவரிடம் பாத்திரத்தை நீட்டினாள். பாபா அவளது தட்டை கொண்டு வருமாறு சைகையால் தெரிவித்த போது, பாபாவின் கைகளிலிருந்து அதை அடையப் பெறுவதில் தான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று அவள் மனம் பூரிப்படைந்தது! பாபாவின் முன்னால் ஒரு பெரிய கிண்ணத்தில் பால்-வாழை-அத்திப்பழ கலவை இருந்தது, அதை பாபா சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இதில் பெரும்பாலான பகுதியை பாபா, ஷீலாவிற்கு வழங்கியபோது அவள் அதிர்ச்சியடைந்தாள். மெஹராவிடம் பாபா, "**இது மிகவும் சுவையாக உள்ளது. இந்தக் கலவை எனக்கு மிகவும் பிடிக்கும்; பாருங்கள், பேபியும் இதை விரும்புகிறார்**!" என்று கூறி, "**அப்படித்தானே பேபி**?" என வினவினார்.

ஷீலாவால் புன்முறுவல் செய்து 'ஆமாம்' எனத் தலையை மட்டும் அசைக்க முடிந்தது; ஆனால், "ஆமாம், பாபா" என்று சொன்னாலும் உள்ளூர, "இல்லை, பாபா! எனக்கு இது பிடிக்கவில்லை, ஆனால் ஏன் எனக்கு இந்தத் தண்டனையை வழங்குகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்!" என்ற எண்ணம் அலைபாய்ந்தது.

ஒவ்வொரு வாய் அருந்தும்போதும், பாபா, மெஹராவை அழைத்து, "**பாருங்கள், எனக்கு இது மிகவும் பிடிக்கும், பேபிக்கும் பிடிக்கும்**" என்று கருத்துரைத்தார்.

அவளுக்கு வழங்கியதை விரைவாக அருந்தி முடித்தபோது, பாபா அவளை மீண்டும் அழைத்து, இந்த முறை அவர் அதே கலவையை இன்னும் அதிக அளவில் ஊற்றியதைக் கண்டு, ஷீலா திகைத்துப்போனாள்! அவள் தன் இருக்கைக்குத் திரும்பிச் சென்று, மெதுவாக அதை அருந்தினாள்; அவளது தொண்டையில் ஒட்டிக்கொண்ட வெறுப்பூட்டும் கலவையைக் கழுவி கீழே இறக்க மெஹருவிடம் ஒரு டம்ளர் தண்ணீர் கேட்டாள். முதலில், தாயார் தன்னுடன் இல்லை என்று மகிழ்ச்சியடைந்தாலும், இப்போது அவர் இல்லாததற்காக வருந்தினாள்; அவள் அதை எந்த அளவுக்கு வெறுக்கிறாள் என்பதை, தாயாரின் காதுகளில் கிசுகிசுப்பதன் மூலம் பாபாவிற்குத் தெரிவித்திருக்கலாம்.

ஷீலா எப்படியோ அதை விழுங்கி முடித்தாள், பாபா அப்போது, "**நான் உங்களுக்கு விஷம் கொடுத்தாலும் ஒரு பொருட்டல்ல, அது எனது பிரசாதம் என்பதால், அதை அமிர்தமாக பாவித்து விழுங்கவேண்டும். மாபெரும் அதிர்ஷ்டத்தால் தான் எனது கைகளிலிருந்து பிரசாதம் கிடைக்கிறது.**" இதனால் ஷீலா என்ற இளம்பெண் விலைமதிப்பற்ற பாடத்தைக் கற்றுக்கொண்டாள்; குருபிரசாத்தில் இருந்தபோது தெரியாமல் செய்ததை நினைத்துப் புலம்பினாள்.

1966ஆம் ஆண்டில், பருவமழையின் தோல்வி காரணமாக இந்திய தேசம் முழுவதும், தண்ணீர் பற்றாக்குறையால் துயரமான சூழ்நிலைகள் உருவானது. மும்பையில் மக்கள் குறிப்பாக மிகவும் பாதிக்கப்பட்டனர்; மேலும் நகரத்தை விட்டு வெளியேறும் ஒரு கடுமையான திட்டம் வகுக்கப்பட்டது. மிகுந்த அதிருப்தியில் ஆழ்ந்த பாபாவின் நீண்டகால, பொதுவாக மென்மையான குணம் படைத்த அன்பர் மினு தேசாய் (மன்ஸாரியின் சகோதரர்), ஜூலை 13 அன்று பாபாவிற்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார், இது லட்சக்கணக்கான மக்களின் துயரத்தை எதிரொலித்தது: "மும்பையின் அரை கோடி மக்களின் சார்பாக, உங்களின் தலையீட்டால் போதிய மழை மற்றும் ஆசீர்வாதத்தை வழங்க பிரார்த்தனை செய்கிறேன்."

பாபா உடனடியாக இந்த பதிலை அனுப்பினார்: "**மும்பையில் ஏற்கனவே மழை பொழியத் தொடங்கிவிட்டது. அன்புடன், பாபா.**" மழை பெய்தது, நகரத்தின் நம்பிக்கைகள் மீண்டும் புத்துயிர் பெற்றன, குடிமக்கள் மகிழ்ச்சிகரமாக இந்த நிகழ்ச்சியைக் கொண்டாடினர்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, மாலை வேளையில் மினுவிடமிருந்து மற்றுமொரு தொலைத்தந்தி வந்தது: "நான் உங்களுக்கு, அன்பிலும் நம்பிக்கையிலும், முழு மனதுடன் நன்றி கூற விரும்புகிறேன்."

மும்பையில் தொடர்ந்து கனமழை பெய்து, நகருக்கு தண்ணீர் வழங்கும் புறநகர் பகுதிகளில் அமைந்த ஏரிகள் அனைத்தும் நிரம்பிவழிந்தன. நகரின் பல்வேறு மூலைகளிலிருந்தும், இந்தக் கடுமையான தண்ணீர் பஞ்சம் குறித்த கடிதங்களும், தொலைத்தந்திகளும் வந்த வண்ணம் இருந்தது; பாபா அவர்களின் வேண்டுகோளுக்கு செவிமடுத்தார். பாபாவின் முன்னிலையில் கடிதங்களும், தொலைத்தந்திகளும் வாசிக்கப்பட்டபோது, குறிப்பிட்ட இடங்களில் மழை பொழியத் தொடங்கியது என்ற செய்தி மண்டலியின் செவிகளை எட்டியது.

அஹமதுநகரிலும், கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவியது; பாபா, பைதூலிடம் தாடியை வளர்த்து, மழைக்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அவரும் அவ்வாறே, தினமும் தனது பிரார்த்தனையை மனமுவந்து செய்து வந்தார். பைதூல் தனது நேர்மையின் காரணமாக, நிச்சயமாக மழை பொழியும் என்ற அளப்பரிய நம்பிக்கையில் இருந்தார்; ஆனால் மாதங்கள் கடந்தன, மழை வந்தபாடில்லை. எவரேனும் மழைக்காக பாபாவை நாடி வந்தால், அவர்களிடம் பைதூலின் தாடியைப் பிடுங்கி எறியுமாறு கூறினார். இறுதியாக, மிகவும் ஏமாற்றமடைந்த பைதூல், பாபாவிடம், "உங்கள் விருப்பம் இல்லையென்றால், எனது பிரார்த்தனை எப்படி பலனளிக்கும்? இப்போது, நீங்கள் மழை பொழிவதை விரும்பவில்லை என்று எனக்குத் தெரியும்." பாபா எந்த பதிலும் கூறவில்லை, ஆனால் மறுநாள் மழை பொழிந்தது.

ஜூலை 17 அன்று, ரோஷன், மெஹர்வான் இருவரும் பாபாவை சிறிது நேரம் சந்தித்து பூனாவிற்குத் திரும்பிச் சென்றனர்.

முன்னாள் இந்திய மாநிலங்கள் ஒன்றின் இராஜாங்க இளவரசி, பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டாலும், தனக்கு ஒரு கணம் தரிசனம் வழங்குவார் என்ற நம்பிக்கையில் அஹமதுநகரில் பல நாட்களாகக் காத்திருந்தார். பாபா அவருடைய வேண்டுதலை நிறைவேற்றினார். மஹாராணி, பாபாவை சந்தித்தபோது, அவரிடம், "நான் கடவுளை மிகவும் தீவிரமாகப் பிரார்த்திக்கிறேன், ஆனால் அவர் எனது பிரார்த்தனைக்கு ஒருபோதும் செவிசாய்க்கவில்லை. அது ஏன் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கடவுள் எவரையும் வீழ்ச்சியடையச் செய்வதில்லை என்று நான் நினைத்தேன்."

பாபா பதிலளித்தார், **"கடவுள் எவரையும் வீழ்ச்சியடையச் செய்வதில்லை என்பது மட்டுமல்ல, கடவுளை வீழ்த்தியவர்களையும் அவர் தொடர்ந்து மன்னிக்கிறார்!"**

இதற்கிடையில், அமெரிக்காவில், போதைப்பொருள் பற்றிய பாபாவின் செய்தியை, ராபர்ட் ட்ரேஃபஸ் (ROBERT DREYFUSS), அலன் கோஹென் (ALLAN COHEN), ரிக் சேப்மென் (RICK CHAPMAN) போன்ற கடின உழைப்பாளிகள் அடங்கிய 'இளம் அன்பர்கள் குழு', கட்டுரைகள் வெளியிட்டு, உரைகள் வழங்கி, வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றி, எங்கெங்கும் பரப்பிவந்ததன் மூலம்,

போதைப்பொருட்களை கைவிடும் நோக்கத்தில் இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்தனர். பாபாவின் ‘இளம் அன்பர்கள் குழு’விலிருந்து ஒரு கூட்டு அறிக்கை, போதைப்பொருள் பற்றிய பாபாவின் செய்தியை கோடிட்டுக் காட்டி, நூற்றுக்கணக்கான கல்லூரி வளாகங்கள் மற்றும் நகர செய்தித்தாள் ஆசிரியருக்கு ஒரு கடிதமாக அனுப்பப்பட்டது. இது ‘கிறிஸ்டியன் ஸயின்ஸ் மானிட்டர்’ (CHRISTIAN SCIENCE MONITOR), டைம் (TIME), ‘நியூஸ்வீக்’ இதழ்கள் (NEWSWEEK MAGAZINES) போன்ற முக்கிய தேசிய ஊடகங்களின் பகுதிகள் உட்பட அமெரிக்காவில் பரவலாக வெளியிடப்பட்டது.

இந்த போதைப்பொருளை எதிர்க்கும் பிரச்சாரத்தின் விளைவாக, பாபாவைப் பற்றி அறிந்து கொள்வதன் மூலம், பலர் அவரை நேசிக்கவும் தொடங்கினர். உண்மையில், இதற்கு முன்னர் 1966 ஏப்ரல் 21 அன்று, பாபா, ஆதியின் மூலமாக ஐவி டியூஸுக்கு கீழ்வரும் விபரங்களைக் குறிப்பிட்டு, இந்தப் பணிக்கு அவரது முழு ஆதரவையும் வழங்குமாறு கூறினார்:

**என் அன்பான ஐவி,**

**‘தி நியூயார்க் டைம்ஸ்’** (THE NEWYORK TIMES) **இதழில் ராபர்ட் பி. ஸெம்பிள் ஜூனியர்** (ROBERT B. SEMPLE, JR.), **‘போதை மருந்து பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக, கல்லூரிகள் எச்சரிக்கப்படுகின்றன - போதை மருந்து, மாணவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என அமெரிக்கா வலியுறுத்துகிறது’** (COLLEGES WARNED TO CURB DRUG USE - U.S. ASSERTS HALLUCINOGENS MAY HARM STUDENTS) **என்ற தலைப்பில் எழுதிய சிறப்புக் கட்டுரை பூனாவில் பிரியமான பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டது.**

**கட்டுரையைக் கேட்டதும், மாணவர் உலகம் எல்.எஸ்.டி பயன்பாட்டில் தொடர்ந்து ஈடுபட்டால், அமெரிக்காவில் பாதி பேர் விரைவில் மனநலம் குன்றியவர்களாக மாறிவிடுவார்கள் என்பதை உங்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் தெரியப்படுத்த பாபா விரும்புகிறார்! எனவே, கட்டுப்பாட்டின் மூலமாக ஒரு தடை செயல்படுத்தப்பட வேண்டும், மேலும் இந்த மருந்துகளின் பயன்பாடு தடை செய்யப்பட வேண்டும், குறிப்பாக வளர்ந்து வரும் தலைமுறையினரிடையே இது மிகவும் இன்றியமையாதது.**

**நிச்சயமாக, நாட்டின் சட்டம் இது குறித்த நடவடிக்கைகளின் ஒரு பக்கத்தை கவனித்துக்கொள்ளும்; ஆனால் எல்.எஸ்.டி. மற்றும் பிற போதை மருந்துகள் உட்கொள்வதை முற்றிலும் கைவிட்ட ராபர்ட் ட்ரே஁பஸ், அலன் கோஹென், ரிக் சேப்மென் மற்றும் பலர், இந்தக் குறிப்பிட்ட துறையில் பாபாவின் பிரதிநிதிகளாக இருக்கவும், கல்லூரி வளாகங்களில் விரிவுரைகளை வழங்கவும், சமூகக் கூட்டங்கள் மற்றும் சந்திப்புகளில் ‘கடவுள் பேசுகிறார்’** (GOD SPEAKS) **புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள வசனங்களை மேற்கோள் காட்டி பேசவும், ஆன்மீகத் தளங்களின் அனுபவங்கள் மற்றும் பிற பாபா-இலக்கியங்களைப் பற்றி விளக்கவும், மேலும் பாபா, டாக்டர் ரிச்சர்ட் ஆல்பர்ட் மற்றும் அலன் கோஹென் ஆகியோருக்கு எழுதிய கடிதங்களிலிருந்து சில பகுதிகளைப் படிக்கவும் பாபா விரும்புகிறார் (இதில்**

**அன்பான பாபா எல்.எஸ்.டி., கஞ்சா - மரிஜுவானா மற்றும் போதைப்பொருள் போன்றவற்றைப் பயன்படுத்துவதை, கடுமையாக எதிர்க்கிறார்).**

**அவதார் மெஹர் பாபாவின் உரைகள், சொற்பொழிவுகள், 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகம் மற்றும் பலவற்றில் அவர் எழுதிய தகவல்களின் அடிப்படையில், இந்த 'பாபா - இளைய தலைமுறைகள்'** (BABA-BOYS) **இதுபோன்ற போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக செய்தித்தாள்களில் கட்டுரைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று மெஹர் பாபா விரும்புகிறார். 'பாபா - இளைய தலைமுறைகள்' 'அமெரிக்காவில் தத்தமது பணியைச் செய்வதற்கும், அதே நேரத்தில், அமெரிக்காவில் வாழும் சக மனிதர்களுக்கு உதவியாக இருப்பதற்கும் இதுவே சிறந்த வாய்ப்பு' என்றும் பாபா கூறுகிறார். போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் மனதை திசைத் திருப்பி, சரியான புரிதலுக்கு வழிகாட்டும் வகையில், அவர்களின் பேச்சுகளும் கட்டுரைகளும் ஒளிமயமாக இருக்க வேண்டும். பாபா தனது சிறுவர்களை குறிப்பாக மாணவர்களிடம் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படிக்கச் சொல்ல விரும்புகிறார், அதில் ஆன்மீக உணர்வுத் தளங்களின் அனுபவங்கள் கூட மாயையின் வேறொரு பாகம் மட்டுமே.**

**ஆன்மீகத் தளங்களின் இந்த அனுபவங்கள் 'உண்மையான மாயை' என்று பாபா தெளிவுபடுத்தும் அதே வேளையில், போதைப்பொருள் பயன்படுத்துவதால் அடையப்படும் அனுபவங்கள் 'பொய்யான மாயை' ஆகும். அன்பான பாபா உணர்த்த விரும்புவது என்னவெனில், இவ்வுலக வாழ்க்கையும் அதன் அனுபவங்களும் ஒரு 'கனவுக்குள் கனவாகும்', அதே வேளையில் இறைவனைத் தேடும் ஏக்கத்தில் இருப்பவர்கள், ஆன்மீகப் பாதையில் பயணித்து, ஆன்மீகத் தளங்களின் அனுபவங்களை அடையப் பெறுவது என்பது ஒரு 'கனவு' ஆகும்.**

**அன்புள்ள ஐவி, இந்த பாபாவின் 'இளைஞர்கள்', பாபாவின் விருப்பத்தை சரியான முறையில் பின்பற்றுவதும், சம்பந்தப்பட்ட அனைவரின் நலனுக்காக அவருடைய செய்தியை நம்பும் வகையில் மனதில் பதியச் செய்ய தங்களால் இயன்றதைச் செய்வதும் நல்லது.**

அன்புடன் உங்களுக்கும் அன்பான அனைவருக்கும்.
ஆதி கே. ஈரானி

ஏறக்குறைய இருபது வயதைக் கடந்த பவுலா கார்டன் (PAULA GORDON) என்ற இளம் பெண் பாபாவிற்கு எழுதினார்: "போதை மருந்துகள் குறித்த பாபாவின் செய்தி முக்கியமாக ஆன்மீக ஆர்வலர்களுக்காக வழங்கப்பட்டதா? அல்லது அனைத்து எல்.எஸ்.டி. போதைப்பொருள் பயன்பாடும் ஆபத்தானது மற்றும் மனிதர்கள் பயன்படுத்தும் போதைப்பொருள் குறித்த அனைத்து ஆராய்ச்சிகளும் நிறுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறதா?"

பாபா, பவுலா கார்டனுக்கு 1966 மே 12 அன்று ஆதியின் மூலமாக இவ்வாறு பதிலளித்தார்:

**அனைத்து எல்.எஸ்.டி. போதைப்பொருள் பயன்பாடும், அது ஆன்மீக அபிலாஷைகளால் தூண்டப்பட்டாலும் சரி, அல்லது வேறுவிதமாக இருந்தாலும் சரி, அதீத ஆபத்தானது மட்டுமின்றி, நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தினால் தீங்கு விளைவிக்கும். மரிஜுவானா, எல்.எஸ்.டி மற்றும் பிற போதை மருந்துகளை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது என்று பாபா மீண்டும் கூறுகிறார், ஒரு தொழில்முறை சார்ந்த மருத்துவ பயிற்சியாளர், அவரது நேரடி மேற்பார்வையின் கீழ், கடுமையான மனநல கோளாறு ஏற்பட்டால் மட்டுமே அதை பரிந்துரைக்கிறார்.**

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் போதைப்பொருட்களின் சட்டவிரோத பயன்பாடு குறித்து, மே 14 அன்று சம்பந்தப்பட்டவர்களுக்கு மணி இவ்வாறு எழுதினார்:

**அன்புள்ள பவுலா** (கார்டன்) **எழுப்பிய கேள்விக்கு பதில் கடிதம் எழுதியுள்ளார் ஆதி. அதற்கு எங்கள் தனிப்பட்ட எதிர்வினை என்னவெனில், எல்.எஸ்.டி. மற்றும் அதனுடன் தொடர்புடைய போதை மருந்துகளின் பயன்பாடு, மனநோய் அல்லது உண்மையான மூளை பாதிப்பினால் ஏற்படும் நோயியல் குறித்து மெஹர் பாபா விளக்க வேண்டிய தேவை இல்லை. இத்தகைய போதைப்பொருளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்குகளை பாபா நமக்குச் சொல்வதே போதுமானது - அதுவே அடிப்படைக் கருத்து.**

**மேலும், எந்தவொரு மருந்தையும், ஒரு மருத்துவ பயிற்சியாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ், முறையான** (மனநோய் போன்ற) **நோய்களுக்கு மருத்துவ ரீதியாகப் பயன்படுத்தினால், அது அனுமதிக்கப்பட முடியாதது அல்ல மற்றும் அதிலிருந்து ஒருவர் பெறக்கூடிய - அல்லது பெற முடியும் என்று நம்பக்கூடிய - திடீரென உருவாகும் முனைப்பான மகிழ்ச்சி அல்லது மனக்கிளர்ச்சி, மறதி அல்லது ஆன்மீக அனுபவம் அனைத்தும், மாயை எனும் பொய்யும் போலியுமான நம்பிக்கை. இது குறித்த விளக்கம் ரிச்சர்ட் ஆல்பர்ட்டுக்கு ஆர்வத்தை தூண்டுவதாக இருக்க வேண்டும்.**

மே 30 அன்று மணி மீண்டும் எழுதினார்:

**மருத்துவ ரீதியாக எல்.எஸ்.டி. போதை மருந்தின் முறையான பயன்பாடுகள் இருப்பதாக மெஹர் பாபா சுட்டிக்காட்டினார். நாள்பட்ட குடிப்பழக்கம், கடுமையான, தீவிர மனச்சோர்வு மற்றும் மனநோய்கள் போன்றவற்றிலிருந்து நிவாரணம் பெறவும் எல்.எஸ்.டி. பயன்படுத்த முடியும். குறிப்பிட்ட மருத்துவ நோக்கங்களுக்காக அல்லாமல் எல்.எஸ்.டியின் பயன்பாடு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் தீங்கு விளைவிக்கும். எந்த விதமான ஆன்மீக விழிப்புணர்வுக்கும் எல்.எஸ்.டி. 'முற்றிலும்' பயனற்றது. எல்.எஸ்.டியின் பயன்பாடு ஒருவகையான மாயத்தோற்றத்தை உருவாக்குகிறது, மேலும் இந்த மருந்தை நீண்டகாலமாகப் பயன்படுத்துவது மனச் சிதைவுக்கு வழிவகுக்கும், பின்னர்**

**இது எல்.எஸ்.டி. போதைப்பொருளை மருத்துவ ரீதியாக பயன்பாடுத்தினாலும் குணப்படுத்த முடியாமல் போகும் சூழ்நிலை உருவாகும். ஒரு மருத்துவ பயிற்சியாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் எல்.எஸ்.டி. மருந்துகளை முறையாகப் பயன்படுத்துவது, மனநோயை குணப்படுத்த உதவும். விதிவிலக்கின்றி மருத்துவ நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தாமல், வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது பைத்தியக்காரத்தனத்திற்கு வழிவகுக்கும்.**

**சுருக்கமாகச் சொன்னால், எல்.எஸ்.டி. குறிப்பிட்ட மருத்துவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம், ஆனால் ஆன்மீக முன்னேற்றத்திற்கு இது முற்றிலும் பயனற்றது மட்டுமல்லாமல், ஐயத்திற்கு இடமின்றி தீங்கு விளைவிக்கும். ஆன்மீக நோக்கங்களுக்காக அறிவார்ந்த சமுதாயம் போதைப்பொருளைப் பயன்படுத்துவது குறித்த உங்கள் யோசனையைப் பொறுத்தவரை - அத்தகைய சமுதாயம் அதைப் பயன்படுத்துவதைப் பற்றி ஒருபோதும் கனவு காணாது!**

அலன் கோஹென் போன்ற பலருக்கு அழுத்தம் தரும் அவசர கேள்விகள் பல இருந்தன, அவர்கள் மெஹர் பாபாவிற்கு எழுதியபோது அதற்கு பதிலளிக்கும் விதத்தில், 1966 ஜூலை 14 அன்று, பாபா அவரது விளக்கங்களை ஆதியின் மூலமாகத் தெளிவுபடுத்தினார்:

1) **எல்.எஸ்.டி. போதைப்பொருளை உபயோகிப்பவர், இந்தப் பிறவியில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தினாலும், அந்த நபர் ஒரு பரிபூரண குருநாதரிடம் சரணடையாத வரையில், சூட்சும உணர்வை** (SUBTLE CONSCIOUSNESS) **அடைய முடியாது என்று பாபா தெளிவுறக் கூறினார். உண்மையான, ஆன்மீக உணர்வை அனுபவிக்க, ஒரு பரிபூரண குருநாதரிடம் சரணடைவது என்பது இன்றியமையாதது.**
2) **எல்.எஸ்.டி. மூலம் அடையப்பெற்ற அனுபவங்கள், சில சந்தர்ப்பங்களில், பௌதீக உலகில் ஆன்மீக சூட்சும தளத்தின் நிழல்களின் அனுபவங்களாகும். இந்த அனுபவங்களுக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.**
3) **எல்.எஸ்.டி. போதைப்பொருளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவது (மன நோய்) பைத்தியக்காரத்தனத்திற்கு வழிவகுக்கிறது என்று பிரியமான பாபா வலியுறுத்துகிறார்; அந்த மன நோயை எல்.எஸ்.டி சிகிச்சையால் கூட, குணப்படுத்த முடியாது.**
4) **எல்.எஸ்.டி. மருந்துகளின் மருத்துவப் பயன்பாடு சில சந்தர்ப்பங்களில் மனநல கோளாறுகள் மற்றும் பைத்தியக்காரத்தனத்தை குணப்படுத்த உதவுகிறது.**
5) **'மூளையில் அடங்கிய பகுதிகள் சூட்சும உணர்வுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டவை' என்று எதுவும் இல்லை, மேலும்**

**எல்.எஸ்.டி. அவற்றை பாதிக்கும் என்ற கேள்விக்கு எந்த இடமும் இல்லை.**

6) **எல்.எஸ்.டி. உண்மையான மருத்துவ நோக்கங்களுக்காக, நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ், கட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் பயன்படுத்தப்படும்போது, மூளை, கல்லீரல் அல்லது சிறுநீரகம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை.**

7) **மருத்துவம் அல்லாத நோக்கங்களுக்காக, தொடர்ந்து எல்.எஸ்.டி. பயன்படுத்துவது, பைத்தியக்காரத்தனத்தையும் இறுதியில் மரணத்தையும் விளைவிக்கும் என்று பாபா மீண்டும் பதிலளித்தார்.**

1966 ஜூலை 23 சனிக்கிழமையன்று, ரிச்சர்ட் ஆல்பர்ட்டுக்கு எழுதும் ஒரு கடிதத்திற்கான கருத்துகளை பாபா எடுத்துரைத்தார், அதை ஃபிரான்சிஸ் எழுத, ஆதி தனது கையொப்பத்துடன் அனுப்பி வைத்தார். **ஆன்மீக முன்னேற்றத்திற்கான வழிமுறையாக எல்.எஸ்.டி.யை பயன்படுத்துவதன் பயனற்ற தன்மையையும், பாதகத்தையும் ஆல்பர்ட் புரிந்து கொள்ள வேண்டும் என்று பாபா மீண்டும் தமது விருப்பத்தைத் தெரிவித்தார், மேலும் உண்மைப்பொருளை உணர்ந்து கொள்வதற்கு ஒரு பரிபூரண குருநாதர் தேவை.**

ஜெர்பாய், அவரது மகள்கள் மற்றும் ஜங்க்ளேயின் மனைவி முக்தா, மகள் பிரபா ஆகியோர் அன்றைய தினம் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். டாக்டர் டான், ஸரோஷ், விலூ ஆகியோரும் வந்தனர்.

இந்தக் காலகட்டத்தில், பாபா, ஞாயிற்றுக்கிழமைகளில் மதிய உணவுக்காக ரமா, ஷீலா மற்றும் மெஹர்நாத் கல்சூரியை மெஹராஸாத்திற்கு அவ்வப்போது அழைப்பதுண்டு. ஜூலை 31 ஞாயிற்றுக்கிழமை ஆதி அவர்களை அழைத்து வந்தார். ஷீலா, ரமா இருவரும் பாபா மற்றும் பெண் மண்டலியுடன் உணவு உண்ட அதே வேளையில், மெஹர்நாத் ஆண்களுடன் இருந்தான். சப்பாத்தி சாப்பிடுவதற்கு இரண்டு கைகளையும் பயன்படுத்துவதில் மெஹரா வெட்கத்தை வெளிப்படுத்தினார் (இந்தியாவில் பெரும்பாலான மக்கள் உண்ணும் போது தங்கள் இடது கையைப் பயன்படுத்துவதில்லை). எனது சப்பாத்தியை சிறு சிறு துண்டுகளாக்க இரண்டு கைகளையும் பயன்படுத்துவதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே என்று ரமாவிடம் கேட்டார்.

ரமா என்ன பதில் சொல்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்த வேளையில், ஷீலா இடையே பேச்சு கொடுத்தாள்: “இரண்டு கைகளால் மாவைப் பிசைவதானால், இரண்டு கைகளாலும் சப்பாத்தியை சாப்பிடுவதில் என்ன தவறு? ஒரு கையால் கைதட்டி ஓசையை எழுப்ப முடியாது - இரண்டு கைகளும் தேவை - அதனால் பரவாயில்லை.”

அவளது பதிலில் மகிழ்ச்சியடைந்த பாபா, “**கூர்மையான மனம் படைத்த பெண்! அவள் தனது தந்தையையும் மிஞ்சுகிறாள். நானும் சப்பாத்தி**

**உண்ணும் போது இரண்டு கைகளையும் பயன்படுத்துகிறேன்"** என்று கருத்துத் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 7, ஞாயிற்றுக்கிழமை, டான் ஸ்டீவன்ஸ் பணி நிமித்தம் அமெரிக்காவிலிருந்து கொச்சிக்கு வந்த போது, பாபாவை மெஹராஸாத்தில் சந்தித்தார். அவர் மெஹர்ஜியின் காரில் பூனாவிலிருந்து மெஹர்வான் ஜெஸவாலா மற்றும் ஜெஹாங்கு ஸுகத்வாலா ஆகியோருடன் வந்தார். இந்த சந்தர்ப்பத்தில், தேஷ்முக்கின் பழைய ஐந்து தொகுப்புகளிலிருந்து, அவர், ஐவி டியூஸுடன் மீண்டும் திருத்தம் செய்து உருவாக்கிய சொற்பொழிவுகளின் புதிய மூன்று தொகுப்புகளைப் பற்றி பாபாவிடம் விவாதித்தார். '**புதிய தொகுப்புகள் திருப்திகரமாக உள்ளதா**' என்று பாபா, டான் ஸ்டீவன்ஸிடம் கேட்டதற்கு, அவர் 'ஆமாம்' என பதிலளித்தார், ஆனால் அடுத்த கட்டமாக முக்கிய ஐரோப்பிய மொழிகளில் சொற்பொழிவுகளை மொழிபெயர்க்க வேண்டும் என்பது தெளிவாக இருந்தது. டான் எதிர்கொண்ட மற்றும் ஏற்கனவே பாபாவின் உரைகள் 'தங்கள் சொந்த மொழிகளில் கிடைக்குமா' என ஆர்வம் தெரிவித்த ஐரோப்பாவில் வாழும் இளைஞர்களுக்கு இது உதவும். பாபா, உடனடியாக '**எந்த மொழிகளில் தேவைப்படும்**' என்று கேட்டதற்கு, டான் ஸ்டீவன்ஸ் 'ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ் மற்றும் ஜெர்மன்' என்று பதிலளித்தார். 'ஆனால், இதில் எந்தப் பிரச்சினையும் இராது, ஏனெனில், பாபாவின் மீது பக்தியும், அன்பும் கொண்டவர்கள் ஏற்கனவே இந்தப் பணியை எல்லா மொழிகளிலும் செய்யும் அளவுக்குப் போதுமான தகுதி வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள்' என்றும் டான் குறிப்பிட்டார்.

பாபா மீண்டும் டான் ஸ்டீவன்ஸின் கண்களைப் பார்த்து, "**நீங்கள் இதைச் செய்யுங்கள்**!" அதாவது, அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறினார். மீண்டும் ஒருமுறை, அவரைத் திடுக்கிடச் செய்த இந்த சம்பவத்தால், டான் ஸ்டீவன்ஸ், 'இரண்டாவது முறையாக எப்படி இவ்வளவு அப்பாவியாக இருந்துவிட்டேன்' என்று நினைத்து ஆச்சரியப்பட்டார்.

'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் இரண்டாம் பதிப்பை அச்சிடுவதற்கான திட்டங்களையும் பாபாவிடம் டான் விவாதித்தார்.

ஸான் ஃபிரான்சிஸ்கோவில் அமைந்த ஸூஃபி மையத்தில் டான் ஸ்டீவன்ஸ் ஈடுபட்டிருந்ததால், இளைஞர்கள் பலர் அங்கு வருகை தந்தனர்; பாபா அவருக்கு, அலன் கோஹென், ராபர்ட் ட்ரேஃபஸ், ரிச்சர்ட் ஆல்பர்ட் ஆகியோருக்கு இடையே பரிமாறப்பட்ட எல்.எஸ்.டி மற்றும் பிற போதை மருந்துகள் பற்றிய கடித நகல்களை அனுப்பினார்; பாபா அவை அனைத்தும் ஒரு குறுகிய கையேடு வடிவத்தில் ஒன்றாக அச்சிடப்பட வேண்டும் என்று விரும்பினார் (கடவுள் ஒரு மாத்திரையிலா? - 'GOD IN A PILL?').

டான் போதைப்பொருள் விஷயத்தில் குறிப்பாக ஆர்வம் காட்டாமல், அதைக் குறித்து கேலி செய்தார், "உங்களுக்குத் தெரியும், பாபா, இந்த இளைஞர்களின் வாழ்க்கையில் நான் மேலும் மேலும் சிக்கிக்கொள்வது போலத் தெரிகிறது. அவர்களில் பலர் போதைப்பொருள் அனுபவங்களைப் பெற்றுள்ளனர்,

அது அவர்களைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானது. இந்த விஷயத்தைப் பற்றி மேலும் அறிய, நான் ஒரு எல்.எஸ்.டி. போதை மருந்தை நானே முயற்சிக்க வேண்டும் என்று நினைக்கிறேன்!"

ஸ்டீவன்ஸ் இதைக் கூறிய அடுத்த கணமே, பாபா சீற்றத்தில், மின்னல் ஒளிரும் கண்களுடன், தனது இருக்கையில் பின்னால் திரும்பி அமர்ந்து, "**டான், அப்படியெல்லாம் நினைக்கக் கூட செய்யாதீர்கள்**!" பாபா எச்சரித்தார். "**இது ஒரு நபரின் நரம்பு மண்டலத்தில் ஏற்படுத்தும் விளைவுகளை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை**."

பாபா தொடர்ந்தார்: "**ஒரு நபர் தனது நரம்பு மண்டலத்திற்கு நிரந்தரமான, பேரளவிலான சேதம் இல்லாமல் 100 அல்லது 200 முறை போதை மருந்துகளை உட்கொள்ளலாம் என்பது உண்மைதான்; இருப்பினும், வேறுபட்ட மனநிலையில் இருக்கும், வேறுபட்ட நரம்பு மண்டல அமைப்பைக் கொண்ட வேறொரு நபருக்கு, ஒரு முறை உட்கொண்டாலே, முற்றிலும், நிரந்தரமாக, மீளமுடியாத அளவுக்கு தீங்கு விளையும் வாய்ப்புள்ளது. எனவே, அப்படிப்பட்ட விஷயத்தை கேலியாகக் கூட நினைக்கவேண்டாம்**!"

எல்.எஸ்.டி போன்ற போதை மருந்து நரம்பு மண்டலத்தில் செயல்படும் விதத்தை பாபா விவரித்து, இவ்வாறு எடுத்துரைத்தார், "**அதிகபட்சம், இந்த வகையான மருந்து செய்யக்கூடியது என்னவெனில், சில நரம்பு மையங்களைத் திறப்பதன் மூலம் ஒருவர் அவற்றை அணுகலாம், இது ஆன்மீக வளர்ச்சியின் இயல்பான சூழ்நிலைகளில் இயற்கையாகவே திறப்பதைப் போன்றது; ஆனால் இதற்கு வழங்கும் முழு முக்கியத்துவமும் தேவையற்றது; மேலும் இதற்கும் ஆன்மீகத்திற்கும் சிறிதும் சம்பந்தம் இல்லை. இது அதன் துணை விளைபொருள், அவ்வளவுதான்**!"

எரச் இடையே குறுக்கிட்டு, "இது திறவுகோலைப் பயன்படுத்தி, மிக நேர்த்தியான, அழகாகச் செதுக்கப்பட்ட கதவைத் திறப்பதற்கு பதிலாக, தாழ்ப்பாளை உடைத்து, திருட்டுச் சாவியைப் பயன்படுத்துவது போன்றது" என்று கூறினார். '**இந்த ஒப்புமை கூட உண்மையான சித்திரத்தை வழங்கவில்லை அல்லது அத்தகைய சக்திவாய்ந்த போதை மருந்துகளால் ஒரு நபர் எடுக்கும் மிகப்பெரிய ஆபத்தான முடிவை, கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறிவிட்டது**' என்று பாபா குறிப்பிட்டார்.

எரச்சும் ஒருமுறை பாபாவுடன் இதேபோன்ற உரையாடலை நிகழ்த்தினார். எல்.எஸ்.டி. போன்ற போதைப்பொருள் பற்றிய தலைப்பு முதன்முதலாக எழுந்தபோது, மனநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க எல்.எஸ்.டி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை விவரிக்கும் மருத்துவ ரீதியான புத்தகத்தை கோஹெர் வரவழைத்தார். அந்த நேரத்தில் இது சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒரு மருத்துவரால் பரிந்துரைக்கப்படலாம் என்ற சூழல் உருவானது. எரச், இதுபோன்ற விஷயங்களில் ஆர்வமாக இருந்ததால், ஒரு நாள் அந்தப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த பாபா, '**என்ன படிக்கிறீர்கள்**' என்று கேட்டதற்கு எரச் கூறினார், "இது எல்.எஸ்.டி.

போதைப் பொருட்களின் விளைவுகளை விவரிக்கும் ஒரு மருத்துவ புத்தகம்." கிண்டலாக, எரச் மேலும் கூறினார், "கிர்பால் ஸிங் எங்களுக்கு ஆன்மீக அனுபவங்கள் வேண்டும் என்று கூறினார். நீங்கள் எங்களுக்கு எதுவும் வழங்கவில்லை ஆதலால், நாங்கள் இந்த எல்.எஸ்.டி.யை பயன்படுத்தலாம் என்று நினைக்கிறேன். பின்னர் அனைத்தும் முடிந்து விடும் - நாங்கள் அத்தகைய அனுபவங்களைப் அடையப் பெறலாம்!"

பாபா அவருடைய கருத்துக்களால் பெரிதும் வருத்தமடைந்து, புத்தகத்தை நிராகரிக்குமாறு கூறினார். "**ஏன் இத்தகைய குப்பைகளைப் படிக்கிறீர்கள்?**" அவர் கேட்டார். "**இதுபோன்ற போதை மருந்துகளை ஒருபோதும் பயன்படுத்த நினைக்காதீர்கள்!**"

வழக்கமாக, டான் ஸ்டீவன்ஸ் புறப்படுவதற்கு முன்பு, பாபா மண்டலி மண்டபத்தின் பின்புற இரட்டை கதவுகள் வழியாக மெஹராவின் தோட்டத்தைச் சென்றடைந்து, மண்டலி உருவாக்கிய அரை நிலா வடிவத்தின் மத்தியில் நிற்பது வழக்கம். ஃபிரான்சிஸின் கையை உதவிக்காகப் பற்றிக்கொண்டு நின்ற பாபா, அச்சிடப்பட்ட ஒரு பத்தியிலிருந்து எரச், குருநாதரின் 'பர்வர்திகார்' பிரார்த்தனையை மொழியுமாறு கூறினார். அப்போது பாபா, பிரான்சிஸின் கைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, பெண்களின் பக்கம் செல்வதை வழக்கமாகக் கொண்டார். இந்த சந்தர்ப்பத்தில், பாபா, டான் ஸ்டீவன்ஸிடம் கையைக் கொடுத்து உதவுமாறு சைகையால் தெரிவித்தார். இதற்கு முன்னர் ஒரே ஒரு முறைதான் இப்படி நடந்தது. அவர்கள் மண்டபத்திலிருந்து தோட்டத்தின் குறுக்கே பிரதான இல்லத்தின் படிகளுக்கு நடந்து சென்று, பாபா, டானைத் தழுவினார். பாபா திரும்பத் தொடங்கியதும், அவர் தனது விரல்களை விலக்கி இரண்டாவது முறையாக அவரைத் தழுவினார். இது அசாதாரணமானது, டான் ஸ்டீவன்ஸ் மனதில் இந்த எண்ண அலைகள் பாய்ந்தன: "சொர்க்கலோகமே! என்னிடம் இந்த அளப்பரிய சிறப்பு கவனம் செலுத்துவதற்கு நான் என்ன செய்தேன்?"

பாபா அழைக்கும் வரை பெண்மணிகள் வெளியே வரமாட்டார்கள் என்பதால், பாபா உதவியின்றி தனியாக நிற்க நேர்ந்த அந்த கணத்தில், சீக்கிரம் திரும்பிச் செல்ல வேண்டும் என்று டான் நினைத்தார். அவர் விறுவிறுப்பாக ஆண்கள் பக்கம் திரும்பி நடக்கத் தொடங்கியபோது, பாபா, அவரை அழைப்பதாக மண்டபத்திலிருந்து ஒருவர் உரத்த குரலில் கூறியது டானின் செவிகளில் விழுந்தது. அவர் சுற்றும் முற்றும் பார்த்தார், பாபா திரும்பியதைக் கண்டார், தமது விரல்களை விரைவில் நகர்த்தி சைகையால் அவரை அழைத்தார். பாபா மீண்டும் டானை அணைத்துக் கொள்ள விரும்பினார். டான் ஸ்டீவன்ஸ் அவரிடம் நடந்து சென்றபோது, பாபா அவரை மேலும் பல முறை தழுவி, புறப்படுமாறு சைகையால் தெரிவித்தார். ஸ்டீவன்ஸின் மனதில் ஒரு சிந்தனை ஓட்டம் விரைந்தது: "என்ன இது, பாபா இதுவே நாம் ஒன்றாக இணைந்திருக்கும் இறுதி நேரமாக இருக்கும் என்பது போல நடந்து கொள்கிறார்," ஆனால் அந்த

எண்ணம் அவரில் உதயமானதும் அவர் அதை நிராகரித்தார். பாபாவை சந்திக்க இது அவரது பத்தாவது இந்திய பயணம், உண்மையில் அதுவே அவரது கடைசி பயணமுமாகும்.

பாபாவிற்குத் தேவையான மருத்துவம் மற்றும் உணவுப் பொருட்களை அனுப்புவது குறித்து கோஹெர், அடெல் வோல்கினுடன் (செவிலியராக இருந்தவர்) வழக்கமான கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபட்டார். ஆகஸ்ட் 12 அன்று அடீலுக்கு எழுதிய கடிதத்தில் பாபாவின் உடல்நிலை குறித்து கோஹெர் இவ்வாறு குறிப்பிட்டார்:

அன்பான பாபா இந்த நாட்களில் மிகவும் சோர்வாகக் காணப்படுகிறார். இடுப்பு மூட்டு பாகங்களில் அதீத வலி இருந்தாலும் சிறிது நடக்கிறார், சக்கர நாற்காலியைப் பயன்படுத்துவதில்லை. கழுத்துப் பகுதியில் வலி இன்னமும் உள்ளது. இந்த வலியிலிருந்து விடுபட நாம் அவருக்கு எதுவுமே செய்ய முடியாத சூழ்நிலை. மருத்துவர்களாகிய நாமும், சில சமயங்களில் அவர் முன்னால் நின்று, அவர் சிரமப்படுவதைப் பார்க்கும்போது, வலியைக் குறைக்கவும், எதையும் புரிந்துகொள்ளவும் முடியாமல், உதவியற்றவராகவும் உணர்கிறோம். '**அவர் விரும்பும் வரை, அவரது கழுத்து வலி தொடர்ந்து கொண்டே இருக்கும்**' என்று பாபா கூறி வருகிறார். '**மனித குலத்தை மீட்பதற்காக அவர் பௌதீகத் தளத்தில் தம் மீது எடுத்துக்கொண்ட அவரது எல்லையற்ற துன்பத்தின் பிரதிபலிப்பே இது**' என்றும் கூறுகிறார்.

நரிமன், அர்னவாஸ் இருவரும் பத்து நாட்கள் தங்குவதற்காக 1966 ஆகஸ்ட் 13 அன்று மெஹராஸாத்திற்கு வந்தனர். ஃபெராமும் அவர்களுடன் தனது வருடாந்திர 20 நாட்களைக் கழிப்பதற்காக வந்தார். மனு ஜெஸவாலாவும் சில வாரங்கள் மெஹராஸாத்தில் தங்கியிருந்தார்.

பாபாவை சந்தித்த பிறகு, டான் ஸ்டீவன்ஸ் பணி நிமித்தம் கொச்சிக்குச் சென்று பின்பு மும்பைக்குப் புறப்பட்டுச் சென்ற வேளையில், அங்கு ராபர்ட் ட்ரேஃபஸ், அலன் கோஹென், ஜிம் மெக்ரூ இவர்களின் நண்பரான ரிக் சேப்மென் என்பவரை சந்தித்தார்.

ஃபிரடெரிக் "ரிக்" சேப்மென் (FREDERICK RICK CHAPMAN, 23), கடந்த ஆண்டு பாஸ்டன் நகரில் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார். அவர் 1966 ஜூன் மாதத்தில் ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றதைத் தொடர்ந்து, இந்தியாவில் ஒரு வருட ஃபுல்பிரைட் (FULBRIGHT) ஆசிரியர் பணிக்கான உதவித்தொகை அவருக்கு வழங்கப்பட்டது. பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்வதை அறிந்திருந்ததால், அவரை சந்திக்கும் வாய்ப்பில்லை என்பதை முழுமையாக எதிர்பார்த்த அவ்வேளையில், இயன்றவரை பாபா-அன்பர்களை சந்திக்க முடியும் என்ற நம்பிக்கையில், இந்தியாவிற்குச் செல்ல அவர் குறிப்பாக விண்ணப்பித்தார். அவர் ஆதிக்கு தனது திட்டங்களைத் தெரிவித்து, இந்தியாவில் இருக்கும் போது

அவர் தொடர்பு கொள்ள வேண்டிய பாபா-அன்பர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளைக் கோரினார்.

ரிக் 1966 ஜூன் 20 அன்று இந்தியாவிற்கு வந்தார், மேலும் டெல்லி மற்றும் ஸ்ரீநகரில் இரண்டு வார ஆசிரியர் பணிக்கான பயிற்சியைத் தொடர்ந்து, குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத்தில் அமைந்த ஹெச். கே. கலைக் கல்லூரியில் (H.K. ARTS COLLEGE) ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஆகஸ்ட் மாத பத்து நாட்கள் விடுமுறையின் போது, மும்பை மற்றும் பூனாவில் வாழும் பாபா-அன்பர்களை சந்திக்க முடிவு செய்து, ரிக், எரச்சிற்கு இவ்வாறு எழுதினார்: “அவராகவே அழைக்கும் வரை, அவரிடம் வர வேண்டாம் என்று பாபா எனக்கு வழங்கிய கட்டளைகளுக்கு இணங்க, நிச்சயமாக நான் அவருடைய முழுமையான விருப்பத்திற்குக் கீழ்ப்படிவேன்.”

ரிக் சேப்மென் இந்தியாவில் இருந்த முதல் ஆறு வாரங்களுக்கு பாபா அவரை அழைக்கவில்லை. ஆனால் ஆகஸ்ட் 10 காலை, அவர் மும்பை விக்டோரியா ரயில் நிலையத்தில் ஸொராப்ஜி ஸிகன்போரியா, கிஷின்சந்த் கஜ்வானி இருவரையும் சந்தித்தபோது, “ஆகஸ்ட் 17ஆம் தேதி பாபா உங்களைப் பார்க்க அழைத்திருக்கிறார் என்பது எங்களுக்குக் தெரியவந்தது!” என்ற செய்தியை வழங்கினர். மட்டற்ற மகிழ்ச்சி மற்றும் அதிர்ச்சியில், ரிக் அத்தகைய அசாதாரணமான, எதிர்பாராத செய்தியை உள்வாங்க முடியவில்லை.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், ‘**ஆகஸ்ட் 16 முதல் அனைத்து பார்வையாளர்களுக்கும் தடை விதிப்பதாகவும், 1967 இறுதி வரை, இடையூறு எதுவும் இல்லாமல் இருக்க விரும்புவதாகவும், அஹமதுநகரிலிருந்து ஆதி தொலைபேசி மூலமாக, பாபாவுடனான ரிக்கின் சந்திப்பு 15ஆம் தேதி காலை ஒன்பது மணிக்கு மாற்றப்பட்டுள்ளது**’ என்பதைத் தெரியப்படுத்தினார்.

இதைக் கேட்ட ரிக்கின் மனதில் உதயமான முதல் எண்ணம் என்னவெனில்: “ஓ, இதோ இங்கே பாபா, எப்பொழுதும் போல் அவரது திட்டங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் இந்த சந்திப்பை நேற்றைய தினத்திற்கு மாற்றினார் என்ற செய்தி, நாளைய தினத்தில் என்னை வந்தடையும் பட்சத்தில், நான் ஏன் அங்குச் செல்லவில்லை என்று பாபா யோசித்துக்கொண்டிருப்பார்!”

1966 ஆகஸ்ட் 15 திங்கட்கிழமை காலை 5:30 மணிக்கு, ரிக் ரயிலில் பூனா வந்தடைந்தார். மருத்துவரை சந்திப்பதற்காக ஆதி முந்தைய நாள், ஷீலாவை பூனாவிற்கு அழைத்துச் சென்று, 15ஆம் தேதி காலை, ஆதி, ஷீலா, பவ்ஸார் மூவரும் ரிக்கை ரயில் நிலையத்தில் சந்தித்து, அவர்களுடன் அஹமதுநகருக்கு அழைத்துச் சென்றார். ஸரோஷின் இல்லத்தில் காலை உணவு வேளையில், “பாபா குறிப்பாக சரியான நேரத்தைக் கடைப்பிடிப்பவர்,” என்று ரிக்கிடம் ஆதி கூறவே, ஆதி இரண்டாவது உதவிக்காகத் திரும்பியபோது, ரிக் விறுவிறுப்பாக அதை நினைவு கூர்ந்தார். “ஆனால் நீங்கள் கவலைப்படாதீர்கள்” என்ற கூறி ஆதி தொடர்ந்தார், “நாம் ஒன்பது மணிக்குச் செல்வதில் சற்று காலதாமதமானால், அவர் உங்களை அல்ல, என்னைத்தான் குறை கூறுவார்.

ஆதி சரியான நேரத்தில் ஒன்பது மைல்கள் கடந்து மெஹராஸாத்தை வந்தடைந்தார்; ரிக் மண்டபத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு பாபா புன்னகையுடன் அவரைத் தழுவினார். அவரது வார்த்தைகளில், ரிக் பின்னர் அன்பிற்குரியவருடன் இருந்த அந்த முதல் தருணங்களை விவரித்தார்:

என் இதயத்தை என் இறை-இதயத்தின் மீது வைக்க நான் சாய்ந்தபோது, அவரது பளிச்சிடும் கண்களை நான் பார்த்தேன் - சூரிய ஒளியின் அந்தத் தருணம், வார்த்தையற்ற ஆனந்தத்தின் தருணம்; கடவுளின் கரங்களில் வீழ்ந்த அந்தத் தருணங்களின் தருணம்!

(பாபா, ரிக்கின் நெற்றியில் முத்தமிட்டார்.)

பாபா எனது நெற்றியில் முத்தமிட்டார் என்பது ஏறக்குறைய இரண்டு வாரங்களாக எனக்கு தெளிவாக நினைவில் இல்லை - அது மிகவும் மென்மையானதும், மிகவும் இயல்பானதுமாக இருந்தது. நான் இந்த வாழ்க்கையில் முதன்முறையாக அவரைத் தழுவிக்கொண்டேன், ஆனால் அவர் எனது பழைய நண்பரைப் போல் இருந்தாலும், நான் அவரது கைகளில் நுழைந்த அந்த கணத்தில் அவர், புன்னகைத்து அளவிலா மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். நான் அவரது இறுக்கமான அரவணைப்பில் நெருங்கி வந்தபோது, திடீரென எனது மனதில் ஒரு குரல் ஒலித்தது: "நின்று, நிதானமாக, இந்த நேரத்தை வீணாக்காமல் - அவரைப் பாருங்கள்!" அப்போது நான் எனது கண்களை ஓர் அங்குலத்தின் ஒரு குறுகிய பகுதியைத் திருப்பி, திகைப்புடன் அவரது தோளுக்கு மேல் ஆறு அங்குல தூரத்தில் அவரது ஒளிரும் கண்களைப் பார்ப்பது வரை நான் நகர்ந்தேன்; நிச்சயமாக, தரையில் அருகில் அமர்ந்திருந்த அனைவரும் அவர் கண்களிலிருந்து எனது கண்களில் பாயந்த ஒளியைப் பார்த்திருக்க வேண்டும்.

பாபாவிற்கு எதிரே ரிக் தரையில் அமர்ந்தார், பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது:

பாபா கேட்டார், **"நேற்று இரவு நீங்கள் ரயிலில் எப்படித் தூங்கினீர்கள்?"**

ரிக், "நன்றாக பாபா நான் நன்றாக தூங்கினேன், ஆனால் இயற்கையாகவே, கடந்த சில நாட்களாக நான் மிகவும் உற்சாகமாக இருந்தேன்."

பாபா புருவங்களை உயர்த்தி, **"ஏன்?"** என வினவினார்.

"உலகெங்கும் வாழும் உங்கள் அன்பர்கள், உங்களின் ஒரு கண நேர பார்வைக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், இப்போது உங்களைப் பார்க்கும் இந்த வாய்ப்பு... உங்களுடன் இருக்கும் இந்த வாய்ப்பால் நான் மிகவும் உற்சாகமாக இருந்தேன்."

**"இந்த நேரத்தில் இங்கே இருப்பதால் உண்மையில் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. நான் கடுமையான ஏகாந்தவாசம் கடைப்பிடிக்கிறேன்; இந்த நாளிலிருந்து, என் ஏகாந்தவாசம் இதைவிடக் கடுமையாக இருக்கும் - எனது நெருங்கிய மண்டலியைத் தவிர வெளியே எவரையும் பார்க்க மாட்டேன்,**

**அஹமதுநகரில் வாழும் எனது நெருங்கிய அன்பர்கள் கூட என்னை பார்க்க முடியாது**.

"**மனதின் எண்ணங்களில் கவனம் செலுத்த வேண்டாம்**" என்று பாபா தொடர்ந்தார். "**நல்லது, தீயது என பலவிதமான எண்ணங்கள் இருப்பது மனதின் இயல்பு. எனக்காக உங்கள் இதயத்தில் ஏக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்.**"

பாபா தொடர்ந்தார், "**உண்மையில், ஆன்மீகப் பாதை, ஆன்மீக உணர்வுத் தளங்கள் அல்லது ஆன்மீக அனுபவங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டாம் - அவை அனைத்தும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொம்மைகள், ஏனெனில் அவை மாயையைத் தவிர வேறொன்றுமில்லை. நீங்கள் என்னை எனது உண்மையான ரூபத்தில் பார்க்க முயற்சிக்க வேண்டும். நான் உண்மையாகவே இருக்கிறேன்! அப்போது நீங்கள் என்னை எனது உண்மையான ரூபத்தில் அறிந்துகொள்ள முடியும்.**

"**ஆனால், நீங்கள் என்னை எனது உண்மை ரூபத்தில் எப்படிக் காண்பீர்கள்? உங்கள் இதயத்தில் என்னைக் காணும் அளவுக்கு நீங்கள் ஏக்கத்தை உருவாக்க வேண்டும். இந்த ஏக்கம் உங்களுக்கு எங்கிருந்து வரும்? என்னை நேசிப்பதன் மூலம்.**"

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா புன்னகைத்து, "**கடவுள் திட்டமிட்டு முன்மொழிகிறார், ஆனால் மனிதன் திடமாக மறுக்கிறான்**" என்று சைகையால் தெரிவித்தார். ரிக் அவரை வினோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பாபா தலைகீழாக மாற்றப்பட்ட சொற்றொடரை திரும்பத் திரும்ப சைகையால் எடுத்துரைத்தார், "**கடவுள் திட்டமிட்டு முன்மொழிகிறார், ஆனால் மனிதன் திடமாக மறுக்கிறான்.**"

பின்னர் அவர் விளக்கினார், "**நான் உங்களை ஒரு சில நிமிடங்களுக்காக இங்கு அழைத்து வந்து, பின்னர் உங்களை அனுப்ப நினைத்திருந்தேன், ஆனால் நீங்கள் எனது திட்டம் நிறைவேறாமல் பார்த்துக்கொண்டீர்கள்!**"

இந்த சுவாரஸ்யமான தருணத்திற்குப் பிறகு, பாபா, ஃபிரான்சிஸை அறிமுகப்படுத்தி, எல்.எஸ்.டி. பற்றிய குறிப்புகளைக் கொண்ட அவரது சமீபத்திய கவிதையைப் படிக்கச் சொன்னார்:

எல்.எஸ்.டி. போதைமருந்தை வழங்குவதன் மூலம்
என்னை நிமிர்ந்து நிற்கச் செய்யாதீர்கள்;
நான் எப்பொழுதும் தனிப்பட்ட அன்பினால் தடையின்றி
பயணிக்கும் விதத்தில் என்னை வழிநடத்துங்கள்!

பாபாவின் அறிவுறுத்தலின் பேரில், ஃபிரான்சிஸ் அவர் எழுதிய மற்றுமொரு கவிதையைப் படித்தார் - ஒரு பேரழகு வாய்ந்த கஸலின் சில வரிகள் நுணுக்கமாகவும், நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டதைக் கேட்டு, பாபா

மகிழ்ச்சி பொங்க புன்னகைத்து, சடசடவென விரல்களை நகர்த்தி அதன் அற்புதத் தன்மையை வெளிப்படுத்தினார்.

பாபா பின்னர் அலோபாவிடம் பாரசீக மொழியில் ஹ:ஃபீஸ் வரைந்த ஓர் ஈரடிக் கவிதையை மொழியுமாறு கூறி, அதை பாபா பின்வருமாறு மொழிபெயர்த்தார்: "**இறை-மனிதனைச் சென்றடையும் வாசலைக் கடக்க, கோடிக்கணக்கான இறை-அன்பர்கள் வரிசையில் நின்று கொண்டிருக்கிறார்கள்; அவர்களில் ஒருவர் மட்டுமே வாசலைக் கடந்து செல்கிறார். அந்தக் கோடிக்கணக்கானவர்களில் யார் ஒருவர் வாசலைக் கடந்து செல்கிறாரோ, அவரால் மட்டுமே என்னை எனது உண்மை ரூபத்தில் அறிந்துகொள்ள முடியும்.**"

ரிக் சேப்மெனைப் பார்த்து, மீண்டும் மூன்றாவது முறையாக, பாபா வலியுறுத்திக் கூறினார், "**எனது உண்மை ரூபத்தில் நீங்கள் என்னைப் பார்க்க முயற்சிக்க வேண்டும்!**"

அதற்கு பதிலளித்த ரிக், "உங்கள் அருளால் பாபா" என்றார்.

ஏறக்குறைய இடைவெளி இல்லாமல் உடனடியாக பாபா பதிலளித்தார், "**விடாமுயற்சி உங்களையும், அதற்கான உதவி என்னையும் சார்ந்தது.**"

தீவிரமான பார்வையுடன் பாபா, "**என்னை வீழ்த்தி விடாதீர்கள்**" என்றும் இறுதியில் இணைத்துக் கொண்டார்.

இந்த சந்திப்பில் மேலும் சில கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன; அன்பிற்குரியவர் மீதான ரிக் சேப்மெனின் அன்பு, அவர் இதயத்திலிருந்து வெளிப்படுவதை கேட்டுக் கொண்டிருந்த பாபா, அவருக்கு சில குறிப்பிட்ட அறிவுரைகளை வழங்கினார்.

ரிக் புறப்படுவதற்கான நேரம் நெருங்கி வரவே, பாபா கூறினார், "**எனது நேரம்** (மௌனத்தைக் கலைக்கும் நேரம்) **விரைவில் நெருங்குகிறது. எனது தாமனை** (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக் கொள்வது உங்களுக்கு மிகவும் முக்கியமானது. 'தாமனைப் பற்றிக் கொள்வது' என்றால் என்ன? நான் சொல்வதைத் தவறாமல் செய்வது, முற்றிலுமாக எனக்குக் கீழ்ப்படிவது; நான் கடவுள். நானே உண்மைப்பொருள்.**"

பாபா, ரிக் சேப்மெனை மீண்டும் அணைத்துக்கொள்ள அழைத்தார், பின்னர் அவரை எரச்சுடன் மண்டபத்திற்கு வெளியே அனுப்பினார்; ரிக்கின் 45 நிமிட சந்திப்பு நிறைவுக்கு வந்தது. பாபா, ஃபிரான்சிஸ், நரிமன், ஆதி ஆகியோரையும் அவருடன் உரையாட அனுப்பினார். இந்த நேரத்தில், வேறு எதையும் செய்வதற்கு முன்னர், எரச், சேப்மெனுடன் அமர்ந்து, பாபாவுடனான ரிக்கின் நேர்காணலை விரிவாகத் தொகுத்துக்கொண்டிருந்தார். பாபா, மெஹெராஸாத் வளாகத்தில் 'மஸ்த்' மரங்களில் விளைந்த இரண்டு மாம்பழங்களை, மனூ ஜெஸவாலா மூலம் ரிக்கிற்கு அனுப்பி வைத்ததை அவர், பாபாவின் பிரசாதமாக உண்ண வேண்டும்.

ஒவ்வொரு நாளும் பாபா ஓய்வெடுக்க அவரது அறைக்குச் செல்வதற்கு முன்னர், அவர் மண்டலிக்கு இரு கரம் கூப்பி வணக்கம் தெரிவிப்பதும், அதன்

பிரதிபலிப்பாக மண்டலியும் அவ்வாறே செய்வதும் வழக்கமாக நடந்து வந்தது. இந்த நாளில், பாபா, ரிக் சேப்மெனை மீண்டும் கடைசி ஒரு கண நேர பார்வைக்காக மண்டபத்திற்கு அழைத்தார். ரிக் தனது பிரியமானவர் முன்னால் இரு கரங்களையும் கூப்பி, "நன்றி" என்ற வார்த்தையை மட்டுமே உச்சரிக்கும் தைரியத்தை அடைய முடிந்தது. காலை சுமார் 10:00 மணிக்கு பாபா மதிய உணவுக்காகச் சென்றார்.

பாபாவை சந்தித்த பிறகு, ரிக் சேப்மென் மதியம் 1:30 மணிக்கு புறப்பட்டு, பூனா, மும்பை வழியாக அஹமதாபாத் திரும்பிச் சென்றார். இரண்டு நாட்களுக்குப் பின்னர் ஆகஸ்ட் 17 அன்று, ரிக், ஆதிக்கு இவ்வாறு எழுதினார்:

அன்பு சகோதரர் ஆதி,

இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தாலும், என் உண்மையான அன்பிற்குரியவரை சந்தித்ததில் நான் அடைந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்த முடியவில்லை. கடவுள் அவரது சொந்த திட்டங்களைத் தள்ளிவைத்து, அவருடைய பல புன்னகைகளுக்காகவும், அவருடைய அன்பில் முழுமையாக நனைந்து அவருடன் நெருக்கமாக இருக்க என்னை அனுமதித்தார் - பாபாவை அவரது உண்மை ரூபத்தில் பார்க்காத ஒருவரால் இதை எடுத்துரைப்பதில் எதுவும் இருக்க முடியாது. பார்க்க முடியாத கண்களால் அவரைப் பற்றிய ஒரு பார்வை அவ்வளவு மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருமானால் - அவர் கடவுளைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்!

- பாபாவின் மீசைக்காரர் (மூச்வாலா)

பாபா ஏற்கனவே குறிப்பிட்டபடி, 1966 ஆகஸ்ட் 16 முதல், மெஹராஸாத்திற்கு வருபவர்களைத் தடை செய்தார். அவர் அதை மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார்: "**நானாக யார் ஒருவரையும் அழைக்கும் வரை**, 1967 **இறுதிக்குள் எவரும் என்னை சந்திக்கவோ அல்லது என்னை சந்திக்க அனுமதி கோரவோ கூடாது**." இந்த அறிவுறுத்தல், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டு, விதிவிலக்கின்றி அமல்படுத்தப்பட்டு முழுவதுமாகப் பின்பற்றப்பட்டது.

ஒரு கட்டத்தில், பாபா கூறினார், "**கடவுளே வாசலுக்கு வந்தாலும், அவரை உள்ளே அனுமதிக்காதீர்கள்**!"

ஆகஸ்ட் 17ஆம் தேதி, பிம்பல்காவ்ம் நீர்வள பராமரிப்பு நிலையத்திலிருந்து அலோபா, ஆதியைத் தொடர்புகொண்டு, 'கோகா கோலா' (COCA COLA) மற்றும் 'இஞ்சி ஸோடா' (GINGER SODA) பாட்டில்களை ஆதி உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார் என்று தெரிவித்தார். அந்த நாளில் மெஹராஸாத்திற்கு வந்த பாதிரி, பெட்டிகளை உடன் எடுத்து வந்தார்.

பாபாவின் அதி தீவிரமான ஏகாந்தவாசத்திற்கு ஒரு வெளியளவிலான காரணம் அவரது பாதகமான உடல்நலம் மற்றும் கழுத்துப் பகுதியில் அவர்

அனுபவித்த வலியுமாகும், அதைக் குறித்து அவர் இவ்வாறு வெளிப்படுத்தினார், “**அதற்குக் காரணம், வேகமாக அதிகரித்து வரும் எனது ஆன்மீகப் பணியின் பளு - அதாவது உலகின் வலியைத் தாங்கிக்கொள்வது**.” ஆகஸ்ட் 21 அன்று பாபாவிற்கு உடல்நலம் சீரில்லை, அன்றும் மறுநாளும் அவருக்கு சில மருந்துகளை எடுத்து வர டாக்டர் டான் அழைக்கப்பட்டார். இந்த நேரத்தில் மூர்த்தி அவரது குடும்பத்தினருடன் அஹமதுநகர் வந்திருந்தவர், ஆகஸ்ட் 22 அன்று மெஹராஸாத் சென்ற போதும் பாபா அவர்களைப் பார்க்கவில்லை.

ஆயினும்கூட, பாபா எந்த அளவுக்கு வெளியளவிலான செயல்களிலிருந்து விலகி இருக்கிறாரோ, அந்த அளவுக்கு தீவிரமாக, அவரது நாமத்தை சூழ்ந்துள்ள செயல்பாடுகள் உலகம் முழுவதும் தெளிவாகப் புலப்பட்டன. மணி எழுதியது போல: “பாபா-அன்பர்களின் பார்வையிலிருந்து, அவர் மேற்கொள்ளும் ஏகாந்தவாசத்தின் முகத்திரை, அவரை எவ்வளவு அதிகமாக மறைக்கிறதோ, அவ்வளவு அதிகமாக அவரை அறியாதவர்களின் இதயங்களில் அவர் வெளிப்படுகிறார்.”

அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் குறிப்பாக ‘பாபா-செயல்பாடு’ அதி தீவிரமாக நடந்துவந்தது; மேலும் அதிகமான இளைஞர்கள் இறை-மனிதனின் அன்பின் அரவணைப்பில் வருகிறார்கள், அவரை நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள் என்பது ஆச்சரியமாக இருந்தது. பாபா ஒரு நாள் சிரித்துக்கொண்டே இயல்முறைப்போக்காக எடுத்துரைத்தார், “**இது அனைத்தும் நான் கடவுள் என்பதால் தான் நிகழ்கிறது**!”

கிட்டியின் பிறந்தநாளுக்குத் தொலைத்தந்தி அனுப்புவதை பாபா ஒவ்வோர் ஆண்டும் நினைவு கூர்ந்தார். 1966 ஆகஸ்ட் 27 அன்று, கீழ்வரும் பிறந்தநாள் வாழ்த்து அனுப்பப்பட்டது:

**என் மீதான உங்கள் அன்பு, உங்கள் வாழ்க்கையாகத் திகழ்ந்து, எனது மையத்திற்கு வரும் அனைவருக்கும் எனது செய்தியாக அமைவது, என்னை மகிழ்ச்சியடையச் செய்கிறது. உடல்நலத்தை நன்கு, பேணி பாதுகாத்துக் கொள்ளுங்கள், கிட்டி நீங்கள் எனக்கு மிகவும் பிரியமானவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

1966 ஆகஸ்ட் 25ஆம் தேதி வியாழன் அன்று, அஹமதுநகருக்கு விஜயம் செய்தபோது, பாபாவின் இதயத்துடிப்பின் வரைபடத்தை (CARDIOGRAM) எடுக்க டாக்டர் கிரான்ட் மெஹராஸாத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் ஆதியுடன் காலை 8:00 மணிக்கு வந்தார். பாபா தனது தீவிர ஏகாந்தவாசத்தின் காரணமாக, மெஹராஸாத்தை விட்டு வெளியேற விரும்பவில்லை; எனவே மின்சக்தி கருவி திறம்பட செயல்படுகிறதா என்பதை ஊர்ஜிதம் செய்ய பாதிரி அழைக்கப்பட்டார். இதயத்துடிப்பின் வரைபடத்தைப் பார்த்து, பாபாவின் இதயம் நன்றாக இருப்பதாக டாக்டர் கிரான்ட் கூறினார். சில நிமிடங்களுக்கு பாபா, டாக்டர் கிரான்டிடம் எல்.எஸ்.டி. போதைமருந்து குறித்து உரையாடிய

வேளையில், '**அது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் மற்றும் ஆன்மீக ரீதியாகவும் தீங்கு விளைவிக்கும்**' என்று மீண்டும் கூறினார்.

டாக்டர் கிரான்ட் தெரிந்து கொள்ள விரும்பினார், "நாம் ஏன் வாழ்நாள் முழுவதும் தவம், பிராயச்சித்தம் செய்ய வேண்டும், அதை முயற்சித்தவர்களின் கூற்றுப்படி, ஒரு மாத்திரையை உண்டு கடவுளைக் காண முடியாதா? உதாரணமாக, நான் அஹமதுநகர் செல்ல வேண்டும் என்றால், நான் ஏன் ஒரு மாட்டு வண்டியில் பயணம் செய்ய வேண்டும்? மெஹர்ஜி கர்காரியாவின் ஷெவர்லே (CHEVROLET) காரில் அமர்ந்து, நான் வசதியாக பயணம் செய்ய முடியும் எனும்போது, மாட்டு வண்டியின் அதீத அதிர்வு மற்றும் கடினமான சவாரியை ஏன் அனுபவிக்க வேண்டும்?"

பாபா இந்த ஒப்புமையைப் பயன்படுத்தி பதிலளித்தார்: "**ஒரு மாத்திரை மூலம் கடவுளை ஒருபோதும் அடைய முடியாது. அதற்காக ஏராளமான தவம், பிராயச்சித்தம், கடின உழைப்பு மற்றும் உலகின் கடினமான சோதனைகளை சந்திக்க வேண்டியது அவசியம். மாத்திரையை உண்டு நீங்கள் பெரிய மருத்துவர் பட்டம் பெற்றீர்களா? இல்லை, கடினமாக உழைத்து, வருடக்கணக்கில் படித்து, பல பயிற்சிகளை மேற்கொண்டு, பல வருடங்கள் கழித்து, மருத்துவரானீர்கள். வாழ்க்கையும் அப்படித்தான். அனைத்து சிரமங்களையும், வேதனைகளையும் கடந்துதான் இறுதி இலக்கை எட்ட முடியம். ஒரு நாள் நீங்கள் அதை அடைவதற்காக எனது ஆசீர்வாதங்களை வழங்குகிறேன்.**"

ஆகஸ்ட் 26ஆம் தேதி பாபாவின் இரத்தமும் சிறுநீரும் மீண்டும் ரூபி ஹால் மருத்துவமனைக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. டாக்டர் கோஹெர், பாபாவின் உடல்நிலையை தொடர்ந்து பரிசோதனை செய்து, அவரது நீரிழிவு (DISBETES) மற்றும் யூரியா (UREA) அளவு கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதி செய்தார்.

1966 செப்டம்பர் 5 அன்று, பாபா 'நன்றாக உணர்கிறார் மற்றும் பிரகாசமாக உள்ளார்' என எரச் குறிப்பிட்டார். ஆனால் அவர் ஆகஸ்ட் 16ஆம் தேதி, பாபா சமீபத்தில் குறிப்பிட்டதை ஒரு குடும்பத்திற்கு கடிதம் மூலமாக எடுத்துரைத்தார்:

**எனது உடல்நிலையைப் பொறுத்தவரை, உடல்ரீதியான காரணிகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை. உங்களின் பௌதீகக் கண்களுக்குத் தெரியும் எனது உடல், பாதிக்கப்பட்டதாகவும், புண்பட்டதாகவும் உங்களுக்குத் தோன்றுகிறது. ஆனால், இவை அனைத்திற்கும் உலகளாவிய துன்பத்தின் சுமையின் அளப்பரிய அழுத்தமே காரணம்; இதன் அதீத தாக்கம் எனது பௌதீக உடலில் பிரதிபலிப்பதன் காரணமாகவே, நீங்கள் இதுகாறும் என்னுடன் பழகி, என்னைப் பார்த்து, என்னை எனது பௌதீக உடலில் உணரவும் உங்களுக்கு ஒரே ஊடகமாக இருந்ததால், என்னை நீங்கள் இவ்வண்ணம் காண முடிகிறது.**

**நான் எனது மௌனத்தைக் கலைத்ததும், அனைத்து உலகத் துன்பங்களும் முடிவுக்கு வரும். 1967 நவம்பர் இறுதி எல்லாவற்றிற்கும் திருப்புமுனையாக இருக்கும்.**

ஒரு நாள் காலை உணவின் போது, தனது மௌனத்தைக் கலைத்த பின்னர், உலகில் ஏற்படும் மாற்றத்தை பெண்மணிகளுக்கு விளக்கும் விதத்தில், பாபா ஒரு பெரிய பந்தை பிடித்தபடி தனது இடது கையை வலப்புறமாகத் தளர்வாகப் பிடித்தார்; பின்னர் ஒரு சாதுரியமான முறையில் பந்தைத் திருப்பி, வலது கையை மேலே கொணர்ந்த போது, அங்கிருந்தவர்களில் ஒருவர், பந்து 'தலைகீழாக' மாறியதைக் குறிப்பிட்டார்.

அற்புதமான குறும் புன்னகையுடன் பாபா, "வலது புறம் மேலே!" என்று சைகையால் தெரிவித்தார்.

1966 செப்டம்பர் 24 அன்று, ராம்தாஸ் சௌராசியா (RAMDAS CHOURASIA) ஒரு நண்பருடன் எரச், பாவ் கல்சூரி இருவரையும் பார்க்கும் எண்ணத்தில் மெஹராஸாத்திற்குச் சென்றார்; ஆனால் பாபா அவரை சந்திக்க ஒப்புக்கொண்டார். இங்கிலாந்திலிருந்து தனது புதிய காரை இந்தியாவிற்கு இறக்குமதி செய்ய, பதினைந்து நாட்களுக்காக அங்குச் சென்றிருந்த டாக்டர் டான் அடுத்த நாள் மாலை மும்பையிலிருந்து அஹமதுநகர் வந்தடைந்தார்.

பாபாவால் அழைக்கப்பட்டவர்களைத் தவிர, வேறு எவரும் மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கப்படவில்லை என்றாலும், செப்டம்பர் 26 அன்று, பல அரன்காவ்ம் கிராம மக்கள் மாட்டு வண்டிகளில் ஊர்வலமாக வந்தனர். பாபா அவர்களைப் பார்க்க விரும்பவில்லை, ஆனால் அவர்கள் தங்கள் மீது பரிதாபப்பட்ட பெண்டுவிடம் கெஞ்சினார்கள், தங்கள் கோரிக்கையை நிறைவேற்றும்படி பாபாவிடம் மன்றாடினார்கள். பாபா அவர்களை ஏழு நிமிடம் பார்க்க அனுமதித்து, தரிசனத்திற்காக உள்ளே அனுமதித்தார்.

இர்வின், எட்வர்ட் லக் சகோதரர்களின் சமீபத்திய பிரச்சினைகள் தொடர்பாக எழுதிய கடிதத்திற்கு, 26ஆம் தேதி பாபா, ஆதியிடம் கீழ்வரும் பதிலை அனுப்புமாறு கூறினார்:

**...உங்கள் மனதில் எழும் அல்லது கடந்து செல்லும் தீய பாலியல் எண்ணங்களைக் கண்டுகொள்ளவோ அல்லது அவற்றைக் குறித்து கவலைப்படவோ கூடாது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார். நீங்கள் எப்பொழுதும் முழு கவனத்துடன் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார், அத்தகைய எண்ணங்களை ஒருபோதும் செயல்படுத்த வேண்டாம். அப்போது நீங்கள் கட்டுண்டவராக இருக்க மாட்டீர்கள். நீங்கள் அதைச் செயல் படுத்தினால் அதற்கு அடிமையாகி பிணைப்புகளை வரவழைப்பீர்கள் என்கிறார் பாபா.**

அக்டோபர் 4 அன்று, பாபா, இர்வின், எட்வர்ட் இருவருக்கும் இந்தச் செய்தியை அனுப்பினார்: "**மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியுடனும் இருங்கள் - இறைப் பேரின்பத்தின் ஆதாரமாகத் திகழும் அவர் உங்களுடன் இருக்கிறார்**."

1966 அக்டோபர் 3 அன்று காலை 9:30 மணிக்கு ஆதி, டாக்டர் டான் இருவரையும் பாபா மெஹராஸாத்திற்கு அழைத்தார். அவர்கள் டானின் புதிய மெரூன் வோல்ஸ்லி (NEW MAROON WOLSELEY) காரில் வந்தனர். சில நிமிடங்கள் முன் இருக்கையில் அமர்ந்து 'காரின் திறப்பு விழாவை நிகழ்த்த' டான் வேண்டுகோள் விடுத்ததற்கு பாபா ஒப்புக்கொண்டார். அவர் அவ்வாறே செய்து, மெஹராஸாத்தின் பின்புறத்தில் அமைந்த அவரது இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அக்டோபர் 8ஆம் தேதி, கழுத்துப்பட்டை தயாரிப்பாளர் ஷிண்டே, புதிய கழுத்துப்பட்டைக்கான பாபாவின் அளவீடுகளை எடுக்க மெஹராஸாத்திற்கு வந்தவர், மறுநாள் காலை பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

செப்டம்பர் இறுதியில் சில நாட்களுக்கு, விலூ ஒவ்வொரு நாளும் ருஸ்தம் காக்காவுடன் பாபாவிற்கு உணவு வழங்கினார். அக்டோபர் 13 அன்று சகனும் உணவு தயார் செய்து அனுப்ப அனுமதிக்கப்பட்டார்.

கோர்ஷெத் 1966 அக்டோபர் 18 அன்று மெஹராஸாத்திற்கு வந்து ஒரு வாரம் தங்கியிருந்தார். டாக்டர் டான் 21ஆம் தேதி காலை 9:30 மணிக்கு (மறுநாள் மெஹர்நாத்தின் 13ஆவது பிறந்தநாள்) கல்சூரி குடும்பத்தினரை அழைத்து வந்தார். நரிமன், அர்னவாஸ், கேட்டி ஆகியோர் அக்டோபர் 29ஆம் தேதி (31 அன்று நரிமனின் பிறந்தநாள்) வந்து ஒரு வாரம் தங்கினர். மானேக் தனது இரு சக்கர வாகனத்தில் பாபாவிற்கும் மண்டலிக்கும் விலூ மற்றும் சகனிடமிருந்து சிறப்பு உணவைக் கொண்டு வந்தார். ஜெஹாங்கு இரண்டு நாட்களுக்காக பூனாவிலிருந்து வந்து 31ஆம் தேதி திரும்பிச் சென்றார்.

மெஹராஸாத்திற்கு வந்த அரன்காவ்ம் கிராம மக்களால் பாபாவின் ஏகாந்தவாசத்திற்கு இடையூறு ஏற்பட்டது. அவர்களின் வருகைக்கு அடுத்த நாள், பாபா கூறினார், "1967 **நவம்பர் வரை, நான் முற்றிலும் இடையூறு எதுவும் இல்லாமல் இருக்க விரும்புகிறேன்**." இந்தி, மராட்டி, ஆங்கில மொழிகளில் இது குறித்த அறிவிப்பை வர்ணம் பூசிய பலகைகளில் எழுதுமாறு பாபா அறிவுறுத்தினார்:

**அறிவிப்பு:**

**அவதார் மெஹர் பாபா யார் ஒருவருக்கும் தரிசனம் வழங்குவதும், யார் ஒருவரையும் சந்திப்பதும் நிறுத்தப்பட்டுள்ளது.**

பாபாவின் கட்டளைப்படி, மூன்று மொழிகளிலும் தலா இரண்டு செய்திப் பலகைகள் தயாரிக்கப்பட்டன. 1966 நவம்பர் 5 அன்று, மண்டலி மண்டபத்திற்கு வெளியே 'புது வாழ்வு' கவிகை வாகனத்தில் ஒன்றும், மற்றொன்று

மெஹராஸாத் அணுகுச் சாலையிலும் ஆண் மண்டலியின் குடியிருப்புகளை நோக்கி வைக்கப்பட்டது.

டெஹ்ரா டூன் நகரில் வாழும் பாபா-அன்பரான பால்கோபால் தாஸ் (BALGOPAL DAS), அதே நாளில் பூனாவிலிருந்து, பாபாவின் தரிசனம் கோரி ஆதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். பால்கோபால் தாஸ், அவரது மனைவி பேபிராஜ் (BABYRAJ) இருவரும் டெஹ்ரா டூனில் 'மெஹர் தாம்' நிறுவுவதற்குப் பெரிதும் உதவினர், மேலும் பாபாவின் செயல்பாடுகள் மற்றும் ஏழைகளுக்கு உணவு வழங்குவது போன்ற பாபாவின் பெயரில் செய்யப்படும் பிற பணிகளுக்கு நிதியுதவியும் வழங்கினர்.

பால்கோபால் தாஸ், அவரது மனைவியுடன் அஹமதுநகருக்குக் காரில் வந்தவர்களை, ஆதி மெஹராஸாத்திற்கு வழிநடத்தினார்; இருப்பினும் அவர் தொலைபேசியில் விளக்கியதற்கு இணங்க, பாபா தீவிர ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பதால், அநேகமாக அவர்களை சந்திக்கமாட்டார். அன்றைய தினம் பாபாவை தரிசனம் செய்யும் வரை, தண்ணீர் அருந்த மாட்டோம் என்று தம்பதியர் சபதம் செய்திருந்தனர். அவர்கள் மெஹராஸாத் வந்தடைந்த நேரத்தில், பாபா ஏற்கனவே தனது அறையில் இருந்தார்; காரின் சத்தம் கேட்டு, வந்தவர் யார் என்று அறிய பாவ் கல்சூரியை அனுப்பினார். பாவ் கல்சூரி வந்தவர்கள் குறித்த விபரத்தைத் தெரிவித்தபோது, பாபா அவரிடம், "**நான் அவர்களைப் பார்க்க வேண்டுமா?**" என வினவினார்.

பாவ் கல்சூரி உடனே, "பாபா, இன்றுதான் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன, அவர்களுக்கு தரிசனம் வழங்குவது சரியாக இருக்காது" என்றார்.

ஆனால் பாபா பதிலளித்தார், "**எனக்கு அதில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. நான் எதை விரும்பினாலும், நீங்கள் அதில் கவனமாக இருக்க வேண்டும். அவர்களை அழைத்து வாருங்கள்.**"

பாவ் கல்சூரி, தம்பதியரை பாபாவின் அறைக்கு அழைத்து வந்தார், ஆனால் அவர்கள் அதன் வாசலில் நின்றுகொண்டிருந்தனர். பாபாவின் முகம் சந்திரனைப் போலப் பிரகாசித்தது, புன்னகையுடன் அவர்களிடம், "**உங்கள் இருவரையும் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், என்னை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார். தம்பதியர் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர். குருபிரசாத்தின் பராமரிப்பாளரிடம் அவர்களுக்கு ஒரு சுற்றுப்பயணத்தை வழங்குமாறும், பூனாவில் பாபா இல்லம் மற்றும் பிற சுவாரஸ்யமான இடங்களை ஜால்பாய் அவர்களுக்குக் காட்டும்படியும் ஒரு குறிப்பு வழங்கப்பட்டது.

ஆனால் அடுத்த நாள் நவம்பர் 6, பூனாவிலிருந்து அம்மா, கிஸன் தாடே, ராமகிருஷ்ணன், முதலியார் ஆகியோர் வந்து மண்டலியை சந்தித்தனர்; ஆனால் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. மெஹராஸாத்தில் அடியெடுத்து வைத்த சில ஆன்மாக்கள் பாபாவின் தரிசனத்திற்கான 'பாக்கியத்தை' அடையப் பெற்றவர்கள், ஏதோ ஒரு வகையில் இதர அன்பர்கள் அவ்வாறு இல்லை என்று

காலம் சுட்டிக்காட்டியது. மெஹர் பாபாவின் அனைத்து செயல்பாடுகளும் தனிநபர்களுக்கும் முழு உலகிற்கும் நன்மை பயக்கும் அவரது பணியுடன் மட்டுமே தொடர்புடையது.

1966 நவம்பர் 13ஆம் தேதி முதல் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட தினங்களில் மெஹராஸாத்தில் தங்குவதற்காக கெய்மாய் வந்ததைப் போல, பால் நாத்துவும் அவரது தீபாவளி விடுமுறை காலங்களில் தங்கியிருந்தார். டாக்டர் டான் நவம்பர் 14 காலை 10:00 மணிக்கு அழைக்கப்பட்டார்; மெஹர்ஜி, மெஹர்வான், ஜெஹாங்கு ஆகியோரும் பாபாவை 20ஆம் தேதி சந்தித்தனர்.

ஒரு நாள் மண்டலி மண்டபத்தில், பாபா ஆண்களுக்கு '**நவம்பர் 21, அதிசயத்தின் நாள்**' என்று நினைவுபடுத்தி, விளக்கமளித்தார்:

**1966 நவம்பர் 21 முதல் 1967 நவம்பர் 21 வரை நான்கு அதிசயங்கள் நிகழும். வாகன விபத்துக்கு** (உட்தாரா, 1956) **முன்னர் இருந்ததைப் போலவே நான் வேகமாக நகருவேன் என்பது அந்த நான்கில் மிகச்சிறிய ஒன்று. பிற மூன்றும், முதல் அதிசயத்தை விட மிகப் பெரியதாக இருக்கும்.**

**1967 ஜூன் முதல் அனைத்தும் அமைதியாக இருப்பது போலத் தோன்றும், ஆனால் 1967 ஜூன் வரை இது இந்திய தேசத்திற்கும், உலகிற்கும், எனது மண்டலிக்கும் மிகவும் கடினமாக இருக்கும்.**

**இந்த நான்கு அதிசயங்களும் ஒரு வகையான அரிய, அற்புதமான மந்திர சக்தி நிறைந்த நிகழ்வுகளாக இருக்கும்; ஆனால் அற்புதங்கள் என்ற எனது வரிசையில் இருக்காது. என்னுடையது எல்லா அதிசயங்களிலும் அதிசயமாக இருக்கும். நான் எனது மௌனத்தைக் கலைக்கும் போது அது நிகழும். இது முழுப் படைப்பின் முதல் மற்றும் கடைசி அதிசயமாக இருக்கும்.**

இதற்கிடையில், பாபாவின் உடல்நிலை தொடர்பான கடிதப் போக்குவரத்து மும்பையில் வாழும் டாக்டர் ராம் கிண்டே மற்றும் மெஹராஸாத் மண்டலி இடையே தொடர்ந்தது. அக்டோபர் 6 ஆம் தேதி டாக்டர் கிண்டேக்கு எரச் எழுதினார்:

**...நீங்கள் இந்த நாட்களிலும் ஸ்ரீ ஷிண்டேயை வேறு வேறு கழுத்துப்பட்டைகளைத் தயார் செய்வதற்காக அனுப்புவதை பாபா விரும்பவில்லை. அவர் அனுபவிக்கும் வலியைக் குறித்து, முழுப் படைப்பிலும் அத்தகைய வலியை குணப்படுத்தும் எவரும் இல்லை என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்; ஏனெனில் அவருடைய வலி பௌதீக அளவிலானது அல்ல, தெய்வீகமானது. மேலும், இந்த வலி மிகவும் உயர் மட்டத்திலிருந்து, பௌதீக நிலைக்கு வெளிக்கொணரப்பட்டு, சாதாரண உடல் வலியின் தோற்றத்தை வெளிப்படுத்துகிறது.**

**1967 நவம்பர் இறுதிக்குப் பின்னர் அனைத்திற்கும் ஒரு திருப்புமுனை இருக்கும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார், மேலும் நீங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்; உங்கள் கடின உழைப்பில் சற்று நிதானமாகச் செல்ல வேண்டும்; 1967க்குப் பின்னர், அவருக்காகத் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் அவருக்கு மிகவும் பிரியமானவர்.**

நவம்பர் 24 அன்று கோஹெர், பாபாவின் கழுத்துப் பாகத்தில் வலி தொடர்ந்து இருப்பதாகவும், உணர்வின்மை மற்றும் கூச்ச உணர்வு அவரது தோள்பட்டை மற்றும் கைகளை பாதித்ததாகவும் டாக்டர் கிண்டேக்கு எழுதினார். ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கும் அது கடுமையானது மற்றும் வலி நிவாரணிகளால் எந்த ஒரு பயனும் இல்லை. டாக்டர் கிண்டே அனுப்பிய புதிய கழுத்துப்பட்டையை பாபா அணிந்திருந்தார், ஆனால் நீண்ட நேரம் அணிந்திருந்த போது அது சிரமமாக இருந்தது. கடுமையான வலியின் போது பாபா பழைய கழுத்துப்பட்டையை பயன்படுத்துவது வழக்கம், அது தளர்வாகவும் பின்புறம் தாழ்வாகவும் இருந்தது. 'அழுத்தம்' கொடுக்கும் கழுத்துப்பட்டைகளுக்கு இனிமேல் தேவையில்லை.

டாக்டர் கிண்டே, எரச் மற்றும் டாக்டர் கோஹெருக்கு மீண்டும் எழுதினார்:

நான் டெல்லி செல்வதற்கு ஒரு நாள் முன்னர் எங்களை சந்திக்க நேர்ந்த சகோதரர் ஆதியிடமிருந்து, அன்பான பாபாவின் கழுத்துப் பாகத்தில் வலி குறித்த செய்தி கிடைத்தது; உங்கள் கடிதமும் அதையே உறுதிப்படுத்துகிறது. நீங்கள் மிகவும் கவலைப்படுவதாகவும் கூறினார். நானும் அதே இக்கட்டான சூழ்நிலையில்தான் இருக்கிறேன். அவரது கழுத்துப் பாகத்தின் வலியின் நிலை குறித்த அறிவிலிருந்து, எனக்குத் தெரிந்த அனைத்தையும் நான் முழு மனதுடன் செய்ய முயற்சித்தேன். ஆனால், அன்பான பாபாவின் வலியைப் போக்குவதில் எனது முழுத் தோல்வியை நான் முன்பே ஒப்புக்கொண்டது போல், இப்போதும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு சமுத்திரத்தைப் போல் - இல்லை, அதைவிட அதிக சக்தி வாய்ந்த அவரை - அதே நேரத்தில் ஒரு பூனைக்குட்டியைப் போல் உதவியற்றவராகப் பார்ப்பதில், நான் எதுவும் செய்ய முடியாத நிலையில் மன்றாடுகிறேன். நான் அவரிடம் மன்னிப்பு மட்டுமே கோர முடியும்.

அந்தக் கடிதத்திற்குச் செவிமடுத்த பாபா அன்புடன் புன்னகைத்தார், உடனே எரச்சிடம் அவருக்கு எழுதுமாறு கூறினார்: "**ராம் கிண்டேயிடம், கவலைப்பட வேண்டாம், ஆனால் அவர் எனக்கு மிகவும் பிரியமானவர், பிரத்தியேகமானவர் என்பதை நினைவில் கொள்ளச் சொல்லுங்கள். எனது வலிக்கு அடிப்படைக் காரணம் பௌதீக உடல் தொடர்புடையது அல்ல, உலகளாவியது. அது 'எனது நேரத்தில்' தான் என்னை விட்டுச் செல்லும்.**"

பாபா, "**நான் மனித உருவில் வருகை தந்த கடவுள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய நேரம் இது**" என்று முடித்தார். உலகம் முழுவதும் வாழும் பாபா-அன்பர்களுக்கு இது ஒரு செய்தியாக அனுப்பப்பட்டது.

1966 நவம்பர் 27 அன்று, ஸ்ரீதர் கேல்கரை (SHRIDHAR KELKAR) மும்பையில் திருமணம் செய்து கொள்ளவிருந்த பெர்விஸ் தலாட்டி, மரியாதையின் நிமித்தம், மெஹராஸாத்தில் அவருக்கும் மண்டலிக்கும் உணவு அனுப்ப, பாபா அனுமதி வழங்கினார். டிசம்பர் 5 அன்று எரச் ஒரு பாபா-அன்பருக்கு இவ்வாறு எழுதினார்: "அன்பான பாபா இப்போது, கடந்த ஒரு வார காலத்தில் நல்ல மனநிலையிலும் ஆரோக்கியத்துடனும் இருக்கிறார்." 12ஆம் தேதி ரிக் சேப்மெனின் எல்.எஸ்.டி பற்றிய கட்டுரை பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டு, ரிக் மீண்டும் பாபாவை சந்திக்க வேண்டும் என்று எதிர்பாராமல், திட்டமிட்டபடி அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற குறிப்புடன் ரிக் சேப்மெனுக்கு பதில் எழுதினார்.

பாபா ஒருமுறை இவ்வாறு கூறியிருந்தார்: **"உண்மைப்பொருளின் மூலாதாரத்திலிருந்து வரும் வார்த்தைகளுக்கு உண்மையான அர்த்தம் உண்டு..."** மேலும் 1966 டிசம்பர் 14 அன்று மணியின் குடும்பக் கடிதத்தின் மூலம் பாபா-அன்பர்களுக்காக கீழ்வரும் வார்த்தைகள் மூலாதாரத்திலிருந்து வெளிவந்தன:

**ஆசைகளும் ஏக்கங்களும் தான் அனைத்து துன்பங்களுக்கும் மூல காரணம். கடவுளைக் காண்பது ஒன்றுதான் உண்மையான ஆசை, கடவுளுடன் ஒன்றிணைய வேண்டும் என்பது ஒன்றுதான் உண்மையான ஏக்கம். இந்த உண்மையான ஆசையும் ஏக்கமும் ஒருவரை பிறப்பு இறப்பு எனும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறது. பிற ஆசைகள், ஏக்கங்கள் அனைத்தும் ஒருவரை அறியாமையுடன் பிணைக்கிறது.**

**'உண்மையான ஆசை'யை விரும்புவதற்கும், 'உண்மையான ஏக்கத்திற்காக' ஏங்குவதற்கும் உங்களுக்கு என் அருள் தேவை; பிற எல்லா ஆசைகளையும் ஏக்கங்களையும் என்னிடம் ஒப்படைக்கும் வரை நீங்கள் அதை அடையப் பெற முடியாது.**

**இந்த ஆசைகளையும் ஏக்கங்களையும் சரணடையச் செய்ய, என்மீதான உங்கள் அன்பு உங்களுக்கு உதவும், மேலும் உங்கள் மீதான என் அன்பு 'உண்மையான ஆசை'யை விரும்புவதற்கும், 'உண்மையான ஏக்கத்திற்காக' ஏங்குவதற்கும் உதவும்; அனைத்தும் என் அருளால் தான் சாத்தியமாகும்.**

**ஒவ்வொரு நாளும், உலகின் ஏதோ ஒரு மூலையிலிருந்து, பாபாவின் உதவி மற்றும் தலையீட்டிற்காக, ஒரு துரதிர்ஷ்டம் அல்லது துயரத்தில் கண்கலங்குவது குறித்த கடிதங்களும் தொலைத்தந்திகளும் வந்த வண்ணம் உள்ளன. இவை அனைத்திற்கும் செவிமடுக்கும் பாபா இந்த செய்தியை வழங்க விரும்புகிறார்.**

**எல்லா நோய்களுக்கும் ஒரே தீர்வு - என்னை இடைவிடாது, முழு மனதுடன் நினைவில் கொள்வது.**

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா கூறினார்: "**உங்களை எந்த அளவுக்குக் குறைவாக நினைவில் கொள்கிறீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் என்னை முழு மனதுடன் நினைவில் கொள்வீர்கள்.**"

மெஹராவின் பிறந்தநாள் 1966 டிசம்பர் 22 வியாழன் அன்று மெஹராஸாத்தில் தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட்டது; சகன், விலூ ஆகியோரால் ஒரு சிறப்பு உணவு தயார் செய்து அனுப்பப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் அந்த நாளில் நரிமன், அர்னவாஸ் தாதாச்சாஞ்சி, ஜிம், ரோடா மிஸ்திரி, நர்கிஸ், மும்பையிலிருந்து கோர்ஷெத், பூனாவைச் சேர்ந்த கெய்மாய், மகள் மனூ ஜெஸவாலா போன்ற சில நெருங்கிய அன்பர்கள் அழைக்கப்பட்டனர். பெண் மண்டலி பக்கத்தில், பாபா, மெஹராவைத் தழுவிக் கொள்ளும் வேளையில், பெண்மணிகள் அனைவரும் மெஹராவிற்குப் பிறந்தநாள் வாழ்த்துப் பாடலை பாடினர்.

பாதிரி, கைக்கோபாத்தின் குடும்பத்தினரை 30ஆம் தேதி காலை 9:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தபோது, அவர்கள் ஒரு மணி நேரம் பாபாவையும் பெண்மணிகளையும் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர்; பின்னர், மெஹராபாத் மேல்மலைக்குத் திரும்பிச் சென்றனர்.

# மெஹராஸாத் - உலகளாவிய பணி

**(Universal Work at Meherazad)**

மெஹர் பாபாவின் நீண்டகால, நெருங்கிய சீடரான ராம்ஜூ அப்துல்லா, 1967 ஜனவரி 11 புதன்கிழமை பிற்பகல் சத்தாராவில் இதய செயலிழப்பால் காலமானார், அவருக்கு வயது 67. ராம்ஜூவின் நண்பர் டாக்டர் ஜோக் (Dr. JOG) இந்தத் தொலைத்தந்தியை பாபாவிற்கு அனுப்பினார்: "ராம்ஜூ நம்மை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து இன்று மதியம் உங்களிடம் வந்துள்ளார்."

ஆதியிடமிருந்து மறுநாள் காலை மெஹராஸாத்திற்கு தொலைத்தந்தி வந்தது; பாபா இவ்வாறு பதிலளித்தார்: "**என் அன்பான ராம்ஜூ, என்னிடத்தில் நித்தியமாக ஓய்வெடுக்க வந்துள்ளார். அவரது குடும்பத்தினருக்கு தைரியத்தை அளித்து, அவர்களுக்கு என் அன்பை வழங்கவும்.**"

ராம்ஜூவின் குடும்பத்திற்கு பாபாவின் அன்பையும் செய்தியையும் தனிப்பட்ட முறையில் தெரிவிக்க, ஆதி, டாக்டர் டான் இருவரும் உடனடியாக சத்தாராவிற்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் திரும்பி வந்ததும், ராம்ஜூ தனது இறுதி நாட்களில், பாபாவின் நாமத்தைத் திரும்பத் திரும்ப மொழிந்து, இடைவேளையின்றி அதைச் செய்ய உதவும் வகையில் பிரார்த்தனை மணிகளின் சரத்தை தனது கைகளில் வைத்திருந்தார். அவரது கடைசி தருணங்களில், மணிகளைக் கைகளில் பற்றிப் பிடிக்க முடியாத நிலையில், "பாபா, பாபா, பாபா" என உச்சரித்தபடி, அவரது உதடுகளின் அசைவுடன் விரல்கள் தானாக நகர்ந்தன.

ராம்ஜூ பூனாவில் 1921 முதல் மெஹர் பாபாவின் தொடர்பில் 46 ஆண்டுகள் இருந்தார். அவர் மன்ஸில்-இ-மீம் ஆஷ்ரமத்தில் வாழ்ந்த மண்டலியுடன் இணைந்து, 1928இல் பாபா டோக்கா ஆஷ்ரமத்திலிருந்து இடம்பெயரும் வரை தங்கினார். பின்னர் அவர் நாசிக் நகரில் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் மேலாளராக பணிபுரிந்தார். கடைசி வரை, பாபாவுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி, அடிக்கடி வந்து செல்வது வழக்கம். அவர் அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவராக இருந்தார், மேலும் அவரது மறைவுக்குப் பின்னர் அவரது மகன் அலி அந்தப் பொறுப்பை வகித்தார்.

ஆரம்ப கால மண்டலியில் ஒருவரான ராம்ஜூ, பாபாவிற்கு மிகவும் பிரியமானவர்; இறுதிவரை அவருக்கு உண்மையாக சேவை புரிந்தார். 1925-1926 ஆண்டுகளில், பாபா எழுதுவதை நிறுத்துவதற்கு முன்னர், அவர் அவ்வப்போது ராம்ஜூவிற்கு எழுதினார். பாபாவின் கையால் எழுதப்பட்ட கடிதங்களின் சில பகுதிகள், அன்பான சீடரின் உணர்வுகளுக்கு சான்றாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளன:

**நான் எப்பொழுதும் உங்களுடனே இருக்கிறேன் ...நான் உங்களை எனது சுயமாக நேசிக்கிறேன்...**

**எந்த விஷயத்திலும் கவலையடைய வேண்டாம். தைரியமாக இருக்கவும்; அனைத்தும் கடந்து போகும்... எதிர்காலத்தில் உங்களை, உண்மைப்பொருளைக் காணச் செய்யும் பொறுப்பை நான் எனது கைகளில் எடுத்துக் கொண்டேன்.**

**அனைத்தும் சிறப்பாக உள்ளது, நான் உங்களுடன் இருக்கிறேன்! மாயாவையும் அதன் அனைத்து பொய்யும் போலியுமான நாடகங்களையும் அதற்குரிய இடத்தில் வைத்து விடுங்கள்!**

1966ஆம் ஆண்டு, மிக் - அர்ஸூலா ஹாமில்டன் தம்பதியர் இந்தியாவை விட்டு வெளியேறி அமெரிக்கா சென்றபோது, ராபர்ட் ட்ரேஃபஸ்ஸுடன் தொடர்பு கொள்ள பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். மூவரும் ஆசியாவிற்குத் திரும்பிவர விரும்பினர். ஹாமில்டன் தம்பதியர், அவர்கள் அமெரிக்காவை விட்டு வெளியே செல்லவும், "**போதைப்பொருட்கள் ஆகாது**!" என்ற பாபாவின் செய்தியை 'சாலை ஓரங்களில்' பிறருக்கு எடுத்துரைக்கவும் பாபாவிடம் அனுமதி கோரினர். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்தாலும், அவர்களுக்கு அறிவுறுத்தும் வரை, நிச்சயமாக 1967 நவம்பர் 21ஆம் தேதிக்கு முன்னர், இந்தியாவிற்குள் நுழைய வேண்டாம் என்றும் கட்டளையிட்டார். மைக், அர்ஸூலா இருவரும் 1966 அக்டோபர் மாதத்தில் அமெரிக்காவை விட்டு வெளியேறி, பல மாதங்கள் தரைவழிப் பயணம் செய்தனர். 1967 ஜனவரி காலகட்டத்தில், அவர்கள் பாகிஸ்தான் நாட்டின் லாஹூர் நகரில் அவரைப் பார்க்க வருவதற்கான அனுமதிக்காகக் காத்திருந்தனர். ஆனால், பாபா அவர்களை வர அனுமதிக்கவில்லை. இறுதியில், ஜூன் மாதத்தில், அவர்கள் மீண்டும் போதை மருந்துகளுக்கு அடிமையாகி, கல்லீரல் அழற்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டதால், அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பின்னர் அவர்கள் குணமடைந்தனர், பாபா அவர்களின் தவறை மன்னித்தார்.

ஜனவரி 29 அன்று, மெஹர்ஜி, ஜெஹாங்கு, மெஹர்வான் (அவரது வருடாந்தர ஒரு மாத விடுமுறையில் தங்க வந்தார்) ஆகியோருடன் மெஹராஸாத்திற்கு வந்தார். பிப்ரவரி 5 அன்று பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நான் தெய்வமாகவும், மனிதனாகவும் இருக்கிறேன். என்னுடன் வாழ்பவர்கள் எனது தெய்வீகத்தை விட எனது மனித தன்மையை அதிகம் உணர்கிறார்கள். எனது பழைய அன்பர்களும், புதிய நபர்களும் வந்து என்னை சிறிது நேரம் பார்க்கும் வேளையில், எனது மனித தன்மையை விட எனது தெய்வீகத்தை அதிகம் பார்க்கிறார்கள். ஆனால் என்னுடன் வாழ்பவர்கள் இறுதியில் எனது தெய்வீகத்தை உணர்வது மட்டுமின்றி அதை அனுபவிப்பார்கள்.**

இந்தச் செய்தி ஆதிக்கு அனுப்பப்பட்டாலும், அதை வெளியிட வேண்டாம் என்று கூறப்பட்டது. அதைப் படித்ததும் ஆதியின் மனம் கலக்கத்தில் ஆழ்ந்தது; அடுத்த முறை மெஹராஸாத்திற்குச் சென்றபோது பாபாவிடம்,

“இதற்கு என்ன அர்த்தம்? உங்களை விட்டு விலகி வாழ்பவர்கள் உங்கள் தெய்வீகத்தை அனுபவிக்காமல் இருப்பார்கள் என்று சொல்கிறீர்களா?” என்று கேட்டார்.

பாபா உடனே, “**அட முட்டாளே! அப்படி எங்கே சொல்லப்படுகிறது?**” எனக் கேட்டார்.

“அப்படிச் சொல்லவில்லை, ஆனால் அது அதைக் குறிக்கிறது” என்று ஆதி ஒப்புக்கொண்டார்.

பாபா பதிலளித்தார், “**இல்லவே இல்லை. என்னுடன் இருப்பவர்கள் மட்டுமே எனது தெய்வீகத்தை அனுபவிப்பார்கள் என்று அது கூறவில்லை - பலர் அனுபவிப்பார்கள்!**”

ஆனால் அதைத் தொடர்ந்து, மணி எழுதிய பிப்ரவரி குடும்பக் கடிதம் மூலம் செய்தி வழங்கப்பட்டபோது, கடைசி வரி இவ்வாறு மாற்றப்பட்டது: “**...என்னுடன் வாழ்ந்தாலும் அல்லது என்னை விட்டு விலகி இருந்தாலும், எனது நெருங்கிய அன்பர்கள் அனைவரும், இறுதியில், எனது தெய்வீகத்தை அனுபவிப்பார்கள்.**”

பாபா தமது அன்பர்களுக்கு ஆன்மீகப் பாதையின் அனுபவங்களை அரிதாகவே வழங்கியதாக ஒருமுறை விளக்கினார். தரையில் வைக்கப்பட்ட எரிந்துகொண்டிருக்கும் மண்ணெண்ணெய் விளக்கின் உருவகத்தைக் கொடுத்து, அவர் விளக்கினார்: “**அறை முழுவதும் விளக்கின் ஒளி வீசும்போது, அதன் அடிவாரத்திற்கு அருகாமையில் வட்டம் இருள் நிறைந்த நிழலாக இருக்கும். நான் எனது நெருங்கிய வட்டத்து உறுப்பினர்களுக்கு, கொடுக்க வேண்டியதைக் கொடுக்கும்போது, அது உண்மையான ஒன்றாக இருக்கும்.**”

மேலும் 1967 பிப்ரவரி 5 அன்று, வாழ்நாள் சுற்றறிக்கை எண். 64 மூலமாக பின்வரும் பாபாவின் பிறந்தநாள் செய்தியை ஆதி அனுப்பினார்:

**1967 பிப்ரவரி 25 அன்று, மெஹர் பாபாவின் 73ஆவது பிறந்தநாளை அந்தந்த இடங்களில் கொண்டாட, அவர் தமது அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அனுமதிக்கிறார். பாபாவின் பிறந்தநாளைக் கொண்டாட விரும்புவோர், அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து, அவதார புருஷருக்கு உகந்த வகையில் பிறந்தநாளைக் கொண்டாட வேண்டும்.**

1967ஆம் ஆண்டுக்கான மெஹர் பாபாவின் பிறந்தநாள் செய்தி:

**பிறப்பு, இறப்பு இரண்டும் மாயையின் நிகழ்வுகள். பிறப்பு, இறப்பு இரண்டிற்கும் அப்பாற்பட்ட இறைவனாக, நித்தியமானவராக, வாழப் பிறக்கும்போது ஒருவர் உண்மையான இறப்பை சந்திக்கிறார்.**

சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**மிகவும் உன்னிப்பாக கவனிக்கவும்: அவதார் மெஹர் பாபா, பூனாவில் 1967 ஏப்ரல் 1 முதல் ஜூன் இறுதி வரை இருப்பார். வழக்கம் போல, பாபா குருபிரசாத், 24 பந்த் கார்டன் சாலை, பூனா-1 என்ற முகவரியில் தங்குவார்.**

**1967 இறுதி வரை அவர் முற்றிலும் இடையூறு இல்லாமல் இருக்க விரும்புவதாக அவரது அன்பர்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்று பாபா விரும்புகிறார். அவர் தனது அன்பர்களுக்கு தரிசனம் வழங்கமாட்டார், 1967க்குப் பிறகு பார்வையாளர்களை சந்திக்க மாட்டார்.**

**1967க்குப் பிறகு, பாபா தமது அன்பர்களுக்கு, எப்போது தரிசனம் வழங்குவார் என்பதை அவரே அறிவிப்பார். எனவே, பாபாவின் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர், அவர் தமது அன்பர்களிடம் அவர்களாகவே தரிசனத்திற்காக வரக்கூடாது என்று விரும்புகிறார்.**

**பூனா குருபிரசாத்தில் மூன்று மாதங்கள் (1967 ஏப்ரல் முதல் ஜூன் வரை) தங்கியிருக்கும் காலகட்டத்தில், பாபா யார் ஒருவரை அழைத்தாலும் அல்லது குறிப்பாக தனது பணி நிமித்தம் அழைக்க நேர்ந்தாலும் அவர்களை மட்டுமே சந்திப்பார்.**

யோகி ஷுத்தானந்த் பாரதி, தமிழ் மொழியில் 'மெஹர் மஹிமா' (MEHER MAHIMA, மெஹரின் மகிமை) என்ற புத்தகத்தை எழுதினார். அதற்கு, பிப்ரவரி 6 அன்று பாபா இந்தச் செய்தியை வழங்கினார்:

**இந்தக் குழப்பம் நிறைந்த கலியுகத்தில், எனது செய்தி என்னவெனில்: எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக் கொண்டு, எல்லா வகையிலும் 100 சதவீதம் நேர்மையாக இருக்க வேண்டும்; ஏனெனில் கடவுள் எல்லையற்ற ஆற்றல், ஞானம் மற்றும் பேரின்பம் தவிர, எல்லையற்ற நேர்மையும் மிக்கவர்; எனவே, எல்லாவற்றிலும் நேர்மையாக இருப்பதன் மூலம், நீங்கள் கடவுளை நேசிக்க வேண்டிய விதத்தில் நேர்மையாக நேசிக்க முடியும்.**

பிப்ரவரி 6 அன்று, அர்னவாஸ், கேட்டி, ரோடா, கோர்ஷெத் ஆகியோர் மும்பையிலிருந்து மெஹராஸாத்தில் நான்கு நாட்கள் தங்குவதற்காக அழைக்கப்பட்டனர். சகன் தொடர்ந்து பாபாவிற்கு உணவு அனுப்பிக் கொண்டிருந்தார். பிப்ரவரி 9ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அவர் அழைக்கப்பட்ட வேளையில், பாபாவின் பிறந்தநாள் நிகழ்ச்சி குறித்து விவாதிக்கப்பட்டது. டாக்டர் டான், ஆதி இருவரும் பிப்ரவரி 12ஆம் தேதி பாபாவை சந்தித்து, டான் மீண்டும் இங்கிலாந்து செல்வது குறித்து ஆலோசனை நிகழ்த்தினர்.

மேற்கத்திய அன்பர்களுக்கான 1965 டிசம்பர் சகவாசத்தை பாபா ரத்து செய்வதற்கு முன்னர், ஆஸ்திரேலியாவில் வாழும் பில் லெ பாஜுக்கு (BILL LE PAGE), '**சகவாசத்தைத் தொடர்ந்து மேலும் ஏழு நாட்கள் அவர் இந்தியாவில் தங்க அனுமதிக்கப்படுவார்**' என்று கடிதம் அனுப்பியிருந்தார். சகவாசம் ரத்து செய்யப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு, பாபா மீண்டும் எழுதினார், '**வாக்குறுதி வழங்கப்பட்டதற்கு இணங்க, ஏழு நாட்களுக்கான வாய்ப்பு இல்லாமல் போனதால், அதற்கு பதிலாக அவருக்கு பதினான்கு நாட்கள் அவகாசம்**

**அளித்து**, **1967 பிப்ரவரி மாதத்தில் பில் இந்தியாவிற்கு வர வேண்டும்**' என்ற செய்தி தெரிவிக்கப்பட்டது.

பில் இந்தியாவிற்கு விமானத்தில் விரைந்தார்; டாக்டர் டான் பிப்ரவரி 16 வியாழன் அன்று பூனாவில் அவரை சந்தித்து, மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். ஃபிரான்சிஸின் அறையை ஒட்டிய அறையில் (மண்டலி மண்டபத்திற்கு எதிரே அமைந்த குடிலில்) அவர் தங்க வைக்கப்பட்டார். பைதூல் குடிலின் மறுபுறத்தில் அமைந்த சிறிய அறையில் தங்கியிருந்தார். மறுநாள் காலை, பில்லின் உடல்நலம் மற்றும் குடும்பத்தைப் பற்றி விசாரித்து, பாபா, "**எப்படித் தூங்கினீர்கள்?**" என வினவினார்.

பில் நன்றாக தூங்கியதாக பதிலளித்தார். பாபா குழப்பத்துடன் அவரை பார்த்து, நகைச்சுவையான தொனியில் கருத்துத் தெரிவித்தார், "**இது நான் சிறுவனாகக் கற்றுக்கொண்ட கவிதை 'தி சார்ஜ் ஆஃப் தி நைட் பிரிகேட்**' (THE CHARGE OF THE NIGHT BRIGADE) **நினைவுக்கு வருகிறது - எனது வலதுபுறம் பீரங்கிகள், எனது இடதுபுறம் பீரங்கிகள்! நீங்கள் எப்படித் தூங்க முடியும்? ஃபிரான்சிஸ் ஒருபுறமும், பைதூல் மறுபுறமும்? ஃபிரான்சிஸ் தூக்கத்தில் புலம்புகிறார், பைதூல் குறட்டை விடுகிறார்!**"

ஜான் புரூஃபோர்ட் (JOHN BRUFORD) அவரது குடும்பத்துடன் 'அவதாரின் உறைவிடத்தில்' (AVATAR'S ABODE) வாழ்ந்து வந்தார், 1930 ஆண்டுகளில் இருவரும் கல்லூரியில் கலை பட்டத்திற்காக பயின்று வந்தபோது, ஃபிரான்சிஸ் பிராபஸோனை முதலில் சந்தித்தார். புரூஃபோர்ட் ஒரு சிறந்த மாணவராக இருந்தார், ஆனால் கலை மீது அவருக்கு கருத்தூன்றிய ஆர்வம் இல்லாததால் கலைக் கல்வியை கைவிட்டார். ப்ரூஃபோர்ட் 1956இல் பாபாவை முதன்முதலில் சந்தித்தார், மேலும் 1960 ஆண்டுகளின் முற்பகுதியில், பாபாவுடனான தொடர்பில் அவருடைய பங்களிப்பாக கலைத் திறனில் ஏதேனும் இருப்பதை உணர்ந்து, அவர் பாபாவின் முகத்தையும் தலையையும் வரைந்து, உருவமைக்கத் தொடங்கினார்.

இந்தியாவுக்கான இந்தப் பயணத்தின்போது, பாபாவை சித்தரிப்பதில் அவரது முனைப்பை வெளிப்படுத்தும் வகையில், ஜான் புரூஃபோர்டின் கைவண்ணத்தில் உருவான 'பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்' (PLASTER OF PARIS) தலை வடிவத்தை பில் தன்னுடன் கொண்டு வந்திருந்தார். பாபா அவரது முயற்சியைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்; மேலும் '**ப்ரூஃபோர்ட் அவரை உண்மையிலேயே கையகப்படுத்தியுள்ளார்**' என்று குறிப்பிட்டார். அவர் கருத்துத் தெரிவிக்கையில், "**உலகிலுள்ள ஒவ்வொரு மையமும் எனது நகலை வைத்திருக்க விரும்புகிறது**."

1967 பிப்ரவரி 22 அன்று, ஜான் புரூஃபோர்டுக்கு பாபா, கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்; "**பரிபூரணமானவனாகிய நான், உங்கள் பரிபூரண முயற்சியில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்**." அதற்குப் பிறகு பாபா, '**அவதாரின் உறைவிடத்தில்' விவசாயம் செய்வதை நிறுத்திவிட்டு**,

**அவரது கலைப் பணிகளில் முழு நேரத்தையும் அர்ப்பணிக்குமாறு** புரூஃபோர்டுக்கு அறிவுறுத்தினார்.

பில் லெ பாஜ் இந்தியா வந்த வேளையில், பாபாவின் உடல்நிலை சீரில்லாத போதும் 'அவதாரின் உறைவிடத்தின்' (AVATAR'S ABODE) வளர்ச்சிக்கான திட்டங்களை அவருடன் விவாதிக்க ஒவ்வொரு காலையிலும் பாபா, மண்டலி மண்டபத்திற்கு வருகை தந்தார். பில் இவ்வாறு விவரித்தார்:

அன்பிற்குரிய பாபா அனுபவித்த அளவிலா துன்பங்கள் மற்றும் அந்த பதினான்கு நாட்களில் 'அவதாரின் உறைவிடம்' (AVATAR'S ABODE) தொடர்பான விஷயங்களில் அவருடைய ஒருமித்த கவனம் - இவற்றைப் பற்றிய எனது மனதில் பதிந்த சித்திரத்தை, வார்த்தைகளில் வெளிப்படுத்துவது சாத்தியமற்றது இல்லையென்றாலும் கடினம்.

மிகக் கடுமையான வலி மற்றும் உடல்நலம் குன்றி காணப்பட்டாலும், இரவில் 104° ஜுரத்தால் அவதியுற்று, மண்டலி மண்டபத்தில் இருந்த வேளையில் கழுத்துப்பட்டையை அணிந்து, அவரது இடுப்புப் பாகத்தின் அசௌகரியத்தை போக்க நாற்காலியில் ஒரு மெல்லணையை வைப்பதும், பின்னர் அதை அகற்றுவதும், தொடர்ந்து நடந்து வந்த நிலையிலும் - பாபா 'அவதாரின் உறைவிடம்' (AVATAR'S ABODE) குறித்து விவாதிக்க, ஒவ்வொரு நாளும் மண்டலி மண்டபத்திற்கு வந்து, அவரது உறைவிடத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை தெளிவுபடுத்தினார். ஒவ்வொரு நாளும் அவர் இரவில் நினைவில் கொள்ளும் விஷயங்களையும், சொத்து தொடர்பான அவரது விருப்பங்களில் அவர் இணைக்க விரும்புவதையும், எரச், ஃபிரான்சிஸ், நான் மூவரும் ஒவ்வொரு மாலையும் குறிப்பெடுத்துக் கொண்டோம்.

பாபா துன்பப்படுவது குறித்த அவருடைய தோற்றம், அதனால் எனது மனதில் பதிந்த சித்திரம், அவர் தனது விருப்பங்களை வெளிப்படுத்திய விதம், அவர் வலியுறுத்திய விஷயங்கள், அவருடைய வார்த்தைகளின் அழுத்தமான சக்தியின் நினைவுகள் ஆகியவை எனது மனதிலும் இதயத்திலும் அழியாமல் பதிந்துள்ளன.

ஒரு நாள், மண்டலி மண்டபத்திற்கும் பிரதான இல்லத்திற்கும் இடையே, பாபாவை தூக்கு நாற்காலியில் தாங்கிக்கொண்டு பில் நடந்து சென்றபோது, பாபா, அவருடைய உடல் நிலை குறித்து பில் லெ பாஜின் துயரத்திற்கு பதிலளிக்கும் விதமாக, "**நினைவில் கொள்ளுங்கள்**, **நான் 100 சதவீதம் கடவுள்**" என்று குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து` இரண்டாவது முறையும், "**நினைவில் கொள்ளுங்கள்**, **நான் 100 சதவீதம் கடவுள்**" என்று திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார்.

மண்டலி மண்டபத்தில் அமர்ந்திருந்த வேளைகளில், ஃபிரான்சிஸ், பில் இருவருக்கும் ஒரு இடைவேளை தேவை என்பதை உணர்ந்து அல்லது பாபா அவராகவே கழிவு கொள்கலனை பயன்படுத்தும் தூண்டுதலை உணரும் நேரத்தில் புகைப்பிடிப்பதற்காக இருவரையும் வெளியே செல்லுமாறு சைகையால் தெரிவிப்பது வழக்கம். ஃபிரான்சிஸ் அடிக்கடி சிறுநீர் கழிக்க

வெளியே செல்வதுண்டு, அதை கவனித்த பாபா, ஒருமுறை அவர் வெளியே சென்றபோது, "**ஃபிரான்சிஸ் எப்பொழுதும் கழிப்பறைக்குச் செல்கிறார். அவருக்கு அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும்**" என்று கூறினார். பாபா, பில் பக்கம் திரும்பி, "**ஆம், நீங்கள் ஃபிரான்சிஸை மிகவும் நேசிக்கிறீர்கள், அவரும் உங்களை மிகவும் நேசிக்கிறார் - ஆனால் நீங்கள் ஒருவரையொருவர் நேசிப்பதை விட நான் உங்கள் இருவரையும் மிகவும் நேசிக்கிறேன்**" என்று குறிப்பிட்டார்.

பாபாவைப் பற்றி அறிந்த நாளிலிருந்து, பில் லெ பாஜை ஃபிரான்சிஸ் பிராபஸோனுடன் இணைத்து, பாபா இருவரையும் "**எனது வலது கரம்**" என்று குறிப்பிட்டார். 1956ஆம் ஆண்டு, பாபா முதன்முதலில் இதை வெளிப்படுத்திய போது, "**ராபர்ட் ரவுஸ்** (ROBERT ROUSE) **ஃபிரான்சிஸின் இடது கரம்**" என்றும் தெரிவித்தார். 1967இல் பில் லெ பாஜின் இந்த வருகையின் போது, பாபா அந்த உத்தரவைத் தளர்த்தி, '**ஃபிரான்சிஸ் ஆஸ்திரேலியாவில் பணிபுரிய வேண்டும் என்ற கட்டாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும், பாபாவும், பில்லும் பிணைக்கப்பட்டு, ஆஸ்திரேலியா இருவருக்கும்** (பாபா, பில்) **இடையே உள்ளதாகவும்**' எடுத்துரைத்தார்.

பாபா இவ்வாறு அறிவுறுத்தினார்: "**ஃபிரான்சிஸ் 'அவதாரின் உறைவிடத்தை**' (AVATAR'S ABODE) **பில் லெ பாஜின் பெயருக்கு மாற்றும் தருணத்தில், பில் நேரம் கனியும் போது, ஒரு அறக்கட்டளையை உருவாக்கி, அவர் தலைவராக இருந்து அந்த இடத்தை அதன் பெயருக்கு மாற்றுவார்.**

**'அவதாரின் உறைவிடத்தை' உலகளவில் அறியச் செய்வதே பில்லின் நோக்கமாக இருக்கும், ஏனெனில் இது உலகின் சிறந்த புனித யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றாக உருவாக வேண்டும். இது பில்லின் தோள்களில் பாபாவால் சுமத்தப்படும் பெரும் சுமையாகும், மேலும் 'பல கரங்களுடன் ஒரே இதயமாக' அவருக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவது பாபாவை நேசிக்கும் அனைவரின் பொறுப்பாகும்.**"

ஃபிரான்சிஸ், பில் இருவரையும் பாபா அறங்காவலர்களாக (TRUSTEES) நியமித்தார், மேலும் அவர்களுடன் மூன்று பாபா-அன்பர்களையும் தேர்ந்தெடுக்கும்படி கூறினார். ராபர்ட் ரவுஸ் (ROBERT ROUSE), ரெக் பாஃபெல் (REG PAFFLE) மற்றும் ஜான் ப்ரூஃபோர்ட் (JOHN BRUFORD) ஆகியோரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டு, பாபா அவர்களின் தேர்வுக்கு ஒப்புதல் அளித்தார்.

பாபா மேலும் விளக்கினார்: "**பாபாவின் பணியில் எந்தத் தனிப்பட்ட ஆளுமைகளும் இருக்கக்கூடாது. பாபா ஒருவரே அவரது பணியைச் செய்கிறார், ஆனால் இந்த நபரையோ, அந்த நபரையோ அல்லது எந்த நபரையும் தமது பணியில் பயன்படுத்துவது அவருக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இப்போது 'அவதாரின் உறைவிடத்தின்'** (AVATAR'S ABODE) **வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது, அது பில்லின் பொறுப்பில் இருப்பதால் அவர் அதை நேரடியாக இயக்க வேண்டும். மேலும் ஜான்** (ப்ரூஃபோர்ட்) **மற்றும் பிறர் பில்லுக்கு முழு மனதுடன் ஒத்துழைப்பு வழங்க**

**வேண்டும் என்றும், அந்த இடத்தின் வளர்ச்சியில் அவரது வழிகாட்டுதலின் கீழ் செயல்பட வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார். அவ்வாறு செய்யும்போது, அவர்கள் ஆஸ்திரேலியாவில் பாபாவின் பணியில் நேரடியாக ஒத்துழைப்பார்கள்.**"

பாபா, பில்லிடம், "**உங்களுக்கு எப்போதேனும் பணம் தேவைப்பட்டால் என்னிடம் வாருங்கள், நான் பார்த்துக் கொள்கிறேன்**" என்று கூறினார்.

'அவதாரின் உறைவிடத்தை'த் தவிர, இந்த நேரத்தில் மீண்டும் மீண்டும் விவாதிக்கப்படும் மற்றுமொரு தலைப்பு, எதிர்வரும் தேர்தலில் அமர் ஸிங் ஸைகல் (AMAR SINGH SAIGAL) இந்திய நாடாளுமன்றத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவாரா, இல்லையா என்பதுதான். ஸைகல் தேர்தலில் பங்கெடுக்க விரும்பாமல் பாபாவிடம், "உங்களது செய்தியைப் பரப்பவும், யுகத்தின் அவதார புருஷரைப் பற்றி மக்களுக்குச் சொல்லவும், எனது வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு சேவை செய்வதிலும், இந்தியா முழுவதும் பயணம் மேற்கொள்வதிலும் அர்ப்பணிக்க விரும்புகிறேன்" என்று கூறினார். அவர் கூறியதற்கு பாபா செவிமடுத்தாலும், ஸைகலை மீண்டும் தேர்தலில் நிற்கும்படி கட்டளையிட்டார்.

அவரது பிரச்சாரம் குறித்து, பாபா மண்டலியிடம் கருத்துக் கூறுவது அவ்வப்போது நடந்து வந்தது: "**அவரிடம் பணம் இல்லை. அவர் நேர்மையானவர் என்பது உங்களுக்குத் தெரியும், நான் அவரை நேர்மையாக இருக்கச் சொன்னேன். அவர் நேர்மையாக இருப்பதானால் மட்டுமே அவரை நாடாளுமன்றத்தில் பங்கெடுக்குமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். எனவே அவரால் எப்படி முடியும். தன்னிடம் பணம் இல்லாத நிலையில், பிற அனைவரும் பைத்தியம் பிடித்தவர்கள் போல, வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்துச் செல்வதற்காக செலவு செய்யும் நிலையில், ஸைகல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவாரா?**"

தேர்தல் நாளன்று, ஒரு கட்டத்தில் வாக்கு எண்ணிக்கையின் போது, அமர் ஸைகல் 20,000 வாக்குகளுக்கு மேல் பின்தங்கியிருந்த நிலையில், அவரது தோல்வி உறுதியானது. பாபா அவருக்குத் தொலைத்தந்தி மூலமாகக் கூறினார்: "**மனித சாம்ராஜ்ஜியங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியை யார் ஒருவருடைய கைகளில் வைத்திருக்கிறாரோ, அந்த ஆதிகால புருஷரின் இதயத்தை நீங்கள் வென்றதன் விளைவு என்னவாக இருக்கும் என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம்.**"

பெண்டு தனது அறையில் ரேடியோவில் தேர்தல் முடிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் தேர்தல் முடிவைக் குறித்து உற்சாகத்தில், அமர் ஸைகல் வெற்றிபெற உதவுமாறு பாபாவிடம் வலியுறுத்திக் கூறினார். இறுதி வாக்கு எண்ணிக்கை அறிவிக்கப்பட்டபோது, ஸைகல் 1,000 வாக்குகள் வித்தியாசத்தில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாபாவின் 73ஆவது பிறந்தநாள், 1967 பிப்ரவரி 25 சனிக்கிழமை அன்று கொண்டாடப்பட்டது. காலை ஐந்து மணியளவில் ஆண் மண்டலி, மண்டபத்தில் பாபாவின் நாற்காலியை நோக்கி நின்று “அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!” என ஏழு முறையும், அதே போல பெண்மணிகள் அவருடைய படுக்கையறையில் அவருக்கு முன் நின்றும் வாழ்த்தினர்.

பாபா, அலங்காரம் செய்யப்பட்ட மண்டபத்திற்கு வந்ததும், ஒவ்வொருவரையும் ஆரத் தழுவி, லெ பாஜிடம் முணுமுணுத்தார், “**எனக்குப் பிறந்தநாள் என்றால் நான் அதிகாலையில் எழுந்து, முகத்தையும் கையையும் சுத்தம் செய்ய வேண்டும். எனக்கு இது மிகவும் சிரமமாக உள்ளது**!”

பில்லின் மகள்களான ஜென்னி (JENNY), ருத்தி (RUTHIE) இருவரும் பாபாவுக்காகப் பாடிய இசைத்தட்டு இசைக்கப்பட்டது. இந்த நிகழ்விற்காக ஃபிரான்சிஸ் எழுதிய கவிதையை அவர் வாசித்தார், மேலும் பாவ் கல்சூரி ஹிந்தியில் ஆரத்தியையும் (‘ஆதி ஸச்சேதன..’ என தொடங்கும் - அர்த்தம், ஆதிகால உணர்வு) மொழிந்தார்.

அலங்காரம் செய்யப்பட்ட மண்டலி மண்டபத்தில், பணியாட்கள் பாபாவின் இருக்கைக்கு மேலே ஒரு பெரிய பலூனைத் தொங்கவிட்டிருந்தனர். பாபா அமர்ந்த பின்பு, பில் பலூனை வெடிக்கச் செய்தபோது, ரோஜா இதழ்களின் லேசான மழை பாபா மீது பொழிந்தது. பாபாவிற்கு வந்த தொலைத்தந்திகள் மற்றும் பிறந்தநாள் வாழ்த்துக்களை வாசிப்பதில் காலை நேரம் மகிழ்ச்சியாகக் கழிந்தது, பாபா இடையிடையே கடிதத்திற்கான பதில்களையும் எடுத்துரைத்தார்.

ஒவ்வோர் ஆண்டும், இந்தியா மற்றும் உலகம் முழுவதும், புதிய அன்பர்களும், புதிய மையங்களும் உருவாகி வருவதால், பாபாவின் பிறந்தநாள் விழாக்கள் மிகவும் விமரிசையாக நடந்தது. அஹமதுநகரில், அந்த நேரத்தில் நகரத்தின் மேயராக இருந்த ஸரோஷ், திறந்த ஜீப் ஒன்றில் பாபாவின் பெரிய சித்திரத்துடன் ஊர் முழுவதும் ஊர்வலம் செல்ல வேண்டும் என்ற யோசனையுடன் பாபாவை அணுகினார், பாபா அவரது சம்மதத்தை வழங்கினார். பிப்ரவரி 25ஆம் தேதி முக்கிய நிகழ்வின் முன்னோடியாக பல்வேறு இடங்களில் கீர்த்தனை நிகழ்ச்சிகள் முழு வாரமும் நடைபெற்றது.

அணிவகுப்பைப் பார்வையிட பில் லெ பாஜ் அஹமதுநகருக்குள் அன்றைய தினம் அழைத்துச் செல்லப்பட்டார். அரை மைல் நீளத்தில் அணிவகுப்பு மாலை 5:00 மணிக்கு தொடங்கி, ஐந்தரை மணி நேரம் நீடித்தது. பக்தர்கள் அவதார புருஷரின் துதிகளைப் பாடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தபோது, இசைக்குழுக்கள் முன்னின்று வழி நடத்தின. ஜீப் ஒரு படகைப் போல அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது, மேலும் பாபாவின் பெரிய மலர் மாலை அணிவிக்கப்பட்ட சித்திரம் அனைவரின் முக்கிய கவனத்தை ஈர்த்தது. மக்கள் வீட்டின் மேல் அமர்ந்து, பாபாவின் சித்திரத்தின் மீது மலர்களைத் தூவினர், வாணவேடிக்கைகள் வழியில் பல்வேறு இடங்களில் வெடிக்கப்பட்டது. கொல்கத்தாவைச் சேர்ந்த டாக்டர் ஹீரா லால் சோப்ரா (DR. HIRA LAL CHOPRA)

மீண்டும் அந்த ஆண்டு அஹமதுநகர் மையத்தில் சிறப்பு உரையாளராகப் பங்கேற்றார், மேலும் அவர் பதினைந்து நிமிடங்கள் மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தார்.

பிற மையங்களும் அவதார புருஷர் பற்றிய பொதுக் கூட்டங்கள், ஏழைகளுக்கு உணவளித்தல் மற்றும் திரைப்படக் காட்சிகள் ஆகியவற்றிற்கான நிதியுதவிகளை வழங்கின. ஹைதராபாத்தில், ஆதிகால புருஷரின் 73ஆவது ஆண்டு நிறைவு விழாவாக 73 நாட்கள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. காலம் அவதானித்தது போல், “ஏகாந்தவாசம் மேற்கொண்டாலும், பாபா அவரது இதயத்தின் கதவுகளை அகலமாகத் திறந்து வைத்திருந்தார், அதன் மூலம் தொடர்ந்து தெய்வீக மதுபானத்தின் நதிகள் ஓடுகின்றன! அவரது அன்பர்களின் இதயங்களில், அவரது நினைவின் சுடர் பிரகாசமாக ஒளிர்ந்தது!”

மர்டில் பீச் மற்றும் பிற இடங்களில் வாழும் அன்பர்களுக்கு பாபா தொலைத்தந்தி அனுப்பினார்:

**உங்கள் மத்தியில் நான் இருப்பதைக் கொண்டாடும் விதத்தில், எனது பிறந்தநாளில் ஒன்றுகூடும் அனைவருடனும் நான் இருப்பேன். என் அன்பர்கள் எங்கிருந்தாலும் நான் அங்கு இருக்கிறேன். என் அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் எனது அன்பையும், ஆசிகளைகளையும் வழங்குகிறேன்.**

மும்பையில் வாழும் டாக்டர் ராம் கிண்டேக்கு 1967 பிப்ரவரி 24 அன்று தொலைத்தந்தி ஒன்று அனுப்பப்பட்டது:

**என் மீதான உங்கள் அன்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. எனது பிறந்தநாளை சிறப்பிக்க ஒன்று கூடியிருக்கும் அனைவரின் இதயங்களையும், என் அன்பின் பெருங்கடல் நிரப்ப உள்ளது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் என் அன்பும் ஆசிகளும்.**

இந்த சிறப்புச் செய்தி நவ்ஷேர்வான் நலவாலாவின் ‘தி க்ளோ’ (THE GLOW, 1966 டிசம்பர் 19 அன்று வெளியிடப்பட்ட) பத்திரிகைக்காக அனுப்பப்பட்டது:

**நான் இறை அன்பின் மொத்த ரூபமாக இருப்பதால் என்னை நேசிப்பது எளிது. ஆனால் என்னை வந்தடையத் தேவையான அந்த அன்பினால் என்னை நேசிப்பது கடினம்.**

நியூயார்க் நகரில், ‘தி ஸொஸைட்டி ஃபார் அவதார் மெஹர் பாபா’ (THE SOCIETY FOR AVATAR MEHER BABA) மற்றும் அதன் தலைவர் ஹாரி கென்மோர் ஆகியோரின் சார்பில், ‘பார்பிஸோன் பிளாஸா’ ஹோட்டலில் (BARBIZON PLAZA HOTEL) இரண்டு மணி நேர பொது நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த சந்தர்ப்பத்தில் பாபா, டாக்டர் கென்மோருக்கு, கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**நியூயார்க் நகரில் நிகழும் எனது பிறந்தநாள் விழாக்களில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வோர் ஆண்டும் நியூயார்க் நகரில் இந்த நிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என்ற எனது விருப்பத்தை நீங்கள் நிறைவேற்றுவதை சாத்தியமாக்கி, எனது பிறந்தநாள் மற்றும்**

**மௌன தின விழாக்களுக்கு, தன்னலமின்றி பங்களிக்கும் அனைவருக்கும் எனது அன்பை இத்துடன் அனுப்புகிறேன்.**

அடுத்த நாள், உலகம் முழுவதும் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒலிபரப்பு செய்ய 'ரேடியோ நியூயார்க் வேர்ல்டுவைடு' (RADIO NEW YORK WORLDWIDE) நிறுவனத்துடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஹாரி கென்மோர் பிப்ரவரி 21 அன்று அனுப்பிய தொலைத்தந்தி மூலம் பாபாவிற்கு இதைத் தெரிவித்தார்:

பாபா, உங்களுக்கு மிகப்பெரிய ஆச்சரியம் ஒன்று காத்திருக்கிறது. பிப்ரவரி 24 வெள்ளிக்கிழமை மாலை, நியூயார்க்கின் 'டபிள்யூ.என்.ஒய்.டபிள்யூ' (WNYW) வானொலியின் மூலம் 125 நாடுகளுக்கு, இரண்டு மணிநேர பிறந்தநாள் விழா நிகழ்ச்சியின் குறுகிய அலை ஒலிபரப்பு, பிப்ரவரி 26 ஞாயிற்றுக்கிழமை கிரீன்விச் நேரப்படி, மாலை 2:00 - 4:00 மணிக்கு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. உலகளவில் இந்த நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவதில் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். உள்நாட்டில் அகில இந்திய வானொலி (ALL INDIA RADIO) மூலம் ஒலிபரப்ப முயற்சிக்கவும். முழுமையான கடிதம் இன்று அனுப்பப்பட்டது. அன்பான 'பாப்' (POP), உங்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

அன்புடன், ஹல்லேலூயா,
ஹாரி.

அதற்கு பதிலளிக்கும் விதத்தில், ஹாரி கென்மோருக்கு 1967 பிப்ரவரி 22 அன்று பாபா தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார்:

**நான் எனது தொப்பியை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கிறேன். நீங்களும் எனது தாமனை அதே உறுதித் தன்மையுடன் பற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நியூயார்க் பிறந்தநாள் நிகழ்ச்சி குறித்த உங்கள் தொலைத்தந்தி என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது. என் அன்பு மகனே, உங்களுக்கும், எனது பிறந்தநாளை சிறப்பிக்க ஒன்றுதிரண்ட அனைவருக்கும் என் அன்பும் ஆசிகளும். உங்களுக்கே உரித்தான என் அன்பின் கடல் உங்கள் இதயங்களை நிரப்ப உள்ளது.**

இந்தியாவில் ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சி, மெஹராஸாத்தில் பாபா மற்றும் மண்டலி குழுவினரால் கேட்கப்பட்டது. இதுபோன்ற பொறுப்பாளர்கள் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவரது 73ஆவது பிறந்தநாளுக்கு உலகம் முழுவதும் அவதார புருஷரின் பெயரையும் அவரது செய்தியையும் ஒலிபரப்பும் தனித்துவமான நன்மதிப்பைப் பெற்றனர்.

உண்மையில், ஏற்கனவே குறிப்பிட்டபடி, மெஹர் பாபாவே மெஹராஸாத்தில் தனிமையில் அமர்ந்து, ஏகாந்தவாசம் மேற்கொண்ட காலகட்டத்தில், அவரது பெயரின் மீதான ஆர்வமும் பரிச்சயமும் வேகமாக, குறிப்பாக அமெரிக்காவில் அதிகரித்து வந்தது. பாபாவை இதுகாறும் பார்க்காதவர்களும் செயல் ஈடுபாடு மிக்க சேவகர்களாக மாறினர். அலன் கோஹென், மணிக்கு எழுதிய கடிதத்தில் கூறியதற்கு இணங்க; "சந்தேகத்திற்கு இடமின்றி, அமெரிக்காவில் பாபாவின் செயல்வேகம் பிரமாதமாக அதிகரித்து

வருகிறது - அன்பிற்குரியவரின் 'வார்த்தை' என்னவென்று தெரியாமல் ஏங்கிக்கொண்டிருந்த பலரின் இதயங்களை அது தூண்டியது. அவர் பக்குவமடைந்த ஆன்மாக்களை அன்பு, உத்வேகம் எனும் பண்டைக்கால கருவிகளால் அறுவடை செய்வது போலத் தெரிகிறது!"

உலகம் முழுவதும் பாபாவின் நினைவின் சுடர், அவரது மையங்கள் மற்றும் அன்பர்கள் மூலம் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது; மேலும் அதிலிருந்து தங்கள் சுய தீபங்களும் எரிவதை பிறர் பார்த்தனர். இதுவே பாபாவின் தெய்வீகப் பணியாகும், அவர் ஒரே இடத்தில் இருக்கும் அதே வேளையில், எல்லா இடங்களிலும் பணிபுரிந்து வருகிறார். ஒருமுறை பாபா குறிப்பிட்டார், **"என் அன்பர்கள் எனது வெளியளவிலான வேலைகளின் ஊடகம், இது நான் செய்யும் உள் வேலையின் விளைவாகும்."** அவரது அன்பர்களும் ஆர்வலர்களும் அவரது தரிசனத்திற்காக ஏங்கித் தவித்ததால், பாபா அவரது ஏகாந்தவாசத்தை நீட்டித்துக் கொண்டே இருந்த வேளையில், அவர்களின் தாகம் மேலும் மேலும் தீவிரமடைந்தது!

1967 மார்ச் 1 அன்று டாக்டர் டான் மெஹராஸாத்தில் இரவைக் கழித்து, மறுநாள் காலையில் அவர் பில் லெ பாஜ், ஃபிரான்சிஸ் இருவரையும் எல்லோரா குகைகளுக்கு அழைத்துச் சென்றார், அன்றிரவு பில் அஹமதுநகரிலிருந்து மும்பைக்குப் புறப்பட்டார்.

மெஹராஸாத்தை விட்டு வெளியேறிய வேளையில் பில் லெ பாஜை பாபா தழுவவில்லை, மேலும் அவர் வெளியேறியது, ஏதோ ஒரு சிறிய பணி நிமித்தம், குறுகிய நேரத்திற்காக, அறையை விட்டு வெளியேறுவது போல் உணர்ந்ததாக பில் பின்பு விவரித்தார். பில் அவரது எஞ்சிய வாழ்நாளில் மெஹர் பாபாவை மீண்டும் பார்க்கவில்லை என்றாலும், அந்தப் பிரியாவிடையின் அனுபவம், அவதார புருஷரின் அடுத்த வருகையின் போது, மீண்டும் அவருடன் இருப்பார் என்ற உறுதியை அவருக்கு அளித்தது.

பில் மெஹராஸாத்தில் தங்கியிருந்த போது, பாபா அவரிடம் ஸிட்னி (SYDNEY) நகரிலிருந்து 'அவதாரின் உறைவிடத்திற்கு' (AVATAR'S ABODE) தனது குடும்பத்துடன், வசதிக்கேற்ப கூடிய விரைவில் குடிபெயர அறிவுறுத்தினார். பாபா கூறினார்: **"நான் உங்களுக்கு வழங்கும் பணியில் 100 சதவிகிதம் உங்களை ஈடுபடுத்த விரும்புகிறேன். எனது பெயரையும் செய்தியையும் பரப்புவதற்கான உங்கள் முயற்சிகளில் நீங்கள் மேலும் தீவிரமாக இருக்க வேண்டும், அவதாரின் உறைவிடத்தின் வளர்ச்சியில் உங்கள் முழு இதயத்துடன் பணிபுரிய வேண்டும். அங்கு வேறு எவரேனும் தங்க விரும்பினால், முதலில் உங்கள் அனுமதியைப் பெற வேண்டும். பொது சமூகத்துடன் நல்லுறவை ஏற்படுத்த உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள்."**

1950 ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்து ஆஸ்திரேலியாவில் பாபாவின் பெயரைப் பரப்ப பில் லெ பாஜ் தன்னால் இயன்றவரை முயற்சித்தும், பெரிய

அளவிலான வெற்றியை சந்திக்கவில்லை. பல நாட்கள் பாபா இந்த அறிவுரைகளை திரும்பத் திரும்ப எடுத்துரைத்த பின்னர், அவர் தங்கியிருந்த நாட்களின் இறுதியில், பில் உணர்ச்சி வேகத்துடன் மன்றாடினார், "பாபா, நான் உங்கள் செய்தியைப் பரப்ப முயற்சித்தேன், ஆனால் பலனளிக்கவில்லை! நான் இந்தப் பணிக்கு உகந்தவன் என உணரவில்லை."

பாபா அவரை நிதானமாகப் பார்த்து, **"நான் திறவுகோலைத் திருப்புகிறேன்"** என்று எளிமையாகச் சொல்லிவிட்டு, திறவுகோலைத் திருப்புவது போலக் கையால் சைகை செய்தார்.

பாபாவின் உதவி ஏற்கனவே செயல்படத் தொடங்கிவிட்டதில் பில் லெ பாஜுக்கு எந்த சந்தேகமும் இல்லை! பில் இந்தியாவில் இருந்தபோது, இளைஞன் ஒருவன் ஸிட்னி நகரில் அமைந்த 'மெஹர் ஹவுஸுக்கு' (MEHER HOUSE) வந்து, அவரை சந்தித்து மெஹர் பாபாவைப் பற்றி மேலும் அறிய விரும்பினான். பில் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பி வந்ததும், அந்த இளைஞன் பல நண்பர்களுடன் திரும்பி வந்தான்; மேலும் பல ஆர்வலர்களும் பாபாவைப் பற்றி தெரிந்துகொள்ளும் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்; அதைத் தொடர்ந்த மாதங்களில், வானொலி, தொலைக்காட்சி மற்றும் பொது நிகழ்ச்சிகளில் சொற்பொழிவுகளை வழங்க பில் அழைக்கப்பட்டார். பாபா அவரது வாக்குறுதியை நிறைவேற்றி, பில் மேற்கொண்ட பணிக்கு திடீர் ஊக்க சக்தியாகத் திகழ்ந்தார்.

பாபா தொலைத்தந்தி மூலமாக பில்லிற்கு விளக்கினார்: **"உலகம், ஒன்றும் இல்லாத ஒன்றில் ஒன்றுமே இல்லாதது... மெஹராஸாத்தில் வழங்கப்பட்ட எனது அறிவுரைகளையும், அவ்வப்போது நான் வழங்குவதையும் 100 சதவீதம் நடைமுறைப்படுத்துங்கள். நேரம் வேகமாக நெருங்கி வருகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்; எனவே நான் உங்களிடம் ஒப்படைத்த பணியை, செவ்வனே செய்வதில் எந்த ஒரு தியாகமும் பெரிதாக இருக்காது."**

1967 மார்ச் 6 அன்று, பாபாவை சந்திக்க கைக்கோபாத்தின் குடும்பத்தை பாதிரி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார்; சகனும் ஆதியும் உடன் வந்தனர். 9ஆம் தேதி, ஸரோஷ், டாக்கே, ருஸ்தம் காக்கா, ஆதி ஆகியோரை அழைத்து, பாபா, அவரது அஹமதுநகர் பிறந்தநாள் விழா மற்றும் ஊர்வலத்தில் அவர்கள் எடுத்த முயற்சிகளைப் பாராட்டி ஆசீர்வதித்தார்.

இந்தியாவில் பாபாவின் பெயரைப் பரப்புவதற்கான முயற்சிகளும் முழு வீச்சில் முன்னேறின. மார்ச் 8ஆம் நாள், பூனாவில் வாழும் ஸோமனுக்கு பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"என் மீதான உங்கள் அன்பை பிறருடன் பகிர்ந்து கொள்ளும் உங்கள் முயற்சிகள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. தொடர்ந்து செய்யுங்கள், நீங்கள் எந்த அளவுக்கு அதிகமாகப் பகிர்ந்து கொள்கிறீர்களோ, அந்த அளவுக்கு உங்கள் மகிழ்ச்சியும் வலிமையும் இருக்கும்."**

மார்ச் 9 மஹா ஷிவ்ராத்திரி, இந்து விடுமுறை அன்று, மெஹராஸாத்தில் பாபாவை சந்திக்க டாக்கே அனுமதிக்கப்பட்டார். நரிமன், ஜிம்மி இருவரும் மார்ச் 15 முதல் நான்கு நாட்கள் மெஹராஸாத்தில் தங்கினர். அடுத்த நாள் குடும்ப சாஸ்திரிக்கு ஒரு குறுகிய நேர நேர்காணலுக்கான அனுமதி வழங்கப்பட்டது. அன்று காலை டாக்டர் டானும் பாபாவை சந்தித்தார். மார்ச் 18 அன்று பாதிரி, ஆதி இருவரையும் வரவழைத்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.

'**இந்தியாவில் அனைத்து குழு தலைவர்களுக்கும் ஒரு கடிதம் அனுப்புமாறு பாபா கட்டளையிட்டார்; அவர் அவசரத் தொலைதந்திகள் மற்றும் மிக முக்கியமான கடிதங்களைத் தவிர, வேறு எந்தத் தனிப்பட்ட மற்றும் பாபா-பணி குறித்து அவர் பெயருக்கு நேரடியாக அனுப்பப்படும் அஞ்சல்களிலும் பங்கெடுக்க மாட்டார்; மேலும் அன்பர்களின் தனிப்பட்ட விவகாரங்கள் குறித்து ஆதி அல்லது மண்டலி எவருக்கும் கடிதங்கள் அனுப்ப வேண்டாம்**' என்று திட்டவட்டமாக மீண்டும் எடுத்துரைத்தார். இந்தக் கடிதம் 1967 மார்ச் 20 அன்று அனுப்பப்பட்டது.

குடும்ப சாஸ்திரி, அவரது மகன் பாஸ்கர், ஆதி ஆகியோர் 20ஆம் தேதி காலை பாபாவை ஒரு மணி நேரம் சந்தித்தபோது, சாஸ்திரியின் குடும்ப விஷயங்களை பாபா தீர்த்து வைத்தார்.

டாக்டர் கோஹெரின் தாயார் புற்றுநோயால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்ததால் மும்பையில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட போது, அறுவை சிகிச்சையைத் தொடருமாறு குடும்பத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டது. இதற்கிடையில், ஃபெராம், கோஹெரின் தந்தை ரூஸி பாப் இருவரையும் மார்ச் 23 காலை 9:00 மணிக்கு ருஸ்தம் காக்கா மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். ரூஸி பாப் இல்லத்தில் சில நாட்கள் துணையாக இருந்து அவருடன் தூங்கவும், பகலில் ஆதியின் அலுவலகத்தில் பணிபுரியவும் பாபா, ஃபெராமுக்கு உத்தரவிட்டார். குருபிரசாத்திற்கு செல்வதற்கு முன்பு பாபா அவருக்கு குறிப்பிட்ட அறிவுரைகள் சிலவற்றை வழங்கினார்.

பில் குறிப்பிட்டிருந்தது போல் இந்த நேரத்தில் பாபாவிற்கு உடல்நிலை சீரில்லாமல் இருந்தது. அவர் கழுத்தின் இடது பக்கத்தில் தொடர்ந்து வலியும், 100° ஜுரம் இருப்பதாகவும் புகார் கூறினார். விழுங்கும் வேளையில் தொண்டையில் தொடர்ச்சியான வலியையும் அனுபவித்தார். நோய்த்தொற்றுக்கான நுண்ணுயிர் எதிர்ப்பிகள் கொடுக்கப்பட்டன, ஆனால் அவை சரியாக பலனளிக்கவில்லை. பாபாவை பரிசோதனைக்கு உட்படுத்தவும் மற்றுமொரு சிகிச்சையை பரிந்துரைக்கவும் டாக்டர் டான் அழைக்கப்பட்டார்.

1967 மார்ச் 24 அன்று நவ்ஸாரியிலிருந்து வந்த டாக்டர் ஹோஷங் பரூச்சா, அவரது மணமகள் மைமூனா (MAIMOONA) இருவரையும் ஆதி

மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார். மைமூனா இதுவரை பாபாவை சந்திக்காததால் பாபா, அவர்களை அரை மணி நேர தரிசனத்திற்கு பிரத்யேகமாக அனுமதித்தார். காலை 8:35 மணிக்கு வந்ததும், அவர்களின் உடல்நிலை குறித்த வழக்கமான விசாரணைகளுக்குப் பிறகு, பாபா, மண்டலி மண்டபத்தில் தனியாக முழு நீளமும் நடந்து சென்று இருக்கையில் அமர்ந்தார். "**நான் இவ்வளவு வேகமாக நடப்பேன் என்று மண்டலியில் எவரும் எதிர்பார்க்கவே இல்லை. அதேபோல், 1968இல் என்ன நடக்கும் என்பதையும் மண்டலி எதிர்பார்க்கவில்லை. இதை இப்பொழுது குறிப்பிடுவதில் அதிக அர்த்தமில்லை, ஏனெனில் 1968இல் என்ன கிளர்ச்சி ஏற்பட உள்ளது என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாது**."

அந்த ஆண்டு இந்தியா முழுவதும், ஈரான் மற்றும் நியூயார்க் நகரங்களில் நடந்த பிரமாண்டமான பிறந்தநாள் கொண்டாட்டங்களை பாபா விவரித்தார். "**எனக்கு உடல் ரீதியாக 73 வயதாகிறது, ஆனால் ஆன்மீக ரீதியில் நான், வயதைக் கடந்து, காலத்தை வென்றவன்**" என்று அவர் அவதானித்தார்.

'பாபா-அன்பர்கள் ஏன் சில நேரங்களில் தங்களுக்குள் மோதிக் கொள்கிறார்கள்' என்று மைமூனா கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார், "**இயேசுவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் தங்களிடையே மோதல்போக்கைக் கடைப்பிடித்தனர். பாபா-அன்பர்களும் தங்களுக்குள் மோதிக்கொள்கிறார்கள், ஏனெனில் ஒவ்வொருவரும் பாபாவை ஒருவரைவிட இன்னொருவர் அதிகமாக நேசிப்பதாக உணர்கிறார்கள். அவர்களின் அகங்காரமே இதுபோன்ற மோதல் போக்கை வளர்க்கிறது. மோதலில் ஈடுபட்டாலும், அவர்கள் என்னை நேசித்து எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கும் வரை, அது பரவாயில்லை. பின்னர் அவர்களின் பலவீனங்களை நான் பார்த்துக்கொள்கிறேன். முக்கியமான விஷயம் என்னவெனில், அவர்கள் மோதிக்கொண்டாலும் எனது தாமனுடன் ஒட்டிக்கொள்ள வேண்டும்**."

ஹோஷங்கிடம் பாபா கேட்டார், "**எனது தாமனுடன் ஒட்டிக்கொள்வதன் அர்த்தம் என்ன**?"

அதற்கு ஹோஷங், "நூறு சதவீதம் கீழ்ப்படிதல்" என்று பதிலளித்தார். "**ஆமாம்**" என்று பாபா தலையசைத்தார்.

தம்பதியரின் சந்ததிகளைப் பற்றி பாபா கூறினார், "**எனக்கு ஒரு சிறிய ஹோஷங் வேண்டும், அதற்குப் பிறகு நிறுத்திவிடுங்கள்**."

ஹோஷங் பதிலளித்தார், "ஆம், பாபா, 1968 அல்லது 69இல்."

"**ஏன் இவ்வளவு தாமதம்**?" என்று பாபா கேட்டார். "**இப்போது ஒன்றைக் கொடுங்கள், பின்பு பார்த்துக்கொள்ளலாம்**.

மைமூனாவிடம் பாபா வினவினார், "**உங்களுக்கு எத்தனை வேண்டும்**?"

"இரண்டு, ஒருவருக்கு ஒருவர் துணை" என்றார்.

எரச் இடையே குறுக்கிட்டு, "மைமூனா இன்னும் அதிகமாக விரும்பலாம், ஆனால் இறுதியில் பாபாவின் விருப்பம் மட்டுமே நிறைவேறும்."

அந்த ஆண்டின் பிற்பகுதியில், மைமூனா கர்ப்பமானார், அடுத்த ஏப்ரலில் அவர்கள் ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்து அதற்கு தில்மெஹர் (மெஹரின் இதயம்) என்று பெயர் சூட்டினர்.

பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டாலும், எவரும் அவரை சந்திக்க வேண்டாம் என்று பாபா பலமுறை அறிவித்த போதிலும், ஹமிர்பூரைச் சேர்ந்த சீதாராமின் மகன் ராம் மற்றும் கான்பூரைச் சேர்ந்த ராஜ்குமார் இருவரும் அவரை சந்திக்கும் தீவிர ஆர்வத்தை வெளிப்படுத்தினர். அவர்களின் கடிதம் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டபோது, பாபா இந்த பதிலை எடுத்துரைத்தார்: "**என் அன்பர்களின் அன்பு ஒன்றுதான் எனது கழுத்தில் உருவாகும் வலிக்கு நிவாரணியாக உதவும். என் ஏகாந்தவாசத்திற்கு எந்த இடையூறும் இல்லாமல் இருக்கும்போது மட்டுமே அது குறையும்.**"

அவர் மேலும் கூறினார்: "**எனது ஏகாந்தவாசத்தின் இந்தக் கடைசி காலகட்டம் மிகவும் முக்கியமானது. எனது உலகளாவிய பணி உச்சக்கட்டத்தை எட்டும் நிலையில் உள்ளது, அடுத்த ஐந்து மாதங்களுக்கு நான் மிகப்பெரிய துன்பங்களை சந்திக்க வேண்டியிருக்கும். அதற்குப் பிறகு, மாபெரும் மாற்றங்களைக் காணத் தயாராக இருங்கள்.**"

# குருபிரசாத் ஏகாந்தவாசம்

**(Seclusion in Guruprasad)**

1967 ஏப்ரல் 2 ஞாயிற்றுக்கிழமை காலை உணவுக்குப் பிறகு, பாபா ஆண், பெண் மண்டலியுடன் பூனாவிற்குப் புறப்பட்டார். டாக்டர் டான், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்த புதிய வோல்ஸ்லி (WOLSELEY) காரில் பாபா, மெஹரா, மணி, மெஹரு ஆகியோரை அழைத்துச் சென்றார். பயண வேளையில், பாபா, கார் எவ்வளவு சௌகரியமாக உள்ளது என்று திரும்பத் திரும்பக் கூறினார்; மேலும் ஜூலை 1 அன்று குருபிரசாத்திலிருந்து மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் டானிடம் அவர் அறிவுறுத்தினார். பிற பெண்மணிகள் (கோஹெர், நாஜா, ரானோ ஆகியோர்) ஆண் மண்டலியுடன் (எரச், பெண்டு, ஃபிரான்சிஸ், பாவ் கல்சூரி, அலோபா) டிஸோட்டோ (DeSOTO) மற்றும் வாடகை 'ஸ்டேஷன் வேகன்' ஆகியவற்றில் சவாரி செய்தனர். ஒவ்வோர் ஆண்டும், பகீரத்தின் சரக்கு வாகனம், பல சாமான்கள், மிதிவண்டிகள் மற்றும் பாபாவின் தூக்கு நாற்காலி போன்ற பெரிய பொருட்களை குருபிரசாத்திற்கு ஏற்றிச் செல்வதற்கும், திரும்ப எடுத்து வருவதற்கும் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே, கோர்ஷெத், நானா கேர் இருவரும் பூனாவில் பாபா தங்கியிருந்த மூன்று மாதங்கள் அங்குத் தங்க அனுமதிக்கப்பட்டனர்; மேலும் அவர்கள், மெஹர்ஜி, மெஹர்வான் ஜெஸவாலா, ஜெஹாங்கு ஸூகத்வாலா ஆகியோருடன், பாபா வந்தபோது அவரை வரவேற்க குருபிரசாத் வாசலில் காத்திருந்தனர்.

குருபிரசாத் வந்தடைந்ததும், பாபா, மெஹர்ஜியின் கையைப் பற்றிய வண்ணம், நீள் வராண்டாவில் மேலும் கீழும் விறுவிறுப்பாக நடக்கத் தொடங்கினார்; பல மாதங்களாக உடல்நலனில் அலட்சியமாக இருந்த பாபா, கழுத்துப்பட்டை இல்லாமல் சுதந்திரமாக நடமாடுவதைக் கண்டு மண்டலி மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். எரச், ஃபிரான்சிஸ் அல்லது பாவ் கல்சூரி ஆகியோரின் உதவியுடன் பாபா ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் நீள் வராண்டாவில் நடந்து செல்வதை வழக்கமாகக் கொண்டார். அவர் மண்டலியிடம், மகிழ்ச்சியான புன்னகையுடன், **"நான் எப்படி நடக்கிறேன்?"** என வினவினார்.

ஒரு வாரம் கடந்தது, ஏப்ரல் 10 அன்று மும்பையிலிருந்து டாக்டர் ராம் கிண்டேயை 'ஐந்து நிமிடங்களுக்காக' பூனா வருமாறு பாபா திடீரென அழைத்து, அவர் எப்படி நடக்கிறார் என்பதைக் காட்ட விரும்பினார். "**பின்னர், இத்தனை வேகமாக நான் நடக்க முடியாமல் போகலாம்**," என்று அவர் குறிப்பிட்டார். டாக்டர் கிண்டே காலை 9:00 மணிக்கு (ஹோமா தாதாசாஞ்சியுடன்) வந்தபோது, பாபா அவரது கையைப் பற்றிக்கொண்டு நடக்கத் தொடங்கினார். "அவருடன் நான் அத்தனை வேகத்தில் செல்வது சாத்தியமில்லை" என்று டாக்டர் கிண்டே பின்பு கூறினார். "பாபா எவ்வளவு அகலமான, நீண்ட அடிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார், சிறிது நேரத்தில், எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அவர்

அதை ஒருமுறை, இரண்டு முறை செய்த போது, நான் அவரிடம், 'பாபா, தயவுசெய்து மெதுவாகச் செல்லுங்கள். என்னால் உங்களுடன் நடக்க முடியாது. நீங்கள் என்னை விட மிக வேகமாக நடக்கிறீர்கள்'" என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே, **"நீங்கள் களைப்பாக இருந்தால் சரி, பரவாயில்லை. குறைந்த பட்சம், என்னால் உங்களை விட நன்றாக நடக்க முடியும் என்பதில் நீங்கள் திருப்தி அடைவீர்கள் என்று நம்புகிறேன்"** என்றார்.

டாக்டர் கிண்டே 50 நிமிடங்கள் குருபிரசாத்தில் இருந்தார். பாபா அவரிடம் கூறினார்: **"ஜூன் முதல் நவம்பர் வரை, ஏறக்குறைய ஐந்து மாதங்கள், அனைவருக்காகவும் நான் அபரிமிதமான உடல் ரீதியான துன்பங்களை சந்திக்க வேண்டியிருக்கும். இருப்பினும், இது எனது ஏகாந்தவாசத்தின் இறுதிக் கட்டம். 1967 நவம்பர் மாதத்திற்குப் பின்னர், அனைவரும், இன்று சாத்தியமற்றதாகத் தோன்றும் என் அற்புதங்களைக் காணத் தயாராக இருக்க வேண்டும்**

உலகெங்கிலும், குறிப்பாக அமெரிக்க கல்லூரி மாணவர்களிடையே, அவரது பணி மற்றும் அவர் மீதான அன்பு குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருவதை பாபா குறிப்பிட்டார். 'கலிஃபோர்னியா பல்கலைக்கழகம் லாஸ் ஏஞ்சலஸில்' (UCLA - UNIVERSITY OF CALIFORNIA IN LOS ANGELES) மாணவராக இருந்த டாக்டர் கிண்டேயின் மகன் ஸுஹாஸ் (SUHAS), எப்படி இருக்கிறார் என்று பாபா கேட்டார்; முந்தைய ஆண்டு அமெரிக்கா செல்வதற்கு முன்பு பாபா அவரை சந்தித்தார்.

டாக்டர் கிண்டே மும்பைக்குத் திரும்பிச் சென்றதும், பாபாவின் தற்போதைய நிலையைக் குறித்து அவர் கண்டுகொண்டதை விவரித்து எரச்சிற்கு எழுதினார்:

பிரியமான பாபா, பிரகாசமாக ஒளிரும் கண்கள், ரோஜா கன்னங்கள், மகிழ்ச்சி மற்றும் முகமலர்ச்சியை வெளிப்படுத்தும் களிப்பார்ந்த ஆரோக்கியத்தின் மொத்த ரூபமாக இருப்பதைப் பார்க்க முடிந்தது. அவரது கழுத்தில் அதிக வலி இருப்பதாகத் தெரியவில்லை, மேலும் அவரது அசைவுகள் ஒப்பீட்டளவில் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் இருந்தன. அவருடைய நடை வலுவாக இருந்தது, அவர் அப்படி நடந்து நான் இதுவரை பார்த்ததில்லை; வராண்டாவில் முழு நீளத்தில் நடந்து, திரும்பி வந்தது எனது மூச்சைத் திணறடிக்கச் செய்தது. இது உண்மையிலேயே ஒரு தனித்துவமான, மெய் சிலிர்ப்பூட்டும் அனுபவமாக இருந்தது.

ஆனால் மண்டலியைப் பொறுத்தவரை, டாக்டர் கிண்டே அவரைக் கண்டுகொண்டது போல, பாபா எப்போதும் பிரகாசமாகத் தோன்றவில்லை. இந்தக் கருப்பொருளை உள்ளடக்கி பாபா சமீபத்தில் கூறியிருந்தார், அவரை சந்திக்க வருபவர்கள் அவருடைய மனிதத் தன்மையை விட, அவருடைய தெய்வீகத்தையே அதிகம் காண்கிறார்கள், அதே வேளையில் அவருடன் தொடர்ந்து வாழ்பவர்கள் அவருடைய மனிதத் தன்மையை அதிகமாகப் பார்க்கிறார்கள். அவரது வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளில், பாபா

பெரும்பாலும் இரவும் பகலும் அமைதியின்றி இருந்த அதே நேரத்தில், வெளியுலக அன்பர்கள் அவரை எப்பொழுதும் தாமரை மலரைப் போலப் பிரகாசமாகவும், புத்துணர்ச்சியுடனும் கண்டுகொண்டனர்.

அவரால் அவ்வளவு வேகமாகப் பின்பு நடக்க முடியாது என்று பாபா சாதாரணமாக வெளிப்படுத்திய கருத்து, அடுத்த சில வாரங்களில் அனுபவத்தில் மண்டலியால் காண முடிந்தது; பாபாவின் முதுகில் ஒரு தசை பிடிப்பு ஏற்பட்டது, அது உடல் அசைவுகளின் போது அதீத வலியை ஏற்படுத்தியது. ஆனால், அவரது முதுகுவலி நடையின் வேகத்தை வெகுவாகக் குறைத்தாலும், பாபா ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாத சூழ்நிலை உருவாகும்வரை வராண்டாவில் தினசரி நடைப்பயிற்சியைத் தொடர்ந்தார்.

**1964**ஆம் ஆண்டில், பென் ஹேமன் (BEN HAYMAN) அமெரிக்காவிலிருந்து ஒரு உறுதியான இரு சக்கர நாற்காலியை (சரக்கு விமானம் மூலம்) பாபாவிற்கு அனுப்பி வைத்தார், பாபா கடந்த இரண்டு கோடைகாலங்களில் குருபிரசாத்தில் அதைப் பயன்படுத்தினார். சக்கர நாற்காலி இப்போது மீண்டும் அவரது உபயோகத்திற்காகக் கொண்டுவரப்பட்டது.

முதுகு வலிக்கு நாட்டு வைத்தியம் முயற்சி செய்யப்பட்டது: வாழை இலையில் நெய் தடவி, பாபாவின் முதுகில் பூசப்பட்டது. இது அசௌகரியமான சிகிச்சையாக இருந்தாலும் (அதிக வெப்பமான காலநிலையில்), பாபா அதை நிறுத்தவில்லை. அது மட்டுமின்றி, மாலையில் சத்ரா அல்லது வேறு உடைகளை அணிந்துகொண்டு, சாய்ந்து படுத்துக்கொண்டிருந்த போது, சூடான இஸ்திரி செய்யப்பட்ட துணியை பெண்டு, பாபாவின் முதுகில் வைத்து ஒத்தடம் வழங்குவது வழக்கம். பின்னர், எரச் தசைகளின் மீது தைலத்தை தடவி அழுத்தி தேய்த்ததோடு, பாபாவின் முதுகுக்கு ஆதரவாக, ஒரு நெகிழும் தன்மையுள்ள இடுப்புப்பட்டியை சுற்றிக் கட்டினார்.

இந்தக் காலக்கட்டத்தில், பாபாவின் படுக்கையறை காற்றோட்டம் இல்லாமல் ஜன்னல் கதவுகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில், திணறடித்துக் கொண்டிருந்தது; மேலும் கண்காணிப்பில் இருந்த பெண்டு அல்லது பாவ் கல்சூரியின் உடல்களிலிருந்து வியர்வை வழிந்தோடியது. பாபா அனுபவித்த துன்பமும், அவருக்கு நிகழ்ந்த அனைத்தும் அவரது உலகளாவிய பணியுடன் தொடர்புடையது.

போதைப்பொருளுக்கு எதிரான அவரது செய்தியை, மாணவர்களிடையே எடுத்துச் செல்லும் பணியில் அமெரிக்காவில் நடந்து வரும் செயல்பாடுகள் குறித்து, டாக்டர் கிண்டேயிடம் பாபா குறிப்பிட்டார். இப்போது ஒரு சமூக உளவியலாளரான அலன் கோஹன், அமெரிக்காவில், குறிப்பாக மாணவர் உலகில் போதைப்பொருள் பிரச்சினையில் நிபுணராக அங்கம் வகிக்கிறார். எல்.எஸ்.டி, மரிஜுவானா மற்றும் பிற போதைப்பொருட்களின் தீங்கு விளைவிக்கும் பக்க விளைவுகள் குறித்து, அலன் கோஹென் கல்லூரிகளில் சுற்றுப்பயணம் செய்து, விரிவுரைகளை வழங்குகிறார்.

1967 ஏப்ரல் 12 அன்று, மர்ட்டில் பீச் மெஹர் மையத்திற்கு வருகை தந்த அலன் கோஹெனுக்கு பாபா தொலைத்தந்தி ஒன்றை அனுப்பினார்:

**ஏப்ரல் 4ஆம் தேதி, ஆதிக்கு நீங்கள் எழுதிய கடிதம் மற்றும் பாபா-பணிகள் குறித்த அறிக்கைகள் எனது முன்னிலையில் வாசிக்கப்பட்டன. கட்டுரைகள், உரைகள், ஆலோசனைக் குழுக்கள், வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்பட ஊடகங்கள் மூலம் நீங்களும் பாபா-இளைஞர்களும் எனது செய்தியை மக்களிடம் தீவிரமாக எடுத்துச் செல்வதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; நான் உங்களுடன் இருக்கிறேன்.**

**1967ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் என்னை சந்திப்பது நிச்சயம் சாத்தியமில்லை என்பதை** (ரிச்சர்ட்) **ஆல்பர்ட் மற்றும் பிற அன்பர்களுக்குத் தெரிவிக்கவும். உங்களுக்கும் சக சேவகர்களுக்கும் என் அன்பும், ஆசிகளும்.**

ரிக் சேப்மென் இன்னமும் இந்தியாவில் கல்லூரியில் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார். அவரது பணி நிறைவடைந்ததும், அவர் ஏப்ரல் 13 அன்று அஹமதுநகர் சென்று, ஆதி மற்றும் பாதிரியுடன் சில நாட்களைக் கழித்தார். ஏப்ரல் 18ஆம் தேதி ஆதி மற்றும் கல்சூரி குடும்பத்தினருடன் பூனாவிற்கு வந்த அவர், பூனா, மெஹர் மையத்தில் அமைந்த தற்காலிக குடியிருப்பில் தங்கியிருந்தார், அங்கு ராமகிருஷ்ணனும் மையத்தின் காப்பாளராக ஒரு சிறிய அறையில் தங்கினார். ஆனால் பாபா சில பணிகள் தொடர்பாக ராமகிருஷ்ணனை எப்போதேனும் அழைக்க நேர்ந்தாலும், அவர், இந்த நேரத்தில் ரிக் சேப்மெனை அழைக்கவில்லை. பாபாவின் ஏகாந்தவாசத்திற்கு இடையூறாக இருக்கக் கூடாது என்ற பாபாவின் கட்டளையை மீற விரும்பாத ரிக், மே 6 அன்று மும்பையிலிருந்து அமெரிக்கா திரும்பிச் செல்வதற்கு முன்பு, பாபாவின் தரிசனத்தை நாடவில்லை. பாபா, ரிக் சேப்மெனை அழைக்கலாம் என்று எரச் சாதாரணமாக பரிந்துரைத்தபோது, பாபா, "**இல்லை, இல்லை, அந்த ஒரு வருகையே அவருக்குப் போதுமானது**" என்று குறிப்பிட்டார்.

ரிக் சேப்மென் 1967 மே 11 அன்று அலன் கோஹெனுக்கு எழுதினார்: "நான் பூனாவை விட்டு வெளியேறும் முன்பு, பாபா எனக்கு செய்தி ஒன்றை அனுப்பினார், அதில் மிகுந்த உணர்ச்சிப்பூர்வமான தூண்டுதல் இருந்தது: '**நீங்கள், அலன், பாப்** (ட்ரே:ஃபஸ்), **மூவரும் அமெரிக்க மக்களுக்கு எனது உண்மைச் செய்தியைப் பரப்பக்கூடியவர்கள்.**'"

மே 26 அன்று, இந்தத் தொலைத்தந்தி அலனுக்கு அனுப்பப்பட்டது:

**நீங்கள் ஆதிக்கு அனுப்பிய கடிதமும் தொலைத்தந்தியும் வந்து சேர்ந்தது.** (ரிச்சர்ட்) **ஆல்பர்ட்டைத் தொடர்பு கொள்ள அதிக நேரம் செலவிட வேண்டாம். எனது செய்தியைப் பரப்பும் பணியில் ரிக் விரைவில் உங்களுடன் இணைவார். எனது நேரம் நெருங்கி வருவதால் இந்தப் பணியைத் தொடரவும். உங்களுக்கு என் அன்பு.**

'மெஹர் பாபா யார் ஒருவரை பார்ப்பதையும் அல்லது யார் ஒருவருக்கு தரிசனம் வழங்குவதையும் நிறுத்திவிட்டார்' என்று வர்ணம் பூசப்பட்ட அறிவிப்புப்

பலகைகள் மெஹராஸாத்திலிருந்து கொண்டு வரப்பட்டு, குருபிரசாத்தின் சுவர்களுக்கு வெளியே பொருத்தப்பட்டன. கோஹெரின் சகோதரி கேட்டி, நரிமன், ஜிம் மிஸ்திரி ஆகியோர் குருபிரசாத்தில் வார இறுதி நாட்களில் தங்க அனுமதிக்கப்பட்டனர். பால் நாத்துவும் கோடை விடுமுறையில் அங்கே தங்கினார். அந்த ஆண்டு பூனா அல்லது வேறு இடங்களிலிருந்து எந்தப் பார்வையாளர்களும் அனுமதிக்கப்படவில்லை.

கேஷவ் நிகம், புக்கார் இருவரும் இரண்டு நாட்களுக்காக அழைக்கப்படவே, அவர்கள் ஏப்ரல் 16 அன்று வந்தனர். நடுக்குவாத நோயால் (PARKINSON) பாதிக்கப்பட்டிருந்த கேஷவின் கைகள் லேசாக நடுங்கின. மருத்துவர்களிடம் சிகிச்சை எடுத்துக் கொள்ளுமாறு பாபா அறிவுறுத்தினார், ஆனால், "**இது எந்த மருத்துவ சிகிச்சையினாலும் குணமாகாது, ஒரு நாள் நடுக்கம் தானாகவே போய்விடும், அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்**" என்று கூறினார். (இருப்பினும், பாபா, கேஷவ் நிகமை சிகிச்சைக்காக மும்பையில் வாழும் டாக்டர் ராம் கிண்டேயிடம் அனுப்பினார்.)

விதிவிலக்கு அளித்து குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்ட மற்றுமொரு குடும்பம் பாவ் கல்சூரியின் குடும்பம். 1967 ஏப்ரல் 18 அன்று ஆதி அவர்களை பூனாவிற்கு அழைத்து வந்த போது, 21ஆம் தேதி வரை அவர்கள் அங்குத் தங்க அனுமதிக்கப்பட்டனர்.

ஒரு வருடம், கல்சூரி குடும்பத்தினர் மூன்று நாட்களுக்காக மட்டுமே அழைக்கப்பட்டு, பூனா வந்தடைந்ததும், மெஹரா, பாபாவிடம் "பாபா, மூன்று நாட்கள் வேகமாக ஓடி விடும். அவர்கள் உங்களுடன் நேரத்தைக் கழித்ததாகவே உணர மாட்டார்கள்" என்றதும், பாபா, "**சரி, அவர்கள் ஆறு நாட்கள் தங்கலாம்**" என்றார்.

ரமா இன்னும் சில நாட்கள் தங்குவதற்கான கோரிக்கையை முன்வைக்க, பாபா அவரைத் தடுத்து, "**ஒருமுறை நான் ஆறு நாட்கள் என்று சொன்னால், அதற்கு மேல் கேட்காதீர்கள். நீங்கள் அஹமதுநகரில் இருக்க வேண்டும்; அதனால்தான் சொல்கிறேன். அதற்குப் பின்னால் சில காரணங்கள் உள்ளன; நீங்கள் அங்கு இல்லாவிடில் உங்களுக்கு ஏதேனும் பாதகமானது நிகழக்கூடும்; நீங்கள் இங்குத் தங்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை, நீங்கள் தங்குவதை நான் விரும்புகிறேன், ஆனால் ஆறு நாட்களுக்குப் பிறகு நீங்கள் வெளியேறுவது உங்கள் சொந்த நலனுக்காகவே.**"

ரமா பதிலளித்தார், "நிச்சயமாக, பாபா, நீங்கள் விரும்புவது எதுவோ அதுவே."

உள்ளூர் பூனா அன்பர்கள் குருபிரசாத்திற்கு அழைக்கப்படவில்லை என்றாலும், அவருக்கும் மண்டலிக்கும் உணவு அனுப்புவதை பாபா அனுமதித்தார். இதைத் தொடர்ந்து, தாடே, கிருஷ்ணா பண்டெலு, காம்ப்ளே,

ஸோமன், மதுசூதன் மற்றும் நாராயன் வாவலே ஆகியோரின் குடும்பங்கள் சேவைக்கான இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர்.

ஏப்ரல் 25 அன்று காலை 9:25 மணிக்கு, குருபிரசாத்தில், மண்டலி பாபாவின் முன்னால் அமர்ந்திருந்தபோது, பாபா அவர்களுக்கு மஹாபிரளயத்தின் போது 'மாபெரும் உள்வாங்குதல்' (THE GREAT ABSORBTION) பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். திடீரெனக் கட்டிடம் முழுவதும் குலுங்கியது. கடுமையான நிலநடுக்கம் ஒரு கணம் பீதியை ஏற்படுத்தினாலும், அது லேசான நிலநடுக்கமாக மாறியது.

அந்த ஆண்டு கடுமையான வெப்ப நிலையுடன் கூடிய கோடைகாலமாக இருந்தது, மெஹராஸாத்தில், 1967 ஏப்ரல் மாதத்தில் நிலவிய கடுமையான வெப்ப அலையின் போது, பல மரங்கள் அழிந்தன; மதராஸின் ஆன்மீகப் பொறுப்பாளராக இருந்தவர், பாபாவிற்கு வழங்கிய மாம்பழ விதைகளிலிருந்து வளர்க்கப்பட்ட ஆறு மா மரங்களில் ஐந்து மரங்கள் கோடை வெயிலில் சேதமடையாமல் இருந்தன. பாபா மாம்பழங்களை உண்ணவே, பின்னர் அந்த விதைகள் நடப்பட்டன.

மெஹராஸாத்தில் இருந்த கிணற்றிலும் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்தது, மேலும் பல மரங்களும் தண்ணீரின்றி காய்ந்து போயின. பிம்பல்காவ்ம் ஏரி (மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கம்) முற்றிலும் வறண்டு இருந்தது, மேலும் அஹமதுநகர் கடுமையான குடிநீர் பற்றாக்குறையை எதிர்கொண்டது. பாதிரி தன்னால் இயன்ற வரை அனைத்து மரங்களையும் காப்பாற்றினார்.

பாபா இல்லாத நேரத்தில், பாதிரி ஒரு ஆழ்துளை கிணறு வெட்ட அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு பாபா ஒப்புக்கொண்டார். ஒரு துளை 65 அடி வரை சென்ற பின்னரும், தண்ணீர் தென்படவில்லை. ஏப்ரல் 28 அன்று, பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட போது, மேலும் அவர் பாதிரியிடம் 100 அடி வரை துளையிட அனுமதி வழங்கினார். 83 அடி ஆழத்தில், போதுமான அளவு மென்மையான நீர் தென்பட்டதைக் கண்டு பாதிரி மிக்க மகிழ்ச்சியடைந்தார். அது பாபாவையும் மகிழச் செய்தது.

1967 மே 8 அன்று ஆதி குருபிரசாத்திற்கு வந்து பாபாவின் பணியைப் பற்றிய தகவலை வழங்கினார். டாக்டர் தேஷ்முக்கும் அதே நாளில் பாபாவை சந்தித்தார். 15, 16ஆம் தேதிகளில், பாபாவிற்கு முதுகில் வலி ஏற்பட்டதால், எக்ஸ்ரே எடுக்க டாக்டர் தீக்ஷித் அழைக்கப்பட்டார். ஸஸூன் மருத்துவமனையின் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் கே.சி. கார்புரே (Dr.K.C. GHARPURE) இந்தப் பிரச்சினைக்காகப் பலமுறை அழைக்கப்பட்டார்.

டாக்டர் கோஹெரின் தாயார் கோர்ஷெத்தின் உடல்நிலை மோசமாகிக் கொண்டிருந்தது. அலு கம்பட்டா அவரை கவனித்து உதவுவதற்காக அழைக்கப்பட்டார். மே 16 அன்று உடல்நிலை குறித்து பாபாவிற்குத்

தெரிவிக்கப்பட்ட போது, கோஹெர் மூலமாக அவரது பெற்றோருக்கு பாபா, 'அவரைத் தொடர்ந்து நினைவில் கொள்ளவும், அவருடைய பெயரை திரும்பத் திரும்ப உச்சரித்து, கவலைப்படாமல் இருக்குமாறும்' அறிவுறுத்தி ஒரு செய்தியை அனுப்பிவைத்தார். மே 23 அன்று, கோர்ஷெத் ஒரு நெருக்கடியான சூழலைக் கடந்து கொண்டிருந்தபோது, பாபாவிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது; பாபாவின் விருப்பத்திற்கு இணங்க கோர்ஷெத் அவரது உடலைக் கைவிடுவார் என்றும், இந்த சூழ்நிலையில், அவருடன் இருந்து உதவ முயற்சித்த அனைவரையும் நினைத்து பாபா மகிழ்ச்சியடைந்ததாகவும் அவருக்குத் தெரிவித்தார்.

கோர்ஷெத் மறுநாள் பிற்பகல் 2:00 மணியளவில் காலமானார், மேலும் பாபா இந்த செய்தியை அஹமதுநகரில் வாழ்ந்த அவரது கணவர் ரூஸி பாப்பிற்கு தொலைபேசி மூலமாகத் தெரிவித்தார்:

**"அன்புள்ள கோர்ஷெத் என் அன்பில் நித்தியமாக ஓய்வெடுக்க என்னிடம் வந்துள்ளார். நீங்கள் தைரியமாக எனது தெய்வீக சித்தத்திற்கு அடிபணிந்து இருங்கள். நான் மெஹராஸாத் திரும்பி வந்ததும் உங்களை அழைக்கிறேன். உங்களுக்கும் குடும்பத்தினருக்கும் அலுவிற்கும் எனது அன்பு ஆசிகள்."**

இரண்டு நாட்களுக்குப் பிறகு குருபிரசாத்திலிருந்து எழுதிய கடிதத்தில், எரச் கூறியதாவது:

**1967 நவம்பர் மாத இறுதியில் உலக நாடக மேடையில் பல புதிய சுவாமிகளும், 'பாபா'க்களும் தோன்றுவார்கள் என்பதை பிரியமான பாபா அவரது அன்பர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறார்; மேலும் அந்த நபர்களிடமிருந்து பாபா-அன்பர்கள் அனைவரும் விலகி இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அத்தகைய நபர்களைப் பற்றி பாபா அவரது அன்பர்களுக்கு வழங்கிய நிலையான அறிவுறுத்தல்களை மறந்துவிடவோ அல்லது புறக்கணிக்கவோ கூடாது. பாபா அவரது அன்பர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என விரும்புகிறார்!**

**பாபா அவரது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொள்ளுமாறு தமது அன்பர்களுக்கு நினைவூட்டுகிறார். அவரது வெளிப்பாட்டின் நேரம் நெருங்க நெருங்க, பாபா-அன்பர்கள் அவரது தாமன் மீதான பிடியை இழக்கச் செய்யும் சூழ்நிலைகள் உருவாகும். எனவே, மீண்டும் மீண்டும், அவர்கள் வழங்கும் சிறிய சிறிய செயல் விளக்கங்களைக் கருத்தில்கொண்டு, தமது அன்பர்களுக்கு நினைவூட்டுகிறார். அவர் அடிக்கடி எங்களிடம் கூறிய அந்த நேரம் இப்போது அவரது இறை வெளிப்பாட்டின் நுழைவாயிலில் உள்ளது என்று அவர் கூறுகிறார்!**

**சுவாமிகளையும், 'பாபா'க்களையும் தரிசனம் செய்வதும், வீடு வீடாக அலைவதும் வீண் என்பது மட்டுமின்றி, அது மிகவும் தீங்கானது என்பதை பாபா-அன்பர்கள் அனைவரும் அறிய வேண்டிய நேரம் இது என்பதை பாபா அறிவுறுத்துகிறார்.**

பூனா குருபிரசாத்திற்கு வந்த ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்குப் பிறகு, மே 26 அன்று பாபா, தனது சகோதரர் ஜால்பாய், பெஹராம் மற்றும் பிந்த்ரா ஹவுஸ் குடும்பத்தினரை வரவழைத்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, மஹாராணி ஷாந்தாதேவியையும், ஸரோஷ்-விலூ தம்பதியரையும் 30ஆம் தேதி அவரைப் பார்க்க அனுமதித்தார். பாபா அவர்களிடம், "**எனது நேரம் வேகமாக நெருங்குகிறது**" என்று கூறினார்.

1967 மே இறுதியில், பாபாவின் முதுகுவலி குறித்து குறிப்பிடப்பட்ட குடும்பக் கடிதத்தை (FAMILY LETTERS, ஜூன் 1 தேதியிடப்பட்டது) மணி படித்துக் கொண்டிருந்தபோது, பாபா அவரிடம் இந்த செய்தியையும் இணைக்குமாறு அறிவுறுத்தினார்: "**என் அன்பர்கள் கவலைப்படத் தேவையில்லை, ஏனெனில் நான் மீண்டும் வேகமாக நடக்கத் தொடங்கிவிட்டேன்; ஆனால் நான் எனது மௌனத்தைக் கலைக்கும் போதுதான் எனது மனம் மற்றும் ஆன்மீக ரீதியான துன்பங்கள் அனைத்தும் முடிவிற்கு வரும்.**"

இந்த செய்தியும் 'திவ்ய வாணி'க்கு (DIVYA VANI) அனுப்பப்பட்டது: "**நான் மழையைப் போல் என் அன்பைப் பொழிகிறேன், ஆனால் அனைத்து கொள்கலன்களும் ஒன்று போல் இருப்பதில்லை.**"

ஒரு நாள் பாவ் கல்சூரிக்கு பயங்கரமான தலைவலியும் ஜுரமும் ஏற்பட்டது. பாபாவின் அறைக்கு இரவுக் கண்காணிப்புப் பணிக்காகச் சென்றபோது, பாபா, "**இன்று எனக்கு அதிக ஜுரமும், தலைவலியும் உள்ளது! உங்கள் கடமையில் கவனமாக இருங்கள். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்**" என்று முறையிட்டார். ஒரு சில கணத்திற்குப் பின்னர், "**ஆமாம், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?**" என வினவினார்.

அவர் சிரித்ததும், பாபா ஏன் என்று கேட்டார். "எனக்கும் தலைவலியும் ஜுரமும் உள்ளது," பாவ் கல்சூரி கூறினார்.

"**ஆனால் எனக்கு ஜுரம் அதிகமாக உள்ளது. எனது நெற்றியை மட்டும் தொட்டு உணருங்கள் பார்க்கலாம்.**"

பாவ் அப்படியே செய்துவிட்டு, "ஜுரம் இல்லை பாபா" என்றார்.

"**என்ன? ஜுரம் உள்ளே உள்ளது! இப்போது இஸ்திரி செய்த துணியால் எனது முதுகின் மேல் ஒத்தடம் கொடுங்கள்.**"

பாபாவின் படுக்கையறையில் வெப்பநிலை 90°க்கும் மேலாக இருந்திருக்க வேண்டும், மேலும் பாவ் கல்சூரியின் உடல்நிலை சீரில்லாமல் இருந்தபோதிலும், அவர் பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க செய்ய வேண்டியிருந்தது. இரண்டு மணி நேரத்தில், பாவ் கல்சூரியின் தலைவலி மற்றும் காய்ச்சல் முற்றிலும் மறைந்தது.

1958 ஜூன் மாதத்தில் பாபா 'அவதாரின் உறைவிடத்திற்கு' (AVATAR'S ABODE) முதல் முறையாக விஜயம் செய்ததிலிருந்து, அவரது ஆஸ்திரேலிய அன்பர்கள், பாபாவின் வருகையின் ஆண்டு நிறைவைக் கொண்டாடினர். 1967 ஜூன்

மாதத்தில் அங்கு ஒன்றுகூடிய அன்பர்களுக்கு பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**நான் எப்பொழுதும் என் அன்பர்களுடன் தனிப்பட்ட முறையில் இருந்தாலும், அவர்கள் என் அன்பில் ஒன்றுகூடும்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். எனவே இந்த ஆண்டு விழாவை எனது உறைவிடத்தில் கோலாகலமாகக் கொண்டாடுங்கள்! எனது செய்தி உங்கள் இதயங்களின் ஒவ்வொரு மூலையையும் நிரப்பட்டும்.**

விழா நிறைவடைந்த பின்னர், ஃபிரான்சிஸ், பாபாவின் செய்தியை பில் லெ பாஜிடம் தெரிவித்தார்: "**மெஹராஸாத்தில் வழங்கப்பட்ட எனது அறிவுரைகளையும், அவ்வப்போது நான் வழங்குவதையும் 100 சதவீதம் நிறைவேற்றுங்கள். (அந்த) நேரம் வேகமாக நெருங்கி வருகிறது, நான் உங்களிடம் ஒப்படைத்த எனது பணிக்கு, எந்த ஒரு தியாகத்தையும் பெரிதாகக் கருதக்கூடாது.**"

1967 ஜூன் 4 ஞாயிற்றுக்கிழமை அன்று குருபிரசாத்தில், பாபா, ஆண், பெண் மண்டலி, மஹாராணி ஷாந்தாதேவி ஆகியோர், நியூயார்க் நகரில் பாபாவின் பொது பிறந்தநாள் விழாவின் போது, ஹாரி கென்மோர் ஒலிப்பதிவு செய்த இரண்டு மணிநேர நிகழ்ச்சிகளைக் கேட்டனர். ஃபிரான்சிஸ் பிராபஸோனின் 'ஸ்டே வித் காட்' (STAY WITH GOD) புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு லூயிஸ் அகோஸ்டினி (LOUIS AGOSTINY) உருவாக்கிய ஒலிப் பதிவையும் அவர்கள் கேட்டனர். நிகழ்ச்சிகளும் பொதுக் காட்சிகளும் பாபாவை ஆழமாகத் தொட்டதாகத் தொலைத்தந்தி அனுப்பியிருந்தார். கில்னானி குடும்பத்தார், ராமகிருஷ்ணன் மற்றும் டாக்டர் கனியின் மருமகன் ரஷீத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அடுத்த நாள், ஜூன் 5 அன்று, மத்திய கிழக்கில் போர் தொடங்கியது; சிரியா (SYRIA), எகிப்து (EGYPT) இரு நாடுகளும் இணைந்து இஸ்ரேலுக்கு (ISRAEL) எதிராக போரிட்டன. ஆறு நாட்களுக்குள் இஸ்ரேலிய இராணுவம் வெற்றிவாகை சூடியதால் இது 'ஆறு நாள் போர்' (SIX DAY WAR) என்று அழைக்கப்பட்டது. இஸ்ரேலிய ஆட்சியின் கீழ், ஜெருஸலேம் (JERUSALEM) நகரம் ஒன்றுபட்டது மிகவும் குறிப்பிடத்தக்கது.

செய்தித்தாள் மற்றும் வானொலி மூலமாக போரைப் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து கேட்டுவந்த பாபா, இஸ்ரேல் இந்தப் போர் சூழலை தனித்து எதிர்கொண்ட விதத்தில் மகிழ்ச்சியடைந்ததாகத் தோன்றியது. "**இப்படி ஒரு சிறிய குட்டி நாடு, அது எப்படி, போரில் எதிரியை வீழ்த்துகிறது என்று பாருங்கள். என்ன ஒரு தைரியம் அதற்கு!**"

ஆதி குருபிரசாத்திற்கு பலமுறை வந்த வேளையில், 1967 ஜூன் நடுப்பகுதியில் மௌன தினத்தைக் குறித்த சுற்றறிக்கை ஒன்று வெளியிட அவரிடம் வழங்கப்பட்டது. பாபா இந்த செய்தியையும் குறிப்பிட்டிருந்தார்: "**நான்**

**கடவுளாக இருந்தேன், இப்போது நான் மனித உருவில் வருகை தந்த கடவுள், நான் என்றென்றும் கடவுளாகவே இருப்பேன்.**"

ஒரு நாள், பாபா அவரது மௌனத்தைக் கலைக்கும்போது என்ன நடக்கும் என்பதைக் குறிப்பிட்டு, "**எனது மௌனத்தைக் கலைக்கும்போது, இதுவரை நடக்காதது நடக்கும்**" என்று கூறினார்.

1967 ஜூன் 10 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், பாபா, முற்றிலும் இடையூறு எதுவும் இல்லாமல் இருக்க விரும்புவதாக மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது; எனவே அவரது பெயரில் நேரடியாகச் செய்யப்படும் பணி தொடர்பான அவசரத் தொலைத்தந்திகள் அல்லது முக்கியமான கடிதங்கள் தவிர, வேறு எந்த அஞ்சல் பரிமாற்றத்திலும் அவர் கலந்து கொள்ள மாட்டார் என்று அவரைப் பின்பற்றும் அன்பர்கள், பக்தர்கள், சேவகர்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. மேலும் ஆதி அல்லது பாபாவுடன் வாழும் மண்டலி எவரும் தங்கள் தனிப்பட்ட விவகாரங்கள் அல்லது பிறரின் விவகாரங்கள் குறித்து கடிதம் எதுவும் எழுதக்கூடாது. சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**பாபா 1967ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர்களுக்கு தரிசனம் வழங்க மாட்டார் மற்றும் பார்வையாளர்களைப் பார்க்க மாட்டார் என்பதை அன்பர்கள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என விரும்புகிறார். 1967ஆம் ஆண்டுக்குப் பிறகு, பாபா அவரது அன்பர்களுக்கு தரிசனம் வழங்கும் நேரத்தை அவரே அறிவிப்பார்; எனவே பாபா, அவரது அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் அவரது அன்பர்கள் எவரும் தரிசனத்திற்காக தாங்களாகவே வரக்கூடாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறார்.**

பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்ததால், மர்ட்டில் பீச்சில் அமைந்த மெஹர் மையத்திற்கு 'புனித யாத்திரை' மேற்கொள்வதற்காக இளைஞர்கள், பெரும்பாலும் கல்லூரி மாணவர்களின் வருகை தொடங்கியது. சேப்பல் ஹில் (CHAPEL HILL), நியூயார்க் நகரம் (NEW ORK CITY), பாஸ்டன் (BOSTON), வாஷிங்டன் டி.சி. (WASHINGTON, D.C.), பிட்ஸ்பர்க் (PITTSBURG), டெட்ராய்ட் (DETROIT), லெக்ஸிங்டன் (LEXINGTON), மியாமி (MIAMI), சிகாகோ (CHICAGO) மற்றும் அமெரிக்காவின் தொலைதூர நகரங்களிலிருந்து பலர் வந்தனர். கிட்டி அல்லது எலிஸபெத் இந்த இளைஞர்களை மையத்தில் உள்ள அறைகளில் தங்க அனுமதிப்பதற்கு முன்னர், எப்பொழுதும் நேர்காணல்களை நடத்தினர். '**மதுபானம் தவிர்க்கவும்**' என்ற விதிமுறைக்கு உட்பட்டு, பாபாவின் '**போதை மருந்துகள் தவிர்க்கவும்**' என்ற புதிய விதியும் அமல்படுத்தப்பட்டது.

இங்கிலாந்தில், 'தி ஹூ' (THE WHO) குழுவின் பிரபல 'ராக் அன் ரோல்' (ROCK N' ROLL) இசைக்கலைஞர் பீட்டர் டவுன்ஷெட் (PETER TOWNSHED) பாபாவைப் பற்றி கேள்விப்பட்டார். டவுன்ஷெட் லண்டனில் வாழும் டிலியா டிலியோனுடன் நெருக்கமாகி, பாபாவிற்கு பல இசைப்பதிவு தொகுப்புகளை அர்ப்பணித்தார். மற்றுமொரு 'ஸ்மால் ஃபேஸஸ்' (SMALL FACES) குழுவின் ஆங்கில பாடகர் ரோனி

லேன் (RONNIE LANE) உட்பட பல இளைஞர்கள் பாபாவின் தொடர்பு எல்லைக்குள் வந்தனர்.

குருபிரசாத்தில், தினமும் காலையில் ஃபிரான்சிஸ் அவரது கைவண்ணத்தில் உருவான ஆங்கில கஸல் ஒன்றை பாபா முன்னிலையில் வாசித்து வந்தார், பாபா அதை மூன்று முறை திரும்பத் திரும்ப வாசிக்கச் சொல்வது வழக்கம். ஃபிரான்சிஸ் நினைவு கூர்ந்ததற்கு இணங்க: "ஒவ்வொரு முறை வாசிப்பதும் அவரது அரவணைப்பின் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது, மேலும் ஒவ்வோர் அரவணைப்பும் கவிதையின் அடுத்த வரிகளின் விதைகளைக் கொண்டிருந்தது."

ஒருமுறை, பாபா, ஃபிரான்சிஸைப் பாராட்டி இவ்வாறு கூறினார், "**இப்போது, எனது தற்போதைய வருகையில், நான் அன்பின் வழிகளை மேற்கோள் காட்ட, ஹஃபீஸின் கஸல்களைப் பயன்படுத்துகிறேன்; அதே போல் 700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் திரும்பி வரும்போது, உங்கள் கஸல்களிலிருந்து மேற்கோள் காட்டுவேன். அதனால்தான் நான் கூறுகிறேன், நீங்கள் உங்கள் கஸல்களை மூன்று முறை திரும்பத் திரும்ப மொழிந்தால், நான் அதை மனப்பாடம் செய்து திரும்பி வரும்போது மறக்காமல் நினைவில் கொள்வேன்.**"

பாபாவின் நகைச்சுவை அற்புதம்!

பாபா வெகுவாக ரசித்த ஃபிரான்சிஸின் கஸல்களில் இதுவும் ஒன்று:

மாலைப் பொழுதில், பியானோக்கள் தட்டுத்தடுமாறி
மௌனமாகிவிட்டன - அன்பின் நிமித்தம்.
இரவு எக்காளங்கள் தீவிர தொனியில் இறுதிக் குறிப்புகளை
அலறவிட்டன - அன்பின் நிமித்தம்.
கடவுளின் மகத்தான விளையாட்டில் நமது
பாத்திரங்களை நாம் எவ்வளவு ஆர்வத்துடன்
தொடர்கிறோம் - அன்பின் நிமித்தம்.
புத்துணர்ச்சியூட்டும் கனவு - எப்பொழுதும் புதிதாகவும்
ஒரே மாதிரியாகவும்
இருக்கும் முத்தம் - அன்பின் நிமித்தம்.
ஒருவர் தனது சொந்த குரலைக் கேட்க முடிந்தால்,
அவராகவே பாட முற்படுவார் - அன்பின் நிமித்தம்.
இறுதி இலக்கு மறைக்கப்பட்டிருக்கும்,
இல்லையேல் சிலர் ஒரு தொடக்கத்தை
உருவாக்கிவிடுவார்கள் - அன்பின் நிமித்தம்.
முட்டைகள் வீசப்படுவதற்கும் ரோஜா மலர்கள்
பொழியப்படுவதற்கும் உள்ள வித்தியாசம்
ஒன்றே ஒன்று - அன்பின் நிமித்தம்.

நேரம் நிர்ணயிக்கும் ஒருவரின் விதியின் பங்கை விட
திறமை குறைவாகவா உள்ளது - அன்பின் நிமித்தம்.
நாம் தூங்குகிறோம்; சில நேரங்களில் கனவு காண்கிறோம்;
மேலும் ஒரு புதிய நாளுக்காக
விழித்தெழுகிறோம் - அன்பின் நிமித்தம்.
நூறு கோடி வருடங்கள் வழிப்பயணம்: இன்னும்
எங்களுக்கு வழி தெரியாத நிலை - அன்பின் நிமித்தம்.
நாம் இன்னும் விலங்குகளின் கூண்டிலிருந்து
வெளியேறியிருக்க மாட்டோம் - அன்பின் நிமித்தம்.
இறை-மனிதனின் இரக்கமும், புனிதமான கோபமும்
இல்லையென்றால் - அன்பின் நிமித்தம்.
போரின் வன்முறைத் தாக்குதல்களுக்கு
நாளை எனும் மற்றுமொரு நாள் - அன்பின் நிமித்தம்.
மதுபானம் மற்றும் உறைவிடத்திற்காக இரவின்
சில மணிநேரங்கள் - அன்பின் நிமித்தம்.

சில காலமாக, பாபா அவரது விருப்பத்தைப் புதுப்பித்துக் கொண்டிருந்தார். 1967 ஜூன் 17ஆம் தேதி சனிக்கிழமை குருபிரசாத்தில், பாபா மீண்டும் ஒரு கடைசி உயில் மற்றும் ஏற்பாட்டை நிறைவேற்றினார், அதில் எரச், மணி இருவரும் சாட்சிகளாகக் கையெழுத்திட்டனர். பாபாவின் உயிலின் பிரதிகள் எலிஸபெத், மார்கரெட், ஐவி மற்றும் டிலியா ஆகியோருக்கு அனுப்பப்பட்டன.

ஜூன் 18ஆம் தேதி, பாபா, மெஹராபாத் மற்றும் மெஹராஸாத்தில் மழை பொழிந்துள்ளதா அப்படியானால், எவ்வளவு மழை பெய்துள்ளது என்று விசாரிக்க, எரச், ஆதியை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். பாதிரியைக் கேட்க ஒரு சிறுவன் மெஹராஸாத்திற்கு அனுப்பப்பட்டான். ஒன்றரை அங்குலம் மழை பொழிந்ததாக பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

வழக்கம் போல, பூனாவிற்கு வந்த பின்பு, ரூபி ஹால் மருத்துவமனை ஆய்வகத்தில் பாபாவின் மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. டாக்டர் கோஹெர் குருபிரசாத்திலிருந்து பாபாவின் இரத்த மாதிரிகளை ரூபி ஹால் டாக்டர் கிரான்டிற்கு ஆய்வுக்காக அனுப்புவதை வழக்கமாகக் கொண்டார். ஜூன் 28 அன்று, பாபா பூனாவிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு சில நாட்களுக்கு முன்னர், அதிகமான இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டன.

ஜூலை மாதம் குருபிரசாத்திலிருந்து பாபா புறப்பட்டுச் சென்றது, ஏப்ரல் மாத தொடக்கத்தில் அவர் வந்த போது நடந்ததைப் போலவே - முன் வராண்டாவில் பாபாவின் விறுவிறுப்பான நடையுடன் நிறைவடைந்தது. ஆனால், அன்று காலை முதன்முதலில் வேகமாக நடந்ததை அவருடன் இருந்த

ஒரு சிலரே நேரில் பார்த்தனர், கடைசி இரண்டு நாட்களில் குருபிரசாத்தில் அதைப் பார்த்தவர்கள் ஏராளம். அவர்களில் நெருங்கிய பூனா அன்பர்களும் அவர்களது குடும்பத்தினரும் அடங்குவர், பாபா நடப்பதைப் பார்க்க அவர்களை அனுமதித்திருந்தார். 1967 ஜூலை 1 சனிக்கிழமை காலை பெண்கள் மற்றும் குழந்தைகள், மறுநாள் காலையில் ஆண்கள் வராண்டாவின் இருபுறமும் வரிசையாக நின்றனர். பிரகாசமான சிரிப்பை வெளிப்படுத்தி, பாபா அவரது அறையிலிருந்து முதல் நாள் ஃபிரான்சிஸின் (மற்றும் அடுத்த நாள் சதாஷிவ் பாட்டீலின்) கைகளைப் பற்றிக் கொண்டு வெளியே வந்து, தனது அன்பர்கள் மற்றும் பக்தர்களின் வரிசைகளுக்கு இடையே நடந்து, அவர்களைக் கடந்து சென்று அவர்களின் இதயங்களை ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் நிரப்பினார். பாபா இது போல நடப்பார் என்று அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை, அதை ‘அதிசயம்’ என்று கூறாமலும் இருக்க முடியவில்லை.

இதைக் கேட்ட பாபா அவர்களைத் திருத்தும் விதத்தில் கூறினார்: “**இது ஒன்றும் அதிசயம் இல்லை. நான் முன்பு போல் நடப்பேன் என்று சொன்னதை, என் அன்பர்கள் கண்கூடாகப் பார்த்தது எனது வார்த்தைகள் நிறைவேறியதைக் குறிக்கிறது. நான் கூறியது அனைத்தும் நடக்கும் நேரம் நெருங்கிவிட்டது; அவை அனைத்தும் நிறைவேறுவதை நீங்கள் காண்பீர்கள், ஏனெனில் என்னிடமிருந்து வரும் எதுவும் பயனற்றதாக இராது**!”

பல ஆண்டுகளுக்கு முன்பு, பாபா மண்டலியிடம் கூறினார்: “**நான் கூறியது நிச்சயமாக நிறைவேறும், எனது வார்த்தைகள் ஒருபோதும் வீண் போகாது. அது வேறுவிதமாகத் தோன்றினால், அது உங்கள் அறியாமை மற்றும் பொறுமையின்மையால் ஏற்படுகிறது என்று அர்த்தம்**.”

பாபா 1967 ஜூலை 2 ஞாயிற்றுக்கிழமை அன்று, ஆண், பெண் மண்டலியுடன் பூனாவிலிருந்து புறப்பட்டு காலை 10:30 மணிக்கு மெஹராஸாத்தை வந்தடைந்தார். ஆதி, டாக்டர் டானின் காரில் பாபாவை அழைத்துச் சென்றார் (டான் இன்னும் இங்கிலாந்திலிருந்து திரும்பி வரவில்லை.) நாஜா, ரானோ மற்றும் பணிப்பெண்களுடன் ஷேக் டிஸோட்டோவிலும் (DeSOTO), வாமன், ஆதியின் காரில் சில ஆண் மண்டலியையும் அழைத்துச் சென்றனர்.



மெஹர் பாபா, குருபிரசாத்
(MEHER BABA, GURUPRASAD)



**உங்களால் வெறுக்க**

**முடியாதவர்களை**

**நேசிப்பது**

**இயற்கையானது,**

**ஆனால் உங்களால்**

**நேசிக்க**

**முடியாதவர்களை**

**நேசிப்பது, நான்**

**நேசிக்கப்பட வேண்டிய**

**விதத்தில் என்னை**

**நேசிப்பது போலாகும்.**



-அவதார் மெஹர் பாபா